வெளியீடு 26-11-1981] [Issued 26-11-1981

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1981 மார்ச் 27—தொகுதி XVI எண் 1

Friday 27th March 1981 - Volume XVI No. 1 - 3

28th & 30th March 1981

தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009

Legislative Assembly Department, Fort St. George, Madras-600009

விலை 3—15 காசுகள்] [Price 3—15 Paise

D
V2ll,31,N81
N83.16
122185

உள்ளடக்கம்.

27—3—1981

	பக்கங்கள்.
(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.	
(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.	
(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட—அகர வரிசையில்)	
1. வினாக்கள்—விடைகள்	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1—45
2. தகவல் கோரல் :	
(அ) சென்னையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடாமல் இருத்தல்.	45
(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள்	45—51
(இ) உறுப்பினர்களுடன் வருபவர்களும் அனுமதிச்சீட்டு பெறுதல்.	
3. உரிமைப் பிரச்சினை :	
மாண்புமிகு முதலமைச்சர் மீது—தீர்ப்பு ..	51—54
4. ஒத்திவைப்புத் தீர்மானம் :	
வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்.	54—58
5. அரசினர் சட்ட முன்வடிவுகள் :	
(அ) நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன் வடிவு 1981	59
(ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1981.	59—60

6. வரவு செலவுத் திட்டம் 1981–82—விவாதம் (தொடர்ச்சி)	60—114
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்	60—64
திரு. ஜி. மூர்த்தி	65—68
திரு. எஸ். ஆண்டித் தேவர்	69—74
திரு. ரா. உமாநாத்	74—86
திரு. பி. எம். வெங்கடேசன்	86—92
வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்	93—98
திரு. உ. சுப்பிரமணியன்	98—104
திரு. சி. கோபால்	104—108
மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு	107—108
திரு. எஸ். என். இராமசாமி	108—111
திரு. மு. சுந்தரராஜன்.	111—114
. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்	115

உள்ளடக்கம்.

23-3-1981.

	பக்கங்கள்.
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள் — —	113-153
. ஒழுங்குப் பிரச்சினை—	
வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப்பெற்றது.	153
. ஒத்திவைப்புத் தீர்மானம்—	
தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் உண்ணாவிரதம்.	153-157
அறிவிப்புகள்—	
(அ) பேரவை அலுவல்கள்	158-163
(ஆ) மாற்றுத் தலைவர் பட்டியல் உறுப்பினர் நியமனம்.	189
. கவன ஈர்ப்பு—	
பெரம்பூரில் அதிக அளவில் அரசு மருந்துகள் கைப்பற்றல்	164-168
. வரவு—செலவுத் திட்டம் 1981–82—பொது விவாதம் (தொடர்ச்சி).	169-189 189-344
திரு. எம். ஆறுமுகம்	169-176
திரு. மி. வின்செண்ட்	176-179 188-189
மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் ..	179-180, 181-182, 187-188
மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ..	181, 186, 338-339 340-34

பக்கங்கள்.

திரு. குமரி அனந்தன் 189–205
திரு. த. வேணுகோபால் 205–208
திரு. ஏ. டி. குலசேகர் 208–212
திரு. பொ. விஜயராகவன் 212–218
திரு. என். சங்கரய்யா 218–240
திருமதி டி. யசோதா 240–247
திரு. கோ. விஸ்வநாதன் 247–255
திரு. கோவைத்தம்பி 255–261
திரு. இரா. கருப்பையா 261–270
திரு. ஜெ. சி. டி. பிரபாகரன் 270–275
திரு. வே. இரா. ஜெயராமன் 275–278
டாக்டர் கே. சமரசம் 279–283
திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் 283–287
திரு. கி. சட்டநாத கரையாளர் 287–294
திரு. கே. குப்புசாமி 294–298
திரு. ப. நெடுமாறன் 298–314
திரு. ரா. கு. பெருமாள் 315–317
திரு. ஜி. கே. சுப்பிரமணியன் 318–320
திரு. ப. தீர்த்தராமன். 320–323
டாக்டர் கே. பி. இராமலிங்கம் 324–326
திரு. பி. துரைராஜ். 326–328
திரு. செ. செம்மலை 328–331
திரு. எல். இளையபெருமாள் 332–344

. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 344

உள்ளடக்கம்.

30—3—1981.

பக்கங்கள்

1 வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 347–381

2 ஒழுங்குப் பிரச்சினை—

கொள்கை விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே அளிக்கப் பெறுதல். 384–385

3 தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை 386

4 ஒத்திவைப்புத் தீர்மானம்—

ஹையர் செகண்டரி வினாத்தாள்கள் முன் கூட்டியே வெளியானது. 386–387

5 அறிவிப்பு—

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி. 388

6 கவன ஈர்ப்புகள்—

(அ) திருப்பூர் பனியன தொழிற்சாலைகள் மூடப் பெற்றுள்ளது. 388–392

(ஆ) ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையால் விவசாயப் பயிர்கள் பாதிபபு. 393–395

7 வரவு-செலவுத் திட்டம், 1981–82—விவாதம் தொடர்ச்சி— 395–484

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப், 395–406
மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, 398
திரு. க. அன்பழகன், 407–448
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 448–484

8 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 484

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu

Thiru SADIQ ALI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. D . V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)--Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) - Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedeness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minesals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibitton excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21 6-1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும்	உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்
	(1)	(2)
1	அங்குசாமி, திரு. ச. ..	.. திருவாடானை
2	அப்துல் ரசாக், திரு. கே. எம்.	.. ஆலந்தூர்
3	அப்பாதுரை, திரு. மு. ..	.. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
4	அம்பிகாபதி, திரு. மு. ..	.. மன்னார்குடி
5	அரங்கநாதன், திரு. எஸ்.	.. தர்மபுரி
6	அரங்கநாதன், திரு. மு.	.. கூனூர் (செ. வ.)
7	அரங்கநாயகம், திரு. செ.	.. கோவை (மேற்கு)
8	அரங்கராசன், திரு. வெ.	.. உப்பிலியாபுரம்
9	அருணாசலம், திரு. இரா.	.. நாமக்கல் (செ. வ.)
10	அழகர்சாமி, திரு. சோ.	.. கோவில்பட்டி
11	அன்பழகன். திரு. க. ..	.. புரசைவாக்கம்
12	அன்பழகன், திரு. தி. ..	.. நாட்ராம்பள்ளி
13	அன்பில் தர்மலிங்கம், திரு.	.. லால்குடி
14	ஆண்டி அம்பலம், திரு. மெ.	.. நத்தம்
15	ஆண்டித்தேவர், திரு. எஸ்.	.. உசிலம்பட்டி
16	ஆறுமுகம், திரு. எம்.	.. அவினாசி (செ. வ.)
17	சேலம் ஆறுமுகம், திரு. மு.	.. சேலம்-2
18	ஆறுமுகம், திரு. த. ..	.. அரியலூர்
19	இரத்தினம், திரு. எம். வி.	.. பொள்ளாச்சி
20	இராசகுமார், திரு. மெ. அ.	.. மருங்காபுரி
21	இராசமாணிக்கம், திரு. இரெ.	.. குத்தாலம்
22	இராசரத்தினம், திரு. து.	.. பூந்தமல்லி
23	இராசாம்பாள், திருமதி. தா.	.. தலைவாசல் (செ.வ
24	இராசாராம், திரு. க. ..	.. பனமரத்துப்பட்டி
25	இராசாராமன், திரு. எஸ்.	.. பாபநாசம்
26	இராசு. திரு. ஜே. எஸ்.	.. பெரம்பலூர் (செ.வ.
27	இராசேந்திரன், திரு. எஸ்.என்.	.. தூத்துக்குடி
28	இராமச்சந்திரன், திரு. எம்.ஜி.	.. மதுரை (மேற்கு)

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
29	இராமச்சந்திரன், திரு. கே.கே.	.. சாத்தூர்
30	இராமச்சந்திரன், திரு. ச.	.. பண்ருட்டி
31	இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி.	.. செஞ்சி
32	இராமசாமி, திரு. த.	.. இராமநாதபுரம்
33	இராமசுப்பிரமணியம், திரு. எஸ்.	.. ஸ்ரீவைகுண்டம்
34	இராமலிங்கம், திரு. ஏ.	.. காட்டுமன்னார் (செ. வ.)
35	இராமலிங்கம், டாக்டர் கே. பி.	.. இராசிபுரம்
36	இராமலிங்கம், திரு. செ.	.. திருவிடைமருதூர்
37	இராஜசேகரன், திரு. வெ.	.. இராதாகிருஷ்ணநகர்
38	இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	.. தல்லி
39	இராஜேந்திரன், திரு. எஸ். எஸ்.	.. ஆண்டிப்பட்டி
40	இளையபெருமாள், திரு. எல்.	.. எழும்பூர் (செ. வ.)
41	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	.. அம்பாசமுத்திரம்
42	உகம்சந்த், திரு. எஸ். டி.	.. மதுராந்தகம்
43	உச்சி. திரு. கே.	.. கடலூர்
44	உத்திராபதி, திரு. பொ.	.. திருத்துறைப்பூண்டி (செ. வ.)
45	உமாநாத், திரு. ரா.	.. நாகை
46	கண்ணன், திரு. ம.	.. கண்டமங்கலம் (செ. வ.)
47	கணபதி, திரு. கே. ஆர்.	.. சிதம்பரம்
48	கணேசன், திரு. இ.	.. இடைப்பாடி
49	கணேசன், திரு. சி.	.. அச்சரப்பாக்கம் (செ. வ.)
50	கந்தசாமி, திரு. கா. வே.	.. கிணத்துக்கடவு
51	கந்தசாமி, திரு. பி.	.. பொங்கலூர்
52	கபாலி, திரு. டி. கே.	.. மைலாப்பூர்
53	கருணாநிதி, டாக்டர், மு.	.. அண்ணாநகர்

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
54	கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி.	.. பாளையங்கோட்டை
55	கருப்பையா, திரு. இரா.	.. குளித்தலை
56	கருப்பையா, திரு. ஏ. டி.	.. வால்பாறை (செ. வ.)
57	கல்லன், திரு. கே.	.. உதகமண்டலம்
58	கலிதீர்த்தான், திரு. சோ.	.. சங்கராபுரம்
59	கலியமூர்த்தி, திரு. பெ.	.. மங்களூர் (செ. வ.)
60	நன்னிலம் கலையரசன், திரு. ஆ.	.. நன்னிலம் (செ. வ.)
61	காளிமுத்து, திரு. கா.	.. திருப்பரங்குன்றம்
62	கிட்டப்பா, திரு. என்.	.. மாயவரம்
63	கிருஷ்ணசாமி, திரு. கா. கோ.	.. காங்கேயம்
64	கிருஷ்ணசாமி. திரு. கே. ஏ.	.. ஆயிரம் விளக்கு
65	கிருஷ்ணமூர்த்தி, திரு. சா.	.. ஆண்டிமடம்
66	கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.	.. நெல்லிக்குப்பம்
67	கிருஷ்ணராஜ், திரு. ஜி.	.. சேலம்-1
68	கிருஷ்ணன், திரு. ரா.	.. வாசுதேவநல்லூர்
69	குப்புசாமி, திரு. என்.	.. மொரப்பூர்
70	குப்புசாமி, திரு. கே.	.. ஒட்டன்சத்திரம்
71	குப்புசாமி, திரு. செ.	.. வந்தவாசி (செ. வ.)
72	குமரிஅனந்தன், திரு.	.. திருவொற்றியூர்
73	குருசாமி, திரு. ப.	.. அந்தியூர் (செ. வ.)
74	அண்ணாதாசன், திரு. எம்.	.. திருவரும்பூர்
75	குலசேகர், திரு. ஏ. டி.	.. சிங்காநல்லூர்
76	குலசேகரப் பாண்டியன், திரு. ந.	.. வாணியம்பாடி
77	குழந்தைவேலு, திரு. ப.	.. உடுமலைப்பேட்டை
78	கேசவ ஆதித்தன், திரு. சி.	.. திருச்செந்தூர்
79	கோபால், திரு. சி.	.. சோளிங்கர்
80	கோபாலகிருஷ்ணன், திரு. கா.	.. பெரியகுளம்
81	கோபாலன், திரு. ஆர். டி.	.. கம்பம்
82	கோமதி சீனிவாசன், திருமதி.	.. வலங்கை (செ. வ.)
83	கோவேந்தன் திரு. எம். ஆர்.	.. பேராவூரணி
84	கோவைத்தம்பி, திரு.	.. பேரூர்

தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும்.			தொகுதியின் பெயர்.
	(1)		(2)
85	சக்கரபாணி, திரு. ஆர்.	..	பொன்னேரி
86	சங்கரய்யா, திரு. என்.	..	மதுரை (கிழக்கு)
87	சட்டநாத கரையாளர் திரு. கி.	..	தென்காசி.
88	சண்முகம், திரு. இரா. ..	..	திருத்தணி
89	சண்முகம், திரு. ஏ. சி. ...	..	ஆரணி
90	சத்தியமூர்த்தி, திரு. வ.	..	கடலாடி
91	சந்திரசேகரன், திரு. ஏ.	..	சோழவந்தான்
92	சபாபதி, திரு. சி. ..	..	அரூர் (செ. வ.)
93	சமரசம், டாக்டர் கே.	..	காவேரிப்பட்டணம்
94	சாகுல் ஹமீது, திரு. ஏ.	..	கடையநல்லூர்
95	சாமிக்கண்ணு, திரு. தா.	..	செங்கம்
96	சித்தன், திரு. என். எஸ். வி.	..	திருமங்கலம்
97	சிதம்பரம், திரு. சி. த.	..	காரைக்குடி
98	சிவசாமி, திரு. செ.	..	இளையான்குடி
99	சிவஞானம், திரு. ந.	..	திருவோணம்
100	சிவப்பிரகாசம், திரு. சி.	..	சேந்தமங்கலம் (செ. வ.)
101	சிவபெருமான், திரு. மு	..	ஓமலூர்
102	சிவராமன், திரு. எஸ்.	..	சின்னசேலம்
103	சின்னசாமி, திரு. எம்.	..	கரூர்
104	சின்னதுரை, திரு. ஏ.	..	மேல்மலையனூர்
105	சின்னராசு, திரு. க. இரா.	..	கிருஷ்ணகிரி
106	சின்னராஜ், திரு. எம்.	..	தொண்டமுத்தூர்
107	சுந்தரம், திரு. கே. ஆர்.	..	குடியாத்தம்
108	சுந்தரம், திரு. ப.	..	திருப்பத்தூர்
109	சுந்தரம், திரு. மு.	..	ரிஷிவந்தியம்
110	சுந்தரமூர்த்தி, திரு. ஆர்.	..	முசையூர்
111	சுந்தரராஜ், திரு. நா.	..	திருமயம்
112	சுந்தரராஜன், திரு. மு.	..	விருதுநகர்
113	சுப்பிரமணியன், திரு. உ.	..	சிவகங்கை
114	சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.	..	போடிநாயக்கனூர்
115	சுப்பிரமணியன், திரு. மா.	..	திருவையாறு
116	சுப்பிரமணியன், திரு. வி.	..	திருநாவலூர்

தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும்.			தொகுதியின் பெயர்.
	(1)		(2)
117	சுப்பிரமணியன், திரு. ஜி. கே.	..	பவானிசாகர்
118	சுவாமிநாதன், திரு. வி. வி.	..	புவனகிரி
119	செங்கோட்டையன், திரு. கு. அ.	..	கோபிச்செட்டிப் பாளையம்
120	செம்மலை, திரு. செ.	..	தாரமங்கலம்
121	செல்லமுத்து, திரு. எம்.	..	திருவாரூர் (செ. வ.)
122	செல்வராசன், திரு. அ.	..	துறைமுகம்
123	சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ.	..	அரவக்குறிச்சி
124	சேதுராமன், திரு. ஏ. எம்.	..	ஆற்காடு
125	சொக்கலிங்கம், திரு. கே.	..	திருப்போரூர்
126	சோமசுந்தரம், திரு. எஸ். டி.	..	பட்டுக்கோட்டை
127	சோமு, திரு. என். வி. என்.	..	பூங்காநகர்
128	சௌந்திரராசன், திரு. கே.	..	திருச்சி—2
129	டாக்டர் சௌரிராஜன், திரு. கே.	..	தி. நகர்
130	தங்கமணி கவுண்டர், திரு. கே. எம்.	..	திண்டிவனம்
131	தங்கராசு, திரு. ஏ.	..	குறிஞ்சிப்பாடி
132	தங்கவேல்ராஜ், திரு. பி. எம்.	..	கிருஷ்ணராயபுரம் (செ.வ)
133	தங்கவேலு, திரு. பி.	..	செயங்கொண்டான்
134	தவசி, திரு. ஆர்.	..	பரமக்குடி (செ. வ.)
135	தனபால், திரு. ப.	..	சங்கரி (செ. வ.)
136	தனுக்கோடித் தேவர், திரு. கே.	..	முதுகளத்தூர்
137	தாமரைக்கனி, திரு. இரா.	..	ஸ்ரீவில்லிப்புத்தூர்
138	தியாகராசன், திரு. ஆர்.	..	விருத்தாசலம்
139	திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர்.	..	ஸ்ரீரங்கம்
140	திருநாவுக்கரசு, திரு. எஸ்.	..	அறந்தாங்கி
141	திருமாறன், திரு. பெ.	..	ஆலங்குடி
142	திருமான், திரு.	..	ஏற்காடு (செ.வ.)
143	திருவேங்கடம், திரு. பெ. சு.	..	கலசப்பாக்கம்
144	தீர்த்தராமன், திரு. ப.	..	பென்னாகரம்

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)			தொகுதியின் பெயர். (2)
145	துரைசாமி, திரு. பி. எஸ்.	..	பர்கூர்
146	துரைமுருகன், திரு.	..	ராணிப்பேட்டை
147	துரைராமசாமி, திரு.	..	வெள்ளக்கோவில்
148	துரைராஜ், திரு. பி.	..	சங்கரநாயினார் கோவில் (செ.வ.)
149	தேவராஜ், திரு. வி. எம்.	..	வேலூர்
150	நடராசன், திரு. எஸ்.	..	தஞ்சாவூர்
151	நரசிம்மன், திரு. பூ. மு.	..	பள்ளிப்பட்டு
152	நல்லப்பன், திரு. தி. கா.	..	பெருந்துறை
153	நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு.	..	ஆலங்குளம்
154	நாச்சிமுத்து, திரு. கே. பி.	..	மேட்டூர்
155	நாராயணசாமி, திரு. கே.	..	திருவண்ணாமலை
156	நாராயணன், திரு. பி. ஜி.	..	பவானி
157	நெடுஞ்செழியன், டாக்டர் இரா	..	திருநெல்வேலி
158	நெடுமாறன், திரு. ப.	..	மதுரை (மத்திய)
159	பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம்.	..	கும்பகோணம்
160	பட்டாபிராமன், திரு. செ.	..	திருவள்ளூர்
161	பம்மல் நல்லதம்பி, திரு.	..	தாம்பரம்
162	பரமசிவ கவுண்டர், திரு. பி. என்.	..	பல்லடம்
163	பலராமன், திரு. இல.	..	போளூர்
164	பழனிசாமி, திரு. சு.	..	மேட்டுப்பாளையம்
165	பழனிமுத்து, திரு. சி.	..	ஆத்தூர்
166	பழனியப்பன், திரு. கு. ப.	..	விழுப்புரம்
167	பழனிவேல், திரு. என்.	..	பழனி (செ. வ.)
168	பாண்டியன், திரு. பி. எச்.	..	சேரன்மாதேவி
169	பாபு கோவிந்தராஜன், திரு.	..	கடலூர்
170	பாபு ஜனார்த்தனன், திரு.	..	செய்யாறு
171	பாரமலை, திரு. க.	..	மானாமதுரை (செ. வ.)
172	பாலகிருஷ்ணன், திரு சு.	..	மொடக்குறிச்சி
173	பாலகிருஷ்ணன், திரு.	..	சிவகாசி

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)			தொகுதியின் பெயர். (2)
174	பாலசுப்பிரமணியன், திரு. க.	..	சீர்காழி (செ. வ.)
175	வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி.	..	வேடசந்தூர்
176	பாலன், திரு. சு.	..	பெரம்பூர் (செ. வ
177	பாலுச்சாமி, திரு. ஏ.	..	சமயநல்லூர் (செ. வ.)
178	பிச்சை, திரு. எம்.	..	அருப்புக்கோட்டை
179	பிரபாகரன், திரு. ஜே. சி. டி.	..	வில்லிவாக்கம்
180	புருஷோத்தமன், திரு. து.	..	சைதாப்பேட்டை
181	பூங்காவனம், திரு. என். ஏ.	..	காட்பாடி
182	பெரியசாமி, திரு. ஏ.	..	தாராபுரம் (செ. வ.)
183	பெரியசாமி, திரு. ரா.	..	தொட்டியம் (செ.வ)
184	பெருமாள், திரு. என்.	..	வரகூர் (செ.வ.)
185	பெருமாள், திரு. ரா. கு.	..	விளாத்திகுளம்
186	பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ்.	..	நிலக்கோட்டை (செ. வ.)
187	பொன்னுரங்கம், திரு. ப.	..	ராயபுரம்
188	பொன்னையன், திரு. சி.	..	திருச்செங்கோடு
189	மணி, திரு. டி.	..	விளவங்கோடு
190	மணிமாறன், திரு. ஆர்.	..	திருப்பூர்
191	மாணிக்கம், திரு. எம். எஸ்.	..	வேதாரண்யம்
192	மாரிமுத்து, திரு. த.	..	குளத்தூர் (செ. வ.)
193	முகமது இஸ்மாயில், திரு. பி.	..	பத்மநாபபுரம்
194	முசிறிப்புத்தன், திரு. ம.	..	திருச்சி–11
195	முத்துக்கிருஷ்ணன், திரு. சு.	..	கன்னியாகுமரி
196	முத்துசாமி, திரு. சு.	..	ஈரோடு
197	முத்துராமலிங்கம், திரு. இ.	..	ராதாபுரம்
198	முத்துவேல், திரு. என்.	..	வானூர் (செ. வ.)
199	முத்தையா, திரு. இரா.	..	சேடப்பட்டி
200	முனிரத்தினம், திரு. இரா. சா.	..	கும்மிடிபூண்டி
201	முனுசாமி, திரு. மு. ப	..	பாலக்கோடு
202	மூர்த்தி, திரு. ஜி.	..	பேரணாம்பட்டு (செ. வ.)

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
203	மொக்கையன், திரு. பி. ..	ராஜபாளையம் (செ.வ.)
204	யசோதா, திருமதி டி. ..	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)
205	ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம்
206	ரங்கசாமி, திரு. ஆர். ..	சத்தியமங்கலம்
207	ரங்கசாமி, திரு. க. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
208	ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் (கிழக்கு)
209	ராமசாமி, திரு. என். என். ..	சாத்தான்குளம்
210	ராஜமாணிக்கம், திரு. எஸ். கே ..	முசிறி
211	ரெத்தினராஜ், திரு. எஸ். ..	குளச்சல்
212	வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்
213	(வெற்றிடம்)	
214	விசயலட்சுமி, செல்வி. வி. ..	வீரபாண்டி
215	வின்சென்ட், திரு. மி. ..	நாகர்கோவில்
216	விஜயசாரதி, திரு. எம். ..	அரக்கோணம் (செ.வ)
217	விஜயபாலன், திரு. என். ..	பூம்புகார்
218	விஜயரெகுநாத தொண்டமான், திரு. ..	புதுக்கோட்டை
219	விஜயராகவன், திரு. பொ. ..	கிள்ளியூர்
220	விஸ்வநாதன், திரு. கோ. ..	அணைக்கட்டு
221	வீராசாமி, திரு. த. ..	ஒரத்தநாடு
222	வீராளம்பலம், திரு. க. வெ. ..	மேலூர்
223	வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. ..	காஞ்சி
224	வெங்கடரெட்டி, திரு. டி. ..	ஓசூர்
225	வெங்கடேசன், திரு. பி. எம். ..	பெரணமல்லூர்
226	வெள்ளைச்சாமி, திரு. அ. ..	ஆத்தூர்
227	வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு
228	வேலப்பன், திரு. சி. வி. ..	கபிலர்மலை
229	ஜகத்ரட்சகன், திரு. எஸ். ..	உத்திரமேரூர்
230	ஜான் வின்சென்ட், திரு. மு. ..	நாங்குனேரி

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
231	ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ. ..	செங்கல்பட்டு
232	ஜெயராமன், திரு. வே. இரா. ..	தேனி
233	ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. ..	திருவல்லிக்கேணி
234	ஹேமச்சந்திரன், திரு. ஜே. ..	திருவட்டார்
235	மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. ..	நியமன உறுப்பினர்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது,பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர்,மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதிஅமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு,: மீன்வளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1981 மார்ச் 27.

பங்குனி 14, ரௌத்திரி, திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவைத் தலைவர் :

''கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்''.

கற்றவரின் முன் தாம் கற்றவைகளை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்லி, மிகுதியாகக் கற்றவரிடம் அம் மிகுதியான கல்வியை அறிந்து கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள்

கூட்டுறவு மின் விநியோக அமைப்பு

*வினா எண் 506. திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவு மின்சார விநியோக அமைப்பு முறை என்ற நிலையை அமைக்க மின் வாரியம் திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) இதனால் ஏற்படும் செலவின விவரம் யாது ?

(இ) எங்கு ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு மின் வழங்கு கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு ஏறத்தாழ ரூ. 150 இலட்சம் ஆரம்ப மூலதனம் தேவைப்படும்.

(இ) முதலில் ஒரு கிராமிய மின் வழங்கு கூட்டுறவுச் சங்கம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்தில் 1–7–1980-ல் இருந்து துவக்கப்பட்டு செயல் படுகிறது. இரண்டாவது கிராமிய மின் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தை புதுக்கோட்டையில் உள்ள திருமயம் என்னும் ஊரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1981 மார்ச் 27

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மின்சார விநியோக அமைப்பு முறையை ஏற்படுத்துவதற்குரிய காரணம் என்ன ? இப்போது இருக்கக் கூடிய அமைப்பு முறையினால் சீர்படுத்த இயலாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மத்திய அரசு மின்சாரத்தை கிராமப் புறங்களில் பயன்படுத்துபவர்கள் சேர்ந்து கூட்டுறவு அமைப்பை வைத்துக் கொள்வது என்ற கொள்கையை வலியுறுத்தி வருகிறது. அப்படி கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தினால் ''ரூரல் எலக்டிரிபிகேஷன் கார்ப்பரேஷன்'' என்ற நிறுவனத்தின் மூலம் பண உதவியும் தருகிறார்கள். அதைப் பயன் படுத்தி கிராமப் புறங்களில் மின் வசதியை மேம்படுத்துவதற்காக இரண்டு இடங்களில் பரிட்சார்த்தமாக இந்த திட்டத்தை நாம் அமுல் படுத்தியிருக்கிறோம். ஒன்று அமைக்கப்பட்டு விட்டது ; இன்னொன்று அமைக்கப்பட இருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு மின்சார விநியோக அமைப்புகள் எந்த அடிப்படையில் செயல் படும் ? ஒரு யூனிட்டுக்கு எத்தனை பைசா வீதம் மின்சாரக் கட்டணம் வாங்கப்படுகிறது ? எத்தனை பைசா வீகத்தில் கன்ஸ்யூமர்களுக்கு கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கட்டண விகிதங்களிலே மாற்றம் இல்லை. ஒரே ஒரு இடத்தில் 1-7-1980 லிருந்து தொடங்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒரு இடத்தில் இன்னொன்று தொடங்கப்பட இருக்கிறது. முதலில் இந்த இரண்டு இடங்களில் தொடங்கி, அவை ஒழுங்காக நடைபெறுமானால் மற்ற இடங்களைப் பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னாலே அதற்கு வருவாய் வர வேண்டும். மின்சார வாரியம் கொடுக்கின்ற அதே விலையிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களும் மின்சாரத்தை விநியோகம் செய்தால் எந்த வகையில் வருமானம் வரும் ? அரசாங்கம் இந்தச் சங்கங்களுக்கு மானியம் ஏதாவது கொடுக்கிறதா ? விவசாயிகள் மின்சாரம் பெறும் போது மின்சாரத்தை மின்சார வாரியத்திடம் கோரி பெறவேண்டுமா அல்லது இந்தச் சங்கங்களிடம் கோரி பெறவேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதற்கு மாநில அரசு, மின்சார வாரியம், கிராமப் புற மின் வழங்கு நிறுவனம் ஆகியவை எல்லாம் பணம் கொடுக்கின்றன. அதை மூலதனமாகப் போட்டு இது நடைபெறுகிறது. நான்

1981 மார்ச் 27]

ஏற்கெனவே சொன்னதைப்போல இப்போது தான் ஆரம்பித்திருக்கிறோம். அதிலே இலாபம் வருமா, நஷ்டம் வருமா என்பது பின்னால் தான் தெரியும்.

திரு சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த கூட்டுறவு மின்சார விநியோக அமைப்பு இரண்டு இடங்களிலே அமைக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த அமைப்பு இப்போது உற்பத்தியாகிற மின்சாரத்தை விலைக்கு வாங்கித்தான் விநியோகம் செய்யுமா? அப்படியானால் இப்போது விநியோகம் செய்கிற மின்சாரத்திற்கு பல கட்டணங்கள் இருக்கின்றன ; பம்பு செட்டுக்கு ஒரு கட்டணம், வீட்டு உபயோகத்திற்கு ஒரு கட்டணம் ; மற்ற காரியங்களுக்கு ஒரு கட்டணம் என்று இருக்கிறது. இதனால் மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லும் போது இந்த அமைப்பு இதை சீராக வசூல் செய்து, செயல்பட முடியுமா ? கரண்டு கட்டணம் நிர்ணயம் செய்ய உரிமை உண்டா ? எப்படிச் செயல் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சுருக்கமாகச் சொல்வதானால் ஏற்கெனவே தனியார் லைசென்சீஸ் கம்பெனி இருந்ததைப் போல் இது ஒரு அமைப்பு. மின்சார வாரியத்திலே மின்சாரத்தை வாங்குகிறது ; அந்த அமைப்பின் மூலம் மின்சாரத்தை விநியோகிக்கிறது. கிராமப் புறங்களிலே இதைப் போன்று மின்சார கூட்டுறவு அமைப்புகளைக் கொண்டு வந்தால் நாங்கள் பணம் தருகிறோம் என்று டெல்லியிலே சொல்லுகிறார்கள். அந்தப் பணத்தைப் பெற்று, கிராமப் புறங்களிலே மின்சார வசதியை மேம்படுத்துவதற்காக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த அமைப்புகளினால் வசூல் செய்யப்படுகிற கட்டணம், இப்போது மின்சார வாரியத்திலே என்ன கட்டணமோ அதுதான். இது சரியாகச் செயல்படவில்லை என்றால் பின்னால் மின்சார வாரியமே எடுத்துக் கொள்ளலாம். ஆகையால் இப்போது போய் இதை நிறுத்துவானேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, மத்திய சர்க்காரிலே இருந்து உதவி கிடைக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக இது ஆரம்பிக்கப்படுகிறதா ? ஏற்கெனவே இருக்கின்ற அமைப்பை விட இப்போது இந்த அமைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் புதிதாக என்ன பயன் கிடைக்கிறது ? இதுவரையில் தாமதமாக இருக்கின்ற மின் இணைப்புகள் உடனடியாகக் கொடுக்கப்படுமா அல்லது புதுப் புதுப் தொழில் நிறுவனங்களுக்கும் வீடுகளுக்கும் மின்சார இணைப்பு கொடுப்பதற்கு இந்த அமைப்பு உதவி செய்யுமா? இவற்றை எல்லாம் கொஞ்சம் விவரமாகச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. மத்திய அரசிடமிருந்து பணம் வாங்குவதற்காக மட்டும் நாம் இதைச் செய்கிறோம் என்று சொல்வது நமக்கு நல்லதல்ல, மத்திய அரசுக்கும் நல்லதல்ல. மின் வாரியம் ஏற்கெனவே என்னென்ன பணிகளை அந்தப் பகுதியிலே செய்து வருகிறதோ அதே பணியைத்தான் இந்தக் கூட்டுறவு அமைப்பின் மூலமும் செய்து வருகிறோம். புதிதாக லைன்கள் போடுவது, மின் இணைப்பு, இணைப்பு வழங்குவது போன்ற பணிகளைச் செய்து வருகிறோம். கட்டண விகிதங்களைக் கூட மாற்றி அமைப்பதற்குரிய அதிகாரங்கள்கூட இந்த அமைப்புக்கு உண்டு. ஆனால் இன்றுள்ள நிலைமையில் அவற்றை எல்லாம் செய்வதில்லை. இப்போது தானே ஆரம்பித்திருக்கிறோம். போகப் போக எப்படி இது செயல் படுகிறது என்பதைப் பார்த்து அவற்றை பிறகு செய்யலாம் என்று இருக்கிறோம்.

செங்கற்பட்டு—திருவலம்—கொரட்டூர் மின்பாதை டவர்.

*வினா எண் 507— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு-திருவலம்-கொரட்டூர் மின் பாதையில் டவர் சாய்ந்த விவரம அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

(இ) இதனால் எவ்வளவு நட்டம் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) அம்.

(ஆ) செங்கற்பட்டு — திருவலம் மின் பாதையில் டவர் சாய்ந்ததற்கான காரணங்கள் குறிப்பாக ஆராயப்பட்டு, இது போன்று பிற்காலத்தில் விழாமல் இருப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த டவர் வேறு தகுந்த இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. செங்கற்பட்டு — கொரட்டூர் மின் பாதையில் உள்ள டவருக்கு ஏற்பட்ட பழுது கான்டிராக்டருடைய சொந்தச் செலவில் சரிபார்த்து தரப்பட்டது.

(இ) செங்கற்பட்டு-கொரட்டூர் மின் பாதையில் டவர் சாய்ந்ததால் மின் வாரியத்திற்கு எந்தவிதமான நட்டமும் ஏற்படவில்லை. செங்கற்பட்டு—திருவலம் மின் பாதையில் டவர் சாய்ந்ததால் மின் வாரியத்திற்கு ரூ. 70,000 நட்டம் ஏற்பட்டது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த டவர் அமைக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன. கான்ட்ராக்டர் இந்த டவரைக் கட்டி நம்முடைய மின் வாரியத்திற்கு ஒப்படைத்ததற்குப் பிறகு இந்த டவர் சாய்ந்ததா? அல்லது ஒப்படைப்பதற்கு முன்பே சாய்ந்து விட்டதா ? அப்படி சரியான முறையில் இந்த டவர் அமைக்கப்படாதது குறித்து அதனை அப்போது பார்வையிட்ட அதிகாரிகள் மீது மின் வாரியம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது இரண்டு லைன்கள் பற்றிய கேள்வி. செங்கற்பட்டு—திருவலம் மின்பாதையில் உள்ள டவர் ஒன்று. செங்கற்பட்டு—கொரட்டூர் மின் பாதையில் உள்ள டவர் என்பது மற்றொன்று. செங்கற்பட்டு—கொரட்டூர் லைனைப் பொறுத்த வரையில் பலத்த காற்றினாலும், மின் கோபுரம் முற்றிலும் நிறுவப்படாத காரணத்தாலும் கோபுரம் சாய்ந்தது. அந்தச் செலவை கான்ட்ராக்டரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். செங்கற்பட்டு—திருவலம் லைனைப் பொறுத்த வரையில் போடப்பட்ட அந்த டவரிலிருந்து கம்பிகளை இழுக்கின்றபோது டவர் சாய்ந்து விட்டது. லூசான களிமண்ணிலே அந்த டவர் உருவாக்கப் பட்டிருந்தது. அந்த இடத்திலே பவுண்டேஷனைக் கொஞ்சம் நன்றாகப போட்டிருக்க வேண்டும். ஏன் அவ்வாறு போட வில்லை என்பது பற்றியும், சாதாரண இடங்களில் போடக்கூடிய பவுண்டேஷனையே அங்கேயும் எதற்காகப் போட்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் அந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க மின் வாரியம் ஏற்கனவே முற்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, அதற்குரிய அஸ்திவாரம் போடுவதிலே கோளாறு ஏற்பட்டதால டவர் சாய்ந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். அப்படி அஸ்திவாரம் போடுவதற்கு முன்பே செய்ய வேண்டிய மண் பரிசோதனை செய்யப்பட்டதா? அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், அதற்கு என்ன காரணம்? அப்படி டெஸ்ட் செய்யப்படாமல் இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது பற்றி எல்லாம் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மின் வாரியம் ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே சரியான பவுண்டேஷன் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இது போன்ற நிலைமை எல்லா இடங்களிலும் இருக்கின்றது. ஆகவே அதைப் போக்க மின்வாரியம் நடவடிக்கை எடுக்குமா?

[1981 மார்ச் 27.

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே எல்லா இடங்களிலுமே அதுபோல இருந்தால், நமக்கு இன்றைக்கு மின்சாரமே வராது. இந்த ஒரே ஒரு இடத்தில்தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது.

செங்கை மாவட்ட பெயர் மாற்றல்.

*வினா எண் 508—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை மாவட்டத்தை அண்ணா மாவட்டம் என்று பெயர் மாற்ற அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விககு இடமில்லை.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பிறந்த மாவட்டத்திற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டியதைப்போல, அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த மாவட்டமான செங்கல்பட்டு மாவட்டத்திற்கு, ஏன் அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டக் கூடாது? நாம் எல்லாம் அண்ணா நாமம் வாழ்க என்று சொல்கிறோம். ஆகவே அவருடைய நாமம் வாழ்கின்ற வகையில், இனிமேலாவது செங்கை மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்ட அரசு எண்ணுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பிறநத மாவட்டம் என்று பெரியார் மாவட்டத்திற்கு பெயர் வைக்கிற போது, புதிதாக ஒரு மாவட்டம் உருவாகியது. அதனால் அதற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டப்பெற்றது. செங்கல்பட்டு மாவட்டம் ஏற்கனவே இருக்கிற ஒரு மாவட்டம். ஏற்கனவே இருக்கிற ஒரு மாவட்டத்திற்குப் பெயரை மாற்றினால் அதனால் சங்கடங்கள் ஏற்படுமோ என்று அதைப்பற்றி யோசனை வரவில்லை.

1981 மார்ச் 27]

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அப்படிப் பெயரை மாற்றினால் எந்த வித எதிர்ப்பும் இருக்காது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? ஆகவே எதிர்ப்பு இருக்காது என்ற காரணத்தினால் உடனடியாக பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரால் செங்கை மாவட்டததிற்கு பெயர் இடப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அரசு அதைப்பற்றி ஆலோசிக்கும்.

திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பெரும் தலைவர் காமராஜர் .... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தனிக் கேள்வி போட்டுக் கொள்ளுங்கள். இது செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றிய கேள்வி.

கரூர் இராமானுஜம் நகர் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். 509—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார :

(அ) திருச்சி மாவட்டம், கரூர் ராமானுஜம் நகரில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தில் அனுமதி இன்றி தனியார்கள் கட்டிடம் கட்டுவது பற்றி அரசுக்கு புகார்கள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) பொதுப்பணித் துறை அலுவலர்களைக் கலந்து, ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவதற்கு கரூர் கோட்டாட்சியர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்த இடத்திலே. அதற்குப் பக்கத்தில் உள்ள பங்களாவாசிகள் தான் அந்த இடத்தினை தங்களுக்குச் சொந்தமாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி, அங்கே வீடு இல்லாமல் இருக்கும் குடிசை வாசிகளுக்கு அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர்கள் வசதி படைத்தவர்கள்தான் என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களுக்கு லேண்ட் என்க்குரோச்மெண்ட் ஆக்ட் படியாக அவர்களுடைய ஆக்கிரமிப்பை வெளியேற்றம் செய்ய வேண்டியதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. நேற்று 26–3–1981 அன்று கிடைத்த தகவலின்படி, அதிலே ஒருவர் வெளியேறிவிட்டார். மற்றொருவருக்கு அந்த ஆக்டின் 7–வது பிரிவின்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

...

நுண்கலை மேம்பாட்டு நிறுவனங்களுக்கு மானியம்.

* வினா எண். 510—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலக்கியம், இசை, நடனம், நாடகம், நுண்கலை மேம்பாட்டிற்கு பணியாற்றும் கலை நிறுவனங்களுக்கு மானியம் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : இத்தகைய கலை நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு அமைத்துள்ள தன்னாட்சி உரிமையுள்ள நிறுவனங்களான இயல், இசை, நாடக மன்றமும், ஓவிய நுண்கலைக் குழுவும் இயன்ற வரை மானிய உதவி அளித்து வருகின்றன. இயல், இசை, நாடக மன்றமானது புதிய நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றம் செய்தல், கலை விழாக்கள், மறைந்த இசை மேதைகளின் நினைவு விழாக்கள் ஆகியவற்றை நடத்துதல் கலைப் பயிற்சி நிலையங்களுக்கு மானியம் வழங்குதல் நலிவடைந்த கிராமிய கலைக் குழுக்களுக்குத் தேவையான இசைக் கருவிகள் வழங்குதல் சிறந்த நூல்களைப் பதிப்பித்து வெளியிடுதல் போன்றவற்றிற்கு மானிய உதவி அளித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. ஓவியம் நுண்கலைக் குழுவானது இளம் ஓவியர்களை உருவாக்க உதவித் தொகை அளிப்பதுடன் ஓவியக் கலையை வளர்க்கும் நிறுவனங்களுக்கு கண்காட்சி நடத்தவும், மானியம் வழங்குகிறது. இது தவிர தமிழில் எழுதப்படும் சிறந்த நூல்களை வெளியிட நூலாசிரியர்களுக்கு நிதி உதவும் திட்டத்தின் கீழ் வெளியிட ஆகும் செலவில் 50 சதவீதம் ரூ. 5000-க்கு மேற் போகாமல் நிதி உதவி மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இலக்கிய நூல்களும் அடங்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : அரசு பணி, பிற பணிகளில் பணியாற்றி அதிக ஊதியம் பெறுபவர்களே நாடகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு சம்பாதிப்பதால் நாடக நடிப்பையே முழுநேரத் தொழிலாகக் கொண்ட நாடக நடிகர்கள் தொழிலின்றி வருமானம் குறைந்து வறுமைக்கு ஆளாகிறார்கள். இதைத் தடுக்க அமெச்சூர் நாடகத்தைத் தடை செய்து அவர்களுக்கு மானியம் தர உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கலை வளர்வதற்காகத்தான் நாம் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கிறோம். கலையை வளர்க்கிற முயற்சியில் யார் வேண்டுமானாலும் ஈடுபடலாம். ஆகவே, அந்த ஆற்றல் எங்கெங்கே இருக்கிறதோ அவர்கள் எல்லாம் ஆதரிக்கப்பட்டு அவர்கள் ஆற்றல் வெளியே கொணரப்பட்டு நம் நாட்டுக்கும் உலகுக்கும் தெரிய வேண்டும் என்கிற நோக்கம்தான் இயல் இசை நாடக மன்றத்திற்கு இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது குறிப்பிட்ட ஒரு பகுதியினரை அல்லது பகுதியை நாம் ஆதரிக்கமாட்டோம் என்று சொல்கிற நிலை அல்லது தடுப்பது என்பது அவ்வளவு சிறந்ததல்ல. அந்த உரிமையும் அரசுக்கு இல்லை. அவையெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தில் தரப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைகள். அமெச்சூர் நாடகங்கள் நடக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நலிந்தவர்களுக்கு வறுமையில் வாடுகிறவர்களுக்கு, பணம் காரணமாக தங்கள் கலைப் பணி தடைப்படும் என்ற நிலையில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் முக்கிய நோக்கம். அதை இயல் இசை நாடக மன்றம் நல்லபடி செய்ய வேண்டும் என்று நாம் முயற்சி எடுக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : இசைக் கலைஞர்கள் குரலை வைத்து தொழில் நடத்துகிறார்கள். திடீரென்று குரல்வளை கெட்டு இசை பாட முடியாது இசைபாடும் தொழிலே இழந்து வறுமைக்கு ஆளாகும் தமிழ் இசைக் கலைஞர்களுக்கு அரசு மானியம் கொடுக்கும் உத்தேசமுண்டா ? நுண்கலையையும் நன்கு பயன்படுத்தி கோயில் சிற்பச் சிலைகளைப் பற்றி அரிய நூல்களை வெளியிட்ட தந்தை பெரியார் சீடர் சாத்தான்குளம் அ. ராகவன் திடீரென்று மரணம் அடைந்து விட்டார். அவரது குடும்பத்தாருக்கு அரசு மானியம் வழங்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவைகளைப் பற்றிய விவரங்களை அரசுக்குத் தெரிவித்தால் அதைப் பரிசீலித்து முடிவெடுக்கப்படும் ; பாடுவதால் யாரும் இறப்பதாக இல்லை.

திரு. ஆர். மணிமாறன் : அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிற நிறைந்த சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய அரசாங்க அலுவலர்கள் அமெச்சூர் நாடகங்கள் என்ற பெயரால் நிறைந்த வாய்ப்புக்களை அவர்கள் வரவழைத்துக் கொண்டு அப்படிப்பட்ட அமெச்சூர் நாடகங்களுக்கு மட்டுமே முக்கிய பாத்திரம் தருவதாக இன்றைய

சூழ்நிலை அமைந்திருக்கிறது. ஆனால் காலம் காலமாக இந்தத் தொழிலிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான கலைஞர்கள் வறுமை காரணமாக கலைத் துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இயலாமல் வறுமை காரணமாக திண்டாடுவதால் அவர்களுக்கு இந்த மானியத்தை கொஞ்சம் கூட்டிக் கொடுத்து அந்தக் கலைஞர்களுக்கு ஆதரவு தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி கஷ்டப்படுகிறவர்களுக்கு, அல்லது அந்தத் தொழிலை நிரந்தரமாகக் கொண்டிருகிறவர்களுக்கு நாம் உதவி செய்வதாகத்தான் பதில் அளித்திருக்கிறேன். இதற்கு முன்பு கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லியிருக்கிறேன். அவர்கள் நாடகப் பணியை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. அதைத் தடுக்கக் கூடாது என்ற அடிப்படையில் தான் சொன்னேன். மற்றபடி கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்கிறோம்.

திரு. து. புருஷோத்தமன் :- சென்னையில் உள்ள தென் இந்திய நடிகர் சங்க அறக்கட்டளைக்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது மானியம் வழங்கப்படுகிறதா ? அப்படி வழங்கப்பட்டிருந்தால் எவ்வளவு ? அப்படி வழங்கப்படவில்லை என்றால் இனிமேலாவது வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. அவர்கள் என்னிடம் கேட்கவும் இல்லை, தருகிற உத்தேசம் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இல்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலில், நலிந்த நடிகர்களுக்கு ஊதியம் தருவதாகச் சொன்னார்கள். நலிந்த நடிகர்கள் பட்டியலில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ? அதில் எவ்வளவு பேர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முழு விவரமும் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னாட்சி பெற்ற இயல் இசை நாடக மன்றத்தார் பரிசுகள் வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். கொறடா அவர்கள் கூட ஒரு குறிப்பிட்ட கேள்வியைக் கேட்டார்கள். அதிகாரத்தில் இருக்கிறவர்கள் அமெச்சூர் நாடகங்களை கைப்பற்றியிருக்கிற காரணத்தால் திட்டமிட்டு நம்முடைய நாகரிகத்தையும் பண்பாட்டையும் குலைக்கக்கூடிய வகையில் மிகவும், மோசமான பால் உணர்வுகளைத் தூண்டக்கூடிய நாடகங்களை அதிகாரத்தில் இருக்கிற காரணத்தால் அமெச்சூர் நாடகங்கள் மூலமாக புதிதாக திரைப்படத்திற்குள் நுழைந்த காரணத்தால் நமது பண்பாடு,

கலாசாரம், நாகரீகம் அழிக்கப்பட்டு வருகிறது என்பதும் மறைமுகமான விதத்தில் பதவியில் உள்ளவர்களும் பணம் அதிகம் படைத்தவர்களும் இதற்கு ஆதரவு தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது, கேள்வியைக் கேளுங்கள்.

[முற்பகல் 9-20]

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கியம், இயல், இசை, நாடகங்கள் போன்றவற்றிற்கு பரிசுகள் கொடுக்கின்ற இந்த ஆட்சி, பதவியை வைத்து அமெச்சூர் நாடகங்கள் மூலம் நம்முடைய நாகரீகம், கலாச்சாரம், பண்பாட்டைக் கெடுக்கின்ற வகையில் நடத்தும் நாடகங்களைத் தடை செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய பண்பாடு, கலாச்சாரம், சமுதாய முன்னேற்றம் என்ற அடிப்படையிலே நாடகங்களைப் பற்றி விமர்சிக்க ஆரம்பித்தால், ஒன்றிரண்டு கூட தேறாது என்பதுதான் எங்களைப் போன்றவர்களுடைய அபிப்ராயமுமாகும். ஆகவே நல்லவர்கள் இந்த நாடகக் கலை வளர்ச்சியில் ஈடுபட வேண்டும். படித்தவர்கள் இப்படிப்பட்ட துறையில் ஈடுபட வேண்டும். முற்போக்குக் கொள்கையை உடையவர்கள் இந்தத் துறையில் இறங்கினால் ஒழிய, அப்படிப்பட்ட நிலைமை வந்தால் ஒழிய, நம்முடைய கலை, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைக் காப்பாற்ற முடியாது. அது தனிப்பட்ட நடவடிக்கை. இத்தகைய முயற்சியில் ஈடுபடுகின்ற கலைஞர்களுக்கு, அரசாங்கம் நல்லாதரவு அளிக்கும். குறிப்பிட்ட ஒரு பகுதியினரை குற்றம் சொல்வதைவிட, அதிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். முற்போக்கான கொள்கையை உடையவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் நல்ல நாடகங்களை அதிகமாக எதிர்பார்க்கலாம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நலிந்த நடிகர்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை கொடுப்பது வரவேற்கத்தக்கது. இருந்தாலும், தமிழகத்தில் வில்லிசைக் கலைஞர்கள், மற்றும் தெருக்கூத்து நடத்துகின்றவர்கள் இது போன்ற கலைகளின் மூலமாக தமிழையும், தமிழக் கலையையும் வளர்க்கின்றவர்கள் நிரம்ப பேர் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் நலிந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் நலனைப் பரிசீலித்து, குறிப்பாக வில்லிசைக் கலைஞர் கார்க்கி போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உதவி செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா ? அது பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, கிராமீயக் கலைகள் கெட்டுப் போகாமல், அழிந்து போகாமல் காப்பாற்றப்பட வேண்டுமென்பது இந்த

அரசினுடைய நோக்கமாகும். அதற்காக அப்படிப்பட்ட கலைஞர்களுக்கு நாம் உதவி செய்ய விரும்புகிறோம். அந்த வகையில் நலிவடைந்த கிராமீயக் கலைக் குழுக்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அவர்களுக்குத் தேவையான, இசைக் கருவிகள், கிராமியக் கலைப் பொருட்கள் வாங்க பின்வரும் ஐந்து கலைக் குழுக்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது :

(1) திருமங்கலம் வட்ட நையாண்டி மேளச் சங்கம்.

(2) விழுப்புரம் நல்லுச்சாமி வாத்தியார் கிராமியக் கலைக் குழு.

(3) மதுரை ஓம் பெரியசாமி கிராமியக் கலை நிறுவனம்.

(4) கும்பகோணம் ஸ்ரீ முருகன் பொம்மலாட்ட சபா.

(5) ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபா.

வேறு யாராவது கிராமியக் கலையில் ஈடுபட்டிருந்தால், ஆர்வம் கொண்டிருந்தால் அவர்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பற்றி பரிசீலித்து, நலிந்த கலைக் குழுவாக இருந்தால் உதவி அளிக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள கலா மன்றங்கள் அமெச்சூர் நாடகங்கள் மூலமாக அமைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் தமிழகத்தின் கலை, கலாச்சாரம், பண்பாட்டைக் கொண்டுள்ள பல கலைஞர்கள், தொழில் தெரிந்தவர்கள் நலிவடைந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட கலாச்சாரம், பண்பாடு அடங்கிய கலைக் குழுவினருக்கு உதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட நிலையை எடுத்துக் கூறும் தங்களைப் போன்ற நண்பர்கள், தாங்களே சபாக்கள் ஆரம்பித்து அதிலே ஈடுபடாத காரணத்தினால், இப்படிப்பட்ட குறிப்பிட்ட சில சபாக்களை வைத்துக் கொண்டு இத்தகைய நாடகங்களை ஆதரிக்கின்ற பேச்சு வருகின்றது. ஆங்காங்கே கலை ஆர்வமுள்ளவர்கள், சபாக்களை ஆரம்பித்து நடத்துவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. மற்றவர்கள் ஆரம்பிப்பதை பார்த்த பிறகாவது, நீங்கள் இப்படி ஆரம்பித்து நடத்த வேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இசையைப் பற்றி தஞ்சை ஆப்ரகாம் பண்டிதர் அவர்கள் சங்கீத ரத்னாகரம் என்ற நூலையும், மறைந்த சுவாமி விபுலானந்தர் அவர்கள் யாழ் நூலையும் சிறந்த முறையில் எழுதி வெளியிட்டிருந்தாலும் கூட, பொதுமக்களுக்கு, இதிலே சம்பந்தப்பட்ட

வர்களுக்குப் பரவலாகக் கிடைக்காத காரணத்தினால், இந்தத் துறை அதை வெளியிட்டு பழந்தமிழ் இசை, நாட்டியக் கலை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாடகக் கலையிலே நாம் பார்க்கின்றபோது, கோமல் சுவாமிநாதனின் 'தண்ணீர் தண்ணீர்' நாடகம் மிகச் சிறந்த முறையில், சகல விதமானவர்களும் பாராட்டும் வகையில் இருக்கிறது. இப்படிப்பட்ட கலைஞர்களை ஊக்குவிக்கின்ற முறையில், அரசாங்கம் உதவி செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ? சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் நாடகம் நடத்த ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல முறையில் நாடகம் நடத்துகிறவர்கள் உதவி கோரி இயல் இசை நாடகத் துறையினை அணுகுவார்களேயானால் அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த நாடக மன்ற குழுவைச் சேர்ந்தவர்கள் உதவி கேட்டு நாடுவார்களேயானால் அது குறித்தும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் இஷ்டத்திற்கு நாடகத்தை நடத்தலாம். அதில் எந்தவிதமான தடையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர்கள் முன்பெல்லாம் நாடகம் போடுவது வழக்கம். இப்போது இல்லை. திரும்ப இப்போது நடத்துவதற்கு முன் வந்தால் நல்லதுதான்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கியம், இசை, நடனம், நாடகம், நுண்கலை மேம்பாட்டுக்கு வருகின்ற ஆண்டிலிருந்து மேல் நிலைப் பள்ளிகளில் விசேட வகுப்புகள் நடத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வியில் சங்கீதம் வைக்கப் பட்டிருக்கிறது. பரத நாட்டியம்

இந்த ஆண்டிலிருந்து ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. நாடகத் துறைக்கு ஒரு முக்கியத்துவம் தந்து மாணவர்கள் அதில் சிறப்பான பயிற்சி பெறுகின்ற ஒரு சிறப்புப் பள்ளி நம்முடைய ஸ்போர்ட்ஸ் ஸ்கூலைப் போல, டிராமா ஸ்கூல் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து, அதற்கு 'சிலபஸ்ஸும்' போடப்பட்டிருக்கிறது. அவர்கள் மற்ற மாண வர்கள் படிக்கின்ற பாடங்களை படிப்பார்கள். காலை, மாலை நேரங்களில் இந்த நாடகத்திலே சிறப்பான பயிற்சியை பெறு வார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நையாண்டி மேளத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தானே செய்வதில், கலை என்று செய்வதாலும் ஆட்சேபம் இல்லை. ஆனால அது ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்கள் செய்வதாலும், அதுவும் ஒரு குறிப் பிட்ட சாவு போன்ற காரியத்திற்கு மட்டும் செய்வதென்று வற்புறுத்தப்படுவதாலும், அப்படி வற்புறுத்தப்பட்ட போது வட ஆற்காடு மாவட்டத்தில், வரகூர் என்ற கிராமத்தில் அந்த தொழில் செய்த பெரியவர்கள் இறந்துவிட்டதால் படித்த பிள்ளை களை கட்டாயப் படுத்தி செய்ய வேண்டுமென்ற தகவல் அரசிற்கு வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன். அது குறித்து அரசு வருங் காலத்திலாவது தங்கள் இஷ்டப்படி ஒரு குறிப்பிட்ட சமு தாயம் செய்ய முடியாது என்பதால், கலை என்ற பெயரால் ஆபத்து வராமல் அரசு கவனித்து அவர்களுக்கு உதவி செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் இஷ்டப்படி கலை வளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் பொறுத்த கேள்விகளுக்குத்தான் பதில் அளிக்க இயலும். மற்றபடி மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சட்டம், ஒழுங்கு சம்பந்தப் பட்டது என்றால் வேறு தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்.

நெல்லை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி.

*வினா எண். 511—திரு. ஆர். கே. பெருமாள், திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க அரசுக்கு எண்ணம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் ஆரம்பிக்கபபடும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலியில் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படு கிறது.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டததிலே பிற்பட்ட பகுதியான விளாத்திகுளம் பகுதியிலே கல்லூரியோ, தொழிற் பயிற்சிக் கல் லூரியோ இல்லாத காரணத்தால், மாணவர்கள் கோவில்பட்டி, தூத்துக்குடி போன்ற இடங்களுக்குச் சென்று படிக்கின்ற சூழ்நிலை இருப்பதால் விளாத்திகுளத்தில் ஒரு தொழிற் பயிற்சி கல்லூரி அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த உத்தேசம் இல்லை.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரி அமைப் பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எந்த இடத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? எப் போதிலிருந்து இது செயல்படும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் ஆரம்பிக்கலாம் என்ற கருத்திலே இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். பரிசீலனை முடிந்த பிறகு ஆரம்பிக்கப்படும்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையில் பல கல்லூரிகள் இருக்கின்றன. அதற்குப் பக்கத்தில் காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே பாளையங்கோட்டையில் ஆரம்பிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, காலியிடங்கள் இருக்கிற இடத்தில் எல்லாம் கல் லூரிகளை ஆரம்பித்துக் கொண்டிருக்க முடியாது. திருநெல்வேலி யில் ஒரு நல்ல இடமாகப் பார்த்து பிறகு திருநெல்வேலியிலா, மேலப் பாளையத்திலா அல்லது தச்சநல்லூரிலா என்பது முடிவு செய்யப்படும்.

திரு. மு. அப்பாதுரை: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை என்று சொன்னார்கள். இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ் வளவு? எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கி றோம். முடிவு எடுக்கப்பட்ட பிறகு விவரம் சொல்கிறேன்.

[1981 மார்ச் 27

பழனி தேவஸ்தானம் நடத்தும் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி

*வினா எண். 512—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி தேவஸ்தானத்தால் நடத்தப்படும் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்கு அரசு மானியம் வழங்கக் கோரி கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.

[முற்பகல் 9-30]

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தானத்தால் நடத்தப்படுகிற இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிக்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் சிரமமான நிலையில் அது இயங்கிக்கொண்டு இருக்கிறது. அங்கே பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்குச் சம்பளமோ மற்ற வசதிகளோ கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்பதை 3 ஆண்டுகளாக வற்புறுத்தி வருகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக மனுக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்காததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கல்லூரியின் செலவை தாங்களே ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டுமென்ற முறையிலேதான் அந்தத் தேவஸ்தானம் இதை ஆரம்பித்து நடத்திக்கொண்டு வருகிறது. இப்போது அரசு பணம் வேண்டுமென்று கேட்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். இப்படித் தனிப்பட்டவர்கள் கல்லூரியை ஆரம்பிக்கவேண்டுமென்ற பழக்கத்தை அரசு கொண்டிருக்கவில்லை. அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் அதை நடத்த முடியாமல் பணம் கேட்டுக்கொண்டு இருக்கின்ற காரணத்தினாலே அதைப் பக்கத்திலே இருக்கின்ற கலைக் கல்லூரியோடு சேர்த்துக் கொள்ளலாமா என்ற யோசனையை இப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி பிரின்சிபாலோடு நானும் சென்று அமைச்சர் அவர்களை வீட்டிலே பார்த்து கோரிக்கை கொடுத்தோம். யோசித்துக்

1981 மார்ச் 27]

கொண்டிருப்பதாக அமைச்சர் இப்போது சொல்கிறார்கள். இந்தக் கல்லூரி சிரமமான நிலையில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. சீக்கிரமாக அந்தக் கலைக் கல்லூரியோடு இணைப்பதோ அல்லது அரசு மானியம் கொடுப்பதோ இரண்டில் ஒன்றை அரசாங்கம் இந்தக் கல்வியாண்டில் செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாம் விரைவிலே முடிவு எடுக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் பல்வேறு பிரச்சினைகளை பலபேர்கள் எழுப்புவதால் இந்தக் காரியங்களைச் செய்வதில் நாளாகிறது. விரைவிலே முடிவு எடுப்போம்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, மகளிர் செந்தமிழ்க் கல்லூரி இரண்டிற்கும் அரசு மானியம் இல்லை. ஆகவே அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு யு.ஜி.சி. அடிப்படையில் ஊதியம் கிடைப்பதில்லை என்ற காரணத்தினாலே அங்கே உள்ள கலைக் கல்லூரியோடு அதை இணைப்பதற்குக் கோரிக்கை வந்தால் அரசு ஆராய்வதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அந்தக் கோரிக்கை வந்து இருக்கிறது. இதை அடுத்த கல்வி ஆண்டுக்குள்ளாவது அமல் நடத்தி அந்த ஆசிரியர்களுக்குச் சம ஊதியம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அவர்கள் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். மறுக்கவில்லை. ஆனால், நடத்துகிறோம் என்று சொல்லி அவர்கள் ஆரம்பித்துவிட்டு இப்போது பணம் இல்லை என்று அரசிடமிருந்து பணம் கேட்பதால்தான் பிரச்சினை உருவாகியிருக்கிறது. ஆகவே நாம் பரிசீலித்து இறுதியாக முடிவு எடுப்போம்.

திரு. எம். வி. இரத்தினம்: பழனியில் உள்ள இந்தக் கல்லூரியை நடத்துகின்ற பழனிகோயில் தேவஸ்தானம் அதை நடத்த முடியாததற்குக் காரணம் என்ன? கோயிலின் வருமானம் என்ன? குறைவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கேள்வியைத் தனியாகக் கேட்டால் தொடர்புடைய அமைச்சர் பதில் சொல்வார். அவர்கள் முதலிலே நடத்துவதாகச் சொல்லி ஆரம்பித்தார்கள். இப்போது நடத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே கல்வித் துறையைப் பொறுத்த மட்டில், இது ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது.

[1981 மார்ச் 27

பீடித் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயம்

*வினா எண் 513—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பீடி தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் ஒரே விதமாகக் கூலி நிர்ணயிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமுலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சென்னை, வட ஆற்காடு, சேலம், கோவை, திருச்சி, முக்கூடல் போன்ற பகுதிகளில் கூலிகள் குறைவாகக் கொடுக்கப்படுவதால் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து பீடித் தொழில்களை நடத்துகிறார்கள். அவர்கள் நியாயமான கூலியைக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிற போது பேக்டரியை மூடிவிடுகிறார்கள். ஆகவே மாநிலம் முழுவதும் ஒரே கூலியை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: குறைந்த பட்ச ஊதியத் திட்டத்தின் கீழ் ஒரே ஊதியத்தைத் தமிழகம் பூராவும் அளிக்கிறோம். அது குறைந்தபட்ச ஊதியம். அதற்கு மேல் ஆங்காங்குள்ளவர்கள் நேரடிப் பேச்சு வார்த்தையின் மூலம் பேசி அதிகமாகப் பெறுகிறார்கள். குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையிலே அந்தத் தொகைக்குக் கீழே யாரும் கொடுக்கக்கூடாது. அந்த அளவுக்குக் கட்டாயம் கொடுத்தாகவேண்டும். Th y h v no r ght to exist if th y are not abl to p y the m n mum w ge. அதுதான் சட்டம். அதற்கு மேலே வட ஆற்காடு மாவட்டத்திலே அதிகமாக வாங்குகிறார்கள். திருச்சியிலே வாங்குகிறார்கள், அதுதான் இன்றுள்ள நிலை.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது அளிக்கப்படுகின்ற கூலி முறையில் சென்னையில் அமைச்சரவர்கள் கூறியதைப்போல கூலி வேறு, போனஸ் வேறு என்று தனித்தனியாகக் கொடுக்கப்படுவதில்லை. சேர்த்தே கொடுக்கிறார்கள். குறைந்தபட்சக் கூலியோடு இணைத்தே தந்து விடுகிறார்கள். அது அரசு முடிவுக்கு விரோதமானது. அதேபோல, முக்கூடலை எடுத்துக்கொண்டாலும் அரசாங்கம்

1981 மார்ச் 27]

நிச்சயித்த கூலியைவிடக் குறைவாக இருக்கிறது. அதை அரசு அறியுமா? அதைத் தடுக்கவும், நியாயக் கூலி கொடுக்கவும் சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றிப் புகார் வந்தால் அரசு கவனிக்கும். முக்கூடல் பகுதியில் தொழிற்சங்க இயக்கம் இன்னும் சற்று வலுவுள்ளதாக அமைந்தால் அந்தப் பகுதியிலே உள்ள தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும். அந்தக் கருத்தை நான் தொழிற்சங்கத் தலைவரிடம் நேரிலேயே சொல்லி இருக்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வடார்க்காடு மாவட்டத்தில் அதிகம் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே மிகக் குறைந்த அளவுக்குக் கூலி கொடுக்கப்பட்டு, பீடித் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து கூலி உயர்வு வேண்டுமென்று எல்லாக் கட்சித் தொழிலாளர்களும் ஏகமனதாக ஒரே குரலில் குரல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, வடார்க்காடு மாவட்டத்திலும், மற்ற இடங்களிலும் உள்ள பீடித் தொழிலாளர்களுக்குக் கூலியை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் அதிகமாகத் தருகிறார்கள் என்று நான் சொன்னதன் பொருள், குறைந்த பட்ச ஊதியம் என்று நிர்ணயித்திருக்கிறோமே அதற்குமேல் என்று பொருள். அதுதானே தவிர அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் அதிகம் என்பது அல்ல; பீடித் தொழிலாளர்கள் பெறுகின்ற குறைந்தபட்ச ஊதியம் போதாது, அவர்களுக்கு இன்னும் அதிகம் கிடைக்க வேண்டும். ஆனால் நான் சொன்னது, 1979-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தை விட அதிகம் தருகிறார்கள் என்பது. 1979ஆம் ஆண்டில் நாங்கள் நிர்ணயித்திருக்கிறோம். அதுபற்றி மறுபரிசீலனை செய்து மீண்டும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: பேரவைத் தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களுக்குக் கூலி என்பது ஆயிரம் பீடிகளுக்கு இவ்வளவு கூலி என்று கொடுக்கிறார்கள். அந்தக் கூலி அடிப்படையிலே, அதைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பீடி அதிபர்கள் அதிலே தரக்குறைவான பீடி என்று 20 சதவீதம், 30 சதவீதம், 15 சதவீதம் என்று தள்ளுபடி செய்து விடுகிறார்கள். எனவே, தரக் குறைவான பீடி

[1981 மார்ச் 27

என்பதன் சதவீதத்தை நிர்ணயம் செய்து, 5 சதவீதத்திற்கு மேல் தள்ளுபடி செய்யப்படக் கூடாது என்று நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி யெல்லாம் ஆங்காங்கு தனிப்பட்ட முறையிலே முறையீடுகள் வருமேயானால் கவனிக்கிறோம். ஒரு நல்ல செய்தியை இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். பீடித் தொழிலாளர்களுக்கு, Gu r nt ed M n mum w ge— உத்தரவாதமுள்ள ஊதியம் கொடுப்பதைப்பற்றி இப்பொழுது பரிசீலனை செய்யப்படுகிறது. விரைவிலே உத்தரவு வெளியிடப்படும். 'Full back w g.' என்று சொல்வார்கள்.

திரு. ஏ.டி. குலசேகர்: பேரவைத் தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு பி.எஃப், ஈ.எஸ்.ஐ., போன்ற திட்டங்கள் கிடைப்பது இல்லை. இவைகள் கிடைப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது வருகின்ற முறையீடுகளின் பேரில் பேச்சுவார்த்தைகள் நடந்து ஏற்றாற்போல் ஒப்பந்தம் செய்யப் படுகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சக் கூலியை மறைமுகமாகக் குறைக்க வேண்டு மென்பதற்காகப் பீடி உற்பத்தியாளர்கள் மூலப்பொருட்களைப் குறைவாகக் கொடுத்து, அதனால் அந்தத் தொழிலாளர் களுக்குக் கிடைக்க வேண்டிய கூலியிலே வெட்டு ஏற்படுகிறது. சென்னையிலேயும் வேலூரிலேயும் வேலைநிறுத்தம் போராட் டம் நடந்து, ஒப்பந்தம் ஏற்பட்டாலும், இன்னும் அதே நிலை தான் நீடிக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளைத் தீர்ப்பதற்காகத்தான். Gurant ed minimum wage, full back wage என்று கொடுக்க, மகாராஷ்ட் டிரத்தில் இருப்பதைப்போல, தமிழகத்திலேயும் கொண்டு வரு வதற்குப் பரிசீலனை செய்து, நோட்டிபிகேஷன் கொடுத்து முடிந்து விட்டது. விரைவிலே அந்த அறிவிப்பு—உத்தரவு வெளிவரும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவர்வர்களே, பீடி தயா ரிக்கின்ற உரிமையாளர்கள், பெண்களைப் பணிக்கு அமர்த்திக் கொண்ட போதும், அந்தப் பெண்களுக்குப் பேறுகால விடு

1981 மார்ச் 27]

முறைச் சலுகைகளை அளிக்க வேண்டியிருக்கிறது என்ற கார ணத்திற்காக அவர்கள் வீட்டு ஆண்கள் பெயரைப் பதிவு செய்வதை அரசாங்கம் அறியுமா? அப்படிப்பட்ட புகார்கள் வந்துள்ளனவா? பதிவு செய்யப்பட்டிருப்பது ஆண்களாக இருப் பதைப்பற்றி அரசாங்கம் கவனத்தில் எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, இந்தப் புகார்கள் பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளத் தனியாக ஒரு கேள்வி போட்டால் அவை களைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் தலைவரவர்களே, தற்சமயம் விலைவாசி உயர்ந்திருப்பதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்சக் கூலியை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அடுத்து, விலைவாசி உயரக் கூடிய நேரத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு அதை ஈடு செய்யும் முறையில் பஞ்சப்படி வீதத்தை அமல் செய்யும் விதத்திலே மாற்றியமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1979-ல் குறைந்தபட்ச ஊதியம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. 1979, 1980 ஆகிவிட்டது. 3 ஆண்டுகள் முடிய வேண்டுமென்று கூடப் பார்க்காமல், விரைவி லேயே மாற்றி அமைப்பது பற்றி இந்த அரசு பரிசீலனை செய்யும். அப்படி மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யும் குழுவின் முன்னதாக மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா போன்றவர்கள் இப்பேர்ப்பட்ட யோசனைகளைச் சொன்னால் அது தொழிலாளர்களுக்குப் பலன் உள்ளதாக அமையும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கூலியைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். டெல்லியிலே நடைபெற்ற மாநாட்டிலே குறைந்தபட்ச கூலியைப் பற்றி முடிவெடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, M nim m W g s Act அந்தந்த மாநிலத்தில் அவரவர்கள் நிர்ணயிப்பதாகும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர் களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம், அதற்கு உத்தர வாதம் செய்யப்பட இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். ஆனால், இங்கே கேட்டிருக்கிற கேள்வி அதுவல்ல. இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயிருக்கிற பீடித்தொழிலாளர்களுக்குச் சம்பளங்களிலும் கூலிகளிலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தால், உயர்ந்தபட்சம் எந்த இடத்தில் கிடைக்கிறதோ அதே நிலையில் தமிழகம் முழுவதும் கூலியை ஒருசமப்படுத்த, ஸ்டாண்டர்டைஸ் பண்ண முடியுமா? குறைந்தபட்சக் கூலியை கொடுத்துக் கொண்டிருந்தால் என்றைக்கு அவர்களுக்கு அதிக பட்சக் கூலி கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தில் குறைவாகவும் மற்றொரு மாவட்டத்தில் அதிகமாகவும் ஆனால், எல்லாம் குறைந்த பட்சம் என்று அறிவித்திருப்பதற்கு மேல் இருந்தாலுங்கூட, அது கசப்புணர்ச்சியை உண்டாக்கும் என்ற காரணத்தால், நோடிஃபிகேஷன் மெத்தட் மூலமாக, உயர்ந்தபட்சக் கூலி இருப்பதைப் பார்த்து, அதையே மினிமம் வேஜஸ்—குறைந்தபட்ச ஊதியமாக அறிவிக்கலாமா என்பதைப் பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவிலேயே அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும். தொழிலாளர்களுக்குச் சாதகமாக இந்த அரசு வெகு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஏற்கனவே அறிவித்து இருக்கக்கூடிய குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை முதலாளிகள் அமுல் நடத்தாமல் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தடை வாங்கியிருக்கிறார்கள். எனவே, குறைந்த பட்சக் கூலி சட்டம் அமுலாகவில்லை. எனவே, சட்டத்திலேயே அவர்கள் உயர்நீதிமன்றம் செல்லாமல் இருக்க வகை செய்யும் விதத்தில் சட்டத்திருத்தம் செய்ய உத்தேசம் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்காகக் கொண்டு வந்த மூலச் சட்டத்தையே எதிர்த்து உயர்நீதிமன்றம் வரையில் போனவர்கள்தான் பீடித் தொழில் முதலாளிகள். அவ்வப்போது வரக்கூடிய குறைகளை அரசு பரிசீலிக்கும். ஆனால், It is not justiciabl வழக்கு மன்றத்திற்கே போகக் கூடாது என்ற சட்டத்தை ஒரு ஜனநாயக நாட்டில் போடுவது அவ்வளவு சுலபம் அல்ல. அப்படியே ஒரு சட்டம் கொண்டு வருவது என்றாலும் மத்திய அரசு கொண்டு வர வேண்டும். மாநில அரசு கொண்டு வருவதில் அவ்வளவு சாத்தியக்கூறு இருப்பதாக நான் கருதவில்லை.

திரு கு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பீடியைத் தொழிலாகக் கொண்டிருக்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு? எந்த எந்த, மாவட்டத்தில் இந்தப் பீடித் தொழில் கூடுதலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போட வேண்டும்.

தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாடு

*வினா எண் 514—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கலந்துகொண்டாரா?

(ஆ) ஆம், எனில் அக்கூட்டத்தில் எடுக்கப்பெற்ற முடிவுகள் பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற தொழிலாளர்கள் அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட 49 முடிவுகளில் முக்கிய முடிவுகள் பின்வருமாறு—

(1) 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தில் "பொருத்தமான அரசு" "தொழில்", "சம்பளம்" "தொழிலாளர்" போன்ற சொற்களுக்கான பொருள் விளக்கங்களைத் திருத்துதல் அல்லது விரிவுபடுத்துதல், தனிப்பட்ட தொழிலாளி தொழில் நீதி மன்றத்தில் நேரிடையாக அரசின் தலையீடு இன்றி வழக்குத் தொடர வழி செய்தல், சமரச அலுவலர்கட்கு அதிக அதிகாரங்கள் அளித்தல், தொழிற் தகராறுகளில் துரிதமாக முடிவு காண கால நிர்ணயம் செய்தல், தொழில் நீதி மன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகளை அமுல்படுத்த அவைகளுக்கே அதிகாரம் அளித்தல் போன்றவற்றிற்காகத் தேவையான திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

(2) 1946 ஆம் ஆண்டு தொழில் நிலை ஆணைகள் சட்டத்தில், பணியாளர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் காலத்தில் வாழ்க்கைப்படி வழங்க வழி செய்தல் முதலியவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்.

(3) 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழ் தொழிற்ச் சங்கங்களைப் பதிவு செய்ய நிறுவனத்தில் உள்ளவர்களில் குறைந்த பட்சம் 10 சதவீதமாவது உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தல், குறைந்த பட்ச சந்தாவினை ஒரு ரூபாயாக உயர்த்துதல், விவசாய கிராமப் புறத் தொழிலாளர்கட்கும் சட்டத்தினைப் பொருந்தச் செய்தல். நிர்வாகப் பொறுப்பில் வெளியார்கள் 25 சதவீதத்திற்குமேல் இருக்கக்கூடாது என்று விதித்தல் முதலியவற்றிற்காக திருத்தங்கள் செய்ய வேண்டும்.

(4) பல்வேறு சம்பளக் குழுக்களின் பரிந்துரைகளை அமுல் படுத்த மைய அரசு ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும்.

(5) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவுக் கூலிச் சட்டத்தில், அடிக்கடி சம்பள விகிதங்களை மாற்றி அமைத்தல் போன்றவற்றிற்காகத் திருத்தங்கள் செய்ய வேண்டும்.

(6) இதே போல் ஊதியக் கொடைச் சட்டம், பணியாளர் வைப்பு நிதிச் சட்டம், பணியாளர் மாநில காப்புறுதிச் சட்டம், முதலிய சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

(7) மேலும், தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு, வீட்டு வசதித் திட்டம், பாதுகாப்பு வசதிகளை அதிகப்படுத்துதல், சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுத்தல் போன்ற பல்வேறு பொருள்கள் பற்றியும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, 49 முடிவுகள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அதைச் சுருக்கி 7 முடிவுகளாகச் சொல்லி இருக்கிறார்கள். மீதி இருக்கக்கூடிய முடிவுகள் அச்சடிக்கப்பட்டு இந்த அவைக்கு அளிக்கப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புவதோடு, எடுக்கப்பட்ட முடிவுகள் எவ்வளவு காலத்திற்குள் அமுல் நடத்தப்படும் என்பது பற்றி முடிவெடுக்கப்பட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளைச் செயல்படுத்துவதற்கு 4 குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குழுவில் நான் கூட உறுப்பினராக இருக்கிறேன். இந்த 49 முடிவுகளையும் சைக்ளோஸ்டைல் செய்து உறுப்பினர்களுக்குக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, 4 குழுக்கள், அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த 4 குழுக்களும்

எந்தெந்த முறையிலே அமைக்கப்பட்டிருக்கின்றன? யார் யார் அதில் உறுப்பினராக இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 4 குழுக்களிலும் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், ஒரு குழுவில் நான் உறுப்பினராக இருக்கிறேன் என்பது மட்டும் உறுதி.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் தொழில் தகராறுகளில் தலையிடுகின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு வேண்டும் என்று, மத்திய அமைச்சர் யோசனை கூறியது உண்மையா ? அதை நம்முடைய தமிழக அரசும், தமிழக அமைச்சரும் ஏற்றுக்கொண்டார்களா அல்லது ஏற்றுக்கொள்ள மறுத்தார்களா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாநிலத்தில் 30 நாட்களுக்கும் மேலாக ஏதாவது தொடர்ந்து வேலை நிறுத்தம் நடக்குமானால் மத்திய அரசு தலையிட வேண்டும் என்று ஒரு யோசனை கொண்டு வந்தது உண்மை. நீங்கள் எல்லாம் பெருமைபடக்கூடிய அளவுக்கும், சந்தோஷப்படக்கூடிய அளவுக்கும் அதை எதிர்த்தது தமிழக அரசு. மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டது.

நெல்லித்துறை பகுதியிலிருந்து கோவைக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம்.

*வினா எண். 515—திரு ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகருக்கு நெல்லித்துறை பகுதியில் இருந்து குடிநீர் கொண்டுவர திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. ஏ. டி. குலசேகர் : தலைவர் அவர்களே, 1974—75 ஆம் ஆண்டில் கோவை நகரில் இத்திட்டத்திற்கு மதிப்பீடுகள் போடப்பட்டுள்ளது. அதன் விவரம் அரசுக்குத் தெரியுமா ? அதை மேற்கொண்டு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கு பவானியில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கின்றது.

ஏற்கெனவே, சிறுவாணியில் இருந்து வரக்கூடியது 22.30 மில்லியன் காலன்தான். அது கோவை நகரத்திற்கும் மற்ற இடங்களுக்கும் கொடுப்பதற்குப் போதுமானதாக இல்லை என்ற காரணத்தால் கோவையில் இருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பவானி ஆற்றில் இருந்து, அதிலே நம்பிக்கை இருக்கிற காரணத்தால், அங்கிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கலாம் என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[முற்பகல் 9–50]

திரு. ஏ. டி. குலசேகர்: தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் முடிவு அடைய எத்தனை ஆண்டுகள் ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. பவானி ஆற்றில் போதிய அளவு நீர் உள்ளமையால் கோவைப் பெருநகர்ப் பகுதியுடன் திருப்பூர், பல்லடம் மற்றும் அவினாசி ஆகிய நகர்ப் பகுதிகளையும் இணைத்து இவற்றிற்குத் தேவையான 2011 ஆம் ஆண்டிற்கான மக்கட் தொகையான32. 16 இலட்சத்திற்கு—இப்போது அப்படி போட்டு இருக்கிறோம், அது 36 இலட்சத்திற்குக் கூட போகலாம் தேவையான நாளொன்றுக்கு 500 மில்லியன் லிட்டர் நீரளவையே கணக்கில் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அளவில் சிறுவாணித் திட்டம் மூலம் கிடைக்கக்கூடிய 101.46 மில்லியன் லிட்டர் போக மீதமுள்ள தேவை நாளொன்றிற்கு 400 மில்லியன் லிட்டர் ஆகும். திருப்பூர் நகராட்சி இக்கூட்டுத் திட்டத்தின் மூலம் பயன்பெற சம்மதம் அளிக்கவில்லை. இது தான் இதிலே சிக்கல். எனவே இத்திட்டத்தை மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றுத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டு இருந்த கேள்வி நெல்லித்துறை திட்டத்தைப் பற்றியதாகும். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தத் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். பவானி ஆற்றில் இருந்து மேட்டுப்பாளையம் வழியாக தண்ணீர் எடுத்துவருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், திருப்பூர் நகராட்சி மன்றத்தில் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்ன திட்டம் நெல்லித்துறை திட்டம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? பவானி ஆற்றில் இருந்து மேட்டுப்பாளையம் திருப்பூருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்திற்காக சுமார் 6 கோடி ரூபாய் அளவிற்கு திட்டமிடப்பட்டு நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அந்த நகராட்சி ஆணையாளர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கும் தகவல்படி கோவை நகரத்திற்கு 35 கிலோ மீட்டர் தூரத்தில் ஓடிக்கொண்டு இருக்கும் பவானி

ஆறுதான் நம்பகமான ஆதாரம் உள்ளதாக இருக்கிறது. அதாவது-ரிலயபிள் சோர்ஸ். ஆகவே, அங்கே இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்தைக் கூட்டு திட்டமாக—திருப்பூர், பல்லடம் மற்றும் அவினாசி ஆகிய நகர் பகுதிகளை இணைத்து—காம்பிரஹென்சிவ ஸ்கீம் என்கிற முறையில் கொண்டு வருவதற்கு திருப்பூர் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே மறுபரிசீலனை செய்துகொண்டு இருப்பதாகத் தகவல் என்னிடத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு எல்லாத் தகவல்களும் அறிய விரும்பினால் தனியாக ஒரு கேள்வி அவர் போடுவாரானால் அவர்கள் விரும்புகிற தகவல்கள் சேகரித்துக் கொடுக்கப்படும்.

திரு. எம். சின்னராஜ்: தலைவர் அவர்களே, கோவை நகரைச் சுற்றி இருக்கிற சிறுவாணித் திட்டம் வகுக்கப்படுகிறபோது அருகில் இருக்கிற பெரிய நாய்க்கன்பாளையம், துடியலூர் ஆகிய பகுதிகளையும் பவானி திட்டத்தின்கீழ் இணைக்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? நெல்லித்துறை, பவானி ஆகிய இரண்டு திட்டங்களிலும் பயன்படும் ஆறு பவானி ஆறுதான். ஆகவே, அந்தப் பவானி திட்டத்தில் இந்தப் பகுதிகளையும் இணைத்துச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இப்போது கோவை பெருநகரம், திருப்பூர், பல்லடம் மற்றும் அவினாசி ஆகிய நகர் பகுதிகளை மட்டும் பவானி திட்டத்தில் சேர்ப்பதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் இடங்கள் அல்லது கிராமங்கள் இதிலே சேர்க்கப்படவேண்டும் என்று விரும்பினால், உரிய காலத்தில் அதற்கான மனு கொடுப்பாரானால், இந்தத் திட்டம் இப்போது பரிசீலனையில் இருப்பதால் அதையும் இணைத்துக் கொள்ள பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லித்துறை திட்டம் ரத்து செய்யப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர்அவர்கள் கூறினார்கள். ரத்து செய்யப்பட்டதற்கான காரணம் என்ன? பவானி ஆறு ஒன்றுதான் நம்பத் தகுந்த ஆறு என்று சொன்னார்கள். அதைவிட நம்பத்தக்க மூல ஆறாக நெல்லித்துறை ஆறு இருக்கிறது. அதுவும் நெல்லித்துறை குடிநீர்திட்டம் வெற்றி பெறுமானால், கோவை மாவட்டம் முழுவதிலும் குடிநீர்ப் பிரச்சனை தீர்க்கப்பட்டு விடும் என்கிற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை இடையிலே தகர்ந்து போவதற்கான காரணம் என்ன என்பதையும் நெல்லித்துறை திட்டம் முதலில் எடுக்கப்பட்ட திட்டம், அதற்குத் தேவையான பணம் கூட ஒதுக்கப்பட்டு விட்டது என்று கூறிய பிறகு, இப்போது அந்தத் திட்டம் இல்லை, பவானி ஆற்று திட்டம் வருகிறது என்று சொல்வதற்கான காரணம் என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கோவை நகரத்திற்கு நெல்லித்துறை பகுதியில் இருந்து குடிநீர் திட்டம் ஏதேனும் உண்டா என்பதாகும். அதற்குப் பதில் சொல்கிறபோது 'இல்லை' என்று சொன்னேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததைப் போலவே, மூலக் கேள்வி நெல்லித்துறை திட்டம் பற்றியதுதான் என்றாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல்லித்துறை திட்டத்தைப் பற்றி பதில் அளிக்கிற நேரத்தில் அவரே வலிய வந்து பவானி திட்டத்தைப் பற்றி பல விளக்கங்களை இங்கே அளித்தார்கள். அப்படி அளித்தது மாத்திரமல்லாமல் பவானி ஒருங்கிணைந்த திட்டத்தை திருப்பூர் நகராட்சி மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் சொன்னார்கள். ஆனால் திருப்பூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு மணிமாறன் அவர்கள் அந்தத் திட்டத்தை திருப்பூர் நகராட்சி மன்றம் ஏற்றுக் கொண்டதாக கூறினார்கள். ஆகவே திருப்பூர் நகராட்சி மன்றம் அந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நாங்கள் நம்புவதா, அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நம்புவதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, என்னிடம் இருக்கும் தகவல்படி பதில் சொன்னேன். வேறு விவரங்களை நான் சொல்ல முடியாது வேண்டுமானால் மீண்டும் அந்தத் தகவலைப் படிக்கிறேன். பவானி ஆற்றில் போதிய அளவு நீர் உள்ளமையால், கோவைப் பெருநகர்ப் பகுதியுடன் திருப்பூர் பல்லடம் மற்றும் அவினாசி ஆகிய நகர்ப் பகுதிகளையும் இணைத்து இவற்றிற்கு தேவையான 2011-ம் ஆண்டிற்கான மக்கள் தொகையான 32·16 இலட்சத்திற்குத் தேவையான நாளொன்றுக்கு 500 மில்லியன் லிட்டர் நீரளவையே கணக்கில் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அளவில், திருப்பூர் நகராட்சி இக்கூட்டுத் திட்டத்தின் மூலம் பயன் பெற சம்மதம் அளிக்கவில்லை. இதுதான் குறிப்பு. திருப்பூருக்கு வேறு திட்டம் இருக்கிறது. அது பற்றி இங்கே குறிப்பு இல்லை. அதற்கு வேண்டிய தனிக் கேள்வி போட்டால், அதற்குத் தகுந்த பதில் அளிக்க முடியும். இதுதான் நிலைமை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற நெல்லித்துறை திட்டமும், பவானித் திட்டமும் ஒரே ஆற்றில்தான் இருக்கின்றன. இரண்டுக்கும் ஒரே ஆற்றுத் தண்ணீர் தான் வரவேண்டும். அப்படி இருக்கும் போது ஏற்கெனவே போட்ட நெல்லித்துறைத் திட்டம் எப்படி ரத்தாகியது என்பதற்கு சரியான காரணத்தைச் சொல்லவில்லை. கோவைக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டுவரும் பிரச்சனை இல்லை என்கிறார்கள். இதற்கு முன்னால் கோவைக்கும் திருப்பூருக்கும் பல்லடத்திற்கும் சேர்த்து ஒரு இணைப்பான திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. திருப்பூர் நகராட்சி ஒப்புக்

கொள்ளவில்லை என்று சொன்னார்கள். ஆனால் திருப்பூருக்கு மேட்டுப்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டு, அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறுவாணித் திட்டத்தின் மூலமாக கோவைக்குக் கொடுக்கும் தண்ணீரை 'ஆக்மெண்ட்' செய்வது என்பது வேறொரு திட்டம். ஆனால் இந்தப் பிரச்சனையிலே பவானி ஆற்றிலிருந்து கோவைக்கு தண்ணீர் கொண்டுவரும் முடிவு நிலைக்குமா அல்லது ரத்தாகிவிடுமா ? எப்போது நிறைவேற்றப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் எந்த நேரத்திலும் நெல்லித்துறைத் திட்டம் ரத்தாகி விட்டது என்று சொல்லவில்லை. வேண்டுமானால் படித்துப் பார்க்கலாம். கோவை நகருக்கு நெல்லித்துறை பகுதியில் இருந்து குடிநீர் கொண்டுவர திட்டம் ஏதேனும் உண்டா என்பது கேள்வி. அதற்கு என்னுடைய பதில் 'இல்லை'. என்பது ஆகும். கேட்டதற்குத்தான் பதில் சொல்ல வேண்டும் ; கேட்காததற்குப் பதில் சொல்லக் கூடாது.

தென்னக ஆறுகளை ஒன்றிணைக்கும் திட்டம்

*வினா எண். 516—திரு. இ. முத்துராமலிங்கம் திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) தென்னக ஆறுகளை ஒன்றிணைக்கும் திட்டம் தொடர்பாக மத்திய அரசு தமிழக அரசிடம் ஆலோசனை செய்ததா ?

(ஆ) எந்தெந்த ஆறுகளை எவ்வாறு ஒருங்கிணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) 1980ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசு மாநில அதிகாரிகள் மட்டத்தில் நடத்திய கூட்டத்தில் இந்தியாவில் வட மாநிலங்களில் ஓடும் பெரிய நதிகளை இணைப்பது பற்றியும் மற்றும் தென்மண்டலத்தில் ஓடும் பெரிய நதிகளை இணைப்பது பற்றியும் திட்டம் தயாரிப்பது பற்றி பேசப்பட்டது. இதுபற்றிய ஒரு விரிவான திட்டம் தயாரிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு, நதிகளில் கிடைக்கும் உபரி நீர் பற்றியும் மற்றும் தேவையான புள்ளி விவரங்களையும் சேகரித்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, கூட்டம் நடந்ததாகவும், அதிலே வட மாநில ஆறுகளையும், தென்மாநில ஆறுகளையும் இணைப்பது பற்றி பேசப்பட்டதாகவும் சொன்னார்கள். எந்த எந்த ஆறுகளில் உபரி நீர் இருப்பதாகச் சொன்னார்கள் ? குறிப்பாக தென் மண்டலத்தில் எந்த எந்த ஆறுகளில் தண்ணீர் உபரி இருக்கிறது என்று பரிசீலிக்கப்பட்டதா ? தமிழ்நாட்டில் எந்த எந்த ஆறுகளிலிருந்து பெறு

வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பரிசீலிக்கப்பட்டதா? அதன் அடிப்படையில் நமக்கு கூடுதலாகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா?.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, இப்போதுதான் புள்ளி விவரங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு வேலை முடிந்த பிறகுதான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, அரபிக் கடலிலே கலந்து வீணாகும் தண்ணீரை தமிழகத்திற்குக் கொண்டு வர தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்ததா? அண்மையில் மத்திய அரசு குழு ஆராய்ந்து ஒரு கணிசமான பகுதி தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்று சொல்லியிருப்பதாக அறிகிறேன். அது பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மூலக் கேள்வி ஒட்டு மொத்தமாக தென் மண்டல ஆறுகளைப் பற்றியது.

மணிமுத்தா அணைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம்

*வினா எண் 517—திரு. ஆர். தியாகராாசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) சாத்தனூர் அணையின் வலது பக்கக் கால்வாய் மூலம் மணிமுத்தா அணைக்கு சாத்தனூர் அணை நீரை கொண்டு செல்ல திட்டம் உண்டா?

(ஆ) மணிமுத்தா அணையினால் பாதிக்கப்பட்ட மேமாத்தூர், விருத்தாசலம் அணைகளுக்கு அந்த நீர் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) மணிமுத்தா அணையினால் அதன் கீழ் உள்ள மேமாத்தூர், விருத்தாசலம் அணைகள் பாதிக்கப்படவில்லை. மணிமுக்தா அணை, அதன் கீழ் உள்ள பழைய ஆயக்கட்டின் பாசன உரிமை பாதிக்கப்படாவண்ணமே திட்டமிடப்பட்டுக்கட்டப்பட்டுள்ளது.

திரு. ஆர். தியாகராாசன் : தலைவரவர்களே, அந்தப் பகுதி பாதிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் மூன்று அணைகள் அந்தப் பகுதியிலே கட்டிமுடிக்கப்பட்டு விட்ட காரணத்தால் கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு இதுவரை தண்ணீர் வரவில்லை. உபரித் தண்ணீர் தான் தருவோம் என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிக்கு சாத்தனூர் டாம் வலது கரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, பொன்னியாற்றில் வெள்ளம் ஏற்படும் காலங்களிலும், திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் எல்லிஸ்சத்திரம் அணைக்கட்டுகள் நிரம்பி வழியும் போது மட்டுமே, மணிமுத்தா நதியில் கடும் வறட்சி ஏற்படும்போது, சாத்தனூர் அணை நீரை இராமராஜபுரம் அணைக்கட்டுக்கு விடுவதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு அதைப்பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு திருத்திய மதிப்பீடுகள் தயாரித்து வேலைகள் நடைபெற அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

திரு. ஆர். தியாகராாசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தண்ணீர் விடுவதற்கான வேறு ஏதாவது உதவியைச் செய்வதற்குத் திட்டங்கள் உண்டா என்றுதான் கேட்டேன். ஆகவே மீண்டும் கேட்கிறேன். அந்தப் பகுதி மக்களுக்கு பாசனத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு வேறு ஏதாவது திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மணிமுத்தா நதியில் கடும் வறட்சி ஏற்படும்போது சாத்தனூர் அணை நீரை இராமராஜபுரம் அணைக்கு கொடுப்பதற்குரிய ஒரு புதுத் திட்டகதிற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன்.

மதுராந்தகம் ஏரியில் ஆக்கிரமிப்புகள்

*வினா எண் 518—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஏரியின் உள்ளே சிலர் ஆக்கிரமித்து உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்தச் சட்ட விரோத ஆக்கிரமிப்பால் சுமார் 2,000 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஏரியின் நீர் பிடிப்பு புறம்போக்கு நிலங்களில் 129.69 ஏக்கர் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புக்களை அகற்ற பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இந்த ஆக்கிரமிப்பால் ஏரியின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்படவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் அங்கு பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்று அவர்கள் ஒவ்வொரு ஜமா பந்தியிலும் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று அதிகாரிகளும் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழியினை அவர்கள் காப்பாற்றவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் சுமார் 2,000 ஏக்கர் அளவுக்கு விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுகள் சுமார் 3,000 ஏக்கர். ஏரியின் நீர்ப்பிடிப்பு புறம்போக்கு நிலங்களில் 129.69 ஏக்கர் நிலங்களில் 246 ஆக்கிரமிப்புக்காரர்கள் பயிர் செய்யும் சூழ்நிலை இருந்து வருகிறது. அவர்களை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பு குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? மேலும் மதுராந்தகம் ஏரி, அங்குள்ள பாசனத்திற்கு மிகவும் முக்கியமான ஏரியாகும், இந்த ஏரி பல்லாண்டு காலமாக பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. 1969-ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது அன்றைய தினம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை அந்த ஏரிக்கே அழைத்து வந்தார்கள். ஆனால் அந்த ஏரியானது செப்பனிடப்படாமல் இருக்கின்றது ஆகவே இனிமேலாவது அதைச் செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜசிங்கமங்களம் கண்மாய்

*வினா எண். 519—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பாசன வினியோகத்திற்கான ராஜசிங்கமங்களம் கண்மாய் வைகை ஆயக்கட்டு நீர்ப்பாசன திட்டத்துடன் சேராமல் இருப்பது அரசுக்குத்தெரியுமா?

(ஆ) ஆம் எனில் தற்போது சேர்த்துக் கொள்ள அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ); வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டம் (Modernising Vaigai Channel Scheme) முழு அளவில்செயல்பட இன்னும் மூன்று ஆண்டுகள் பிடிக்கும். அதன் பிறகு ஐந்து ஆண்டுகள் இத்திட்டம் செயல்படும் விதம் மற்றும் பயன்களை பரிசீலித்த பின்னரே ஆர். எஸ். மங்கலம் கண்மாயை வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சேர்ப்பது பற்றி பரிசீலிக்க முடியும் என்று சிறு பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு செ. சிவசாமி : தலைவரவர்களே, ஆர். எஸ். மங்கலம் கண்மாய் 12,140 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய கண்மாய். அந்தக் கண்மாய்க்கு அப்பர் நாட்டான் கால்வாய், லோயர் நாட்டான் கால்வாய் ஆகிய இரண்டு கால்வாய்களிலும் வைகையிலிருந்து தண்ணீர் விடுவது இன்று நிறுத்திப்பட்டிருக்கின்றது. ராமநாதபுரம் எஸ்டேட் காலத்திலிருந்து தொடர்ச்சியாக ஆர். எஸ், மங்கலம்கண்மாய்க்கு வைகையிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால் தற்போது
** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்ணீர் ஒவ்வொரு பக்கம் போவதற்கும் ஒவ்வொரு விளக்கம் தந்து கொண்டு இருக்க முடியாது. சுருக்கமாகக் கேட்கவேண்டும், கடைசியாக அவர் ** ** ** என்று குறிப்பிட்டதை நீக்கும்படி உத்தரவு இடுகிறேன்.

திரு செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை சீரமைப்புத்திட்டத்திலே உடனடியாக அதைச் சேர்த்துக் கொள்ள அரசு ஏற்பாடுசெய்யுமா என்று தெரிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, மேல் நாட்டான், கீழ் நாட்டான் ஆகிய இரண்டு நீர் வரத்து கால்வாய்கள் மூலமாக வைகையில் உபரி நீர் இருக்கும் போது ஆர். எஸ். மங்கலத்திற்கு நீர் சென்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டிருக்கிறது. உபரி நீர் இல்லாத காலங்களில் நீர் விடப்படுவது இல்லை. இதனால் சீரமைப்புத் திட்டம் முழுவதுமாக முடிந்த பிறகு, எவ்வளவு உபரி நீர் கிடைக்குமோ அதை வைத்துக் கொண்டுதான் இந்தத் திட்டம் போட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சூறாவளி சுற்றுப் பயணம் செய்தபோது இந்தக் கண்மாய்களை நேரிடையாகப் பார்த்து, அவற்றை சீரமைக்கும் பணிகளை உடனடியாக செய்ய வேண்டும் என்று அந்த இடத்திலேயே சொன்னார்கள். ஆகவே, உடனடியாக வறட்சிப் பணிகளின் திட்டத்தின் கீழ் அந்தக் கண்மாய்களை சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அந்தக் கால்வாய்கள் சேதம் அடைந்தன. அதை உடனடியாக திருத்தி அமைத்து, ஆழப்படுத்தி, கரைகளை வெட்டி சீர் செய்வது போன்ற பணிகள் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தப் பணிகள் முடிவடைந்தாலே, தண்ணீர் கிடைத்து விடும், கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. வைகையில் உபரி நீர் இருந்தால்தான் அங்கே தண்ணீர் கிடைக்கும். ஆகவே வைகை சீரமைப்புத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பெற்ற பிறகே, கிடைக்கும் உபரி நீரை கருத்தில் கொண்டு, தண்ணீர் விட ஏற்பாடு செய்வதற்கான வழி முறைகள் ஆராயப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை பெரியார் சீரமைப்புத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் நடத்தப் பெறுகிறது. அதற்கு ஏற்கனவே திட்டம் இடப்பட்டு ஒரு பகுதி வேலை நடந்து வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மாண்புமிகு உறுப்பினர், நண்பர் சிவசாமி அவர்கள் கேட்கிற மாதிரி, அந்த ஆர். எஸ். மங்கலம் கால்வாயை வைகை சீரமைப்புத் திட்டத்தில் சேர்ப்பதற்கு உலக வங்கியுடன் பேச்சு வார்த்தை நடத்தப் பெறவில்லையா ? இல்லையென்றால் இனிமேலாவது அப்படி நடத்தி அங்கே தண்ணீர் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே நிதி பிரச்னை என்பதே இல்லை. இப்போது வைகையில் கிடைக்கும் உபரி நீர்தான் அந்தக் கால்வாய்கள் வழியாக அனுப்பப் பெறுகிறது. உபரி நீர் கிடைக்காத காலத்தில் அனுப்பப்பெறுவது இல்லை. வைகை

சீரமைப்புத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பெற்ற பிறகு, மூன்று ஆண்டுகள் கழித்துதான், உபரி நீர் எவ்வளவு கிடைக்கும் என்று பார்த்து, அந்தக் கால்வாய்களின் வழியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யப் பெறும். அப்படி அந்த திட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது வேண்டுமானால், நிதிப் பிரச்னை எழுந்தால் உலக வங்கியுடன் பேசியோ அல்லது நம் நிதியிலிருந்தே நிதியை ஒதுக்கியோ திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பரிசீலனை செய்யலாம்.

திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள சர்க்கரை மடை கண்மாயை, வைகை சீரமைப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நீண்டநாள் கோரிக்கை இருந்தது. அது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

திருச்செந்தூர் தொகுதியிலுள்ள இந்திரா கெமிக்கல்ஸ் நிறுவனம்

*வினா எண். 520—திரு. திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்செந்தூர் தொகுதியில் வீரபாண்டியன் பட்டினம், காயல் பட்டினம் இரண்டிற்கும் இடையே உள்ள சிண்டிகேட் பாங்கினால் பெரு முதலீடு செய்யப்பட்டு தற்சமயம் மூடி இருக்கும் இந்திரா கெமிக்கல்சை திறக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) இல்லை எனில் இனியாவது எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) மற்றும் (ஆ) : இந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் ஒரு பதிவு பெற்ற சிறிய தொழில் அல்ல. இருப்பினும், தொழில் வணிக இயக்குநரகம் எழுதிய பல கடிதங்களுக்கு மேற்படி இந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிர்வாகத்தின் பங்குதாரர்களிடமிருந்து யாதொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் அதன் புனர்வாழ்வுக்கான மேல் நடவடிக்கைகள் கூட எடுக்கப்பட முடியவில்லை.

[1981 மார்ச் 27

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் வசிக்கும் திரு. பாலகிருஷ்ணன் கதாதரி, திருமதி பாலகிருஷ்ணன் கதாதரி, திரு. ஜி. ராமன் ஆகியோர் அந்த நிறுவனத்தினுடைய பங்குதாரர்கள். ஆனால் இந்த நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க முடியாததற்குக் காரணம், இது சிறு தொழில் இயக்குநருடைய அலுவலகத்தில் பதிவு செய்யப்பெறவில்லை என்பதுதான்.

[முற்பகல் 10-10]

திரு. சி. கேசவ ஆதித்தன் : இந்தத் தொழிற்சாலை என்ன மூலப் பொருளைத் தயாரிக்க நிறுவப்பட்டது? அங்கே வேலை பார்த்து வந்த தொழிலாளர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அது கெமிக்கல்ஸ் சம்பந்தமான நிறுவனம். இன்றைய தினம் அவர்கள் டி.ஐ.சி. அல்லது டைரக்டர் ஆப் ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் இன்ஸ்ட்யூட் ஆகியவற்றை அணுகினால் மீண்டும் அந்த நலிந்த ஆலையை வங்கி உதவியோடு திறக்க ஆவன செய்யப்படும்.

திருவண்ணாமலைப் பகுதியில் இரும்பு எடுக்கும் சாத்திய கூறுகள் பற்றிய ஆய்வு

*வினா எண். 521—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள மலைப் பகுதிகளில் இரும்பு எடுக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி அறிய ஜப்பான் நாட்டு நிபுணர்களால் ஆய்வு ஏதேனும் நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) 1972 ஆம் ஆண்டில் ஜப்பானிய நாட்டிலிருந்து திருவாளர்கள் மாருபேனி கார்ப்பரேசன் (Tvl. Marubeni Corpcration) நிறுவனத்தாரின் கனிம இயல் ஆய்வாளர் ஒருவர் திருவண்ணா மலைக்கருகில் உள்ள கவுத்திமலை, வேடியப்பன் மலைப் பகுதி களில் இரும்புக் கனிமங்கள் கிடைக்கும் பகுதிகளைப் பார்வை யிட்டார்.

1981 மார்ச் 27]

(ஆ) திருவாளர்கள் மாருபேனி கார்ப்பரேசனைச் சார்ந்தவர்கள் மேற்சொன்ன மலைப் பகுதிகளில் கிடைக்கும் இரும்புக் கனிமங்களைப் பரிசோதனை செய்வதற்காக ஒரு "மாதிரிப் படிவம்" (S mple) எடுத்துச் சென்றார்கள். இந்நிறுவனமானது, இம்மலைகளிலிருந்து தோண்டியெடுத்து, அரைக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்ட மணல் போன்ற இரும்புக் கனிமங்களையே Ground, be efic ted course sand like conc nt t s வாங்க விரும்புகிறது. மற்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட தரம் குறைந்த இரும்புக் கனிமங்களுடன் இவைகளைக் கலந்து உபயோகிக்கவே இந்தக் கனிமங்கள் தேவைப்பட்டன. இதற்காக இம்மலைகளில் சில பகுதிகளில் மட்டுமே கிடைக்கும் தரத்தில் உயர்ந்ததாகவும், இருப்பு அளவில் (R s rves) அதிகமாகவும் மற்றும் எளிதாக வெட்டி எடுக்க முடிந்ததாகவும் உள்ள கனிமங்களையே வாங்க இந்நிறுவனம் விரும்பியது. இதனால் இம்மலைகளின் மற்றப் பகுதிகளில் கிடைக்கும் கனிமங்களை, உபயோகப்படுத்த முடியாமல் கனிம சேதம் செய்ய வேண்டிய நிலைமை நேரிடும். இம்மலைகளில் கிடைக்கும் எல்லா இரும்புக் கனிமங்களையும் பயன்படுத்த தரம் உயர்த்தப்பட்ட இரும்புக் கனிம உருண்டைகள் செய்யும் தொழிற்சாலையை (Pellet sat cu plant) நிறுவி அவைகளை ஏற்றுமதி செய்வதற்கு, அரசோடு யாதொரு உடன்பாடும் கொள்ள இந்நிறுவனம் முன்வரவில்லை. எனவே, அரசும் இது பற்றி மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்த இணக்கம் தெரிவிக்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : 1972 ஆம் ஆண்டு ஆய்வாளர் ஒருவர் அங்கே வந்து பார்த்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறகு அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசினுடைய அனுமதியைக் கேட்டதாகவும் அப்போது சொல்லப்பட்டது. இந்த அரசு இப்போது மத்திய அரசின் அனுமதி பெற்று வேறு ஏதாவது தொழில் அதிபர்களோடு கூட்டு சேர்ந்தாவது அந்த ஆலையைத் துவங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ? அல்லது மாநில அரசு மத்திய அரசின் அனுமதி பெற்றாவது அந்தத் தொழிலை ஆரம்பிக்க, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற வகையில் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கமுன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநவுக்கரசு : இரும்புக் கனி குறிக்கப்பட்ட கனிமமாக இருப்பதால் இரும்புக் கனிமங்களைக் கொண்டு எஃகு தொழிற்சாலை அமைக்கும் கொள்கை, அதிகாரம் மத்திய அரசிடம்தான் உள்ளது. அவர்கள் இதை ஜம்ஷட்பூரில் உள்ள நிறுவனத்திடம் ஒப்படைத்து ஆய்வு நடந்திருக்கிறது ஏற்கனவே ஒரு தடவை. அந்த ஆய்வின் அடிப்படையில் அது பொருளாதார ரீதியாக இலாபகரமாக இல்லை ; மற்ற மாநிலங்களில் கிடைக்கிற இரும்பு. கனிமங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது

மிகக் குறைந்த அளவில் கிடைப்பதாக இருக்கிறது என்ற அடிப் படையில் அதை கைவிட்டிருக்கிறது. இருந்தாலும் கூட மீண்டும் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தி திருவண்ணாமலைப் பகுதியில் மீண்டும் ஒரு ஆய்வை நடத்துவதற்கு மீண்டும் கேட்கும்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : மத்தியில் அப்போதிருந்த அரசாங்கத்தைக் கேட்டதற்கு அவர்கள் என்ன பதில் தந்த ர்கள், அதற்குப் பிறகு இந்த மாநில அரசு ஏதாவது நடவடிக்கைகள் (இதுவரை) எடுத்திருக்கிறதா ? இந்த இரும்பு சேலத்தில் இருக்கிற இரும்பை விட நல்ல இரும்பாக இருப்பதாக திருவண்ணாமலைப் பகுதியில் சொல்லப்படுகிறது, அது உண்மையா? ஆகவே இனிமேலாவது வேகமாக நடவடிக்கைகள் எடுத்து இங்கு ஆலையைத் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப் பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் அவர்களுக்குத் தெரிந்த தகவலை வைத்துச் சொல்கிறார்கள். ஜம்ஷெட்பூரில் இருக்கிற மத்திய அரசு நிறுவனம் நடத்திய ஆய்வில் சொல்லப்பட்டுள் ளதை நான் சொல்கிறேன். ஆய்வு செய்யப்பட்டு ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, மேற்கொண்டு இந்த நிறுவனம் இயங்காமல் தடை பட்டது. இந்த அரசு திருவண்ணாமலைப் பகுதியில் மீண்டும ஆய்வு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் எவ்வளவு ஏக்கர்கள் அளவுக்கு இந்தக் கனிமப் பொருள்கள் கிடைக்கின்றன ? சேலம் உருக்காலையோடு இதை இணைப்பதற்கு ஏதாவது ஆலோசனை உண்டா ? இது குறித்து தமிழக அரசு, மத்திய அரசுக்கு ஏதாகிலும் கூறி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், இந்தப் பகுதியிலே கிடைக்கின்ற இரும்பு கனிமத்தின் தரம் குறை வாக இருக்கின்ற காரணத்தினால், அது பொருளாதார ரீதியில் இலாபகரமாக இல்லாத காரணத்தினால், ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு, அந்தத் திட்டமே கைவிடப்பட்டது. எனவே, சேலம் உருக்காலையோடோ, மற்றப் பகுதிகளை எடுத்துக் கொள்ளும் உத்தேசம் இல்லை. எனினும் மீண்டும் ஆய்வு செய்ய வேண்டுமென்று அரசு விரும்புகிறது. ஆகவே, மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

ஊத்தங்கரைப் பகுதியில் கிடைக்கும் செம்புத்தாது

* வினா எண் 522—திரு. க. இர. சின்னராசு : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதிகளில் செம்பு கிடைக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அங்கு எவ்வளவு செம்பு கிடைக்கிறது ?

(இ) அதை எடுக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம். தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை பகுதியை அடுத்த சாமல்பட்டிக்கு அருகில் போக்கம்பட்டி மற்றும் மோட்டு சூலக்கரை கிராமங் களைச் சுற்றியுள்ள பகுதிகளில் விட்டு விட்டு அமைந்துள்ள செம்பு கனி அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

(ஆ) மற்றும் (இ) : முழுமையான ஆய்வுகளிலிருந்து கிடைக கப்பட்ட அறிக்கையின்படி ஆழ் துறப்பன துளைகளிலிருந்து எடுக்கப்பட்ட தாதுவின் மாதிரிகள் இரசாயன சோதனைகளில் மிகக் குறைந்த அளவு செம்புத்தாது (0·1—0.2% விழுக்காடு) மட்டுமே கொண்டிருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தச் செம்புத்தாது அமைப்பு, பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என கைவிடப்பட்டது.

திரு. க. ரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரைப் பகுதியை அடுத்த சாமல்பட்டிக்கு அருகில் செம்பு கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லுகின்றபோது 0.2% விழுக்காடு கிடைக்கின்றது என்று சொல்லி, அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகச் சொல்லு கிறார்கள். மேலும் நமது அரசு அப்பகுதியை நல்ல முறையில் விரிவாக ஆய்வு செய்வதற்கு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்ட தன் அடிப்படையிலே அங்கே 0.2% விழுக்காடு இருக்கின்றது என்ற முடிவிற்கு வந்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. எனவே, அதைத் திரும்பவும் ஆய்வு செய்யும் உத்தேசம் இல்லை.

தோட்டி, கொம்பன், ஜோதி சமுதாய மக்களை பழங்குடி மக்களாக அறிவித்தல்

*வினா எண் 523—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் வசிக்கும் தோட்டி, கொம்பன், ஜோகி என்றழைக்கப்படும் தெலுங்கு பேசுகின்ற காட்டுநாயக்கன் சமுதாய மக்களை, பழங்குடி மக்களாக அறிவிக்கு மாறு தஞ்சை, திருச்சி மாவட்ட மகாசபையின் தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) "காட்டுநாயக்கன்" இனம் பழங்குடியினர் பட்டியலிலும் "தோட்டி" தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலும், "கொம்பன்" குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரி, ஒருவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர் என்று உள்ளூரில் விசாரித்து தமக்கு ஏற்புடைத்தாயின் அவர் இன்ன இனத்தவர் என்று சான்றிதழ் வழங்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, கோரிக்கை ஏற்கத் தகுந்ததல்ல.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காட்டுநாயக்கன் சமுதாயமானது குறிப்பாக திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும், இதைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வித ஜாதியாக, அந்தந்த ஏரியாவில் அறிவிக்கிறார்கள். குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த காட்டுநாயக்கன் இனம் 'குழுவர்' என்று சொல்லப்படுகிறது. இதனால், இவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காத காரணத்தினால், இந்தச் சமூகத்தினர் அவர்கள் சொல்லுகின்ற அடிப்படையில் இவர்களுக்கு சலுகைகள் அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது குறிப்பிட்டுள்ளது இந்திய அரசியல் சட்ட 341 (1) பிரிவின்படி ஒரு இனத்தவர் அந்த மாநிலத்தின் ஆளுநர் அவர்களைக் கலந்து, ஜனாதிபதி அவர்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கலாம் என்ற அடிப்படையிலே இவர்கள் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போன்று, பல்வேறு பகுதிகளிலேயிருந்து எனக்கும் இதுபோன்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. துறை இயக்குநர் இதுபற்றி அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஏற்கெனவே மிகவும் பின்தங்கிய பழங்குடி மக்கள், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் காலா காலத்திலே கிடைக்கவில்லை. சீக்கிரம் முடிவு எடுத்து இதை அறிவிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

[முற்பகல் 10-20]

திரு. வ. சத்திய மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கன், தோட்டி போன்றவர்களைப் போல், சலவைத் தொழிலாளர்களையும், சவரத் தொழிலாளர்களையும் ஆதி திராவிடர் இனத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை. (மணி அடிக்கப்பட்டது.)

சென்னை அரசு அச்சகத்திலுள்ள இயந்திரங்கள்

*வினா எண். 524—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் உள்ள அரசு அச்சகத்தில் இயந்திரங்கள் பல பழுதுபட்டோ அல்லது வேலைக்குப் பயன்படுத்தப்படாமலோ இருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம், எனில் அதற்கான காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) இயந்திரங்களை உபயோகத்தில் கொண்டு வருவதற்கான காலதாமதத்திற்கு அடிப்படைக் காரணம் அவை அயல் நாடுகளில் செய்யப்பட்டதால், அவைகளின் உதிரி உறுப்புக்கள் (Sp re parts) இங்கு கிடைப்பது இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை இயந்திரங்கள் பழுதுபட்டிருக்கின்றன? வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எத்தனை இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன? அவற்றின் மதிப்பு எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள குறிப்பின்படி 14 இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அவைகளின் மதிப்பு கொடுக்கப்படவில்லை.

திரு து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை ஆண்டுகளாக அந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14 இயந்திரங்களில் ஏறத்தாழ 11 இயந்திரங்கள் பெரும் பழுதடைந்தவையாக இருக்கின்றன. 1972-க்குப் பின் தான் இந்த நிலை இருந்து வருகின்றது.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினருக்கு அளிக்கும் பட்ஜெட் ஸ்பீச், கவர்னர் அட்ரஸ் போன்றவைகள் அச்சடிப்பதற்காக இங்கிருந்து கவர்ன்மெண்ட் பிரஸிற்கு போகவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவைகளை இங்கேயே அச்சடிக்கும் வகையில் தலைமைச் செயலகத்திலேயே ஒரு மினி பிரஸ் துவங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

கட்டயன் தேவன் பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகள்.

*வினா எண். 525—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவில்லிபுத்தூர் தொகுதி கட்டயதேவன்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அரிசன நலத்துறையில் இருந்து கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் மக்கள் குடியேறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : திருவில்லிபுத்தூர் தொகுதி கட்டயத்தேவன்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டப்பட்ட இருபத்து மூன்று வீடுகளில் இருபது வீடுகளில் மக்கள் குடியேறியுள்ளனர். மீதமுள்ள மூன்று வீடுகள் பழுதடைந்துள்ளதால் அவற்றில் மக்கள் குடியேறவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு மத்திய சர்க்காரிலிருந்து ஜெயந்தி ஸ்கீம் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையில், கட்டய தேவன்பட்டியில் மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள். அந்த வீடுகள் பூராவும் இடிந்து விட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 23 வீடுகளில் 3 வீடுகள்தான் இடிந்திருக்கின்றன என்று சொன்னார்கள். மீதமிருக்கும் 20 வீடுகளும் இடியும் தருவாயில் இருக்கிறது என்ற காரணத்தால், தமிழக அரசு புதிய வீடுகள் கட்டுவதற்கும், அல்லது ரிப்பேர் செய்வதற்கும் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் கட்டய தேவன்பட்டி கிராமத்தைப் பொறுத்த வரையில் இந்த வீடுகள் ஜெயந்தி கிராமத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டவை ஆகும். வீடுகள் கட்டத் துவங்குவதற்கு முன்பு, கருமண்ணாக இருக்கும்

வீடு கட்டும் இடத்தை சோதனை செய்யாததும், இணைப்பு கொடுக்காததும், வீடுகள் கட்டும்பொழுது சன்னலும், கதவுகளும் பொருத்தாததும், தூண்கள் அமைத்துக் கொடுக்காததுமே இவ்வீடுகள் இவ்வாறு பழுதடைந்ததற்கு காரணம் என்று தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்திருக்கிறார். இந்தத் திட்டத்தின் படி கட்டப்பட்டிருக்கும் பழுதடைந்த வீடுகள் மட்டுமின்றி, கடன் மற்றும் மானியத்தின் திட்டம் மூலமாக தாட்கோ மூலம் இலவசமாக கட்டப்பட்ட வீடுகளையும் ஆதி திராவிடர் நலத் துறையால் கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளையும் சீர் செய்வதற்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை இயக்குநர் அவர்கள் மாநிலம் முழுவதிலும் பழுதடைந்த வீடுகள் எங்கெங்கே இருக்கின்றன, அவற்றிற்கான செலவு என்ன என்பது குறித்து அரசுக்கு அளிக்கும்படி கோரப்பட்டிருந்தார். தாட்கோ மேலாண்மை இயக்குநர் இதுபோன்ற மிகச் சிறியதாக உள்ள பணிகள் மாநிலம் முழுவதும் உள்ள எல்லா இடங்களிலும் மிகப் பரவலாக இருக்கின்றன என்றும், தாட்கோவில் தற்போது உள்ள குறைந்த அளவு பணியாளர்களால் இவ்வாறு ஏராளமாக உள்ள இச்சிறு பணிகளைச் செய்ய இயலாது என்றும் ரூபாய் 5,000 மதிப்பீட்டுக்கு குறைவான சிறு வேலைகள் ஆதி திராவிடர் நலத் துறையின் மேற்பார்வையாளர்களின் மூலமே மேற்கொள்ளப்படலாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளார். இக்கருத்துருவினை அரசு பரிசீலித்து ஆணையிட உள்ளது.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வி கேட்கிற முறையில் ஏதாவது ஒரு தவறான அடிப்படையான கருத்து சொல்லப்பட்டு அமைச்சரிடமிருந்து விடை எதிர்பார்க்கப்படுமானால் அந்தத் தவறான கருத்தை திருத்துவதற்கும் அமைச்சர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் என்பது மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட திட்டம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோது மத்திய அரசு மேற்கொண்ட திட்டத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது என்று தெரிவித்தார்கள். இது மாநில அரசுத் திட்டம் என்பதை விடையிலே அமைச்சர் அவர்கள் சொல்லாத காரணத்தால் இது மத்திய அரசு திட்டம் என்பதுபோல் விட்டு விடப்பட்டிருப்பதால் தவறான கருத்து ஏற்படும் என்பதால் நான் தலைவர் அவர்கள் மூலமாக திருத்துவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, ஜெயந்தி கிராமத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் ஏறத்தாழ 46 இலட்சம் ரூபாயில் மத்திய அரசு அளித்த மானியத்தைக்கொண்டு கட்டப்பட்டது. அந்த வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த வீடுகளைப் பொறுத்த வரையில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இது குறித்துத் தெரிவித்து ஒன்

றிய ஆணையர் மூலமாக இதுபோன்ற தவறுகளுக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் மீதும் மற்றவர்கள் மீதும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா.தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரிலே கட்டப்பட்ட வீடுகள் ஜெயந்தி ஸ்கீமிலே கட்டப்பட்ட வீடுகள்தான் என்பதைத் தெரிவித்துக் கொண்டு கட்டயத்தேவன் பட்டியில் வீடுகளை மறுபடியும் கட்ட முடியாது, காரணம் பூமி பிளந்து இருக்கிறது, களிமண் இருக்கிறது, அந்த இடத்திலே மேற்கொண்டு கட்டினால் இடிந்துவிழக்கூடிய நிலை தான் ஏற்படும். ஆகவே, வேறு ஒரு இடத்தை ஆர்ஜிதம் செய்து கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அரசு இதுகுறித்து விரிவான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாநிலம் பூராவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரிசனங்களுக்காக கட்டப் பட்ட வீடுகள் பழுதடைந்திருப்பனவகளைப் பழுதுபார்ப் பதற்காக துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு வட்டாரத்தின் அளவிலும் வீடுகளை கட்டுவதற்கு வட்டியில்லாக் கடன்களைக் கொடுப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்த மாதிரி கடன்களை அவர்கள் இப்போது பெறமுடியவில்லை. கடன்கள் தரமுடியாது, இனாமாகக் கட்டிக் கொடுத்த வீடுகளுக்கு அவை களை ரிப்பேர் செய்ய பழுதுபார்க்க இடிந்தால் கட்ட கடன் கொடுக்க விதிகள் திருத்தப்படுமா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு).—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்

அ. சென்னையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடாமல் இருத்தல்

திரு. என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சென்னை நகரத்திலே இன்று காலையிலிருந்து ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடவில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நீங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானமாகக் கொண்டுவரலாம், பாயின்ட் ஆப் ஆர்டரிலே கொண்டுவர முடியாது.

ஆ. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த அவையின் உரிமை பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதை முன்னுக்குக் கொண்டுவர நான் தங்களுடைய தீர்ப்பை கேட்க விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது சம்பந்தமாக 24 ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேலவையிலே இந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால் இந்த அவையில் உரிமை பின்னுக்குத் தள்ளப்பட்டி ருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினசரி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்து கொண்டிருக்கிறது. நேற்றும் அதுபோல் ஒன்றை எடுத்துக் கொண்டோம் இதுவும் எடுத்துக் கொள்ளப் பெறும்.

திரு. சோ. அழகர்சாமி : மேலவையிலே பதில் சொல்லி யாகிவிட்டதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள் மேலவையிலே எடுத்து கொள்ள கூடாது என்று நாம் சொல்ல முடியாது. இரண்டு சபைகளும் தொடர்ந்து நடக்கின்றபோது இப்படிப் பட்ட சம்பவங்கள் நடப்பது என்பது சாதாரணம் தினசரி நமது அவையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் வராத நாள் எதுவென்று சொல்லுங்கள்; தலைவர்களெல்லாம் கூடி ஒரு ஒருநாளைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள்; அதன்படி எடுத்துக்கொள்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : இங்கேயொரு தீர்மானம் வந் திருக்கும் பொழுது, அங்கே பதில் சொல்லியாகி விட்டது. இங்கே முதலிலே அது வந்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு அந்த அவையை நாம் கட்டுப்படுத்த முடியாது.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாமன்றத்தினுடைய தலைவரவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானம் விஷயமாக உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கனவே கொடுக்கப்பட்டு ஏறத்தாழ பத்து இருபது நாட்கள் ஆகியும்கூட ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர் மானத்தை தினசரி ஒன்று எடுத்துக்கொள்கிறேன். தினசரி ஐயாவுடையதையே எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் நான் என்ன செய்வது ?

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவரவர்களே. ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான் எடுத்துக்கொள்ள முடியும். என்று சொல்கிறீர்கள், ஆனால் விதியைத் தளர்த்த முடியும், ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்களை, ஏராளமாக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தினால், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருப்பதால் வருமான அடிப்படையிலே இப்பொழுது சர்க்கரை கொடுப்பது சம்பந்தமாக ஏற்கனவே கொடுத்திருக்கிறேன். ஞானசவுந்தரி ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் பிரச்னைக்குப் போக வேண்டாம். விதியைத் தளர்த்தி, சட்டமன்றத்தை ஒத்திவைத்தால் கூடப் பிரச்னை இல்லை. விதியை எதற்கு வேண்டுமானாலும் தளர்த்தலாம். ஆனால் இப்பொழுது நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும பல கட்சித் தலைவர்களே கூடப் பேசவில்லை. பல கட்சித் தலைவர்களும்இன்றைகு,நாளைக்குளபேசிமுடித்தாக வேண்டும். அதற்கான பிரச்னைகள் இருக்கின்றன. அதற்குள்ளே இந்த உரிமை மீறல் இரண்டு மூன்று வந்திருக்கிறது.

திரு அ ரகுமான்கான் : நான் கேட்பது ஒரு மாதத்திற்கு முன்பாகக் கொடுத்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எல்லோரும் தானே கொடுக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இருபது நாளைக்கு முன்னால் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 21 நாளைக்கு முன்னால் இன்னொரு உறுப்பினர் கொடுத்திருந்தால் என்ன செய்வது?

திரு. அ. ரகுமான்கான் : மதுராந்தகத்தில் நடைபெற்ற சம்பவம் மிக முக்கியமானது. இன்னும் நீங்கள் எடுக்கவில்லை? எப்பொழுது எடுக்கப் போகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தலைவரிடம் சொல்லுங்கள் பி. ஏ. சி. கூட்டத்திலே அவர்கள் சொல்லட்டும் தினசரி நான்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுக்கட்டும் என்று அவர்கள் சொல்லட்டும். எனக்கு ஆட்சேபணை இல்லை. உங்கள் தலைவரிடம் பேசுங்கள்.?

திருமதி டி. யசோதா : நான் தீர்மானம் கொடுத்து எவ்வளவு நாள்ஆகிறது? நேற்று தங்கள் அறையிலே ஒப்புக் கொண்டீர்கள் எடுத்துக் கொள்வதாக ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு தஙகள் தீர்மானத்தைத் எடுதது கோள்வதாக நான் சொல்லவில்லை (கூச்சல் குழப்பம்)

திரு என். எஸ். வி. சித்தன் : அதை எடுப்பதில் என்ன சிரமம் இருக்கிறது ? ஏன் அறிக்கை வரவில்லை எதனால் டிலே ஆகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிரமம் எதுவும் இல்லை பதில் வர வேணடும்தினசரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கிறேன்

Thiru K. S. G. HAJA SHEREEF : The Lady Member has given notice of that adjournment motion. I would request . . . .

Mr. SPEAKER : Do you mean that we must give all preference to the Lady Member only ? The problem is, I am taking daily one adjournment motion .

Thiru N. S. V. CHITHAN : That may be taken up tomorrow. You can direct the Government .

Mr. SPEAKER : Do not direct me.

(கூச்சல்-குழப்பம்) நேற்று திரு. விஜயராகவன் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தது. இன்றைக்கு திரு. ரமணி அவர்கள் —கட்சி பூரா கொடுத்திருக்கிறது—தீர்மானம் வருகிறது. ஒவ்வொரு கட்சியும்தான் ஒத்தி வைப்புத் தீர்மானம் தருகிறது. அவற்றுக்கு பதில் வந்தாக வேண்டும். பதில் வராமல் நானே பதில் சொல்ல முடியாது. வரிசையாக எடுத்துக் கொண்குவருக்இறோம். திருமதி யசோதா அம்மாளுடைய தீர்மானமும் அந்த வரிசையில் (கூச்சல்-குழப்பம்)

திருமதி டி யசோதா : அரிசனப் பெண் சம்பந்தப்பட்டது. அதற்கு முக்கியத்துவம் இல்லையென்று சபாநாயகர் கருதுகிறாரா? இல்லை, காங்கிரஸ்காரர் கொண்டு வருவதால் முக்கியத்துவம் இல்லையென்று கருதுகிறாரா?

திரு என். எஸ். வி. சித்தன் : இந்த வாரத்தில், காங்கிரஸ் கட்சியின் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கூட வரவில்லை.

திரு· கு. பாலன் : கவன ஈர்ப்புத் தீர்மானம் கூட வரவில்லை. தயவுசெய்து கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு என்ன சொல்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திருமதி யாசோதா அம்மாளுடைய ஒத்தி வைப்புந் தீர்மானம் சீக்கிரம் வரும். (கூச்சல் குழப்பம்)

[1981 மார்ச் 27

திருமதி டி யசோதா : அதைச் சீக்கிரமாகவே கொண்டு வந்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கருத்துகள் கவனத்திலே கொள்ளப்படும்.

திருமதி தா இராசாம்பாள் : 10 நாட்களாக ஒரு பெண்மணியின் பிரச்சினை, கொலையுண்ட பிரச்சினை, சமுதாயப் பிரச்சினை, தாங்கள் எடுத்துக் கொள்ள வில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கொலையா, தற்கொலையா என்பதே இன்னும் தெளிவாக்கப்படவில்லை. அதுவே இன்னும் பிரச்சினைக்குரியது. அதைப் பற்றி இங்கே தகவல் தரும்போது கூடுமான வரையில், உண்மையான, கிடைத்த தகவலைச் சொல்ல வேண்டுமென்று அரசு விரும்புகிறது. எனவேதான், இந்தத் தாமதம். நாங்கள் துரிதமாகத் தகவல் தரச் சொல்லியிருக்கிறோம். கிடைத்தவுடன் நிச்சயமாக எவ்வளவு விரைவில் தர வேண்டுமோ அவ்வளவு விரைவில் தருவோம்.

இ உறுப்பினர்களுடன் வருபவர்களும் அனுமதி சீட்டு பெறுதல்.

திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைப்பற்றி உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சரைச் சந்திப்பதற்காக அல்லது முதல்வரவர்களைச் சந்திப்பதற்காக, ஐந்தாறு பேர்களை ஒரு எம். எல். ஏ. அழைத்துக் கொண்டு வந்தால் அந்த ஐந்தாறு பேர்களுக்குகூட பாஸ் வாங்க வேண்டுமென்று நியூ பில்டிங்கிலேயும் சொன்னார்கள். திருட்டுப் போனதற்குப் பிறகு கதவைச் சாத்துவது மாதிரி, முதல்வர் அறையை உடைத்த பிறகு எம். எல். ஏ- க்களுடன் வருபவர்களையும் ரெஸ்ட்ரிக்ட் செய்தால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மெட்ராஸிலே கல்யாண வீடு மாதிரி. எம். எல். ஏக்களுடன் வருபவர்களா இல்லையா என்பதை விசாரிக்க முடியாது. பத்து பேர் வருவார்கள், அவர்கள் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர்களா, அல்லது பெண் வீட்டைச் சேர்ந்தவர்களா என்று தெரியாது. எனவே, விசாரித்துச் செய்வது நல்ல முறை. (குறுக்கீடு). மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பட்டணத்திலே பழக்கம் இல்லை ; அதனால் தான் சொல்கிறேன் செய்ய வேண்டிய முறைப்படி செய்கிறார்கள் பதுாதுகாப்பாகத்தான் இருக்க வேண்டும் ; பாதுகாப்பாக இருப்பதுதான் நல்லது. ஆகவே, அவசியமில்லாத உரிமைகளைக் கோராதீர்கள்

1891 மார்ச் 27]

"திரு. மு. அம்பிகாபதி : அவசியமற்ற உரிமை அல்ல ; சபாநாயகர் அவர்களைப் பார்ப்பதற்காக நான்கு பேர் வருகிறார்கள் ; நாங்கள் அழைத்துக் கொண்டு வருகிறோம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி வரும்பொழுது அவர்கள் உங்களோடு வந்தவர்களா இல்லையா என்று தெரியாது. உறுப்பினரவர்களுக்குப் பழக்கம் இல்லாததால் ஒரு விஷயம் தெரியாது என்று கருதுகிறேன். தலைவர்கள் வரும்பொழுது பக்கத்தில் திடீரென்று ஒருவர் சைட்லேயிருந்து வந்துவிடுவார். அவர் தலைவரோடு வந்தவரா இல்லையா என்பது தெரியாது. காவல்துறையினர் அவரைத் தடுக்கமாட்டார்கள். ஏனென்றால், தடுத்தால் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்று இருப்பார்கள். ஆனால், அவர் யாருக்கும் சம்பந்தம் இல்லாதவராக இருப்பார் ; பெரிய தப்பைச் செய்துவிட்டுப் போய்விடுவார். அதற்குப் பிறகு, சம்பவம் நடந்த பிறகு அவரைப் பிடித்துக் கொண்டு போவார்கள். இது சகஜமாக நடப்பது. பொது வாழ்க்கையிலே எனக்கு இது ரொம்பப் பழக்கம். ஆகவே, கண்காணிப்பது நல்லது ; கண்காணிக்க வேண்டிய வகையிலே கண்காணிக்க வேண்டியதுதான் முறை.

[முற்பகல் 10–40]

3. உரிமைப் பிரச்சினை—மாண்புமிகு முதலமைச்சர்மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நா. சுந்தரராஜ், திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. அ. ரகுமான்கான் ஆகியோர் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாள் அன்று பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை ஒன்றை எழுப்பினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு எனது தீர்ப்பு பின்னர் வழங்கப்படும் என்று தெரிவித்து இருந்தேன். எனது தீர்ப்பு.

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் அன்று காஞ்சிபுரத்தில் ஒரு விழாவில் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எரிசாராய ஊழலில் இந்திரா காங்கிரசைச் சேர்ந்த ஒருவருக்கும் பங்கு உண்டு என்று குறிப்பிட்டுப் பொதுப்படையாகப் பேசியதன் மூலம் பேரவையில் உள்ள எல்லா இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் மீதும் மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்படும்படி உள்ளதாகவும், அவர்கள் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளதாகவும், மேலும், தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள கைலாசம் கமிஷனுக்கு மறைமுகமாக இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று நிர்ப்பந்தம் செய்து கமிஷனை மிரட்டித் தன்னுடைய கருத்தை ஏற்க வழி செய்துள்ளதாகவும் திரு. சுந்தரராஜ் அவர்களும் திரு. சித்தன் அவர்களும் குறிப்பிட்டனர். " எரிசாராய ஊழலில் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதனைச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். இந்தப் பிரச்சினை விசாரணையில்

இருப்பதால் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்கிறேன். இன்னும் இரண்டு அல்லது நான்கு வாரத்திற்குள் தொடர்புடையவர்கள் யார் யார் என்பதனை வெளியிடுகிறேன்'' என்று முதலமைச்சர் அவர்கள் அவையில் பேசிவிட்டு அவை நடந்துகொண்டிருக்கும் போது அவையில் தகவல் தராமல் வெளியே பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சொல்லி இருப்பது அவை உரிமை மீறிய செயல் என்றும், அதைப் பிரசுரம் செய்த அண்ணா பத்திரிகை உரிமையாளர், வெளியிடுவோர் ஆகியோரும் அவை உரிமை மீறல் செய்திருப்பதாகவும் திரு. ரகுமான்கான் குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தில் தாம் வெளியே இப்பிரச்சினை குறித்துப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணங்களை விளக்கிவிட்டு, ''எரிசாராயப் பிரச்சினை இருப்பதால் டிஸ்டிலரியில் யார் யர்ருக்குப் பங்கு இருக்கிறது என்று பார்த்தால் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்குக்கூட பங்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இன்னொன்று இன்று இதையெல்லாம் பேச வேண்டியதில்லை என்றாலும் பேசியதால் சொல்ல வேண்டியிருக்கிறது. சொல்லாமலும் இருக்க முடியவில்லை'' என்று குறிப்பிட்டதாகவும் தெரிவித்தார்.

அவை உறுப்பினர் வியாபார நிமித்தம் ஒரு நிறுவனத்தில் பங்குதாரராக இருக்கின்றார் என்று கூறுவது அல்லது அந்த நிறுவனம் ஒரு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுவது அவை உரிமைகளை எந்தவிதத்திலும் பாதிப்பதில்லை. ஏனெனில் அவர் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளும் வியாபாரங்கள் அல்லது வேறு எந்த வெளி நடவடிக்கையும் அவர் அவையில் உறுப்பினராகப் பணி புரிவதற்காகச் செய்வதில்லை. எனவே, உறுப்பினர்கள் பேரவைக்கென இயங்காத செயல்கள் மீது எவரேனும் வெளியில் விமர்சனம் செய்தால் அது அவை உரிமைகளை பாதிப்பதாகவோ அவையில் அவர் இயங்குவதற்கு இடர்பாடாக உள்ளது என்றோ கூற இயலாது.

மேலும் அவ்வாறு விசாரிப்பதனால் உறுப்பினர்கள், அமைச்சர்கள் அல்லது முதலமைச்சர் மீது அவையிலன்றி அரசியல் ரீதியாக வெளியிலே கூறும் எல்லா விமர்சனங்களும் அல்லது பேச்சுக்களும் அவர்களைப் பற்றியதுதான் என்று கூறி அந்த முறையில் அமைச்சர்களுக்கோ அல்லது முதலமைச்சருக்கோ அல்லது வேறு உறுப்பினர்களுக்கோ மாசு கற்பிப்பது என்பதாகும். எனவே, வெளியிலே பேசப்படும் பேச்சுக்கள் இந்த அவையின் அலுவல் குறித்தது அல்ல. குற்றச்சாட்டுக்களை ஒருவர் மீது மற்றொருவர் சொல்லும்போது அதற்கு மற்றொருவர் பதில் சொல்லும் போது இந்த அவையின் கண்ணியத்தை எந்தவிதத்திலும் பாதிப்பதாக அமையாது. ஒருவர் குற்றம் செய்துள்ளாரா அல்லது குற்றம் அற்றவரா என்பது விசாரணைக்குப் பிறகுதான் தெரிய வரும்.

பேரவையில் ஒரு உறுப்பினர் பேசுவதை வேண்டும் என்றே மாற்றியோ, திரித்தோ அல்லது ஒரு பகுதியை மறைத்தோ, வெளியிட்டால்தான் ஒரு பத்திரிகையின் மீது அவை உரிமை மீறல் பிரச்சினை எழும். அல்லது பேரவையில் ஒரு உறுப்பினர் பேசியதற்காக அல்லது வாக்களித்ததற்காக அந்த உறுப்பினருக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் விமர்சனம் செய்தாலோ அல்லது எழுதினாலோ அவை உரிமை மீறல் எழலாம். காஞ்சிபுரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதை வெளியிட்டதற்காக ''அண்ணா'' நாளிதழ் மீது திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்றும், திரு. நா. சுந்தரராஜ், திரு சித்தன் மற்றும் திரு. ரகுமான்கான் ஆகியோர் எழுப்பிய பிரச்சினையில்அவை உரிமை மீறல் ஏதுமில்லை என்றும் நான் தீர்ப்பளிக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. ஆனால் அன்றைக்கு இந்த உரிமைப் பிரச்சினை மீது உரையாற்றி விளக்கம் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ''அன்பரசு, எம்.பி., அவர்கள் இப்படிப் பேசினார்கள்'' என்று இங்கே ஒரு டேப்பை எடுத்துக் காட்டினார்கள். அந்த டேப் இங்கே போட்டுக் காட்டப்படுமா எனறு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன பேசினேன் என்பதைக் குறித்த டேப் தான் இங்கே காண்பித்தேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில மரபுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார்., அதற்கு முதல் அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் தான் பேசிய பேச்சு அடங்கிய டேப்பைத்தான் இங்கே காட்டியதாகச் சொன்னார்கள். ஆனால் அன்பரசு பேசியதாக இங்கு சொன்னார்களே அது உண்மையா? இல்லையா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது உண்மையா இல்லையா என்பதை அவரே கேட்டுச்சொல்லட்டும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது திரு. அன்பரசு அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்களைப் பற்றிக் குறை கூறி மது அருந்துகிறார்கள் என்று சொன்னார்கள். எனவேதான், நான் பேச நேரிட்டது என்று ஒரு தகவலை இந்த அவையில் சொன்ன காரணத்தால் அந்தத் தகவல் இந்த அவையின் சொத்தாக மாறிவிட்டது. ஆனால் திரு. அன்பரசு அவர்கள் ஒரு அறிக்கையின் மூலம் தான் அப்படிப் பேசவில்லை என்று மறுத்து இருக்கிறார்கள். தொலைபேசி மூலமாக

எனக்கும் தெரிவித்திருக்கிறார்கள். என்வே திரு. அன்பரசு அவர்கள் பேசாத ஒன்றை பொறுப்புள்ள முதலமைச்சர் வெளியிட்டது தவறு அல்லவா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்கு எந்தப்பதிலை நான் எங்கே சொல்ல வேண்டுமோ அங்கே சொல்வேன். (குறுக்கீடுகள்).

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சபையில் ஒரு தகவலைச் சொல்லிவிட்டு எங்கே நான் பதில் சொல்ல வேண்டுமோ அங்கே பதில் சொல்வேன் என்பது முறையல்ல. தகவல் சொல்லப்பட்ட இடம் இந்த சபை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை மீறல் இதிலே இல்லை என்பது என்னுடைய விளக்கம். என் மீது குற்றம் சுமத்தப்பட்ட போது அது சொல்லப்பட்டது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர் என் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்பினாலும் அவர் அந்த வகையில்— அந்த திரு. அன்பரசு அவர்கள்—எடுக்க முடியும். இங்கே சொல்ல ஏமாற்ற வேண்டியது என்னுடைய பொறுப்பான காரியத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று சொன்னால் நான் பொறுப்பைத் தவறாமல் நிச்சயமாகக் கவனித்துக் காரியம் ஆற்றுவேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோயம்புத்தூர், மதுரையிலுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்வதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் கு. ரமணி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், கே. எஸ். தங்கமணி, ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், சி. பழனிமுத்து, திருமதி. இராசாம்பாள் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலும், மதுரையிலும் உள்ள—தமிழகத்தினுடைய முக்கியமான இரண்டு விவசாயப் பல்கலைக் கழகங்கள் இன்று மூடப்பட்டுள்ளன. அங்கே இருக்கின்ற ஆசிரியர்களும், ஊழியர்களும், தங்களுடைய ஊதியங்களையும் மற்ற சில வசதிகளையும் நியாயமாக உயர்த்தித் தரவேண்டும் என்று அவர்களுடைய கோரிக்கையை முன் வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளின்

மீது நியாயமான முறையிலே அவர்களுக்கு உள்ள சங்கங்களின் மூலமாகவாவது அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து பல்கலைக் கழகத்தின் உயர்மட்ட பொறுப்பில் உள்ளவர்களோ அல்லது சம்பந்தப்பட்ட நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களோ தலையிட்டு அவர்களோடு பேசி ஒரு நியாயமான முடிவுக்கு வந்து இருந்தால் இப்படிப்பட்ட வருந்தத்தக்க நிலைமை இன்றைக்கு வந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுடைய சம்பள விகிதங்கள் எல்லாம் யு.ஜி.சி. ஸ்கேல்படி கொடுக்கப்பட வேண்டும் என்கிற நிர்ணயங்கள் இருந்த போதிலும், அந்தமாதிரி நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களை அமல்படுத்தவும், அதை வழிமுறைப்படுத்துவதற்கான அடிப்படைகளை அவர்களுடைய ஸ்தாபனங்களோடு கலந்து பேசி, அவர்களுக்கு பாதிப்பு இல்லாமல் பதவி உயர்வு போன்றவை செய்யப்பட்டு இருந்தால் இந்த நிலைமை வந்து இருக்காது.

(முற்பகல் 10-50)

கோவை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை, விவசாயம் சம்பந்தப்பட்ட வரையில், ஊழியர்கள் சம்பள விகிதத்தை நிர்ணயிக்க வேண்டி ஒரு 'ஒன்மேன் கமிஷன்' போடப்பட்டது. அதன் முடிவுகள் வந்துவிட்டன. அது சம்பந்தமாக இந்த சட்டமன்றத்திலே கேள்விகள் எழுப்பிய காலத்திலே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதனுடைய தீர்ப்பு வந்துவிட்டது என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது அமுல்படுத்தப்படும் என்று கேட்டதற்கு 10 நாட்களுக்குள்ளாக அமுல் படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆயினும் அந்த ஊழியர்கள், ஆசிரியர்களோடு கலந்து பேசி, இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவில்லை. அதன் விளைவாகத்தான் அவர்கள் காத்திருந்து, பொறுத்திருந்துப் பார்த்துவிட்டு, இன்றைக்கு நாடு முழுவதிலும் பல்வேறு தரப்பட்ட ஊழியர்கள் தங்களுடைய நிலைமையை மாற்றியமைக்க முன்வந்து போராடுகிற நேரத்தில் இவர்கள் மட்டும் விலைவாசி ஏற்றம் மற்ற காரியங்களினால் பாதிக்கப்பட்டு, நீண்ட நாள், சும்மா இருக்க மாட்டார்கள். ஆகவே, கஷ்டம் தாங்காமல் நியாயம் பெறுவதற்காக தங்களுடைய போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அதன் விளைவாகத்தான் கோவை விவசாயப் பல்கலைக் கழகம், மதுரை பல்கலைக் கழகம், அவைகளுக்குக் கீழே செயல்படுகிற தூத்துக்குடியிலுள்ள மீன் ஆராய்ச்சிப் பண்ணை உட்பட இன்றைக்கு மூடப்பட்டு, கல்வி பயிற்சியும் நிறுத்தப்பட்டிருக்கிற ஒரு துரதிருஷ்டமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை ஏற்பட்டதற்கு பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கின்ற நிர்வாகிகளின் பொறுப்பும் இதிலே இருக்கிறது என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மேலும் அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் கொண்டு வருகிறேன். இந்தப் பல்கலைக் கழகங்களில் விவசாயப் படிப்பும், விவசாயத்தைப் பற்றிய விஞ்ஞானப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும், மேல்பட்டப் படிப்பும் படிக்கிறார்கள். இப்படிப்பட்ட படிப்புகளிலே பட்டம்

[திரு. கு. ரமணி] [1981 மார்ச் 27

பெற்ற திறமையானவர்களை அங்கே வைஸ்சான்சலராக நியமிக்காமல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு அந்த பதவிகளை நிரப்பி விடுகிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடைய திறமையை சந்தேகப்பட்டு நான் சொல்லவில்லை. அவர்கள் திறமைசாலிகளாக இருக்கலாம். ஆனால் விவசாயப் பல்கலைக் கழகத்தை எப்படி நிர்வகிக்க வேண்டும்; விவசாய விஞ்ஞானம், விவசாய ஆராய்ச்சி, விவசாய மேல் படிப்புகளில் எப்படி பயிற்சி அளிக்க வேண்டும் என்பது போன்ற விஷயங்களை கறாராகத் தெரிந்துக் கொண்டு இருக்கிறவர்களை அங்கே நியமிப்பதற்குப் பதிலாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்கும்போது இந்தத் துறையிலே அவர்களுடைய அணுகுமுறையின் காரணமாக இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதனால்தான் ஆசிரியர்களும், ஊழியர்களும் தங்களுடைய கஷ்ட நஷ்டங்களைச் சொல்லும்போது மொத்த நிலைமைகளையும் எண்ணிப் பார்த்து, பல்கலைக் கழகம் ஒழுங்காக நடக்க வேண்டும், கல்வி, ஆராய்ச்சி நன்றாக நடைபெற வேண்டும் என்ற முறையிலே பிரச்சினைகளை அணுகி, இந்தக் காரியங்களில் அவர்கள் இறங்கவில்லை. அவர்கள் உரிய முறையிலே அணுகி இருந்தால் இப்படிப்பட்ட சூழ்நிலை வந்திருக்காது. ஆகவே, விவசாயப் பல்கலைக் கழகத்தில் இந்தத் துறையில் ஆராய்ச்சித் திறன் பெற்றவர்களை வைஸ்சான்ஸலராக நியமிக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இன்றைக்கு முக்கியமான இந்த இரண்டு பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டிருக்கின்றன. அதனால் விவசாய விஞ்ஞான படிப்பு, ஆராய்ச்சி படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது; ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற பல விளைவுகளும் ஏற்படக்கூடிய ஒரு அவலநிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆசிரியர்களும், ஊழியர்களும், மற்றவர்களும் தங்களுடைய கோரிக்கைகளுக்கு என்ன முடிவு ஏற்படும் என்பதைப்பற்றி அறிந்துக் கொள்ள மிகுந்த ஆவலோடு இருக்கும் ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர, ஒரு சமரச நிலையை உருவாக்க, அரசும், அமைச்சரும் தலையிட்டு, அவர்களுடைய பிரதிநிதிகளை கூட்டி வைத்து அவர்களோடு பேசி, தகுந்த முடிவு எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பு இருக்கிறது. ஆகவே, மிக முக்கியமான இந்த விஷயத்தை எடுத்து பரிசீலனை செய்து, இதில் ஒரு உடனடித் தீர்வு காண, இந்த இரண்டு பல்கலைக் கழகங்களும் உடனடியாகத் திறக்கப்பட, ஊழியர்கள், ஆசிரியர்களோடு பேசி சுமூகமான முடிவு ஏற்பட, எல்லா ஆராய்ச்சிப் படிப்புகளும் தொடர்ந்து நடைபெற, மேலும் எந்தவிதமான குந்தகமும் ஏற்படாமல் இருக்க, இதுபற்றி முழுமையாக விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இந்த முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 மார்ச் 27]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இதே சம்பந்தப்பட்ட பொருள் குறித்து நானும் விதி 54-ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பொருள் குறித்து விதி 55-ன் கீழ் நிறையப்பேர் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவதால் கவன ஈர்ப்புத் தீர்மானம் அடிபட்டுப் போகும்.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, மதுரை விவசாயப் பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டுள்ளன. அங்குள்ள ஆசிரியர்கள் வைத்துள்ள நியாயமான கோரிக்கையை அந்த நிர்வாகம் கவனிக்கவில்லை. அவர்களுக்கு இன்னும் யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷன்படி சம்பளம் கொடுக்கப்படவில்லை. அந்தப் பல்கலைக் கழகத்திற்கென்று ஒரு தனி நபர் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷனின் முடிவுபடியும் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. அந்தப் பல்கலைக் கழகத்தின் வைஸ்சான்சலர் அந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகிகளையும் மற்றவர்களையும் கலந்து பேசி ஒரு தீர்வு காணாமல் போய்விட்டார்கள். எனவே, கோவை, மதுரைப் பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதே போன்று தூத்துக்குடி மீன்வள ஆராய்ச்சி நிலையமும் மூடப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம் மற்றவர்களுடன் கலந்து பேசி ஒரு சுமுகமான தீர்வு காணவில்லை. இதனால் உயர்தர விஞ்ஞானப் படிப்பும் நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே பல்கலைக் கழக நிர்வாகம் ஆசிரியர்களையும், அலுவலர்களையும் அழைத்துப்பேசி ஒரு சுமுகமான முறையில் பல்கலைக் கழகத்தைத் திறப்பதற்கு ஆவன செய்யவேண்டும். மேலும் அந்த நிறுவனங்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிப்பதற்கு பதிலாக அதிலே படித்த பட்டதாரிகளையும் நல்ல அறிவாற்றல் மிக்க அதிகாரிகளையும் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அந்த நிர்வாகத்தை உடனடியாகத் திறக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அப்படித் திறந்தால்தான் பல்கலைக் கழகம் சுமுகமாகச் செயல்படும். ஆகவே உடனடியாக பல்கலைக் கழகத்தைத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்கவேண்டும் என்று கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மருத்துவக்கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் போன்ற

[திரு. கா. காளிமுத்து] [1981 மார்ச் 27

வற்றின் முறையீடுகளை ஆய்வு செய்ய 1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் திரு. சி. வி. ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ். அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழுவை அரசு நியமித்தது. அக்குழு தன் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையை ஆய்ந்து அரசாணை நிலை எண். 574 வேளாண்மைத் துறை 17–3–81 என்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் அரசு வெளியிட்ட ஆணையில் அவர்களுடைய கோரிக்கைகள் சில ஏற்கப்பட்டும், பல ஏற்கப்படாமலும் இருக்கின்ற சூழ்நிலையைப் புலப்படுத்துகிற வகையிலே நான் அவர்கள் இந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்து தொடர்புடைய அரசு செயலாளர்களையும் முன் வைத்து பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று எனது கருத்தினை அவர்களுக்கு நான் தெரிவித்திருக்கிறேன். இந்த அவைக்கு வருவதற்கு சற்று முன்பு கூட ஆசிரியர் சங்கப் பிரதிநிதி திரு. ஐயாசாமி அவர்களோடு தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தையின் மூலமாக பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்கிற எனது கருத்தினை நான் தெரிவித்தேன். மற்றைய சங்கங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொண்டு அவர்கள் தெரிவிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு சுமுகமான முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்ற காரணத்தால் அவையின் அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று அரசின் தரப்பிலே என்னுடைய கருத்தினைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் பத்திரிகைகளிலேயும், வானொலியிலேயும் வருகிறபோது கொடுக்கப்பட்ட பெயர்கள் எல்லாம் விடப்பட்டு பேசியவர்கள் பெயர் மட்டும் போடப்படுகிறது என்ற குறைபாட்டை உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஆகவே பத்திரிகைக்காரர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற பெயர்களை எல்லாம் சேர்த்து வெளியிட்டால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 மார்ச் 27]

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு * எடுத்துக்கொள்ளப் பெற்றது.

[முற்பகல் 11-00]

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

ஆ. நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

---

* 1981-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3, அட்டவணை, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

6. வரவு செலவுத் திட்டம் 1981-82, விவாதம்—தொடர்ச்சி.

*** திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையினை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலே முதன் முதலாக வறட்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற சட்டமன்றப் கூட்டத் தொடரின் போது, நம்முடைய அமைச்சர்கள் இங்கே சொன்னார்கள், குடிதண்ணீர் பிரச்சினைக்கு முதன்மை முக்கியத்துவம் கொடுத்து, எல்லா இடங்களிலும், என்ன வறட்சியாக இருந்தாலும் இந்த மாதம் 25 ஆம் தேதிக்குள் குடிதண்ணீர் பிரச்சினை முடித்து வைக்கப்படும் என்று. அவர்கள் அப்படிச் சொன்னதை முடித்துக் கொடுக்கும் வகையில், ஆங்காங்கே உள்ள கலெக்டர்களும், டி.டி.ஓக்களும், கமிஷனர்களும் மற்றும் உள்ள ரெவின்யூ அதிகாரிகளும் முடிக்கிவிடப்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக இந்தப் பிரச்னை ஓரளவிற்கு தீர்க்கப்பட்டது. என்னுடைய தொகுதியான நிலக்கோட்டையில்கூட மிக மிக எச்சரிக்கையாக அந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில்

ஆங்காங்கே எங்காவது சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்குமானால் அவைகளையும் இந்த மாத இறுதிக்குள் தீர்ப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, குடிதண்ணீர் பிரச்சினையை முழுமையாக தீர்த்து ஆக வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனம் என்று எடுத்துக் கொண்டால் பெரிய நீர்ப்பாசனங்களுக்காகப் போட வேண்டிய திட்டங்களை எல்லாம் போட்டு கட்ட வேண்டிய அணைக்கட்டுகள் அனைத்தையும் எங்கெங்கெல்லாம் அமைக்க வேண்டுமோ அங்கெல்லாம் அணைக்கட்டுகள் கட்ட காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே திட்டம் போடப்பெற்று, கட்டி முடிக்கப் பெற்றன. இந்த அறிக்கையில் பெரும் பாசனத் திட்டங்களுக்கும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கும் என 150 கோடி ரூபாயும் சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கப் பெற்றிருப்பதாக போடப்பட்டிருக்கிறது.

பெரிய அளவிலே இல்லாவிட்டாலும் கூட சிறிய அளவிலே உணவு உற்பத்தியை பெருக்க வேண்டிய அவசியம், அந்த வகையிலே, தற்போது நிலவும் வறட்சி சூழ்நிலையில், ஆங்காங்கே விவசாயம் செய்ய தண்ணீர் இல்லாமல் போகுமேயானால், தனிப்பட்டவர்களின் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு தக்காவி கடன்களாக, ஆங்காங்குள்ள பி.டி.ஓ-க்களின் மூலம் வழங்கி கிணறுகளை ஆழப்படுத்தி, அதன் மூலம் தண்ணீர் பெற்று விவசாயத்தை வளரச் செய்து, வேண்டுமானால் கிணறுகள் இல்லாத இடங்களில் 50 ஏக்கர், 30 ஏக்கர்களுக்கு சேர்த்து கிணறுகளைத் தோண்டி, பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும். அவர்களிடம் வாட்டர் செஸ் கூட வேண்டுமானால் வசூல் செய்துக் கொள்ளலாம். அப்படி ஒரு நடவடிக்கை எடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிக உதவியாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

நம் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். ஆறு மணி நேரம் என்று ஒரு சிஸ்டத்தை ஏற்படுத்தி, ரெகுலேட் செய்து கொடுக்கிறேன் என்று சொன்னார்கள், அதன் படி கொடுக்கப்பட்டு வருகிறது. அதிலே ஒரு மாறுதலைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஆறு மணி நேரம் மின்சாரம் கிடைக்கிறது என்றால், பகலில் வெய்யில் அதிகமாக இருப்பதால் அதிகப்படியான தண்ணீர் கிணறுகளில் இருந்தும் பாய்ச்ச முடியாத சூழ்நிலை இருக்கிறது. நான் கேள்விப்பட்டதைச் சொல்கிறேன். டெல்லியில் ஏழு மணிக்கு எல்லாம் கடைகள் அடைக்கப்படுகின்றன. மின்சாரத்தை அதிகப்படியாகச் செலவு செய்யக் கூடாது என்ற காரணத்தினால் இரவு ஏழு மணிக்கு கடைகளை எல்லாம் அடைக்கச் சொல்கிறார்கள். அதே போல் இங்கேயும் பெரிய பெரிய நகரங்களில்

[திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்] [1981 மார்ச் 27

ஏழு மணி அளவில் கடைகள் எல்லாம் அடைக்கச் சொல்லிவிட்டு அதனால் மிச்சமாகக் கூடிய மின்சாரத்தை விவசாயிகளுக்கு வழங்கலாம். அப்படி ஓர் உத்தரவினை அரசு போடுமானால் ஏழை விவசாயிகளுக்கு, உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்கக்கூடிய பாட்டாளி மக்களுக்கு இரவு நேரம் முழுவதும் அல்லது எட்டு மணியிலிருந்து மின்சாரம் கொடுக்க ஏதுவாக இருக்கும். ஆக, விவசாயிகளுக்கு அதிகப்படியாக மின்சாரம் கொடுக்க வழி வகை செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவுத் துறையில் நாம் தன்னிறைவு பெற்றுவிடுவோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, காடு வளர்ப்பு. ஸ்வீடன் நாட்டிலிருந்து 45 கோடி ரூபாய் வாங்கி அதன் மூலம் காடுகளை வளர்க்க வேண்டும் என்ற நல்லதொரு திட்டத்தை வகுக்க இருக்கிறது. அதற்காக நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதில் இருக்கிற ஓட்டை ஒடைசல்களை கண்டிப்பாக பரிசீலிக்க வேண்டும். சென்ற முறை கூட நான் பேசியிருக்கிறேன். மலைகளில் எல்லாம் மரங்கள் வெட்டப்படுகின்றன. புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. ரோடுகளில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. இந்த மாதிரி மரங்களை வெட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும். இம்மாதிரி மரங்களை வெட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களுக்கு தக்க தண்டனை கொடுத்து மரங்கள் வெட்டப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். எங்கெங்கெல்லாம் காடுகள் வளர்க்க முடியுமோ அங்கெல்லாம் காடுகளை வளர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மழை ஒழுங்காகப் பெய்யும்.

அடுத்து, தொழில் வளம். மதுரை மாவட்டத்தில் 32 கோடி ரூபாய் செலவில் ஒரு சிமென்ட் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க இருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். சிமென்ட் தொழிற்சாலைக்கான மூலப் பொருள் எங்கே அதிகமாகக் கிடைக்கிறதோ, எங்கே சுண்ணாம்புக்கற்கள் அதிகமாகக் கிடைக்கிறதோ அங்கு அந்த ஆலையை நிறுவ வேண்டும். எங்கள் நிலக்கோட்டை பகுதி ஒரு வரண்ட பகுதியாகும். பெரியார் பாசனம் உள்ள இடம் தவிர மற்றப் பகுதிகள் எல்லாவற்றையும் வரண்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் சார்பாக அரசை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட வரண்ட பகுதியில் தொழிற்சாலைகள் ஏற்படுத்திக் கொடுத்தால் நிச்சயமாக பல ஆயிரக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும் வாய்ப்பாக இருக்கும். அதனால் மக்கள் பிழைக்கவும் வழி ஏற்படும். எங்கள் பகுதியில் 200, 300 ஏக்கர்கள் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கக்கூடிய இடம் இருக்கிறது. ஆகவே அந்த இடத்தில் சிமென்ட் தொழிற்சாலையை அமைத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

1981 மார்ச் 27] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்து, கிராமத்தொழில், கதர் தொழிலில், கிராமங்களில் உள்ள பெண்கள் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் மூலமாக இந்த நிதி ஆண்டில் வாரியம் 33,000 பேர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறியிருப்பதை பாராட்டுகிறேன். அந்த அடிப்படையில் எங்கெங்கே நெசவாளர்கள் இருக்கிறார்களோ அந்தப் பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு அம்பர் சர்க்காக்கள் வினியோகிக்கப்பட வேண்டும். அப்படி அம்பர் சர்க்காக்களை வினியோகிப்பதன் மூலம் ஏழை மக்களுக்கு ஒரு வருமானம் ஏற்பட கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் அம்பர் சர்க்காக்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (மணியடிக்கப் பட்டது).

அடுத்து, சாலைப் போக்குவரத்து. சாலைகள் அமைக்க, பராமரிக்க டெண்டர்கள் கால்பார் செய்கிறார்கள். சாலைகள் அமைப்பதிலும், சாலைகள் பராமரிக்கப்படுவதிலும் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே தாமதம் ஏற்படாமல் உடனுக்குடன் வேலைகள் துவங்க வழி வகை செய்ய வேண்டும். இப்போது எல்லோருக்கும் அடிப்படைச் சம்பளம் ரூ. 250 என்று கொடுக்கிறோம். அப்படி எல்லா ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுவதைப் பாராட்டுகிறோம். ஆனால் காங்க் மஸ்தூர்ஸ் 30,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் ஏழைகள் அவர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி ரூ. 300 என்று கொடுத்தால் நன்றாக இருக்கும்.

[முற்பகல் 11-10]

அடுத்தபடியாக, கிராமக் குடிதண்ணீர் திட்டத்திலே இப்போது அமைச்சர் அவர்கள் நல்ல காரியங்களைச் செய்தாலும் கூட, சில இடங்களில் சில கோளாறுகள் ஏற்பட்டு விடுகிறது. பட்டிவீரன்பட்டியில் 14 இலட்சம் ரூபாய்க்கான எஸ்டிமேட் போட்டு, அந்த மேஜர் பஞ்சாயத்திலே இன்னும் வேலை முடிவடையவில்லை. தகவல் கேட்டால், அதற்கு ரீ-பேயிங் கபாசிடி இல்லை என்று சொல்லப்படுகிறது. குடிதண்ணீருக்கு ரி-பேயிங் கபாசிடி எல்லாம் பார்க்கக் கூடாது. அப்படிக் கேட்பது எப்படிப் பொருந்தும்? ஆகவே, எங்கெங்கே குடிதண்ணீர் பிரச்னை வருகிறதோ, அந்தப் பகுதியில் அதாவது பட்டிவீரன்பட்டி, நிலக்கோட்டை, அம்மையநாயக்கன்பட்டி, பள்ளப்பட்டி போன்ற பெரிய பெரிய பஞ்சாயத்துக்களில் பொது மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க வறட்சித் திட்டத்தோடு இணைத்து, இந்த வேலையைத் துரிதமாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டு வசதி. 40,000 வீடுகள் கட்டப் போவதாக பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வீட்டிற்கு ரூ. 3,700 என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூ. 3,700-ல்

எப்படி வீடு கட்ட முடியும்? ஒரு பாத் ரூம்கூட கட்ட முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தனை செய்து பார்க்கவேண்டும் என்று பணிவன்போடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே எண்ணிக்கையை வேண்டுமானால் குறைத்துக் கொள்ளுங்கள். ஒரு வீட்டிற்கு 10,000 ரூபாய் ஒதுக்கினால், 20 ஆண்டுகளில் திருப்பிக் கட்டும்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 திருப்பிக் கட்ட வேண்டும். இதை அரிசனங்களுக்கு வட்டியில்லாக் கடனாகவும் மற்ற ஏழை மக்களுக்கு 4 சதவீத வட்டி அடிப்படையிலும் வீடுகளைக் கட்டித் தர வேண்டும். டவுனிலே மட்டும், ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு அதாவது குடிசை மாற்று வாரியம் மூலம் நல்ல வசதிகளைச் செய்து கொடுக்கிறீர்கள். எனவே, கிராமங்களைப் புறக்கணிக்க வேண்டாம் என்றும், குறைந்தது ஒரு வீட்டிற்கு ரூ. 10,000 ஒதுக்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மகளிர் பிரச்னை, இன்றைக்கு ஆயிரக் கணக்கான மகளிர்கள் பி.ஏ., எம்.ஏ., படித்துவிட்டு வேலை இல்லாமல் கண்ணீரும், கம்பலையுமாக நிற்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற அளவிலே இப்போது இருக்கும் 374 பஞ்சாயத்துக்களிலே குழந்தைகள் காப்பகம் அதாவது சைல்ட் இன்டக்ரேடட் டெவலப்மென்ட் ஸ்கீம் என்ற திட்டத்தில் இந்த 376 பஞ்சாயத்துக்களிலும் இந்தப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். அப்படி இந்த பட்ஜெட்டிலே சொல்லப்படவில்லை. பெண்கள் மேல் கருணையுள்ளம் கொண்டுள்ள முதல்வரைக் கொண்ட இந்த அமைச்சரவை, அவர்களுக்கான வழிவகைகளைச் சொல்லியிருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆகவே இந்தப் பெண்களுக்கு எலாக்ட்ரானிக் கூட்ஸ், அதே போல் வையரில் கூடை பின்னுதல் இன்னும் பிரம்புக் கூடை பின்னுதல் போன்ற தொழில்களை தனியாக ஒதுக்கினால், இத்தகைய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தினால் நல்லது. இப்போது 25, 30 வயதாகியுள்ள பெண்கள் கல்யாணம் செய்து கொள்ள முடியாமல், சம்பாதிக்கவும் வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இத்தகைய வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில், கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அரிசன நலம். இந்த அரிசன நல ஆஸ்டல்களிலே உள்ள குழந்தைகளுக்கு 15 ரூபாய் உயர்த்தியிருப்பதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். அரிசனங்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன; நிலங்களை வாங்கிக் கொடுக்கிறோம். அரிஜனமக்கள் 75 நபர்களுக்கு பட்டா வழங்கி அவர்கள் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கும் இந் நேரத்தில் பட்டா வழங்கிய தாசில்தார் அவர்கள் நிலச் சொந்தக்காரர்கூட காரில் சென்று மக்களை வெளியேற்ற போலீஸோடு சென்று அந்த மக்களை மிரட்டி வெளியேற்றச் சொன்னது நியாயமா என்பதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு நாட்களாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிற பொது விவாதத்தில் கலந்து கொண்டு, இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் என் கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டிலே இன்றைக்கு மிகப் பெரிய பிரச்னையாக இருப்பது வறட்சி நிலைமை. தமிழகத்தைப் பொறுத்த வரை, மிகப் பெரிய மாவட்டங்களில் இந்த வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்திலே, இந்த நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வறட்சியைப் போக்குகின்ற விதத்திலே நல்ல திட்டங்களைத் தீட்டி, இந்த வறட்சி நேரத்திலே ஒரு சிறப்பான பட்ஜெட்டை தமிழகஅரசு அளித்தமைக்காக என்னுடைய கட்சியின் சார்பாக முதற்கண் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நாட்டிலே இருக்கிற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவ்வளவு தான் அரசு முயன்றாலும் அவர்களால் தீர்த்து வைக்க முடியாது. இவர்களது எல்லையையும் மீறி நடக்கின்ற சில பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று இந்த சட்டமன்றத்தில் பல கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதற்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழகத்தின் நிலையைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, மத்திய சர்க்காருக்கு நீங்கள் நண்பர்களா, அல்லது விரோதிகளா என்று கேட்டார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை நான் ஒன்றை கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே எல்லா மாநிலங்களில் இருக்கிறவர்களையும் ஒரே கண்ணோட்டத்துடன், கட்சி பேதமின்றி ஒரே மனப்பான்மையுடன் நடத்தும் போக்கு முதற்கண் மத்திய அரசிற்கு வருமா என்பதை கேட்க கடமைபட்டிருக்கிறேன். இன்றைக்கு மாநில சுயாட்சி என்பதாக மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய மக்கள் வாழ்வில் நலம் பெற நல்ல திட்டங்களை தீட்டுவதற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதை எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வறட்சி நிலையைப் பொறுத்த மட்டில், எல்லா மாவட்டங்களிலும் துரிதமான வேலைகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர்களும் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று வறட்சிப் பணிகளைத் தீவிரப்படுத்தி மக்களுக்கு சிறப்பான பணிகளைச் செய்திருக்கிறார்கள்.

[திரு. ஜி. மூர்த்தி] [1981 மார்ச் 27

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததின் பேரிலே நல்ல திட்டங்கள் பல இடங்களிலும், குழாய் கிணறுகள், கை பம்ப் செட்டுகள், கிணற்றை தூர் எடுத்தல் போன்ற சிறப்பான பணிகள் அங்குள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மூலமாக எடுக்கப்பட்டு நடந்து வருகின்றன.

இன்றைக்கு கூட்டுறவுத் துறை மூலமாக ஒரு சிறப்பான திட்டம் மற்ற மாநிலங்களில் இது இருக்கிறதோ என்று ஐயுறுகிற வகையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேளாண்மை மூலமாக ஒரு இலட்சம் பேர்களை. அவர்கள் எடுத்துக் கொள்வதற்காக தெரிவித்திருக்கிறார்கள். அதன் மூலம் தமிழகத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட, ஏழை விவசாயிகள் தங்களுடைய நிலைமையை உயர்த்திக் கொள்வதற்கான நிலைமை உருவாகியிருக்கிறது. நிலப்பிரபுக்களிடம் கொத்தடிமைபோல் இருந்து, கூலி உயர்வு கூட கேட்க முடியாமல் இருந்த ஒரு நிலை; எந்தவித காரணமும் இல்லாமல் அவர்களை வேலையிலிருந்து நீக்குகிற நிலையில் இருந்து; ஏழை விவசாயிகள் அந்த நிலையிலிருந்து மாறி, அவர்களுக்கு கூட்டுறவுத் துறை மூலமாக உதவி செய்திருப்பதை மிகவும் பாராட்டுகிறேன். சிறு பாசனத்திற்கு பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பல ஏரிகள் தூர் எடுக்கப்படவேண்டும். ஏரிகளின் பக்கத்தில் இருக்கிற சிறு சிறு விவசாயிகள் பம்ப் செட் வைத்திருப்பவர்களை நம்பி வாழ்கிறார்கள். அவற்றையெல்லாம் முறியடித்து சிறு விவசாயிகளை காப்பாற்ற வேண்டுமென்றுச் சொன்னால் பாசனத்திற்கு அக்கறை காட்ட வேண்டும். அதற்கான எல்லாவித திட்டங்களும் தீட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் தலைமை)

பல ஆண்டு காலங்களாக நாம் போராடி வந்தோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைகளை, நிலக் குடியேற்றங்களை செய்ய முடியாமல் இருக்கின்றது. அதற்கு காட்டு இலாகா சம்பந்தப்பட்ட 'அன்ரிசர்வ்ட்' பாரெஸ்ட்' என்ற வகையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உபயோகப்படுத்தாத நிலையில் இருக்கின்றன. காடுகளிலும் மலை ஓரங்களிலும் இவைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழிலை இன்றைக்கு நாம் மிகவும் அதிகமாக ஊக்குவித்து வருகிறோம். பல கோடி ரூபாய் செலவழித்து சிறு தொழில்களுக்கு அவைகளை ஆரம்பிப்பதற்கு வசதிகள் செய்து வருகிறோம். என்னுடையத் தொகுதியான பேரணாம்பட்டின் பல்லாயிரக்கணக்கான தோல் பதனிடும் தொழிலாளர்கள் வேலையின்றி வாடுகிறார்கள். முதலாளிகள் எல்லாம் அவர்

1981 மார்ச் 27] [திரு. ஜி. மூர்த்தி]

களுக்கு ஏதோ பிரச்சினை என்று காட்டி இந்தத் தொழிலாளர்களை எல்லாம் வேலையிலிருந்து எடுத்துவிடுகிறார்கள். அதிலே முதலாளிகள் 50 பேர் வேலையில் இருக்கிறார்கள் என்று சொல்வார்கள். ஆனால் பத்துப் பேர்கள்தான் வேலையில் இருப்பார்கள். இப்படிப்பட்ட தில்லு முல்லுகள் எல்லாம் கூட தோல் பதனிடும் தொழிற்சாலையில் நடைபெறுகின்றன. அதிலேயிருந்து இந்த தொழிலாளர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இன்றைக்கு பேரணாம்பட்டில் மாத்திரம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தோல் பதனிடும் தொழிலாளர்கள் வேலை செய்யாமல் வீட்டிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்காக இன்றைய அரசாங்கம் அன்பு கூர்ந்து ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையை சிட்கோ மூலமாக ஏற்படுத்தியாக வேண்டும். இல்லாவிட்டால் அந்தமக்களைக் காப்பற்ற இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–20]

கல்வியைப் பொறுத்தவரையில் நாம் பல திட்டங்களைத் தீட்டி வருகிறோம். கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் மேம்பாடு அடைவதற்காக கல்வியை ஆதாரமாக நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் கல்வித் திட்டங்கள் கிராமங்களுக்குச் சிறப்பாகப் போய்ச் சேரவேண்டும். கிராமங்களிலே உள்ள ஏழ்மை நிலையையும் அடிமைத்தனத்தையும் அப்போது தான் நீக்க முடியும். அவைகளைப் போக்குவதற்குச் தேவைப்படுகிற சிறந்த ஆயுதம் கல்விதான் என்று மக்கள் நினைக்கிறார்கள். அந்த சிறந்த ஆயுதத்தை ஏழை மக்கள் கையிலே கொடுத்தாகவேண்டும். அதற்கான முறையிலே சிறப்பான திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான முறையிலே நடத்திக் கொண்டு வருகிறார்கள். என்னுடைய பேரணாம்பட்டை அவர்கள் கொஞ்சம் கவனிப்போடு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கின்ற மருத்துவ மனை, மருத்துவ மனையாக இல்லை. புதிதாக யாராவது வந்தால் சாவடியாகத்தான் அதை நினைப்பார்கள். மருத்துவ மனையாக நினைக்க மாட்டார்கள், காரணம் அந்த அளவுக்கு சுவர்கள் பழுதடைந்திருக்கின்றன, கட்டடங்கள் பாழடைந்திருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் எங்கள் மீதும், பேரணாம்பட்டு தொகுதிமீதும் அக்கறை வைத்து அந்த மருத்துவமனையை உடனடியாகப் புதுப்பித்து குறைந்தபட்சம் பத்து பேர்கள் தங்குகிற முறையிலே படுக்கைகளை அமைத்துத் தரவேண்டும், டாக்டர்களை நியமித்து விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜி. மூர்த்தி] [1981 மார்ச் 27]

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான பல நல்ல திட்டங்களை எங்கள் பகுதியிலே சுற்றுப்பயணம் செய்தபோது அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 4,5 கட்டடங்களைக் கட்டி அமைச்சர் அவர்களுடையகையால் திறந்து வைத்திருக்கிறோம் என்னுடைய தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய கடன்களை ரத்து செய்ய அரசு முன்வர வேண்டும். விவசாயிகள் பலர் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 40 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். அவர்கள் அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கடன் நிவாரணச் சட்டம் மூலமாக மீண்டும் நமக்கு நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு சலுகையளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி மட்டுமல்ல, வட ஆற்காடு மாவட்டத்திலே பல இடங்களிலே குடிநீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது. அதைப் போக்குவதற்கு துரித நடவடிக்கை எடுத்தாலும் பேரணாம்பட்டுத் தொகுதியிலே மிகப் பெரிய கடுமையான தட்டுப்பாடு இருந்துகொண்டிருக்கிறது. நான் வேண்டிவிரும்பிக் கேட்டுக் கொண்டாலும் எங்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்காத சூழ்நிலைதான் இருக்கிறது. காரணம் அங்கே இருக்கின்ற ஆற்றில் எந்த இடத்திலே தோண்டினாலும் டேனரியிலிருந்து வருகின்ற நீர் கலந்து தண்ணீர் கெடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வட ஆற்காடு முழுவதும்கூட இந்த நிலை தொடருமானால் நல்ல தண்ணீர் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு விடும், பலதலைமுறைகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே அந்த கழிவு நீரை அகற்றி மக்களுக்கு நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கடைசியாக மதுவிலக்கைப்பற்றி மட்டும் ஒரு சில வார்த்தைகளை நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று தமிழகமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. பாட்டிலில் அடைத்து கடையிலே வைக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். பாட்டிலிலே அடைத்து கடையிலே வைக்கிறபோது வாங்குவதற்கு சிலர் தயாராக இருந்தாலும் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குத் தயாராக இல்லாத நேரத்திலே நிச்சயம் பழைய கடைக்குத்தான் செல்வார்களே தவிர புதிய கடைகளுக்கு வாய்ப்பு இருக்காது. முக்கால் பாகம் தாண்டிவிட்டோம், இன்னும் கால் பாகத்தில் என்ன தயக்கம்? உடனடியாக கள்ளுக்கடைகளைத் திறந்து அரசின் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981–82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதியளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையிலேயே முதன் முதலாக மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. '' அகில இந்திய அளவில் ஏற்பட்டுள்ள இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி உயர்வும், பண வீக்கமும், பயன்படுத்தப்படவேண்டிய பொருள்களின் பற்றாக்குறையும் தமிழ் நாட்டைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளன '' என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி உயர்வையும், பண வீக்கத்தையும் தடுப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பது தெளிவாகச் சொல்லப்படாவிட்டாலும், அதற்குக் காரணமாக உள்ள மத்திய மாநில அரசுகளினுடைய அதிகாரத்தைப் பற்றி இங்கே சொல்கின்றபொழுது, விலைவாசியேற்றத்தையும், பணவீக்கத்தையும் தடுப்பதற்கு இந்த அரசுக்குள்ள அதிகாரத்தை விட மத்திய அரசு அதிக அதிகாரத்தை வைத்து இருக்கின்ற காரணத்தால் இந்த அரசுக்கு அதற்குரிய பொருளதாரமும் இல்லை என்ற நிலைமைகளை இங்கே எடுத்து காட்டுகின்ற பொழுது, பேரறிஞர் அண்ணாவைத் தங்களுக்கு முன்னோடியாக, அவர்கள் மாநிலங்கள் அவையிலே பேசிய பேச்சை எடுத்துக் காட்டி, அரசமைப்புச் சட்டம் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று இந்த அரசு இப்பொழுது முதன் முதலாக அண்ணாவினுடைய கொள்கையைச் சொல்வதை நான் பாராட்டுகிறேன். மத்திய அரசு இந்தச் சட்டத்தைக் திருத்த வேண்டும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற குரலை இந்த அரசு இந்த நிதி நிலை அறிக்கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதை ஒரு தீர்மானமாகப் போட வேண்டும். மத்திய அரசில் குவிந்து இருக்கின்ற அந்த அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருக்க வேண்டுமென்று குரல் கொடுப்பதிலே அகில இந்திய பார்வார்ட் பிளாக் தன்னுடைய கொள்கையைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லி வருகிறது. மத்திய அரசிலே, There should be a strong Central Government, at the same time we want an Independent Republic State. இந்த அளவிற்கு எங்கள் இயக்கம் தெள்ளத் தெளிவாகச் சொல்கிறது. இதே கொள்கை இந்த நிதி நிலை அறிக்கையிலே இப்பொழுது சொல்லப்பட்டிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியைத் தருகிறது. அதற்காக இந்த அரசு தெளிவான, திட்டவட்டமான ஒரு கொள்கையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையிலே வறட்சியைப்பற்றி முதன் முதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிதி நிலை அறிக்கைக்கு முன் தமிழகத்தைக் கவ்வியிருக்கின்ற வறட்சி

[திரு. எஸ். ஆண்டித் தேவர்] [1981 மார்ச் 27

நிலையைப் போக்க இந்த அரசு நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறது. அமைச்சர்களெல்லாம் அத்தனை பகுதிகளிலேயும் சென்று சுற்றிப் பார்த்து, அந்தப் பகுதியிலுள்ள வறட்சியால் வாடுகின்ற மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்ற திட்டத்தை அறிவித்து, அதற்கு நிதியையும் ஒதுக்கியிருக்கிறார்கள்.

இருந்தாலும்கூட, அந்த வறட்சிப் பகுதிகளிலே பணிகள் எந்த அளவிற்கு நடக்கின்றன என்பதை நாம் சற்று சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. அங்கே செயல்படுகின்ற அரசு ஊழியர்கள் அதைச் செவ்வனே செய்கிறார்களா என்று பார்த்தால், அங்கே செயல்படுவது மிக மிக மெத்தனமாக இருக்கிறது. ஆனால் இங்கே அறிக்கையிலே சொல்லும் பொழுது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ; அரசு இயந்திரங்கள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன ; மார்ச் மாதத்திற்குள்ளே குடிநீர்ப் பற்றாக்குறை தீர்க்கப்பட்டு விடும் எனறு சொல்கிறார்கள்.

நானும், அமைச்சரவர்களும் எங்கள் மாவட்டத்திலே சுற்றிப் பார்க்கின்றபொழுது அங்கேயுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்குப் பதிலாக குளங்களிலே இருக்கின்ற மண்ணை அள்ளிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்களும், மற்றவர்களும் வருகிறார்களே என்பதற்காக அந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தார்கள். வேலை கொடுக்க வேண்டுமென்பது திட்டமாக இருந்தாலும்கூட, முதலில் முக்கியத்துவம் குடிநீர்ப் பிரச்னைக்குக் கொடுக்கப்பட வேண்டும். கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. இந்த அவசர நிலையை அரசு உணர்ந்து குழாய்கள் ரிப்பேர் செய்யப்படவும், மேல்நிலைத் தொட்டிகள் பழுது பார்க்கப்படவும் வேண்டிய திட்டத்தை இன்னும் அங்கே துவக்கப்படவில்லை ; அப்படிப்பட்ட பணிகள் நடக்கவில்லை என்பதை இந்த அரசுக்கு நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. கடலாடிப் பகுதியில் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் 72,000 பேர் வேலை செய்துவிட்டு, அதற்கு அரிசியும், பணமும் கொடுக்கப்படவில்லை என்று தந்தி கொடுத்திருக்கிறார்கள். அப்படி அதிகாரிகள், அரசு கொடுத்த அரிசியையும், பணத்தையும் செலவிடவில்லை என்ற தந்தியை எனக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அரசு வறட்சிப் பகுதிகளில் நல்ல பல பணிகளைச் செய்ய முற்பட்டாலும் அரசு அதிகாரிகள் அதைத் துரிதப்படுத்தவில்லை. அரசு இயந்திரங்கள் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது என்று கருத்து சொல்லப்படுகிறதே தவிர, ஆனால் அவ்வாறு முடுக்கி விட்டப்பட்டதாகத் தெரியவில்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

1981 மார்ச் 27] [திரு. எஸ். ஆண்டித் தேவர்]

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிட மக்களுக்கு 1981—82 ஆம் ஆண்டில் 40,000 பேர் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் படுவர் என்றும், குடும்பத்திற்கு ஒருவராக வேளாண்மைக் கூட்டுறவுத் துறையின் மூலமாக அங்கம் வகிக்கச் செய்து 100 ரூபாய் நிதியும் கொடுத்து கால்நடைகள் போன்றவைகளை வாங்கி வளம் பெறுவதற்கான நல்ல திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11—30]

ஆனால், அதே நேரத்திலே விவசாயக் கடனைப் பற்றி சொல்கின்ற பொழுது, விவசாயக் கடன்கள் குறுகிய காலப் பயிர் கடன்கள், சென்ற ஆண்டு ஏறத்தாழ ரூபாய் 71 கோடி சிறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்த இந்த அரசு இப்பொழுது பயிர்க் கடனாகக் கொடுக்கப்பட்ட 5 ஏக்கருக்கும் குறைவான விவசாயிகளுக்கு என்ன தள்ளுபடி செய்கிறார்கள் என்று சொன்னால், ஜூன் திங்கள் வரை அவர்கள் குறுகிய காலக் கடனாகப் பெற்ற அந்தக் கடனைச் செலுத்துவார்களானால் தண்டவட்டியும், வட்டியும் தள்ளுபடி செய்கிறோம என்று சொல்கிறார்கள். ஒரு புறம நீங்கள் அறிவித்திருப்பது, வறட்சிக் காலம்—எந்த விவசாயிடமும் நாம் வசூலிக்கக்கூடாது ; அவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அறிவிக்கிற நேரத்திலே அதை மட்டும் ஜூன் திங்களுக்குள் கட்டினால், அதற்குரிய தண்டவட்டியும், வட்டியும் தள்ளப்படும் என்று சொல்கிறீர்கள். ஓர் ஆண்டாக, வறட்சியின் காரணமாக, ஏழை விவசாயிகள், தங்கள் கடனைக் கட்டமுடியாத நிலைமையில் இருக்கும்போது, இப்படி ஒரு நிபந்தனையை விதிப்பது நல்ல தல்ல. வறட்சிக் காலம் முடியும் வரை, ஓராண்டுக் காலம் வரை, அடுத்த ஆண்டு கட்டினாலும் அந்தச் சலுகைகள் கிடைக்கும் என்று சொல்ல வேண்டும். அதுவும் சிறு விவசாயிகளுக்கு அளித்த பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்கிறேன்.

உணவு நிலைமையைப் பொறுத்த வரையில், மக்கள் பஞ்சத்தால் வாடுகிறார்கள். அவர்களுக்கு உணவு வழங்க வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக, வறட்சியால் வாடும் மக்களுக்கு உடனடியாக உணவு தானியம் கிடைக்க வழி செய்யப்படுமென்ற எந்த அறிவிப்பும் நிதி நிலை அறிக்கையில் செய்யவில்லை. ஆனால், மாண்புமிகு நிதி அமைச்சர் வருகின்ற ஆண்டில், உணவு தானிய உற்பத்தி 92.14 இலட்சம் டன்களாக அமையும் வகையில் ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அத்துடன், பருவமழை பொய்க்காவிட்டால் இந்த அளவு உற்பத்தியைப் பெருக்குவோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு வறட்சியால் வாடுகின்ற மக்களுக்கு உணவு தானியங்கள் கிடைப்பதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக எடுத்துக்

கூறப்படவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு உணவு தானியங்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் தெளிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காடு வளர்ப்பு. காடு வளர்ப்புக்காக, ரூபாய் 45 கோடி செலவில் ஒரு சிறப்புத் திட்டம் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் தீட்டப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பருவமழை பொய்த்திருப்பதற்குக் காரணம் மரங்கள் வெட்டப்பட்டிருப்பது தான் என்று இதிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது வரையில் மரங்கள் வெட்டப்பட்டுக்-கொண்டே வந்திருக்கிறது. வனங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. அதே நேரத்திலே, ரூபாய் 45 கோடி மதிப்பிலே ஒரு நல்ல திட்டம் வகுக்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். நான் ஒன்றை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் பகுதியிலே சிறுமலை பகுதி என்ற ஒரு இடம் இருக்கிறது. அந்த மலையிலே, 2,740 ஏக்கர் இடத்தை, அரசுக்குச் சொந்தமான இடத்தை, வன இலாகாவுக்குச் சொந்தமான இடத்தை, இரண்டு பேருக்கு, ஜோசப் என்பவருக்கும் அவருடைய மனைவிக்கும் பட்டா வழங்கி, இந்த 2,740 ஏக்கர் நிலத்திலுள்ள வன மரங்களை அவர்கள் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் 400 ஏக்கர் அதற்குப் பக்கத்திலே இருக்கிறது. அந்த 2,740 ஏக்கரையும் ஒரு நபருக்கு, ஒரு குடும்பத்திற்கு இந்த அரசும் இதற்கு முந்தைய அரசும் பட்டா வழங்கியிருக்கிறது. அந்தக் காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பக்கத்திலேஉள்ள 400 ஏக்கரிலேயுள்ள மரங்களையும், அந்த நபர்கள் அந்தப் பட்டாவைக் காட்டி, வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசுக்கும் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரசுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லியும் இன்னும் அது பற்றி கவனிக்க வில்லை. எங்களுக்கிருக்கிற வருத்தம் எல்லாம் இந்த அரசு பல இலாகாவை வலுப்படுத்த, பல திட்டங்களை, பருவ மழை பெய்யாமல் இருக்க, திட்டங்களைத் தீட்டுகிற நேரத்தில், ஆயிரக்கணக்கான ஏக்கர் வனங்களை, இப்பொழுது இருக்கிற வனங்களை அழிப்பதற்கு அனுமதிப்பது சரிதானா என்று கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அது போன்று நமது நிதி நிலை அறிக்கையிலே மின் துறையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 6-ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஏறத்தாழ ரூபாய் 1,023 கோடி அதற்காக ஒதுக்கப்பட்டு, அந்தத் திட்டக் கால முடிவிலே 4,769 மெகா வாட் உற்பத்தி.... (மணியடிக்கப்பெற்றது.) தலைவர்கள் வரிசையில் நாங்கள் இருக்கிறோம். எங்களுக்கும் மணியைத் தட்

டினால் என்ன அர்த்தம்? மற்றவர்களுக்கு 1/2 மணி நேரம் கொடுக்கிற மாதிரி அந்த 1/2 மணி நேரம் நியதி எனக்கும் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, 10 நிமிடம்தான்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: ஆகவே மின்துறையைப் பொறுத்தவரையில் 1981—82-ஆம் ஆண்டு முடிவில் 3,374 மெகாவாட் உற்பத்தியாகும் என்றெல்லாம் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் மின் உற்பத்தி அதிகரிக்கின்ற நேரத்தில் நிலக்கரியின் விலையும், கேரளாவில் இருந்தும் நெய்வேலியில் இருந்தும் வாங்குகின்ற மின்சாரத்தின் விலையும் அதிகரித்திருக்கிறது என்று கூறி இருப்பது, மின் கட்டணத்தை அரசு உயர்த்துமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகவே விவசாயத்திற்கு மின் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மின் கட்டண உயர்வுக்கு இன்னொரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதாவது பராமரிப்பு செலவுக்கு, மின் வாரியத்தை நடத்துவதற்கு அதனால் ஏற்படும் பராமரிப்பு செலவுக்குப் போதிய அளவுக்கு வருமானம் வரவில்லை. அரசு கொடுக்கின்ற 1,000 கோடி போதாது என்று 81.34 கோடி பற்றாக்குறை என்று சொல்லுகிறார்கள். நான் இந்த அரசுக்கு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மின் வாரியத்திலே ஓவர்ஹெட் சார்ஜஸ் என்று சொல்லத்தக்க வகையில் அதிகமான ஆட்களை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற அதிகாரிகள் தங்களுக்குப் பணி புரிய வேண்டும் என்பதற்காக என்.எம்.ஆர். என்ற பெயரிலே பல பேர்களை போட்டு இந்தப் பராமரிப்புச் செலவை அதிகரித்து இருக்கிறார்கள். அதைக் கவனத்தில் கொண்டு, அவர்களை எல்லாம் நீக்கிவிட்டால் வருவாய் அதிகம் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கல்வித் துறையைப் பொறுத்தவரையில் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே யூனியனைச் சேர்ந்த ஆசிரியர்கள் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மற்றத் துறைகளிலே இருக்கின்றவர்களையும், தனியார் துறையிலே உள்ளவர்களையும் அரசுப் பணியாளர்களாக ஆக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் படுகின்ற அவல நிலையைப் போக்க அவர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டும் அல்ல. பல சலுகைகளை வழங்கி இருப்பதற்காகப் பாராட்டுகிறேன். அப்படி இருக்கின்ற நிலையில் அவர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கின்ற அந்த நல்ல திட்டத்தை அரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடம் இருந்து 1 ரூபாயோ அல்லது 2 ரூபாய்களோ பிடித்துக் கொண்டு அவர்கள் ஓய்வு பெறுகின்ற காலத்தில் 10,000 ரூபாய் கொடுக்க வேண்டும்.

அடுத்து காவல் துறையினருக்குத் தரப்படுகின்ற சலுகைகளைப்போல, மற்ற அரசு ஊழியர்களுக்கும் சப்சிடியில், குறைந்த விலையில் உணவுப் பொருள்களை வழங்கும் திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது)

மேலும், எரிசாராயத்தைவிட மிகவும் முக்கியமான பிரச்சினை மதுவிலக்குப் பிரச்சினை. அதை தளர்த்தி இருக்கிறார்கள். தீவிரமாக அமல்படுத்துகிறோம் எனறு சொல்லாமல் தளர்த்தி இருக்கிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்கள் அதிகரித்து விட்டார்கள். அதைத் தடுக்க முடியவில்லை என்று ஒத்துக் கொண்டதோடு மட்டுமல்ல, கள்ளச் சாராயம் காய்ச்சுவதால் செல்லுகின்ற பணத்தைத் தடுப்பதற்கும் மதுவிலக்கை தளர்த்தி இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் நீண்ட காலமாக சொல்லிக் கொண்டு வந்திருக்கிறது. சுதந்திரம் வந்து 33 ஆண்டு காலம் ஆகியும் எந்த ஆட்சியிலும் இந்த மதுவிலக்கு சரியாக அமல்படுத்தப்படவில்லை. இடையிலே சற்று எடுத்துவிடப் பட்டது. அதற்குப் பின்னால் நாடு கடத்துகின்ற சட்டம் கூட வந்தது. ஆனால் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை மறுக்கின்ற நிலை ஏற்பட்டது. இதனால் எவ்வளவு நிதி கிடைக்கும் என்றும் தெரியவில்லை. இந்த மதுவிலக்கை முழுமையாக எடுத்துவிட்டால் அதிகமான வருமானம் கிடைக்கும். 122கோடி டெபிசிட் பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். எனவே நான் சொல்வது மதுவிலக்கை பூரணமாக எடுத்து விடுங்கள். அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுங்கள் என்று சொல்லி, மதுவிலக்கை அமுல் படுத்துவோம் என்று பிடிவாதமாக இருக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலே கூறி அமைகிறேன்,

(முற்பகல் 11-40)

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பில் இந்த பட்ஜெட்டின் மீதான பிரதானக் கருத்துக்களைப்பற்றி புரகிபீஷன் உட்பட எங்கள் கருத்து என்ன என்பதைப் பற்றியெல்லாம் காம்ரேட், தோழர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். மீண்டும் அவர் சொல்லியிருக்கும் விஷயங்கள் குறித்து நான் ரிப்பீட் செய்ய விரும்பவில்லை. அது சம்பந்தப்பட்ட சில பிரதான விஷயங்களைப் பற்றி மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்—அதன் பொருளாதார பினனணி எவ்வளவு பயங்கரமானது என்பதை ஓரளவு சரியாகவே வெளிப்படுத்தி உள்ளது என்பது என்னுடைய கருத்து. பொருளாதாரப் பின்னணி என்று நான் கூறுகிறபோது—பெருகிக் கொண்டு இருக்கும் பண வீக்கம், உயர்ந்துக் கொண்டே இருக்கும் விலைவாசிகள், அத்தியாவசியப் பண்டங்களின் 'ஷார்ட்டேஜ்'—

தட்டுப்பாடு, அத்துடன் தமிழகத்தில் உணவு உற்பத்தி கடந்த ஆண்டைவிட குறைந்திருப்பது என்று நம்முடைய பட்ஜெட்டில் குறிப்பிட்டு இருப்பது, அதோடு நம்முடைய பொருளாதாரத்தின் 'இன்பிரா-ஸ்ட்ரக்சர்' என்கிற ஒரு பிரதான உறுப்பாக இருக்கிற மின்சாரம், அதிலும் நெருக்கடி, எல்லாவற்றிற்கும் மேலாக பரவலான கடும் வறட்சி நிலைமை இவை எல்லாவற்றையும் இணைத்துப பார்த்தால் தான் இந்த பட்ஜெட்டின் பின்னணி, தமிழகத்தின் பொருளாதாரம் எவ்வளவு கடினமானது, பயங்கரமானது என்பது தெரியும். இதில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து கவலைப்பட வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

இப்பொழுதே இந்தக் கடினமான நிலைமை என்றால உடனடியாக எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் போன நாடாளுமன்றக் கூட்டத்தில் ப்ரீப்பாக, ஷார்ட்டாக சொல்லி விட்டார்கள். அவர்கள் சொன்னதை நான் க்வோட் செய்ய விரும்புகிறேன். "பொருள் தட்டுப்பாடு—கட்டுப்பாடு அல்ல—ஷார்ட்டேஜ் அல்ல—இன்னமும் தொடரும். ஆகவே, பொருள் தட்டுப்பாட்டுடன் வாழ மக்கள் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று பிலசாபிகல் அட்வைஸ் கொடுத்து இருக்கிறார்கள். அவர் என்ன சொல்கிறார் என்றால்—பொருள் தட்டுப்பாடு, தொடரும், விலைவாசி உயரும், அதைக் கட்டுப்படுத்த—வீ. ஆர். இன்காம்பிடென்ட்—ஆகவே, விலைவாசி உயர்வுடன் வாழ, மக்கள் பழக வேண்டும் என்று சொல்கிறார்கள், துணைத் தலைவர் அவர்களே, உடன் வாழ வேண்டும் என்று சொன்னால், நாம் அவரவர் மனைவியுடன் உடன் வாழப பழகியுள்ளோம். ஆனால் மைய நிதி அமைச்சர் இன்னொரு ஐட்டத்தோடு உடன் வாழத்தானே கூறுகிறார். அதாவது இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கொண்டு அந்த மனைவியோடும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். அதுவும் விலைவாசி உயர்வை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். விலைவாசி உயர்வை மனைவியாக ஏற்றுக் கொண்டால் என்ன நடக்கும், வீடுகளில் கலகம் தான் நடக்கும். ஆகவே, அந்த முறையில் அவர்கள் பேச்சின் பொருள் அடங்கியிருக்கிறது. ஆகவே, விலைவாசி இப்படி உச்சக்கட்டம் அடையுமென்று மத்திய நிதி அமைச்சர் கூறினால், தமிழக மக்கள் நிலைமை என்னவாகும்? இது ஒரு சீரியஸான விஷயம், நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விஷயம்.

இந்த இடத்தில் தான் நம்முடைய பட்ஜெட்டின் பிரதான பலவீனம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கடும் சவாலைச் சந்திக்க எடுக்க வேண்டிய ஸ்தூலமான வடிவம் பற்றியும், அவற்றை மைய அரசிடம் வற்புறுத்துவதன் தேவை பற்றியும் இந்த பட்ஜெட் மவுனமாக இருக்கிறது. நிலைமையின் சீரியஸ்னஸ் தெரியாமல் இருக்கிறது. அதற்கு மாற்றுத்

[திரு. ரா. உமாநாத்] [1981 மார்ச் 27

திட்டம் என்னவென்றால், அதைக் கன்ட்ரோல் செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது என்பதால், அந்த வகையில் நடவடிக்கை எடுக்கச் சொல்லி வற்புறுத்துகிற விஷயம் இதில் ஆப்சென்ட்டாக இருக்கிறது, அதுதான் இதில மேஜர் வீக்னஸ். இன்றுள்ள பயங்கரமான நிலைமையைச் சந்திக்க இன்றுள்ள பொதுப் பங்கீட்டு ஏற்பாடு போதுமானதாக இல்லை என்பது என்னுடைய கருத்து. இன்றைக்குள்ள பொதுப் பங்கீட்டு ஏற்பாடு 'இட் ஈஸ் எ ப்ரஜெயில் அப்பேர்' வெரி வீக்—தமிழில் சொன்னால் நோஞ்சானாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் இன்றைய பொருளாதார நிலையிலிருந்து சற்று பலமான காற்றடித்தால் தற்போதைய பங்கீட்டு ஏற்பாடு கொலாப்ஸ் ஆகிவிடும், கொடைசாயும். ஆகவே, நாடு முழுவதுமாக நகரங்களிலும், கிராமங்களிலும் ஓரே சீரான பலமான பங்கீட்டு முறை ஏற்படுத்துவதுதான் ஒரே வழி. அதன் மூலம் ஒரு 14 அத்தியாவசியப் பொருள்களின், பண்டங்களின் வினியோகம் நாடு முழுவதும் ஒரே விலையில் விற்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மைய அரசு உறுதி கொடுத்து ஆண்டு ஒன்று முடிந்து விட்டது. இதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எரிசாராய விசாரணைக்கு குழு அமைப்பதில் காட்டும் துடிதுடிப்பும், சுறுசுறுப்பும் மக்களுக்கு உணவு கொடுப்பதில் காட்டுவதில்லையே, என்கிற குற்றச்சாட்டை நான் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த ஆல் இந்தியா பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டத்தை நீங்கள் வற்புறுத்தவேண்டாமா?

இரண்டாவதாக அப்படிப்பட்ட பொதுப் பங்கீட்டு ஏற்பாடு வெற்றிபெற வேண்டுமானால் மைய அரசு நாடு தழுவிய பயன் உள்ள கொள் முதல் செய்யவேண்டும். நாட்டில் குறைந்தபட்ச பொருட்களை இறக்குமதியும் செய்ய வேண்டியிருக்கும். அவற்றிலிருந்து மாநிலங்களுக்கு பங்கீடு அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும். இன்றைக்கு இருக்கும் நிலையில் இதுதான் ஏழை, நடுத்தர மக்களுக்கு கைகொடுக்கும் ஏற்பாடு; வேறு எந்த ஏற்பாடும் கை கொடுக்காது.

இங்கே இருக்கக்கூடிய மாநில அரசு நெருக்கடி நிலையை விளக்கியிருக்கிறார்களே "தவிர மக்களை காக்கும் வழியை பட்ஜெட்டிலே வலியுறுத்தவில்லை என்ற பலவீனத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு ஜனநாயக அடிப்படையிலே ஒரு ப்ரொப்போசலை வைத்து, மத்திய சர்க்காரை வற்புறுத்தி தமிழ்நாட்டு மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய வழிமுறைகளை நீங்கள் காணவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 மார்ச் 27] [திரு. ரா. உமாநாத்]

விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலைகொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதை வலியுறுத்தியது சரியே. ஆனால் நாம் நெல்லுக்கு 130 ரூபாய் கேட்கிறோம்; அவர்கள் கொடுக்கவில்லை. ஆனால் 'வீட்டுக்கு (கோதுமைக்கு) 130 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை நாம் நெல்லுக்கு கேட்டதை அவர்கள் 'வீட்' என்று புரிந்து கொண்டார்களோ என்னவோ. அது அந்த முறையில் இருக்கிறது.

நெல்லுக்கு அதிக விலை கேட்கும்போது, மாநில அரசு ஒரு விஷயத்தில் கராராக இருக்க வேண்டும். அது இந்த பட்ஜெட்டில் இல்லை. 130 ரூபாய் கொடுத்தால் போதாது. எந்தக் காரணத்தாலும், 'இஷ்யூ பிரைஸ் ரெய்ஸ்' பண்ணக்கூடாது என்ற ஒரு முக்கியமான அடிப்படையில் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். நெல்லுக்கு 130 ரூபாய் கேட்டுப் பெறும் போது, ஜனங்களுக்கு விநியோகம் செய்யும்போது விநியோக விலையைக் கூட்டக்கூடாது; விநியோகிக்கும் பண்டங்கள் விலையை ஏற்றக்கூடாது என்று வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிச் செய்தால் பங்கீட்டு விலைக்கு மானியம் கொடுக்க வேண்டுமே, அதற்கு என்ன செய்வது என்று மத்திய சர்க்கார் கேட்கும். ஆம். பங்கீட்டு விலைக்கு மானியம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதற்கு வலியுறுத்தித்தான் ஆகவேண்டும். 1981–82 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி என்ற பெயரால் பெரும் முதலாளிகளுக்கு இப்பொது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் கிட்டத் தட்ட 2000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே பணம் இருக்கிறது. ஆகவே, என்ன செய்வது என்று கேட்டால் அந்த 2000 கோடியை நிறுத்தச் சொல்லுங்கள். அதிலிருந்து அத்தியாவசியப்பண்டங்களுக்கு மானியம் கொடுக்கட்டும். பெரும் முதலாளிகளுக்கு ஏற்றுமதிக்காக கொடுக்கும் மானியத்தை நிறுத்தி, ஜனங்கள் அன்றாடம் சாப்பிடுகிற பொருட்களுக்கு ஏன் மானியம் கொடுக்கக்கூடாது? இதைப்பற்றி நீங்கள் பட்ஜெட்டிலே சொல்லவில்லை. இதற்கு ஆதரவாக தமிழ் மக்களை திரட்டவேண்டும்.

நீங்கள் பட்ஜெட்டில் தொழில்மயம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் மிதமான வளர்ச்சி வேகத்தை எற்படுத்துவதற்கு உள்நாட்டு சந்தையில் போதிய அளவு வாங்கும் சக்தியை வளர்க்க வேண்டும் அல்லவா. இதற்காக தொழிலாளிகள், விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஊதிய உயர்வு முயற்சியை ஆதரிக்கும் கொள்கையை மேற்கொள்ள வேண்டும் அல்லவா? அந்த இலட்சியத்தைப் பெறும் தொழிலாளர் கொள்கையை உருவாக்க வேண்டும் அல்லவா? அதற்காக அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அது நியாயமாக இருந்தால் நீங்கள் அதை அங்கீகரிக்கத்தானே

வேண்டும். அப்படியானால்தான் அவர்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்கும்; அவர்கள் முன்னேற முடியும், நாடும் முன்னேற்றமடையும்.

ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? புதைக்கப்பட்ட ஸ்டிரைக் தடை அவசரச் சட்டத்தின் எலும்புக்கூட்டை தோண்டி எடுத்து அதற்கு உயிரூட்டும் நவீன மருத்துவ வேலையில்தானே நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள். இது தொழிலை வளர்க்கும் கொள்கை அல்ல. மார்க்கெட் இல்லாமல் தொழில்களை மூடும் கொள்கையாகத்தான் இது இருக்கும் என்பதை அனுபவத்தோடு சொல்கிறேன்.

எமர்ஜென்சி காலத்தில் ஸ்டிரைக் தடைக் கொள்கையின் விளைவு என்னவாயிற்று? ஸ்டிரைக் தடை செய்யப்பட்டது. போராட்டம் ஒடுக்கப்பட்டது. உற்பத்தி முடக்கப்பட்டது. அதன் விளைவு என்ன என்று 1976–77 ஆம் ஆண்டின் மத்திய அரசின் பொருளாதார ஆய்வு கூறுகிறது. தொழில்கள் தொடர்ந்து நலிவுற்றுப் போயின. குறிப்பாக பஞ்சாலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள், எஞ்சினீயரிங் நிறுவனங்கள் பல மூடப்பட்டன. வாங்க இங்கே காசு இல்லை. அப்படியானால் உற்பத்தியாகிற பொருட்களை யார் வாங்குவது. வாங்குவார் இல்லாமல் தொழில் முடக்கம் ஏற்பட்டது. இதெல்லாம் நடந்தது எமர்ஜென்சியில்.

[முற்பகல் 11-50]

தலைவரவர்களே, கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்றால் எப்படி? இரண்டுக்கும் ஆசை என்றால் இரண்டும் நடக்காது. ஏதாவது ஒன்றுதான் நடக்கும் (மணியடிக்கப் பட்டது)

ஆகவே தொழிலும் வளரவேண்டும். தொழிலாளரின் வாங்கும் சக்தியும் வளரவேண்டும், ஊதியமும் வளரக்கூடாது. என்றால் போத் கெனாட் ட்ராவல் டுகெதர்.

அதேபோல் கிராமப்புறங்களில் குத்தகைவாரதாரர்களுக்கு நீங்கள் நிர்ணயித்த 75 பங்கு கிடைப்பதற்கும் விவசாயத் தொழிலாளிகளுக்கு சட்டக்கூலி கிடைப்பதற்கும் அதன்மூலம் வாங்கும் சக்தியை வளர்ப்பதற்கும் போலீஸ் தடையாக நிற்கிறது இன்றைக்கும். யு ஹேவ் பாஸ்ட் தி லா. ஆனால் அவர்களுடைய கைக்கு வரவில்லை. குறுக்கே நிற்கிறது போலீஸ். திருச்சி எஸ். பி. மிஸ்டர் கணேசன் இதிலே எல்லாம் மிகவும் பாஸ்ட் மாஸ்டர். ஆகவே நீங்கள் பிக்ஸ் பண்ணிய சட்டக் கூலி கேட்பதே தப்பாகப் போய்விடுமோ என்று விவசாயத் தொழிலாளர்கள் நினைக்கிறார்கள். 107 ஆவது செக்ஷன் போடுகிறார்கள். நன்னடத்தை ஜாமீன் வேண்டும். கோர்ட்டுக்கே அடிக்கடி போய்விட்டு வரவேண்டும். ஆகவே கேட்பதற்கே

பயப்படுகிறார்கள் நீங்கள் நிர்ணயித்த கூலியை. வழுதியூர் கேஸில் அவர்கள் ஜெயித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக போலீசுக்கு ஆத்திரம். ஆகவே ஒரு சின்ன சம்பவம் கிடைத்தாலும் அதைப் பயன்படுத்தி அடி அடி என்று அடிக்கிறார்கள். அந்த விவசாயத் தோழர்களை. ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இந்தத் தடங்கல்களை எல்லாம் மாற்றாமல் உங்கள் தொழில் கொள்கையில் எப்படி வெற்றி பெறுவீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்..

அடுத்து பட்ஜெட்டிலே மாநிலத் திட்டப் பணிகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது புதிய நிதியாதாரங்கள் தேட முனைப்பான முயற்சிகள் தேவை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய ஆதாரங்கள் தேடும்பொழுது உங்கள் முதுகிற்குப் பின்னால் ஏற்கெனவே அனுபவித்த ஆதாரங்களுக்கு வேட்டு வைக்க சதி நடக்கிறது. மாநில அரசு சேல்ஸ் டாக்ஸ் வசூல் செய்து வந்த மருந்துகள், வனஸ்பதி, நூல், இரும்பு, பேப்பர், பேப்பர் போர்ட், பெட்ரோல் பொருட்கள், இரும்பு உருக்கு பொருள்கள் ஆகியவற்றை சுங்கவரியாக மாற்ற மைய அரசு திட்டமிட்டுள்ளது. சேல்ஸ் டேக்ஸ் என்பதன் முழு வசூலும் நமக்கு வரும். அதை எக்ஸைஸ் வரியாக மாற்றினால் மைய அரசு அதை வசூல் செய்தால் அதிலே ஒரு பங்கைத்தான் அவர்கள் நமக்குக் கொடுப்பார்கள். இதனால் நாம் ஒரு பெரிய நிதியாதாரத்தை இழக்கப்போகிறோம் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆனால் இதை அனுமதித்தால் அரசியல் சட்டதிட்டத்தில், மாநில அரசு வசூல் செய்ய அதிகாரமளிக்கும் ஸ்டேட் லிஸ்டில் செவன்த் ஷெட்யூலில் உள்ள என்ட்ரி 54 பூராவையும் நாம் இழந்துவிடுவோம் என்ட்ரி 54 வெறும் பேப்பரிலேதான் அங்கே நிற்கும். இது ஏற்பட்டால் வளர்ச்சி திட்டங்களை எப்படி நாம் அமல் நடத்துவோம். இந்த முயற்சியை எப்படி எதிர்க்கப்போகிறீர்கள்? இதைப்பற்றி உங்களுடைய பட்ஜெட்டிலே எந்தவிதமான ரெஃபரன்ஸும் இல்லை. இவ்வளவு அநீதியும் இழைத்து வளர்ச்சிப் பணிகளின் சகல சாவிகளையும் தன்னிடுப்பில் சொருகி வைத்து மாநில அரசைப் பார்த்து கூறுகிறார் மாண்புமிகு சித்தன் அவர்கள் ''திஸ் இஸ் நாட் டெவலப்மென்ட் ஓரியன்டட் பட்ஜெட்'' என்று. இது ஒரு பெரிய கண்டுபிடிப்பு. இது தமிழக மக்களைப் பார்த்து வடிக்கும் முதலைக் கண்ணீர் என்று நான் சொல்கிறேன். மைய அரசின் பட்ஜெட்தான் என்னவாம். இப்போது சமர்ப்பிக்கப் பட்டதே அது டெவலப்மென்ட் ஓரியன்டடா? அது inflation-oriented, big business-oriented, foreign dependence-oriented, anti-people, reactionary and what not

இவ்வளவு கனம் கையிலே வைத்துக்கொண்டு ஏதோ டெவலப்மென்ட் ஓரியன்டடா என்று கேட்கிறார். மைய பட்ஜெட்டின் மூலம் இந்த ஒரே ஆண்டில் 5 சதம் வளர்ச்சியின் வேகம் இருக்குமாம். 5 பெமர்சன்ட் இன்க்ரீஸ் வருமாம். மாண்புமிகு உறுப்பினர்

[திரு. ரா. உமாநாத்] [1981 மார்ச் 27

திரு. சித்தன் அவர்களுக்கு நான் பதில் சொல்லத்தேவையில்லை. அவருடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராஜஸ்தானைச் சேர்ந்தவர் திரு மூல்சந்த் டாகா அவர்கள் லோக் சபாவில் பேசியதையே சமர்ப்பிக்கிறேன். ''சுதந்திரத்திற்குப் பின் கடந்த 33 ஆண்டுகளாக, நாட்டின் சராசரி ஆண்டு வளர்ச்சி வேகம் $3\frac{1}{2}$ சதம் தான் எட்டியது. அப்படி இருக்க இந்த ஒரே ஆண்டில் 5 சதம் எட்ட முடியும் என்று நிதி அமைச்சர் எப்படி எதிர்பார்க்க முடியும்'' என்று கேட்கிறார் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர். அவர்களுடைய பட்ஜெட் என்ன செய்தது என்று மேலும் டாகா கூறுகிறார். ''நம் நாட்டில் வாழும் கோடிக்கணக்கான ஏழைகளின் உண்மையான தேவை என்ன என்று அறிந்துகொள்ள நமது பட்ஜெட் அமைப்பாளர்கள் உண்மையிலே முயற்சி கூட எடுக்கவில்லை''.

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு நம்முடைய அவையிலும் பெரும் பொறுப்பு உண்டு. அப்படியிருந்தும் மக்களின் உயிரை உடலிலே ஒட்ட வைப்பதற்கு மேல், வேறு எதுவும் செய்யவில்லையே நம்முடைய கட்சி அரசு, ஏன்?'' என்று மிகுந்தவருத்தத்தோடு கேட்கிறார். This is the reply his own party Member replies to him. 33 ஆண்டுகளாக நாட்டை சீழ் பிடிக்கும் நிலையில் கொண்டு வந்து விட்ட மத்திய அரசு, மாநில அரசுகளைப் பார்த்து கேள்வி கேட்க அதற்கு என்ன மாரல் ரைட் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்? கண்ணாடி வீட்டில் உட்கார்ந்து கொண்டு கல் எறியக் கூடாது அல்லவா? துணைத் தலைவர் அவர்களே, இதிலாவது ஒத்தக் கருத்துக் கொண்டு என்னுடன் ஒத்துழைப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொன்று என்னவென்றால் சமீபத்தில் மைய அரசு மாநில அரசுகளை பிளாக்மெயில் செய்ய ஆரம்பித்திருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சற்று தைரியமாக இந்தப் போக்கைக் கண்டிக்க ஆரம்பித்துள்ளனர். இந்த அரசியல் மாற்றத்தை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மக்கள் மத்தியில் செய்யும் பிரசங்கங்களிலிருந்தும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுவின் / தீர்மானங்களிலிருந்தும் முதல்வர் அவர்களுடைய சில பிரசங்களிலிருந்தும், அமைச்சர் காளிமுத்து அவர்கள் வெளியே செய்த சில பிரசங்கங்களிலிருந்தும் அறிய முடிகிறது. இந்த அரசியல் மாற்றத்தை நாங்கள் வரவேற்கிறோம். போன தடவை சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட இதைத்தான் நாங்கள் குறிப்பிட்டுத் சொன்னோம். We wanted this change. Now the direction is alright. நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு இன்னும் மாற்றம் ஏற்படவில்லை என்றாலும் கூட நாங்கள் இந்த மாற்றத்தை உண்மையிலேயே வரவேற்கிறோம்.

1981 மார்ச் 27] [திரு. ரா. உமாநாத்]

மைய அரசினர் மாநில அரசுகளின் மீது போர் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் மிரட்டல், ஒரு பக்கம் அச்சுறுத்தல் எச்சரிக்கை. Counter pressure is there, arms twisting, war of nerves. கையை அப்படியே முறுக்குவார்கள். அப்படி ஒரு பிரஷ்ஷர் என்று சொல்லக்கூடிய வகையில் நடந்து கொண்டு வருகிறார்கள்........(குறுக்கீடு.)

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசும்போது '' பிளாக் மெயில் '' என்ற வார்த்தையை உபயோகித்தார். அது பார்லியமென்டரி வார்த்தைதானா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிளாக்மெயில் என்ற வார்த்தை பார்லியமென்ட்டரியாக உபயோகப்படுவதுதான்.

திரு. ரா. உமாநாத்: ஆகவே, அப்படி ஒரு வார்-போரை மத்திய அரசு மாநில அரசுகளின் மீது துவக்கியிருக்கிறது. தமிழகத்தின் ஆளும் கட்சியாக இருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் அது துவங்கியிருக்கிறது. அதன் விளைவாகத்தான் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு சித்தன் அவர்களின் உரை நிகழ்ந்திருக்கிறது என்பது புரிகிறது. அவர் 'இங்கே ஆளும் கட்சியைப் பார்த்து என்ன கேட்டார்? '' மாநில அரசுக்கு நீங்கள் நண்பரா? பகைவரா? என்று தெளிவுபடுத்திவிடுங்கள் என்று கேட்டார்''. அப்படிக் கேட்ட உடனேயே நம்முடைய முதல்வர் அவர்கள் நடுங்கிக் கொண்டு வாலேகும் சலாம் என்று சொல்வது மாதிரி ஒரு தொனி அவருடைய பேச்சில் இருந்தது. நான் கேட்கிறேன். இந்த அரசு என்ன மத்திய அரசுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறதா? Is this Government answerable to the Government of India? பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் தான். ஆனால், இந்திரா காங்கிரஸுக்கோ, அல்லது இந்திரா காங்கிரசின் அரசுக்கோ அல்ல தங்களை தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்கும், தமிழகத்தினுடைய மக்களுக்கும்தான் அவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களே தவிர, வேறு எந்த பார்ட்டிக்கோ அல்லது மத்திய அரசுக்கோ அல்ல.

பதில் சொல்ல வேண்டியவர்கள் மத்திய அரசினர்தான். மாநிலங்களை அடிமைப்படுத்தி அவர்கள் உரிமையைப் பறிக்கிற மத்திய அரசு, மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்கள் இல்லாமல் செய்து, அவர்களைப் பட்டினி போடுகிற மத்திய அரசு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற மாநில அரசுகளை கொஞ்சம் கூட தயங்காமல் வெளியே அனுப்புகிற மத்திய அரசு தான் பதில்

[திரு. ரா. உமாநாத்] [1981 மார்ச் 27

சொல்ல வேண்டும். என்ன கேள்விக்கு என்றால், நீங்கள் காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளோடு நண்பராக இருக்கிறீர்களா? பகைவராக இருக்கிறீர்களா? உங்கள் கொள்கை என்ன? ஒத்துழைப்பா அல்லது கைவிடுதலா என்று அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். Boot is on the other leg. என்று துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகச்சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எரி சாராய விசாரணைக்கு மத்திய அரசு கமிஷன் அமைக்கப்போகிறது என்று அறிவித்தார்கள். எவ்வளவு இன்னஸண்ட்டாக இருக்கிறீர்கள்? அவர்களுக்கு ரொம்பவும் கவலை கேரளத்தில் ஒரு கமிஷன், தமிழகத்தில் ஒரு கமிஷன் என்று அமைக்கப்பட்டிருக்கிறதே, இரண்டும் முரண்பாடான தீர்ப்புகளைக் கொடுத்தால் என்ன ஆகும்? கேரளத்திற்கும் தமிழகத்திற்கு யுத்தம் நடக்கும் அல்லவா? என்று குண்டுகள் வீசப்படும் அல்லவா, ஏவுகணைகள் வீசப்படும் அல்லவா! எத்தனை பேர் செத்துப்போய் விடுவார்கள்! ஐயகோ! நம்முடைய பாரதப் பிரதமருக்கு எவ்வளவு கவலை — இந்த நஷ்டம் ஏற்படக் கூடாது என்று. இது ஏமாற்று வித்தை — நான் சொல்ல விரும்புகிறேன். யாரிடம்........

[நண்பகல் 12—00]

THIRU K. S. G. HAJA SHAREEF : Mr. Deputy Speaker, I wish the hon. Member will speak on the Budget speech without going on criticising the Central Government. It has become the pattern for the Marxisets to criticise the Central Government and the Prime Minister, who is not here to reply directly.

திரு. ரா. உமாநாத்: பர்சனல் ரெபரன்ஸ் அல்ல; அபிஷியல் ரெபரன்ஸ் தான். யாரிடம் இந்தக் கதையைச் சொல்லுகிறார்கள்? முரண்பாடான தீர்ப்பு வருமென்று யார் சொன்னார்கள்?—இரண்டு கமிஷன் வைத்தால. அந்த ஜட்ஜ் சொன்னாரா? பிரதமரைப் பார்த்து. யார் முரண்பாடான கருத்து வருமென்று சொன்னார்கள்? ஏகமனதான தீர்ப்பு வரக்கூடாதா? அப்படி வந்தால்? அப்படியும் வரலாம் அல்லவா?

THIRU K. S. G. HAJA SHAREEF : The Prime Minister has said that upon the complaints received from the Members of Parliament, the Government is considering to appoint a Commission. She has not stated that the Government has decided to appoint a Commission. It is wrong to assume that the Government of India has decided to appoint a Commission.

1981 மார்ச் 27]

திரு. ரா. உமாநாத்: விஷயம் அதுவல்ல. இரண்டுக்கும் முரண்பாடு வந்தால—அப்படி வந்தால் என்ற முறையில் இந்தக் கமிஷன் என்ற பிரச்சினை வந்திருக்கிறது. அப்படிததான் வாதாடப்படுகிறது. லோக் சபாவிலும் சொல்லப்படுகிறது. இப்போது எம். பிக்கள் சொல்லுகிறார்கள் என்பதில் பிரயோஜனமில்லை. மெயின் ரீசனே, ஆர்க்குமென்ட்டே என்னவென்றால் முரண்பாடான தீர்ப்பு வந்தால் என்று. ஏன், ஒருமைப்பாடான தீர்ப்பு வரக்கூடாதா? அதைப் பற்றிச் சிந்திக்கக்கூடாதா? நினைக்கக் கூடாதா? மேலவையிலே ஒரு தீர்ப்பு, இங்கே பேரவையிலே ஒரு தீர்ப்பு, ஒரே சப்ஜக்ட்டில் வரக்கூடாதா? டு ஆர் இன்டிபன்டென்ட் பாடிஸ். நம்முடைய பிரதம மந்திரி, கவர்ன்மென்ட் ஆப் இந்தியா, மாநிலங்களிலே இரண்டு அவைகள் இருப்பதால், முரண்பாடான தீர்ப்பு வரலாமென்று சொல்லி, இரண்டையும் கலைத்து விட்டு, நியமன சபையை நியமிப்பதா? என்று நான் கேட்கிறேன். அல்லது ஒரே விஷயத்தில் ஹைகோர்ட்டில் இந்த மாதிரி, இந்த மாநிலத்திலே இருக்கின்ற ஹைகோர்ட்டிலே ஒரு தீர்ப்பும், இன்னொரு மாநிலத்திலே இருக்கிற ஹைகோர்ட்டிலே ஒரு தீர்ப்பும் இன்டர்பிரேட் செய்து முரண்பாடான தீர்ப்பு கொடுப்பதில்லையா? நம்முடைய கண்முன்னால் பார்த்ததில்லையா? ஆகவே, அதற்காக ஹைகோர்ட் முரண்பாடான தீர்ப்பு கொடுப்பார்கள் என்ற காரணத்திற்காக, ஹைகோர்ட்டுகளை அபாலிஷ் செய்து, இனிமேல் சுப்ரீம் கோர்ட் ஒன்றுதான் என்று அப்படி கொண்டு வருவதா? இதைச் சொன்னால், நீங்கள் குற்றம் செய்யவில்லையே, ஏன் எதிர்க்கிறீர்கள்? என்று காங்கிரஸ் நண்பர்கள் கேட்கிறார்கள். எதிர்த்தால், குற்றம் செய்ததாகப் பொருள் என்று சொல்லுகிறார்கள். ரொம்ப நல்லது. ஷா கமிஷன் நியமிக்கப்பட்டது. அதை இந்திரா காந்தி அவர்கள் எதிர்த்தார்கள். திருமதி இந்திரா காந்தி குற்றம் செய்து, அதற்காக பயந்து எதிர்த்தார்களா? அப்படியென்றால் இப்போது அவர்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன். ரொம்ப நன்றி.

THIRU K. S. G. HAJA SHAREEF : According to the Commission of Inquiry Act, of two or more States are involved, the Central Government can appoint a Commission. This is not the first time. Why the hon. Member is unnecessarily dilating on this matter.

திரு. ரா. உமாநாத்: மாருதி விஷயமாக குப்தா கமிஷன் நியமிக்கப்பட்டது. மறைந்த சஞ்சய் காந்தி அவர்கள் அதை எதிர்த்தார்கள். ஆகவே, குற்றம் செய்ததாகத் தான் அர்த்தமா? விஷயம் அதுவல்ல. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தலைவர்களுக்கு எல்லாம் அரை மணி நேரம்; மெம்பர்களுக்கு 10 நிமிடம் தான். (குறுக்கீடு.)

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இது சரியல்ல ; நியாயமல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சியிலே யிருந்து யாராவது பேசும்போது பதில் சொல்லலாம். இப்போது அவர் பேசுவதற்கு தடங்கலாக இருக்கக் கூடாது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தாங்கள் நேரக் கட்டுப்பாட்டை பிரயோகிக்கும்போது கூட நமது நார்ம்சுக்கு கட்டுப்பட்டுத்தான் பேசுகிறேன். விஷயம் அதுவல்ல. தங்கள் சொற்படி தீர்ப்பு எழுதுகிறவரை விசாரணைக் கமிஷனில் நியமிக்க வேண்டியது—அந்த ஊழலில் தனக்கு வேண்டியவர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களை கழற்றி விட வேண்டியது— கேரள அரசுக்கு எதிராக தீர்ப்பு எழுத வைத்து, கலகம் தூண்டி அந்த சர்க்காரை டிஸ்மிஸ் செய்வது; இந்த அ.தி.மு.க. அரசிடம் என் சொற்படி நடக்கிறாயா ? அல்லது எதிரான தீர்ப்பு எழுத வைக்கட்டுமா ? உங்களை டிஸ்மிஸ் செய்யட்டுமா ? என்று பிளாக் மெயில் பண்ணுவது. ஒருகால் நம்முடைய முதலமைச்சர் என்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் சொற்படிதான் நடப்பேன் என்று கூறினால் கேரள அரசு மாதிரி இங்கும் செய்வது. இப்படிப்பட்ட ஒரு கோர சதிதான் இந்த புரோபசிலில் அடங்கியிருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆளும் கட்சி நண்பர்கள் சிலருக்கு அச்சம் இருக்கலாம். நாம் சுயச்சையான நிலையை எடுத்தால், மைய அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்யாமல் இருந்தால், வறட்சி நிவாரணம் அளிக்காமல் இருந்தால், நாம் கஷ்டத்தில் சிக்க மாட்டோமா ? என்ற இயற்கையான அச்சம் இருக்கிறது. நீங்கள் அரசுக்கு அரசு என்ற நிலையில் உறவு வைத்துக் கொள்வதில் நான் இன்றைக்கும் ஆட்சேபிக்கவில்லை, ஆனால் அரசியலில் கொள்கை உறவு வைத்தால் அதில்தான் எங்களுடைய ஆட்சேபம். இதனால் தற்காலிகமாக சில ஒதுக்கீடு கிடைக்கலாம்; அதனால் உங்கள் சிக்கல் தீராது.

திராவிட முன்னேற்ற கழகத்தினரின் அனுபவமே அதுதான். 1971-ல் நல்லுறவு இருந்தது. வறட்சிக்கு நிதி கிடைத்தது. நிதி கிடைத்ததில் சிக்கல் இல்லை. ஆனால் 1976-ல் டிஸ்மிஸ் வந்தது, அதற்கு பின் சர்க்காரியா கமிஷன் வந்தது. ஆகவே பணம் கிடைக்கும், கிடைத்த பின்னாலே வேறொன்றும் வரும். You cannot say what will come afterwards. உங்களுடைய சொந்த அனுபவம் என்ன ? நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பின் மையத்தோடு மிகவும் நம்பிக்கையுடன் நெருங்கினீர்கள் ; டிஸ்மிஸ் ஆகமாட்டோம் என்று நம்பினீர்கள் ; 'நானே தான் அடுத்த பட்ஜெட் சமர்ப்பிக்கப் போகின்றேன்' என்று அன்றைய நிதி அமைச்சர் அவர்கள்

சொன்னார். சொன்ன பிறகு என்ன ஆயிற்று? நீங்கள் டிஸ்மிஸ்.—அவரைப் பற்றி நான் சொல்லவில்லை, அவர் இப்போது இங்கே இல்லை—சமீபத்தில் மீண்டும் அரசியல் நெருக்கம் ஏற்படுத்தினீர்கள், ஆறாவது திட்டத்திற்கு 3,000 கோடி நிதி பெற்றீர்கள். ஆனால் திடீரென்று எரிசாராய ஊழல் விசாரணை கமிஷன் அமைப்பது குறித்து வருகிறது. ஆகவே நான் சொல்ல விரும்புவது முதலில் 'பிளசெனட் வார்ம்த்' இருக்கும், பிறகு எலும்புகள் நொறுங்கும். குறுக்கு வழி கிடையாது, நேரான வழி ஒரே வழிதான். சுதந்திரமான நிலையில் நில்லுங்கள். தேர்தல்கள் காலத்திய எதிர்ப்பு நிலைக்கு முழு அளவிற்கு வாருங்கள். பிற்போக்கு சட்டங்களை வாபஸ் பெறுங்கள். மக்களுக்கு ஆதரவான நடவடிக்கைகள் மூலம் புதிய செல்வாக்கை பெறுங்கள். இடதுசாரி ஜனநாயக சக்திகளோடு, அப்படிப்பட்ட போக்கிலே போவதற்கு இணைந்து நில்லுங்கள். மத்திய அரசு இதற்கு மேல் தொந்தரவு கொடுத்தால் நாம் அனைவரும் சேர்ந்து மக்களிடம் உண்மையை சொல்வோம். மக்களை ஒன்று திரட்டுவோம். மையத்தின் தாக்குதலை கூட்டாகச் சந்திப்போம்.

மாண்புமிகு சுந்தரராஜன் அவர்கள் பேசும் போது ஒன்றைச் சொன்னார். சி.பி.எம். ஒரு மாயை ; அந்த வலையில் விழாதீர்கள் என்றார். மாண்புமிகு சித்தன் அவர்கள் குறிப்பிட்டார், 'நண்பனா, பகைவனா' என்றார். 'ப்ளோயிங் ஹாட் அண்ட் கோல்ட்';

நான் கூறுகிறேன். இந்திரா காங்கிரஸ் ஒரு அழகிய வேடத்தில் வந்த பூதகி. அ.தி.மு.க. கதையிலே வரும் குழந்தை கிருஷ்ணனாகச் செயல்பட்டால், பூதகி தன் ரத்தத்தை இழந்து வேதனை தாளாமல் ஐயகோ என்று கதறி ஓட்டம் பிடிக்கும். but you must remain as Krishna; that is the point. அது உங்கள் கையிலே தான் இருக்கிறது. வரக்கூடிய நிலைமைகளை ஜனநாயகப் பாதுகாப்போடு சந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முக்கியமான விஷயம். தஞ்சாவூர் மாவட்டம், நான் அடிக்கடி ஒவ்வொரு தடவையும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இந்த தடவையாவது பட்ஜெட்டிலே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிறது. இரண்டு பகுதிகளின் தன்மைகளும் வெவ்வேறாக இருக்கின்றன. ஆகவே தஞ்சாவூர் மாவட்டத்தை கிழக்கு தஞ்சை என்றும், மேற்கு தஞ்சை என்றும் இரண்டாகப் பிரிக்கவேண்டும்.

'பிஷர்மென்' பற்றி பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உடனடி தேவை ரோடுகள். லிங்க் ரோடு, குடிநீர் வசதிகள், வலைகள் வாங்குதவற்கான கடன் முதலியவை உடனடித் தேவை.

நாகப்பட்டினம் ஒரு 'டெயில் எண்ட்' ஆக இருக்கிறது. ரோடுகள், பாலங்கள் ஏராளமாக பல ஆண்டுகளாக போடப் படாமல் இருக்கின்றன. மூன்று ஸ்தலங்கள் இருக்கின்றன. நாகூர், வேளாங்கண்ணி, சிக்கல். இவற்றிற்கு ஏராளமான யாத்ரீகர்கள் வருகிறார்கள். தங்குவதற்கு வசதிகள் இல்லை. இந்த ஏற்பாடுகளை கட்டாயம் செய்வதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[பிற்பகல் 12-10]

திரு. பி. எம். வெங்கடேசன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மைக்கு பெரணமல்லூர் தொகுதியின் மக்கள் சார்பாக இந்த மாமன்றத்திற்கு முதற்கண் என் மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே பொது மக்களின் குறைபாடுகளைப் பேசுகின்றோம், அதற்காகத்தான் இந்த மாமன்றத்தைக் கூட்டுகிறோம். 14—7—1980 அன்று இந்த மாமன்றத்திலே நான் பேசும்போது தமிழகத்திலே வட ஆற்காடு மாவட்டத்தில் பெரணமல்லூர் தொகுதி தாழ்த்தப்பட்டும், எந்த விதமான வளர்ச்சியும் இல்லாமல் காட்சி அளித்து வருகிறது. அங்குள்ள ஏழை எளிய விவசாயிகள் வாழ வழியின்றி கிரா மத்தை விட்டு நகரத்தில் குடியேற செல்கிறார்கள். ஆகவே அங்குள்ள விவசாய பெருமக்கள் வாழ சிறுவிவசாயிகளுக்கு நீண்ட கால கடன் வழங்கவேண்டுமென்று 14—7—1980 அன்று இந்த மாமன்றத்திலே கேட்டேன்.....

திரு. மீ. வின்செண்ட் : பார்த்து படிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரெபர் தான் பண்ணவேண்டும், பார்த்துப் படிக்கக்கூடாது.

திரு. பி. எம். வெங்கடேசன் : ஏழை விவசாயிகள் பசு மாடுகள் வாங்கவும், உழவு மாடுகள் வாங்கவும், பழைய கிணறு களை ஆழப்படுத்தவும் வண்டி மாடுகள் வாங்கவும் இந்த அரசு கடன் உதவி அளித்து ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்ய இந்த அரசை 14—7—1980 அன்று இந்த மாமன்றத்தில் நான் பேசும்போது கேட்டுக்கொண்டேன். ஆனால் இந்த நிமிடம் வரை இந்த அரசு பெரணமல்லூர் ஒன்றியத்திற்கும், சேத்துப் பட்டு ஒன்றியத்திற்கும் எந்தவிதமான கடன் உதவியும் செய்த தாகத் தெரியவில்லை. இந்த லட்சணத்தில் வட ஆற்காடு மாவட்டத்தை வறட்சி பகுதியாக ஒதுக்கியும், பெரணமல்லூர் தொகுதி மட்டும் புறக்கணிக்கப்பட்டு உள்ளது, அங்குள்ள பொது மக்களை அவமானப்படுத்துவதுபோல் உள்ளது. மேலும் 12— 8— 1980 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தொடரில்

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் பெரண மல்லூர் ஒன்றியத்தில் சுமார் 20 லட்சம் ரூபாய் பொது பண்டு உள்ளது. பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட வசதி இல்லாததால் பெரணமல்லூர் ஒன்றிய பொது பண்டில் இருந்து மேல்படி பேருந்து நிலையம் அமைத்து பெரண மல்லூர் பேரூராட்சியை வளர்ச்சி செய்ய....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கையில் உள்ள குறிப்பை ரெபர் பண்ணிக்கொண்டு கொஞ்சம் என்னைப் பார்த்து பேச வேண்டும்.

திரு. பி. எம். வெங்கடேசன் : மேலும் 12—8—1980 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் பெரணமல்லூர் ஒன்றி யத்தில் சுமார் 20 இலட்சம் ரூபாய் பொது பண்டு உள்ளது. பெரணமல்லூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட வசதி இல்லாததால், பெரணமல்லூர் ஒன்றியப் பொது பண்டில் இருந்து மேல்படி பேருந்து நிலையம் பெரணமல்லூர் பேரூராட்சி யில் அமைத்து பெரணமல்லூர் பேரூராட்சி வளர்ச்சி செய்ய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை 12-8-1980 அன்று காலை 9.40 மணி அளவில் கேட்டபோது, "பெரணமல்லூர் ஒன்றியத்தில் மாமன்ற உறுப்பினர் சொன்னதுபோல் சுமார் 20 இலட்சம் ரூபாய் பொது பண்டு இருந்தால் ஒரு மாதத்திற்குள்ளாகவே அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டி விடலாம்" என்று வர்க்குறுதி மாமன்றத் தில் கொடுத்து, பல மாதங்கள் ஆகியும் இதுவரை பேருந்து நிலையம் அமைக்கவில்லை என்பதை இந்த அரசுக்கு நினைவு படுத்திக் கொள்கிறேன்.

8—8—1980 அன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம் கேள்வி நேரத்தின் போது பெரணமல்லூர் பேரூராட்சியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் குடிநீர் வசதி இல்லாததால் அருகில் இருக்கும் அணைக்கட்டிலிருந்து பெரணமல்லூர் பேரூராட்சியில் 5 இலட்சம் காலன் பிடிக்கும் மேல்நிலைத் தண்ணீர்த் தேக்கத் தொட்டி ஒன்று கட்டி, அங்குள்ள 30 ஆயிரம் குடும்பங்களுக்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தரக்கேட்டதற்கு, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில், "பெரணமல்லூர் பேரூராட்சியில் 4,250 மக்கள் தொகை உள்ளார்கள். ஆகவே 5 இலட்சம் காலன் பிடிக்கும் தண்ணீர்த் தொட்டி கட்ட இயலாது என்று சொன்னார்கள்.

திரு. கோவைத் தம்பி : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கன்னிப் பேச்சுப் பேசு கிறார்களோ என்று ஐயமாக இருக்கிறது. தங்களைப் பார்க்காம லேயே படிக்கிறாரே ! (கூச்சல்—குழப்பம்).

திரு. பி. எம். வெங்கடேசன் : மேலும், 30-7-1980 அன்று நான் மாமன்றத்தில் பேசும்போது பெரணமல்லூர் தொகுதி வளர்ச்சி பெற பெரணமல்லூர் நகரத்திற்கு அருகில் உள்ள மைதானமாய் உள்ள காட்டில் சுமார் 15 ஆயிரம் பேர் வேலை செய்யும் ஒரு பெரிய தொழிற்சாலையும், 10 ஆயிரம் பேர் வேலை செய்யும் ஒரு சிறிய தொழிற்சாலையும் அமைத்து பெரணமல்லூர் தொகுதியிலுள்ள ஏழை எளியவர்களை வாழ வழி வகை செய்ய, தொழில் வளர்ச்சி பெற தொழிற்சாலை ஏற்படுத்த 30-7-1980 அன்று நான் மாமன்றத்தில் வலியுறுத்தியும் இந்த நிமிடம் வரை அங்கு தொழிற்சாலை அமைக்கும் எந்தவிதமான அறிகுறியும் தெரியவில்லை. ஆனால், அரக்கோணத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாய் இந்த அரசு குறிப்பிடும்போது நான் வேதனைப்படுகிறேன், வெட்கப்படுகிறேன், இந்த அரசைப் பார்த்து. இந்தப் புதிய அரசு பின் தங்கிய தொகுதிகளில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி நகரத்தில் உள்ளவர்களைக் கிராமத்தில் குடியேற வைத்துக் கிராமத்தையும் நகரமாக்கிக் கிராமத்தில் உள்ளவர்களும் மனிதர்தான், கிராமத்தில் உள்ளவர்களுக்கும் இந்த நாட்டில் ஏற்படும் சுக துக்கங்களில் பங்கு உண்டு என்பதை நிரூபித்துக் காட்டிப் புரட்சி செய்யும் இந்த அரசு என்று கிராமங்களில் உள்ள ஏழை எளியவர்கள் கனவு கண்டு கொண்டு இருந்தோம் ஆனால் அமைச்சர்கள் இருக்குமிடத்தில்தான் தொழிற்சாலை ஆரம்பிப்போம் என்ற பழைய பல்லவியில் அரக்கோணத்தில் அரிசன நலத்துறை அமைச்சர் இருக்கும் காரணத்தால் அரக்கோணத்தில் தொழிற்சாலை ஏற்படுத்த இந்த அரசு குறிப்பிட்டுள்ளது. மேலும் இதுகாறும் தொழிற்சாலைகள் அமைச்சர்கள் உள்ள மாவட்டத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது பொது மக்களுக்கு நன்கு தெரியும். மேலும் பெரணமல்லூர் தொகுதியில் எந்த ஒன்றியத்திலும் குடிநீர் வசதி இல்லை. குறிப்பாகப் பெரணமல்லூர் ஒன்றியத்தில் சிறு விவசாயிகளுக்கு இந்த நிமிடம் வரை இந்த அரசு கிணறு ஆழப்படுத்தவோ, பசு மாடுகள் வாங்கிப் பால் உற்பத்தி செய்யவோ, உழவு மாடுகள் வாங்கவோ, எந்தவிதமான கடன் உதவியும் பெரணமல்லூர் ஒன்றியத்தில் உள்ள ஏழைகளுக்குக் கடன் உதவி இந்த நிமிடம் வரை அளிக்கவில்லை. அதே போல் சேத்துப்பட்டு ஒன்றியத்திலும், பெரணமல்லூர் ஒன்றியத்திலும் ஒரு கிராமத்தில் கூடக் குடிநீர் வசதி ஏற்படுத்த இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சேத்துப்பட்டு ஒன்றிய ஆணையர் அவர்களிடம் பொது மக்கள் யாராவது குறைபாடு சொல்லச் சென்றால் குடிபோதையில் தாறுமாறாகப் பேசி அனுப்புகிறார். காரணம், மூன்று ஆண்டுகளாகச் சேத்துப்பட்டு ஒன்றியத்தில் ஆணையாளராகப் பணி

யாற்றுவதால் தன்னையறியாமல் எந்தவிதமான குற்றத்தைச் செய்தாலும் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்ற தைரியத்தில் செய்து வருகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் கையை நீட்டி, அமர்ந்தவாறே பேசிக் கொண்டிருக்கிறார். இது அவையின் மரபுக்கு மீறிய செயலாகும். உறுப்பினர் அந்த மாதிரி உட்கார்ந்து பேசுவது, உட்கார்ந்து கையை நீட்டுவது ஆகிய இந்த வழக்கங்களை எல்லாம் நிறுத்தி விட வேண்டும். இல்லையானால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கும்.

[பிற்பகல் 12-20]

திரு. பி. எம். வெங்கடேசன்: குடிநீர் வசதியைப் பெருக்க முடியாத இந்த அரசு ஒதுக்கீடு செய்யும் பணத்தை இந்த அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது? (குறுக்கீடு) * * *

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் பேசியது இவர்கள் பேசியது எல்லாம் ஒருவருக்கொருவர் நீங்கள் காதாலே கேட்டீர்களா இல்லையா என்பதையும் அவை அவை குறிப்பிலே ஏறி இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். இது அவைக் குறிப்பிலே ஏறியிருப்பதற்கு நியாயம் இல்லை. ஆகவே இதை 'கிராஸ் டாக்' மாதிரி கருதி 2 மாண்புமிகு உறுப்பினர்களும் பொறுத்துக் கொண்டு அவையை நடத்த அனுமதிக்க வேண்டும்.

அடுத்து இந்தப் படிக்கின்ற விஷயத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய எண்ணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சில முக்கியமான பிரச்சினைகள் வரும்போது குறிப்பாக 'நோ கான்பிடன்ஸ்' மோஷன் போல் பெரிய பிரச்சினைகள் வரும் போது நாடாளுமன்றத்திலே இருக்கின்ற பெரிய கட்சித் தலைவர்கள் கட்சியினுடைய கொள்கைகளைப் பற்றிய விளக்கங்களைச் சொல்லுகிற நேரத்திலோ அல்லது அரசின் மீது குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிற மாதிரி படிப்பது சாதாரணமாக நடக்கின்ற வழக்கம். அனுமதிக்கப்பட்ட வழக்கம். இரண்டாவது மிகவும் வயதானவர்களைப் படிக்க அனுமதிப்பது வழக்கம். அந்தந்த சந்தர்ப்பத்தில் அந்தந்த உறுப்பினர்களுக்கு இருக்கிற நிலைமையை ஒட்டி அனுமதிக்கப்படுகிற வழக்கமே தவிர உறுப்பினர்கள் படிக்கலாம் படிக்க கூடாது என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு இடம் இல்லை. நாடாளுமன்றத்திலேயும் சட்டமன்றத்திலேயும் இது மரபு. ஆகவே படிப்பதை வைத்துக் கொண்டு சொல்லக் கூடாது. சில

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேர்கள் நிறையப் படித்தவர்கள் இருக்கலாம். அவர்கள் சில குறிப்புகளை வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பிப்பார்கள். எல்லோருமே எடுத்த உடனே பேச்சாளராகாளத ஆகி விடுவது கடினம். ஆகவே மன்றத்திற்குப் புதிதாக வந்த உறுப்பினர்கள் படிக்கின்ற மாதிரி இருந்தால் மற்ற உறுப்பினர்கள் அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களை நல்ல பேச்சாளராக ஆக்குவதுதான் முறை. அவர்களைப் படிக்கக் கூடாது என்று தடுப்பது சரியல்ல. படித்தாவது தங்களுடைய கருத்தை வெளியிடவேண்டும் என்று வருபவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் ஆதரவாக இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம்.

திரு. பி. எம். வெங்கடேசன்: பெரணமல்லூர் குடிநீர் வசதியைப் பெருக்க முடியாத இநத அரசு ஒதுக்கீடு செய்யும் பணத்தை என்ன செய்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. பட்ஜெட்டில் ஏழை எளியவர்கள் வாழ பல கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததாய் குறிப்பில் இருக்கிறது. தமிழ் நாட்டில் பெரணமல்லூர் தொகுதியும் அடங்கி உள்ளது என்பதை இந்த அரசு மறந்துவிட்டதா அல்லது பெரணமல்லூர் தொகுதி மக்கள் ஏமாளிகள் வாக்களிக்க மட்டும் வந்துவிடுவார்கள் என்ற எண்ணமா? அல்லது அங்குள்ள சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஏமாளி என்று எண்ணுகிறதா? இதுவரை சட்ட மன்றம் ஏற்பட்டுள்ள நாளில் இருந்து இது நாள் வரை எந்த சட்டமன்ற உறுப்பினரும் இந்த நிமிடம் வரை என்னுடன் சேர்ந்து பெரணமல்லூர் தொகுதிக்காக எந்த நன்மையையும் செய்ததில்லை. காரணம் என்னைப் பொறுத்தவரை எனக்குத் தோன்றுவதெல்லாம் பெரணமல்லூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அரசு ஒருதலைப் பட்சமாய் நடந்ததைச் சுட்டிக் காட்டுவதில்லை.

* * * *

ஏற்கனவே 30–9–1980 அன்று இந்த மாமன்றத்தில் பேசும் போது எனக்கு பெரணமல்லூர் தொகுதி மக்கள் வாக்களித்து அங்குள்ள குறைபாடுகள் இம்மாமன்றத்துக்கு எடுத்துவைத்து அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யத்தான் என்னை மாமன்றத்திற்கு வாக்களித்து அனுப்பி உள்ளார்களே தவிர பி. எம். வெங்கடேசன், எம்.எல்.ஏ. பெரணமல்லூர் தொகுதி என்ற பெயரை வைத்துக் கொண்டு அரசு கொடுக்கும் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு சட்டமன்றத்தில் அமர்ந்திக் கொண்டிருக்கும்போது, பெரணமல்லூர் தொகுதி மட்டும் புறக்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கணிக்கப்பட்டு மற்றத் தொகுதிகளுக்கு மட்டும் வளர்ச்சி பெற இந்த அரசு ஆவன செய்வதை நான் பார்த்துக் கொண்டு இருக்க, எனக்குப் பெரணமல்லூர் தொகுதி மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை இந்த அரசுக்கு ஏற்கனவே மாமன்றத்தில் 30–9–1980 அன்று பேசியும், இந்த நிமிடம் வரை பெரணமல்லூர் தொகுதி வளர்ச்சி பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

[பிற்பகல் 12-30]

என்வே, இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம் கீழே காட்டிய வளர்ச்சிப் பணிகளை இந்தத் தேதியில் இருந்து ஓராண்டு காலத்திற்குள் நிறைவேற்ற முன்வராவிட்டால் என் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராசினாமா செய்வேன் என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னிப் பேச்சில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது.

திரு. பி. எம். வெங்கடேசன்: பெரணமல்லூர் தொகுதி பொது மக்களுக்கும் இந்த நாட்டில் ஏற்படும் நன்மை தீமைகளில் பங்கு உண்டு என்பது உண்மையானால் பெரணமல்லூர் தொகுதி என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு, எந்த வளர்ச்சியுமே இல்லாத பெரணமல்லூர் தொகுதிக்கு கீழ் குறிப்பிட்டுள்ள வளர்ச்சிப்பணி பெரணமல்லூர் தொகுதியில் உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பெரணமல்லூர் தொகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவரும் விவசாயத்தை நம்பி இருப்பதால், பெரணமல்லூர் தொகுதியில் சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் தச்சூர் ஆற்றில் இருந்து கால்வாய் எடுத்து வந்து பெரணமல்லூர் பிர்க்காவுக்கும், பெரிய கொலாப்பூர் பிர்க்காவுக்கும், நெடுங்குணம் பிர்க்காவுக்கும் சுமார் 125 கிராமங்கள் வளர்ச்சி பெற நீர்ப்பாசனம அமைத்துத் தர இந்த அரசை வேண்டுகிறேன்.

பெரணமல்லூர் தொகுதியில் எவ்வித தொழில் வளமும் இல்லாததால் சுமார் 15 ஆயிரம் பேர்கள் வேலை செய்யும் ஒரு பெரிய தொழிற்சாலை ஒன்றும், பெரணமல்லூர் நகரத்தில் அருகில் இருக்கும் காட்டில் அமைத்துத் தர இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் பேரூராட்சி 15 ஆயிரம் மக்கள் தொகை கொண்டதாகும். அதைச் சுற்றிலும் சுமார் 15 ஆயிரம் மக்களும் சேர்ந்து சுமார் 30 ஆயிரம் மக்கள் கொண்டதால் பெரணமல்லூருக்கு அருகில் இருக்கும் அணைக்கட்டில் இருந்து நீர் கொண்டு வந்து பெரணமல்லூர் நகரத்தில் 5 லட்சம் காலன் பிடிக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அங்குள்ள பொதுமக்கள் நன்மை அடைய அமைத்துத் தரும்படி இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் நகரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் சேர்ந்து சுமார் 60 ஆயிரம் மக்களுக்கும், படுக்கை வசதி உள்ள மருத்துவ மனை இல்லாததால் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலேயே 10 படுக்கை வசதி உள்ள மருந்துவ மனை ஒன்று அரசு அங்கீகரிக்கப்பட்டும் எந்தக் காரணத்தாலோ நிறுத்தப் பட்டதை இந்த அரசு உடனடியாக ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதியில் உள்ள சேத்துப்பட்டு ஒன்றியத்தில் சேத்துப்பட்டு தவிர வேறு எங்கேயும் மருத்துவமனை இல்லாத காரணத்தால் சதுப்பேரி கிராமத்தில் கிராம மருத்துவ மனை ஒன்றும், மடவிளாகத்தில் கால்நடை மருத்துவ மனை ஒன்றும், பெரணமல்லூர் ஒன்றியத்தில் சப்பட்டங்குளம் கிராமத்தில் கிராம மருத்துவ மனை ஒன்றும், ஆணைபோகி கிராமத்தில் கிராம மருத்துவமனை ஒன்றும் அமைத்துத் தரும்படி இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதியில் உள்ள பெரணமல்லூர் ஒன்றியத்தில் இருக்கும் ஆரணி முதல் சப்பட்டாங்குளம் வரை டவுன் பஸ் ஒன்றும், பெரணமல்லூர் முதல் செய்யார் வரை டவுன் பஸ் ஒன்றும், பெரணமல்லூர் முதல் வந்தவாசி வரை டவுன் பஸ் ஒன்றும் அமைத்துத் தரும்படியும், பெரணமல்லூர் முதல் சென்னை வரை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பஸ் ஒன்றும் விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கடேசன் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். சற்று முன்பு திரு. கோவைத் தம்பி, திரு. துரைமுருகன் ஆகியோரிடையே வாக்கு வாதம் ஏற்பட்டு, இங்கே உரிமைப் பிரச்னை மொழியப்பட்டு, வழி மொழியப்பட்டும் இருக்கிறது. அவற்றையெல்லாம் அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. இரா முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் பேசுகிறபோது இதற்கு முன்னால் இருந்த பெரணமல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம்

* * *

இது அவைக்குறிப்பில் இருக்கலாமா? அப்படி இருப்பது நியாயமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அந்த மாதிரி அர்த்தத்தில் அவர் சொல்லவில்லை. அப்படிப்பட்ட வார்த்தைகள் பேசியிருந்தால், அதனை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-22-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகின்ற முகத்தான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மாநிலத்திற்கு இருக்கின்ற அதிகாரங்களையும், இருக்கின்ற குறைந்தபட்ச நிதி ஆதாரங்களையும் வைத்து, இந்த மாநிலத்திலே இருக்கிற கிராமப்புரத்து மக்களின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்கிற வகையிலும், இந்த நாட்டிலே நலிந்து இருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு நன்மை அளிக்கின்ற வகையிலும், டாக்டர் நாவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற 1981-82-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை தமிழகத்திலே இருக்கின்ற கிராம மக்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் வான் அமுதமாக இருக்கிறது என்று சொல்லி பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே நேரத்தில், நிதி நிலை அறிக்கையில் டாக்டர் நாவலர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்ற மத்திய அரசு மாநில அரசுகளுக்கு வழங்குகின்ற நிதியிலே பாரபட்சமான தன்மை காட்டப்படுகிறது என்பதும், அதேபோன்று மத்திய-மாநில உறவுகளைப் பற்றி உரத்தவே சிந்தித்து மத்திய அரசு இடம் கொடுத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவதற்கான வகையிலே மத்திய சர்க்கார் நடைபெறவேண்டும் என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பொன்மொழியை எடுத்துக்காட்டி கூறி இருப்பதை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் விமர்சித்தார்கள். அருமை நண்பர் சித்தன் அவர்கள் பேசுகிறபோது எதற்கெடுத்தாலும், மத்திய அரசைக் குறை கூறுவதாகச் சொன்னார்கள். நான் இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதிப் பங்கீடு செய்வதிலே தவறு நடந்து இருக்கிறது என்று அனைத்து மாநிலங்களிலும் இன்று பேசத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரள மாநில நிதி அமைச்சர் திரு. மணி அவர்கள் மாநிலங்களுக்கு நிதி பங்கீடு செய்வதில் மத்திய அரசு முறையாக நடந்துகொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல மேற்கு வங்க முதலமைச்சர் திரு.ஜோதி பாசு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். மராட்டிய முதலமைச்சர் திரு. அந்துலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல ஆந்திர முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதி உதவி அளிப்பதில் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கர்நாடக நிதி அமைச்சர் 19-ந் தேதி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து, மத்திய அரசின் நிதி உதவி போதுமானதாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 1977-78 ஆம் ஆண்டிலே டெல்லியிலே ஜனதா கட்சி ஆட்சி இருந்தது. இன்றைக்கு இந்த மாநில அரசுதான் மத்திய அரசை ஏதோ வேண்டுமென்றே பழி

[திரு. வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்] [1981 மார்ச் 27

சுமத்துவதுபோல் பேசுகிறார்கள். அன்றைக்கு ஜனதா ஆட்சி இருந்தபோது டெல்லியிலே, மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு மாநிலங்களுக்கு ஓரவஞ்சனை காட்டுவதாக இருக்கிறது என்று இந்திரா காங்கிரஸ்காரர்கள் கூறியிருக்கிறார்கள். தென் மாநிலங்களுக்கு வங்கிகள் மூலம் செய்கின்ற மத்திய அரசின் உதவியும், மத்திய அரசின் நிதிப் பங்கீடும் மாற்றாந்தாய் மனப் பான்மையிலேதான் இருக்கிறது என்று திரு. கே. டி. கோசல்ராம் அவர்களே கடந்த மார்ச்சில் டெல்லியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, கிட்டத்தட்ட தென்மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் எல்லாம் இப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், பாண்டிச்சேரியில் மட்டும் என்ன சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. காரணம், அங்கே பட்ஜெட் சமர்ப்பிப்பதிலே காலதாமதம ஏற்பட்டிருக்கிறது. நேற்றுதான் பட்ஜெட் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் என்ன குரல் எழுப்பியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.

கேரளா, ஆந்திரா, இன்னும் மற்ற பல மாநிலங்கள் எல்லாம் ஒன்றிரண்டு நாட்கள் வித்தியாசத்தில பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள. நம்முடைய பட்ஜெட்டை டாக்டர் நாவலர் அவர்கள் சமர்பபித்திருககிறார்கள். கிட்டத்தட்ட எல்லோரும் ஒரேமாதிரியான கருத்தைத்தான் கூறியிருக்கிறார்கள் மத்திய அரசின் நிதிப் பங்கீட்டை பொறுத்தவரையில்.

அது மட்டுமலல, 1971–72 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இப்படி மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு ஓரவஞ்சனை செய்கிறது என்று சொலலியிருக்கிறார்கள். இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் இப்படிச்சொல்லவில்லை. அனைத்து மாநிலங்களிலேயும் இப்படிப்பட்ட ஒரு எண்ணம் உருவாகத் தொடங்கி இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு மாநிலங்களுக்கு உதவும் நிதிப் பங்கீடு செய்வதிலே ஒரு சரியான நடவடிக்கையை மேற்கொள்ளவ்ல்லை. டாக்டர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது இந்த மாநில மக்களின் எண்ணங்களை, ஏன் இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் அனைவரின் எண்ணங்களையும் பிரதிபலித்திருக்கிறது. அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில், இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமே இல்லை என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுககு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஆர்ப்பாட்டத்திற்கும் பரபரப்புக்கும், கரவொலிக்கும் இடம் கொடுக்காமல் செய்கின்ற காரியங்களில் காலதாமதம் ஆனாலும், குறை ஏற்படாமல் அமைதியான முறையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய கொள்கையை செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. தேர்தல் வாக்குறுதிகளை நிறை

1981 மார்ச் 27] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

வேற்றிதர சிறப்பான திட்டங்களைத் தீட்டி செயல் படுத்திக் கொண்டிருக்கிறது. திட்டங்களை நிறைவேற்றுவதில் வேண்டுமானால் காலதாமதம் நேரலாம். இருந்தாலும் எங்கள் நோக்கத்தில் மாறுபாடு இல்லை. நோக்கம் குறையவில்லை. நாங்கள் கொடுத்த வாக்குறுதியை மீறவில்லை; ஒவ்வொன்றாகச் செயல்படுத்துகிறோம். காரியங்களைச் செய்வதில் தாமதம் ஏற்படுவதற்கு நிதிப் பற்றாக்குறையும் ஒரு காரணமாக இருக்கிறது.

சத்துணவுத் திட்டம் செயல்படவ்லலை என்று சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். மற்ற இடங்களுக்கு விரிவுபடுத்துவதில் சிறிது தாமதம் ஏற்படுவதற்கு நிதிப்பற்றாக்குறையும் ஒரு காரணம். ஆகவே, எங்களுடைய நோக்கத்தில் குறைவ்ல்லை; மாறுபாடு இல்லை; அமைதியாகச் செய்கிறோம். ஆனால், சிலர் ஆர்ப்பாட்டததிற்காக, கரவொலிக்காக சிலவற்றைச் சொல்வார்கள; செய்யமாட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மாலகோ நிறுவனத்தை தேசியமயமாக்குவோம் என்று சொன்னார்கள். பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்கள், ஆனால் செயல்படுதத முடிந்ததா? மால்கோ நிறுவனத்தை தேசியமயமாக்கும் சட்டத்தைக் கொண்டுவரலாம். அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும்? ஏன் தி.மு.க. அதை செயல்படுத்தவில்லை. அறிவிபபுடன் நின்றது ஏன்? அந்தச் சட்டத்தை நிறைவேற்ற கோடி ரூபாயா செலவாகி விடும்?

அதைப்போலவே, உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று 1972-லே தி. மு.க. நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டது. உழுபவனுக்கு அந்த நிலத்தைக் கிரயம் கொடுத்து வாங்கிக் கொள்ளும் சக்தி இருக்காது. சிறு உழவர்கள் நில உரிமையாளர்களிடம் நிலத்தைக் கிரையம் கொடுத்து வாங்க உழவர் நிதி உதவிக் கழகம் ஏற்படுத்தப்படும் என்று கரவொலிக்கிடையே கருணாநிதி அறிவித்தார். ஆனால் செய்தார்களா? இல்லையே அறிவித்தது ஏன்? செயல்படுத்தாததற்குக் காரணம் என்ன? அவர்களுக்கே தெரியாது? ஆரவாரத்திற்கும், ஆதாயம் பெறவும் அறிவ்பபுக்கள் செய்யப்பட்டது தி.மு.க. காலத்தில், ஆனால் அப்படியல்ல அண்ணா தி.மு.க. அரசு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அத்தகைய ஆர்ப்பாட்டமான அறிவப்புகளை ஆதாயங்களுக்காகச் செய்யவில்லை இந்த நிதிநிலை அறிக்கையில். ஆனால் கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே சில திட்டங்களைத் தந்திருக்கிறது.

[பிற்பகல் 12-40]

பாராட்டுவதற்கு எதுவுமே இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அருமை உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் மிகவும் தாழ்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

1971-72 நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற கடனை 6 கோடியிலிருந்து 20 கோடியாக உயர்த்தியதை புரட்சி பட்ஜெட் என்று சொல்லிய நீங்கள், 1973-74 நிதிநிலை அறிக்கையிலே அந்த 20 கோடியை 40 கோடியாக உயர்த்தியதை புரட்சிகரமான பட்ஜெட், கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றுகிற பட்ஜெட் என்று எல்லாம் விமரிசனம் செய்த நீங்கள், ஒரே ஆண்டிலே 73 கோடி ரூபாய் விவசாயிகளின் கடனை ரத்து செய்த பட்ஜெட்டைப் பாராட்டக்கூடாதா? மத்திய அமைச்சர் திரு. ஆர்.வி. சுவாமிநாதன் கூடச் சொன்னார். கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கி இருக்கின்ற கடனுக்கு வட்டி கட்டினாலே அது நான்கு மடங்கு ஐந்து மடங்கு வரும் என்று. அப்படி வட்டி கட்டவேண்டிய நிலையிலே இருந்த விவசாயிகளின் வட்டியை ரத்து செய்திருக்கிறார்களே. 40 கோடி கடன் கொடுத்ததை புரட்சிகரமான பட்ஜெட் என்று பாராட்டிய நீங்கள் இதைப் பாராட்டக்கூடாதா? சிறு விவசாயிகளின் வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை ரத்து செய்திருக்கிறார்களே இதையெல்லாம் நீங்கள் அரசியல் ரீதியாக வேண்டுமானால் பாராட்டாமல் இருந்திருக்கலாம். ஆனால் மனச்சாட்சியின்படி நீங்கள் பாராட்டித்தான் தீர வேண்டும்.

அடுத்து, கிராமக் குடிநீர் திட்டத்திற்காக 7 கோடி ரூபாய் ஒதுக்கி கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தப்போகிறோம் கிராமங்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து வருகின்றது இந்த அரசு என்று 1972-73-லே நிதிநிலை அறிக்கையிலே முழக்கமிட்ட நீங்கள் இப்போது தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 24 கோடி ரூபாயை கிராமப்புறங்களில் உள்ள தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மட்டும் நிதி ஒதுக்கி இருப்பதை பாராட்டக்கூடாதா? 1972-73-லே 85 கோடி ரூபாய், அதாவது 24.2 சதவீதம் கல்விக்காக ஒதுக்கியதை மாபெரும் புரட்சி என்று பாராட்டிய நீங்கள், 255 கோடி ரூபாய், அதாவது 25.4 சதவீதம், அதாவது ஒரு சதவீதம் அதிகமாக ஒதுக்கியதைப் பாராட்டக்கூடாதா? 5 ரூபாய் அரிசன மாணவர்களுக்காக கூட்டியதையே புரட்சிகரமான பட்ஜெட் என்று பட்டியல் போட்டுக் காட்டினீர்களே? இன்று 10 ரூபாய், 15 ரூபாய் என்று போட்டிருக்கிறோமே இவைகள் எல்லாம் தமிழக அரசு செய்கின்ற நல்ல காரியமல்லவா? ஆனால், இந்தப் பட்ஜெட்டிலே இருக்கின்ற குறை, வேண்டுமானால் போதிய விளம்பரம் செய்யாததாக இருக்கலாம். குடிநீர் திட்டம் மற்றும் 40 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார ஒளி கொடுப்பதையே உங்களது நிதிநிலை அறிக்கையிலே பெரிதும் பாராட்டிய நீங்கள் இப்போது தமிழகத்தில் தன்னிகரில்லாத திட்டமாக தன்னிறைவுத் திட்டத்தையே சிறப்பாக நடத்தி, கிராமங்களில் கடந்த ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இந்த ஆண்டு 150 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேவையான எல்லா அடிப்படை வசதிகளையும், அதாவது சாலைகள் போக்குவரத்து போன்றவைகளைச் செய்து கொடுத்திருக்கிறோமே. ஆகவே, இந்த பட்ஜெட்டிலே பாராட்டுவதற்கு எதுவுமே இல்லை என்று சொன்னால் அது அரசியல் மாச்சரியமாகத்தானே இருக்கலாமே தவிர, உண்மையிலே இந்த பட்ஜெட் கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு அடிப்படையான தேவைகளை நிறைவேற்றுகின்ற பட்ஜெட்டாகும். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிராமபுறத்தில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதோடு மட்டுமல்லாது நலிந்த விவசாயிகளின் கடனை ரத்து செய்திருப்பது அவர்களுக்கு வானமுதாக இருக்கின்றது.

அடுத்து மதுவிலக்கு கொள்கை பற்றி அனைத்துத் தரப்பிலேயும் பேசி இருக்கிறார்கள். நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கினை சிறப்பாக நடத்த முடியவில்லை என்பதைத் அனைத்து மாநிலங்களும் ஒத்துக் கொண்டிருக்கின்றன. ஏன், மத்தியிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் கூட நாம் என்ன முடிவு எடுத்திருக்கிறோமோ அதையே சொல்லி இருக்கிறார்கள். மதுவிலக்கினால் தீமை என்று பிரச்சாரம் செய்வதோடு அரசு நின்றுவிடவேண்டும். அதற்குமேல் போவதில் பயன் இல்லை என்று கன்சாலிடேஷன் ஆஃப் நேஷனல் கெயின்ஸ் என்ற புத்தகத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தி இருப்பதை பாராட்டுகின்ற அதே நேரத்தில் பட்ஜெட்டிலே அறிவித்திருக்கின்ற சிலவற்றின் நடைமுறைச் சிக்கல்களை அகற்றுகின்ற வகையிலே அரசு சட்டம் தீட்டுகின்ற போது இந்த கருத்தை பரிசிலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மரம் ஏறுவோர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருப்பவர்களுக்கு மட்டும் கள் இறக்குவதற்கு உரிமை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நடைமுறையில் ஒத்துவருமா என்பது கொஞ்சம் சந்தேகம். அப்படியானால் மரம் வைத்திருப்பவர்கள் நாங்கள் மரத்தை விட மாட்டோம் என்று சொன்னால், நான் காந்திய வழி வருகிறேன் மரங்களை விட முடியாது என்று சொன்னால் மரம் ஏறுகின்ற தொழிலாளிக்கு மரமே கிடைக்காமல் போய்விடும். ஆகவே, அந்தச் சட்டத்தில் நடைமுறை சிக்கல் இருக்கின்றது. மரம் ஏறுகின்ற தொழிலாளர்களும், மரத்தின் உரிமையாளர்களும் சேர்ந்த சங்கங்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்படும் என்ற வகையிலே சட்டத்தைத் திருத்துகின்ற வகையிலே இந்த மதுவிலக்கைப் பொறுத்தவரையிலே ஏற்பாடு செய்யவேண்டும். அதேபோல் குடிப்பதை எதிர்க்கின்ற ஒரு பிரச்சாரத்தை நாம் லட்சியமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். இண்டியன் மேட் பாரின் லிக்கருக்கு மற்ற மாநிலங்களிலே எல்லாம் ஏகப்பட்ட வரிகள் போட்டாகிவிட்டது. நாம் குடிப்பது தவறு என்ற லட்சியத்தைக் கொண்டிருக்கிறோம் கேரளா மாநிலத்திலே கூட 40 சதவீதமாக இருந்த வரியினை 50 சதவீதமாக உயர்த்தி இருக்கிறார்கள். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே.

நாம் இங்கே இன்னும் 25 சதவீதம் தான் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். 25 சதவீதம் வசூல் செய்ததிலேயே தமிழக சர்க்காருக்கு, 1973–74 ஆம் ஆண்டுக்காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில், 10 கோடி ரூபாயை வரியாக, இன்டியன் மேட் பாரின் லிக்குவயர்ரிலே பெற்றது. எனவே, கேரளாவில் இருப்பதைப்போல 50 சதவீதம், கர்நாடகத்தில் இருப்பதைப் போல 50 சதவீதம் உயர்த்திப் போடுவார்களேயானால், குடிப்பவர்கள்தான் அந்த வரியைக் கட்டப் போகிறார்கள். அரசுக்கு 10 கோடி ரூபாய் வருமானம் என்பது 20 கோடியாக வர வாய்ப்பு இருக்கிறது என்பதைக்கூறி, அதை அரசு சற்று ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்......... (மணியடிக்கப்பட்டது.)

திரு. உ. சுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வறட்சியைப் பற்றி குறிப்பிடுகிறபோது, போதுமான மழை இல்லாத காரணத்தால் தமிழகத்தின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள கொடிய வறட்சி நிலை மக்களுக்குப் பல்வேறு வகையில் பெரும் அவதிக்குள்ளாக்கி வந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த வறட்சி நிலையைப் பார்க்க அமைச்சர்களை ஆங்காங்கே அழைத்தோம்; வந்தார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சற்று ஆர அமர சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருப்பார்களேயானால், தொடர்ச்சியாக வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் பார்த்திருக்க முடியும். ஆனால், அரை பொழுதே அங்கே வந்து, அதை ஒரு சூறாவளி சுற்றுப் பயணமாக ஆக்கிக் கொண்டதினால், அவர்களால் பார்க்க முடியவில்லை. அந்தக் குறை எங்கள் பகுதி மக்களுக்கு உண்டு. ஆகவே அடுத்தபடியாக அவர்களாவது, அல்லது வேறு அமைச்சர்களாவது வந்து, தொடர்ச்சியான வறட்சியின் காரணமாக அம்மக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற நிலையை அறிந்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி மிகுந்து இருக்கிற நிலையில், அறுவடை நேரத்தில் அந்த சமயத்தில் ஆங்காங்கு கொள்முதல் செய்திருப்பார்களேயானால், ஓரளவிற்கு நெல் முதலிய உணவுப் பொருள்களை கொள்முதல் செய்திருக்க முடியும். ஆனால், அறுவடை ஆகி பல மாதங்களுக்குப் பிறகு போகும்போது, மிகுந்த சிரமங்கள் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, கால்நடைகளைப் பொறுத்தவரையில் 20 மருந்தகங்களை ஏற்படுத்தப்போவதாக கூறியிருக்கிறார்கள். 4 மருந்தகங்களை அப்கிரேட் செய்யப்போவதாகவும் கூறியிருக்கிறார்கள். ஆனால், உண்மை சூழ்நிலை என்னவென்றால், இருக்கும் கால்நடை மருந்தகங்களில் போதுமான அளவிற்கு மருந்துகள் கிடைப்பதே இல்லை என்பதுதான். அப்படியே மருந்துகள் இருந்தாலும் அங்கே உள்ள அதிகாரிகள் அவைகளை சரியாக மக்களுக்கு கிடைக்கின்ற வகையிலே கொடுக்கச் செய்வது இல்லை. தனிப்பட்ட முறையிலே மருந்துகளை எழுதிக் கொடுத்து, நீங்கள் வாங்கி வாருங்கள் என்று சொல்லக்கூடிய அவல நிலை இருக்கிறது. ஆகவே, அந்த நிலையை மாற்றி போதுமான அளவுக்கு மருந்துகளை சப்ளை செய்யவும், கொடுக்கப்பெறும் அந்த மருந்துகள் விவசாயிகளுடைய கால்நடைகளுக்கு உபயோகப்படுவதற்காக, அங்குள்ள அதிகாரிகள் அந்த மருந்துகளைத் தவறான வகையில் உபயோகப்படுத்ாதவகையில் கண்காணிப்பும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி புதிதாக மருந்தகங்களை திறப்பதாகச் சொல்லும் அதே நேரத்தில் இருக்கிற மருந்தகங்கள் பலவற்றை மூடிக் கொண்டிருக்கிறார்கள், என்ன காரணம் என்று தெரியவில்லை. உதாரணமாக, காளையார்கோவில் ஒன்றியத்தில் பழையாடிதமன் என்ற ஊரிலே நடந்து கொண்டிருந்த ஒரு சப்-சென்டரை திடீர் என்று மாற்றி விட்டார்கள். அந்தப் பகுதியிலே கால்நடை வளர்ப்பு அதிக அளவில் இருந்தும், அங்குள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தும்கூட, அதை மாற்றி விட்டார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பாசனத்தைப் பொறுத்தவரையில், பெரியார்—வைகை சீரமைப்புத் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் நடைபெறுகிறது வைகை அணைக்கட்டைக் கட்டுகின்ற நேரத்திலே அந்த அணைக்கட்டின் மூலம், திருமங்கலம் தாலுக்காவில் ஒரு பகுதியும், சிவகங்கைத் தாலுக்காவில் ஒரு பகுதியும் பயன் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு கட்டப்பட்டது. ஏற்கெனவே அதன் பலன் சிவகெங்கைத் தாலுக்காவிற்கும் சேரவேண்டும் என்று நிர்ணயிக்கப்பெற்ற காரணத்தினால், இப்பொழுது உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படவிருக்கும் வைகை-பெரியார் மாடர்னைசேஷன் ஸ்கீம் மூலமாக, கிடைக்கின்ற உபரி நீரை சிவகெங்கைத் தாலுக்காவைச் சேர்ந்த பகுதிக்கு அளிக்க வேண்டும் என்றும், அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் முன் உரிமையோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பாசன வசதிகளைப் பற்றிச் சொல்லுகிறபோது, எங்களுடைய மாவட்டத்தில் கண்மாய்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அந்தக் கண்மாய்களை வறட்சிப் பணித் திட்டத்தின்கீழ் தலையாய வேலையாக எடுத்து ஆழப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காடுகளைப் பொறுத்த வரையில் முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தக் காடுகளை அழிப்பதினால், மழை பெய்யாது போய்விடுகிறது. கிராம அதிகாரிகளை என்ன காரணத்திற்காகவோ ஒரே இரவில் பதவியை விட்டு அனுப்பிவிட்டுவிட்ட கார

ணத்தினால், எல்லா மரங்களையும் வெட்டிவிட்டிருக்கிறார்கள்—கேட்க ஆளில்லாமல். முள் மரங்கள் கூட வெட்டப்பட்டிருக்கின்றன, இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்றால், மாற்று ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டுமே தவிர, மழை பெய்யாததின் காரணமாக காடுகள் அழிந்துவிட்டன என்று காரணம் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆனாலும், விஞ்ஞான அடிப்படையில் இதை ஒப்புக் கொண்டாலும்கூட, கிராம அதிகாரிகளை நீக்குவதற்கு முன் தகுந்த மாற்று ஏற்பாடுகளை முன் யோசனையோடு செய்திருந்தால், இப்படி காடுகள் அழிவதைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 12—50]

இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். மத்திய அரசும், மாநில அரசும் பின்தங்கிய மாவட்டமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதேசம். அங்கே வேலை வாய்ப்பு கிடைக்காத காரணத்தினால், பஞ்சம் ஏற்பட்டு வேறு மாவட்டங்களுக்குச் செல்லுகிறார்கள். சிலர் தலைநகருக்குள் வருகிறார்கள். ஆகவே, இதை ஓரளவு நிவர்த்தி செய்வதற்கு, மத்திய அரசினுடைய உதவியைக் கொண்டு செய்யப்படுகின்ற [illegible] தொழிற்சாலைகளை அங்கே ஏற்படுத்தி, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும், அப்படிச் செய்வதன் மூலம் பல உப தொழில்களுக்கும் அங்கே வாய்ப்பு ஏற்படச் செய்தால், அந்த மிகவும் பின்தங்கிய பகுதிகளிலே இருக்கும் மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். சமீபத்தில் கூட வெடி மருந்து தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக, அதற்காக சுமார் 2,000 ஏக்கர்கள் நிலம் ஒரே இடத்தில் இருக்க வேண்டும், அதைச் சுற்றி 3 மைல்களுக்கு எந்தவிதமான கிராமங்களும் இல்லாத ஒரு பிரதேசமாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதைப் பற்றி கலெக்டரிடம் எடுத்துச் சொன்னபோது, அவர் சொன்ன காரணங்கள் வருந்த வேண்டியிருக்கிறது. தூத்துக்குடியை ஒட்டிய பகுதியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். இப்போது அது சாயல்குடி என்றார்கள். எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஒரு மாவட்டத்திற்கு என்று நியமன ஏற்பாடு செய்துவிட்டு, வேறு மாவட்டத்திற்கு அறிவிப்பது, அதற்கு கன்டிஷன் போடுவது எந்தவிதத்தில் பொருத்தம் என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே, இந்த நிதி நிலை அறிக்கையில் அதைப்பற்றி தெரிவிக்கப்படாமல், வேறு மாவட்டத்திலே வெடி மருந்து தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருப்பதாக குறிப்பைப் பார்க்கும்போது, இது கைவிடப்பட்டு விட்டதா? அல்லது தொடர்ந்து நடத்தப்படுமா என்று எனக்கு ஐயம் ஏற்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில், 32 கோடி ரூபாய் செலவில் சிமெண்ட் ஆலை ஆரம்பிக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். ஆனால், இந்தத் திட்டங்கள் எல்லாம் ஆரம்

பித்து, நடைமுறைப்படுத்துவதற்கு காலதாமதமாகும். மக்களுக்கு இன்றியமையாத தேவையாக இருக்கும் பொருள்களில் சிமெண்டும் ஒன்று, ஆகவே, இந்த சிமெண்டை உற்பத்தி செய்வதற்கு மினி பிளாண்ட் அதாவது சிறிய சிறிய அளவில் சின்ன சின்ன தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வர வேண்டும். அதற்கான ஊக்கத்தை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கனிமப் பொருள் நிறுவனத்தைப் பற்றி நல்ல முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. 90 சதவீதம் அந்நிய செலாவணி கிடைக்கக்கூடிய வகையில் செயல்பட்டு, பழைய நஷ்டங்கள் போய், இலாபகரமாக இந்த ஸ்தாபனம் இயங்குகிறது என்பது பற்றி மகிழ்ச்சி. பல அரசு நிறுவனங்கள் இழப்பிலே ஓடுகின்றபோது, இந்த ஒரு ஸ்தாபனம் இப்படி நடப்பது மகிழ்ச்சி, ஆனால், இன்னும் வேகமான காரியங்கள் நடைபெறுவதற்கு அந்த கனிம அமைப்பிலே இருக்கின்ற உயர் அதிகாரிகள் அதற்குக் குந்தகமாக இருக்கக் கூடாது என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன், எங்கள் சிவகெங்கைப் பகுதியில் கிராபைட் என்ற மூலப்பொருள் அதிகமான அளவில் கிடைக்கின்றது. இந்த கிராபைட்டைத் தோண்டி எடுத்து, உற்பத்தி செய்வதற்கான திட்டம் பல ஆண்டுகளாக சொல்லி, இப்போது கனிந்து கொண்டிருக்கிறது. அதற்கு கால தாமதம் ஆவதற்கு இயற்கையான சில காரணங்கள் இருந்தாலும், அரசு உயர்மட்ட அதிகாரிகள் அதற்கு உறுதுணையாக இல்லை என்ற நிலை இருப்பதாக அறிகிறேன். ஆகவே, வெளிநாட்டு செலாவணி சம்பாதிக்கக்கூடிய தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மிக வேகமாக ஆரம்பிக்கக்கூடிய வகையில் இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய கோயில்களில் தமிழ் ஆசிரியர்களை அமர்த்தப்போவதாக தெளிவுபட குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த மாதிரி என்று சூசகமாகக்கூட குறிப்பிடப்படவில்லை. கோயில்களில் தேவாரம், திருவாசகம் பாடப் போகிறார்களா அல்லது தமிழை அபிவிருத்தி செய்யப் போகிறார்களா என்பது தெரியவில்லை. வேலையில்லாத தமிழ் ஆசிரியர்களுக்கு உதவி செய்வது நல்லது; அதை வரவேற்கிறேன். ஆனால், அவர்களுடைய தமிழ் ஆராய்ச்சி, கோவில்களில் தேவாரத்திற்கு மட்டும் உதவக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுமார் பத்து கோடிக்கு அதிகமாக செலவு செய்து உலக தமிழ் மாநாடு நடந்தது, கோவில்களில் தமிழ் ஆசிரியர்கள் நியமனம் என்று சொல்லப்படுகிறது. சுமார் 250-க்கும் மேல் தமிழ் பாடல்களை எழுதிய புலவர் வறுமையில் வாடுகிறார்கள். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட ஊதியமும் கூட நிறுத்தப்பட்டிருக்கிறது. தமிழை வளர்க்கின்ற காரியங்களில் திட்டங்கள்

தீட்டுகிறது அரசு, இதுபோன்ற முதுபெரும் புலவர்களை ஆதரிக்க வேண்டும். அவர்களுக்கு ஏற்கெனவே கிடைத்து வந்த சொற்ப ஊதியத்தைக்கூட ஏன் நிறுத்தினார்கள் என்று தெரியவில்லை. விவரம் வேண்டுமென்றால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கிறேன். அவர்களுக்கு உதவி செய்ய முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்படுகிறதாக கூறப்பட்டிருக்கிறது. அந்த பகுதியிலே இருக்கிற மக்கள் சார்பாக அரசிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகெங்கை அரசு மன்னர் கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது. அங்கே நிர்வாகத்தினர் சரியாக நடந்து கொள்ளாத காரணத்தினால் அரசு தற்காலிகமாக ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது. நிரந்தரமாக எடுத்துக் கொள்ளாத காரணத்தால் புதிதாக பல துறைகள் அந்த கல்லூரியிலே எடுத்துக் கொள்வதற்கு முடியாமல் இருக்கின்றன. ஆகவே, அரசு, இந்த மாநிலத்திலேயே முதன் முறையாக இருந்தாலும், "ஒரு டெஸ்ட்டிங் கேசாக" சரியாக நடக்காத ஒரு "சிக்" கல்லூரி என்ற முறையில், இதை அரசு எடுத்து நடத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இது வரவேற்கக் கூடியத் திட்டமாகும். ஆனால் இதில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில் நான் சொல்லும்பொழுது, மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற பஞ்சாயத்துக்களை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். சில இடங்களில் நீங்கள் தவறியிருக்கிறீர்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் காளையார்கோவில் ஒன்றியம் போன்ற பல ஒன்றியங்கள் தொடர்ந்தாற்போல் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல நிவாரணங்கள் மூலமாக அங்கே பணிகள் நடந்திருக்கின்றன. சாதாரணமாக காரியங்கள் நடப்பதற்கு வழியில்லை. நிதிநிலை சரியில்லாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சொந்த திட்டமாக இருக்கிற தன்னிறைவுத் திட்டத்தை மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே கொண்டு வரவேண்டும். காளையார்கோவில் போன்ற பகுதிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம குடிநீர் வசதிகளைப் பற்றி பலமுறை சொல்லியிருக்கிறேன். எங்கள் பகுதிகளிலே அதிகமாக ஊரணி தண்ணீரைத் தான் பயன்படுத்தி வருகிறோம். கிணறுகள் பல இடங்களில் மிக ஆழமாக இருக்கின்றன. பல இடங்களில் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. இந்தச் சமயத்தில் அந்த பகுதி மக்களுக்கு யுத்த கால நடவடிக்கையைப் போல, நல்ல குடிநீர் கிடைக்க வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றும் அங்குள்ள பல பகுதிகளுக்கு அலுவலர்களோ அல்லது மற்றவர்களோ வந்தால் பார்க்கலாம். ஆற்று ஓரங்களில் சிறு சிறு ஊற்றுகளைத் தோண்டி அதன் மூலமாகத் தண்ணீரை மொண்டு பானைகளில் ஊற்றிக் கொண்டிருப்பார்கள். ஆகவே இந்த நிலை நீடிப்பதற்கு இடம் கொடுக்காமல், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு செய்ததைப் போல வெளி[illegible]ர் நிலங்களிலிருந்து ஆழ் குழாய் போடும் துளை கருவிகளைக் கொண்டு வந்து 'டீப் போர் வெல்ஸ்' போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கடனைப் பொறுத்தவரையில் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். செய்த வரையில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதற்கு சில கன்டிஷன்களைப் போட்டிருக்கிறீர்கள். இந்த தேதிக்குள் கட்டினால் தான் இந்த பயன் உங்களுக்குக் கிடைக்குமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு கையில் கொடுத்து, இன்னொரு கையால் தட்டி பறிப்பதைப் போல இருக்கிறது. இது வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி. ஏற்கனவே பல கஷ்டங்களுக்கு உள்ளான பகுதி. அவர்கள் கட்ட முடியாத நிலையில் தான் உங்களிடம் கேட்கிறார்களே தவிர, கையேந்தி பிச்சை கேட்கவில்லை என்ற நிலையை அரசு உணர்ந்து

(பிற்பகல் 1—00)

அவர்கள் தரவேண்டிய கடன் பாக்கிகளையும், வட்டி பாக்கிகளையும் குறிப்பாக தண்டவட்டி பாக்கிகளையும் நீக்கி விவசாயிகளுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குக் கொடுத்த நேரத்திற்குள் என்னுடைய தொகுதிக்கும், இந்த மாநிலத்திற்கும் பயனுள்ள கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்ற முறையிலே நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். திரு. உமாநாத் அவர்களுக்கு எங்கள் கட்சியின் சார்பாக நான் பதில் சொல்ல வேண்டுமென்றால் அது ஒரு பொலிடிக்கல் சிம்போஸியம் ஆக மாறிவிடும். ஆகவே அவ்வாறு செய்யாமல் எனக்குக் கிடைத்த நேரத்தை வீணாக்காமல் பேசியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஆற்றிய 1981—82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பைப் பெற்றதற்கு முதலிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இயற்கையின் சீற்றத்தின் காரணமாக கடுமையான வறட்சி இருக்கின்ற

நிலையிலும், அதிகாரங்கள், நிதிநிலைமைகள் பெரும்பாலும் மத்திய அரசினிடத்திலே குவிந்து இருக்கும் பொழுது, மாற்றாந்தாய் மனப்பான்மையிலே தமிழகம் பார்க்கப்படுகிறது என்ற நிலையிலேயும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற ஏழை எளிய மக்கள் வாழ்வு வளம் பெறுகின்ற வகையிலே எல்லோரும் எல்லாமும் பெற வேண்டுமென்ற பெரிய தத்துவத்தின் அடிப்படையிலே இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை நல்லெண்ணம் கொண்டவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது என்ற கருத்தை நான் முதலிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பருவமழை தவறாது பெய்யுமானால் உணவு தானிய உத்பத்தி 94.14 இலட்சம் டன்களை அடுத்த ஆண்டு எட்டும் என்ற முறையிலே நல்ல திட்டங்களைத் தீட்டியிருப்பதற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எதிர் வரிசையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற போது மழை பெய்யும்போது தானா என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி இந்த அரசை நையாண்டி செய்கிற வகையிலே பேசினார்கள். நான் அவருக்கு மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருமணம் ஆகாத ஒரு பெண்ணுக்கு பிள்ளை பெற வேண்டுமென்று ஆசை வரக் கூடாது. அந்த ஆசை வரவேண்டுமென்று சொன்னால் அவளுக்கு நிச்சயம் திருமணமாகியிருக்க வேண்டும். அந்த வகையிலே இயற்கை வளம் ஒத்துழைப்பைத் தருமானால் ஒரு அரசு நல்ல முறையிலே பங்கு பெற்று திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற கருத்தை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் குடும்பங்களை கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவந்து அந்தச் சமூகத்தினுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள கொண்டு வரப்பட்டுள்ள திட்டங்களையும் மாநிலத்திலே உள்ள பெரிய நகரங்களில் மோட்டார் பொருத்தப்பட்ட ஆயிரம் சைக்கிள் ரிக்ஷாக்களைக் கொண்டு வருகிற திட்டமும் புதுமையானது, புரட்சிகரமானது, அண்ணா அவர்களின் கனவை நினைவாக்குகின்றவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பங்கு கொண்ட மதிப்பிற்குரிய திரு. சித்தன் அவர்கள் பேசுகின்றபோது இந்த அரசு இந்திரா காந்தியினுடைய அரசுக்கு நண்பனா பகைவனா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடுசொல்லிக் கொள்வது எல்லாம் தஞ்சையிலே ஒரு இடைத் தேர்தல் நடந்தபோது இந்திரா காந்தி அம்மையார் அங்கே நிற்க வந்தபோது உடன்பிறப்பே அவர்கள் இங்கே வருகிறார்கள் தமிழகம் இதைத் தாங்க வேண்டுமா என்று எழுதுகிற அளவுக்கு நாங்கள் பகைவர்கள் அல்ல, பிரதமர் பதவியை ஏற்பதற்கு முன்பு மதுரை மாநக

ருக்கு வந்தபோது செருப்புகளையும் கற்களையும் வீசி எறிகிற அளவுக்கு உங்களுக்கு நாங்கள் பகைவர்கள் அல்ல. ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்கிறேன், எங்களுக்கு நீங்கள் நண்பர்களா என்பதல்ல கேள்வி.

ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் இந்தத் தமிழகம் பேரறிஞர் அண்ணாவின் பூமி ; பேரறிஞர் அண்ணாவினுடைய பூமியை ஆள வேண்டியவர் தமிழகத்தினுடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் என்ற நிலையிலே எங்களுடன் யார் தொடர்பு கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான் எங்களுடைய நிலையான நண்பர்கள் ; நல்ல நண்பர்கள் என்பதை ஆணித்தரமாக இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் இங்கே கூறினார்கள். எரிசாராய வழக்கு என்பது வருவதற்கு முன்னாலேயே ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டார்கள். எங்களுக்கு மடியிலே கனம் இல்லை, வழியிலே பயம் இல்லை.

அதுமட்டுமல்ல, உங்களைப் பார்த்து நான் கேட்க ஆசைப்படுவதெல்லாம், எரிசாராய ஊழல் என்பது தமிழகத்திலும் கேரளத்திலும் நடந்திருக்கிறது என்ற ஒரு நிலையைச் சுட்டிக் காட்டி இந்த மாமன்றத்தில் முன்னாலே நீங்கள் பேசுகின்ற பொழுது விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று கேட்டீர்கள். உங்களுடைய கருத்துக்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு, உங்களுக்கு மதிப்பளிக்கின்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஓய்வு பெற்ற நீதிபதியை விசாரணைக் கமிஷனாக அமைத்தபொழுது இந்த மன்றத்தின் முன்னாலே மௌனியாக இருந்துவிட்டு, அதற்குப் பின்னாலே மத்திய அரசு இன்னொரு கமிஷன் அமைக்க வேண்டுமென்று கூறுகிறீர்களே, மத்திய அரசு ஏற்கனவே அமைத்திருக்கின்ற கமிஷன்கள் எல்லாம் என்னவாயிற்று என்று கேட்கிறேன்.

1977-ஆம் ஆண்டு தேர்தலைச் சந்திக்கின்றபொழுது, அதற்கு முன்னாலே விசாரணைக் கமிஷனை, சர்க்காரியா கமிஷனை, அமைத்தபொழுது யாரைக் குற்றவாளி என்று சொன்னீர்களோ அந்தக் குற்றவாளியோடு சேர்ந்துக் கொண்டு, 1980-ஆம் ஆண்டிலே சந்தித்தீர்களே தேர்தலை. அதற்குப் பின்னாலே, தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் ; தர்மம் மறுபடியும் வெல்லும் என்ற இயற்கையினுடைய தத்துவத்தைக் காலத்தால் செய்து காட்டிய எங்களுடைய புரட்சித் தலைவரவர்களுடைய கொள்கைக்கு நீங்கள் சவால் விட வேண்டாம் ; பயமுறுத்த வேண்டாம் ; அச்சப்படுகின்ற நிலையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இல்லை என்பதை மட்டும் மிகப் பணிவோடு உங்களுக்குச் சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. கோபால்] [1981 மார்ச் 27

அடுத்து, மதுவிலக்குக் கொள்கையைப்பற்றிப் பேசுகின்ற பொழுது, மாண்புமிகு உறுப்பினரவர்களெல்லாம் பேசினார்கள்; குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது புரட்சித் தலைவரவர்களை இழித்தும்! இடித்தும் பேசினார்கள். நான் உங்களைக் கேட்கிறேன், உங்களுடைய தலைவரவர்கள் முதல்வராக இந்த நாட்டிலேயிருந்தபொழுது நான்கு வேங்கைகளுக்கு மத்தியிலே மாட்டிக் கொண்ட ஒரு புள்ளி மானாகத் தமிழகம் இருக்கின்ற காரணத்தினாலே நான் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்து விடுகிறேன் என்று சொன்னாரே, இன்று உங்களுக்கு ஒரு நடுக்கம் ஏன்? தடுமாற்றம் ஏன்? வீண் வாதம் ஏன் என்பதைத்தான் இந்த நேரத்திலே ''உங்களை நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேநேரத்தில் அண்ணல் காந்தியடிகளினுடைய கொள்கைக்காக, அவர்களுடைய மூச்சாக நாங்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். என்று சொல்லுகின்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கின்றேன். எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள், மதுவிலக்கு ரத்தாகக் கூடாது என்பதற்காக கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகததைச் சார்ந்தவர்கள் இது மாற்றுக் கட்சியை நசுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் இன்றுகூட அவர் முழுமனதோடு, முழுவதுமாக ரத்து செய்யவில்லை; அவர் பூரண மனப்பான்மையோடு ரத்து செய்யவில்லை ஆனால் இன்று அண்ணல் காந்தியடிகள் வாரிசாக வந்தவர்கள் மத்திய அரசோடு பேசி தமிழகத்தினுடைய பண்பாடு கெடாத வகையிலே தமிழகத்திலே மதுவிலக்கு ரத்து செய்யப்படக்கூடாது என்கின்ற நிலையிலே நட்டஈடு வாங்கிக்கொடுப்பார்கள் என்று நாங்கள் காத்திருந்து, அந்தப் பொறுமைக்கு பின்னாலே, நீங்கள் உங்கள் கடமையை ஆற்றவில்லை என்ற ஒரு முடிவிற்கு வந்த பின்னாலேதான் எங்களுடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசு மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கிறது என்பதை மிகுந்த பணிவன்போடு சொல்லக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, வேலியே பயிரை மேய்ந்தால் எப்படியோ அப்படிச் சமுதாயத் துரோகிகள், மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் கள்ளுககடைகளையும் சாராயக் கடைகளையும் நடத்திக் கொண்டு, ஆளுங் கட்சிக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே இருந்ததாலே, ஆண்டு கொண்டிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய......

திரு. இரெ. இராசமாணிக்கம்: சார் ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மாற்றுக்கட்சியைச் சார்ந்த சமூகத் துரோகிகள் என்று

1981 மார்ச் 27] [திரு இரா. இராசமாணிக்கம்]

சொல்கிறார்கள். மாற்றுக்கட்சியிலே உள்ளவர்களையெல்லாம் சமூகத் துரோகிகள் என்று சொல்வது நியாயம்தானா? அப்படியானால் ஆளுங்கட்சியிலே சமூகத் துரோகிகள் இல்லையா?

[பிற்பகல் 1-10].

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'சில சமூக விரோதிகள்' மாற்றுக் கட்சிகள்' என்று அப்படித்தான் பேசினாரே தவிர மாற்றுக் கட்சியிலே இருக்கிற சமூக விரோதிகள் என்று பேசவில்லை, பேசுகிற பொழுது சமூக விரோதிகள், (Comma) மாற்றுக் கட்சிகள் என்றுதான் சொன்னார். அவர் பேசுகிற பொழுது. ஆளுங்கட்சியினர் காய்ச்சுகிறார்கள் என்று அவர்களும் சொல்கிறார்கள். ஆகவே, அதை எடுக்க வேண்டியதில்லை. நீக்க வேண்டியதில்லை இரண்டையும் இணைக்க வேண்டிய தில்லை,

திரு துரைமுருகன்: அதாவது, மாற்றுக் கட்சியிலே இருக்கிறவர்கள் சமூக விரோதிகள், மாற்றுக் கட்சிகள், சமூக விரோதிகள் என்று மதிப்பிற்குரிய அங்கத்தினர் கோபால் சொல்கிறார். ஆனால், நாட்டிலே இருக்கிற பிரசினை என்னவென்றால்.............

மாண்புமிகு திரு எஸ் திருநாவுக்கரசு: உறுப்பினர் திரு. கோபால் பேசியதை, திரு. துரைமுருகன் அப்படியே சொல்லவில்லை. அவர் அப்படிப் பேசவே இல்லை. சில சமூக விரோதிகள் சாராயம் காய்ச்சுகிறார்கள். எதிர்க்கட்சியிலே சில பேர் காய்ச்சினார்கள் என்று அவர் சொன்னார். அப்படித் தான் சொன்னாரே தவிர, எதிர்க்கட்சியிலே இருக்கிற சமூக விரோதிகள என்று அவர் சொல்லவில்லை. சில சமூக விரோதிகள், மாற்றுக் கட்சியிலே சிலபேர் சாராயம் காய்ச்சுகிறார்கள். என்று அவர் சொன்னார்.

திரு. துரைமுருகன்: எதிர்ககட்சியிலே இருக்கிறவர்கள், மாற்றுக் கட்சியிலே இருக்கிறவர்கள் என்று சொல்லவில்லை.... (கூச்சல்-குழப்பம்).

திரு அ. ரகுமான்கான்: அப்படியானால், அயோக்கியர்கள் கமா (Comma) ஆளுங்கட்சியினர் என்று சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோபாலே பேசுகிறார். அவரே சொல்வார்.

திரு. சி. கோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக சமூக விரோத சக்திகள்தான் என்று சொன்னேனே ஒழிய, நான் சமூக விரோத சக்திகள், மாற்றுக் கட்சிகள் என்று சொல்லவே இல்லை. ஆகவே, நான் சமூக விரோதிகள் என்று. யாரையோ, ஒரு கட்சியையோ குறிப்பிட்டுச்

சொல்லவில்லை. ஆகவே, எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் சீரிய சிந்தனைக்குப் பின்னால்தான் இந்த நாட்டினுடைய வருமானம் சமூக துரோகிகளிடத்திலே சென்று அடையக் கூடாது என்ற ஒரு எண்ணத்திலே, மதுவிலக்கை அமுல்படுத்துவதை தளர்த்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடைகளினுடைய தரத்தை உயர்த்தவும் பால் உற்பத்தியை பெருக்குகின்ற வகையிலேயும் 1981–82 ல் ரூ. 29·60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கால்நடைத் தீவிர வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பட்டு இருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் சுமார் ரூ. 20 கோடி செலவில், வெடி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலையை, வறட்சியாக உள்ள என்னுடைய தொகுதியாகிய சோளிங்கர் தொகுதியிலே, வறண்டு கிடக்கின்ற காவேரிப்பாக்கம் தொகுதியிலே, அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்றுவிரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கூட்டுறவுத் துறையிலே ஏற்படுத்தவிருக்கும் மூன்று நூற்பாலைகள், நெசவாளர்கள் பெரும்பாலும் மலிந்து கிடக்கும் என்னுடைய தொகுதியிலும் ஏற்படுத்தவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு எஸ் என் இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82 வது ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1981–82 ஆம் ஆண்டு அறிக்கை மிகவும் தெளிவுடன் இருக்கிறது. கிராம மக்கள்நலன் குறித்து, இந்தத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. குறித்து, தமிழக அரசை பாராட்டுகிறேன்.

பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்திசெய்ய இயந்திரம் வாங்க மத்திய அரசை அனுமதி கேட்க, தமிழக அரசு ஆவன செய்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி. அதே நேரத்தில், சாத்தான்குளம் தொகுதி மக்கள் நிலத்தடி நீர் மூலமாக அங்கு விவசாயம் செய்கிறார்கள். அந்த மக்கள் அங்கு மோட்டார்களை டிரில்லிங் செய்து, சுமார் 5 ஆண்டுகளாக கரன்ட் வாங்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கும்போது, நான் இதை போன சட்டமன்றத்திலே அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இன்னும் நான் சொல்கிறேன். அந்த மக்கள் நிலத்தடி நீர் மூலமாக விவசாயம் செய்வதால், அவர்கள் அந்த கரன்ட் பெறுவதற்கு, உடனடியாக, அங்கே, இயங்குகின்ற லோடுகள் குறைவாக இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்களில், இருந்து அவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் பொருள் நெல். அந்த நெல் உற்பத்திக்கு வேண்டிய பூச்சிக் கொல்லி மருந்துகளும், உரங்களும் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றகாரணத்தால நெல்லுக்கு விலை மிகவும் குறைவாக இருப்பதாலும் அந்த நெல்லின் விலையை குவின்டாலுக்கு 150 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இங்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 69 வளர்ச்சி வட்டாரங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த அரசு அந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக செய்யப்படுகின்ற வேலைகளை அரசாங்க அதிகாரிகள் நல்லமுறையிலே பயன்படுத்தி மக்களுக்கு நல்ல வாழ்வளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் குடிநீருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது. தமிழகத்திலே குடிநீர் பிரச்சினை மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தாலோ, என்னுடைய தொகுதியான சாத்தான்குளத்தில் மக்கள் குடிநீருக்கு மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல பிற மாவட்டங்களிலும் குடிநீர் இல்லாமல் அவதியுறுவதைக் கண்டு இந்த அரசாங்கம் குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகையை அதிகமாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாலைகளை செப்பனிடுவதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நேஷனல் ஹைவேஸ் சாலைகள் நல்ல முறையில் இருக்கின்றன. ஆனால் பஞ்சாயத்து இணைப்புச் சாலைகள் நல்ல முறையில் இல்லை. அரசு இதைக் கவனத்தில் கொண்டு கிராமப்புறங்களிலே இருக்கின்ற இணைப்பு சாலைகளை சரி செய்து கிராம மக்கள்வாழ வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முதியோர் பென்ஷன் என்ற அடிப்படையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வாங்குவதற்கு அங்கே உள்ள தாசில்தார் ஆபீசுக்குச் சென்று மனு கொடுத்தால் 7 மாதம் 8 மாதம் ஆனாலும் மனுக்களை அங்கே இருக்கிற ரெவின்யூ டிப்பார்ட்மென்டு அதிகாரிகள் வந்து விசாரணை செய்வதில்லை என்று தெரிவித்துக் கொண்டு, இதைப்போக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும்.

மதுவிலக்குப் பிரச்சினைப் பற்றி சொன்னார்கள். இன்றைக்குள்ள நிலைமையில் இந்த மதுவிலக்கைத் தளர்த்தினால் தமிழகத்திலே உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் காந்தி வழியிலேயும் காமராஜ் வழியிலேயும் இருந்த நாம் இந்தத் தமிழகத்திலே மதுவிலக்கு கட்டாயம் என்று இருந்தது. ஆனால் புரட்சித்

தலைவர் அவர்கள் இந்த மதுவிலக்கைக் தளர்த்தி வருவது நல்லதல்ல, என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்களை இப்போது இருக்கும் சட்டத்தின் மூலமாகவே அவர்களைத் தண்டிக்க முடியும். அப்படிக் கள்ளச்சாராயம் காய்ச்சுவதை நிறுத்தி இருக்கலாம். மேலும் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்குக் காவல் துறையினரே பல இடங்களில் வழிவகை செய்ததன் காரணமாக இன்று கள்ளச்சாராயம் பல இடங்களில் பரவி இருக்கின்றது. அதைத் தடுப்பதற்கு இந்தச் சட்டத்தின் மூலமே நடவடிக்கை எடுத்திருக்கலாமே தவிர மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலம் தடுக்க முடியாது.

அடுத்து சாத்தான்குளத்திலே கருவூல ஆபீஸ் இல்லாமல் இருக்கிறது, சுமார் 4 ஆண்டுகாலமாக இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே அங்கே ஒரு கருவூலம் அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்தில் பகுதிநேர ஊழியர்களாகப் பணிபுரிகின்றவர்களை அரசாங்க ஊழியர்களாக முழுநேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் அனைவரையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்கியதைப் பாராட்டுகிறேன்

பாசனவசதியை நல்லமுறையில் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாசன வசதி என்பது புதிய கால்வாய்களை தோண்டத் தேவையில்லை. ஏற்கனவே மாவட்டங்களிலே உள்ள குளங்களையும், கண்மாய்களையும் ஆழப்படுத்தித் தூர்வாரினால் அதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1 - 20]

அதே நேரத்திலே இன்றைக்கு தமிழக அரசை நான் ஒன்றைக் கேட்கவிரும்புகிறேன். அஜெந்தா பியூட்டி சென்டர் என்ற பெயருடன் தாம்பரம் சான்டோரியம் ரயில்வே ஸ்டேஷன் ரோடில் ஒரு தனியார் நிறுவனம் பொதுமக்களை ஏமாற்றி புதிதாக ஒரு திட்டத்தை அறிவித்து பல லட்சக்கணக்கான ரூபாய்களை வசூலித்து இருக்கிறார்கள். ஒரு நபர் ஒன்றுக்கு ரூ. 16·50 கட்டினால், 40 நாள் கழித்து 40 ரூபாய் பெருமானமுள்ள எவர்சில்வர் பொருள்கள் தருவதாகச் சொல்லப்பட்டு, அதன் மூலம் பல லட்சக்கணக்கான ரூபாய் வசூலித்து, மோசடி செய்து இருக்கிறார்கள். இது போன்ற நடவடிக்கைகளில் அவர்கள் அச்சடித்த துண்டுப்பிரசுரம் செய்து தான் செய்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நேரங்களில் அரசு உடனடியாக அதில் தலையிட்டு பொதுமக்களை ஏமாற்றுவதில் இருந்து காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மக்கள் பணத்தை அந்தக் கம்பெனி நடத்தியவர்களிடமிருந்து வசூலித்துக்கொடுப்பதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்றும் சொல்லிக்கொள்கிறேன். 16 50 ரூ. பெற்று 40 ரூ. பெருமானமுள்ள எவர்சில்வர் பொருள்களை 40 நாள் கழித்து எப்படி அந்த நிறுவனங்களால் கொடுக்க முடிகிறது என்கிற ஆய்வையும் அரசாங்கம் மேற்கொண்டு இருந்தால் இந்த மோசடி தவிர்க்கப்பட்டு இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

திரு. மு சுந்தரராஜன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே விவசாயிகளுக்குப் பல சலுகைககளையும் சைக்கிள் ரிக்கஷாக்களுக்கு மோட்டார் பொருத்துதல் போன்ற நவீனத் திட்டத்தையும், குறைந்த விலையில் தாலிக்குத் தங்கம் போன்ற பல திட்டங்களை இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள்., அதோடு மட்டுமல்லாமல் பல துறைகளுக்கும் நிதியை ஒதுக்கி இந்த தமிழகம் முன்னேறுவதற்கு உரிய நல்ல பல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில், சிறிய தொழில்களை அபிவிருத்தி செய்வதைப் பொறுத்தமட்டில், இந்த அரசாங்கம் வந்தபிறகு கிராமத்தில் மக்கள் விவசாயத்தை மட்டும் நம்பி இருக்கத் தேவையில்லை. விவசாயம் சீராக நடக்காத சமயத்தில் குடிசைத் தொழில் செய்து அவர்கள் பிழைத்துக்கொள்ளவேண்டும் என்கிற முறையில் பல சலுகைகளை திட்டங்களைச் செய்து வந்து இருக்கிறது. தீப்பெட்டித் தொழில் குடிசைத் தொழிலாக நடத்துவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் அதற்காக பல ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறது. இருப்பினும் அந்தக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தீப்பெட்டிக்கு 2 சதவீதம் வரி விதித்தார்கள். இந்த மாமன்றத்தில் இருக்கின்ற பெரும்பான்மையான உறுப்பினர்கள் அந்தத் தொழில் குடிசைத் தொழிலாக செய்யப்பட்டு வருகிறது. வரிவிலக்கு அளிக்கப்பட

வேண்டும் என்று கேட்டுக் கொண்டதின் பேரின் அதற்குவரிவிலக்கு அளித்தார். ஆனால் அந்தச் சலுகை காதிபோர்ட்டில் குடிசைத் தொழில்என்று யார் சர்ட்டிபிகெட் வாழ்கி உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் தரப்பட்டது. அரசாங்கத்தின் ஒரு அங்கமாக உள்ள கூட்டுறவுத் துறையில் உள்ளவர்களுக்கு அந்தச் சலுகை தரப்படவில்லை. அவர்களால் அந்தச் சலுகையை அனுபவிக்க முடியவில்லை. குடிசைத் தொழில் பொருளாக தீப்பெட்டி அறிவிக்கப்பட்ட பின்னர், இப்படிப்பட்ட இரண்டு விதமான கொள்கை இருப்பது தவிர்க்கப்படவேண்டும். ஆகவே கூட்டுறவுத் துறையில் உள்ள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் இந்த வரிவிலக்குச சலுகை அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, வறட்சிப் பணி பற்றி இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் பலவாறாகப் பேசினார்கள். இங்கே வறட்சிப்பணி என்று சொல்கிறபோது, தமிழக மக்கள் வாழ்வு நசிந்து விடக்கூடாது என்பதற்காக பலவிதமான திட்டங்களை இந்த அரசு யாரையும் எதிர்பார்க்காமல் யாரிடமிருந்தும் வேண்டுகோளை எதிர்நோக்காமல் தானாகவே முன்வந்து அறிவித்து இருக்கிறது. இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் நான் ஒரு பழைய சம்பவத்தை நினைவு கூறுவதற்குக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டு, மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல், உண்ண உணவு இல்லாமல் இருந்தது. அப்போது இராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவிக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரும் அரசைக் கேட்டார்கள். அரசிடம் கோரிக்கை வைத்து போராட்டம் நடத்தினார்கள். அப்போது, முதலமைச்சராக இருந்த திருகருணாநிதி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். நாங்கள் மீண்டும், மீண்டும் வேண்டுகோள் விடுத்தோம். அன்றைக்கு அமைச்சராக இருந்த சாதிக்பாட்சா அவர்களை அனுப்பி, அவரும் சுற்றிப்பார்த்துவிட்டு அந்த மாவட்டத்தில் வறட்சி இல்லை என்று சொல்லிய பிறகு, இன்றைக்கு அமைச்சராக இருக்கிற அண்ணன் காளிமுத்து அவர்கள் தலைமையில் அங்கே உண்ணாவிரதம் தொடங்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று அறிவித்த பிறகுதான உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுவோம் என்று சொல்லியும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. அதன் பிறகு மத்திய அரசிலிருந்து ஒரு அமைச்சர் வந்து பார்தது, உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். அப்போது இந்த முறையிலே கேட்ட

பிறகும் கவனிக்கவில்லை. ஆனால், இன்றைக்கு யாரும் கேட்காமல் இருந்தும், இந்திரா காங்கிரசும் கேட்கவில்லை; திராவிட முன்னேற்றக் கழகமும் கேட்கவில்லை; யாரும் கேட்காமலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று சுற்றிப்பார்த்துவிட்டு, ஆங்காங்குள்ள வறட்சி நிலை பற்றி சரியான தகவல் கொடுக்கவில்லை என்று சொல்ல, ஏற்கெனவே அனுமதித்த ரூபாய் தவிர, மேற்கொண்டும் கோடிக் கணக்கில செலவிட உத்திரவிட்டிருக்கிறது இந்த அரசு. வறட்சியைப் பற்றி குறைத்து மதிப்பிட்ட அதிகாரிகளையும் கண்டித்து இருக்கிறாகள். ஆனால், இந்தப் பட்ஜெட்டிலே எதுவுமே இல்லை என்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சியாக இருக்கிறார்கள் என்பதால் ஆளுங்கட்சி செய்கிற எல்லாவற்றையும் எதிர்த்தே ஆகவேண்டுமென்று, எதிர்ப்பதுதான் தங்கள் கடமை என்று, நினைத்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை.

அது மட்டுமல்ல, மதுவிலக்குப் பிரச்சினைப் பற்றி பலவிதமாகப் பேசினார்கள். மதுவிலக்கு பற்றி இன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் சரியான ஒத்துழைப்புத்தராததால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. காரணம், இந்த அரசு குடிப்பவர்கள் மீதும், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்; 6 மாதம் சிறைத் தண்டனை, காய்ச்சி விற்றால் ஊர் விட்டு ஊர் மாற்றுதல் என்ற கடுமையான நிலையை எடுத்த போது எதிர்க்கட்சிக்காரர்களுக்கு மதுவை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால் அதற்கு ஆதரவாக இருந்திருந்தால் மதுவிலக்கை தீவிரமாக அமுல்படுத்தியிருக்க முடியும்.

அதுமட்டுமல்ல. பலமுறை எதிர்க்கட்சிக்காரர்களை அழைத்துப்பேச முதலமைச்சர் ஏற்பாடு செய்தும் கூட தங்களுடைய அந்தக் கொள்கையை விட்டுக்கொடுக்காத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆக, ஏதோ இன்றைக்கு மதுவிலக்கை தீவிரமாகச் செயல்படுத்துவதற்கு அவர்கள் ஆதரவு கொடுப்பது போல் பேசினாலும் இந்த மாமன்றத்திலே முன்பு நடந்த பேச்சுக்களையும், இப்போது நடக்கும் பேச்சுக்களையும் பத்திரிகைகள் மூலம் படித்திருக்கிற மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கு தேவை என்று இந்த மாநிலத்திலே இன்றைக்குச் சொல்லுகின்ற திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் மற்ற மாநிலங்களிலே மதுவிலக்கை அமுல்படுத்தாததற்கு வருத்தம் தெரிவிக்கிறார்களா என்றால் இல்லை; இந்திரா காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களிலாவது அவர்கள் மதுவிலக்கை அமுல்படுத்தச் சொல்கிறார்களா என்றால் இல்லை. அது மட்டுமல்ல. இங்கே மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் உண்மையிலேயே அவர்களுக்கு இருந்தால் நாளை மதுக்கடைகள் திறக்கபடும் போது, "எங்கள் கட்சிக்காரர்கள் மதுக்கடைகளை ஏற்று நடத்த அனுமதிக்கமாட்டோம்; நாங்

களோ எங்கள் சொந்தக்காரர்களோ அந்த மதுக்கடைகளை, நடத்த மாட்டோம்'' என்ற சவாலை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

வறட்சி என்று சொல்லுகிறபோது நான் சார்ந்திருக்கிற விருது நகர் பகுதியையும் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விருதுநகர் அந்த மாவட்டத்தின் தலைநகர். பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்த ஊர். இன்றைக்கு அங்கே குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப் படுகிறார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது 64 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப் பட்டு, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் அது நிர்மலமான திட்டமாக ஆகியிருக்கிறது.

[பிற்பகல் 1-30]

இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு இன்றைக்கு கருணை கொண்டு வைகை ஆற்றிலிருந்து விருதுநகருக்கு தண்ணீர் கொண்டு வருகின்ற ஒரு திட்டத்தை தொடங்கி இருக்கின்றது. அதைத் தீவிரமாகச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத் திலே கேட்டுக்கொண்டு அமருகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் நாள் அன்று) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

242. சென்னையிலுள்ள தாஜ் கோரமண்டல் ஓட்டலுக்கு, தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் விதிமுறைகள் எண். 12(1-அ)-லிருந்து விலக்களிப்பது குறித்து, தொழிலாளர்-வேலைவாய்ப்புத்துறையின் 1981-ஆம் ஆண்டு சன வரித் திங்கள் 29-ஆம் தேதியிடப்பெற்ற 205-ஆம் எண் அர சாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1958-59-ஆம் ஆண்டு ஓட்டல் நிர்வாகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13 1958) 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1981 மார்ச் 28.

பங்குனி 15, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சூழ்ச்சி, முடிவு, துணிவு எய்தல், அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது."

ஒரு செயலைக் குறித்து ஆராய்ச்சி செய்வதன் மூலம் அச் செயலைச் செய்து முடிக்கும் துணிவினைப் பெறவேண்டும். அவ்வாறு முடிவு செய்து எடுத்துவிட்ட செயலை, உடனடியாகச் செய்து முடிக்காமல் காலந்தாழ்த்துதல் குற்றமாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாட்டில் நக்சல்பாரிகள்.

*வினா எண் 525-அ—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78, 1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள் எத்தனை பேர்?

(ஆ) 1980 ஜூலை முடிய எத்தனை பேர் சிறைச்சாலை களில் உள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

*345ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. எல். இளையபெருமாள் : நக்ஸலைட்ஸ் என்ற பெயரால் முதலாளிகளிடம் அரசாங்கம் செய்துள்ள சட்டப்படியான கூலியைக் கேட்ட காரணத்தால், படித்து வேலையற்ற இளைஞர்கள் அந்தக் கூலியைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் செய்திருக்கிற சட்டப்படி முதலாளிகளிடம் கேட்ட காரணத்தால் அதுவும் குறிப்பாக தர்மபுரி, சேலம், தஞ்சை மாவட்டங்களில் ஏழை ஆதிதிராவிட மக்களையும், படித்து வேலையற்ற பின்தங்கிய மக்களையும் அவர்கள் வேலை கேட்ட காரணத்தால் அநியாயமாக அடிக்கப்பட்டு இம்சித்து இருப்பது அரசுக்குத் தெரியுமா? இப்படி மேற்கொண்டு நடக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறது? குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அரசாங்கம் செய்து அது தமிழ்நாடு பூராவும் அமலில் இருப்பதால்தான் அவர்கள் கேட்கிறார்கள், அப்படிக் கேட்கப்பட்ட காரணத்திற்காக அவர்கள் இப்படி பழி வாங்கப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற நிலை நாட்டில் பொதுவாக இருக்கிற நிலைகள்தான். ஆகவே படித்துவிட்டு வேலையற்றிருக்கிறார்கள் என்ற காரணத்தாலோ அல்லது ஏழ்மையில், வறுமையில் வாடுகிறார்கள் என்ற காரணத்தாலோ அவர்கள் எல்லாம் நக்சல்பாரிகளாக மாறுகிறார்கள் என்று கூறுவதற்கில்லை. குறிப்பிட்ட கொள்கை அடிப்படையில் இது ஒரு தீவிர இயக்கமாக ஒரு சிலரை ஈர்த்து அவர்களை தயாராக்கி உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டு அவர்களை, கைது செய்யப்பட்டவர்களானாலும் சரி, தண்டனை வழங்கப்பட்டவர்களானாலும் சரி, அல்லது இப்போது விசாரணையில் இருப்பவர்களானாலும் சரி இப்படி ஒரு தீவிர இயக்கத்தில், சமுதாயத்தில் இருக்கிற எந்தக் கட்சியினரும் இன்று ஒப்புக் கொள்ளாத நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதின் காரணமாகத்தான் அவர்கள் கைது செய்யப்படவும், தண்டனை அளிக்கப்படவும் உள்ள நிலையில் இருக்கிறார்கள். ஆனால் நிரபராதிகள் எந்த வகையிலும் கைது செய்யப்படவோ அல்லது தண்டிக்கப்படவோ கூடாது, அதற்கான வகைகளில் அவர்களுக்கு போதுமான அளவிற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சில சமயங்களில் சில பேர்களை விசாரிக்க வேண்டி வருகிறது. அப்படி, நிரபராதிகள் மீது கொடுமைகள் நிகழும் நிலைமைகள் இருக்குமானால், அது சுட்டிக்காட்டப்படுமானால், அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அவை முன்னவர் அவர்கள் தீவிர இயக்கம் காரணமாக நக்சல்பாரிகள் தோன்றுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால் தமிழ்நாடு பூராவும் எல்லாப் பகுதிகளிலும் இந்த நக்ஸலைட்ஸ் இயக்கம் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை. இது குறிப்பாக பொருளாதார

ரீதியில் மிகவும் பின்தங்கியிருக்கும் தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளில் மட்டும்தான் இருக்கிற காரணம் பற்றி அரசு பரிசீலித்ததா? உண்மையாக அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களை அங்கிருக்கக்கூடிய மிராசுதார்கள் கொடுமைப்படுத்துவதன் காரணமாகத்தான் இந்த இயக்கம் அந்தப் பகுதிகளில் வேரூன்றியிருக்கிறது என்பதை அரசு கண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் ஏற்கனவே கூறியது போல் வறுமை காரணமாகவோ அல்லது ஏழ்மை காரணமாகவோ அல்லது வேலையிலலாத் திண்டாட்டம் காரணமாகவோ இப்படிப்பட்ட நிலைகள் உருவாகியிருப்பதாக தெரியவில்லை. நக்சல்பாரிகள் என்ற பெயரே அதைச் சுட்டுகிறது. அப்படிப்பட்டதொரு இயக்கம் நக்சல்பாரி என்ற இடத்தில் ஆரம்பித்து அது தொடர்ந்து பரவ, ஒருவர் நான்கு பேர்களையும், நான்கு பேர்கள் பத்து பேர்களையும் உருவாக்குகிறார்கள். அப்படி ஏற்பட்டு வருகிற காரணத்தால்தான் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் இது இருக்கிறது. வறுமை என்று பார்ப்போமானால், ஏழ்மை என்று பார்ப்போமானால் தர்மபுரி மாவட்டத்தை விட கொடுமைப்படுத்துவது — இன்னும் சொல்லப்போனால் தஞ்சை மாவட்டத்தில், திருச்சி மாவட்டத்தில் இருக்கிற மிராசுதார்கள், மற்றவர்கள் கொடுமைப்படுத்துகிற அளவிற்கு தர்மபுரியில் மற்ற இடங்களில் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆக, இது ஒரு தீவ்ரமான இயக்கமாக இருந்து அதில் சில பேர்கள் ஈடுபடுகிறார்கள். வேறு மாநிலங்களை எடுத்துக் கொண்டாலும் பரவலாக மக்களிடம் இருக்கிறதாக சொல்ல முடியாது ஆந்திராவை, எடுத்துக் கொண்டாலும் சரி, கேரளாவை எடுத்துக் கொண்டாலும் சரி, ஒரு குறிப்பிட்ட சில பகுதிகளில்தான் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில்தான் இந்த இயக்கம் பரவி வருகிறது. இதை கூடுமான அளவிற்கு கட்டுப்படுத்தும் அளவில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம். இன்னும் தீவிரமான முறையில் அதை அறவே நீக்கும் முயற்சியினை காவல் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள். அதற்கான நிலைகளை அரசு ஆராய்ந்து அவ்வப்போது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நக்சல்பாரிகளைக் கைது செய்வதற்கு என்று முயற்சி எடுத்தபோது, அவர்களை சுடுகிறபோது செல்ப் டிபென்சுக்காக போலீஸ் சுட்டதாகவும், அதனால் அவர்கள் இறந்ததாகவும் போலீஸ் தரப்பிலே கூறப்பட்டிருக்கிறது. வந்த சீரியசான சார்ஜஸ் கவர்ன்மென்டின் பேரில் என்னவென்றால், உயிரோடு அவர்களைக் கைது செய்த பிறகு, அவர்கள் இனிமேல் இந்த மாதிரியான விவகாரத்தில் ஈடுபடக்கூடாது என்பதற்காக, பிளைண்டிங் காம்பைன் இன்னொரு மாநிலத்திலே நடந்தமாதிரி, அவர்களை உயிரோடு பிடித்து, பிறகு வேண்டுமென்றே சுட்டுக் கொன்ற

தாக செய்திகள், சீரியஸ் சார்ஜஸ் கவர்ன்மென்ட் பேரில் வந்திருக்கின்றன. அதைப்பற்றி சீரியசான இன்வெஸ்டிகேஷன் நடத்தப்பட்டதா ? லோகல் போலீஸ் இன்வெஸ்டிகேஷன் ஆபீசர்மீது செபரேட்டாக இன்வெஸ்டிகேஷன் நடத்தியிருக்கிறதா ? அப்படியிருந்தால் அதனுடைய ரிசல்ட் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வரவில்லை. ஆகவே, ஆங்காங்கே அப்படி சுடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவ்வப்போது வெளியே இப்படி நடந்திருக்கிறது. காவல் நிலையத்தில் வைத்து சுட்டார்கள் என்ற அளவில் புகார்கள் வருமேயானால், அதைப்பற்றி விசாரித்தறிந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆனால் இதுவரை பல்வேறு இடங்களில், குகைகளில், மலைப் பகுதிகளில் ஒளிந்திருந்து, பிடிபட்ட இடத்தில் சுட நேர்ந்தது என்றுதான் செய்திகள் வந்திருக்கிறதே தவிர, காவல் நிலையத்தில் வைத்துச் சுட்டார்கள் என்ற செய்தியோ, நிலைமையோ இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குற்றச்சாட்டுகள் வருமேயானால், இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, நக்சல்பாரி பேரால் இடையிலே அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் இயக்கத்திற்குச் சம்பந்தமில்லாமல் கொள்ளையடித்தல், கொலை செய்தல், அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற வகையில்தான் நாட்டில் அதிகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட வகையில் இன்றைய தினம் தர்மபுரி மாவட்டம் தவிர வட ஆற்காடு மாவட்டத்திலும் பல பேர்கள் இருக்கிறார்கள் என்ற செய்தி இருக்கிறது. ஆகவே, தர்மபுரி மாவட்டத்தில் இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள் ? அதிலே இறந்து போனவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 525-ஆ, 525-இ ஆகியவைகளும் நக்சல்பாரிகளைப் பற்றியதாக இருக்கின்றன, எனவே, இந்த இரண்டுக்கும்கூட அமைச்சர் பதிலளித்து விடலாம். உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும்.

*வினா எண் 525-ஆ—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க காவல் படைப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு, தருமபுரி மாவட்டங்களில் நக்சல்பாரிகளின் பயங்கரச் செயல்களை ஒடுக்கும் பொருட்டும், வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போதுள்ள 8 காவல் நிலையங்களிலும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள 13 காவல் நிலையங்களிலும் உள்ள பணியாளர் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் பொருட்டும் அரசு கூடுதலாகக் கீழ்க்காணும் பணியாளர்களை நியமிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அன்றியும் வட ஆற்காடு மாவட்டத்தில் ஏலகிரியிலும், குரிச்சில்லாப்பட்டு என்னுமிடத்திலும், தருமபுரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி என்னுமிடத்திலும் மேலும் புதிதாக மூன்று காவல் நிலையங்களை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

காவல்துறை கூடுதல் சூப்பிரண்டு	..	1 (வேலூர் சரக டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலின் பொறுப்பின் கீழ் திருப்பத்தூரில் இப்போது நியமிக்கப் பட்டுள்ளார்.)
காவல் துறை டெபுடி சூப்பிரண்டு	..	1
காவல்துறை இன்ஸ்பெக்டர்கள்	..	2
காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்கள்	..	5
காவல்துறை சப்இன்ஸ் பெக்டர்கள்	..	7
ரிசர்வ் சப்இன்ஸ்பெக்டர்கள்	.. ..	2
உதவி சப்இன்ஸ்பெக்டர்கள்	.. ..	10
ரிசர்வ் உதவி சப்இன்ஸ்பெக்டர்கள்	..	2
தலைமைக் காவலர்கள்	.. ..	51
முதல் நிலைக் காவலர்கள்	.. ..	11
நாயக்	.. .. ..	12
லான்ஸ் நாயக்	.. .. ..	8
இரண்டாம் நிலைக் காவலர்கள்	.. ..	369
நிர்வாகப் பணியாளர்கள்—		
உதவியாளர்கள்	.. .. ..	2
இளநிலை உதவியாளர்கள்	.. ..	2

*வினா எண். 525-இ.— திரு. கு. ரமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஜனவரி முதல் அக்டோபர் முடிய வடஆற்காடு மாவட்டத்தில் நக்ஸலைட்டுகளுக்கும், போலீசாருக்கும்இடையில் ஏற்பட்ட மோதல்களில் எத்தனை நக்ஸலைட்டுகள்-போலீசார் இறந்துள்ளார்கள் ?

(ஆ) அவர்களில் துப்பாக்கி சூட்டினால், கை வெடி குண்டு வீச்சினால், கத்திக் குத்தினால் இறந்தவர்கள் முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை *ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-10]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நக்சல்பாரி இயக்கம் பரவி இருக்கக்கூடிய வடஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில், அங்கே உள்ள சமூக பொருளாதார நிலைமையை அறிவதற்காகச் சென்ற பத்திரிகையாளர்கள், சமூக சேவையாளர்கள் சர்வோதய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஆகியவர்கள் அங்கே உள்ள சிலராலே தாக்கப்பட்டிருக்கிறார்களே, அது தமிழ்நாட்டிற்கு அவமானம் தரக்கூடிய நிகழ்ச்சி இல்லையா, அவ்வாறு தாக்கியவர்கள் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது, தாக்கப்பட்டவர்களுக்கு என்ன நஷ்டயீடு கொடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி மூலக்கேள்விக்குகளுக்குத் தொடர்புடையதாக இல்லை என்ற காரணத்தாலும், இதன் மீது என்னிடத்தில் விளக்கம் இல்லை என்ற காரணத்தாலும், தனிக் கேள்வி போட்டால், இதைப் பற்றி, எப்பொழுது ஏற்பட்டது, எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது என்ற விவரங்களை அளிக்க இயலும்.

திரு. இரா. சருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நக்சலைட் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சமுதாயத்தில் மாறுதலைத் தீவிரமாகக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, இவர்களைப் பரிவோடு அரசாங்கம் திருத்த வேண்டுமென்ற உணர்வோடு அரசியல் கைதிகளைப் போன்று நடத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

*345ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நக்சல்பாரிகள் செயல்களைப் பார்ப்போமேயானால் அவர்களை அரசியல் கைதிகளாக வைத்து எப்படி நடத்துவது என்பது தெரியவில்லை. ஆகவே சட்டப்படி தண்டிக்கப்படுகிற நிலையில் மற்ற கைதிகள் எப்படி இப்போது சட்ட விதிகளின் படி நடத்தப்படுகிறார்களோ அப்படி நடத்தப்படுவார்கள்.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த வேலையில்லாத இளைஞர்கள் தான் இது போன்ற இயக்கத்திலே ஈடுபடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா, வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே குறிப்பிட்டேன், இந்த நக்சல்பாரி இயக்கத்தில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டவர்களில், விசாரணையில் இருக்கிறவர்களில் படித்தவர்களும் இருக்கிறார்கள் அறைகுறையாக படித்தவர்களும் இருக்கிறார்கள், படிக்காதவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, படித்தவர்கள் வேலையில்லாதவர்கள் இருக்கிறார்கள் என்பது ஒரு அடிப்படை காரணம் இல்லை என்பதை முதலிலேயே எடுத்துச் சொன்னேன். தீவிரமாக இந்த இயக்கத்திலே ஈர்க்கப்பட்டு தமிழகத்தில் சில இடங்களில் இதை செய்கிறார்கள். இதை முக்கியமான அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்கிற நிலையில் இல்லை. தனியாகக் கவனித்து நடவடிக்கையை தீவிரமாக எடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆகவே பட்டதாரிகள் தான் ஈடுபடுகிறார்கள் என்ற நிலை இல்லை.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மொத்தமாக தமிழ் நாட்டில் நக்சல்பாரிகள் உயர்ந்திருப்பதற்கான காரணங்களை விளக்கி கூறியிருக்கிறார்கள். குறிப்பாக நான் சேர்ந்த வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் பகுதியிலே நிகழ்ந்த அத்தனை நிகழ்ச்சிகளும் மலைக்குன்றுகளிலும், வேறு இடங்களிலும் நடந்ததாக அங்கு சொல்வதாகச் சொல்கிறார்கள். இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோள் ஒன்றை பணிவுடன் விடுக்கிறேன். அந்த பகுதியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை விசாரித்து பாருங்கள். போலீசிலே சொல்வதை நம்பாதீர்கள். குறிப்பாக ஜோலார்ப்பேட்டையைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளரே என்ன ஆனார் என்பதை கேட்டுப் பாருங்கள். அந்த பகுதியிலே வேண்டுமென்றே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கெங்கு நக்சல்பாரிகள் இருக்கிறார்கள் என்பதை நேராக வந்து சொல்லுங்கள். இப்போது கேள்வியைக் கேளுங்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் போலீசார் சொல்வது உண்மைக்கு மாறானவை. பிரச்சினைக்காகப் போராடுகிற ஏழை விவசாயிகளை ஸ்டேஷனிற்குக் கொண்டுபோய் கொடுமை படுத்தி மலைக் குன்றுகளுக்குக் கொண்டுபோய் சுட்டுப்போட்டு விடுகிறார்கள், அதைக்குறித்து முழுத் தகவலையும் .... (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பூங்காவனம் அவர்களை கேள்வி கேட்கச்சொன்னேன், எப்படி, எப்படிச் சம்பவங்கள் நடக்கின்றன என்ற விவரிப்புக் கொடுக்கிறார்கள். இதுத அனுமதிப்பதற்கில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, என்னுடைய 525-இ கேள்விக்கு பதில் சொல்கிறபோது, 9 பேர்கள் நக்சலைட்டுகளும், 3 பேர்கள் போலீசார்களும் இறந்திருக்கிறார்கள்; போலீசார் 3 பேர்கள் குண்டு வீச்சினாலும் மற்ற நக்சலைட்டுகள் துப்பாக்கிச் சுட்டினாலும் இறந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நக்சலைட்டுகள் பற்றி அவர் சொன்ன தத்துவத்திற்குள்ளே நான் போகவில்லை. நக்சலைட்டுகள் பெருங் கூட்டமாக 100 பேர்கள் அல்லது 50 பேர்கள் என்று வந்து தாக்கப்பட்ட நிலையல்ல, சிறு குரூப்பாக 1, 2, 4 பேர்கள் இருந்து கொண்டு செய்த தாக்குதல். அந்த 9 பேர்களை சுட்டுக்கொன்றுதான் நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்ற நிலைமையிலே சுடப்பட்டதா? அவர்களை சுடாமலேயே பிடித்து இருக்க முடியாதா? அவர்களைச் சுட்டுக் கொன்று விடாமல் அவர்களைப் பிடித்து விசாரித்து நடவடிக்கை எடுத்து அவர்கள் செய்த தப்பை பகிரங்கப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 9 பேர்கள் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் வைத்து சுடப்படவில்லை. வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு இடங்களில், குண்டு வீசப்படுகிறபோது தற்காப்புக்காக சுடப்பட்டதாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14 ஆம் நாள் அன்று இரவு 8 மணிக்கு சுமார் 45 நக்சலைட்டுகள் வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா மாடவாளம் கிராமத்தைச் சேர்ந்த கணபதி என்பவருடைய ஐவுளிக்கடைக்குள் நாட்டு வெடி குண்டுகளை வெடித்துக்கொண்டு உள்ளே நுழைந்து

சூறையாடினார்கள். குண்டுகள் வெடித்ததில், சில வாடிக்கையாளர்களும் கிருஷ்ணன் என்ற நக்சலைட்டும் காயம் அடைந்தார்கள். திருப்பத்தூர் அரசாங்க மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட கிருஷ்ணன் 1980-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15 ஆம் தேதியன்று காலமானார். அது மட்டுமல்ல. 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 16-ஆம் தேதியன்று சுமார் 25 நக்சலைட்டுகள் வட ஆற்காடு மாவட்டம், பொன்னேரி கிராமத்தைச் சார்ந்த கேசவ ரெட்டி என்பவருடைய வீட்டில் நுழைந்து மேற்படி கேசவ ரெட்டியும், அவரது மனைவி குணசீலியும், பேத்தி யமுனாவும் உறங்கிக்கொண்டிருந்த அறைக்குள் வெடிகுண்டுகளை வீசி அம் மூவரையும் கொலை செய்தார்கள். 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 19 ஆம் தேதியன்று காலையில் சுமார் 8 மணிக்கு தருமபுரி மாவட்ட மக்கள் நல உரிமைச் சங்கத் தலைவரும் நில உரிமையாளருமான வெள்ளைய கவுண்டர் மேற்படி மாவட்ட பாகுர் போலீஸ் சரகத்தைச் சார்ந்த புலியூர் அருகில் தாதம்பட்டி சந்திப்புச் சாலையில் மோகன் என்பவருடன் பஸ்ஸுக்காக காத்திருந்தபோது நான்கு நக்சலைட்டுகளால் வெட்டியும் குத்தியும் கொலை செய்யப்பட்டார். 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3 ஆம் தேதியன்று இரவு வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கதிரம்பட்டி கிராமத்திற்கு வெளியே அவ்வூரைச் சார்ந்த விவசாயியும் கிராம பாதுகாப்புக் குழு உறுப்பினருமான நடேச நயினார் என்பவரை ஏழு நக்சலைட்டுகள் வழிமறித்து கத்தியால் குத்தியும், அரிவாளால் வெட்டியும் கொலை செய்தார்கள். இப்படிப் பல நிகழ்ச்சிகள் வந்திருப்பதன் காரணமாக அவர்கள் அதற்குப் பிறகு தலைமறைவாக இருந்து பிடிக்கப்போன சமயத்தில் 1, 2 என்று சுடவேண்டிய நிலைமை ஏற்பட்டதே தவிர சேர்த்து சுடவில்லை. ஆகவே, ஆங்காங்கே பிடிக்கப்படும்போது தற்காப்புக்காகத்தான் சுட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பொது மக்களிலே பல பேர்கள் உயிர்விட்டார்கள், கொல்லப்பட்டார்கள் என்ற விவரங்களைச் சொன்னதற்கு நன்றி. என்னுடைய கேள்வி, நக்சலைட்டுகளை ஒடுக்கவேண்டுமென்று அவர்களை தனித்தனியாக சுட்டுக் கொல்வதன் மூலம் இந்த விஷயத்தை முடிக்கவில்லை, அவர்கள் தத்துவார்த்த நம்பிக்கையிலிருந்து இப்படித் தவறு செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய பதில் எடுத்துக்காட்டுகிறது. பல்வேறு இடங்களிலே அவர்கள் சுடப்பட்டார்கள் என்று சொன்னார்கள். 1, 2, 3 பேர்கள் என்று கூட்டமாக வரும்பொழுது அப்படிச் சுட்டிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். அப்படியானால் குறி பார்த்து கொல்லவேண்டுமென்றே சுட்டார்கள் என்றுதான் அதற்கு அர்த்தமாகிறது. அப்படி ஏற்படுவதைத் தடுக்கவேண்டுமென்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? கொல்லவேண்டுமென்று சுடுவதை தற்காப்பு என்று எந்த சமயத்திலேயும் சொல்லலாம். கொல்லவேண்டுமென்பதற்காக சுடாமல் அவர்களுடைய நிலையை

அம்பலப்படுத்த உயிரோடு அவர்களைப் பிடித்து பகிங்கரமாக விசாரிக்கக்கூடிய முறையிலே, போலீசார் ரெஸ்ட்ரெயின்ட்டாக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையிலே அமைச்சர் அவர்கள் உத்திரவிடுவார்களா ?

[முற்பகல் 9–20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டுச் சொன்னேன். 1977–78 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள் 22, 1978–79ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள் 118, 1979–80 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள் 131 பேர், இப்படி கிட்டத்தட்ட இருநூற்றுச் சில்லரை நக்சல்பாரிகளை பிடித்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் அத்தனை பேர்களையும் கொல்ல வேண்டுமென்ற முறையிலே காவல்துறையில் ஈடுபடவில்லை என்பது தெரியும். அவர்களைப் பிடிக்கப் போகும் பொழுது ஏற்படுகின்ற எதிர்பாராத சம்பவங்களின் காரணமாக அவர்களோடு சிலர் கட்டிப்புரண்டதாகவும் அவர்கள் காவல் துறையினரை வெட்டியதாகவும் இப்படி பலப்பல நிகழ்ச்சிகள் வருகின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வரும்பொழுது, தற்காப்பு என்ற நிகழ்ச்சி வரும்பொழுது 9 பேர் சுடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டதே தவிர, இப்பொழுது கைது செய்யப்பட்டு, வழக்கு நடத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டவர்கள் 21 பேர் இன்றைக்குச் சிறையில், இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களையும் கொல்ல வேண்டுமென்ற முயற்சியில் காவல்துறையினர் ஈடுபடவில்லை. மேலும், விசாரணை 21 பேர் மீது நடைபெற்றுக்கொண்டு வருகிறது; வழக்கு முடிந்த பிறகு அதன் விளைவு தெரியும். ஆகவே, இருநூற்றுச் சில்லரை பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், எனவே, இந்த நோக்கம் காவல்துறையினருக்கு இருக்கிறது என்ற நிலைமை இல்லை. ஆனால், எதிர்பாராது ஏற்படுகின்ற விளைவுகளின் காரணமாக தற்காப்பிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாக அவைகள் அமைந்திருக்கின்றன.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, வன்முறையில் நமக்கு நிச்சயமாக நம்பிக்கை இல்லை. ஆனாலும், இந்த நக்சல்பாரிகள் எங்கே தங்களுடைய இயக்கத்தைத் தொடங்கினார்களோ அந்த நக்சல்பாரிக்கே சென்று, அங்கேயிருக்கிற தன்மைகளை அறிகின்ற வாய்ப்பினைப் பெற்றவன் தான். அங்கே சமுதாயச் சீர்திருத்தம், சமுதாய முன்னேற்பாடுகள் இல்லாத காரணத்தினால், விரக்தியடைந்தவர்கள்தான் இந்த வன்முறையில் ஈடுபட்டார்கள். திருப்பத்தூரில் உள்ள அந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற இளைஞர்களுக்கு போதிய வாய்ப்புக்களைக் கொடுப்பதன் மூலமாக நக்சல்பாரி வன்முறையில் ஈடுபட்டவர்களை நன்முறையில் திருப்ப முடியும். அவ்வாறு அவர்களைத் திருப்பத்தூர் திருப்பி, நன்முறையில் கொண்டு வருகின்ற பெயரை அடைகின்ற வகையில் நமது தமிழக அரசு மிக அதிகமான சீர்திருத்தங்களை அங்கே கொண்டுவருமா ? சர்வோதய சங்கத்தினர் அங்கே தொடங்கி வைத்ததை இவர்கள் முற்றுப் பெறச் செய்கின்ற பணியிலே ஈடுபடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி, ஒரு குறிப்பிட்ட இடத்தின் சூழ்நிலைதான் இதற்கு அடிப்படைக் காரணம் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு இயக்கத்தின் தீவிர முயற்சியின் காரணமாக ஈர்க்கப்பட்டு செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப்போல இவர்களைத் திருத்துவதற்கும், நல்ல முறையில் மாற்றுவதற்கும் முயற்சிகள் இருக்குமேயானால் அவைகளை எடுத்துக்கொள்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், அவர்களால் சமுதாயத்திற்கோ, மற்றவர்களுக்கோ தீங்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்கின்ற பொறுப்பு அரசுக்கு இருப்பதால் எங்கெங்கு இவை தலைதூக்குகின்ற நிலை இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் காவல் துறையினரைக் கொண்டு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

சமையல் எண்ணெய்களின் விலையேற்றம்.

***வினா எண். 416 : திரு கு. ரமணி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சமையல் எண்ணெய்களுக்கு இதுவரையில் கண்டிராத விலையேற்றம் ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விலைகளைக் குறைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஓரளவுக்குத்தான் உயர்ந்துள்ளது.

(ஆ) குஜராத் மாநிலத்திலிருந்து கடலை எண்ணெய் வாங்கி, பொதுமக்களுக்கு குடும்ப அட்டைகள் மூலம் வழங்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பாமோலின் எண்ணெய் ஒதுக்கீட்டை தற்பொழுது திங்கள் ஒன்றுக்கு 3,000 டன் என்றிருப்பதை 5000 டன்னாக அதிகரிக்கும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு கு. ரமணி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உணவுக்கு உபயோகப்படுத்தும் எண்ணெய்களுக்கு இவ்வளவு தூரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது என்பது குறிப்பாக இந்த அண்மைக்காலத்தில்தான் ஏற்பட்டு வந்திருக்கிறது. எண்ணெய்

வித்துக்கள் அதிலும் குறிப்பாக நிலக்கடலை ஏராளமாக விளையும்படியான நமது தமிழ்நாட்டில் இம்மாதிரியான ஒரு விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நிலக்கடலை எண்ணெய் ஒன்றுக்கு டபுளாக ஆகி இருக்கிறது. ஜிஞ்ஜிலி எண்ணெய் ஒன்றுக்கு டபுளாக ஆகியிருக்கிறது. தேங்காய் எண்ணெய் ஒன்றுக்கு மூன்று மடங்கு விலை ஏறியிருக்கிறது. இப்படி இருக்கும்பொழுது கொஞ்சம்தான் விலை ஏறியிருக்கிறது என்று சொல்வது முறையாக இருக்காது. ஆகவே, எண்ணெய் விலையைக் குறைப்பதற்காக வேண்டி, கடலை எண்ணெய் வித்துக்களை அடுத்த மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்வதை பரிபூரணமாகத் தடை செய்து, அவைகளை அரசாங்கமே கொள்முதல் செய்து இங்கே உள்ள எண்ணெய் மில்களுக்குக் கொடுத்து எண்ணெய் விநியோகத்தைச் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், சமையல் எண்ணெய் வகைகளைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாட்டில் கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை பொதுமக்கள் பொதுவாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் தேங்காய் எண்ணெய் நல்லெண்ணெயைக் காட்டிலும், கடலெண்ணெயைத்தான் மிக அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். அதனுடைய உற்பத்தினுடைய அளவு குறைந்ததன் காரணமாக, விலைவாசிகள் ஓரளவுக்கு ஏறும்படியான சூழ்நிலை ஏற்பட்டது. பொதுவாக ஆண்டு ஒன்றுக்கு 25,000 டன்கள் உபரியாக கடலை எண்ணெய் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இவ்வாண்டு பருவமழை தாமதமாக பெய்த காரணத்தினாலும், மாறுகால அறுவடை குறைந்துவிட்டது. 1980–81-ல் 1,74,000 டன்கள் கடலை எண்ணெய் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு எதிராக 1,40,000 டன்கள்தான் கடலெண்ணெய் கிடைக்கும் என்று அறியப்படுகிறது. அதிலே, 30,000 டன்கள் பற்றாக்குறை இருக்கும் என்று தெரிகிறது. வேர்க்கடலை பயிரிடும் பரப்பளவை சென்ற மூன்று ஆண்டுகாலமாக ஓரளவுக்கு அதிகரித்துக்கொண்டுதான் வந்திருக்கிறோம். 1977–78-ல் 9.26 இலட்சம் ஹெக்டேரில் வேர்க்கடலை பயிரிடப்பட்டது. 1979–80-ல் 10 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்தது. ஆனால், உற்பத்தி 11–45 இலட்சம் டன்களாக இருந்தது, 10.43 இலட்சம் டன்கள் என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது. பருவமழை பெய்யாததன் விளைவு ஓரளவு ஆங்காங்கு பாதிக்கப்பட்டதற்குக் காரணமாக இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்று தெரியவில்லை. அப்படி ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வதற்கு மாநில அரசிற்கு உரிமை இருக்கிறதா என்றும் தெரியவில்லை.

ஆனால், இந்தியா முழுவதும் ஒரே ஸோன் என்று வைத்திருப்பார்களானால் நாம் தடுக்க முடியாது. ஆனால், அப்படித் தடுப்பதற்கு வாய்ப்பிருந்து இங்கேயே வைக்க முடியுமானால் அரசு அதுபற்றி ஆராயும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்களை நம்முடைய தேவைக்கு நாம் இங்கே கொள்முதல் செய்து, உபயோகப்படுத்துவதற்கு சட்டத் தடை எதுவும் இருக்கும் என்று நங்கள் கருதவில்லை. நம் தேவைக்கான எண்ணெய் வித்துக்கள் முழுவதையும் நாமே இங்கே விலை கொடுத்து வாங்கி, அரசு மூலமாகவே பல எண்ணெய் மில்களை ஏற்பாடு செய்து, எண்ணெய் எடுத்து நியாய விலைக் கடைகள் மூலம் ஒவ்வொரு குடும்பக் கார்டுக்கும் இவ்வளவு எண்ணெய் எ று விநியோகிப்பதன்மூலம் இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதைச் சரிப்படுத்த முடியும். உண்மையிலே நாம் உற்பத்திசெய்வதை கறாராக உபயோகப்படுத்தினால், கடலெண்ணெய் இங்கே மிச்சம் இருக்கும். அப்படி விதை ப்ரொக்யூர் பண்ணி, எண்ணெயை அரசாங்கமே எடுத்து, நியாயவிலைக் கடைகள் மூலமாக குடும்பக் கார்டுக்கு எவ்வளவு என்று பங்கிட்டுக் கொடுக்க அரசு உடனே நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று ஓரளவு பற்றாக்குறை இருக்குமானால் நியாய விலைக் கடைகளின் மூலமாக, பங்கீட்டு முறையில்தான் தர வேண்டிய அவசியம் ஏற்படும். மகாராஷ்டிரம், ஆந்திரா, குஜராத் ஆகிய மாநிலங்களிலிருந்து நம்முடைய பற்றாக்குறையை ஈடுசெய்கின்ற வகையில், வரவழைக்க வேண்டிய தன்மைகள் இருந்து வந்தன. எதிர்பார்த்த அளவு உற்பத்தி அங்கும் இல்லையென்று அறிக்கை வந்தது. மேலும், குஜராத் அரசானது தன்னுடைய மாநிலத்தில் உற்பத்தியாகும் கடலெண்ணெயில் 70 சதவீதத்தை அந்த மாநிலத்திலேயே விற்பனை செய்வது என்றும் முடிவெடுத்தார்கள். மத்திய அரசு, குஜராத் அரசு விதித்த தடையை நீக்கவேண்டுமென்று அவர்களுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறது. இருந்தாலுங்கூட நாம் இங்கே இருக்கிற வித்துக்களையும் அரசு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகத் திரட்டி, வெளி மாநிலங்களிலிருந்து வரவழைப்பதையும் வரவழைத்துத்தான் நியாய விலைக் கடைகள் மூலமாகப் பங்கீட்டுத் தருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் எண்ணெய் பற்றாக்குறைக்கும் விலை ஏற்றத்திற்கும் காரணம் எண்ணெய் வித்துக்களுடைய உற்

பத்திக் குறைவு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 6 கோடி பனை மரங்கள் இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. எனவே, அந்தப் பனங்கொட்டையிலிருந்து தயாராகிற எண்ணெய்த் தொழிற்சாலையை தமிழகத்தில் அரசு நிறுவி, சமையல் எண்ணெய் பற்றாக் குறையைப் போக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற ஒரு யோசனையை அரசு ஆராய்ந்து வருகிறது. மேலும் இப்பொழுது ஓரளவு எல்லோரும் பயன்படுத்துகிற அளவுக்கு பாமாலின எண்ணெய் நடைமுறையில் வந்து கொண்டிருக்கிறது. 3,000 டன்கள்தான் இப்பொழுது மத்திய அரசு ஒதுக்கித் தருகிறது. அதை 5,000 டன்களாக ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வெளி நாடுகளிலிருந்து மத்திய அரசு இறக்குமதி செய்கிறது. கொஞ்சம் அதிகமாக இறக்குமதி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். காரணம், பாமாலின் எண்ணெய் கிட்டத்தட்ட ரூ 8½ அளவிற்கு விற்கிறது. மற்ற எண்ணெய்கள் எல்லாம் ரூ. 12, ரூ. 15, ரூ. 18, ரூ. 20 என்று அளவுக்கு விற்கிறது. ஆகவே பாமாலின் எண்ணெயை பயன்படுத்துகிற பழக்கத்திற்கு மக்கள் வந்து விட்டதன் காரணமாக அதை அதிகமாக இறக்குமதி செய்வதன் மூலமாக இங்கேயிருக்கிற தட்டுப்பாட்டை நீக்கலாம் என்றும் மத்திய அரசுக்குத் தெரிவித்து உள்ளோம். நம்முடைய மாநிலத்திற்கு கொடுக்கப்படுகிற பங்கீட்டையும் கொஞ்சம் அதிகரிக்க வேண்டுமென்று வற்புறுத்தி உள்ளோம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடலெண்ணெய் விலை வாங்கமுடியாத அளவுக்கு இருக்கிறது. அதே நேரத்தில் கிராமங்களிலிருக்கிற கூட்டுறவுக் கடைகளுக்கு பாமலின் எண்ணெயை அதிக அளவிலே கோட்டா சிஸ்டத்திலே கொடுத்தால், கிராம மக்களுக்கு அந்த பாமலின் எண்ணெய் கொடுத்தால் அந்தக் குறை தீரும். ஆனால் கிராமக் கூட்டுறவுக் கடைகளில், பாமாலின் எண்ணெய் எப்பொழுது கேட்டாலும் கோட்டா வரவில்லை, கிடைக்கவில்லையென்ற அந்தக் குறைபாடு இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் கிராமக் கூட்டுறவுக் கடைகளில் பாமலின் எண்ணெய் தாராளமாகக் கிடைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது நமக்குக் கொடுக்கப்படுகின்ற பாமாலின் எண்ணெயை நியாயவிலைக் கடைகளின்மூலமாகவும், கூட்டுறவுக்

கடைகளின் மூலமாகவும் பங்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம். அப்படிப் பங்கீட்டுக் கொடுக்குபோது ஒருவருக்கு 2 கிலோ தான் கொடுக்க வேண்டும் என்று வரையறுத்திருக்கிறோம். சில பேர்கள் அதிகமாக வாங்கிப்போய் கலப்படம் செய்வதனால் ஒருவருக்கு, ஒரு குடும்பக் கார்டுக்கு 2 கிலோ தான் கொடுக்கவேண்டும் என்று கட்டுப்பாட்டை ஏற்படுத்தி இருக்கிறோம். எந்த இடத்திலும் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்படுமானால், இருக்கிற எண்ணெயை பகிர்ந்து கொடுப்பதற்கு முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாமாலின் ஆயில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் உள்ள ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு கிலோ 6·25-க்கு வாங்கி ஏறத்தாழ சுமார் 8·25-க்கு விற்கப்படுகிறது. ஆனாலும் ரேஷன் கார்டுகளுக்குக் கிடைப்பதில்லை என்று பரவலாகப் பேசப்பட்டுவருகிறது. அதே நேரத்தில் அந்தக் கடைகளிலே இருந்து தனியார் கடைகளுக்கு அந்த எண்ணெய் விற்கப்பட்டு அங்கே கிலோ 16 ரூபாய் வரையிலும் விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு தீவிரமாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த பாமாலின் எண்ணெய் இப்போது பொதுமக்கள் புழங்குகின்ற அளவிற்கு வந்திருப்பதால், அதைப் பரவலாக நியாய விலைக் கடைகளின் மூலம் தருகிறோம. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிலபல குறைபாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் கண்காணித்து கட்டுப்படுத்தக் கூடிய நிலை இருக்கின்றது. அவைகளை மேற்பார்வையிட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு இருக்கிறோம். ஆகவே ஒரு குடும்பக் கார்டுக்கு 2 கிலோ தான் தரவேண்டும். அதையும் மீறியோ அதிக விலைக்கோ விற்பதைக் கட்டுப்படுத்தவும், நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை குறிப்பிட்ட இடத்தில் இருக்குமானால், உறுப்பினர்கள் அதைச் சுட்டிக் காட்டினால் அதுபற்றிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக மேற்பார்வையிட்டு, வெளியிடங்களில் விற்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தும் கூட அதை மீறினால் அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறோம்.

கள்ளச் சந்தையில் சீனி விற்பனை.

*வினா எண். 417—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டகசாலை, மம்சாபுரம் கூட்டுறவு பண்டகசாலைகளில் பொது

மக்களுக்கு வழங்கப்படவேண்டிய சீனியை வழங்காமல் கள்ளச் சந்தையில் விற்பதாக 10–9–80, 23–10–80 தேதிகளில் அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிர்வாகிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம் 28–10–1980-ம் நாளிட்ட புகார் ஒன்று அரசுக்கு வந்துள்ளது.

(ஆ) புகார்களைக் கவனமாக ஆய்வு செய்த இராமநாதபுர மாவட்ட ஆட்சியர், அந்தக் கூட்டுறவுகளின் தலைவர்கள், இயக்குநர்கள், மற்றும் விற்பனையாளர் இவர்கள் மீது தக்க நீதி மன்றத்தில் வழக்கு தொடருமாறு ஆணை பிறப்பித்துள்ளார்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இப்படிக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் தலைவர்களாக இருக்கக் கூடியவர்கள் ஒன்று அரசியல் கட்சியின் மெம்பர்களாக இருக்கிறார்கள், அல்லது ஜாதியின் பெயரை வைத்து சொந்தபந்தம் கொண்டாடி, அரசு நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். குற்றச்சாட்டுகளின் பேரில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நம் நாட்டில் சட்டவிதிகள் இல்லாமல் இருக்கிறதா?

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பாக துணை வினாக்களைக் கேட்க வேண்டும். திரு. தாமரைக்கனி * * * * என்று கூறிய பகுதி நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர்களே இப்படி சீனி கடத்தல், பதுக்குதல், கள்ள வாணிபம் செய்பவர்களுக்கு கடுமையான முறையில் தண்டனை கொடுக்கத்தக்க அளவுக்குச் சட்டம் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டகசாலை பற்றியும், மம்சாபுரம் கூட்டுறவு பண்டகசாலை பற்றியும் புகார் வந்துள்ளது. அந்தப் புகார் பற்றி விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே தவறு செய்வது என்பதும் நல்லது செய்வது என்பதும் அவரவர்களுடைய தனிப்பட்ட இயல்பைப் பொருத்து இருக்கிறதே தவிர, ஒரு கட்சியோடு தொடர்புபடுத்துவதோ, அல்லது ஒரு ஜாதியோடு தொடர்புபடுத்துவதோ பொருந்தாது. அது தனிப்பட்ட முறையிலே எல்லா நிலைகளிலும் இருக்கக்கூடும். ஆனால் அங்கே ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலையில் சர்க்கரை விநியோகத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளது என்பதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி செய்தார். இக்குற்றங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவுச் சங்கத்தில் தலைவர், இயக்குநர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோர் மீது நீதி மன்றத்தில் வழக்குத் தொடர ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது மேல் நடவடிக்கை கவனிக்கப்பட்டு வழக்குத் தொடருவதற்கான முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதே போன்று ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம் மம்சாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையிலே சர்க்கரை விநியோகத்தில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜூலை, ஆகஸ்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு, முறையாக வழங்குகின்ற அளவுக்கு அதிகமாக சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே கள்ளச்சந்தையில் விற்கப்பட்டு இருக்கின்றது. மேலும் சில அட்டைதாரர்களுக்கு சர்க்கரை விநியோகம் செய்ததாக தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மீதும், தலைவர் மீதும், இயக்குநர்கள் மீதும், விற்பனையாளர்கள் மீதும் தண்டனை கிடைக்கத்தக்க அளவுக்கு வழக்குத் தொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் முறையாக நடைபெற்று வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சீனி அதிகமாகச் சாப்பிடுவதால் சர்க்கரை வியாதி நிறைய பேர்களுக்கு வருவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, சர்க்கரை குறைவாகச் சாப்பிடுவதற்காக மக்களிடையே பிரச்சாரம் செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல. மூலக்கேள்வி கள்ளச்சந்தையில் சீனி விற்பது பற்றியதாகும்.

குடியாத்தம் நகரில் தீப்பெட்டித் தொழில் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 526—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் ஆயிரக்கணக்கானவர் ஈடுபட்டுள்ள தீப்பெட்டித் தொழிலை அரசு துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) குடியாத்தம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு சேவைபுரிய கீழ்க்கண்ட மூன்று சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(1) குடியாத்தம் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குடியாத்தம்.

(2) வளத்தூர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், வளத்தூர்.

(3) பேரறிஞர் அண்ணா சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குடியாத்தம்.

முதற்கூறிய இரண்டு சங்கங்களும் இயங்கி வருகின்றன. மூன்றாவது சங்கம் விரைவில் செயல்படத் துவங்கும். மேற்குறிப்பிட்ட மூன்று சேவை சங்கங்களும் 300 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு சேவை புரிய இயலும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச கூலிதான் கொடுக்கப்படுகிறது. அதை மாற்றி நியாயமான முறையில் அவர்களுக்கு கூலி கொடுப்பதற்கு வகை செய்கிற வகையில் அந்தக் கூட்டுறவு சொசைடிகளுக்கு அறிவுரை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அரசு ஆவன செய்யும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டித் தொழில் குடிசைத் தொழிலாக இருக்கின்ற காரணத்தால், அதற்கு போடப்பட்டு இருக்கும் இரண்டு சதவீத விற்பனை வரியை நீக்கிவிட வேண்டும் என்றும், அந்த விற்பனை வரியால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்றும் கூறி அரசுக்கு அவர்கள் மனு செய்து இருக்கிறார்கள். ஆகவே

அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையை குடிசைத் தொழிலாகச் செய்பவர்களுக்கு, கூட்டுறவுத் துறை மூலமாகச் செய்பவர்களுக்கு, இந்த வரி விதிப்பைக் குறைத்து, அப்படிப்பட்ட தொழிலில் அவர்கள் அதிக அளவில் ஈடுபட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

மதுரை பால்வள நிறுவனம்.

*வினா எண். 527—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பால்வள நிறுவனத்தில் சென்ற ஆண்டு (1978-79) ஏற்பட்ட இழப்பு (loss) எவ்வளவு?

(ஆ) அதற்கான காரணங்களை அரசு ஆய்ந்து மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மதுரை பால்வள நிறுவனத்தில் சென்ற ஆண்டு (1978-79) இழப்பு ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

திரு. குமரி அனந்தன்: அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இழப்பு ஏதும் இல்லை என்கிற பதிலைத் தந்து இருக்கிறார்கள். மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆயினும், மஸ்தூர் போன்றவர்களுக்கு 2·85 ரூபாய் கூலியும், மற்றவர்களுக்கு 4 ரூபாயும் கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அதேபோன்று, சொசைடிகளில் இருந்து வாங்கும் பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 1.35 கொடுக்கப்படுகிறது என்றும், விற்கும் விலை ரூபாய் 2.10 என்றும் இருப்பதால், லாபம் எவ்வளவு கிடைத்து இருக்கிறது என்கிற தகவலை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இழப்பு இல்லை என்று சொல்லிய காரணத்தால், அந்தக் கணக்குகளை வைத்துக்கொண்டுதான் சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதினேன். இப்போது வேலை நிறுத்தம் நடந்துகொண்டு இருக்கிற நேரத்தில் அங்கே வேலை செய்து வருகிற தொழிலாளர்கள் ரூபாய் 4 பெற்றுக்கொண்டு இருக்கிற நேரத்தில், வெளியே இருந்து புதிதாக எடுத்த ஆட்களுக்கு ரூபாய் 10 கொடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மதுரை பால்வள நிறுவனத்தில் தற்போது வேலைநிறுத்தம் இல்லை. வேலைநிறுத்தம் இல்லாமல் சரியாக வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, மதுரை பால்வள நிறுவனத்தில், ஏராளமான வெண்ணெய், நெய் போன்றவைகள் அதிகாரிகளின் கவனக்குறைவால் வீணாகி, அவை குழிதோண்டி புதைக்கப்பட்டதாக அரசுக்கு புகார் வந்திருக்கிறதா ? அப்படிப் புகார் வந்திருந்தால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற விவரங்களில் அந்தத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஏதாவது விவரம் இருந்தால், கொடுத்தால், அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

காஞ்சிபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை.

* வினா எண். 528—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை வளர்ச்சிக்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 1969 ஆம் வருடம் காஞ்சிபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை 4 வாடகை தொழிற் கூடங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 4 தொழிற்கூடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும் 10 சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் சிட்கோ நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகின்றன. உபயோகப் படுத்தப்படாமல் உள்ள நிலங்களை சீர்திருத்தப்பட்ட மனைகளாக மாற்றியமைக்க 'சிட்கோ' நிறுவனத்துக்கு ஒதுக்கீடு செய்வது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த ஒரிக்கை பகுதி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படாததால் தொழில்கள் அங்கே வளர வாய்ப்பில்லை. ஆகவே, அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு முன் வருமா ? வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

உத்தமசோழபுரம் சுரபுரநாதஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள்.

* வினா எண். 529—செல்வி பி. விஜயலட்சுமி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதஸ்வாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளது ?

(ஆ) அதை தனியார் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்திருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வீரபாண்டி தொகுதி உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதஸ்வாமி கோயிலுக்கு இப்பொழுதுள்ள மொத்த நிலங்கள் 10.73 ஏக்கர் உள்ளன. (நன்செய் 1.17 மற்றும் புன்செய் 9.56).

(ஆ) 1.42 ஏக்கர் புன்செய் நிலம் 14 நபர்களால் குடிசைகளைபோட்டு ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. ஆலய அர்ச்சகர் வசம் 6.54 ஏக்கர் உள்ளது. கருணா ரோலிங் மில் பங்குதாரர் கே. பி. கணேசன் என்பவரிடம் 2.48 ஏக்கர் உள்ளது.

செல்வி பி. விஜயலட்சுமி : மாண்புமிகு தலைவரவர்களே, அறநிலையக் கமிட்டி சிபாரிசின் பேரில் 'ஸ்டீல் ரோலிங்' கம்பெனிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நிலம் எத்தனை

ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது? அந்த குத்தகை காலம் முடிந்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்த ரோலிங் மில்லுக்கு 1—7—1972 முதல் 30—6—1977 முடிய 5 ஆண்டு காலத்திற்கு, ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. குத்தகை முடிவடைந்த பின் நிலம் ஒப்படை செய்யப்படவில்லை. ஆகவே, சேலம் கூடுதல் சபார்டினேட் ஜட்ஜ் வழக்குமன்றத்தில் தாவா தொடரப்பட்டிருக்கிறது. அந்த தாவா நிலுவையில் உள்ளது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன கருணா ஸ்டீல் ரோலிங் மில் சம்பந்தப்பட்ட இடம் ஏற்கெனவே அறநிலையத் துறையால் அனுமதிக்கப்பட்டு, அங்கே பெர்மனண்டாக தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அங்கே அந்த மில் தொடர்ந்து இயங்குகின்ற காரணத்தால் அந்த நிலத்தின் 'லீஸ்' காலத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே என்னிடத்தில் கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதசுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர்? அதிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களா என்பது. அதற்கு பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு இந்த கருணா ஸ்டீல் ரோலிங் மில்லைப்பற்றிய குறிப்புகள் தெரிந்திருக்கின்றன என்று தெரிய வருகிறது. அதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டபோது 5 ஆண்டு குத்தகை என்றுதான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. குத்தகை ஒப்பந்தம் செய்கிறபோது, குத்தகை முடிந்த பின்னால் நிலத்தை திருப்பித் தந்துவிட வேண்டுமென்று விதிகள் போடப்படுவதுதான் வழக்கம். ஆகவே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகிற விவரத்தின்படி நிரந்தரமாக அந்த இடத்தை அவர்களுக்கே பராதீனம் செய்து கொள்ள விதிகள் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அப்படி இருந்தால் வழக்கு மன்றத்திற்கு அறநிலைய நிர்வாகிகள் போயிருக்க முடியாது.

சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி.

*வினா எண். 530—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நிரந்தரமாக ஒரு பொருட்காட்சி ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தீவுத் திடலில் நிலையான பொருட்காட்சி அமைப்பதற்கு 1981—82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள ஒதுக்கீடு (Token Provision) ரூ. 1,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு மற்றும் திட்ட விவரங்களை அரசுக்கு அளிக்குமாறு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, நிரந்தரமான பொருட்காட்சி அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். 1978 ஆம் ஆண்டு தீவுத் திடலில் நடைபெற்ற பொருட்காட்சியில் மின்சார வேலைகள் சம்பந்தமாக காண்ட்ராக்டுக்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? 1981 ஆம் ஆண்டு அதாவது இப்போது நடந்து முடிந்ததே அந்தப் பொருட்கட்சிசாலையில் மின்சார வேலைக்கான காண்ட்ராக்டுக்கு கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி தீவுத் திடலில் நிரந்தரமான பொருட்காட்சி அமைப்பது பற்றியது. அதற்கான தகவலைச் சேகரித்து விடையளித்திருக்கிறேன். வேறு விவரங்களை அவர்கள் பெற வேண்டும் என்றால் அதற்கு தனியாகக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்குதல்.

*வினா எண். 531—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம் வத்திராயிருப்பு பிர்க்காவிலுள்ள பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) மேற்படி செயற்குறிப்பின் முழு விவரம் என்ன?

(இ) மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வருகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ), (ஆ) மற்றும் (இ) : திருவில்லிப்புத்தூர் வட்டம், வத்திராயிருப்பு பிர்க்காவிலுள்ள பிளவக்கல் அணைப்பகுதியை இராமநாதபுரம் மாவட்ட உலாத் தலமாக மாற்றுவதற்கு அரசு போக்குவரத்துத் துறையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர் இந்த பிளவக்கல் அணைப் பகுதியை மாவட்ட உலாத்தலமாக மாற்றுவதற்கான திட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளார். அவரது அறிக்கையின் மீது மாநிலக் குழுவின் (State Level Committee) பரிந்துரைகளைப் பெற்று, தக்க நடவடிக்கைகளுக்காக ஆணை பிறகு பிறப்பிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் மூலமாகத்தான் இது மாவட்ட டூரிஸ்ட் சென்டராக ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிளவக்கல் அணைக்கட்டில் பேச்சிக்கனி என்ற ஒரு இடம் இருக்கின்றது. அங்கே தேக்கடி போன்று யானைக் கூட்டங்களும், கருமந்திக் கூட்டங்களும், மான் கூட்டங்களும், புலிக் கூட்டங்களும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்தில் படகு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தமிழகத்திலே கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்ற அற்புதமான சுற்றுலாப் பகுதிகளில் இயற்கைக் காட்சிகள் நிறைந்த பகுதிகளிலே ஒன்று இந்த பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதியாகும். அங்கே உள்ள மலைத் தொட்டில் போன்ற இடத்திலே மூன்று அணைகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அற்புதமான அணைகளுக்குள்ளே நாம் படகிலே சென்றால் தேக்கடியில் காண்பது போன்று மிருகங்களை இருபுறமும் காணுகின்ற வாய்ப்பு நம்முடைய எல்லைக்குள்ளேயே இருக்கின்றது. ஆகவே அதை மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாக ஆக்க வேண்டும் என்று அரசு இப்போது முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிற போதே அது இயற்கைச் சூழ்நிலை உள்ள அற்புதமான இடமாக இருக்கின்றது என்று கூறினார்கள். அப்படி இருந்தும் அதை ஏன் மாவட்ட டூரிஸ்ட் சென்டராக ஆக்க வேண்டும், இந்திய அளவில் ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக ஏன் அதை ஆக்கக் கூடாது?

அந்த இடத்தில் * * * *

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இவ்வாறு குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடாது. ஆகவே, இதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, அந்த இடத்தை மாநில டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதை மாநில அளவிலே உள்ள ஒரு சுற்றுலா தலமாக ஆக்க வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். ஆனால் பொருளாதார சூழ்நிலையை மனதிலே கொண்டு அது மாவட்ட சுற்றுலாத் தலமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு அதை மாநில சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு இன்னும் சொல்லப் போனால் குற்றாலத்திற்குப் போகிற வழியிலே அது இருப்பதால் அதை இந்திய சுற்றுலாத்தலமாகக் கூட ஆக்குவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, அதைப்பற்றி பின்னாலே நாம் பரிசீலிக்க முடியும்.

அரசு விவசாய பண்ணைகளில் பணிபுரியும் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.

***வினா எண். 532— திரு ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு விவசாயப் பண்ணைகளில் அரசின் ஆணைப்படி விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் வழங்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆணை பிறப்பித்த நாளிலிருந்து பணியாற்றியவர்களுக்கு சம்பள பாக்கி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு விவசாயப் பண்ணைகளில் அரசின் ஆணைப்படி விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(ஆ) ஆணை பிறப்பித்த நாளிலிருந்து பணியாற்றியவர்களுக்கு சம்பள பாக்கி வழங்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

[முற்பகல் 9-50]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த விவசாயப் பண்ணைகளில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் ஆங்காங்கு சங்கம் வைத்து கோரிக்கைகளை விட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசு நிர்ணயம் செய்த கூலியை வழங்க வேண்டும் என்று உத்தரவு இட்டிருக்கிறார்கள். அரசு உத்தரவிற்குப் பிறகும், மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவிற்குப் பிறகும் கூட, சில இடங்களில் இந்தக் குறைந்தபட்சக் கூலியைக் கொடுப்பது இல்லை. உதாரணமாக கோவில்பட்டியில் இருக்கக்கூடிய லேபர் அசிஸ்டென்ட் என்னும் ஸ்கில்ட் தொழிலாளர்களுக்கு 3¾ ரூபாய் தினக் கூலியாக கொடுக்கிறார்கள். அவர்கள் 10, 15 ஆண்டுகளாக வேலை செய்பவர்கள். அதேபோல வடாற்காடு மாவட்டத்தில் செங்கம் பண்ணையிலும் இப்படி போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட இடங்களை கொஞ்சம் கூர்ந்து கவனித்து, அவர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை அரசு நிர்ணயம் செய்தபடி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் மத்திய அரசின் பண்ணை. நம்முடைய மாநில அரசின்கீழ் இருக்கக்கூடிய பண்ணைகளில் குறைந்தபட்சக் கூலி, அரசு நிர்ணயித்துள்ளவாறு வழங்கப் பெற வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது வரையில் அப்படி வழங்கப்பெறாமல் இருந்தால், இந்த ஆணை பிறப்பிக்கப்பெற்ற தேதியிலிருந்து அவர்களுக்கு சம்பள பாக்கியையும் வழங்க ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு சம்பளம் வழங்குவது மாத்திரம் அல்ல, அவர்கள் அங்கே 10,15 ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கவும் அரசு முன் வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும்.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அரசு பண்ணைகளில், பேச்சுப் பாறையில் இருக்கும் அன்னாசி பண்ணையிலே வேலை செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு காலாகாலத்தில் சம்பளம் கொடுக்கப் பெறுவது இல்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்றதா? அப்படி இல்லையென்றாலும் கூட, இனிமேலாவது அவர்களுக்கு காலாகாலத்தில் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து தலைவர் அவர்களே, அதைப்பற்றி இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெறவில்லை. உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் மீது விசாரித்து அரசு அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பல்கலைக் கழகம் ஒன்று என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது தமிழகத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய பல்கலைக் கழகங்களில் ஒன்றாக இருக்கிறது. அது ஒரு தனி சாம்ராஜ்யம் போல் தனி சிற்றரசு போல் நடந்து கொண்டு வருகிறது. அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலிகளை ஒழுங்காகக் கொடுக்காமல் அவர்கள் அங்கே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவசாயப் பண்ணைகளைப்பற்றி கேள்வி, நீங்கள் சொல்வது விவசாயப் பல்கலைக் கழகம் சம்பந்தமாக......................

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, அந்தப் பல்கலைக் கழகத்திலேயே, பண்ணைகளும் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் பல ஆண்டுகளாக வேலை செய்தும் கூட, அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்சக் கூலியை அவர்கள் இன்னும் பெறாமல் இருக்கிறார்கள். அந்தப் பல்கலைக்கழகம் ஒரு சிற்றரசு போல் தன் இஷ்டமாக நடந்துக் கொள்கிறது. ஆகவே அமைச்சர் விவர்கள் அதை பரிசீலித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தோ, அல்லது சட்டத்திலே அதற்கான திருத்தம் கொண்டு வந்தோ, அந்த தொழிலாளர்களுக்கு உதவி செய்ய முன் வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்ற புகார்கள் எதுவும் அரசிற்கு வரவில்லை. தகவல் அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

[1981 மார்ச் 28

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னார்க்காடு ஜில்லாவில், மிராளூர் என்ற இடத்தில் அரசு விவசாயப் பண்ணை ஒன்று இருக்கிறது. அந்தப் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, அரசு உத்தரவிட்டும் கூட, குறைந்தபட்சக் கூலி, நிர்ணயம் செய்யப்பெற்றவாறு கொடுக்கப்பெறுவது இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததா? அப்படி இருந்தால் என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போன்ற நிலை அரசு ஆணை பிறப்பிக்கப்பெறுவதற்கு முன்பு இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பண்ணைகளுக்கு தகவல் வருவதற்கு காலதாமதம் ஆகிய காரணத்தினால் அபபடி கொடுக்கப்பெறாமல் இருந்தது. இப்போது அப்படிப்பட்ட புகார்கள் நிறைய வந்ததின்பேரில் உடனடியாக குறைந்தபட்சக் கூலியை அவர்களுக்கு கொடுக்கப் பெறவேண்டும் என்று எல்லா விவசாயப் பண்ணைகளுக்கும் ஆணை அனுப்பப்பெற்றிருக்கிறது. அப்படி இதுவரையில் கொடுக்காமல் இருந்தால், ஆணை வழங்கப் பெற்ற தேதியிலிருந்து அந்த பாக்கியையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவகளே, விவசாயப் பண்ணையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியாகவா அல்லது மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டிருக்கிறத ? எந்த விதத்தில் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கும், மற்றைய மாவட்டங்களுக்கும் வேறுபாடு இருக்கிறது.

போடியிலுள்ள மண்வளப் பாதுகாப்பு அலுவலகம்.

*வினா எண் 533—திரு கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போடியில் இருக்கும் மண்வளப் பாதுகாப்பு அலுவலகத்தை இராமநாதபுரத்திற்கு மாற்றுவதற்கு திட்டம் ஏதும் அரசு செயற்குறிப்பில் இருக்கிறதா?

1981 மார்ச் 28]

மாண்புமிகு திரு. கா காளிமுத்து : இல்லை.

மதுரை—கம்பம்-குமுளி —கோட்டயம்—நெடுஞ்சாலை.

*வினா எண். 534—திரு. ஆர். டி. கோபாலன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கம்பம், குமுளி, கோட்டயம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதுரை-கம்பம்-குமுளி-கோட்டயம் நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படவில்லை. தொண்டி-மதுரை-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பகுதி சாலையான மதுரை-தேனி சாலை அடங்கும்.

வேதாரண்யம் பேரூராட்சியின் திட்டங்கள்.

*வினா எண். 535—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பேரூராட்சியின் திட்டங்களை நிறைவேற்ற அரசு உதவி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் பேரூராட்சியில் திட்டங்களை நிறைவேற்ற அரசு உதவி கோரி விண்ணப்பம் வரவில்லை. ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரண்யம் பேரூராட்சி எல்லைக்குள் 1979 ஆம் ஆண்டில் அதிக மழை வெள்ளம் காரணமாக சாலைகள், மற்றும் தெருக்களின் சேதத்தை சீர் செய்வதற்காக ரூ. 8,36,000மும் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை சீர் செய்வதற்காக ரூ. 75,000மும் ஆக மொத்தம் ரூ. 9,11,100 நிதி ஒதுக்கீடு கோரி தலைமைப் பொறியாளர், வெள்ள நிவாரணத் திட்டம் அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரால் செயற்

குறிப்பு அனுப்பப்பட்டது. மேலும் நிதி ஒதுக்கீடு இன்மையால் இந்த பேரூராட்சி மட்டுமன்றி வேறு முன்மொழி அனுப்பப் பட்ட எந்த பேரூராட்சிக்கும் கட்டிடங்களையோ சாலை களையோ சீர்செய்வதற்காக தலைமைப் பொறியாளரால் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம்

*வினா எண். 536—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூரில் அமராவதி ஆற்றின் குறுக்கே பழுதடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; (அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம். கரூரில், அமராவதி ஆற்றின் குறுக்கே பழு தடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் பணி மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு திருவாளர்கள் தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இப் பணி 30—4—82 அன்று முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

திரு. எம். சின்னசாமி : தற்போதுள்ள இந்தப் பாலம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. ஆகவே புதுப் பாலம் கட்டிய வுடன் இந்தப் பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தற்போதுள்ள பாலம் 14⅜ டன் எடையுள்ள வாகனங்களை மட்டுமே தாங்கக்கூடிய அளவிற்கு இருக்கிற காரணத்தினால்தான் 70 டன் எடை தாங்கக் கூடிய அளவிற்கு பாலம் ஒன்றரை ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்குண்டான திட்டம் தீட்டப்பட்டு ஏற்கெனவே கட்டுமானக்கழகத்திற்கு கொடுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டு விட்டன. இப்பணி 30—4—82-ல் முடிந்துவிடும்.

ஒன்றியப்பள்ளிகளிலுள்ள ஆயாக்கள் பதவி.

*வினா எண். 537—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) ஒன்றிய பள்ளிகளில் ஆயா (மதியம் உணவு சமைக்க ஆயாக்கள்) பதவிகள் காலி ஏற்படும் போது அந்த இடத்திற்கு புதிதாக நியமனம் செய்யப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மாற்று ஏற்பாடு என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ): அரசு ஆணையின்படி பள்ளியில் நியமிக்கப்படும் நடத்தாட்டிகள் மதிய உணவு சமைக்கும் பணிக்காக ஏற்படுத்தப்படவில்லை. அவர்கள் பணி பள்ளிகளுக்கு பெண் குழந்தைகளை அழைத்து வருவதுதான். எனினும் அவர்கள் தலைமை ஆசிரியர்களுக்கு தங்களுடைய அன்றாட பணி தடைப்படாமல் மதிய உணவு குழந்தைகளுக்கு கொடுப்பதில் உதவியாக இருக்கலாம்.

திரு. தி. கா. நல்லப்பன் : ஏற்கெனவே பள்ளிக்கூடங்களில் ஆயாக்கள் இருந்து அவர்கள் மதிய உணவு சமைத்துப்போட்டு வயதாகிவிட்ட காரணத்தால் அவர்களை வேலையிலிருந்து நிறுத்தியிருக்கிற காரணத்தால் அந்த அந்தப் பள்ளிக்கூடத்தில் உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் மதிய உணவு சமைக்கும் நிலை இருக்கிறது. அப்படி சமைக்கிற காரணத்தால் படிப் பின் தரம் குறைகிறது. அதை அரசாங்கம் பரிசீலிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அறுபது வயதுவரையில் அவர்கள் பணியில் இருக்கிறார்கள். 60 வயதுக்குப் பிறகு தான் அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகம் : ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங் களில் ஆயாக்கள் இடங்கள் காலியாக இருக்க்கூடிய பள்ளிக்கூடங் கள் எவ்வளவு? அவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசு மேற் கொண்டு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தனிக் கேள்வி போடவும்.

[1981 மார்ச் 28

கரூர் நகராட்சி காமராஜர் தினசரி மார்க்கட் கடைக்காரர்களின் கோரிக்கை.

*வினா எண். 538—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் கரூர் நகராட்சி காமராஜர் தினசரி மார்க்கெட்டில் கடைக்காரர்களிடமிருந்து அவர்கள் கடை வைத்துள்ள இடங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : கரூர் நகரில் அந்த மார்க்கட் இருக்கும் இடத்தில் ரோடு போட கரூர் நகராட்சி அங்குள்ள கடைக்காரர்களை காலி செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தில் உள்ள கடைக்காரர்கள் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக அங்கே வியாபாரம் செய்துவருகிற ஏழை எளிய காய்கறிக் கடைக்காரர்கள் ஆவார்கள். எனவே அந்த இடத்தை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கரூர் நகராட்சியைச் சேர்ந்த காமராஜ் தினசரி மார்க்கெட் கடைக்காரர்களிடமிருந்து அவர்கள் கடை வைத்துள்ள இடத்தை அவர்களுக்கு பட்டா செய்து தரும்படி அரசுக்கு யாரும் மனு செய்யவில்லை. ஆனால், காமராஜ் தினசரி மார்க்கெட்டிற்கு எதிர்ப்புறம் வெங்கடேஸ்வரா ரோட்டின் மேற்புறம் சிறு கடை வியாபாரிகள் மேற்பட்ட இடத்தை பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே மனு அனுப்பியிருக்கிறார்கள். அந்த இடத்திலே நிரந்தரமாக கடைகள் அமைக்க நகராட்சி திட்டமிட்டுள்ளது. அதன் காரணமாக, பட்டா செய்து கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கடைகளைக் கட்டும்போது, ஏற்கெனவே உள்ள கடைக்காரர்களுக்கு அந்தக் கடைகளைக் கொடுப்பதற்கு அரசு முன்னுரிமை கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்படும்.

1981 மார்ச் 28]

பாளையங்கோட்டை அரசு மருத்துவமனை.

*வினா எண் 539—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்ட பெரிய மருத்துவமனையான பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் மருந்துகள் பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் 1980 இல் சுமார் 6 மாதங்களுக்கு மருந்து தட்டுப்பாடு இருந்தது. இதற்குக் காரணம் சில மருந்துகளை பொதுத்துறையிலுள்ள மருந்து தயாரிக்கும் கம்பெனிகள், லோகோ முத்திரையுடன் தயாரித்து அளிக்க முடியாமையாகும். மற்றொரு காரணம் செவிலியருக்கும், மருந்தாளுநர்களுக்கும் எழுந்த சில கொள்கைப் பிரச்சினைகள் ஆகும்.

(ஆ) இப்பொழுது இம்மருத்துவமனைக்கு வேண்டிய எல்லா மருந்துகளும் பொதுத்துறையில் மருந்து தயாரிக்கும் கம்பெனிகளிடமிருந்து பெறப்படுகின்றன. மற்றும் செவிலியர் மருந்தாளுநர் பிரச்சினைகளும் தீர்ந்து விட்டன. ஆகையால் மருந்து தட்டுப்பாடு ஏதுமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாளையங்கோட்டை மருத்துவமனை அங்குள்ள மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்ட ஒரு மருத்துவ மனையாகும். இன்னும் சொல்லப்போனால், அந்த சுற்று வட்டாரத்திலே பெரிய மருத்துவமனையாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட மருத்துவமனையிலே மருந்துகள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதற்கு அரசு உத்தரவாதம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிந்து, இப்போது மருந்துகள் ஒழுங்காக கிடைத்துக்கொண்டிருக்கின்றன. 1980 ஆம் ஆண்டு முதலிலே அதாவது பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில், அந்த நேரத்தில் ஏற்பட்ட செவிலியர்களுக்கும் மருந்தாளுநர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டதன் விளைவாகவும், லோகோ முத்திரையை அப்போது தருகிறோம் என்று கம்பெனிகள் ஒத்துக்கொள்ளாத காரணத்தினாலும் ஏற்பட்ட

பிரச்சினை. அதற்குப் பிறகு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, நல்ல வகையிலே மருந்துகள், தேவைப்படுகின்ற அளவுக்கு இப்போது கிடைத்துக்கொண்டிருக்கிறது.

குத்தாலம் அரசு மருத்துவமனையிலுள்ள மகப்பேறு பிரிவுக் கட்டிடம்.

*வினா எண் 540— திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் மாயூரம் வட்டம் குத்தாலம் அரசு மருத்துவமனை மகப்பேறு பிரிவுக்கட்டிடம் பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல் பழுதான நிலையில் உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பழுது பார்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இப்பிரிவைப் பழுதுபார்க்க ரூபாய் 15,000-க்கு மதிப்பீடு தயாரித்து பொதுப்பணித்துறையினருக்கு மருத்துவப்பணி மற்றும் குடும்ப நல இயக்குநர் அனுப்பியுள்ளார்.

திரு. இரெ இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலத்திலே அரசினர் மருத்துவமனை, மகப்பேறுபிரிவு கட்டிடம் கிட்டத்தட்ட 3 ஆண்டு காலமாக பழுதுபார்க்கப்படவில்லை. அந்தக் கட்டிடத்தை உடனடியாக பழுதுபார்க்க வேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட மருத்துவ அலுவலருக்கும் கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறேன். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் அவர்களுடைய பதிலிலே, அந்தக் கட்டிடம் பழுது பார்க்கப்படும் என்று எழுதியிருக்கிறார். இப்படி 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் எழுதிய பிறகும், அந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்படவில்லை. மழை பெய்துவிட்டால், பிரசவத்திற்கு வரும் தாய்மார்கள் உள்ளே செல்லமுடியாத காரணத்தினால், அந்தக் கட்டிடத்தை உடனடியாக பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். அதிலே 'மெடர்னிடி விங்' என்ற ஒரு பகுதி இருக்கிறது. அது ஏறத்தாழ 10 ஆண்டுகளாக

பழுதுபார்க்கப்படாமல், மோசமான நிலைமையில் இருந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற உணர்வின் அடிப்படையிலே நானும் அதிலே கொஞ்சம் தீவிர கவனம் செலுத்தி, உடனடியாக பழுதுபார்க்கப்பட வேண்டுமென்று இப்போது வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 15,500 ரூபாய்க்கான பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்டுமென்டால் எஸ்டிமேட் கொடுக்கப்பட்டு, வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வின் அடிப்படையிலே, வெகு விரைவிலே அந்த வேலை முடிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கட்டிடம் மிகவும் பழுதுபட்டிருப்பது உண்மை என்று தெரிவித்திருக்கிறார்கள். குத்தாலம் மருத்துவமனை மிகவும் அத்தியாவசியமான பகுதியில், அந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கிற எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்திருக்கின்றது. இதை பழுதுபார்ப்பதற்கு 15,500 ரூபாய் ஒதுக்கியிருப்பது போதுமானதாக இல்லை. ஆகவே, இன்னும் கொஞ்சம் அதிகமான தொகையை ஒதுக்கி இதை நல்ல முறையில் பழுதுபார்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக முன்வரும்.

திண்டுக்கல் தாலுக்கா சிறுமலை அடிவாரத்தில் காசநோய் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 541—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் தாலுக்கா சிறுமலை அடிவாரத்தில் காச நோயாளிகளுக்கான T. B. Sanatorium அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்பெறும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் உள்ள சிறுமலை மூலிகை காற்றே காச நோயைக் குணப்படுத்தும் சக்தி வாய்ந்தது

என்று சித்த வைத்தியர்கள் சொல்கிறார்கள். காச நோய் நோயாளிகளுக்கு பயன் தரும் வகையில் இதை மீண்டும் பரிசீலித்து அங்கு சானடோரியம் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த அரசைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே கட்டி முடித்திருக்கக்கூடிய, நடைமுறையில் வேலை செய்கின்ற டி. பி. சானடோரியங்களை விரிவுபடுத்தி நல்ல தரமான வைத்திய வசதிகளை செய்து வருகிறோம். புதிதாக ஆரம்பிப்பதற்கு உத்தேசம் இல்லை என்று சொன்னேன். அந்தப் பகுதியில் அரசு டி. பி. சானடோரியம் திண்டுக்கல்லிலிருந்து 70 கிலோ மீட்டர் தூரத்தில் தோப்பூரில் 182 படுக்கை வசதிகளைக்கொண்ட பெரிய மருத்துவமனை இருக்கிறது. இரண்டாவதாக இராஜாஜி மருத்துவமனை, திண்டுக்கல்லிலிருந்து 65 கிலோ மீட்டர் தூரத்தில் 20 படுக்கைகளைக் கொண்ட டி. பி. வார்டை உடையதாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் திண்டுக்கல்லில் தலைமை மருத்துவ மனையில் 24 படுக்கைகளைக் கொண்ட டி. பி. வார்டு இருக்கிறது. ஆகவே, இவைகள் போதுமென்று அரசு கருதுகிறது. பிறகு தேவையென்றால், அதுபற்றி நாம் ஆராயலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் இருக்கிற தலைமை மருத்துவமனையில் காச நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற படுக்கைகள் போதாது என்று பல புகார்கள் அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆகவே, மாவட்ட மருத்துவ மனையில் 24 படுக்கைகள் காச நோயாளிகளுக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் மேலும் கூடுதல் படுக்கை வசதிகளை அமைத்துத்தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை கூட விசாரித்தேன். அங்கே மாதத்திற்கு 21 கேஸ்கள் தான் ரிஜிஸ்டர் செய்கிறார்கள். ரிஜிஸ்டர் செய்வதிலே ஏறத்தாழ ஐந்து அல்லது ஆறு கேஸ்கள் தான் படுக்கைகளில் சேர்க்கக்கூடிய, அதாவது ''இன-பேஷன்ட் ஒர்தி'' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், நிலை இருக்கிறது. அங்கு 24 படுக்கைகள் தற்போது இருக்கின்றன. அது போதும் என்று அரசு கருதுகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமலைப் பகுதியிலே டி. பி. சானடோரியம் அமைக்கிற உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். சிறுமலையின் அடிவாரத்தில் தான் சின்னாளம்பட்டி இருக்கிறது. அங்கே மிக

சிறுபான்மையா இருக்கக்கூடிய நெசவாளர்களின் குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களுக்குத்தான் இந்த டி. பி. நோய் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவர்களுக்கு நோய் வந்து, டி. பி. சானடோரியத்தில் சேர வேண்டுமென்று மக்கள் அன்றாடம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை அரசு பரிவோடு கவனித்து டி. பி. சானடோரியம் அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாளம்பட்டியை பொறுத்த மட்டில் நெசவாளர்கள் அங்கே அதிகமாக இருக்கிறார்கள். எங்கெங்கு நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அந்தப் பகுதிகளுக்கு ஒரு புதிய திட்டத்தை அமுல் படுத்திக்கொண்டிருக்கிறோம். ஒரு மாதத்திற்கு முன்பு அனகாபுத்தூரில் துவங்கியிருக்கிறோம். அது என்னவென்றால், '' இன்டென்சிவ் டி. பி, ஸ்கிரீனிங் கேம்பெய்ன் '' ; அதாவது எக்ஸ்ரே கருவிகளை அங்கே கொண்டு போய் ஒவ்வொரு நெசவாளிக்கும் டி. பி. நோய் இருக்கிறதா என்பதை நோய் வருவதற்கு முன்கூட்டியே ஸ்கிரீனிங் செய்துவிட்டு அப்படி நோய் இருக்குமானால் அவர்களை மருத்துவமனையில் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சினனாளம்பட்டியிலே இந்த ஸ்கிரீனிங் கேம்பெய்ன் ஆரம்பிக்கலாம்.

[முற்பகல் 10-10]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தாலுக்கா மருத்துவமனையிலே 24 படுக்கைகள் கொண்ட டி. பி. சென்டர் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திண்டுக்கல் மருத்துவமனைப் பகுதியிலே உள்ள 5, 6 தாலுக்காக்களிலே உள்ளவர்கள் அங்கே தான் வர வேண்டியிருக்கிறது. அங்கே வந்தாலும் சரியான வசதிகள் இல்லையென்று தான் அங்கே வைத்தியம் பார்த்தவர்கள் சொல்கிறார்கள், இந்த மாதிரி மருத்துவமனை நகர்ப்புறத்திலே இருப்பதைக்காட்டிலும் மலைப் பகுதியிலே இதற்கென்று தனியாக ஒரு செக்ஷன் ஆரம்பிக்கக்கூடிய முறையிலே நகரத்திலே உள்ளதை ஷிப்டு பண்ணி மருத்துவமனையைக் கட்ட அரசு முன் வருமா? பழனியிலே மருத்துவமனைப் பகுதியிலே மிக மோசமான நிலையில் இருக்கிறது. சாமியார்கள் கூட வசிக்க முடியாத நிலையில்தான் அந்தப் பகுதி இருக்கிறது. ஆகவே அங்கே அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அந்த மருத்துவமனை நன்றாகத்தான் இருக்கிறது. அந்த லொக்காலிடி அப்படி இருக்கலாம். 120 படுக்கைகள் கொண்டு இருக்கின்ற மருத்துவமனை

திண்டுக்கல்லிலிருந்து 70 கிலோ மீட்டர் தூரத்திலே தான் உள்ளது. அங்கே ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் கேஸஸ் எவ்வளவு என்று பார்த்தபோது பரீட்சார்த்தமாக ஒரு மாதத்திலே 137 கேஸ்கள் தான் வந்திருக்கின்றன, 137 cases were registered for admission during the month of December 1980. அந்த 137 கேஸ்களிலே கூட மருத்துவமனையிலேயே அனுமதிக்கப்படவேண்டி உள்ளவர்கள் 20, 25 பேர்கள் தான் ஆகவே 20 படுக்கைகளைக் கொண்ட அந்த டி.பி. மருத்துவமனை போதும் என்று கருதுகிறேன்.

போக்குவரத்து ஊழியர்களுக்கான பங்குத் திட்டம்.

*வினா எண் 542—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) பங்குத் திட்டம் என்கிற பெயரால் போக்குவரத்து ஊழியர்களிடம் இருந்து 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் வசூலிக்கப்பட்டது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை ஊழியர்களுக்கு திருப்பி வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) நிர்வாகத்திலும்—முதலிலும் தொழிலாளர்களுக்குப் பங்கு என்ற திட்டத்தின் கீழ், போக்குவரத்துக் கழக தொழிலாளர்களிடமிருந்து வசூலித்த பணத்தை அவர்களிடமே திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்ற கருத்துரு அரசின் துரித பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : எந்த எந்த போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களிடமிருந்து கன்சன்ட் இல்லாமல் எத்தனை நபர்களிடமிருந்து பங்குத் தொகை பிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்-பெருநகர்), பாண்டியன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஆகிய போக்குவரத்துக் கழகங்களிலே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அனுமதியில்லாமல் பிடித்திருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை. அரசாங்கம் எந்தத் திட்டத்தையும் கொண்டு வருகிறபோது அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : கன்சன்ட் இல்லாமல் பிடிக்கப்பட்டிருக்கிறது என்ற விஷயத்தை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ? அப்படி பிடிக்கப்பட்டது எந்தக் காலத்திற்குள் திருப்பிக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல முடியுமா ? தொழிலாளர் வேஜஸ் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடந்த சமயத்தில் இதை பற்றி பரிசீலனை செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியது ஞாபகம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எந்தத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தாலும் தனித் தனியாக ஒவ்வொருவரிடத்திலே ஒப்புதல் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஒட்டுமொத்தமாக எல்லா போக்குவரத்துக் கழகங்களிலேயும் ஒத்துக்கொள்வார்கள் என்ற அடிப்படையிலே கொண்டு வரப்பட்டது. திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னது ஞாபகத்தில் இருக்கிறது. ஞாபகத்திலே இருப்பதால் தான் அது பரிசீலனையில் இருக்கிறது. வெகு விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, இந்தப் பங்கு பெறும் திட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது ? தொழிலாளரிடமிருந்து எவ்வளவு தொகை பெறப்பட்டது ? அதற்கு வட்டி உண்டா ? அதை தொழிலாளர்கள் விரும்புகிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா ? எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாளன்று இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் பொதுவாக தொழிலாளர்களுக்கு நல்ல திட்டமாக இருக்கும் என்றுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் அப்பொழுதே எதிர்ப்பு இருந்திருக்கிறது. ஒரு சாரார் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஒரு சாரார் வேண்டாமென்று கோரியிருக்கிறார்கள். இன்றும் கூட அந்த நிலைதான் தொடர்ந்துக் கொண்டிருக்கிறது. இதில் வட்டி 8 சதவீதமாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த அரசு பொறுப்பை ஏற்றதற்குப் பின்னர் 12 சதவீதமாகக் கொடுப்பதற்கு உயர்த்தி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும் பொழுது அந்தக் கழகங்களே இப்படித் தொழிலாளர்களிடத்தில் டெபாசிட் வாங்குவது என்றவொரு திட்டமே வைத்து அவர்கள் செய்ததால் கன்செண்ட் தேவையில்லை என்று சொன்னார்கள். விஷயம் அப்படி அல்ல. தொழிலாளர்கள், அங்கே வேலைக்குச் சேர வேண்டுமென்றாலே இந்தப் பணம்

கொடுக்காமல் அவர்களுக்கு வேலை கிடைக்காது என்ற நிலை. ஆகவே, நிர்ப்பந்தமாக வசூலிக்கப்படுகிறது என்பதுதான் அர்த்தம். அந்த நிலையைக் கைவிட்டு, இதுவரைக்கும் வசூலித்த அந்தப் பணம் முழுவதையும் திருப்பிக் கொடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய கருத்து புதிதாக சேர்பவர்களுக்கு வேண்டுமானால் பொருந்தும். ஆனால் ஏற்கனவே இருந்தவர்கள் கூட அதிலே கொடுத்து இருக்கிறார்கள். அவர்களை எப்படி நிர்ப்பந்தப்படுத்தினார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தத் திட்டத்தை அப்பொழுது அமலாக்கியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது இருக்கின்ற தொழிலாளர்கள் இதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று பெரும்பாலோர் கேட்டுக் கொண்டிருப்பதால் அரசாங்கம் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடனேயே, நிச்சயமாக அதனுடைய முடிவு அறிவிக்கப்படும்.

வயது வரம்பு விதிகளிலிருந்து விதவைகளுக்கு விதி விலக்களித்தல்.

*வினா எண் 543— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி, செவிலியர் பயிற்சி, அரசுப் பணி ஆகியவைகளில் சேர இருக்கும் வயது வரம்பு விதிகளில் இருந்து விதவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :— செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, செவிலியர் பயிற்சி அரசுப் பணி ஆகியவைகளில் சேர இருக்கும் வயது வரம்பு விதிகளில் இருந்து விதவைகளுக்கு விதிவிலக்கு அளிப்பது பற்றி பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அந்தச் செயற் குறிப்பின் மீது நடவடிக்கை எடுக்கும் போது அரசு ஊழியர்கள் இறந்து விட்டால் அந்த விதவைகள் வாங்குவதைப் போல, ஒவ்வொரு வரும் தனித்த முறையில் அரசாங்கத்திலிருந்து எக்செம்ஷன் வாங்க வேண்டு மென்ற நிலையை மாற்றி மொத்தமாக விதி விலக்கு அளித்து, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, செவிலியர் பயிற்சி

அரசுப் பணி ஆகியவைகளிலே சேர இருக்கும் வயது வரம்பு விதிகளில் இருந்து விதவைகளுக்கு விலக்களிக்க வேண்டு மென்ற கருத்தினை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைத்தான் பதிலில் குறிப்பிட்டேன். செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று. பரிசீலனை முடிந்த பிறகு உங்களுக்கு நல்ல முறையில் பதில் அளிக்கப் படும் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது.

திரு. கே. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் வானொலியில் நான் பேசியதாகவும், அதிலே நான் பேசும் பொழுது படித்ததாகவும், படித்து வருகின்ற நேரத்தில் சிரித்ததாகவும் வானொலியிலே தொகுப்பு நிகழ்ச்சியிலே குறிப்பிட்டுள்ளார்கள். நான் நேற்றுப் பேசவே இல்லை. ஆனால் வானொலி பற்றி எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. நான் இந்தச் சட்டமன்றத்திலே பல முறை பேசியிருக்கிறேன். என்னுடைய கருத்துக்களை நன்றாக வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து ஏற்புடையதுதான். அவர்கள் சொல்வதில் மாறுபட்ட கருத்து எனக்கு இல்லை. நேற்று திரு. சொக்கலிங்கம் அவர்கள் பேசவில்லை. ஆனால் அதை அவர்கள் உரிமைப் பிரச்சினையாக எழுதிக் கொடுத்தால், அதுபற்றிப் பார்க்கலாம்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்ற சொர்ணம், ரா. கிருஷ்ணன், கு. ரமணி, என். வரதராசன், செ. இராமலிங்கம், ஏ. எஸ். எம். பக்கீர் முகமது ஆகியோர் "தமிழ்நாடு பூராவுமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் 14—3—1981 முதல் தங்களது கோரிக்கைகளை அரசிடம் வற்புறுத்தி சென்னை

யில் உண்ணாவிரதம் மேற்கொண்டு உள்ளதால், பொதுமக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பீ. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு பூராவும் இருக்கக்கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளை அடைவதற்காக அரசாங்கத்திடம் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடத்தி அதிலே சில கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, சில கோரிக்கைகளைப்பற்றி பிறகு பரிசீலிக்கலாம் என்ற நிலை வந்து, பிறகு அவைகளெல்லாம் அமல்படுத்தப்படாத காரணத்தினால் அந்தக் கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்துகின்ற முறையிலே அரசாங்கம் சீக்கிரமாகத் தலையிட்டு ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நிலையிலே அதை வலியுறுத்துவதற்காக சென்னையிலே தொடர் உண்ணாவிரதம் இருந்து வந்தார்கள். அது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை அரசாங்கம் அழைத்துப் பேசி சீக்கிரமாக ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சமீபத்திலே தகவல் கிடைத்திருக்கிறது. அது நல்ல முயற்சி. ஆயினும் கூட அந்த முயற்சி நல்ல பலனை அளிக்க வேண்டுமென்ற முறையிலேயும் அந்த கோரிக்கைகளைப் பொறுத்தவரையிலேயும் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையிலேயும் அவையிலே விரிவாக விவாதித்து ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக இந்த அவையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பட்டதாரி ஆசிரியர் கழகத்திடமிருந்து அரசுக்கு மனுக்கள் வந்தன. இக் கோரிக்கைகள் குறித்து பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் பிரதிநிதிகள் நேரிலும் பேசினர். அவர்கள் கல்விச் செயலாளருடனும் கலந்து பேசியுள்ளனர். அவர்களது கோரிக்கைகளும் அக் கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கைகளின் விவரமும் வருமாறு.—

(1) 1–4–1970 க்குப் பின் நியமிக்கப்பட்டு தேர்வு ஆணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாத, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்

துப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் பணிக்கு வந்த நாளிலிருந்தே வரன்முறைப்படுத்தப்பட்டு ஆண்டு ஊதிய நிலுவை தொகையும் வழங்கப்பட வேண்டும்.

1–4–1970 க்குப் பின் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களில் தமிழ்நாடு பொதுத் தேர்வாணைக் குழுவினால் 1976 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பணியினை அவர்கள் பணியில் தற்காலிகமாக சேர்ந்த நாளிலிருந்தே வரன்முறைசெய்ய வேண்டும் என்பதுதான் அவர்களது கோரிக்கை. அக் கோரிக்கையின்படி 1976–ல் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை அவர்கள் தற்காலிகமாக பணியில் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறைப்படுத்த 22–12–1980 நாளிட்ட கல்வித்துறை ஆணை எண். 2722-ல் ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் அவர்களில் 1980 ஆம் ஆண்டு தேர்வாணைக் குழுவினால் நடத்தப்பட்ட சிறப்புத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களது பணியினையும் அவர்கள் தற்காலிகமாகச் சேர்ந்த நாளிலிருந்து வரன்முறைப்படுத்தவும், ஊதிய உயர்வு நிலுவைத் தொகை பெறவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(2) உச்ச நீதிமன்றத் தீர்ப்புப்படி இணைப்பாணையை எல்லா மட்டங்களிலும் உடனடியாக அமல்படுத்தவும், ஒருங்கிணைந்த பணி மூப்புப் பட்டியலை வெளியிடவும்;

அதன்படி ஒருங்கிணைந்த பணிமூப்பு பட்டியலை அனைத்து உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மற்ற அலுவலர்களுக்கும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது விரைவில் செய்து கொடுக்கப்படும். அரசால் மேற்கொள்ளப்பட்ட நகரவைப் பள்ளி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து கணக்கில் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. இதன்மீது ஒரு முடிவெடுத்து விரைவில் ஆணையிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(3) மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது உட்படுத்தப்பட்டுள்ள முதுகலைப் பட்டம் பெறாத அனைத்துப் பாட ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டிற்குள் குறுகிய காலப் பயிற்சி தொடங்கி, பயிற்சிக்குப் பின் அவர்களை முழுத் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்களாக்க:

உட்படுத்தப்பட்ட (இன்டக்டட்) ஆசிரியர்கள் முதுகலைப் பட்டம் பெற்று முழுத் தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில் அறிவியல் மற்றும் கணிதம் எடுத்து பட்டப் படிப்பு பெற்றவர்கள் அதே பாடங்களில் முதுகலைப் பட்டம் பெற அவர்களுக்கு கல்லூரிகளில் மாலை நேர

வகுப்புகள் நடத்துவதற்கும், மாலை நேர கல்லூரிகளுக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்காதவர்கள் படிப்பதற்காக விடுமுறைகால வகுப்பு நடத்துவதற்கும் பல்கலைக் கழகங்களுடன் கலந்து தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்விதம் வகுப்புகளுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு உதவிப் பணம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையும் பரிசீலனையில் உள்ளது. அவர்கள் முதுகலைப்பட்டம் பெற ஒரு குறிப்பிட்ட அவகாசம் கொடுக்கப்படும். அதுவரை அவர்கள் பதவியிறக்கம் செய்யப்பட மாட்டார்கள். அந்த உட்படுத்தப்பட்ட முதுகல்லைப்பட்டம் பெறாத ஆசிரியர்களுக்கு வழங்கும் சிறப்பு ஊதியமான ரூ. 25ஐ உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையும் பரிசீலனையில் உள்ளது.

(4) மூன்றாம் ஊதியக்குழுவின் குறைபாடுகளைக் களைய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் அறிக்கையை வெளியிட மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும் போது ரூ. 10,000 வழங்கப்பட :

ஓய்வு பெறும் போது ரூ. 10,000 வழங்க வேண்டுமென்பது அனைத்து அலுவலர்களுக்கும் பொருந்தும் ஒன்றாகும். எல்லா அரசு அலுவலர்களைப் பொறுத்து என்ன முடிவு எடுக்கப்படுமோ அது ஆசிரியர்களுக்கும் பொருந்தும். ஒரு நபர் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு முடிவெடுத்து அது பற்றி நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(5) எல்லா தனியார் நகராட்சி, மாநகராட்சி பள்ளிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். அரசு மேற்கொள்ளும் வரை சிறுபான்மையினர் பள்ளிகள் உட்பட எந்தத் தனியார் பள்ளிகளிலும் ஆசிரியர், அலுவலர்கள் வேலை நீக்கம் செய்யப்படக் கூடாது;

சிறுபான்மையினரின் பள்ளிகளை எடுப்பதற்கு இயலாத நிலையில் ஒரு சாரார் நடத்தும் பள்ளிகளை மட்டும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது சரியல்ல. மேலும் தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம் 1973 செயலில் உள்ளதனால் எவரையும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கூட வேலை நீக்கம் செய்யக் கூடாது என்று சொல்ல முடியாது. தற்காலிகப் பணி நீக்கம் செய்யும் ஆசிரியர்களுக்குப் பிழைப்பு ஊதியம் ஒழுங்காகக் கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். இதற்கு வழிவகை செய்யும் முறையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) விதிகள், 1974 திருத்தப்பட்டிருக்கிறது. விரைவில் இது குறித்து ஆணை வெளியிடப்படும்.

(6) பதவி உயர்வு செய்யப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு எப். ஆர். 22 விதியின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட;

மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான பணிவிதிகள் தயாரிக்கப்பட்டு தேர்வாணைக் குழுவுடன் கலந்து முடிவு செய்யப்பட்டுள்ளது. இது வெகு விரைவில் வெளியிடப்பட உள்ளது. பணிவிதிகள் வெளியிடப்பட்ட பின்னர் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஊதியம் நிர்ணயம் செய்யப்படும். எம். எட். பட்டம் பெற்ற மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. இதன்மீதும் விரைவில் முடிவெடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும்.

7. சிறப்பாசிரியர், இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோர் பி. டி. பட்டம், மற்றும் சிறப்பாசிரியர், இடைநிலை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் முதுகலைப் பட்டம் பெற்றிருப்பின் அவர்களுக்கு முறையே பட்டதாரி ஆசிரியர் ஊதியமும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் ஊதியமும் வழங்க;

இந்தக் கோரிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

8. உட்படுத்தப்படாமல் (இன்டக்ட் செய்யப்படாமல்) தற்போது பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகள் பணி முடிந்ததும் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ள வசதிகள் அளிக்கப்பட:

பட்டதாரி ஆசிரியர்கள் தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்வதற்கு வாய்ப்பும் வசதியும் ஏற்கனவே உள்ளதால் தனி ஏற்பாடு தேவையில்லை. கல்லூரி ஆசிரியர்கள் எம். பில். தகுதி பெற வாய்ப்பளித்தது எந்த ஒரு கல்லூரி ஆசிரியரும் வேலையிழப்பு நேராமலிருப்பதற்காக செய்த ஏற்பாடாகும். பள்ளி ஆசிரியர்களுக்கு எம். பில். தகுதியும் தேவையில்லை.

ஆகவே அந்த அடிப்படையிலே இது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த விவரங்களைத் தெரிவித்ததற்குப் பிறகு பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டத்தை ஒத்தி வைத்ததால் இந்த அவையையும் ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 27–3–1981 ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்ட முறைப்படி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

29–3–1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
30–3–1981 திங்கட்கிழமை)	1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதமும் நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரையும்.
31–3–1981 (செவ்வாய்க்கிழமை) 1–4–1981 (புதன்கிழமை)	மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும். 39—சாலைகளும், பாலங்களும். 52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
2–4–1981 (வியாழக்கிழமை) 3–4–1981 (வெள்ளிக்கிழமை)	36—பாசனம். 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு.
4–4–1981 (சனிக்கிழமை)	அரசினர் சட்ட முன் வடிவுகள்— 1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால் நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1981); 2. 1981 ஆம் ஆண்டு கோவை மாநகராட்சி சட்ட முன்வடிவு) 3. 1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த)சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1981); 4. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு; 5. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1981);

5–4–1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
6–4–1981 (திங்கட்கிழமை) 7–4–1981 (செவ்வாய்க்கிழமை)	அரசினர் சட்ட முன்வடிவுகள்— 1. 4–4–1981 அன்று முடிவுபெறாது விடுபட்ட சட்ட முன் வடிவுகள். 2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 21/1981).
8–4–1981 (புதன் கிழமை)	மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். 18—மருத்துவம். 19—பொது சுகாதாரம்.
9-4-1981 (வியாழக்கிழமை)	1—நிலவரித்துறை. 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.
10–4–1981 (வெள்ளிக்கிழமை)	2—மாநில ஆயத்தீர்வைத் துறை. 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும். தீர்வைகளும்—நிர்வாகம். 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

11-4-1981 (இரண்டாம் சனிக்கிழமை)	விடுமுறை.
12-4-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
13-4-1981 (திங்கட்கிழமை)	தமிழ் வருடப்பிறப்பு — விடுமுறை.
14-4-1981 (செவ்வாய்க்கிழமை)	(1½ மணி நேரம்) 6—பத்திரப்பதிவு. 10—பால் வழங்கு திட்டங்கள். (1½ மணி நேரம்.) 22—கால்நடை வளர்ப்பு. 30—சமூக நலன்.
15-4-1981 (புதன்கிழமை)	24—தொழில்கள். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.
16-4-1981 (வியாழக்கிழமை)	9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள். 11—மாவட்ட நிர்வாகம்.
17-4-1981 (வெள்ளிக்கிழமை)	தூய வெள்ளிக்கிழமை விடுமுறை.
18-4-1981 (சனிக்கிழமை)	15—காவல் துறை. 16—தீயணைப்புப் பணிகள்.
19-4-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.

20-4-1981 (திங்கட்கிழமை)	15—காவல் துறை. 16—தீயணைப்புப் பணிகள்.
21-4-1981 (செவ்வாய்க்கிழமை)	29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும். 33 வீட்டு வசதி. 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.
22-4-1981 (புதன்கிழமை) 23-4-1981 (வியாழக்கிழமை)	17—கல்வி.
24-4-1981 (வெள்ளிக்கிழமை)	31—பழங்குடியினர், ஆதித்திராவிடர் முதலியோர் நலன். 44—எழுதுபொருள் அச்சுத்துறை.
25-4-1981 (சனிக்கிழமை)	21—மீனளம். 35—நுகர் பொருள் வழங்கல்.
26-4-1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
27-4-1981 (திங்கட்கிழமை)	3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம். 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். 53—சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.
28-4-1981 (செவ்வாய்க்கிழமை)	12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.
29-4-1981 (புதன்கிழமை)	25—சின்கோனா. 45—காட்டு வளத்துறை.

	47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.
	54—காட்டுவள முலதனச் செலவு.
30–4–1981 (வியாழக்கிழமை)	13—நீதி, நிர்வாகம்.
	14—சிறைச் சாலைகள்.
1–5–1981 (வெள்ளிக்கிழமை)	மே தினம்—விடுமுறை.
2–5–1981 (சனிக்கிழமை)	பேரவைக் கூட்டம் இல்லை.
3–5–1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
4–5–1981 (திங்கட்கிழமை).	23—கூட்டுறவு.
5–5–1981 (செவ்வாய்க்கிழமை) 6–5–1981 (புதன்கிழமை)	20—வேளாண்மை. 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.
7–5–1981 (வியாழக்கிழமை)	32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன்.
8–5–1981 (வெள்ளிக்கிழமை)	26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.
	27—கதர்த்தொழில்.
	37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.
	38—பொதுப்பணிகள்—பணியாளர் அமைப்பும், கருவிகளும் தளவாடங்களும்.
	51—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

9–5–1981 (சனிக்கிழமை)	7—மாநிலச் சட்ட மன்றம்.
	8—தேர்தல்கள்.
	42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.
	43—பல்வகை.
	55—பல்வகை மூலதனச் செலவு.
	56—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும். நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல்.
10–5–1981 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.
11–5–1981 (திங்கட்கிழமை) 12–5–1981 (செவ்வாய்க்கிழமை) 13–5–1981 (புதன்கிழமை)	1. நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும். 2. ஏனைய அரசினர் சட்ட முன் வடிவுகள்
14–5–1981 (வியாழக்கிழமை)	தனி உறுப்பினர் அலுவல்கள்.

8–4–1981 அன்று முதல் எடுத்துக் கொள்ளப்பட இருக்கும் மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கு கடைசி நாள் 28–3–1981, பிற்பகல் 3 மணி என்று அறிவித்திருந்ததற்குப் பதிலாக 31–3–1981, பிற்பகல் 3–00 மணி என்று நீட்டிக்கப்பட்டுள்ளது.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

[முற்பகல் 10-30]

5. கவன ஈர்ப்பு.

பெரம்பூரில் அதிக அளவில் அரசு மருந்துகள் கைப்பற்றல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், இரா. தாமரைக்கனி, டாக்டர் கே. சமரசம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ''18—3—1981 அன்று பெரம்பூரில் ஒரு வீட்டிலிருந்து அதிக அளவில் அரசு லோகோ முத்திரையிட்ட மருந்துகள் கைப்பற்றப்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

போதைப் பொருள் புலனாய்வு நிறுவனம் மருந்து கட்டுப்பாடு துறையின் உதவியுடனும் காவல்துறையின் உதவியுடனும் பெரம்பூர் ஆசாத் தெருவில் உள்ள திரு. பி. இராமகிருஷ்ணய்யாவிற்கு சொந்தமான 18-ஆம் நெம்பர் இல்லத்தை 18—3—1981 அன்று சோதனையிட்டு 242 வகையான மருந்துகளையும் போதைப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளார்கள். இம் மருந்துகளில் பல அரசு லோகோ முத்திரை உள்ளதாகக் கூறப்படுகிறது. இம்மருந்துகள் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளிலிருந்து களவாடப்பெற்றவை எனத் தெரியவருகிறது.

1. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
3. அரசு மருத்துவமனை, காஞ்சிபுரம்.
4. இ. எஸ். ஐ. மருந்தகம், திருவொற்றியூர்.

5. இ. எஸ். ஐ. மருந்தகம், தண்டையார்பேட்டை.
6. இ. எஸ். ஐ. மருத்துவமனை, கே. கே. நகர் மத்திய மருந்து கிடங்கு.
7. இ.எஸ்.ஐ. மருத்துவமனை, அயன்புரம், சென்னை.
8. அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை.

திரு. இராமகிருஷ்ணய்யா என்பவர் நகராட்சி மருந்தகம் ஒன்றில் மருந்தாளுநர் ஆக பணியாற்றுவதாகவும் ஆனால் அவர் தற்பொழுது தலைமறைவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. அவரது உறவினரான சுப்பராயலு என்பவர் விசாரணைக்காக மாவட்ட காவல் துறை அதிகாரியின் பொறுப்பில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட மருந்துகளின் தோராய மதிப்பு ரூ. 40,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது குறித்து மேல் நடவடிக்கை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (என்போர்ஸ்மென்ட்) எடுத்துவருகிறார். மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநல இயக்குநர், ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநர் முதலியவர்கள் அரசு மருத்துவ மனைகளிலிருந்து மருந்துகள் களவாடப் படுவதை தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மருத்துவ மனைகளிலிருந்து களவாடப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை அம்மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே அரசாங்கத்திற்குச் சொந்தமான மருந்துகள் பெரம்பூர் ஆசாத் தெருவில் உள்ள திரு. பி. இராமகிருஷ்ணய்யாவிற்குச் சொந்தமான 18-ஆம் நெம்பர் இல்லத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது என்றும் அவர் நகராட்சி மருந்தகம் ஒன்றில் மருந்தாளுநராகப் பணியாற்றுவதாகவும் கூறப்பட்டு இருக்கிறது. மேலும் அறிக்கையில் சொல்லப்பட்டு இருப்பதைப் பார்த்தால், அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு மருத்துவ மனை, காஞ்சீபுரம், இ.எஸ்.ஐ. மருத்துவ மனை, திருவொற்றியூர் இ. எஸ். ஐ. மருந்தகம், தண்டையார்பேட்டை, இ.எஸ்.ஐ. மருத்துவ மனை, கே. கே. நகர் மத்திய கிடங்கு, அரசு மருத்துவ மனை, சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் இருந்தும் களவாடப்பட்டு இருப்பதை அறிகிறோம்.

அந்த மருந்துகளை திட்டமிட்டு திருடி விற்பனை செய்வதற்கு ஒரு கூட்டமே இருப்பதாகத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட மருந்து திருட்டுகளைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதோடு, இப்படிப்பட்ட மருந்துகள் கையாளப்படுவதை. மருந்துவ மனைகளில் வேலை நடைபெறும் முறைகளை கண்காணிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி உடனடியாக மக்கள் குழுக்களை அமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த மருந்துகள் பி. இராமகிருஷ்ணய்யாவிற்கு சொந்தமான 18-ம் நம்பர் இல்லம், ஆசாத் தெரு, பெரம்பூரில் பிடிபட்டன என்ற விவரம் தகவல் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த எந்த மருத்துவ மனைகளிலிருந்து எடுக்கப்பட்ட மருந்துகள் அந்த நம்பர் வீட்டில் இருந்தன என்பதும் தகவல் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கிற வினா, இதை கண்காணிக்க மக்கள் குழு அமைக்கப்படுமா என்பது. மக்கள் குழு அமைக்கப்படும் என்று ஏற்கெனவே வேறு ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது கூறியிருக்கிறேன். இந்த மருந்துத் திருட்டைக் கண்டுபிடிக்க மிகவும் இரகசியமாக பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. டிரக் இன்ஸ்பெக்டருக்கு சொல்லி, அந்த டிரக் இன்ஸ்பெக்டரும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (என்போர்ஸ்மென்ட்) அவர்களும் ஜாக்கிரதையாகப் போய்க் கண்டுபிடித்தார்கள். ஆனால் இராமகிருஷ்ணய்யா தலைமறைவாகி எங்கோ போயிருக்கிறார்; அண்டர் கிரவுண்டில் இருக்கிறார். அவரை தேடிக் கொண்டிருக்கிறோம். இப்போது அவரது உறவினரை கைது செய்திருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மருந்தாளுநராக பணியாற்றிய ஒருவரை மட்டும் அமைச்சரவர்கள் கைது செய்திருப்பதாக அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். திருடி வைக்கப்பட்ட மருந்துகளில் 'மார்பியா', 'பெத்தடின்' போன்ற முக்கியமான ஷெட்யூல்டு டிரக்ஸ் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, ஒரு மருந்தாளுநர் மட்டும் இந்த மருந்துகளை திருடியிருக்க முடியாது. இந்த மருந்துகளை கண்காணிக்கின்ற மேலதிகாரிகள், டாக்டர்கள் இதில் சம்மந்தப்பட்டிருக்க வேண்டும். டாக்டர்களுடைய கண்காணிப்பில் இந்த மருந்துகள் இருக்கும்போது அவர்களுக்குத் தெரியாமல் எப்படி எடுக்க முடியும் ? எனவே, இதிலே சம்மந்தப்பட்ட பெரிய அதிகாரிகள், டாக்டர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த மருந்தாளுநர் கார்ப்போரேஷன் மருத்துவ மனையில் பணியாற்றுகிறவர். அவருடைய வீட்டில்தான் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எந்த எந்த மருத்துவ மனையிலிருந்து கொண்டுவந்த மருந்துகள் என்பதற்கான விவரம் தரப்பட்டிருக்கிறது. அதனால் அந்த அந்த மருத்துவ மனையில் உள்ள யாரோ அவருக்கு உடந்தையாக இருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தத் திருட்டுக்கு யார்யார் பொறுப்பு, யார், யார் உடந்தையாக இருந்தார்கள் என்பதை எல்லாம் கண்டுபிடித்து, அவர்கள் மீதெல்லாம் திட்டவட்டமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் (என்போர்ஸ்மென்ட்) இடம் இதில் சம்மந்தப்பட்டவர் யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட பெரியவர்களாக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் உரியமுறையிலே தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, 'மார்ஃபியா', 'பெத்தடின்' போன்ற ஷெட்யூல்டு மருந்துகள் சில குறிப்பிட்ட நோய்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படுபவை. சாதாரணமாக அவை யாருக்கும் கொடுக்கப்படக் கூடியவை அல்ல. ஆனால் தற்போது அந்த மருந்துகளை மாணவ, மாணவிகள் போதை ஏறுவதற்காகப் பயன்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்ல. பெண்கள் தவறான வழிகளில் நடந்து, அபார்ஷன் செய்வதற்கும் அந்த மருந்துகளை பயன்படுத்துகிறார்கள். ஆகையால் இப்படிப்பட்ட மருந்துகளை உரிய முறைப்படி விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இது இந்த 'கால் அட்டன்ஷன்கள் நோட்டீசில்' வராது, தொடர்பு உடையது அல்ல என்றாலும் பதில் சொல்கிறேன். 'பெத்தடின்', 'மார்ஃபியா', போன்ற போதை தரக்கூடிய மருந்துகளைப் பொருத்தவரையில் டாக்டர்களுடைய பிரஸ்கிரிப்ஷன் இல்லாமல் கொடுக்கக்கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். டிரக்ஸ் இன்ஸ்பெக்டர் மூலம் சம்மந்தப்பட்ட அனைவருக்கும் சர்க்குலர் அனுப்பியிருக்கிறோம். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தமாதிரியான மருந்துகள் 'ஷெட்யூல் எச்'-ல் வருகின்றன. இந்த ஷெட்யூலில் வரக்கூடிய மருந்துகளை டாக்டர்கள் பிரஸ்கிரிப்ஷன் இல்லாமல் கொடுக்கக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறோம். அதை மீறி யாரும் விற்க மாட்டார்கள் என்று கருதுகிறோம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய பதிலிலிருந்து 'வேலியே பயிரை மேய்கிறது' என்று சொல்வார்களே, அந்தமாதிரி திட்டமிட்டு திருடுகிற கூட்டம் திருடிக்கொண்டே இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதனால் புகார் சொல்லி, அதன் பேரில் ஒருவரை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருமுறை கண்டுபிடிக்கப்பட்ட மருந்தின் மதிப்பே 40,000 ரூபாய் என்றால் இந்தக் கூட்டம் இதுவரை எவ்வளவு மதிப்புள்ள மருந்துகளை திருடி யிருப்பார்கள் என்பதை அரசு உணரவேண்டும். ஆகவே அந்த அடிப்படையில் மருந்துகளை வைத்திருக்கின்ற சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களின் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். எந்தெந்த அரசு மருத்துவமனைகளிலே இதுபோன்று நடைபெற்றதோ அந்தந்த மருத்துவமனைகளிலே உள்ள அதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களை வேலைநீக்கம் செய்ய அரசு முன்வருமா ? மேலும் இப்படிப்பட்ட நிலைமை இனிமேலும் வராமல் தடுக்கக்கூடிய வகையில் என்னென்ன நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ? அது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலே இருக்கின்ற மொத்த அரசு மருத்துவமனைகளிலும் என்னென்ன செய்ய இருக்கிறது என்ற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்களால் அறிவிக்க இயலுமா ?

[முற்பகல் 10—40]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பொதுவாக எந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டாலும் குற்றம் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆகவே குற்றவாளிகளைத் தீவிரமாகவும் [illegible]த்தியமாகவும் கண்டுபிடிக்கவேண்டியது நம்முடைய கடமை. அந்தக் கடமையின் ஒரு பகுதியாகத்தான் நாம் இவர்[illegible]பிடித்திருக்கிறோம். மேலும் என்னென்ன திட்டங்களை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த மாமன்றத்தில் சொல்வதன் மூலம் இதிலே சம்பந்தப்பட்டிருக்கக்கூடியவர்கள் உஷாராக ஆகிவிடுவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதிலே எப்பேர்ப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும் கூட அதாவது வேலியே பயிரை மேய்கின்றது என்ற நிலை இருந்தாலும் கூட அத்தனைபேரையும் தயவு தாட்சண்யம் இல்லாமல் கண்டுபிடித்து உரிய நடவடிக்கைகளை கண்டிப்பாக இந்த அரசு எடுக்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6, வரவு-செலவுத் திட்டம் 1981—82.

பொது விவாதம் — (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதத்தில் நிறையப் பேர்கள் பேசுவதற்காக தமது பெயர்களைக் கொடுத்திருக்கின்ற காரணத்தால் இன்று மாலையிலும் அவை கூடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. எம் ஆறுமுகம் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களை முன்வைக்கலாம் என்று கருதுகிறேன். 1981—82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் முன்பகுதியிலே குறிப்பிட்டு இருக்கின்றது. மத்திய அரசே எல்லாவிதமான அதிகாரங்களையும் பெற்றிருப்பதாலும் மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைத் தொடர்ந்து பறித்துக்கொண்டிருப்பதாலும் மாநில அரசு ஒருசில நல்ல காரியங்களைச் செய்வதற்குக்கூட மத்திய அரசு தடையாக இருக்கிறது என்று இந்தஅறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டு இருக்கின்றது. மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வழங்கவேண்டுமென தமிழக சர்க்கார் இந்த நிதிநிலை அறிக்கையின் முன் பகுதியிலேயே சுட்டிக் காட்டி இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பதோடு மட்டுமல்லாமல் கேரளா, மேற்கு வங்கம், திரிபுரா போன்ற மாநிலங்களின் சட்ட மன்றங்களும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கவேண்டும் என்று ஏகோபித்த தீர்மானங்களை நிறைவேற்றி இருப்பதுபோல் தமிழகத்தில் இருக்கக் கூடிய இந்த மா[illegible]ன்றமும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட[illegible]ம் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி [illegible]ல்டே[illegible]ரசுக்கு அனுப்பவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்[illegible]ள்கிறே[illegible]. அதேநேரத்தில் எரிசாராயப் பிரச்சினை என்பது இந்[illegible]மாமன்[illegible]த்தில் கிட்டதட்ட மாமன்றம் ஆரம்பித்த காலத்திலே இருந்து அது ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. ஆனால் எம்களைப் பொறுத்தவரையில் கேரளா மாநிலத்தில்தான் இந்த எரி சாராயப் பிரச்சினை ஆரம்பித்தது என்பதையும் அங்கே இதைத் கண்டுபிடித்து அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடிய வகையிலே கேரள அரசாங்கம் விசாரணைக் கமிஷன் அமைத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசாங்கமும் இங்கே பல மாமன்ற உறுப்பினர்கள் கமிஷன் அமைக்கவேண்டும்

என்று கோரிய காரணத்தால் விசாரணைக் கமிஷன் அமைத்ததற்குப் பிறகு அதாவது கேரளாவிலும், தமிழகத்திலும் விசாரணைக் கமிஷன் அமைத்ததற்குப் பிறகு மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களைக் பறிக்கக்கூடிய வகையிலே மத்திய அரசாங்கம் ஒரு விசாரணைக் கமிஷனை அமைக்க இருக்கின்றது என்று சொன்னால் அதை இந்த மாமன்றம் வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே விசாரணைக் கமிஷனை மாநில அரசு அமைத்திருக்கின்றது. இதற்கு முன்னாலே மத்திய அரசும் பல விசாரணைக் கமிஷன்களை அமைத்திருக்கிறது. சர்க்காரியா கமிஷன், ஷா கமிஷன் என்று பல கமிஷன்களை மத்திய அரசு அமைத்து அந்தக் கமிஷன்கள் தீர்ப்புகளை வழங்கியதற்குப் பிறகும் கூட அந்தத் தீர்ப்புக்களை அமல் நடத்த முன்வராத மத்திய அரசாங்கம் அமல்நடத்துவதற்குத் திராணியற்ற மத்திய அரசாங்கம் இப்போது தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற எரி சாராயப் பிரச்சினையை ஒரு பிரச்சினையாக வைத்துக் கொண்டு, மாநில அரசு விசாரணைக் கமிஷன் அமைத்ததற்குப் பிறகு, மத்திய அரசு தாமும் ஒரு விசாரணைக் கமிஷனை இது சம்பந்தமாக அமைக்க இருப்பது என்பது இந்த மாநிலத்தின் மொத்த அதிகாரத்தையும் பறிக்கக்கூடியதாகும்.

எனவே நான் இந்த நேரத்திலே வேண்டிக்கொள்வது எல்லாம் விசாரணைக் கமிஷன் அமைப்பதற்கு, மத்திய அரசிற்கு எந்த விதமான தார்மீக ரீதியும் இல்லை என்பதை, இந்த மாமன்றம் எடுத்துக்காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே, இந்தப் பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய பல விஷயங்களில் வறட்சி நிலைமைகள் பற்றியும், தொழில் வளர்ச்சி போன்ற பல விவரங்களைப் பற்றியும் குறிப்பிடப்பெற்றிருந்தாலும் கூட, எனக்குப் பின்னாலே, எங்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர்கள் பேச இருக்கிற காரணத்தினால் முக்கியமான சில விஷயங்களைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

மதுவிலக்கு சம்பந்தமாக இந்த அறிக்கையிலே சொல்லப் பெற்றிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கையை நாங்கள் இன்னும் முழுமையாக கைவிடவில்லை. நாங்கள் இன்னும் உறுதியாக அதைக் கடைப்பிடிக்கிறோம் மதுவிலக்குப் பிரச்னையில் சிலபல விதிகளைத் தளர்த்தியிருந்தாலும் கூட, முழுமையாக தளர்த்தப் பெறவில்லை. அந்த மதுவிலக்குக் கொள்கையை பிரச்சாரம் மூலம் பரப்புவதற்கு நாங்கள் 1 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொருத்த மட்டிலும் நாங்கள் மதுவிலக்குக் கொள்கையை முழுமையாக அரசாங்கம் கைவிட வேண்டும் என்றுதான் சொல்கிறோம். அடுத்து, ஒரு புறத்திலே போலீஸ்காரர்களைப் பற்றிச் சொல்

கிற நேரத்திலே, அவர்கள் நடுநிலைமையாக அவர்களுக்கு என்று இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று இந்த அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் மறுபுறத்திலே, மதுவிலக்கு கொள்கை சம்பந்தமாக சொல்கிற நேரத்திலே, மதுவிலக்கு கொள்கை நாட்டிலே இருக்கிறதா இல்லையா என்று கேட்கும் அளவில் எங்குப் பார்த்தாலும் கள்ளச்சாராயம் இருக்கிறது என்றும், மதுவிலக்குச் சட்டத்தை திருத்துவதன் மூலம், சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்கின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்கச் செய்ய வழி செய்ய முடியும் என்று இந்த அறிக்கையிலே அரசின் கருத்தாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு புறத்திலே போலீசாரை வரவேற்று நடுமுறையில் செயல்படுகிறார்கள் என்று சொல்லி விட்டு, மறுபுறத்திலே கள்ளச் சாராயம் பெருகிவிடுகிற காரணத்தினால், மதுவிலக்கு விதிகளை தளர்த்துவதாக குறிப்பிட்டிருப்பது. போலீஸ்காரர்களுக்கு கொடுக்கப்பெற்றிருக்கிற சர்டிபிகேட் ஆகும். அவர்களுக்கு இப்படி சர்டிபிகேட் கொடுப்பதினால், மேலும் அவர்கள் தவறுகளை செய்வதற்கு அது உதவியாக இருக்கும் என்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கள்ளச் சாராயத்தை முழுவதும் ஒழிக்க முடியாத போலீஸ் நிர்வாகத்தில், ஒரு சிலரே அதனால் பயன் அடைகிறார்கள் என்று சொன்னாலும், அவர்களுக்கு சர்டிபிகேட் கொடுப்பது என்பது மேலும் அவர்கள் கையை பலப்படுத்துவதேயாகும்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், ஆளும் கட்சிக்கு தோழமை கட்சியில் இருக்கிற காரணத்தினால், ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்தில் இருக்கக் கூடிய நிர்வாக சீர்கேடு, மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. போலீஸ்காரர்கள் தங்கள் கையில் இருக்கக் கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தான் அடித்தப் போக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷன்களுக்கு புகார்கள் கொடுக்கச் சென்றால், புகார் கொடுக்க வந்திருப்பவர்களையே, போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து வைக்கிற ஒரு சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்தில் இருந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே போலீஸ்காரர்களுக்கு சர்டிபிகேட் கொடுப்பது மாத்திரம் அல்லாமல், அவர்களுக்கு குறைந்தவிலையில் பொருட்களைக் கொடுக்கக் கூடிய இந்த அரசாங்கம், அதே பரிவுடன் மற்றும் உள்ள அரசு ஊழியர்கள், தீயணைப்புப் படையினர், ஆசிரியர்கள் போன்றோர் விடுக்கும் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து, ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைபோல கூட்டுறவு சம்பந்தமாகவும் இந்த அறிக்கையிலே சொல்லப்பெற்றிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்திலே இருக்கிற சித்தாமணி சிறப்புக் கூட்டுறவு அங்காடி என்று சொல்லக்

கூடிய அங்காடி, தமிழகத்திலே, ஏன் இந்தியா முழுவதிலுமே இருக்கக் கூடிய கூட்டுறவு அங்காடிகளில் சிறந்தது என்று சொல்லக் கூடிய கூட்டுறவுச் சிறப்பு அங்காடியாகும். ஆனால் அந்த சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடியில் இன்று வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் எல்லாம், அந்தச் சிந்தாமணியே அழியக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சமூக விரோதிகள் தான் என்பதை என்னால் சொல்ல முடியும்.

சிந்தாமணியில் இருக்கக் கூடிய எல்லாப் பிரிவுகளிலுமே கரப்ஷன் இருக்கிறது. எற்கெனவே அங்கேயிருந்த அதிகாரிகளில் பலர் ஊழல் குற்றங்களை செய்ததாக கண்டுபிடிக்கப்பெற்று தண்டனை பெற்றவர்கள். அதிலே செக்ரட்டரியாக இருந்த ஒருவரின் மீது நடவடிக்கை எடுக்கப்பெற்று, அவர் இப்போது சஸ்பென்ஷனில் இருக்கிறார். அவருடைய தூண்டுதலின் பேரில்தான், இப்போது இந்த வேலை நிறுத்தமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அங்கே ஊழல் நடத்தியவர்களில் ஒரு சிலரால், நடத்தப் பெறுகிற இந்த வேலை நிறுத்தத்தினால், அங்கே இருக்கக் கூடிய சாதாரண தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வாங்கக் கூடிய பொதுமக்களும் பாதிக்கக்கப்படுகிறார்கள். ஆகவே, சிந்தாமணியில் இருக்கக் கூடிய ஊழலைக் களைய வேண்டுமேயானால், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[முற்பகல் 10-50]

செகரட்டரி ஊழல் நடத்தியதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்போது சஸ்பென்ஷனில் இருக்கிறார். அவர் பொள்ளாச்சி அருகில் உள்ள ஒரு ஊரில் ஒரு வேஸ்ட் காட்டன் மில் கட்டிக் கொண்டிருக்கிறார். ஒரு செகரட்டரிக்கு இந்த அளவிற்கு எப்படி பணம் வந்தது என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிந்தாமணியில் இருக்கக்கூடிய ஊழல் பற்றி இந்த மன்றத்தில் நான் பலமுறை எடுத்துச்சொல்லி இருக்கிறேன். அந்த ஊழல்களைக் களைவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

திருப்பூரில் உள்ள பனியன் தொழிலாளர்கள் கடந்த ஒரு மாத காலமாக வேலை நிறுத்தம் செய்து பல முறை பேச்சு வார்த்தைகள் நட்த்தி ஒரு முடிவிற்கு வந்து ஒரு சில முதலாளிகளும் தொழிற்சங்கமும் 200 கம்பெனிகளுக்கு மேல் ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறார்கள். அப்படி ஒப்பந்தங்கள் போட்டு வேலைக்குச் செல்கிற தொழிலாளர்களை அங்குள்ள ஒரு சில பனியன் கம்பனி முதலாளிகள் மிரட்டி அவர்கள்.

வேலைக்குச் செல்லக்கூடாது என்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய சூழ்நிலையில் தொழிற்சங்கத் தலைவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்தும் கூட அந்தப் புகார் கவனிக்கப்படாத ஒரு சூழ் நிலைதான் திருப்பூர் நகரில் இருக்கிறது. ஆக, பனியன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலைக்கு செல்கிற நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் போலீசார் நடவடிக்கை பற்றி இந்த அரசு கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்டத்தை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்கவேண்டும் என்று கடந்த வாரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றாகக் கூடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் விண்ணப்பங்கள் கொடுத்திருகிறார்கள். எனது மாவட்டம் வறட்சியால் கடுமையான முறையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. பல்லடம், அவினாசி, தொண்டாமுத்தூர் போன்ற பகுதிகள் பாசன வசதியில்லாத பகுதிகளாக இருப்பதால் வறட்சியால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவினாசி தொகுதியில் இருக்கக்கூடிய 55 பஞ்சாயத்துக்களையும் நானும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், பி.டீ.ஓ-வும் சுற்றி வருகிற நேரத்தில் அங்குள்ள மக்கள் கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில்லை. கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. பாசனவசதியில்லாத காரணத்தால் பயிர்கள் வாடிக்கொண்டிருக்கிறது. ஆகவே உடனடியாக நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய் விலை போகக்கூடிய ஒரு மாட்டை ஆயிரம் ரூபாய்க்கு கூட வாங்க ஆள் இல்லாமல் கேரளாவில் உள்ள பாலக்காடு மாவட்டத்திற்கு அடிமாடுகளாக கொண்டு செல்கிறார்கள். இப்படிபட்டதொரு சூழ்நிலை அவினாசியில் இருக்கிறது. பல்லடம் தொகுதியிலும் இதே நிலைதான் இருக்கிறது. ஆகவே கோவை மாவட்டத்தை வறட்சிப் பிரதேசமாக பிரகடனப்படுத்தி அங்குள்ள கிணறுகளுக்கு தண்ணீர் வரவும் பாசனவசதி ஏற்படுத்திக்கொடுப்பதற்கும், கால்நடைகளுக்கு தீவனம் கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி பாசன வசதி இல்லாத தொகுதியாக இருப்பதன் காரணமாக பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை அமல் படுத்துவதற்கு மத்திய அரசிடமும் கேரள அரசிடமும் பேச்சுவார்த்தைகள் நடத்தி உடனடியாக அந்தத் திட்டத்தை

அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும் இந்த மன்றத்தில் நான் ஏற்கனவே வலியுறுத்தி இருக்கிறேன். ஆகவே இந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவினாசி தொகுதியைப் பொறுத்தவரையில் அது விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய பகுதி. அங்கு தொழில் வளர்ச்சியோ அல்லது தொழில் வளமோ இல்லாத காரணத்தால் அங்கே தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். தொழில் கொள்கை பற்றி அரசு எற்கனவே அறிவித்திருக்கிறது. கூட்டுறவு ஆலை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆலை அமைக்க வேண்டும் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தொழில் வளம் இல்லாத பகுதியாக இருக்கக் கூடிய என் அவினாசி தொகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் என் தொகுதியில் உள்ள தெலுங்குப்பாளையம் கிராமத்தில் ஒரு காகித தொழிற்சாலை அமைக்கப்படவேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானங்கள் போட்டு தமிழக அரசுக்கு அனுப்பபட்டிருக்கின்றன. அவினாசி தொகுதியில் கரும்புச்சக்கையைப் பயன்படுத்தி ஒரு காகித ஆலை அமைக்க முடியும். எனவே தெலுங்குப்பாளையத்தில் ஒரு காகித ஆலை ஆரம்பிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தேவூரில் சிட்கோ மூலம் சிறு சிறு தொழிற்சாலைகள் அமைக்க உத்தரவு போட்டிருந்தார்கள். இப்போது அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்று அதிகாரிகள் மூலம் சொல்லப்படுகிறது. ஆகவே தேவூரில் சிட்கோ மூலம் சிறு சிறு தொழிற்சாலைகள் அமைத்துத் தர அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியாகிய அவினாசித் தொகுதியில் சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. எனவே, அங்கே சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 149 ஹாண்ட் பம்புகள் இருக்கின்றன; அவைகளில் கிட்டத்தட்ட 45 ஹாண்ட் பம்புகள் வேலை செய்வதில்லை. 35 மைல்கள் நடந்து வந்துதான் அதாவது கோவை நகருக்கு வந்து அங்குள்ள குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சென்று மோட்டார் அல்லது ஹாண்டு பம்பை ரிப்பேர் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு சிறிய ரிப்பேர் என்று சொன்னாலும், அதற்காக 35 மைல்கள் நடந்து வரவேண்டியிருக்கிறது. கோவை நகரத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தின் 3 அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தினால், ஒரு சிறிய ரிப்பேருக்காக 35 மைல்கள் நடந்து செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால், இந்த மூன்று அலுவலகங்களில் ஒன்றை அவினாசியிலும், மற்றொன்றை பொங்கலூரிலும், இன்னொன்றை தொண்டாமுத்தூரிலும், இப்படி பல இடங்களுக்கு விரிவுபடுத்தினால், அங்கே இருக்கக்கூடிய மக்கள் இந்த ஹாண்டு பம்புகளை, கிணறுகளிலே இருக்கக்கூடிய மோட்டார் பம்புகள் பழுதடைந்தால் அவைகளை உடனடியாக சரி செய்து கொள்ள முடியும். அப்படி நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். குடிநீர் பிரச்சினை என்பது மிகவும் கடுமையாக இருக்கிறது. எனவே, அந்த குடிநீர் பிரச்சினையை சரி பார்க்கின்ற முறையில், வடிகால் வாரியத்தில் இத்தகைய ஹாண்ட் பம்புகளை ரிப்பேர் செய்வதற்குப் பதில், அங்கே இருக்கக்கூடிய நகராட்சிகளுக்கும் ஒன்றியங்களுக்கும் ஒப்படைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அப்படி நகராட்சிகளிடத்திலும், ஒன்றியங்களிடத்திலும் ஒப்படைத்தால் தான், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளை நாங்கள் பார்த்து, ஆங்காங்கே உள்ள ஹாண்டு பம்புகளை, மோட்டார்களை உடனுக்குடன் பழுது பார்த்துக்கொள்வதற்கு, எடுத்துச் செல்வதற்கு வசதியாக இருக்கும். அதை விட்டு விட்டு, 35 மைல்களுக்கு அப்பாலுள்ள அலுவலகத்திற்கு வந்து, அதை சரி செய்து எடுத்துக்கொண்டு செல்வதற்குள், அங்குள்ள மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு, குடிநீர் வடிகால் வாரியத்தின் கையில் இருக்கக்கூடிய அந்தப் பொறுப்பை, அங்கே இருக்கக்கூடிய ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தை ஒரு வறட்சிப் பிரதேசமாக பிரகடனம் செய்து, உடனடியாக அங்கே வறட்சியைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவினாசி தொகுதியை தொழில் வளமாக்க, அங்கே பஞ்சாலை, காகித தொழிற்சாலை ஒன்று, சிறிய சிறிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு கடைசியாக ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அவினாசி என்பது ஒரு தனி தாலுக்காவாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கக்கூடிய கிராம மக்கள் வைத்திய வசதியில்லாமல் இருக்கக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. பிரைமரி ஹெல்த் சென்டர் என்ற ஒரு அமைப்பு மட்டும் இருக்கிறது. நான் பல கட்டங்களில் இதைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். உடனடியாக அங்கே ஒரு அரசாங்க மருத்துவமனையை அமைக்கவேண்டும். இதற்காக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் தீர்மானம் போட்டு, இங்கே அனுப்பியிருக்கிறோம். தாலுக்கா அளவிலே அங்கே ஒரு மருத்துவமனை இல்லாது இருக்குமானால், அங்கே இருக்கக்கூடிய மக்கள் எங்கே வைத்தியம் செய்து கொள்வார்கள்? திருப்பூருக்குச் செல்லவேண்டும், இல்லையேல் கோவை நகருக்கு வரவேண்டும் என்ற ஒரு அவல நிலைமை இருக்கின்ற காரணத்தினால், அவினாசியில் அரசு மருத்துவமனை ஒன்றை அமைத்து, அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு வைத்திய வசதி ஏற்படுத்தக் கூடிய முறையில், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாஞ்சில் வின்சென்ட். சுருக்கமாக, விளக்கமாக, விவாதத்தில் சூடு வராமல் பேச வேண்டும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையை மனவளம் படைத்தவர்கள், நல்லவர்கள், பாராட்டுகிறார்கள். இந்த பட்ஜெட் கற்கண்டு கலந்த பசும் பால். தமிழகத்திலுள்ள ஏழைகளை வாழவைக்க ஒரு தலைவர் பிறந்தார். அவர்தான் புரட்சித்தலைவர் என்பதை இந்த பட்ஜெட் காட்டிவிட்டது. ''பணக்காரர்களை தட்டிக் கேட்போம், ஏழைகளை தட்டிக்கொடுப்போம்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ''டாப் தி ரிச், பேட் தி புவர்'' என்பதற்கேற்ப, அந்த வழிப்படி இந்த பட்ஜெட்டை நாவலர் அவர்கள் தீட்டியுள்ளார்கள். அப்பளம் ரொட்டிக்கு வரி விலக்கு கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. பத்திரிக்கைக் காகிதத்திற்கு விற்பனை வரியை 8 சதவிகிதத்திலிருந்து, 4 சதவிகிதமாக குறைத்திருக்கிறார்கள். பத்திரிக்கை உலகம் இதைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. பாசமுள்ள உறுப்பினர்களே, வாழ்வெல்லாம் இருள்கவ்வி' ஒளி கிடைக்குமா என்று கேள்வியை எழுப்பி வாழக்கூடிய

குடிசைப் பகுதிகளுக்கு மின்ஒளி வழங்கி 2,70,000 குடிசைகளுக்கு ஒளி தீபத்தை எழுப்பிய புரட்சித்தலைவர் அவர்களைப் பாராட்டக் கூடாதா? கிராம குடிநீர் வசதிக்காக 8 கோடி ரூபாயை ஒதுக்கிவிட்டு, புரட்சி பட்ஜெட் என்று 1975-வது ஆண்டு வாயாரப் பேசியவர்கள், குடிநீர் வசதியில்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்பதற்காக 24.5 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ள புரட்சித் தலைவர் அவர்களை பாராட்டக் கூடாதா?

[முற்பகல் 11-00]

தேர்தல் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றும் அரசு புரட்சித் தலைவர் அரசு. 60 கோடி விவசாயிகள் கடனை கொடுத்து விட்டு நாங்கள் தான் விவசாயிகளுக்காக ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்லிய பேர்களை, ஓராண்டு காலத்திற்குள் 71 கோடி ரூபாய் விவசாயிகளின் கடனை ரத்து செய்துள்ளது, இந்தியத் துணைக்கண்டத்திலே எடுத்துக் காட்டாக விளங்குகின்றார் எங்கள் புரட்சித் தலைவர்தான் நீங்கள் அவரை பாராட்டக் கூடாதா? கடனை திருப்பி செலுத்துவதற்கு அரசு நிதி உதவி செய்திருக்கிறது. சான்றிதழ் கொடுத்த விவசாயிகள் பட்ட கடனை தீர்க்கும் அரசு இந்த துணைக்கண்டத்தில் புரட்சித் தலைவர் அரசைத் தவிர வேறு எந்த அரசாவது உண்டா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். கலைஞர் ஆட்சிக் காலத்தில், கொடுத்த கடனை ரத்து செய்து சான்றிதழ் கொடுத்திருந்தால் விண்ணுக்கும் மண்ணுக்கும் எகிறி, மலர் கிரீடம் அணிந்து விழா கொண்டிருப்பார்கள் அடக்கத்தை விரும்பும் எங்கள் புரட்சித்தலைவரோ விளம்பரம் இல்லாமல் ஏழை விவசாயிகளுக்கு கடனை ரத்து செய்து சான்றிதழ் அளித்திருக்கிறார்கள். இது இந்திய துணைக் கண்டத்திற்கே எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை என்பது தவறாகும். ஆந்திர மாநிலத்தில் பட்ஜெட்டில் தொழிலுக்கு ஒதுக்கீடு செய்த தொகை 20 கோடி ரூபாய் தான். தமிழகத்தில் 32 கோடி ரூபாய் முதலீட்டில், மதுரை மாவட்டத்தில் அரசுத் துறையில் மூன்றாவது சிமின்ட் தொழிற்சாலை, வட ஆற்காடு மாவட்டத்தில் ஸ்வீடன் நாட்டு கூட்டோடு 20 கோடி ரூபாய் செலவில் வெடி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை; கூட்டுறவு துறையில் மேலும் மூன்று நூற்பாலைகள்; சர்க்கரை ஆலை ஒன்றுக்கு 2 கோடி ரூபாய். 3 கோடி ரூபாய் செலவில் கனிப் பொருள் செறிவு படுத்தும் — வெப்பந்தாங்கிக் கல் தயாரிக்கும்

தொழிற்சாலை. இப்படி தன்னாலியன்ற அளவிற்கு தொழில் வளர்ச்சியில் புரட்சித் தலைவர் அவர்கள் அக்கறை எடுத்து இருக்கிறார். தொழில் வளர்ச்சிக்கு நமது மாநில அமைப்புகள் சிப் காட், டிட்கோ, சிட்கோ போன்றவைகள் செய்து வருகிற சேவையை உலக வங்கியே பாராட்டிக் கொண்டிருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில் மிகப்பெரிய தொழிற்சாலை அனைத்துமே மத்திய அரசுக்கு சொந்தமானவை, கர்நாடகத்தில் அனைத்து பெரிய தொழிற்சாலைகளும மத்திய அரசுக்குச் சொந்தமானவையே. தமிழகத்தில் மத்திய அரசின் தொழில் முதலீடு 1967 ஆம் ஆண்டிற்கு பின்னால் எதுவும் இல்லை. இது மத்திய அரசு * தமிழகத்தினை புறக்கணித்திருக்கிறது. ஒதுங்கியிருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்து இருக்கிறது. வீரமுள்ள இந்திரா காங்கிரஸ் தோழர்கள் ஒன்றுபட்டு போர்க் குரலை மத்திய அரசுக்கு எழுப்ப வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். வறட்சி தமிழகத்தில் மட்டுமல்லாமல் கோதாவரி, கிருஷ்ணா போன்ற ஜீவ நதிகள் பாயும் ஆந்திராவிலும் வறட்சியே, ஆனால் ஆந்திராவில் வறட்சியை வைத்து அரசியல் நடத்தும் எதிர்க்கட்சிகள் இல்லை. புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வறட்சிநிலைமையைப் போக்க நிதிநிலைமை முட்டுக் கட்டையாக இல்லாமல் துயர் துடைப்பு நடவடிக்கைகளை போர்க் கால நடவடிக்கைகளாக நடத்திக் கொண்டிருக்கிறது. தாய் பாசம் மிக்க புரட்சித் தலைவர் அவர்கள் நேரடியாக வறட்சி மாவட்டங்களுக்குச் சென்று நிலையை கண்டறிந்து உள்ளார். வறட்சி நிலைமையை விவாதிக்க உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப் பட்டுள்ளது. ஆய்ந்து உணர்ந்து உண்மை மதிப்பீட்டை மத்திய அரசுக்கு அனுப்ப உள்ளது இந்த அரசு. வறட்சி நிலைமையை பற்றி அண்ணா தி.மு.க. உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் டிசம்பர் மாதத்திலேயே மத்திய அரசின் கவனத்தை இராஜ்ய சபாவில் ஈர்த்துள்ளார். 7½ ஆண்டு கலைஞர் ஆட்சியில் வறட்சி இருந்தது. 1971-ல் கடும் வறட்சி 1974—75-ல் வறட்சியே, அப்போது கலைஞர் அவர்கள் ஆட்சி எப்படி செயல்பட்டது என்பதற்கு அன்றைக்கு மத்திய அரசில் நிதி அமைச்சராக இருநத திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சாட்சி, வரட்சி நிவாரணத்திற்கு கொடுக்கப்பட்ட தொகை சரிவர செலவிடப்படவில்ல என்று அவர் சொன்னார். கணக்கு சரியாக இல்லை என்று அவர் சொன்னார். தவறு நடந்ததாக அன்றைக்கே அவர் சொன்னார். கலைஞர் ஆட்சியில் வறட்சி காலத்தில் அன்றைய மத்திய நிதி அமைச்

சர் இப்படியெல்லாம் குற்றம் சாட்டினார். வறட்சியால் வாடும் தமிழக மக்களைப் பற்றி அன்று கலைஞர் அவர்கள் கவலைப்படவில்லை..........(குறுக்கீடு) .

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். கலைஞர் ஆட்சிக் காலத்தில் வறட்சி இருந்தது. வறட்சி இருந்த காலத்தில் மத்திய அரசு பணம் கொடுத்தது. அப்போது மத்திய அரசிலே அமைச்சராக இருந்தவர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள். அவர் அன்றைக்குச் சொன்னார். வறட்சிப்பணம் சரியாகச் செலவு செய்யப் படவில்லை. கணக்கு வைக்கப்படவில்லை. முறையாக அரசு செலவு செய்யவில்லை என்று கலைஞர் ஆட்சியைப்பற்றி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அன்றைக்கு தெரிவித்திருக்கிறார் என்று இன்றைக்கு நண்பர் மாண்புமிகு உறுப்பினர் வின்சென்ட் சொல்லியிருக்கிறார். அப்படி சொன்னதற்கு என்ன ஆதாரத்தை கையிலே வைத்துக்கொண்டிருக்கிறார்? அவர்கள் சொல்வதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

* * * *

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அனுமதியின்றி பேசப்பெறுகிற அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பெறும். தலைவர் நிற்கும்போது உறுப்பினர்கள் அமர்ந்து விட வேண்டும். மாண்புமிகு மின்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சில் வின்சென்ட் பேசிக் கொண்டே வந்தார்கள். அவர்கள் முழுவதும் பேசுவதற்குள்ளாக மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் இடைமறித்துப் பிரச்சினையைக் கிளப்பி விட்டார்கள். பொதுவாக ஒரு சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமானது. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதைப்பற்றி அன்றைய மத்திய நிதி அமைச்சர் அவர்கள் குறை கூறினார்கள். அதை எதிர்த்து அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தெளிவாகச் சொன்னார்கள். இப்படியெல்லாம் குறை சொல்வதாக இருந்தால் மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதைக் கூட நாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். ஆகவே இது ஒரு சம்பவம். இந்த சம்பவத்தை, அரைகுறையாகத்தான் சொன்னார். அவர் அதைச் சொல்லிக் கொண்டே வருகிறார். அப்போது திரு. துரைமுருகன் இடைமறித்து அனாவசியமாக பிரச்சினையைக் கிளப்பி விட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அந்த சம்பவத்தைப் பற்றிப் பேசுவது முறையானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. துரைமுருகன் : மின்துறை அமைச்சர் அவர்கள் சாதுரியமாக அவருக்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கிறார். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சரியாக கணக்கு வைக்கவில்லை என்று சொன்னதாகச் சொல்கிறார். அதற்கு என்ன ஆதாரம் என்று குறிப்பிட்ட வார்த்தையை முதலமைச்சரவர்கள் ..... (கூச்சல்— குழப்பம்)

(குறுக்கீடு)

* * * *

[முற்பகல் 11–10]

நான் இதே சபையிலேயே சொல்லுகிறேன்.

அவர்கள் கையிலே ஆதாரம் இருக்கிறதா? அன்றைக்கு திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்பொழுது.

* * * *

திரு மி. வின்சென்ட் : * * *

திரு. துரைமுருகன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்குள்ளே எவ்வளவு வேண்டுமானாலும் நட்பு இருக்கலாம். ஆனால் ஒருவருக்கொருவர் இப்படிப் பேசிக் கொள்வதை நான் அவையில் அனுமதிக்கத் தயாராக இல்லை. அவை அனைத்தையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஆதாரம் எங்கே; என்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வறட்சி நிவாரணத்திற்கென பணத்தை வாங்கி அதைச் செலவு செய்தது சரியில்லை என்று அன்றைய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறினார்கள் என்பதுதான் கூற்று. அவ்வாறு சொல்லவில்லையென்று திரு. துரைமுருகன் மறுக்கிறார்களா? அப்படியென்றால் இதற்கு ஏதாவது ஆதாரம் காட்டுகிறார்களா? அந் நிகழ்ச்சி ஊர் தெரிந்த உண்மை; உலகறிந்த உண்மை. இன்று எதிர்க் கட்சித் தலைவராக இருப்பவர் அன்று முதலமைச்சராக இருந்தபோது, இப்படிச் சொல்வதாக இருந்தால் நாங்கள் இனி மேற்கொண்டு திரு. சி. சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருக்கும் வரை பணம் கேட்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, திரு. மி. வின்சென்ட் பேச்சிற்குத் தனியே ஆதாரம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நான் ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அன்றைக்கொரு நாள் திரு. ரகுமான்கான் அவர்கள்.........(கூச்சல்—குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன் கொஞ்சம் அமைதியாக இருக்கவேண்டும். உறுப்பினர் திரு. வின்சென்ட் ஒரு பழைய சம்பவத்தை நினைவுபடுத்தினாரே தவிர புதுமையாக ஒன்றும் சொல்லவில்லை.

திரு. துரைமுருகன் : அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். எங்களுக்கு ஒரு தீர்ப்பு, அவர்களுக்கு ஒரு தீர்ப்பு என்று இருக்கக் கூடாது. நான் என்ன சொல்கிறேன் என்பதைக் கேட்க வேண்டும். அதைச் சொல்ல எனக்கு அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் தங்களுடைய மேலான சவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, இன்று நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது. மாலையில் பேரவையை வைத்துக் கொள்ள வேண்டுமோ என்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆக மாலையில் வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதிலே ஒன்றும் பிரச்சினையே இல்லை. அதாவது, ஒரு அலிகேஷன், ஒரு குற்றச்சாட்டைச் சொல்கின்றபோது ஆதாரங்கள் தேவை. ஆனால் இங்கே சொல்வது, it is a political event ஒரு அரசியல் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார் ஒரு உறுப்பினர். அந்தச் சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறபொழுது வேண்டுமென்றே திரித்துக் கூறக் கூடாது; ஆனால் அந்தச் சம்பவத்தை

முழுவதும் அப்படியே சொல்கிறார். அது எந்தவகையிலேயும் தவறு இல்லை. Political event can be narrated. But the only thing is that it should not be distor. Also political event cannot be construed as a charge. ஆகையினாலே திரு. வின்சென்ட் அவர்கள் பேசுவது ஏற்புடைத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் :** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வின்சென்ட் பேசிய பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இரண்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். அவர்கள் பதில் சொல்லலாமே ?

திரு. துரைமுருகன்:** ** ** (கூச்சல்— குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. எதுவும் எழுத வேண்டாம்...... (கூச்சல்— குழப்பம்)

[முற்பகல் 11-20]

* திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே இதுபோன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் அடிக்கடி தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. எங்களைப் போன்ற உறுப்பினர்கள், எங்களைப் போன்ற என்பது கூட தவறு, எல்லா உறுப்பினர்களும் இந்த அவைக்கு மக்களால் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவரவர்களுடைய கருத்துக்களை, அவரவர்களுடைய கட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் எடுத்துச் சொல்வதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. சந்தர்ப்பம் இருக்கிறது. இந்த அவை மிகவும் பாரம்பரியமும் பெருமையும் கொண்ட அவை.. நான் சில விஷயங்களைச் சொல்லுவதற்கு அவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்.

இந்த அவையிலே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். எதிர்கட்சி வரிசையிலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் ஜீவா அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இந்த அவையிலே ஒரு தடவை பேசும்போது, அவர்களுடைய சொந்தத் தொகுதியைப்பற்றிச் சொன்னார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்னுடைய தொகுதியில் மருத்துவ விடுதி வேண்டும், பள்ளிக் கூடம் வேண்டும் என்று அவர் சொன்னார். மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் எழுந்து நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஜீவா அவர்கள் ஒரு சர்வ தேசியவாதி, அவர் ஒரு தொகுதியைப் பற்றி எதற்கு வீணாகக் கவலைப்படுகிறார் என்று சொன்னார். உடனே தலைவர் ஜீவா அவர்கள், அதற்குப் பதில் சொன்னார், உண்மைதான் நான் ஒரு சர்வ தேசீய வாதிதான். ஆனால், அதே நேரத்தில் ஒரு தொகுதியில் இருந்து பிரதிநிதியாக இந்த அவைக்கு வந்திருக்கிறேன். ஆனால் நீங்கள் என்னைப் போல் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு வரவில்லை. ஆளுநரால் நியமிக்கப்பட்டு வந்திருக்கிறீர்கள். அதனாலே நீங்கள் ஆளுநருக்குப் பதில் சொன்னால் போதும், நான் தொகுதி மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று சொன்னார். இப்படி அவையிலே ஒருவர் பேசுவதும் அதற்கு மிகவும் நாகரீகமான முறையில் பதில் சொல்வதும் ஒரு நல்ல மரபாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அன்றைக்கு ஒன்றுபட்ட காங்கிரசில் துணைத் தலைவராக மதிப்பிற்குரிய மறைந்த வினாயகம் அவர்கள் இருந்தார். அவர் அண்ணா அவர்களைப் பார்த்துச் சொன்னார். 'Your days are numbered' 'உங்களுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன' என்று சொன்னார் அதற்கு அண்ணா அவர்கள் எழுந்து 'Yes, but my steps are measured' 'ஆம், ஆனால் என்னுடைய அடிகள் அளந்து வைக்கப்படுகின்றன' என்று சொன்னார்கள்.

அவையிலே எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை சம அந்தஸ்து இருக்கிறது. எல்லோரும் சமமாகத்தான் இருக்கிறோம். அவைக்கு வெளியே எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த அவைக்கு உள்ளே வந்த பிறகு, ஒருவர் அரசியல் ரீதியாக கருத்துக்களை எடுத்துச் சொன்னால், அதற்கு அரசியல் ரீதியாக அடுத்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பதில் சொல்லுகிற ஒரு மரபினை, ஒரு நல்ல நாகரிகத்தை சம்பிரதாயத்தை இந்த அவையிலே இதற்கு முன்னால் இருந்த பல பெரிய தலைவர்கள் உருவாக்கிக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆனால் அண்மைக் காலத்தில் இந்த அவையிலே அன்றாடம் ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள் எங்களைப் போன்ற பல நண்பர்கள் எதற்காக இந்த அவைக்கு வந்திருக்கிறோம் என்று வேதனைப்பட வைத்திருக்கிறது. நான் யாரையும் குற்றம் சாட்டுவதற்காக இதைச் சொல்லவில்லை,

இந்த அவையின் மரபு ரொம்பவும் உன்னதமானது. இந்த அவையிலே மிகப் பெரிய தலைவர்கள் எல்லாம்—முதலமைச்சர்களாக, அமைச்சர்களாக, எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்து

இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த அவையின் உன்னதமான மரபை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். இந்தியாவிற்கே தமிழக சட்டமன்றம் எத்தனையோ விதங்களில் வழிகாட்டியாக இருந்து இருக்கிறது. இந்த அவையில் சகல தரப்பைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இந்த அவையிலே எல்லோரும் நிதானத்தோடு, அமைதியாக இருந்து இந்த அவையை நடத்திச் செல்வதற்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பார்களேயானால் இந்த அவை பெருமை பெறும், தமிழகம் பெருமை அடையும். இது போன்ற வேண்டாத நிகழ்ச்சிகள் இந்த அவையில் தொடர்ந்து நடக்காத வண்ணம் சகல உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இது போன்று தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கின்ற இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று எடுத்துச்சொல்லி, இதை யாரையும் குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை என்று கூறி அப்படி யாரும் எடுத்துக் கொண்டு விடக்கூடாது, அவர்களுடைய மனம் புண்பட வேண்டும் என்கிற முறையில் நான் எதையும் சொல்லவில்லை என்று எடுத்துச் சொல்லி, இந்த அவையின் மரபு காக்கப்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதிலே ஏற்பட்டு இருக்கின்ற பிரச்னை குறித்து நான் தெரிவிக்க விருபுகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் நெடுமாறன் அவர்கள் சொன்னது போல் இந்த அவையை அமைதியாக நடத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதில் இரண்டு வித கருத்துக்கு இடம் இல்லை. ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளைத் தாக்குவது தவறு என்று நான் சொல்ல மாட்டேன். அவர்களுடைய கருத்தை அவர்கள் சொல்லட்டும். ஆனால் இந்த அவையில் ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் பேசினார். எங்கள் கட்சியைக் குறித்து அவர் சொன்ன காரணத்தால் அதை நான் சொன்னேன். ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வறட்சிப் பணி செய்ததில் கணக்குச் சரியாக வைக்கவில்லை என்று முன்னாள் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருப்பதாகக் குறிப்பிட்டார். அதற்கு என்ன ஆதாரம்? எங்கே அப்படிச் சொன்னார், என்று நான் கேட்பதற்காக வந்தேன். அதற்குள் மாண்புமிகு நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அது ஒரு பெரிய பொலிட்டிக்கல்லாக இருந்த விவகாரமாகும் என்று சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் திரு. சுப்பிரமணியம் அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பார்களானால் அதற்கு வேண்டிய ஆதாரங்களை இந்த அவையிலே அவர் படித்துக் காட்ட வேண்டும். எந்த பத்திரிகையில் அந்தச் செய்தி வந்து இருக்கிறது என்பதைத்

தெரிவித்து இருக்க வேண்டும். காரணம் ஏற்கனவே இந்த மன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது—ஒரு குற்றச்சாட்டு சொன்னால் அதற்கான ஆதாரங்கள் தரப்பட வேண்டும், இல்லையென்றால், அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படும் என்று முன்னர் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இந்த மன்றத்தின் மரபுகள் இருக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் நான் அந்தப் பிரச்னையை எழுப்பினேன்.

இது போன்ற ஒரு பிரச்னையில் எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் ** ** ** ** அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படும் என்று சொல்லி, அது நீக்கப்பட்டு விட்டது. அதே போன்றுதான் இன்றைக்கும் நம்முடைய மாண்புமிகு வின்சென்ட் அவர்கள் எங்கள் இயக்கத்தின் மீது குற்றச்சாட்டு சொன்ன உடனே நான் கேட்ட கேள்வி, அதற்கு ஆதாரம் இருக்கிறதா, ஆதாரம் இருந்தால் படித்துக் காட்டுங்கள் என்று கேட்டேன். ஏனென்றால், அப்போதுதான் அதைப் படித்துப் பார்த்து நாங்கள் பின்னால் பதில் சொல்ல முடியும். பொத்தாம் போக்கில் இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டுப் போவது முடியாது. ஆதாரம் இருந்தால் அவர்கள் அருள்கூர்ந்து தலைவர் அவர்களிடத்தில் காண்பிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், நீங்கள் வழக்கமாகச் செய்வது போல், திரு. ரகுமான்கான் அவர்களுக்கு என்ன தீர்ப்பு வழங்கினீர்களோ அதைப் போல், அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

ஒன்றை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மன்றம் நடைபெறாமல் இருப்பதற்கு நானோ, எங்கள் கட்சியோ என்றைக்குமே தடையாக, இடையூறாக இருக்கமாட்டோம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களும், அதற்குப் பின்னால் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் பேச வாய்ப்பளிக்கிற போது அதை அமைதியாக உட்கார்ந்து நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறபோது, இப்போது கொடுத்தது போல் இரண்டு நிமிடம் முன்பே கொடுத்து இருந்தால், நான் இப்போது என்ன சொன்னேனோ அதைச் சொல்லி இருப்பேன். இந்த விவகாரமே சபையில் நடந்து இருக்காது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[முற்பகல் 11-30]

நான் இப்போதும் தலைவரவர்களிடம் கேட்டுக் கொள்வது இதுதான். அப்படி திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? இருந்தால் உங்களிடம் காட்டியிருக்கிறார்களா? ஆதாரம் இல்லை என்றால், தங்களிடம் காட்டவில்லை என்றால், அன்றைக்கு திரு. ரகுமான்கான் அவர்களுக்கு என்ன தீர்ப்பு வழங்கப்பட்டதோ அதைப் போன்ற தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். அவைக் குறிப்பில் ஏறக்கூடாது அவர்களுக்குப் பின்னாலே ஆதாரம் கிடைத்தால், அது பற்றி நாளை இன்னொரு உறுப்பினர் ஆதாரத்தோடு பேசட்டும். இப்படிப்பட்ட பிரச்னைகளிலே எங்களுக்கு ஒரு தீர்பபு, அவர்களுக்கு ஒரு தீர்ப்பு என்று இருக்கக் கூடாது. ஆகையால் அவர்கள் கூறியது சபைக் குறிப்பில் ஏறக் கூடாது என்பது என்னுடைய வாதம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் ஒன்றை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, வறட்சி வேலை செய்த போது, திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன கருத்தை எதிர்த்து, இப்படி எல்லாம் நடக்கிறது என்று கலைஞர் குறிப்பிட்டது சபைக் குறிப்பில் இருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, சட்டசபைக் குறிப்பிலே இருந்து கூட அதை எடுத்துக் கொள்ளலாம்; இதற்கு வெளியே போய் ஆதாரம் தேடவேண்டியதில்லை.

திரு. துரைமுருகன் : அப்படி இருந்தால் நாளை ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள் அந்த ஆதாரத்தை நாளை இன்னொரு அங்கத்தினரிடம் கொடுத்து பேசச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அன்று குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். ஆகவே, திரு. ரகுமான்கான் அவர்கள் கூறியதாக இன்று குறிப்பிட்டதும் அவைக் குறிப்பில் ஏறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, ஒரு குற்றச்சாட்டு என்கிற வகையில் ஏற்கெனவே இருந்த ஆட்சியின் மீது, இப்படி மத்திய அரசில் இருந்த திரு. சி. சுப்பிரமணியம் சொன்னார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பதற்கு திரு. துரைமுருகன் விண்ணப்பம் அல்லது வேண்டுகோள் விடுத்தார். இது ஏற்கனவே நடைபெற்ற ஒன்று. இதே மாமன்றத்தில் "நான் மத்திய

அரசிடமிருந்து எந்த உதவியும் கேட்பதில்லை" என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். இது ரொம்ப பழைய சம்பவம். இப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசில் இல்லை ஆகவே, இந்தக் குற்றச்சாட்டினால் ஒரு பெரிய தொல்லை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை.

திரு. துரைமுருகன் : ஆதாரம் இருந்தால் கொண்டுவரட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் சபைக் குறிப்பில் இருக்கிறது என்று சொல்கிறார்களே.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு பிரச்சனையை எழுப்பி, அதற்கு இன்னொரு பிரச்சனையை ஆதாரமாகக் காட்டியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். அதாவது, அரசியலிலே சில சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதாவது, 'பொலிடிகல் ஃபாக்ட்ஸ்' அல்லது 'பொலிடிகல் இன்சிடன்ஸ்' என்று சொல்வார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது என்பது ஒரு "ஃபாக்ட்". அதற்கு ஆதாரம் கேட்டு என்பது முறையல்ல. அதைப்போல அரசியலில் தொடர்ச்சியான சம்பவங்கள் உண்டு. அந்த சம்பவங்களை உறுப்பினர் அவையில் சொல்லலாம். அதைச் சொல்லக் கூடாது என்றால் அரசியல் நிகழ்ச்சிகளையே சொல்ல முடியாமல் போய் விடும். ஆனால், அந்த சம்பவத்தைச் சொல்லும்போது வேண்டுமென்று திரித்தோ, தங்களுக்குச் சாதகமான முறையில் பிரித்தோ சொல்வது என்பது கூடாது. ஆனால், இந்த சம்பவம் ஒரு பொலிடிகல் இன்சிடன்ட்; இட் இஸ்ய ஹிஸ்டரி. இதே மன்றத்தில் அதுபற்றி விவாதங்கள நடைபெற்றிருக்கின்றன. திரு. சி. சுப்பிரமணியம் குற்றச்சாட்டு சொன்னார் என்றால் அந்தக் குற்றச்சாட்டு அப்படியே இருந்தது என்று சொல்லவில்லை. அந்தக் குற்றச்சாட்டை இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய முதலமைச்சர் மறுத்திருக்கிறார் என்று வந்துவிடுகிறது. குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. அந்தக் குற்றச்சாட்டை அன்றைய முதலமைச்சர் மறுத்திருக்கிறார் என்ற சம்பவம் முழுமையாக வந்துவிடுகிறது. அதற்கெல்லாம் ஆதாரம் வேண்டும் என்றால் இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு உயரம் இருக்கிறார்களோ அவ்வளவு உயரத்திற்கு ஆதாரங்களை தேடிக்கொண்டு வந்துதான் பேச முடியும்.

இன்னொரு பிரச்சனையையும் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது ஏற்கனவே நீக்கப்பட்டது. மீண்டும் அவைக் குறிப்பில் ஏறக் கூடாது என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆகையால், அதை மீண்டும் சொல்ல விரும்பவில்லை.

ஆகவே, ஒரு காரியத்தை, அதாவது ஒரு ஃபேக்டை, ஒரு ஒப்பினியனை இன்னார், அவையிலே இருக்கின்ற ஒருவர் சொன்னார் என்று சொல்கின்றபோது அதை மறுப்பதற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. உதாரணமாக மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் இப்படிச் சொன்னார்கள் என்று சொன்னால், 'நான் எங்கே அப்படிச் சொன்னேன், அதற்குரிய ஆதாரத்தைத் தாருங்கள்' என்று கேட்கின்ற உரிமை அவருக்கு இருக்கின்றது. அந்த உரிமையினைத் தான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே ஒப்பினியன் இஸ் டிஃபரன்ட் ஃப்ரம் ஃபேக்ட். அந்த இரண்டையும் குழப்பிக் கொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரம் இருக்கின்றதா என்று திரு. துரைமுருகன் அவர்கள் கேட்டிருக்கிறார். அந்த ஆதாரங்களை திரு. நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் என்னிடத்திலே காட்டியதற்குப் பிறகுதான் அவர் குறிப்பிட்டவை அவைக் குறிப்பிலே ஏறும். அடுத்து, திரு. வின்சென்ட் அவர்களைத் தொடர்ந்து பேச அழைக்கிறேன். (குறுக்கீடு.) இரண்டு நிமிடத்திற்கு மேலே அவர் எடுத்துக்கொண்டால் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, இவைகளை எல்லாம் நான் இங்கே குறிப்பிட்டதற்குக் காரணம் தமிழக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைவழிபட்ட மத்திய உதவியை வேண்டாம் என்று அன்றைக்குச் சொல்லியதுதான். அன்றைய சூழ்நிலையில் வறட்சியில் இருந்த தமிழகத்தைப் பற்றி அவர்கள் அக்கறை இல்லாதவர்களாக இருந்துவிட்டு இன்றைக்கு அதைப்பற்றி அதிகமாகப் பேசக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சொன்னேன்.

அடுத்து, பினாமி சட்டம் குறித்து டெல்லிக்கு ஒன்பது முறை தந்தியும், தபாலும் அனுப்பியதற்குப் பிறகு தாமதப்படுத்துவது வருத்தத்திற்குரிய விஷயமாகும். இதைப் பரிகசிக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது. மாநில சுயாட்சி பற்றிப் பேசியவர்கள் மத்திய அரசு தாமதப் படுத்துவதற்கு நியாயம் கற்பிக்கக்கூடாது. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பிரபுக்கள் அப்படியே வைத்துள்ளார்கள். இப்படிப்பட்ட பினாமி நிலங்களின் சொந்தக்காரர்களை விசாரிப்

பதற்கு பகிரங்கமாக ஒரு விசாரணைக் கமிஷனையே அரசு அமைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைத்தால் கொத்தடிமை முறை ஒழியும், பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு வாழ்வு கிடைக்கும்.

அடுத்து, மதுவிலக்கு சற்று தளர்த்தப்பட்டுள்ளது. மதுவிலக்கினை கடுமையாக அமல்நடத்தியபோது எதிர்க்கட்சிகளை ஒடுக்க கடுமையான சட்டம் என்று அன்றைக்கு சொன்னார்கள். ஆனால், இன்று தாய் மீது இட்ட ஆணை என்ன ஆயிற்று என்று கேட்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற தாய்மார்களுக்கெல்லாம் தாய் புரட்சித் தலைவரே. ஆகவே, புரட்சித் தலைவரவர்கள் மதுவிலக்கினைத் தளர்த்தினாலும், தாய் மிதித்து குஞ்சு பாதிக்கப்படுவதில்லை. ஆகவே, மதுவிலக்கினைத் தளர்த்தியுள்ளார்களே தவிர மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த மட்டில் அது அப்படியேதான் இருக்கின்றது. ஆனால் மதுவிலக்கினைத் தளர்த்துவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? தமிழக மக்களைக் குடிப் பழக்கத்திற்கு ஆளாக்கியவர்கள் யார்? என்பது பற்றியெல்லாம் சதாசிவம் கமிட்டியின் அறிக்கை சொல்லிக்கொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-40]

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) மாற்றுந் தலைவர் பட்டியல்-உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் விதி 9 (1)-ன்கீழ் திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர் பட்டியலில் ஒருவராக நியமிக்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1981-82—பொது விவாதம் (தொடர்ச்சி).

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களால் பொறுப்பு மாற்றப்பட்டிருக்கும் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது காந்தி-காமராஜ் தேசீய காங்கிரசினுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்வதற்கு, உங்கள் முன்னால் எழுந்து நின்று கொண்டிருக்கிறேன்.

நமது நிதியமைச்சர் அவர்கள், தன்னுடைய நிதிநிலை அறிக்கையினை அலுவலாளர்கள், அதிகாரிகளுடைய துணையுடனும், அவர்களுடைய ஆழ்ந்த அகன்ற அனுபவத்தின் உதவியுடனும், நாட்டு மக்களுக்கு நலம் பயக்கின்ற வகையிலே தீட்டிட வேண்டும் என்று பெரும்பாடு பட்டிருக்கிறார்கள் என்பதை, இந்த நிதி நிலை அறிக்கையிலே வருகிற ஒவ்வொரு வரியும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

பாராட்டத் தகுந்த பல செய்திகள் இதிலே இருந்தாலும்,
அவைகளை பாராட்டுகின்ற மனம் நல்ல நெஞ்சங்களுக்கு இருந்
தாலும், நிச்சயமாக இருக்கிறது என்றாலும், அவைகளிலே ஒரு
சில செய்திகள் இன்னும் செம்மைப்படுத்தப்பட்டவைகளாக
இருக்க வேண்டுமோ என்று சொல்கிற எண்ணம் நமக்கு வராமல்
இல்லை.

இந்த அவையை நடத்துகின்ற அவைத் தலைவர் அவர்கள்,
குறள் வழி நடக்க வேண்டும் என்பதற்காகவே, தினம் ஒரு
குறளைச் சொல்லி, அவையைத் தொடங்குகிறார்கள். நமது
நிதியமைச்சர் அவர்களும் அந்த நீதி நூலிலிருந்து ஒரு திருக்
குறளை எடுத்து, அதனை விளக்கி விட்டுத்தான் தன்னுடைய
நிதிநிலை அறிக்கையினை தருகிறார்கள். அதிலே, நாட்டிற்கும்
மக்களுக்கும் அழகு வளப்படுத்த தேவை ஐந்து என்று சொல்லி,
நோயில்லாதிருத்தல், செல்வச் செழிப்பு, விளைபொருள் வளம்,
இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகியவை அவை என்று விளக்கிச்
சொல்கிறார்கள்.

ஆனால், இப்போது நமக்கு இருக்கிற இடர்பாட்டில், இப்
போது தமிழகம் இருந்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், அவர்
கூறிய இந்த ஐந்தையும் உரைகல்லிலே வைத்து உரைத்துப் பார்க்
கிறபோது, இவைகள் எந்த அளவிற்கு வாய்ப்புத் தருகின்றன
என்பதை நாம் கணிக்க முடியும். நோய் இல்லாது இருக்கிறதா ?
நோய் இருக்கிறது. செல்வச் செழிப்பு இருக்கிறதா ? போது
மான அளவுக்கு இல்லை. விளைபொருள்களுடைய வளம்
எப்படி இருக்கிறது ? குறைந்திருக்கிறது. இன்ப வாழ்வு ? அநேக
மாக கிடையவே கிடையாது. நல்ல காவல் இருக்கிறதா ?
முதலமைச்சர் அவர்களுடைய அறையிலேயே போதுமான காவல்
கிடைக்கப்பெறுவது இல்லை.

ஆகவே, குறள் வழி நடக்க வேண்டும் என்ற ஆசை அரசுக்கு
இருக்கிறது. அரசினுடைய எண்ணம் அமைச்சர் அவர்களின்
சொல்லாக இந்த நிதிநிலை அறிக்கையிலே வெளியிடப்பட்டிருக்
கிறது. இவைகள் அரசு மட்டுமே செய்ய வேண்டிய பணிகளா ?
அரசுக்குத் துணை இருக்கிற அதிகாரிகள் மட்டுமே செய்யவேண்டிய
பணிகளா ? அல்லது அரசு எந்த சமுதாயத்திற்காக ஆட்சி செலுத்
திக் கொண்டிருக்கிறதோ, அந்த சமுதாயமும் சேர்ந்து செய்ய
வேண்டிய பணிகளா என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப்பார்க்கக்
கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த அறிக்கையிலே அவர் சுட்டிக் காட்டுகின்றபோதே,
தமிழகம் எந்த சூழ்நிலையில் இப்போது வைக்கப்பட்டிருக்கிறது
என்பதையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள், ஒரு பக்கம்

அகில இந்திய அளவில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வும், ஒரு பக்கம் பண வீக்கமும், ஒரு பக்கம் பொருள்களின் பற்றாக்குறையும் இருக்கிறது போதாது என்று, மழையின்மையின் காரணமாக ஒரு பக்கம் வறட்சியும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை தெளிவாகவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அரசு ஓடி ஓடி பணியாற்ற வேண்டும் என்று விரும்புகிறது. முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிலையை எல்லாம் ஓடி ஓடிச் சென்று பார்த்து, வறட்சி இருக்கிறது, அவைகள் போக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். ஆனாலும், இவ்வளவு தூரத்திற்கு அதைப்பற்றி எடுத்துச் சொன்னதற்குப் பின்னாலும், இவ்வளவு பணிகள் உடனடியாக நிறைவேற்றவேண்டிய கடப்பாடு தமிழக அரசுக்கு இருக்கிற அதே நேரத்தில், எங்கள் தேவை இது வென்று சொல்லி மத்திய அரசுக்கு எழுதுகிற நேரத்தில், மாநிலத்தின் தேவைக்கேற்ப மொத்தப் பணத்தையும் உடனடியாக கொடுக்க இயலாமலிருந்தாலும், நீங்கள் பணிகளைத் தொடங்குவதற்கு உதவியாக முதலில் இவ்வளவு தொகையை ஒதுக்கிக் கொடுக்கிறோம், பிறகு எங்கள் குழுவை, வேண்டுமானால் அனுப்பி, பார்வையிட்டு அறிக்கை அளியுங்கள் என்று சொல்கிறோம்,—என்று சொல்லாமல், நாங்கள் ஏப்ரல் மாதம் 1-ம்தேதி வந்து பார்த்துவிட்டு, பிறகுதான் எவ்வளவு பணம் கொடுப்போம் என்று முடிவு செய்வோம் என்று சொல்வது மத்திய அரசு மாநில அரசுகளை புறக்கணிக்கிற நிலையில்தான் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

மாநிலங்களில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற அரசுகள், மக்களுக்கு பதில் சொல்லவேண்டிய அரசுகளாக இருக்கிறது என்பதையும், 11 மாவட்டங்களில் பஞ்சம் இருக்கிறது என்பதையும், அந்தப் பஞ்சம் உடனடியாக போக்கப்பெறவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள் என்பதையும், தெரிந்து கொண்டிருக்கிற, நம்முடைய மாநிலத்தின் பிரதிநிதியாக இருக்கிற ஆர். வி. சுவாமிநாதன் போன்றவர்கள் கூட, வறட்சி கடுமையாக இருக்கிறது என்று சொல்கிற நேரத்திலேயே, மத்தியிலிருந்து குழு வந்ததற்குப் பின்னால்தான், பணம் கொடுக்கப்பெறுவது குறித்து முடிவு செய்யப்பெறும் என்று சொல்லக் கூடிய நிலையைக் காணுகிறபோது, மத்திய அரசு மாநில அரசுகளை மதிக்கவில்லையோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட நல்ல தொகையை கையில் கொடுத்து உடனடியாக பணி நடக்கட்டும், வேகமாக விரைவாக நடக்கட்டும், சுறுசுறுப்பாக விறுவிறுப்பாக நடக்கட்டும் என்று, தண்ணீர்

இல்லாமல் வெடித்துக் கொண்டிருக்கும் பூமி ஒரு பக்கம், கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் மக்கள் ஒரு பக்கம், அவர்கள் துன்பத்தை, துயரைத்துடைக்க உடனடியாக பணிகளைச் செய்யுங்கள் என்று ஓரளவுக்கேனும் பணம் கொடுக்காமல் இனிமேல் ஏப்ரல் 1-ம் தேதிக்கு மேல் அது வந்து இங்கே பார்வையிட்டு பின்னால் என்ன செய்வது என்று சொல்லவேண்டும் என்று சொன்னால் மாளாத பசியோடு வாழ வழி இல்லாமல் நின்றுக்கொண்டிருக்கிற மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட தாமதங்கள் எந்த வகையில் பொருத்தமானது என்பதை மத்திய அரசு நினைத்துக் பார்க்க வேண்டுமென்று கருதுகிறோம். காரணம் இங்கிருக்கிற மக்களைப் பார்க்கிறபோது நிலைமை நமக்குத் தெரிகிறது.

இன்று வறட்சி காரணமாக குளங்களில் தண்ணீர் இல்லை என்பதையும் பார்க்கிறோம். இப்படி தண்ணீர் இல்லை என்பது மட்டுமல்ல. பலயிடங்களில் அந்த தண்ணீர் வரத்துக்கு உரிய கால்வாய்கள் கூட எப்படியிருக்கின்றன என்று நாம் பார்க்கிறோம். இங்கே நீர்ப்பாசனம் பற்றி நமது மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இத்தனை கோடி ரூபாய் நாம் இதற்காகச் செலவிடப்போகிறோம், இவ்வளவு செலவிட்டு இவைகளை நவீனப்படுத்தப்போகிறோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்த்து வருகிறவர்களுக்குத் தெரியும். இன்று நீர்ப்பாய்ச்சுகிற குளங்கள் எப்படி இருக்கின்றன என்று பார்த்தால் நீண்டநெடுங் காலமாக குளங்கள் தூர் எடுக்கப்படவில்லை. வாய்க்கால்களைப் பார்த்தால் பெரிய பெரிய மரங்கள் முளைத்து வளர்ந்து செழித்து நிற்கின்றன. அந்தளவிற்கு வாய்க்கால்க தூர் எடுக்கப்படாத நிலையில் குளங்கள் தூர் எடுக்கப்படாத நிலையில் இருக்கிற நேரத்தில் அது வெட்டவெளிப் பிரதேசமாக இருப்பதைப் பார்த்து பலர் அங்கே குடிசைகளைப் போடுகிறார்கள். பலர் தங்களுக்கு வாழ்விடம் பார்த்து அங்கே குடிசைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிறுவெள்ளம் வந்தாலும்சரிதான் வாய்க்கால்கள் தூர்ந்திருக்கிற காரணத்தால் பெருவெள்ளம் வந்தால் அதைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் வாய்க்கால்கள் வருகிற பாதையோரமெல்லாம் உடைப்பெடுத்து வெள்ளம் ஓடுகிறது. குளங்களுக்கு வருகிற நேரத்தில் குளங்கள் மேடுதட்டியிருக்கிற காரணத்தாலும் வீடுகள் கட்டியிருக்கிற காரணத்தாலும் அந்தத் தண்ணீர் அங்கே நிறுத்தப்படுவதற்கு வழி இல்லாத காரணத்தால் சிறுவெள்ளமே வெள்ளப்பெருக்கை ஏற்படுத்திவிடுகிறது. உடனே எங்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள் என்று ஏழை எளிய மக்கள் கேட்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்பு கேட்கும்போது அரசாங்கம் கொடுக்காமல் இருக்கவும் முடியாது. ஆகவே திட்டமிட்டு செயல்படுகிற ஒரு காரியத்தை—எங்கெங்கே

நீர்ப்பாசனப் பகுதிகளில் குடிசைகள் போட்டுக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களை எல்லாம் வேறு இடத்திற்கு அனைத்துக் கட்சியினரின் ஒத்துழைப்போடு—இன்று அரசாங்கம் ஒன்று செய்கிறபோது இன்னொரு கட்சி கொடியேந்தி வருகிறது என்றால் என்ன செய்வது என்ற எண்ணம் அரசுக்கு வருவது நியாயமே. ஆனால் மற்றவர்கள் ஒத்துழைப்பினைப் பெற்று அனைவரும் ஒன்றாகக் கூடியிருந்து இந்த இடத்தில் இருக்கிற குடிசைகள் இந்த இடத்திற்கு மாற்றப்படவேண்டும், இந்த இந்த இடங்களிலுள்ள குடிசைகளுக்குப் பதிலாக இந்த இடத்தில் நாம் வீடுகள் கட்டிக்கொடுப்போம் என்று அதற்கு எல்லோரும் ஒத்துழைக்கும் வகையில், எவரெவர் அதில் நியாயமான உரிமை உடையவர்களோ, நியாயமான வகையில் தகுதி உடையவர்களோ அவர்களுக்கு மட்டுந்தான் கொடுப்போம் என்று சொல்கிற அளவிற்கு நாம் பேசி ஒரு முடிவிற்குக் கொண்டுவர முடியும். அப்படிச் செய்யாது, இவ்வளவு கோடி ரூபாய் பாசனத்திற்காக ஒதுக்கியிருக்கிறோம், என்று சொன்னால் மட்டும்போதாது. இன்று மடை அடைப்புப் பலகைகள் உட்பட உடைக்கப்பட்டுக் கிடக்கிற நிலையைத்தான் நாம் எல்லாயிடங்களிலும் பார்க்கிறோம். இன்னும் சொல்லப்போனால் மேலே இருந்து தண்ணீர் வருகிறபோது, மேல் பகுதியில் இருக்கிற மக்கள் கால்வாய்களை அவர்களுக்குத் தகுந்தபடி வெட்டிக்கொண்டு போனாலும் கூட அதைக் கட்டிக்காப்பதற்குக்கூட ஆள் இல்லாது கீழ்ப்பகுதியில் இருக்கிறவர்கள் அவர்களுக்கு தண்ணீர் இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிற நிலையையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே நீர்ப்பாசனத்திற்காக இவ்வளவு செலவிடப்போகிறோம் என்று கூறுகிறவர்கள், செலவிடப்போகிறோம் என்று திட்டமிடுகிறவர்கள் அப்படி செலவு செய்யப்படுவது முறையாகச் செலவு செய்யப்படுகிறதா தேவையான அளவிற்கு மட்டும் செலவு செய்யப்படுகிறதா, அது செலவிடப் படுவதால் தகுந்த பலன் ஏற்படுகிறதா என்பதையும் பார்த்திடவேண்டும்.

இந்த நேரத்தில் நான் தொடர்ந்து இது பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். நாம் செய்கிற எல்லா வேலைகளுமே செவ்வனே செய்யப்படுகிறதா என்று பார்ப்பதற்குக்கூட, செலவினங்கள் பற்றி விசாரிப்பதற்கு ஒரு கமிஷன் போடலாம், 'எக்ஸ்பென்டிச்சர் கமிஷன்' என்று ஒரு கமிஷன் போட்டால் கூட தப்பு இல்லை. போர்ட்ஸ் வைக்கிறோம், கார்ப்பரேஷன்கள் வைக்கிறோம், தன்னிறைவுத் திட்டம் என்று வைக்கிறோம், இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் அவர்கள் கேட்டதை ஒதுக்குகிறோம். அதற்காக நாம் பணம் ஒதுக்குகிறோம். இப்படி பணம் ஒதுக்குவது பற்றி தப்பு இல்லை. ஆனால் பலன் வருகிறதா என்று பார்க்கவேண்டும்.

பணம் செலவு செய்வதில் தப்பு இல்லை. ஆனால் பலன் வருவாகிறதா என்பதைப் பார்க்கவேண்டுமென்றால் அதற்காக ஒரு குழு அமைத்து எங்கெங்கே என்னென்ன பணிகள் எவ்வாறு நடக்கின்றன என்று பார்ப்பது மிகவும் தேவை என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-50]

அடுத்தாற்போல், மீனவர்களைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே வந்திருக்கிறது. அந்த மீனவர்களைப்பற்றி ஒவ்வொரு நேரத்திலும் வருகின்றபோது, கட்டுமர மீனவர்கள் பிரச்னையும், விசைப்படகு மீனவர்கள் பிரச்னையும் பற்றி இந்த சட்டமன்றத்திலே பேசப்படுகிறது; நிதி நிலை அறிக்கையிலேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நடப்பது என்ன? அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. 3 மைல்களுக்கு அப்பால்தான் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்கவேண்டும்; ஆழ் கடலில் தான் அவர்கள் மீன்பிடிக்க வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. ஆனால், அப்படி ஆணை இருந்தாலும்கூட, அரசாங்கம உத்தரவு போட்டிருந்தாலும், அதை யாரும் பின்பற்றுவதாகத் தெரியவில்லை மீனவர்கள் குடியிருப்புப் பகுதிகளைப் போய்ப் பார்த்தால், அவர்கள் கடலிலே இருந்து மீன் எடுத்துக்கொண்டு வருவது ஒருபக்கம்; அந்த மீனைக் கொண்டு வருவதற்காக அவர்கள் கடலைக் கடந்துவருவதில் எத்தனைத் துன்பங்கள், தாக்குதல்கள், அடிதடிகள், கலகம் போன்றவைகள் நடக்கின்ற சூழ்நிலை இருக்கிறது? அண்மையில் கூட என்னுடைய தொகுதியில், எண்ணூருக்குப் பக்கத்தில் துப்பாக்கிச் சூடு நடக்கின்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. அதற்கு என்ன காரணம்? அரசாங்கம் நல்லவைகளைச் செய்ய விரும்பினாலும் கூட, அவைகளை செயல் முறையிலே நிலைநாட்ட வேண்டும். பாரதி சொன்னார்; ''இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்'' என்று அதற்கிணங்க எந்த விதிகளை அரசாங்கம் கொண்டுவந்தாலும் அந்த விதிகளை செம்மையாக செயல்படுத்துகின்ற பொறுப்பு, கடமை அதற்கு இருக்கிறது என்பதை நாம் பார்த்தால் உடனடியாக நாம் செய்யவேண்டியது, இங்கே இருக்கக்கூடிய எந்தக் கட்சியினரும் ஏழை மீனவர்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையில், அதற்காக மசோதா வருகின்றது என்று சொன்னால் நிச்சயமாக ஆதரிப்பார்கள் என்றும், இந்த மீனவர்கள் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற அளவிற்கு, அவர்கள் நிலையான வாழ்வு பெறுவதற்கு, செம்மையான ஒரு சட்ட முன்வடிவை இந்த அரசு உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்பதை ஒரு வேண்டுகோளாய் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் உற்பத்தியைப் பொருத்தவரையிலே, மூன்றில் ஒரு பங்கு செலவிடப்படுவதாகச் சொல்லுகிறார்கள். மிக உண்மை. ஆனால், மூன்றில் ஒரு பங்கு செலவிட்டும் கூட, மின் உற்பத்தி போதுமானதாக இல்லை. என்பது நமக்குத் தெளிவாகக் கூறுகிறது. போதுமானதாக இல்லை என்பதை எப்படி காண்கிறோம்? சில கிராமங்களிலே மின்விளக்குக் கம்பங்கள் இல்லை, சில கிராமங்களிலே மின்விளக்குக் கம்பங்கள் இருக்கின்றன; ஆனால் விளக்குகள் இல்லை. மின்விளக்குகள் இல்லாமல், கம்பங்கள் மட்டும் இருந்தால், அப்படிப்பட்ட நிலையிலே அந்தக் கம்பங்கள் எரியாத நிலையில் சுதந்திரமாக அந்த ஊர் மக்கள் இரவிலே நடமாடமுடியாது. முட்டியிலும், முதுகிலும் தட்டிவிடும் சூழ்நிலையிலே இந்தக் கம்பங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் மின்சார விளக்குகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்கின்ற அளவிற்குக் கூட மின்சாரம் இல்லை; விளக்குகள் இல்லை. யார் போடுவது! எரிந்து, தீய்ந்து.ஒரு பல்பு போகிறதென்றால், அதைப் போடுவது யார்? என்பதை முடிவு செய்ய முடியாமல், இப்போது பஞ்சாயத்தா? அல்லது எலக்டிரிசிடி போர்டா? என்பது மாறி மாறி வந்து கொண்டிருக்கின்ற இந்த சூழ்நிலையிலே, பஞ்சாயத்தாரை ஊர் மக்கள் ஏன் விளக்குகள் எரியவில்லை என்று கேட்கின்றபோது, இந்த பஞ்சாயத்திலே இருக்கின்ற அதிகாரி சொல்கிறார், இது இப்போது எங்கள் பொறுப்பில் இல்லை, மின்சார இலாக்காவின் பொறுப்பிலே இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த இக்கட்டான நிலையில், அந்த ஊர் மக்கள் இருட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலை இப்போது பல இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது. சென்னை போன்ற பகுதியில் சோடியம் விளக்கு போடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் கன்னங்கறுத்த கும்மி இருட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு சிறிதளவாவது ஒளி கொடுப்பது என்ற வகையில் ஆங்காங்கே விளக்குகள் போடுவது இந்த அரசாங்கத்தின் கடமை, ஆனால், அது எந்த அளவிலே இருக்கிறது? இந்த உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிவகைகளை திட்டங்களைப் போடும் போதெல்லாம் மத்திய அரசாங்கம்அதை உடனடியாக அங்கீகரிக்க மறுக்கிறது. அல்லது தயக்கம் காட்டுகிறது. இந்தத் தயக்கத்தின் காரணத்தினால், தமிழகத்தில் போதிய மின்சாரம் இல்லாமல் போய்விடுகிறது.

சிறு தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். மின்சாரம் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தினால், எனக்குத் தெரிந்த பல தொழிலதிபர்கள் தங்களுடைய மூலதனத்தையும், அரசு மற்றும் நிதி அமைப்புகள் மூலம் வாங்குகின்ற நிதியையும் போட்டு, இத்தகைய சிறு தொழில்களை ஆரம்பித்துவிட்டு, மின்சாரம் போதுமான

அளவுக்கு இல்லாத காரணத்தினால், தட்டுத் தடுமாறிக்கொண்டு என்ன செய்வது என்று அறியாது கலங்கி கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்ற காட்சிகள் எல்லாம் நிச்சயமாக தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இவைகளை எப்படி மாற்றுவது என்பதைப்பற்றி சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற நேரத்தில், கேரளாவிலே இருந்து வாங்குவது என்று சொன்னால், அது ஒரு குறிப்பிட்ட அளவில் 8 பைசாவில் ஆரம்பித்து, இப்போது மின்சாரம் 28 பைசாவிற்கும் தாண்டிப் போய்விட்டதோ என்ற எண்ணம் வருகிறது. காரணம் என்னவென்று சொன்னால், மைசூர் காரர்களுக்கும் கேட்க ஆரம்பித்து, நாமும் கேட்க ஆரம்பிக்கின்ற நேரத்தில், இரண்டு பேர்களும் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட விலையைக் கொடுப்போம் என்று பேசிய கேரளா ஒப்பந்தம் எல்லாம் முறியடிக்கப்பட்டு, யார் காசு அதிகமாகக் கொடுக்கிறார்களோ அவர்கள் பக்கத்து மாநிலத்திலே இருந்து மின்சாரம் பெறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், பத்திரிகைகளிலே என்ன பார்க்கிறோம்? எண்ணூர் மின் நிலையத்திற்குப் போதுமான நிலக்கரி வரமாட்டேன் என்கிறது. என்ன சொல்கிறார்கள்? நமக்கு என்று ஒதுக்கப்பட்ட அந்த நிலக்கரி வேறு பகுதிகளுக்குச் சென்றுவிட்டது, அவ்வாறு வேறு பகுதிக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. என்று சொல்லுகிறார்கள். ஆக தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டது வேறு மாநிலங்களுக்கு அனுப்புவானேன்? நமக்குத் தேவையிருக்கிற நேரத்தில், நமக்கு தேவை கடுமையாக இருக்கின்ற நேரத்தில், அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யாமல், அடுத்த இடத்திற்கு அனுப்புவானேன்? இதற்கு காரணம் என்ன என்பதை நாம் சிந்திப்பதோடு மட்டுமல்ல; மத்திய அரசாங்கத்திற்கு நம் கருத்தைக் கோடிட்டு, இது நியாயமில்லை என்று கேட்பதற்கு இந்த சபை முன்வரவேண்டும். இந்தச் சபையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் முன் வரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது நெசவாளர்களின் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் அவர்களுக்காக எந்தவிதமான திட்டத்தையும் போடவில்லை. மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரையும் பற்றி கவலைபட்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் பற்றியும் கவலைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கவலை போதுமான கவனத்தோடு சரியாக கணிக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பக்கத்து மாநிலங்களில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகின்ற நேரத்தில், சேலம், அம்மாபேட்டை பகுதிகளிலே பெருந்தலைவர் காமராஜ்

அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அந்த ஏழை நெசவாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்ததுதான் நினைவிற்கு வருகின்றது. இதற்குப் பிறகு வீடுகள் கட்டிக் கொடுக்க முயற்சிகள் இருந்தாலும் கூட அது பெரிய அளவில் இல்லை, ஆகவே, இன்னும் அதிகமான முயற்சியோடு ஏழை எளிய நெசவாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்று நெசவாளர்களில் மூன்று தரப்பார்கள் இருக்கின்றார்கள். ஒன்று, தனியார்களிடத்தில் தொழில் புரிகின்றவர்கள்; இன்னொன்று, சொசைட்டிகளில் பணி புரிகின்றவர்கள், அடுத்து, கதர் வாரியத்தின் மூலம் வேலையினைப் பெற்று பணி புரிகின்றவர்கள். மூன்று பேர்களும் புரிகின்ற தொழில் ஒன்று, உழைக்கின்ற உழைப்பும் ஒன்று; ஆனால் பிழைக்கின்ற பிழைப்பைப் பார்த்தால் அது வேறுபட்டதாக இருக்கிறது. உழைப்பு ஒன்றாக இருந்து, பிழைப்பு மாறுபட்டதாக இருக்குமேயானால் அது அவர்களுடைய குற்றமா? அல்லது அவ்வாறு ஊதியத்தைக் கொடுக்கின்ற அந்த சமுதாயத்தின் குற்றமா? என்று பார்ப்போமேயானால் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தனியாரிடத்திலே பணிபுரிகின்ற ஒரு நெசவாளி ஒரு சாதாரண பட்டுச் சேலையை நெய்வதற்கு கூலி 58 ரூபாய். ஆனால் அதே சேலையை கதர் வாரியத்திற்கு நெய்துகொடுத்தால், அல்லது கூட்டுறவு சங்கத்திற்கு நெய்து கொடுத்தால் இன்றைக்கு கிடைக்கின்ற. கூலி 109 ரூபாய். அதே போல் புட்டா பட்டு என்ற சேலையை நெய்து கொடுக்கின்ற சாதாரண நெசவாளி 70 ரூபாய் பெறுகிறான். ஆனால் அதையே கதர் வாரியத்தில் கூட்டுறவு சங்கத்தில் கொடுத்தால் 125 ரூபாய் பெறுகிறான். உழைப்பு ஒன்றாக இருக்கின்றது கிடைக்கின்ற கூலி வேறுபட்டதாக இருக்கின்றது என்று சொன்னால் அந்த பேதம் இல்லாத நிலையில் எல்லோருக்கும் சமமான கூலி கிடைக்கிற வகையில் நாம் ஒரு சட்டத்தை கொண்டுவர இயலாதா? அதனை சமப்படுத்த முடியாதா? இந்த நிலைமையிலே அவர்கள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்க வேண்டுமா? நெசவாளிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பஞ்சடித்து, பஞ்சடித்து எலும்புருக்கி நோயாலே துன்பப்படுகின்ற காட்சிகளை எண்ணிப்பார்த்து ஏழை நெசவாளிகளுக்கு புதிய பாதுகாப்பு கிடைக்கிற வகையிலே சிறந்ததொரு சட்டத்தை கொண்டு வருவதற்கு இந்த தமிழக அரசு முன் வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல்தான் தொழிலாளர் சகோதரர்கள். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சொன்னால், குறிப்பு தந்திருக்கிறார்கள். என்ன குறிப்பு என்றுச் சொன்னால்

கேஷுவல் லேபர், கான்ட்ராக்ட் லேபர் என்று பல்வேறாக பிரித்து வைக்கப்படுகிற அந்த தொழிலாளர்களை, குறிப்பாக ஒப்பந்த கூலிக்காரர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் எந்த விதமான சலுகைகளும் இல்லாத காரணத்தால் அந்த ஒப்பந்த கூலி முறையை ஒழித்துவிடலாமா? இப்போது ஒப்பந்த கூலி முறையிலே வேலை செய்கின்றவர்கள் சலுகைகள் எதுவும் இல்லாமல் இருக்கிற காரணத்தினாலே அந்த சலுகைகளை எல்லாம் ஒருங்கிணைத்து அவர்கள் பெறுகிற வகையிலே ஏதாவது சட்டத்தினை கொண்டுவரலாமா? என்று இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாக சொல்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக் கொள்வேன், மத்திய அரசு அங்கே இருக்கக்கூடிய தோழர்களின் தூண்டுதலைப் பெற்றாவது உடனடியாக இதற்கு ஒப்புதலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களை பொறுத்த வரையில் நாம் இன்னும் கொஞ்சம் ஆழமாக பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வேன். உழைக்கின்ற உழைப்பை கொடுத்து கொடுத்து அவன் ஓய்வு பெறுகிற நேரத்தில் அவன் வாழ்வு என்ன ஆகும் என்று சிந்திக்க வேண்டுமென்று கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கின்ற ஒரு தொழிலாளி ஒவ்வொரு நாளும் அவனது உழைப்பை கொடுத்து கொடுத்து அந்த தொழிற்சாலை மேம்பாடு அடையச் செய்கிறான். இரண்டு வருடத்தில் ஓய்வு பெற்று போகப் போகிறான் என்று சொன்னால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே, அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கு ஒரு ஆய்வு கூடம் போல ஒன்று வைத்து, அவருடைய குடும்ப நிலையினை தெரிந்து கொண்டு, அவன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இடத்திலே கிடைக்கின்ற மூலப்பொருள்களைத் தெரிந்து கொண்டு, அவனது வாழ்க்கை வசதிகளைத் தெரிந்து கொண்டு, நீ என்ன செய்யப் போகிறாய் அப்பா என்று கேட்கிற வகையிலே

[நண்பகல் 12-00]

என்னுடைய உழைப்பை நான் தொழிற்சாலைக்குக் கொடுத்தேன், என்னுடைய ஓய்வு காலத்திலே எனக்கு அது பாதுகாப்புக் கொடுப்பதற்காக பணத்தை மட்டும் கொடுக்கவில்லை, பல விதமான திட்டத்தையும் ஆய்கிறது என்கின்ற ஒருமன நிறைவைக் கொடுத்தால் என்ன என்ற வகையிலே தமிழக அரசு அதற்கு ஒரு தொடக்கத்தைச் செய்தால் எல்லாக் காரியங்களிலேயும் முதல் நின்று முனைந்து நின்று நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிற தமிழக அரசு இதற்காக ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தினால் உண்மையிலேயே நான் மகிழ்வேன். காரணம் என்ன என்றால் தொழிலாளர்கள்

எந்த வகையிலேயும் பாதிக்கப்படக் கூடாது என்று இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இல்லாவிட்டாலும் இதற்கு முந்தைய கூட்டத் தொடரிலே எங்களைப் பொறுத்த வரையிலும் அந்த மசோதாவிலே பேசும்போது அழுத்தமாகவும் ஆழமாகவும் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலம், எத்தனையோ முறைகளிலே தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அந்தப் பேச்சு வார்த்தைகள் தோற்றுப் போய்விடுமானால் அந்தப் பேச்சுவார்த்தைகள் பயனற்றுப் போய்விடுமேயானால் போராட்டம் நடத்துவது என்பது அவர்களுடைய ஜீவாதார உரிமை என்பதை நாங்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்கிறோம். அந்த உரிமை அசைக்கப்பட முடியாததாக எத்தவர்களால் அப்புறப்படுத்த முடியாததாக இருக்க வேண்டும் என்பது நம்முடைய எண்ணம். இப்படிப்பட்ட உரிமைகளைக் கொண்டு இருக்கிற தொழிலாளர்கள் தாங்கள் பணி புரிகின்ற தொழில் மனையோ அல்லது பணி புரிகின்ற தொழிற்சாலையோ மேன்மேலும் செம்மையடையவும் மேன்மையடையவும் அதன் மூலம் சமுதாயம் பலனடையவும் நல்ல கருத்துக்களையும் நல்ல ஆலோசனைகளையும் சொல்வதற்குக் கடமைப்பட்டவர்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நுகர் பொருட்களைப்பற்றிச் சொல்கிறார்கள். அரிசியைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அரிசிப் பிரச்சினை மட்டுமல்ல. கோதுமைப் பிரச்சினையைப் பற்றியும் சேர்த்துத்தான் நாம் பேச வேண்டும். அடிக்கடி கோதுமை விலையை உயர்த்திக் கொண்டிருக்கின்ற மத்திய அரசு அரிசிக்கு மட்டும் அல்லது நெல்லுக்கு மட்டும் விலையை உயர்த்திக் கொடுக்க மாட்டேன் என்று சொல்வது என்ன நியாயம் என்பது நமக்குப் புரியவில்லை. இங்கே இருந்து கொண்டிருக்கின்ற உழவர்களையும் ஏழைப் பாட்டாளிகளையும் இந்தப் பாட்டாளிகளையும், இன்னொரு பாட்டாளிகளையும் வேறுபடுத்திப் பார்ப்பானேன்; தமிழகத்திலே இருக்கின்ற உழவன் போராடினால் அந்தப் போராட்டத்திலே இருக்கின்ற நியாயத்தை உணர்ந்து தமிழக அரசு சிறு விவசாயிகளுக்கு இவ்வளவு கடன்களை ரத்து செய்கிறேன் என்று சொன்னால் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய நடுவண் அரசு, அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய மத்திய அரசு நீங்கள் செலவழிக்கின்ற ஒரு பைசாவைக் கூடத் தரமாட்டேன், நீ செலவழிக்காதே என்று சொன்னால் என்ன நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. மத்தியிலே ஒரு பெரிய பேரணியை நடத்துகிறார்கள். அந்தப் பேரணியை நடத்தி விவசாயிகளுக்கு நாங்கள் என்று சொல்

கிறார்கள். ஆனால் உரத்தின் விலை ஏறிக்கொண்டே போகிறது. அதற்கு தகுந்தாற்போல் விளைபொருட்களின் விலையை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கவில்லை என்றால் என்ன நியாயம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். முடங்கிப் போய்க் கிடக்கிறவனுக்குக் கொடுக்கிற கையை அடக்கிப் போடுவேன் என்று சொன்னால் அது நன்மையை ஏற்படுத்துமா என்பதை மத்திய அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லெவிக் கொள்கையை வைத்து தேவைப்படுகிற ஸ்டாக்கை, சேமிப்பை வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் உண்மையிலே நடப்பது என்ன? தமிழகத்திலே சுற்றிப் பார்க்கிறபோது லெவிக் கொள்கை இருக்கிற காரணத்தினாலே சிறு விவசாயிகளுக்கு போதுமான விலை கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, நல்ல முறையில் வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளும் தொழில் நடத்த முடியவில்லை. இடையிலே இடைத் தரகர்களாக இருக்கின்ற செக்போஸ்ட்காரர்கள் நல்ல வருமானம் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது. ஏன் இந்த நிலைமை என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னொரு மாநிலத்திலே நல்ல விளைச்சல் என்றால் அங்கிருந்து கொண்டு வருவதற்கு அரசு முயற்சியில் ஈடுபடுகிறது என்று சொல்கிறார்கள். உண்மை. இந்த அரசாங்கமும் அந்த அரசாங்கமும் கூடிப் பேசி முடிவு எடுக்கிறபோது அவைகளைக் கொண்டுவருவதற்காக மத்திய அரசு வேகன்களையும், வாகனங்களையும் உடனடியாகக் கொடுக்க வேண்டாமா? அதைக் கொடுக்க வேண்டும். தமிழக அரசு 6 லட்சம் டன் அரிசி கேட்டால் அதை மத்திய அரசு கொடுத்து உதவ வேண்டும். 3 ஆயிரம் டன் கோதுமைக்குப் பதிலாக 10 ஆயிரம் டன் கோதுமையை தமிழக அரசு கேட்கிறது என்றால் மத்திய அரசு அதைக் கொடுத்து உதவ வேண்டும்.

பெட்ரோலுக்கும், டீசலுக்கும் பக்கத்திலே உள்ளவர்கள் அதிகமான வரியைப் போட்டிருக்கிறார்கள் என்பதற்காக நாமும் அப்படி வரி விதிக்க வேண்டுமா? தேவைதானா என்பதை தமிழக அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெட்ரோலுக்கு இவ்வளவு வரி விதித்து இருக்கிறோம், டீசலுக்கு இவ்வளவு வரி விதித்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மற்றவர்கள் செய்கிறார்கள் என்பதற்காக நாமும் செய்தால் அதிலே என்ன புதுமை இருக்கிறது? நாம் புதுமையாகச் செய்ய வேண்டும். நாம் பயன்படுத்துகின்ற எரிபொருளை சிக்கனப்படுத்துகின்ற முறையிலே என்ன செய்ய வேண்டுமென்பதைச் சிந்தித்துப் பார்க்க

வேண்டும். அந்த வகையிலே பார்க்கிறபோது சேதுசமுத்திரத் திட்டத்தை உடனடியாக நாம் நிறைவேற்றி வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

35 மைல் ஒரு கால்வாய் வெட்டப்படுமேயானால், இந்த ஆடம்ஸ் பிரிட்ஜ் என்று சொல்லுகின்ற இடத்திலே வெறும் 35 மைல் ஒரு கால்வாய் வெட்டினால் எத்தனையோ மைல்கள் இலங்கையைச் சுற்றி வர வேண்டிய கப்பல்கள் எல்லாம் பக்கத்தில் தூத்துக்குடிக்கு வந்துவிடுகின்றன; கல்கத்தாவிற்குச் சென்றுவிடுகின்றன. அப்படிச் சேதுசமுத்திரத் திட்டம் இங்கே நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே, கடற்கரையிலே இருந்துகொண்டு இருக்கின்ற சின்னச் சின்ன துறைமுகங்கள் அத்தனையும் வளம் பெறும், வாழ்வு பெறும். இந்தச் சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் எரிபொருள் மிச்சமாகிறது என்பது மட்டும் அல்ல; இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் அது மாறுகிறது. சர்வதேச சூழ்நிலையைச் சிந்தித்துப் பார்க்கின்ற நேரத்தில் யார் யார் எங்கெங்கே தங்களுடைய படைத்தளத்தை அமைப்பார்கள் என்று தெரியாத நிலையில், இன்னும் நமக்குச் சூசகமாகத் தெரிந்துகொண்டிருக்கின்ற நிலையில், சில ஐயப்பாடுகள் எழுகின்ற நிலையில், ஐயப்பாட்டிற்கு இடமின்றி பாரதத்தின் பாதுகாவலை நாம் வைக்க வேண்டுமென்று சொன்னால் இந்தச் சேதுசமுத்திரத் திட்டம் மிக முக்கியம், உடனே நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் என்பதனை இந்தச் சட்டமன்றத்தில் இருக்கின்றவர்கள் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லாமல் மத்திய அரசுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

அந்த நீர்நிலையைப்பற்றிச் சொன்ன காரணத்தினாலே சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு தூரம் டீசலுக்கும் பெட்ரோலுக்கும் வரி போட்டுக் கொண்டிருக்கின்ற நாம் எரிபொருளை மிச்சப்படுத்துவதற்குரிய ஒரு நல்ல திட்டம் நம்முடைய கையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பக்கிங்காம் கேனால் என்று சொல்லுகின்ற அந்தக் கால்வாயை ஒரு காலத்திலே வறட்சி நிவாரணப் பணத்தை வைத்துக்கொண்டு வெட்டினார்கள். அந்தக் கால்வாய் இப்பொழுது மரக்காணம் வரையில் தொட்டும் விட்டும் போய்க்கொண்டிருக்கிறது; பயன்பட்டும், பயன்படாமலும் இருந்து கொண்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து வெட்டி ஆழப்படுத்தி வேதாரண்யம் வரையில் ஏற்கனவே போடப்பட்ட திட்டப்படி செம்மைப்படுத்திவிட்டோமேயானால் எத்தனையோ பொருட்கள் அதிலே போவதற்கான வாய்ப்பு நமக்கு ஏற்படும். எரி பொருள், டீசல் போன்ற இவைகளெல்லாம் மிச்சப்படுகின்ற அளவிற்கு மனித உழைப்பாலேயே அதனைக் கொண்டு போக முடியும்.

சாதிகளற்ற சமுதாயத்தைப் படைக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். கலப்புத் திருமணம் செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற ஆசையும், கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகின்றவர்களுக்குப் பரிசு கொடுக்கின்ற திட்டமும் அரசாங்கத்திடம் இருக்கிறது. நான் அரசாங்கத்தைப் பணிவன்போடு கேட்டுக் கொள்வேன், பரிசு என்று எதையோ நாம் அவர்களுக்குக் கொடுப்பது ஊக்கம் அளிப்பதாக இருக்கலாம் ; ஆனால் அவர்களுக்கு வாழ்வு அளிப்பதாக இருக்காது ; அவர்களுக்கு உயர்வு அளிப்பதாக இருக்காது. ஏனென்றால் இந்தக் கலப்புத் திருமணங்களைப் பொறுத்த வரையிலே வெளியே பேசுவதற்கு வேண்டுமானால் சுவையாக இருக்க முடியுமே தவிர, உள்ளே அதனைப் பார்க்கின்ற நேரத்திலே ; உள்ளே புகுந்து ஒவ்வொரு இடத்திலேயும் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றபொழுது மிகுந்த. வேதனையிலும், சோதனையிலும் அந்தக் கலப்புத் திருமணத்தைச் செய்து கொள்கின்றவர்கள் வேதனையை அடைந்து கொண்டிருக்கின்றார்கள். பாரதி ஒரு இடத்திலே மிக அழகாகப் பாடுவான், '' நாடகத்தில், காவியத்தில் காதல் என்றால் நாட்டினர்தான் உவப்பெய்தி நன்றாம் என்புர் ; வீடகத்தே இணற்றோரத்தே காதல் என்றால் உறுமுகின்றார், பாடை கட்டி அதைக் கொல்ல வழி தேடுகின்றார் '' என்று சொல்வான். அதைப்போல அவ்வளவு துன்பத்திற்கு மத்தியிலேதான், அவர்கள் துயரைக் கடந்துதான் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்று சொன்னால் சமுதாயத்திலே வெறுக்கப்பட்டவர்களாக ஒறுக்கப்பட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக உள்ள அவர்களுடைய வாழ்விலே நிச்சயமாகத் துன்பம்தான் வீசும். ஒருவன் அப்படித் துன்பப்படுவதைப் பார்த்தால் இன்னொருவன் கலப்புத் திருமணம் செய்யமாட்டான். எனவே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கெல்லாம் வேலையிலே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதோடு நிற்காமல், அவர்கள் அனைவருக்கும், அவர்கள் பெறுகின்ற குழந்தைகளுக்கு முழுக்க முழுக்க அவர்கள் விரும்புகின்ற வரையிலே படிப்பதற்குரிய இலவசக் கல்வித் திட்டத்தை அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் சாதிகளற்ற ஒரு சமுதாயத்தைப் படைப்பதற்கு நாம் அடி எடுத்து வைத்தவர்கள் ஆவோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல பல திட்டங்களைப் போட்டவர்களுக்கு ஒன்றேயொன்று சொல்கிறேன். இவ்வளவு நல்ல மதியூகமான திட்டங்களை எல்லாம் போட்டு சில குறைகள் இருந்தாலும் அதை நிறை செய்ய வேண்டுமென்ற உங்களுடைய துடிப்பைப் பார்க்கின்ற நாங்கள் அந்தக் குடிப்பதைச் பற்றிச் சொல்லும் பொழுது ஏன் இந்த மதுவிலக்கைத் தளர்த்தினீர்கள் என்பது எங்களுக்குப் புரிய

வில்லை. மதுவிலக்கைப் பொறுத்த வரையில் நான் உங்களுக்குச் சொல்வேன். தமிழக அரசாங்கம் மதுவிலக்கைத் தளர்த்தியிருக்கக்கூடாது. நாங்கள் அதைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டு இருக்கிறோம். மது எங்களுக்குக் கூடாத ஒன்று. எந்தக் காலத்திலேயிருந்து அது தளர்த்தப்பட்டது என்பதை நீங்கள் பார்ப்பீர்களேயானால் இங்கே ஒருவருக்கொருவர் மோதல் நடந்ததே ; அந்த மோதலை நான் விரும்பாதவன். அதே நேரத்திலே சொல்லவே நான் விரும்புகிறேன், அதனுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் இதனை நாம் எப்படி எடுத்துச் செய்திருக்க வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். தீண்டாமை எப்படியொரு மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக இருந்து கொண்டிருக்கிறதோ அதைப் போல இருக்க வேண்டும். இந்தியாவிலேயே ஒரு பகுதியிலே ஒருவன் தீண்டத் தகாதவன் ; இன்னொரு பகுதியிலே தீண்டத் தக்கவன் என்ற நிலையிலே இல்லை. அவன், அலை வீசுகின்ற குமரியிலேயிருந்து மலைமுகடாக இருந்து கொண்டிருக்கின்ற இமயத்தின் வரை வாழ்ந்து கொண்டிருக்கின்ற எவனாக இருந்தாலும் சரி, தீண்டாமையைப் பின்பற்றக் கூடாது என்பதற்காக அது மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக அது எப்படி இருக்கிறதோ அதைப் போல கள்ளைக் குடிக்காதே என்று சொல்லுகின்ற இந்தக் காரியமும் மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாக இருந்து, தீண்டாமையைப் போலவே கடுமையாக மத்திய அரசாங்கம் இதையும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தப் பகுதியிலே இருக்கின்றவன் குடிக்கலாம் ; அந்தப் பகுதியிலே இருக்கின்றவன் குடிக்கக் கூடாது என்று சொல்லுகின்ற நியாயமற்ற ஒரு நிலையிலிருக்கிறது பாருங்கள் அதை மத்தியிலே உள்ள மத்திய அரசாங்கம் முறியடிக்க வேண்டும். தீண்டாமையைத் தனது பொருளாக எடுத்துக் கொண்டதைப் போல, கள் குடிப்பது என்பதனையும், மதுக்கடைகளைத் திறப்பது என்பதனையும் கூடாது என்று சொல்லுகின்ற முயற்சியிலே மத்திய அரசாங்கம் தனது பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும். மாகாணத்திலே முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலேதான் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் மதுவிலக்கு என்பதனைக் கொண்டு வந்தார்கள்.

[பிற்பகல் 12—10]

எனவேதான் அது மத்தியினுடைய பொருளாக வரவில்லை. அப்பொழுது மத்தியில் நாம் ஆண்டு கொண்டிருக்கவில்லை. ஆக, மாகாணத்தினுடைய பொறுப்பிலேயிருக்கிற நேரத்தில் அதனைப் போற்றினார்கள் என்று சொன்னார்கள், இப்பொழுது மத்தியிலே எதுவுமே........(மணியடிக்கப்பெற்றது) மத்தியிலே அவர்கள் அதை எடுத்துக் கொண்டு நிச்சயமாக மாகாணம் மட்டும் அல்ல,

எல்லா இடங்களிலும் மதுவை தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காக அவர்கள் நிறுத்தவில்லை என்பதற்காக, தமிழக அரசு கள்ளுக் கடைகளைத் திறந்ததை நாங்கள் ஆதரிக்கவில்லை. கள்ளுக் கடைகளைத் திறந்தது என்று சொல்வது தவறு. தளர்த்தியதை நாங்கள் ஆதரிக்கவில்லை. இங்கேயிருந்து எந்தக் கூற்றுத் தொடர்ந்திருந்தாலும் சரி, அது தளர்த்துதல் என்ற பெயரிலே இருந்தாலும் சரி, ஏறத்தாழ குடி, தாராளமாக அனுமதிக்கப்படுகிறது என்பதனை நிச்சயமாக காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் எதிர்க்கிறது.

அதைப்போல முடிப்பதற்கு முன்பு ஒரு வார்த்தை. நிதி நிலை அறிக்கையைப் பற்றி எல்லோரும் பேசுகிறோம். எல்லோரும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றோம். ஆளுகின்ற கட்சிக்காரர்கள் சிலவற்றைப் பாராட்டிவிட்டு, தோழமைக் கட்சிகளும் அதைப் போலவே சிலவற்றைப் பாராட்டிவிட்டு, சிலவற்றைச் செம்மைப்படுத்துவதற்கு, நல்ல நோக்கத்தோடு, இது நல்லாட்சியாக இருக்க வேண்டுமே, அதன் மூலம் நல்ல பெயர் வர வேண்டுமே, நாட்டு மக்களுக்கு நல்லது கிடைக்க வேண்டுமே என்பதற்காக அப்படிப் பேசுகிறார்கள். எதிர்க் கட்சியாக இருந்து கொண்டிருக்கிறவர்களோடு மட்டுமல்லாமல், அவர்களைக் குற்றம் சாட்ட வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் அதனைத் தொட்டுக் காட்டி, சுட்டிக் காட்டி, ஏனென்று தட்டிக் கேட்டு, அதோடு நிற்காமல் இந்த, இந்தக் குறைகள், குறைகள் என்று பட்டியல் போட்டு, அடுக்கிக் கொண்டு போகிறார்கள். இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிற ஆளுகின்றவர்கள் உடனடியாக அவைகளுக்குப் பதில் சொல்லிவிட முடியுமா? இந்தக் கருத்து என்ன? அந்தக் கருத்து என்ன என்று, நிதானித்து, தேர்ந்து, தெளிந்து, ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டாமா? ஆக, எதிர்க்கட்சித் தலைவரும் சரி, மற்றவர்களும் சரி, பேசி முடித்த மறு கணமே அதற்குப் பதில் சொல்வது என்ற முறை சரியாக இல்லையென்று சொன்னால், அவர்கள் பேசியதை எல்லாம் குறிப்பு எடுக்கப்பட்டு, உங்களுடைய அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, அதன்பிறகு, இடையிட்டு ஒரு இரண்டு நாள் இடையிட்டோ அல்லது 3 நாள் இடையிட்டோ பதில் சொல்வது என்பது நல்லது என்பதனையும் இந்த அரசு மட்டும் அல்ல, ஜனநாயக ரீதியிலே கூட நல்ல நெஞ்சங்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நீ எதையாவது பேசி விட்டுப் போ. நான் கொண்டு வருகின்ற செய்தியையே, நான் பதிலாகச் சொல்லுகிறேன் என்று இல்லாமல், நீ கொண்டு வந்ததிலே ஏதாவது நன்றாக இருந்திருக்கும். 10 கல்கள் அந்தக் குளத்திலே வந்திருந்தாலும், ஒரு தாமரைக் கிழங்கும் வந்திருக்கக்கூடும். அந்த மலரை நான் விடுவதற்குத் தயாராக இல்லை என்று, எது கல், எது தாமரைக் கிழங்கு என்று சிந்திக்கின்ற அளவிற்காவது நேரம் கிடைக்க வேண்டுமென்று

சொன்னால், உடனடி பதில் சொல்வது என்பது, இது வழக்காடு மன்றமோ, பட்டி மன்றமோ அல்ல—இது சட்டமன்றம். எனவே எங்களைப் போன்றவர்கள் போடுவது சத்தமானால், உங்களைப் போன்றவர்கள் போடுவது சட்டம். அந்தச் சட்டத்திற்கு சத்து வேண்டுமென்றால், எங்களுடைய சத்தத்திலிருந்து ஏதாவது, சத்து இருக்கிறதா என்று நீங்கள் பார்த்து அதற்கு ஊட்டம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், நாட்டு மக்கள் அதை எதிர் பார்க்கிறார்கள். எனவே, உடனேயே பதில் சொல்ல வேண்டுமென்கிற நிலை வேண்டுமா? இல்லையென்று சொன்னால் இவர்கள் சொன்னவைகளை எல்லாம் நான் சிந்தித்துப் பார்க்கின்றேன். அதற்கு வெள்ளிக்கிழமை நாளைந்தை வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் சனி, ஞாயிறு விடுங்கள் ஓய்வு. நாங்கள் திங்கள் கிழமை பதில் சொல்கிறோம் என்பது போன்ற மரபுகளை வைத்துக்கொள்ளலாமா என்பதையும் இந்தச் சபை சிந்திக்க வேண்டும், மாண்புமிகு தலைவரும் சிந்திக்க வேண்டும், மற்றவர்களும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய கருத்தை, எங்கள் கட்சியின் சார்பிலே கூறுவதற்கு அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

*திரு. த. வேணுகோபால்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981—82-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது, ஏட்டுச் சுரக்காய் சமையலுக்கு உதவாது என்பதுபோல் இருக்கிறது என்று இந்த நேரத்தில் நான் முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இங்கு பேசிய மதிப்பிற்குரிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர், முதல்வர் காலத்திலே வறட்சியிலே பல குற்றங்கள் நடந்திருந்தன, மின் இணைப்புகள் பெறுவதிலே பல தவறுகள் நடந்தன என்றெல்லாம் குறிப்பிட்டு, பேசியிருக்கிறார்கள். எங்கு, எந்த ஆட்சிக் காலத்தில் தவறுகள் நடந்தன என்பதை முதலிலே மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளுகிறேன். வட ஆற்காடு மாவட்டம் பல வருஷங்களாகவே வறட்சியைக் கண்ட மாவட்டம். அந்த மாவட்டம் தொடர்ந்து கடுமையாக, 6 மாதங்களாக வறட்சியைக் கண்டிருக்கிறது. அந்த வறட்சியைப் போக்குவதற்கு 6 மாதகாலமாக என்ன பணிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்று நம்முடைய வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுங்கட்சி அங்கத்தினர்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆகவே, நம்முடைய மாவட்டத்திற்குத் தமிழக முதல்வர் அவர்கள் கூட வறட்சியைப் பார்வையிட வந்திருந்தார். திருவண்ணாமலைக்குக் கூட வந்திருக்கிறார். தன்னிறைவுத் திட்டத்திலே, வறட்சி

நிவாரணப் பணி திட்டத்திலே அங்கு என்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்று முதல்வரே நேரிலே அறிந்து அதற்குரிய நடவடிக்கையை உடனடியாக உயர் அதிகாரிகள் எடுக்க வேண்டுமென்று, அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் எங்களுடைய தலைவர் காலத்திலே ஊழல் நடந்ததாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் இதை முதலிலேயே கூற வேண்டும் என்று கருதுகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே தண்ணிறைவுத் திட்டத்தில் ஊழல் நடந்திருக்கின்றது என்று எங்கள் மாவட்டத்திற்கு வந்தபோது கூறியிருக்கிறார்கள். இந்த ஊழலைகளைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, வட ஆற்காடு மாவட்டத்தில் இன்று வரையில், முதலமைச்சர் அவர்கள் வந்து சென்ற பிறகும் கூட, வறட்சிப் பணிகள் செம்மையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், மேற்கொள்ளப்படவில்லை, என்பதை மிகவும் வருத்தத்தோடு இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடந்த 6 மாத காலமாக வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டவில்லை, தற்போது ஊராட்சி ஒன்றியங்கள் இல்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் இல்லை, ஊராட்சி மன்றங்களும் இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் யாரும் இல்லை. ஆகவே, மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டத்தை உரிய காலத்திலே கூட்டி, என்ன குறைகள் இருக்கின்றன என்பதை சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டு, அதற்குத் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களிலே நிறைய வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. குடி தண்ணீர் பற்றாக்குறை மிக அதிக அளவில் இருக்கின்றது. அந்தக் குடி நீர் பற்றாக் குறையைப் போக்குவதற்கு புதிதாகத் துளைக் கிணறுகள் போடுவது கடினமாக இருந்தாலும், ஏற்கெனவே போடப்பட்டு ஆங்காங்கு நிலுவையிலே மூடிவைக்கப்பட்டுள்ள துளைக் கிணறுகளில் உடனடியாக பம்புகளைப் பொருத்தி தண்ணீர் இறைக்கும் நடவடிக்கைளை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தண்டாரம்பட்டு பகுதியிலே உள்ள தாணிப்பாடி கிராமத்திற்கு 10 மாதங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வந்தார்கள். அவர் எதற்காக வந்தார் என்றால் அந்தப் பகுதியில் கடுமையான வறட்சி ஏற்பட்டதன் காரணமாக குடிதண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக அனைத்துக் கட்சிக்காரர்களும் அங்கே அறப்போராட்டத்தை ஏற்படுத்தியதன் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே வந்தார். அப்படி வந்தவர் அங்குள்ள நிலைமையைப் பார்த்து உடனடியாக அந்தக் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு வழி செய்கிறேன் என்று சொல்லிச் சென்றார். ஆனால், அவர் வந்து சென்று 10 மாதங்கள் ஆகியும் இன்று வரையில் அந்தத் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு எந்தவிதமான வழிவகையும் செய்யவில்லை.

அதோடு, உலக வங்கியிலே கடன் பெற்று தமிழகத்திலே பல இடங்களில் அணை கட்டுவதும், கால்வாய் செப்பனிடுவதும் போன்ற பல பணிகள் மெற்கொள்ளப்படுகின்றன, என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியிலே சாத்தனூர் அணை இருக்கின்றது. அந்த அணையின் மேல் மட்டக் கால்வாயை புதிதாக வெட்ட வேண்டும் என்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 3 ஆண்டுகள் ஆகின்றன. மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் கூட என்னுடைய கேள்விக்குப் பதில் அளிக்கின்றபோது இந்தப் பணி செய்து முடிக்கப்படும் என்று சொல்லிய பிறகும், இன்று வரையில் அந்தப் பணியை செய்யவில்லை. அந்த மேல் மட்டக் கால்வாய் வெட்டப்பட்டால், அந்த வழியாக வரக்கூடிய பல கிராமங்களுடைய குடிநீர் பிரச்சினை தீரும். அதே நேரத்தில் திருவண்ணாமலைக்கும் நிரந்தரமாக குடிநீர் பற்றாக்குறை தீரும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–20]

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு மனு செய்தால் 5 ஆண்டுகள் கழித்து மின் சப்ளை கிடைக்கும் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகள் கழித்த பின்பாவது மின் இணைப்புக் கிடைத்தது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்று கேட்டால், பல இலட்சக்கணக்கான விவசாய மக்கள் பணத்தைச் செலவழித்து பம்ப் செட் வாங்கி இல்லத்தின் திண்ணையிலே வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். எப்போது மின் சப்ளை கிடைக்கும் என்று தெரியாத ஒரு நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

அடுத்து, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் பலர் வேலை செய்து இருந்தும், இன்னும் அவர்களுக்கு அதற்கான உணவுப் பொருள்கள் வழங்கப்படாமல் இருக்கின்றது என்கின்ற குற்றச்சாட்டை அங்கே வேலை செய்தவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 6

மாத காலம் ஆகியும் அவர்களுக்கு அந்த வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இந்தக் காலதாமதம் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அடுத்து, இந்த அரசு மது விலக்கைத் தளர்த்தி இருக்கிறது. அதன் காரணமாக ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வரும் என்பது இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக் காட்டப்படவில்லை என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாளன்று மாண்புமிகு ஆதித் திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் உள்ள விஸ்வநந்தல் என்கிற கிராமத்தில் ஒரு பள்ளியைத் திறந்து வைக்க வருகை தந்தார்கள். அப்படி அமைச்சர் அவர்கள் வருவதை அந்தத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகிய எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. அதிகாரிகளும் எனக்கு அந்தத் தகவலைத் தெரிவிக்கவில்லை. ஆனால் அந்தப் பள்ளித் திறப்பு விழாவிற்கான அழைப்பிதழில் மட்டும் என்னுடைய பெயரை அச்சடித்து சிறப்புரை ஆற்றுவார்கள் என்று போடப்பட்டு இருக்கிறது. இம்மாதிரியான சூழ்நிலைகளில், ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தால் அவர்கள் அந்த நிகழ்ச்சிகளில் தலைமையேற்று கலந்துக் கொள்கிற வகையில் செய்கிறார்கள். ஆனால் எங்களைப் போன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தால் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் குறித்துத் தகவல்கள் கூட, தெரிவிப்பது இல்லை என்பதை இங்கே எடுத்துச் சொல்லி, அம்மாதிரியான முறைகளைக் கண்டிக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கி, அதன் மூலம் பெருமளவில் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடாதது மட்டுமல்ல, மத்திய அரசும் இங்கே புதிய தொழிற்சாலைகள் எதுவும் தொடங்குவது

குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சேலத்தில் 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சேலம் இரும்பாலைத் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இன்று சேலத்தில் நடைபெற வேண்டிய வேலைகள் அனைத்தும் துர்க்காபூருக்கு மாற்றப்பட்டு விட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது சேலம் இரும்பாலையில் 1,000 பேர்கள் வேலை பார்க்கும் சூழ்நிலை தான் இருக்கிறது. சுருங்கச் சொன்னால், சேலம் உருக்காலைத் திட்டம் இப்போது வெறும் உருட்டாலைத் திட்டமாக மாறியிருக்கிறது. சேலம் உருக்கு ஆலையின் திட்டத்திற்காக கட்டப்பட்ட கட்டிடங்கள், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள், குடிநீர் திட்டங்கள் எல்லாம் செயலற்றுக் கிடக்கின்றன. இந்த நிலைமையை நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சி. டி. தண்டபாணி அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராமகோபால் ரெட்டி அவர்களும் தான் எடுத்துச் சொல்லியிருக்கிறார்களே தவிர, வேறு யாரும் அதைச் சுட்டிக்காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பற்றி எடுத்துக் கொண்டால், நம்முடைய மாநிலம் இன்றைக்குப் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இந்தியாவிலேயே புரட்சிகரமான தொழிலாளர் நலத் திட்டங்கள் தமிழ் நாட்டில் தான் இருக்கின்றன என்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் சென்னையில் உள்ள பி அண்டு சி ஆலை; கோவையில் உள்ள வரதராஜா நூற்பாலை, ஆனந்த் குமார் நூற்பாலை, சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி, குமாரபாளையம் எஸ்.எஸ்.எம். யூனிட், போன்ற தொழிற்சாலைகள், மற்றும் திருப்பூர் பனியன் தொழிற்சாலைகள், மற்றும் 30-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இன்றைக்குத் தமிழ் நாட்டில் மூடப்பட்டு இருக்கின்றன.

குறிப்பாக சிந்தாமணி கூட்டுறவு அங்காடி கடந்த 19-ந் தேதி முதல் மூடப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் அனைவரும் அங்கே அடிப்படை ஊதிய உயர்வு சம்பந்தமாகப் போராடவில்லை; நகர ஈட்டுப்படி, பஞ்சப்படி கேட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த கூட்டுறவு அங்காடியில் 1,250 பேர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். அதிலே 300 ரூபாய்க்கு கீழே சம்பளம் பெறுகிறவர்கள் 980 பேர்கள்; 300-இலிருந்து 400 ரூபாய்க்கு கீழே சம்பளம் பெறுகிறவர்கள் 197 பேர்கள்; 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுகிறவர்கள் 72 பேர்கள். இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக 300 பேர்கள் சிறை பிடிக்கப்பட்டு, அவர்கள் மீது 143, 341 மற்றும் 506 போலீஸ் சட்டப் பிரிவுகளின் கீழ் கேஸ் போட்டிருக்கிறார்கள். இந்த கேஸ்களை அரசாங்கம் உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும்.

சிந்தாமணி கூட்டுறவு அங்காடி வேலை நிறுத்தத்தின் காரண மாக நூற்றுக்கணக்கான பிரதம கூட்டுறவுச் சங்கங்கள், கோவை, நீலகிரி மாவட்டங்களில் உள்ளவை — பாதிக்கப்பட்டுள்ளன. பண்டகசாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 30,000 மூட்டை அரிசி கோடவுனில் வைக்கப்பட்டது அப்படியே இருக்கிறது. அதனுடைய, மதிப்பு 60 இலட்சம் ரூபாய். இதர அத்தியாவசியப் பொருட்களின் மதிப்பு 40 இலட்சம் ரூபாய். அங்கே ஏறத்தாழ உணவுப் பொருட்கள் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் தேங்கிக் கிடக்கின்றன. சர்க்கரை, மண்ணெண்ணெய், சமையல் காஸ் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்கு கிடைக்காமல் கோவை மாவட்ட மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த வேலை நிறுத்தத்தினால் கோவை மாவட்ட மக்கள் நியாய விலையில் சாமான்கள் கிடைக்காமல் அவதியுறுகிறார்கள்.

ஆகவே, இந்த அரசு உடனடியாக வேலை நிறுத்தத்தை அந்தத் தொழிலாளர்கள் வாபஸ் பெற, அவர்களை அழைத்துப் பேச வேண்டும்; பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அனைத்து ஊழியர்களுக்கும் இந்த அரசு நகர ஈட்டுப்படி, பஞ்சப்படி வழங்க முன்வர வேண்டும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இப்போது அவையில் கோரம் இல்லை. கோரம் இல்லாமல் எப்படி அவையை நடத்த முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரம் இருக்கிறது திரு. குலசேகர் தொடர்ந்து பேசலாம்

திரு. ஏ. டி. குலசேகர் : இந்த சிந்தாமணி கூட்டுறவு அங்காடியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி 65 ரூபாய் முதல் 83 ரூபாய் வரை என்று நிர்ணயிக்கப்பட்டு பல்லாண்டுகள் ஆகிவிட்டன. இந்த அரசு அரசு-ஊழியர்கள், அனைத்து போக்குவரத்து கழகங்களுக்கும் பல தடவைகள் பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறது. அதைப்போல அந்தக் கூட்டுறவு அங்காடி ஊழியர்களுக்கும் உயர்த்தவேண்டும். அவர்களுக்கு பஞ்சப்படியையும், நகர ஈட்டுப்படியையும் உயர்த்துவதற்கு அங்காடியின் இலாப-நஷ்டக் கணக்கைப் பார்ப்பது சரியல்ல; அதை ஏற்றுக் கொள்ள முடியாது. கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெற்றால் இந்த மாதிரியான வேலை நிறுத்தங்களுக்கு இடமில்லாமல் இருக்கும்; வேலை நிறுத்தத்தை நிறுத்தி வைக்க முடியும்.

தொழிலாளர் பாதுகாப்புக்குத் தொழில் சட்டங்கள் மட்டும் இருந்தால் போதாது; அந்தச் சட்டத்திற்கு முழு வடிவம் கொடுத்து, அதை அமல்படுத்த வேண்டும். குறிப்பாக குமாரபாளையம் எஸ்.எஸ்.எம். தொழிற்சாலையிலுள்ள 1,200 தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்கிறார்கள்.

அவர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம் கிடையாது, பிராவிடன்ட் பண்ட் கிடையாது; டைம் கார்டு கிடையாது; எதுவும் கிடையாது. இந்தப் பிரச்சினையை அரசுக்கு பலமுறை சொல்லியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. காரணம் இந்த எஸ்.எஸ்.எம். தொழில் அதிபர் ஆளும் கட்சிக்கு வேண்டியவராக இருக்கிறார். ஆகவே, அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களையும் அழைத்துப் பேசி, பிரச்சினை தீர்வதற்கு முயற்சி செய்யவில்லை. தொழிலாளர் நீதி கேட்டு, தொழிலாளர்கள் அங்கே தெருவிலும், சிறையிலும் இருக்கிறார்கள்; ஆனால் தொழிலாளர் நீதியைக் கொன்றவர்கள் அங்கே தெம்மாங்கு பாடுகிறார்கள். இருக்கின்ற சட்டத்தின்படி தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி காணப்படாமல் தொழிலாளர் சட்டம் தூங்கிக் கொண்டிருக்கும்போது வேறு சில புதிய தொழிலாளர் சட்டம் வரும் என்று அமைச்சர் சொல்கிறார். எந்தச் சட்டம் வந்து என்ன பயன்? வரக்கூடிய சட்டம் முடக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது; முடக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதைச் செய்யாமல் ,திட்டம் போட்டு திருடுகிற கூட்டம் திருடிக் கொண்டே இருக்கும்; அதைச் சட்டம் போட்டு தடுக்கிற அரசு தடுத்துக் கொண்டே இருக்கும் ' என்ற நிலை இனியும் இந்த நாட்டில் இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 123 கோடி ரூபாய் பற்றாக்குறை காட்டப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12-30]

இருபது கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. மின் கட்டணம், பஸ் கட்டணம் ஆகியவற்றை உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி மேலும், மேலும் உயர்த்தினால் அனைத்து சமுதாய மக்களும் பாதிக்கப்படுவார்கள். விலைவாசி விஷம் போல் ஏறிவிடும். பண வீக்க நிலை உருவாகி மக்களுக்கு மேலும், மேலும் கஷ்டங்கள் அதிகமாகும். ஆகவே, புதிய வரிவிதிப்புகள் அனைத்தையும் அரசு கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரை இருமுனைத் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஒருபுறம் வறட்சியும் மறுபுறம் அவர்களுடைய விளைபொருட்களுக்கு உரிய விலையும் கிடைக்காததால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய விளைபொருட்களுக்கு அதிக விலை பெற்றுத் தர இந்த அரசு முன்வர வேண்டும். கர்நாடக மாநிலத்திலே உள்ளதுபோல் மின்சாரக் கட்டணத்தை விவசாயிகளுக்கு விதிக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலுள்ள பீளமேடு, சிங்காநல்லூர், சர்க்கார் சாமக்குளம், வெள்ளளூர் போன்ற பகுதிகளில் தண்ணீர் ஒரு குடம் 60 பைசாவுக்கு விற்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நான் இதுபற்றிப் பேசுகின்றபோது அங்கே குடம் 50 பைசாவுக்கு விற்றுக்கொண்டிருந்தது. இப்போது பத்து பைசா உயர்ந்துவிட்டது. ஆகவே, அந்த வறட்சி நிலையைப் போக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து இந்த அரசு அங்கு அனைத்துப் பணிகளையும் செய்வதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. நாஞ்சில் வின்சென்ட் பேசுகின்றபோது ஆதாரம் தேவை என்கின்ற பிரச்சினை வந்தது. அதற்கான ஆதாரங்கள் 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பேட்டில் இருக்கின்ற காரணத்தால் அவர்களுடைய பேச்சு அப்படியே அவைக் குறிப்பிலே இருக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு. பொ. விஜயராகவன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற ஜனதாக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் மதுவிலக்கை ரத்து செய்ய வில்லை, ஆனால், 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடிக்கலாம் என்று அறிவித்து இருக்கிறார்கள். நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்கிறேன். முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்காக என்று. மதுவிலக்கை ரத்து செய்யவில்லை என்று சொல்லிவிட்டு 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடிக்கலாம் என்று சொன்னால் என்ன பொருள்? மது

விலக்கு இன்றும் அமலில் இருக்கின்றது என்று சொன்னால் அதன் பொருள் என்ன என்பதை தயவுசெய்து அரசாங்கத்திலே உள்ளவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, மதுவிலக்கை ரத்து செய்கின்ற அளவுக்கு செய்யப்பட்டிருக்கின்ற இந்த நிலையை நான் எங்களது ஜனதா கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இன்னும்கூட காலம் கடந்துவிடவில்லை. இந்த நிலைமையை மாற்றிவிடவேண்டும். இந்த நிலைமையை அமுலுக்குக் கொண்டு வராமல் இருப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து, இங்கே எரிசாராய ஊழல் பிரச்சினை பற்றி கமிஷன் அமைப்பது பற்றிய பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒவ்வொரு கருத்துக்களைச் சொன்னார்கள். மத்திய அரசின் மூலம் கமிஷன் போடுவது சம்பந்தமாக பல்வேறு விவாதங்கள் வந்திருக்கின்றன. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் பல்வேறு அமைப்பைச் சார்ந்தவர்களும் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதாலும், பல மாநிலங்கள் பற்றிய பிரச்சினையாக இது இருப்பதாலும் ஒரு மாநிலம் மட்டும் இதற்காக விசாரணைக் கமிஷன் போட்டால் அது சரியாக இருக்காது. அதுபற்றி நாங்கள் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டோம். மத்திய அரசு ஒரு விசாரணைக் கமிஷன் போட்டு இதிலே ஈடுபட்டவர்கள் யார் யார் என்பதை எல்லாம் கண்டுபிடித்து மக்கள் முன்னாலே நிறுத்த வேண்டும். மேலும், மத்திய அரசு விசாரணைக் கமிஷன் போடுகிறது என்றால் அது மாநில அரசுகளால் போடப்பட்ட விசாரணைக் கமிஷன்களைக் கட்டுப்படுத்தாது. ஆகவே, நீங்கள் போட்டிருக்கின்ற கமிஷனும், கேரளாவிலே போடப்பட்டிருக்கின்ற கமிஷனும், மத்திய அரசின் கமிஷனும் சேர்ந்து எல்லா தரப்பைச் சார்ந்தவர்களுக்கும் சந்தேகம் இல்லாத வகையில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நிறுத்தட்டுமே. பல்கலைக் கழகங்களிலே டாக்டர் பட்டத்திற்கான தேர்வுகளைப் பொறுத்த வரையில் மூன்று எக்ஸாமினர்கள் நியமிப்பதுண்டு. டாக்டர் பட்டம் பெறுவதற்குரிய ஆராய்ச்சிக் கட்டுரையை மூன்று தேர்வாளர்களிடத்திலே அளிப்பார்கள். அந்த மூன்று தேர்வாளர்கள் அவற்றைத் திருத்தியதற்குப் பிறகுதான், அது சம்பந்தமாக குறிப்புக்களை அவர்கள் வெளியிட்டதற்குப் பிறகுதான், அந்தக் குறிப்புகளை உணர்ந்துதான் டாக்டர் பட்டங்கள் வழங்கப்படும். அதைப்போன்று கேரளா அரசின் கமிஷனும், தமிழ்நாடு அரசின் கமிஷனும், மத்திய அரசின் கமிஷனும் சேர்ந்து ஆக மூன்று பேராக முடிவுகளைத் தெரிவித்துவிட்டதற்குப் பிறகு இந்த ஊழலில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர் என்பதை இந்த நாட்டுக்கு அவர்கள் உணர்த்தட்டும் என்பதைதான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இன்னொரு பிரச்சினை என்னவென்றால், இந்தச் சட்டமன்றக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னாலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பிரச்சினையை கிளப்பி வந்தார்கள். தலைநகரத்தை மாற்றுவது சம்பந்தமாக. எங்கே மாற்றுவது என்று சொன்னால், தண்ணீர் இருக்கிற இடத்திலே தலைநகரத்தை மாற்றவேண்டும் என்று சொன்னார்கள். அப்படி தண்ணீர் இருக்கிற இடத்திலே தலைநகரத்தை மாற்றிவிடுவதினால், சென்னை நகர மக்களுடைய குடிதண்ணீர் பிரச்னை தீர்ந்துவிடுமா என்று கேட்க விரும்புகிறேன்.

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள், நம்முடைய மரியாதைக்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபோது, கிருஷ்ணா நதி தண்ணீரைக் கொண்டு வருவதைக் குறிப்பிட்டு, சென்னை நகர மக்களுக்கு நான் ஒரு பரிசளிக்க விரும்புகிறேன் என்று சொன்னார்கள். அந்த பரிசைப் பெறுவதற்கு மாநில அரசு தயாராக இல்லையா? அல்லது மத்திய அரசு அந்த பரிசைத் தருவதற்கு தயாராக இல்லையா என்ற கேள்வியை கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பல பிரச்னைகள் எதற்கு முதன்மை தருவது என்று தெரியாத வகையில் நம்முன்னே இருக்கும்போது, தலைநகரை மாற்றுவது தேவைதானா? அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கன்னியாகுமரியிலிருந்து மக்கள் வழக்காடுவதற்காக சென்னைக்கு வரவேண்டும் அவர்களுக்கு அதனால் அதிகமான செலவு ஏற்படும். அந்தச் செலவை அவர்களால் சமாளிக்க முடியாது. செலவழிக்க முடியவில்லையென்றால், நீதி எப்படிக் கிடைக்கும் என்று கவலை என்றெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட கஷ்டங்களைப் போக்க வேண்டும் என்று சொன்னால், அந்த மாவட்டத்திற்குப் பக்கத்திலேயே உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவை அமைப்பதுதான் முறையாக இருக்குமே தவிர, தலைநகரை மாற்றுவதினால் பிரச்னை தீராது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிச் செய்தால், நாளைக்கு இன்னொரு இடத்தில் தேவை என்று கேட்பார்கள். அப்போது என்ன செய்வது? இப்படி அடிக்கடி மாற்றிக்கொண்டிருந்தால் அது முகம்மது பின் துக்ளக் ஆட்சிக் காலத்தின் ஏற்பட்ட நிலைமைக்குத்தான் தமிழகத்தைக் கொண்டு சேர்க்கும். ஆகவே, அந்த முதற்சிகளை விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, அப்படி தெற்குப் பகுதியை வளரச் செய்ய வேண்டும் என்று நினைத்தால், அதற்குரிய வாய்ப்புக்களையும் வசதிகளையும் மக்களுக்குச் செய்து கொடுங்கள் என்று கேட்டுக் கொள்

கிறேன். மதுரையிலேயும் உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவைக் கட்டி, அவர்களுக்கு நியாயமான நீதி கிடைக்க வகை செய்தால் நியாயமாக இருக்கும். கன்னியாகுமரியில் எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. 200 கோடி, 300 கோடி ரூபாயை தலைநகரை மாற்றுவதற்கு செலவு செய்வதைவிட, அதில் ஒரு பகுதியை எடுத்தே, அந்தப் பகுதி மக்களின் எண்ணற்றப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு வகை செய்யலாம். அவர்களின் குறைகளைப் போக்க திட்டங்களைத் தீட்டலாம். உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி கிடையாது. விவசாயக் கல்லூரி கிடையாது. சட்டக் கல்லூரி கிடையாது, கால் நடைகள் மருத்துவக் கல்லூரி கிடையாது. பொறியியல் கல்லூரி கிடையாது. அந்தக் கல்லூரிகளை கன்னியாகுமரி மாவட்டத்திலே பொருத்தமான இடங்களில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். அந்தப் பணிகளுக்கு இந்தப் பணத்தை செலவழித்துக் கொள்ளலாம். அதை விட்டுவிட்டு, தலைநகரை மாற்றுகிறோம் என்று சொல்வது சரியாக இருக்காது. அதை அரசாங்கம் மறு முறையும் ஆழமாக சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வறட்சியைப்பற்றி எடுத்துக்கொண்டால், அதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய அத்தனை உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கத்தினர் போர்க்கால நடவடிக்கைகளாக வறட்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியினையும் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த வறட்சிப் பணிகளுக்காக நிதி உதவி பெறுவதில் நாங்களும் துணையாக இருப்போம் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலையை இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய முக்கியக் கடமையாகக் கருதுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலும் கடுமையான வறட்சி நிலவுகிறது. அந்த வறட்சியின் கடுமை மற்ற மாவட்டங்களில் உள்ள வறட்சிக்கு மிகையானது அல்ல என்றாலும், மற்ற எந்த மாவட்டத்தில் இருக்கும் வறட்சிக்கும் குறைவானதும் அல்ல. ஆகையினால், கன்னியாகுமரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். பல இலட்சக்கணக்கான நிலங்கள் தண்ணீர் இல்லாத காரணத்தினால் தீய்ந்து போயிருக்கின்றன. விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய மின்சார இணைப்பு கொடுக்கப்பெறவில்லை. அதனால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இது ஒரு புறம் இருக்க, பனை ஏறும் தொழிலாளர்கள், பருவ மழை பொய்த்ததின் காரணமாக, பதநீர் கிடைக்காமல், அவர்களுடைய தொழில் பாதிக்கப்பட்டு, பஞ்சத்திற்கு ஆட்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மீனவர்களுக்கும் கடலிலே சென்றால், போதுமான அளவிற்கு மீன்கள்.. கிடைப்பதில்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே வருமானம் இல்லாமையால் அவர்கள் மத்தியிலும் பஞ்சம் நிலவுகிறது. முந்திரித் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 6, 7 மாதங்களாக கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தினால், அந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அவர்கள் மத்தியிலும் பஞ்சம். ஆகவே, இப்படி எந்தெந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், அங்கெல்லாம் பஞ்சம் தலை விரித்தாடுகிறது என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது.

[பிற்பகல் 12—40]

மேட்டுப் பகுதியான இடங்களில் தண்ணீர் கிடையாது. கருங்கல் போன்றபகுதிகளில் தண்ணீர் குடம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற அளவில் விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உரிய பங்கினை இந்த அரசு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சியும், கடுமையான பஞ்சமும் இன்றைக்கிருக்கிற நிலையில் நமது அரசு ஒரு உணவுக் கொள்கையை வைத்திருக்கிறார்கள். இந்த லெவி கொள்கை காரணமாக ஓப்பன் மார்க்கெட்டில் ஒழுங்காக அரிசி கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் கூட அதிகப்படியான விலைக்கு இன்று அரிசி விற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலை நீடிக்கப்படுமானால் இதற்கு முன்னால் பல தடவை இந்த மாநிலத்தில் அரிசி விலை எவ்வளவு உச்சத்தில் போயிருக்கிறதோ அதைவிட அதிகபட்ச உச்ச கட்டத்திற்கு விலை இந்த அரசின் உணவுக் கொள்கை காரணமாக உயரும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இந்த அரசை எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, தற்போது கடைப்பிடித்து வரும் லெவி கொள்கை மூலம் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற அரிசி விலை உயர்வைத் தடுக்க வேண்டுமென்றால் ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த லெவி முறையை உடனடியாக நீக்க வேண்டும். இந்த லெவி முறை நீக்கப்பட்டு மற்ற மாநிலங்களில் உபரியாக இருக்கிற அரிசியை இந்த மாநிலத்திற்கு அதிகமாகக் கொண்டு வர வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால்

அரிசி விலை உயர்வை யாரும் தடுக்க முடியாது; அரசும் தடுக்க முடியாது. ஆகவே, பஞ்சப் பகுதிகளில், வறட்சிப் பகுதிகளில் கட்டாய ரேஷன் அமலுக்குக் கொண்டுவர வேண்டும். சட்டப்படியான ரேஷனை அமலுக்குக் கொண்டுவர வேண்டும். பெரியோர்களுக்கு இரண்டு கிலோ, சிறுவர்களுக்கு ஆளுக்கு ஒரு கிலோ வாரம் ஒன்றுக்கு என்று சட்டப்படியான ரேஷனை அமலுக்குக் கொண்டுவர வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அது பற்றாக்குறை மாநிலமான கேரளா மாநிலத்தின் எல்லையில் இருப்பதால், பக்கத்தில் இருப்பதால், அங்கு அரிசி கிடைக்காமல் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். அங்கே ஏற்கனவே கொடுக்கப்பட்ட ரேஷன் அளவு குறைக்கப்பட்டு இருப்பதை மாற்றி, ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்ததுபோல் கொடுக்கவும், சட்டப்படியான ரேஷனை அந்த மாவட்டத்தில் அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனளத் துறை. சின்னமுட்டத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குளச்சல் துறைமுகம் வசதியான ஒரு இயற்கைத் துறைமுகமாகும். அதை ஒரு பெரிய துறைமுகமாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. எனவே, குளச்சலில் ஒரு மீன்பிடி துறைமுகமாவது அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் முதல் கட்டமாகவாவது வாலிநோக்கத்தில் அமைக்கப்பட இருப்பது போல் ஒரு தோணித் துறையாவது அமைத்துத்தர இந்த அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாசன வசதி. பாசன வசதி பொறுத்தவரையில் பலயிடங்களில் பாசனத் திட்டங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பழைய பாசனத் திட்டங்களே அங்கு இருக்கின்றன. கோதையாறு பாசனத் திட்டம் மிகப் பழைய பாசனத் திட்டமாகும். அந்தப் பழைய பாசனத் திட்டத்தை நவீனப்படுத்தி கடைவரம்பு நிலங்களுக்கும் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இப்போது கடைவரம்பு நிலங்களுக்கு தண்ணீரே கிடைப்பதில்லை. ஒழுங்காக தண்ணீர் வினியோகிக்கப்படாத காரணத்தால் கடைவரம்பு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. வினியோக முறை சரியாக இல்லாததால் தண்ணீர் எவ்வளவுதான் இருந்தாலும் கூட கடைவரம்பு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை.

சிற்றாறு-பட்டணங்கால் திட்டத்தில் கருங்கல் கிளைக்கால் வாய்க்கு சிமென்ட் லைனிங் அமைத்து வீணாகப் போகக் கூடிய தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நெய்யாறு இடதுகரை சானலை எடுத்துக் கொண்டால் கேரள அரசு உறுதி அளித்திருக்கிற தண்ணீரை ஒழுங்காகத் தருவதில்லை. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் உங்களுக்குத் தருகிற தண்ணீரை நீங்கள் ஒழுங்காகப் பயன்படுத்த முடியவில்லையே என்று சொல்கிறார்கள். நெய்யாறு இடது கரைச் சானல் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவற்றையெல்லாம் நீர்ப் பாசனக் கோரிக்கை வரும்போது பேசிக் கொள்ளலாம்.

திரு. பொ. விஜயராகவன் : ஆகவே, இந்த நெய்யாறு இடது கரைச் சானலை ஒழுங்கு செய்து தரவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

***திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 1981—82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் பேசியிருக்கக் கூடிய கருத்துக்களை ஒட்டி, மேலும் சில கருத்துக்களை இங்கே தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். இந்த உரையிலே, விவசாயி கள் கடன் பிரச்சினை சம்பந்தமாக கொடுக்கப்பட்டிருக்கிற சில சலுகைகள், அதேபோல் குடிசைத் தொழிலில் உற்பத்தி செய்யக் கூடிய சிலவகைத் தொழில்களுக்கு கொடுக்கப்பட்டிருக் கிற விற்பனை வரிச் சலுகைகள், அதேபோன்று வறட்சிக்காக ஏற்கனவே எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கைகள் போன்ற சாதகமான அம்சங்களை நான் முதலிலே வரவேற் கிறேன் என்பதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஆயினும், நிதிநிலை அறிக்கையானது தயார் செய்யப்பட் டிருக்கக்கூடிய பின்னணியைப் பொறுத்தவரை அதில் எந்த நிலைமைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவது என் னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், "தமிழக அரசின் நிதிநிலையைத் தெளிவுபடுத்துவதற்கு முன் நாட்டின் நிலையைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்" என்று. அதிலே அவர்கள் "இன்றியமையாப் பொருள்களின் விலை

உயர்வும், பண வீக்கமும், பயன்படுத்தப்பட வேண்டிய பொருள் களின் பற்றாக்குறையும் தமிழ்நாட்டைப் பெருமளவுக்குப் பாதித் துள்ளன" என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், இந்திய நாட்டினுடைய பண வீக்கமும், இந்திய நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய விலை வாசி உயர்வும் தமிழகத்தை மிகக் கடுமையாகத் தாக்கியிருக்கிறது என்பதை நாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான், நம் மாநிலத் தினுடைய நிதிநிலை அறிக்கையைப் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதுவும், குறிப்பாக இந்த அரசாங் கம் தயாரித்து இருக்கக்கூடிய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத் தினுடைய பிரசுரத்திலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். "வளர்ச்சி சதவிகிதம் அகில இந்திய ரீதியிலே 5.2 சதவிகிதம் ஆக இருந்த போதிலும், தமிழகத்தினுடைய ஆறாவது ஐந்தாண் டுத் திட்டத்தில் 6.2 சதவிகிதம் வளர்ச்சியை நாம் ஏற்பாடு செய்வதற்கு திட்டமிட்டிருக்கிறோம்" என்று ஏற்கனவே பண வீக்கமும், விலைவாசி உயர்வும் கட்டுக்கு அடங்காமல் இருக்கக் கூடிய சூழ்நிலையில், இன்றைக்கு அத்தகைய வளர்ச்சித் திட்டம் என்று ஏற்படுத்துவதற்கு முனைனால், சர்க்கார் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் அவர் கூறுகிறார், சரியாகக் குறிப்பிட்டிருக்கிறார் "வறுமை, வேலையின்மை ஆகிய இந்த இரண்டுப் பிரச்சினைகள் தமிழகத்தைப் பாதித்திருக்கிறது" என்று. உண்மைதான். மிக முக்கியமான பிரச்சினை என்று எடுத் துக்கொண்டால், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இந்த இரண்டு பிரச்சினைகளைத் தகர்ப்பதற்கும், அதிலிருந்து நிவாரணம் கிடைப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், அப்படி செய்யக்கூடிய காலத்தில், மற்றொன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ஓரளவிற்கு மிகுந்த கவலை தரக்கூடியதாக இருக்கிறது. அகில இந்திய ரீதியிலே வறுமைக் கோட்டிற்கு கீழே வாழக்கூடிய மக்கள் 48.11 சதவீதம். தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழக்கூடிய மக்கள் 52.12 சதவீதம் என்று ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தமிழ்நாடு அரசினுடைய குறிப்பு கூறுகிறது.

அது மட்டுமல்ல, வேலையின்மையைப் பொறுத்தவரை, இந்தியாவிலே பொதுவாக 8.5 சதவீதம் என்றும், தமிழகத்திலே 16.1 சதவீதம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி யென்றால், தமிழகத்திலே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. தமிழகத்தில் வேலையில்லாமல் அவதிப்படுகின்ற சதவிகிதம் இந்தியாவிலே சராசரியை விட அதிகமாகி இருக்கிறது. ஏறக்குறைய இரண்டு மடங்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால்,

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே 8 சதவிகிதம் என்று குறிப்பிட்டிருப்பது அன்டர்-எஸ்டிமேட், குறைவாகத் தரப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வேலையில்லாமல் பதிவு செய்து கொண்டிருக்கக்கூடிய எண்ணிக்கை சரியாக பதிவு செய்யப்படாமல், கோளாறுகள் இருப்பதன் காரணமாக தவறுகள் ஏற்பட்டிருக்கலாம்; இந்தியாவினுடைய மற்ற மாநிலங்களில் இந்த சதவிகிதம் அதிகரிக்கவில்லை என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ஆயினும், மாநில அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கக் கூடிய இந்த விவரங்களைப் பார்க்கின்றபோது, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரை வந்ததற்குப் பிறகு, மத்திய அரசு அலுமினியத்தின் விலையை 17 சதவிகிதம் உயர்த்துவதாக முடிவு செய்திருக்கிறது. நாம் ஒரு திட்டத்தைப் போடும்போது, என்ன விலை இருக்கும் என்று எதிர்பார்த்துப் போடுகிறோம். அப்படிப் போடும்போது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய உரை வந்ததற்குப் பின்னால் அலுமினியத்தின் விலை 17 சதவிகிதம் உயருகிறது. அதில் மத்திய சர்க்கார் சுங்கவரி 40 சதவிகிதம். ஆகவே, இந்த விலை உயர்விற்குக் காரணம், மத்திய சர்க்கார் போடக்கூடிய சுங்க வரியினால் அலுமினியத்தின் விலை உயர்ந்து கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது என்பது உண்மை.

[பிற்பகல் 12—50]

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்தப் பணவீக்கத்தை, விலைவாசி உயர்வை மாற்றுவதற்கு ஒரு மாற்றுப்பாதை வேண்டும். விலைவாசி பாதித்திருக்கிறது என்று சொன்னால், அதை மாற்றுவதற்கு அகில இந்திய ரீதியிலே மாற்றுப் பொருளாதாரப் பாதை உருவாக்காமல் போனால், தமிழகம் மட்டும் தன்னுடைய சொந்த முயற்சியால் இங்கே வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்குவது சாத்தியமானதுதானா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்தில் விவாதிக்கின்ற நேரத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உரையிலே இந்த பணவீக்கத்தையும், விலைவாசி உயர்வையும் ஏற்படுத்தக்கூடிய மத்திய சர்க்காரின் கொள்கைகள் மாற்றப்பட வேண்டுமென்ற முக்கியமான கருத்தை உரையிலே நாம் எடுத்துக்காட்டியிருக்க வேண்டும். இப்படிப்பட்ட மாற்றுப்பாதையை நாம் வற்புறுத்துவதைப்

பொறுத்துதான் தமிழகத்தில் இருக்கக்கூடிய நம்முடைய வறுமையையும், வேலையின்மையையும் நீக்குவதற்கு நம்மால் முடியும். அப்படிச் செய்யவேண்டுமென்று சொன்னால் முக்கியமான தொழில்களை மக்களுக்கு சொந்தமாக்காமல், இந்தியாவில் உள்ள ஏகபோக முதலாளிகளுக்குச் சொந்தமாக உள்ள தொழில்களை நாட்டுடைமையாக்காமல், அந்தத் தொழில்கள் மூலமாக கிடைக்கக்கூடிய ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மக்களுக்குச் சொந்தமாக்காமல் எவ்வாறு விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியும் என்ற கேள்வியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்க விரும்புகிறேன். அமெரிக்க, பிரிட்டிஷ் பெரு முதலீடுகள்—இந்தியாவின் ஏகபோக முதலாளிகளின் ஏகபோக முதலீடுகளை நாட்டுடைமை ஆக்காமல் இந்தியா போன்ற வறுமைக் கோட்டிற்கு கீழே பெரும்பான்மையான மக்கள் வாழக்கூடிய நாட்டிலே எவ்வாறு திட்டங்களை நிறைவேற்ற முடியும்? ஒரே வழிதான் உள்ளது. ஒன்று இப்படிப்பட்ட ஏகபோகங்களை நாட்டுடமை ஆக்க வேண்டும். அல்லது பொதுமக்கள் தலையிலே வரிகளைச் சுமத்த வேண்டும். இந்த இரண்டைத் தவிர வேறு மாற்றுப்பாதை கிடையாது. ஆகவே இலாபக் கட்டுப்பாடு என்று ஒன்று கொண்டுவரப்பட இருக்கிறதா? அகில இந்திய ரீதியிலே தொழிலாளர்களுக்கு இதற்குமேல் பஞ்சப்படி வேண்டாம்; இதற்குமேல் சம்பளம் வேண்டாம் என்று சொல்லக்கூடிய நேரத்தில் நமது ஏகபோக முதலாளிகள் இலாபத்தில் கட்டுப்பாடு இருக்கிறதா? நாட்டிலே உள்ள நிலைமைகளுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு இலாபத்திற்கும், வருமானத்திற்கும் கட்டுப்பாடு போடப்பட்டிருக்கிறதா? அப்படி அவ்வாறு செய்யாமல் போனால் இன்றைக்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பணம் எவ்வாறு கிடைக்கும் என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அயல்நாட்டு வர்த்தகம் என்பது ஒரு பெரும் வருமானம் கிடைக்கக்கூடிய தொழில். இன்றைக்கு 100 பேரோ, ஆயிரம் பேரோ இதில் இலாபம் பெறுகிறார்கள். 68 கோடி மக்களின் நல் வாழ்வைக் கருதி அவர்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய அயல் நாட்டு வர்த்தகம் ஏகபோகமாக மத்திய சர்க்கார் தன்னுடைய பொறுப்பிலே ஏற்றுக்கொண்டால், நிச்சயமாக ரெயில்வே கட்டணங்களை ஏற்றாமல் திட்டங்களைப் போட முடியும். சிமெண்ட் விலையை உயர்த்தாமல், உருக்கு விலையை உயர்த்தாமல் திட்டங்களைப் போட முடியும். காரணம் நமக்கு நிதி ஆதாரங்கள் இந்தத் தொழிலிலே வரும். நாட்டிலே திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இவர்கள் மீது

மறைமுகமாக வரிகளை, சுங்க வரியை நாம் போட வேண்டு மென்று கருதுவீர்களேயானால் விலைவாசி உயர்வு என்பது தவிர்க்க முடியாதது. ஆகையால்தான் நான் சொல்கிறேன். நியாயமான விலையில் மக்களுக்கு உணவுப் பண்டங்கள் கிடைக்க வேண்டும். அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க வேண்டும். இந்தப் பண்டங்கள் கிடைக்க வேண்டுமென்றுச் சொன்னால் மத்திய சர்க்கார் வாங்கி தன்வசப்படுத்தி, மாநில சர்க்காருக்குக் கொடுத்து நியாயவிலைக் கடைகள் மூலம் இதை விநியோகியுங்கள் என்று சொன்னால் ஒழிய எவ்வாறு நியாய விலைக் கடையிலே பண்டங்கள் கிடைக்கும்? அரிசி வேண்டும், கோதுமை வேண்டும், மண்ணெண்ணெய் வேண்டும், பருப்பு வேண்டும், சர்க்கரை வேண்டும், இவைகள் அத்தியாவசியமான பொருள்கள். மத்திய சர்க்கார் இந்தப் பண்டங்களை தனது நேரடியான ஆதிக்கத்தில் கொண்டு வராமல் விட்டுவிட்டால் நியாய விலைக் கடை என்பது ஒரு கண்துடைப்பாக இருக்கும் என்பதைத் தவிர அங்கே பொருள் கிடைக்காது. ஆகவே, நாங்கள் கூறுகிறோம், இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களிலும் அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் ஒரே குறிப்பிட்ட விலையில் விற்கப்பட்டால் தான் நாடு முழுவதிலும் விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு உதவியாக அமையும். அதைச் செய்ய முடியுமா என்றால், செய்ய முடியும் மத்திய சர்க்கார் பெருமளவில் கொள்முதலில் ஈடுபட்டால், மாநிலங்களுக்கு பெருமளவில் கொள்முதலில் ஈடுபடுவதற்கு நிதி உதவி செய்தால் நிச்சயமாக மக்களுடைய அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலையில் கிடைக்கும். அப்படிக் கொடுத்தால் அதிகப்படியான பஞ்சப்படி உயர்வு, அதிகப்படியான சம்பளம் போன்ற கோரிக்கைகள் எழுவதற்கான அடிப்படையே இருக்காது. ஆனால் அதைச் செய்வதற்கு தவறுவார்களேயானால் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த முடியாது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கின்ற பொருட்களுக்கு ஒரு நியாயமான விலை வேண்டுமென்று கூறுகிறார்கள். கொடுக்கப்பட வேண்டும். ஆனால், விவசாயிகளுக்குக் கூடுதல் விலை கொடுத்தால் அரசு அதை மக்கள்மீது சுமத்திவிடுகிறார்கள். எப்படி மக்களுக்கு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கும்? உலகத்திலே வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லி அதிலே அக்கறை கொண்டுள்ள அரசாங்கங்கள் விவசாயிகளுக்கு குறிப்பிட்ட விலையைக் கொடுத்து கொள்முதல் செய்தாலும் மக்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களாக இருந்தால் சப்சிடி என்ற முறையிலே மானியம் கொடுத்து மக்களுக்குக் கொடுக்கிறார்கள், அந்த நட்டத்தை ஏற்றுக்கொள்கிறார்கள், அதனால் ஓரளவுக்கு மக்கள் தாங்கிக் கொள்கிறார்கள். கோதுமைக்கு விலையை உயர்த்திக் கொடுக்கிறபோது நெல்லுக்கும் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அந்த உயர்வினால் மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற இஷ்யூ பிரைசில் விலையை உயர்த்தக்கூடாது, மலிவு தானியக் கடைகளிலே கொடுக்கப்படுகின்ற அத்தியாவசியப் பண்டங்களுக்கு விலையை உயர்த்தக் கூடாது. ஆனால், இன்றைக்கு மத்திய சர்க்கார் என்ன செய்கிறது? கோதுமைக்கு 130 ரூபாய் என்று விலையை உயர்த்தினால் உடனடியாக அடுத்த நிமிடமே ரீடெய்ல் பிரைஸை 15 காசு உயர்த்த வேண்டுமென்று சொல்கிறது. ஆகவே இவ்வாறு உடனடியாக விலை உயர்த்தப்படுவதால் மக்கள்மீது அந்தப் பளு போடப்படுகிறது. ஆகவே மத்திய சர்க்காருடைய கொள்கையிலே மாற்றம் வேண்டும். தமிழக சர்க்கார் தங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே ஒரு மாற்றுப் பாதையைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும், அப்படிச் செய்தால்தான் ஒரு சரியான முடிவுக்கு வருவதற்கு அது உதவியாக இருக்கும். ஏழை மக்கள் கேட்டால், நீங்கள் அனாவசியமாக கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள், நீங்கள் மிதமிஞ்சிக் கேட்கிறீர்கள் என்று சொல்லப்படுகிறது.

இந்த நாட்டிலே உள்ள கள்ளப் பணத்தை சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறவர்களைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் என்ன கொள்கையைக் கையாள்கிறது? நிதியமைச்சர் பம்பாயிலே உள்ள ஸ்டாக் எக்சேஞ்சு ஆபீஸுக்கு போய் ஸ்டாக் புரோக்கர்களைக் கேட்கிறார், நீங்கள் எப்படியாவது கள்ளப் பணம் வைத்திருக்கிறவர்களை ஸ்பெஷல் பேரர் பாண்ட்ஸ்லே போடச் சொல்லுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு இன்றைக்கு மத்திய சர்க்கார் வந்திருக்கிறது. அவர்கள் அப்படிக் கேட்டாலும் கள்ளப் பணம் வைத்திருக்கிறவர்கள் போடுவார்களா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தார்மீக ரீதியிலே சட்ட விரோதமாக கள்ளப்பணம் வைத்திருக்கிறவர்களை எல்லாம் கண்டு பிடித்து அவர்களுடைய பணத்தை பறிமுதல் செய்து தண்டித்தால்தான் நியாயமான சர்க்காரை நடத்துவதாகச் சொல்ல முடியும். அதற்கு மாறாக கள்ளப்பணம் வைத்திருக்கின்றவர்களுக்கு பாதுகாப்புக் கொடுத்தால் மேலும் மேலும் நாட்டிலே கள்ளப்பணம் வைத்திருக்கின்றவர்கள் ஆதிக்கம் பெறக்கூடிய நிலைமைதானே வரும், நாட்டிலே அவர்களுக்கு ஆதரவு பெருகக்கூடிய நிலைமை தானே ஏற்படும்? இதனால் மாநில சர்க்காரும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது என்ற பிரச்சினையாக இருப்பதால் மாற்றுப் பொருளாதாரக் கொள்கையை மத்திய அரசு கடைப்பிடித்தால்தான் நிலைமைகள் மாறும். இல்லாவிட்டால் இன்றைக்குள்ள கொள்கைப்படி விலைவாசி ஏற்றம்,

பணவீக்கம் இவைகளிலிருந்து தமிழகம் தப்பிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 3,150 கோடி ரூபாய் போடப்பட்டிருக்கிறது, அதிலே 1981–82 இல் மத்திய சர்க்கார் 514 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்து தமிழக அரசு சொந்த முயற்சிகளின் பேரிலே 563·26 கோடி ரூபாய் அளவுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சரி. ஆனால் பிரச்சினை என்ன என்றால் இன்றைக்கு போடப்பட்டிருக்கின்ற வரிகளினால் வரிகள் உயர்வினால் விலைவாசிகள்—இன்றைக்கு இந்த மாதிரி இருக்கும் என்று யூகிக்கிறோம்—ஆனால் அடுத்த ஆண்டு அப்படியே இருக்கும், மறு ஆண்டு அப்படியே இருக்கும் என்று யூகிக்க முடியுமா ? ஆகவே, இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்ற வரிகளின் காரணத்தினால் அலுமினியம் விலை 17 சதவீதம் உயர்வு ஏற்பட்டிருக்கின்றது என்று சொன்னால் என்ன நிலைமை ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது இன்றைகருக் காலையிலேகூட பத்திரிகையிலே வந்திருக்கிறது. சிமிண்டுக்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது, நிலக்கரிக்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது, எண்ணெய்க்கு விலை உயர்த்தப்பட்டு இருக்கிறது, உருக்குக்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு உயர்த்தப்படுமானால் மாநில சர்க்கார் 3,150 கோடி ரூபாய் போடக்கூடிய திட்டம் 6,000 கோடிக்குத்தானே உயரும். அப்படிப்பட்ட நிலைமைதானே ஏற்படும். அப்போது பணத்திற்கு எங்கே போவது ? விலைவாசியைக் கட்டுப்படுத்தாமல் திட்டம் போடுவது சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் இவ்வாறு உயர்த்தியதற்குக் காரணம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நாங்கள் அதற்காகத்தான் சொல்கிறோம். கேந்திரத் தொழில்களை நாட்டுடைமையாக்கினால் அயல்நாட்டு வியாபாரத்தை தன்னுடைய கையிலே எடுத்துக்கொண்டால், கறுப்புப் பணத்தைப் பறிமுதல் செய்தால் அரசாங்கத்திற்குப் பணம் வந்து சேரும். மத்திய அரசு எக்சைஸ் வரியை, சுங்க வரியை அதிகமாகப் போடவேண்டிய அவசியமில்லை. உருக்கானாலும், எண்ணெய் ஆனாலும் ஒவ்வொன்றிலும் மத்திய சர்க்காருடைய எக்சைஸ் வரி மிகக் கணிசமானது. விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்றால் மத்திய சர்க்கார் அதனுடைய எக்சைஸ் வரியை கணிசமாகக் குறைக்க வேண்டும். அத்தியாவசியப் பண்டங்களின் மீதான வரியை மிகக் கணிசமான அளவுக்குக் குறைக்க வேண்டும்.

[பிற்பகல் 1-00]

இதைச் செய்யாமற்போனால் விலைவாசியைக் குறைப்பதற்கு முடியாது என்று கூற விரும்புகிறேன்.

இதுவொரு பக்கம். அதுமட்டுமல்லாமல் இன்னொரு பக்கத்திலே, அவர்களுடைய செலவுக்காக இரயில்வே கட்டணத்தை உயர்த்திவிட்டார்கள். எந்த வருடத்திலேயும் ஏற்படாத அளவிற்கு, எந்தவொரு வருடத்திலேயும் இவ்வளவு செங்குத்தான உயர்வு இரயில்வேக் கட்டணத்திலே இதுவரையிலே ஏற்பட்டதில்லை.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, கோதுமையினுடைய 'இஷ்யூ பிரைஸ்'—நியாய விலைக் கடைகளிலே கொடுக்கப்படுகின்ற விலையை உயர்த்துகிறார்கள். இது மத்திய சர்க்கார் பின்பற்றக்கூடிய பொருளாதாரப்பாதை. இப்படி இருக்கும்போதுதான் இதனுடைய பின்னணியிலே மாகாண சர்க்காரும் சிக்கிக் கொள்கிறார்கள்.

மாநிலத் திட்டக் குழு வெளியிட்டிருக்கக்கூடிய திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் என்ற அந்தப் புத்தகத்திலே ஆறாவது பக்கத்திலே கூறப்பட்டிருக்கிறது, "கூடுதலான வெளிச் சந்தைக் கடன்களையும் உள்ளிட்டு திட்டத்திற்கான மாநில அரசின் நிதி ஆதாரங்கள் 1,385 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. திட்டத்திற்கு மத்திய அரசின் உதவியாக 665 கோடி ரூபாய் கிடைக்கும். மாநில அரசு, மாநில மின்சார வாரியம் மற்றும் போக்குவரத்துத் துறை நிறுவனங்கள் மூன்றும் சேர்த்து 1,100 கோடி ரூபாய் அளவில் திட்டக் காலத்தில் கூடுதல் வருமானம் ஈட்ட முடியும் என்று மதிப்பிட்டிருக்கிறது".

இங்கேதான் நான் கேட்க விரும்புகிறேன். மாகாண சர்க்காரும், மின்சார வாரியமும், போக்குவரத்துத் துறையும் சேர்ந்து 1985ஆம் ஆண்டுக்குள் 1,100 கோடி ரூபாய் புதிய வருமானத்தை எப்படி திரட்டப் போகிறது, அப்படியென்றால், பெருமளவிலே மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது என்ற திட்டமா? பெருமளவில் பஸ் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்துவது என்ற திட்டமா ? இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன், மாகாண சர்க்கார் நிதி ஆதாரங்களைத் திரட்டுவ்தாக இருந்தாலும், சாதாரணமான ஜனங்களைப் பாதிக்கக்கூடிய முறையிலே அந்த நிதி திரட்டல் இருக்கக்கூடாது. அப்படி வரக்கூடிய காலத்திலே நான் சொல்ல விரும்புகிறேன், மின்சாரத்தைப் பற்றி வந்தாலும், பெருந்தொழில்களுக்கு, அவர்கள் செலவழிக்கக்கூடிய மின்சாரத்திற்கு மின்சாரக் கட்டண வீதத்தைக் கூட்டலாமே ஒழிய, சாதாரண ஏழை விவசாயிகள், சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கு நாம் மின்சாரக் கட்டணத்தைக் கூட்டினால், மத்திய சர்க்கார் ஒரு பக்கத்திலே இரயில்வே கட்டணத்தையும், மற்றக் கட்டணங்களையும் உயர்த்த, மாகாண சர்க்கார்

மின்சாரக் கட்டணத்தையும், போக்குவரத்துக் கட்டணத்தையும் உயர்த்த கடைசியிலே இந்த இரண்டு விதமான திண்டாட்டங்களிலேயும் ஈடுபடக் கூடியவர்கள் மக்கள்தான். ஆகவே, நான் கேட்கிறேன், ஏற்கெனவே 1980—81 முடிந்துவிட்டது ; 1981—82 நடக்கிறது. இதிலே நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டங்கள், ஒரு குறிப்பிட்ட அளவுதான் கொண்டு வந்திருக்கிறீர்கள். ரிசோர்ஸ் மொபலைசேஷன்—நிதி ஆதாரங்கள், பாக்கியிருக்கக் கூடிய மூன்றாண்டுகளில் 1,100 கோடி ரூபாய் அளவிற்கு மூன்றும் சேர்ந்து, அதாவது மாகாண சர்க்காரும், மின்சாரத் துறையும், போக்குவரத்துத் துறையும் சேர்ந்து மட்டும் திரட்டுவது என்றால் மிகப்பெரிய பளுவைத் தமிழக மக்கள் மீது சுமத்துவதாகாதா ?

ஆகவேதான் நான் சொல்கிறேன், இன்றைக்குப் புதிய துறைகளிலே—லாரி டிரான்ஸ்போர்ட் என்ற துறையிலே தமிழக அரசு ஈடுபட்டு புதிய வருமானங்களைச் சேர்ப்பதன் மூலம், போக்குவரத்துத் துறையின் மூலம் ஆதாரங்களைச் சேர்க்க முடியும். இந்த நிதி திரட்டுகின்ற விஷயத்திலே டைரக்ட் டாக்ஸ் என்று சொல்கிறார்களே, நேரடியான வரி, அந்த வரியை தமிழகத்திலே உள்ள நிலப்பிரபுக்களின் மீது விதிக்கலாம். அது இன்றைக்கு சாதாரண ஜனங்களைப் பாதிக்காது. ஆகவே, இப்படிப்பட்ட வழிமுறைகளைத்தான் மாநில அரசு பின்பற்ற வேண்டுமே தவிர, மாநில சர்க்காரின் வரிவிதிப்புக் கொள்கையின் காரணமாக சாதாரண மக்களுடைய வாழ்க்கைத்தரம் சிக்கலாகக் கூடிய நிலை ஏற்படுமேயானால் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக அதிருப்திதான் ஏற்படும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தினுடைய உரையிலே நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேச்சே இல்லை. வேலைவாய்ப்பு எப்படிக் கொடுக்கப்போகிறோம் ? நூற்றுக்கு எழுபது சதவீதத்திற்கு மேலாக கிராமப்புறங்களிலே வாழ்கிறார்கள். தொழில்களின் மூலமாக வேலைவாய்ப்பு கொடுக்க முடியாது என்பது நாடு பூராவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மை. எத்தனை கனரகத் தொழில்களை ஏற்படுத்தினாலும். அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள், 8,000 பேர்களுக்கு வேலை கொடுக்கலாம். ஏறத்தாழ இன்றைக்கு நாலேமுக்கால் கோடியாக இருக்கின்ற தமிழக மக்களுக்கு தொழில்துறையின் மூலமாக இன்றைக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியாது. அப்படியென்றால் நிலத்திற்குத்தான் போக வேண்டும். நிலத்தின் பிரச்னையைத் தீர்ப்பதன் மூலமாகத்தான் கிராமப்புறத்திலே உள்ள வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்க்க முடியும். அப்படியென்றால், மிகவும் வருந்தத்தக்க நிலைமை

என்னவென்றால், இந்த மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றிய பினாமி நிலங்களைக் கண்டுபிடிப்பதற்கான சட்டத்தை மத்திய சர்க்கார் இன்னும் அங்கீகரிக்கவில்லை. அதைப்பற்றிய ஒரு குறிப்பும் அதிகாரபூர்வமாக மாகாண நிதியமைச்சர் அவர்களுடைய உரையிலே காணப்படவில்லை என்பதை நான் பார்க்கும் பொழுது மிகவும் வருத்தப்படுகிறேன். அதை அவர்கள் நிச்சயமாக இந்தத் தமிழக மன்றத்தின் சார்பிலே ஆட்சேபணையை இந்த நிதி நிலை அறிக்கையிலே கொண்டு வந்திருக்க வேண்டும். காரணம், இதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய நிலம் எவ்வளவு ஆக இருந்தாலும் சரி, அந்த நிலங்களை விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழை, எளிய விவசாயிகளுக்கு விநியோகிக்கலாம்.

ஆனால், அது மட்டும் காணாது. நான் தமிழக சர்க்காரைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இங்கேயிருக்கக் கூடிய நிலப்பிரபுக்கள் கையிலே உபரியாக இருக்கின்ற நிலங்களை, அந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை கடுமையாக அமல்படுத்தி, உபரியாக உள்ள அந்த நிலங்களை எடுத்தாலொழிய, ஏழை, எளிய விவசாயிகளுக்கு அவற்றை விநியோகித்தாலொழிய தமிழகத்திலுள்ள வறுமைப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது; வேலையில்லாப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பதை நான் கூற விரும்புகிறேன். அதற்கான ஒரு திட்டத்தையும் இந்த அரசாங்கம் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும். குத்தகைவார விவசாயிகளின் நலனைப் பாதுகாத்து, கோயில்கள் போன்றவற்றில் உள்ள நிலங்களையெல்லாம் அதிலே உழைக்கக்கூடியவர்களுக்கு உரிமையாக்கி, இன்றைக்குப் பெரும் நில முதலாளிகள் விதிவிலக்கு அடிப்படையிலே வைத்திருக்கக்கூடிய மலைப் பிரதேசங்கள் போன்ற இடங்களிலே வைத்திருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களையும் நில உடைமைச் சட்டத்தில் உட்படுத்திக் கொண்டுவந்து இந்த முறையில் அரசாங்கம் செய்தால்தான் கிராமப்புறத்திலேயுள்ள வேலையின்மையைச் சமாளிப்பதற்கு ஓரளவுக்காவது நாம் முயற்சி செய்தவர்கள் ஆவோம்.

அதேபோல்தான் இன்றைக்கு ஒன்று கூற விரும்புகிறேன். வேலைக்கு உணவுத் திட்டம், மிகப் பெரிய தேசீய கிராம ஏற்புத் திட்டமாக வந்திருக்கிறது. கடந்த காலத்திலே இது ஓரளவு பயன்பட்டு வந்திருக்கிறது. இதை மாநில சர்க்கார் சகல அரசியல் கட்சிகளுடைய உதவியோடு நிறைவேற்ற முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்தக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திலே உற்பத்தி பண்ணக்கூடிய '' அசெட்ஸ் '', அதன்மூலமாக நிறைவேற்றப்படக்கூடிய காரியங்கள் நிரந்தரமான பயனை சமுதாயத்திற்கு அளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அப்படியென்றால் ஊரிலே உள்ள ஜனங்

களுக்கு முன்னாலே வைத்து, என்ன வேலை செய்யப்படுகிறது, அதனுடைய செலவு என்ன, அதிலே எந்த அளவு ரோடு போடப்படும், எந்த அளவிற்கு ஆழப்படுத்தப்படும் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தி செய்தால், ஊழல்கள் இல்லாமல் குறித்த காலத்திலே அந்தக் காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே, நிலச்சீர்திருத்தத்தையும், அதேபோல் வேலைக்கு உணவுத் திட்டத்தையும் மிகவும் முக்கியமான கடமையாக இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றைப் பற்றி எங்களுடைய கட்சிக்கு ஒரு மறுப்பு இருக்கிறது. இதிலே சொல்லியிருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் இந்த உலக வங்கியினுடைய திட்டம் என்று சொல்லப் படுகிறது. உதாரணமாக விவசாயத்தை எடுத்துக் கொண்டால், உலக வங்கியினுடைய திட்டத்தின் அடிப்படையில், மாநில நிலைமைகளுக்கு ஏற்ற, சிறந்த, நவீனப் பண்ணை முறைகளை இந்தத் திட்டத்தின் மூலம் உழவர்கள் பெறலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது வேளாண்மை விரிவாக்கப் பணி. அதற்காக, அமெரிக்காவுக்குக்கூட பயிற்சிக்குச் சென்றிருக்கிறார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், நம்முடைய விவசாயத்துறை வல்லுநர்கள், பொதுவாக உலகத்திலே உள்ள மற்ற வல்லுநர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். நான் ஒன்று கேள்விப்பட்டேன். அமெரிக்காவுக்குச் சென்று வந்த விவசாயத் துறை நிபுணர், நம்முடைய மாகாணத்தைச் சேர்ந்த நிபுணர் என்னிடம் சொன்னார், ''அங்கே நான் போனால், எனக்கு ஒன்றுமே தெரியாது என்ற அடிப்படையில் அவர்கள் ஆரம்பிக்கிறார்கள்'' என்று அவர் குறைபட்டுக் கொண்டார். எங்கேயோ இருந்து வந்திருக்கக்கூடிய, ஆப்பிரிக்கா கண்டத்திலேயிருந்து வந்த விவசாயத்தைப் பற்றித் தெரியாத ஒருவருக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதைப் போல ஆரம்பிக்கிறார்கள். அது சரியாக இல்லை. அங்கே சென்று படிக்கக்கூடிய அளவு, அதிலே குவாலிட்டி—தன்மை இல்லை என்று சொல்லி இருக்கிறார். அப்படியிருக்கும் போது இந்த உலக வங்கியினர் என்ன சொல்கிறார்கள்? அமெரிக்காவில் என்ன முறையிருக்கிறதென்றால், பெரிய, பெரிய பண்ணைகளை வைத்து 3 பேர்கள் வேலை செய்வார்கள். அந்த முதலாளி இரண்டு இயந்திரங்களை வைத்து வேலை செய்யக் கூடிய முறை அங்கேயிருக்கிறது. அந்த அமெரிக்க முறை இந்தியாவுக்கு, நிலத்தின்மீது கோடிக்கணக்கான மக்கள் சார்ந்திருக்கிற நமக்கு எப்படிப் பொருந்தும்? தமிழ்நாட்டில் இன்றைக்குத் தேவை நிலச்சீர்திருத்தம். தமிழ்நாட்டில் இன்றைக்குத் தேவை நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கிடைத்தல். குத்தகை வார விவசாயிகளுக்கு நிலம் கொடுத்தல். இந்நிலையில், இன்றைக்கு எவ்வாறு இந்த உலக வங்கியினுடைய விரிவாக்கத்

திட்டம் பயன்படும்? அது யாருக்குப் பயன்படப்போகிறது தெரியுமா? இலட்சக் கணக்கான ரூபாய் முதலீடு செய்து, நகர்ப் புறத்திலே, கிராமப்புறத்திலே பங்களாக்கள் வைத்துக்கொண்டு விவசாயப் பண்ணைத் தொழிலை 30 ஏக்கர், 40 ஏக்கரிலே தொழில் துறை போல் நடத்திக்கொண்டு, இலட்சக்கணக்கான ரூபாய் இலாபம் அடையக்கூடிய சில பெரிய பிரபுக்களுக்குத் தான் அந்த விரிவாக்கத் திட்டம் பயன்படப் போகிறதே தவிர, தமிழ்நாட்டிலே இன்றைக்கு இருக்கக்கூடிய யதார்த்த நிலைமையில் இரண்டு மூன்று ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் தான் சாதாரண பண்ணைவைத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியும். அவர்களுக்குப் பயன்படவேண்டுமென்றால் செய்யப்படக்கூடிய காரியங்கள் வேறு. ஆகவே, இந்த உலக வங்கித் திட்டத்தைப் பற்றி நாம் மிகவும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று தமிழ் நாட்டு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். வறட்சியைப் பொறுத்தவரை ஏற்கெனவே விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. மத்திய அரசிடம் தன்னுடைய தேவைகள் என்ன என்பதைப்பற்றி ஒரு விரிவான அறிக்கையை மாகாண சர்க்கார் சமர்ப்பித்திருக்கிறது என்று நான் அறிகிறேன். ஆனால், அந்த வறட்சி என்பது மிகக் கடுமையாக இருக்கிறது. தொடர்ந்து அதைப் போக்க யுத்த கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்காக பல மாவட்டங்களிலே ஏற்கெனவே சர்வ கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டு காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுபற்றி நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் வரக் கூடிய காலத்திலே, எள்ளளவும் தன்னுடைய கவனத்தைக் குறைத்து விடாமல் காரியங்களைச் செய்ய வேண்டும். குறிப்பாக, குடி தண்ணீர், கடைகள் மூலம் மலிவான உணவுப்பொருள், ஆடு-மாடுகளுக்கான தீவனங்கள், மக்களுக்கு வேலை என்ற இந்த 4 அம்சங்களிலே நம்முடைய தொடர்ச்சியான கவனம் இருக்க வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, உணவு நிலைமை. மத்திய சர்க்காருடைய பொறுப்புகளைப் பற்றி நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆயினும், மாகாண சர்க்காருக்கும் அந்த உணவு நிலைமையில் பங்கு உண்டு. தமிழகத்தினுடைய மிகப் பெரிய பிரச்சினை இது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எனக்கு, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுடைய கூட்டுறவுத் துறையினுடைய ஒரு பெரிய அதிகாரி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். கூட்டுறவு சொஸைட்டிகள் வாங்கக்கூடிய கொள்முதல் திட்டத்திற்கு இன்றைக்குப் போதுமான நெல் கிடைக்கவில்லையென்று அவர் குறிப்பிடுகிறார். அதற்கு உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்

துங்கள் என்று அவர் குறிப்பிடுகிறார். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, தமிழ்நாட்டிலே இந்த நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரை, தமிழ்நாடு அரசாங்கம் தன்னுடைய சக்திக்கு உட்பட்டுச் செய்யக்கூடிய அனைத்தையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்கிறேன். மத்திய அரசாங்கத்திடம் உதவி கேட்பது, மத்திய சர்க்காருடைய கொள்கையை மாற்றச், சொல்வது என்பது வேறு. அதை நாம் தொடர்ந்து செய்யக்கூடிய காலத்திலேயே மாகாண சர்க்கார் தன் பொறுப்பை நிறைவேற்றாவிட்டால், இன்றைக்குள்ள நிலைமை இன்னும் சில வாரங்களில் மோசமாகப் போகும்.

[பிற்பகல் 1–10]

பத்திரிகையிலே என்ன செய்தி வருகிறது. அதிகமான விலை கொடுத்து இன்றைக்கு கூட்டுறவு சொசைட்டிகள் வாங்குவதற்கு முன்வந்தாலும், பெரும் நிலப்பிரபுக்கள் தங்களிடம் உள்ள நெல்லைக் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அதற்காக அரசாங்கம் இப்போது ஒரு சட்டம் போட்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே இருக்கக்கூடிய நெல் எவ்வளவு என்பதை இன்றைக்கு சர்க்காருக்கு அறிவிக்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். அப்படி என்றால் அதனுடைய அர்த்தம் என்ன? அதிகப்படியான விலை கொடுத்தாலும் நெல் கொடுக்கமாட்டேன் என்றால் அடுத்து வரக்கூடிய காலத்திலே நெல்லின் விலை, அரிசியின் விலை மிகவும் அதிகமாக உயரப் போகிறது என்பதுதான் அதனுடைய அர்த்தம். அப்படியென்றால் நான் கேட்க விரும்புகிறேன், இந்தக் குடும்பக் கார்டுகளை தயவு செய்து உடனடியாக ஒரு அவசர நடவடிக்கை மூலமாக மேற்கொண்டு, குடும்பக் கார்டுகள் கேட்டவர்களுக்கெல்லாம் கொடுங்கள். என்னுடைய சொந்த அனுபவம் என்னவென்றால், சென்னையில் உள்ள சைதாப்பேட்டையில் இருக்கக்கூடிய உணவுத் துறை அதிகாரிகளுக்கு செய்யப்பட்டிருக்கிற விண்ணப்பங்கள், பல மாதங்கள் ஆகியும் அதைப் பற்றி விசாரிப்போம் என்று சொல்லியும், அவர்கள் விசாரிக்கவில்லை. இன்றைக்கு நியாய விலைக் கடைகளிலே அரசாங்கம் பயப்படக்கூடாது, அதிகமாக கார்டுகள் வந்தால் அதற்கு சப்ளை செய்ய வேண்டுமே என்று தமிழக அரசாங்கம் பயப்படக்கூடாது. அதனுடைய பண வசதிக்கேற்ப, மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப என்ன நடவடிக்கை எடுக்கிறார்களோ அதைப் பொருத்துத்தான் தமிழ்நாட்டில் உள்ள மக்கள் இன்றைக்கு அந்த அரசாங்கத்தை பாராட்டுவார்கள். அதிலே அரிசி மட்டுமல்ல, கோதுமை, புன்செய் தானியங்கள், எண்ணெய் பொருள்கள் போடவேண்டும். டி.யு.சி.எஸ். கடைகள் சென்னையில் நடைபெறுகின்றன. அதிலே

அவர்களுக்கு மது பெர்மிட் கொடுக்கக்கூடிய வேலைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஒருவன் மது பர்மிட்டைக் கொண்டு வந்தால் வெளியே இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான தாய்மார்கள், அவர்கள் மது பர்மிட் வாங்கிவரும் வரை காத்திருக்க வேண்டும். அதற்கு நேரமும் அதிகமாகும். பல நேரங்களில் பல பேர்களுக்கு மண்ணெண்ணெய், சர்க்கரை, பாமாலின் எண்ணெய் கிடைப்பதில்லை. எனவே இன்னின்ன நாட்களில் இன்னின்ன கார்டுகளுக்கு கொடுக்கப்படும் என்று வரையறை ஏற்படுத்தி அதிலே ஊழல் நடைபெறாமல் தடுக்க வேண்டும். எடை குறைவாகக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கம் மாகாணம் பூராவும் பல்லாயிரக்கணக்கான நியாய விலைக் கடைகளில் கார்டுதாரர்களைப் பதிவு செய்து, கொள்முதல் செய்து இந்த நியாய விலைக் கடைகளின் மூலமாக மக்களுக்கு வெளி மார்க்கெட்டில் உள்ள விலையைக் காட்டிலும் கணிசமான அளவுக்கு குறையக்கூடிய அளவிலே உணவுப் பண்டங்களை விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்வதுதான் மிகவும் முக்கியமான விஷயம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மது பர்மிட்டுகளைத் தனியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்கும் டி.யு.சி.எஸ். கடைகளுக்கும் சம்பந்தம் இருக்கக் கூடாது. டி.யு.சி.எஸ். கடைகளிலே, நியாய விலைக் கடைகளிலே உணவுப் பண்டங்களைத்தான் கொடுக்க வேண்டும். இங்கே சூபர்வைசரி அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவு சொசைட்டிகளிலேயும் டி.யு.சி.எஸ். கடைகளிலும் இருக்கின்ற அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் தங்களுடைய வாகனங்களை எடுத்துக் கொண்டு இந்த மாகாணம் பூராவும் உள்ள கடைகளுக்குச் சென்று பார்க்கிறார்களா ?

பல பத்திரிகைகளிலே கூட எழுதுகின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தக் கஷ்டங்கள் தெரியுமா என்று பல பத்திரிகைகளிலே கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியும். 3 மணி நேரம் 4 மணி நேரம் 5 மணி நேரம் நிற்பதற்கு தயாராக இல்லாவிட்டால் அவர்களாலே வாங்க முடியாது. எத்தனை குடும்பத்திலே அவ்வாறு செய்ய முடியும். ஆகவேதான் நான் கூற விரும்புகிறேன், அதை முறை வைத்து இன்னின்ன தினங்களில் இத்தனை நெம்பர்கள் உள்ள கார்டுகளுக்குப் போடப்படும் என்று சொல்லி அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் இந்தப் பிரச்சினை குறித்து இவ்வளவு நேரம் பேசியிருக்கிறேன்.

கடந்த காலத்திலே அரிசியை வைத்துத்தான் அரசியல் நிர்ணயிக்கப்பட்டது. அரிசியை மக்களுக்குக் கொடுக்க முடியாத அரசாங்கத்தை மக்கள் நிராகரித்து விட்டார்கள். மற்றப் பிரச்சினை

எதுவாக இருந்தாலும் அவர்களாலே பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் உணவு கிடைக்கவில்லை என்றால் உடனே மக்கள் தெருவிலே வருவதைத் தவிர வேறு வழி இருக்காது. ஆகவேதான் மிக முக்கியமான பிரச்சினையாகிய இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ்நாடு அரசாங்கம் மிகச் சீரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். காவிரிப் பிரச்சினையைப் பற்றி பேசும் போது சர்வகட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு யோசனை கேட்டது போல, இந்த உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நியாயமான விலையில், உணவுப் பண்டங்கள் கிடைப்பதற்கு என்ன செய்வது என்பதைப் பற்றி பேச மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு சர்வ கட்சி கூட்டத்தை, சட்டமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரையும் அழைத்துப் பேசி அதிலே ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, சில ஆதாரங்களைக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். நான் ஏற்கனவே சொன்னதைப் போல நிலப்பிரபுக்களுக்கு வரியைப் போடுவோம். தமிழ்நாட்டிலே உள்ள பெரும் முதலாளிகள் சம்பாதிக்கும் வருமானத்திற்கு வரி போடுவதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றன என்பதைப் பற்றி அரசாங்கம் யோசிக்கட்டும். மின்சாரத்தை உபயோகிக்கக் கூடிய பெரும் தொழில்களுக்கு இன்னும் கொஞ்சம் வரியை உயர்த்த என்ன செய்வது என்று யோசிக்கட்டும். ஆனால் சாதாரண மக்கள் மீது போடுவது எப்படிப் பொருத்தமாகும்.

உதாரணமாக, தற்போது சென்னை மாநகராட்சி எல்லையிலும், சென்னை மாநகரைச் சுற்றிலும் 32 கி.மீ. பகுதியிலும் விதிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரி தற்போதுள்ள 5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது என்பதாகும். நான் கேட்கிறேன், சென்னை நகரத்தில் வசிக்கும் மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களுக்கு மட்டும் ஏன் இந்த வரி உயர்த்தப்படுகிறது? அந்த மக்களுக்கு வசதி செய்வதற்காக இந்தப் பணம் செலவிடப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையைக் காட்டிலும் ஏராளமான பெரும் கட்டிடங்கள் எங்காவது இருக்கிறதா? சென்னை மாநகராட்சிக்கு பணம் இல்லை என்று சொல்லியிருப்பதால் நான் கூறுகிறேன், ஒரு கமிஷனை நியமித்து ஆயிரம் ரூபாய்க்கு மேலும், அதற்கு அதிகமாகவும் வாடகை வருமானம் வரும் கட்டிடங்கள் எத்தனை சென்னை மாநகரத்தில் இருக்கின்றன என்கிற கணக்கை எடுத்து, அந்தக் கட்டிடங்களின் சொந்தக்காரர்கள் அந்த மதிப்பிற்குத் தக்க வகையில் சொத்து வரி செலுத்துகிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு சிறிய வீட்டிற்கு வாடகை ரூபாய் 400 வசூலிக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் கார்ப்பரேஷனுக்கு

வரி கட்டுகிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். பல்லாயிரக் கணக்கான ரூபாயை வாடகையாக வசூலித்து விட்டு, அந்த அளவிற்கு மாநகராட்சிக்கு வரி செலுத்தாமல் இருக்கிறார்கள். சொத்து வரி என்பது கிட்டத்தட்ட 2 மாத வாடகை கட்ட வேண்டும். அப்படிக் கட்டப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த சொத்து வரியை சரியாகக் கணக்கு எடுத்து வசூலித்தால், மாநகராட்சி நல்ல பண வசதியைப் பெறும், இத்தகைய வரியை உயர்த்தி சாதாரண மக்களை கஷ்டப்படுத்த வேண்டியது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரம் குடிசை வாழ் மக்கள் அதிகமாக இருக்கும் பகுதியாகும். அவர்களும் இந்த மேல்வரியைச் செலுத்த வேண்டும் அல்லவா? ஆகவே நான் சொல்கிறேன், இந்த மறைமுக வரியை எடுத்து விட்டு, சென்னை மாநகராட்சி எல்லைக்குள் எத்தனை பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. எவ்வளவு வாடகை அதன் மூலம் கிடைக்கின்றது என்கிற கணக்கை ஆராய்ந்து பார்த்து, அந்த அடிப்படையில் சொத்து வரியை வசூலித்தால் சென்னை மாநகராட்சியின் வருமானம் பெரும் அளவிற்குப் பெருகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த மறைமுக வரியைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் வசதி செய்வதற்காக என்று இந்த வரி உயர்வுக்குக் காரணம் காட்டுகிறீர்கள். சென்னை எல்லை கிண்டியோடு முடிந்து விடுகிறது. அப்படியிருக்கிறபோது 32 கிலோ மீட்டர் சுற்றுக்குள் இருப்பவர்களும் இந்த வரி உயர்வைச் செலுத்த வேண்டும் என்று சொல்வது என்ன நியாயம். இந்த வரி விதிப்பு கொஞ்சமும் நியாயம் அல்ல. அங்கே இருக்கும் சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இந்த வரியைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உடனே மாற்று வழி என்ன என்று கேட்பீர்கள். அதற்காகத்தான் நான் சொல்கிறேன், சென்னை மாநகரத்தில் உள்ள பெரிய கட்டிடங்களுக்கான சொத்து வரியை உயர்த்தி, வசூலித்தால் இந்த மறைமுக வரி உயர்வு தேவையிருக்காது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

முத்திரைத் தீர்வையை அதிகரித்து இருக்கிறீர்கள். இதிலே நான் சொல்ல விரும்புவது, சாதாரணமாக 10,000 ரூபாய் வரைக்கும் மதிப்புள்ள கட்டிடங்கள், சொத்துக்கள் மாற்றுவதைப் பொறுத்தவரையில், இந்த முத்திரைத் தீர்வை உயர்வு இருக்கக் கூடாது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், ஏழை, நடுத்தர மக்கள் தங்களுடைய சொத்துக்களை மாற்றுகிற போது மிகவும் பாதிப்புக்குள்ளாவார்கள். ஆகவே, 10,000

ரூபாய்வரையில் உள்ள சொத்து மாற்றங்களுக்கு இந்த முத்திரைத் தாள் தீர்வு உயர்வு கைவிடப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெட்ரோல், டீசல் மீதான வரி நிலைமைகள் அண்டை மாநிலத்தில் எப்படி இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்கார் பெட்ரோல், டீசல் போன்றவற்றின் மீதான எக்சைஸ் வரியைக் குறைக்க வேண்டும். மாகாண சர்க்கார்கள் அவைகள் மீது போடப்படும் விற்பனை வரியை விட்டு விடுவதற்கு முன்வர வேண்டும். இப்படிச் செய்தால்தான் பப்ளிக் டிரான்ஸ்போர்ட் பொறுத்தவரையில், பொதுமக்கள் உபயோகிக்கும் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் 2 மாதத்திற்கு அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை உயர்வு என்கிற நிலைமைக்கு அவசியம் இல்லாமல் இருக்கும். இல்லாவிட்டால் இது ஒரு நிரந்தரமான வியாதியாக இருக்கும். பெட்ரோலிய விலைகளை அவர்கள் உயர்த்திக் கொண்டே இருப்பார்கள், பஸ் கட்டணமும் உயர்ந்து கொண்டே இருக்கும். ஏற்கனவே பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிற காரணத்தால் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே நான் சொல்ல விரும்புகிறேன். சொந்தமாக கார் வைத்து இருப்பவர்களிடம் இருந்து அதிகமாகப் பணம் வசூலிக்கலாம். அதாவது ஒன்றுக்கு மேற்பட்டு கார் சொந்தமாக வைத்து இருப்பவர்களிடமிருந்து அதிகமான பணம் வசூலிக்க வேண்டும். அல்லது கொஞ்சம் கூடுதலாக வரியை வசூலிக்க வேண்டும். அப்படியில்லாமல் இப்படி மேலும் மேலும் உயர்ந்துக் கொண்டே போனால், மக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படும். ஏற்கனவே ரயில் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. மேலும் பஸ் கட்டணம் உயர்ந்தால் அது சரியாக இருக்காது. ஆகவே, கொஞ்சம் நிதானமாக அரசாங்கம் இந்தப் பஸ் கட்டண உயர்வைப் பொறுத்தவரைக்கும் மின்சாரக் கட்டண உயர்வு பொறுத்தவரைக்கும் சாதாரண மக்களைப் பாதிக்காத வகையில் செயல்படுவதுதான் பொருத்தமாக இருக்கும், சரியாக இருக்கும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் 'வரவேற்கக்கூடிய' ஒரு அம்சம் என்னவென்றால், 15,000-க்குக் குறைந்த விற்பனையுள்ள பத்திரிகைகளுக்குத் தேவையான பத்திரிகைக் காகிதம் மீது விதிக்கப்படும் 8 சதவீத வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படும் என்பதாகும். இதை ரொம்பவும் வரவேற்கிறேன். அதற்காக சிறு பத்திரிகையாளர்களும் அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனை பத்திரிகைகள் 15,000-க்கும் குறைந்த அளவில் விற்பனையில் இருக்கப் போகின்றன. சிறு பத்திரிகைகள் நடத்துவது என்பது மிகவும் கஷ்டமான காரியம். அவர்களுக்கு

விளம்பரம் கிடைப்பது இல்லை. ஆகவே், இந்த நிலைமை இருப்பதால் தற்போது போட்டுள்ள வரியைக் கைவிட வேண்டும். அதனால் பெரும் தொகை அரசாங்கத்திற்கு வருமானமாக இல்லை என்று சொன்னால், இந்த 4 சதவீத வரியைக் கூட அந்த 15000-க்கும் குறைவான விற்பனை உள்ள பத்திரிகைகளிடம் இருந்து வசூலிப்பதை ரத்து செய்வதற்கு அரசாங்கம் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

அதைப் போல நாங்கள் கடந்த பல காலமாக ரெவின்யூ அமைச்சரிடம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதாவது, அப்பளம், சேமியா, ரொட்டி உணவு போன்றவைகளுக்கு வரியை ரத்து செய்ய வேண்டுமென்பது. அதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், வரி ரத்து செய்யப்பட்டுள்ளது. அதைப்போல பேனா, நிப்பு, ஊறுகாய் செய்கிறார்கள். இவைகள் எல்லாம் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள். இப்படிப்பட்ட சிறு தொழில்களுக்கு விற்பனைவரியை ரத்து செய்தால் மேலும் இத்தகைய தொழில்கள் பெருக வாய்ப்பு ஏற்படும். விற்பனை வரியை ரத்து செய்தால் தான் இந்தத் தொழில்கள் பெரும் தொழில்களோடு போட்டி போட முடியும்; இல்லாவிட்டால் போட்டிபோட முடியாமல் நசித்துவிடும். அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்குக் கொள்கைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறது. மதுவிலக்கு நம்முடைய இலட்சியம். மக்கள் மது குடிப்பதை படிப்படியாக குறைக்க வேண்டும். மது என்கிற போதையிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்பது இலட்சியமாக இருக்கட்டும். எல்லா மக்களும் குடிப்பதை நிறுத்த வேண்டும். அதற்கு சட்டம் போட்டு தடுக்க முடியாது; சட்டம் போட்டால் மட்டும் போதாது; மக்களுடைய ஒத்துழைப்பு வேண்டும்.

ஏற்கனவே ஒரு கடுமையான மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது நாங்கள் எல்லாம் சொன்னோம். தண்டனையால் பலன் இல்லை, பிரச்சினை தீராது. அதனால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னோம். அரசாங்கம் இன்றைக்கு அதை ஏற்று மதுவிலக்கை தளர்த்தியிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்; இரண்டு கை நீட்டி வரவேற்கிறேன். இந்த மது அருந்தும் பிரச்னையிலே நானும் பார்த்திருக்கிறேன். பல பெண்கள் இன்றைக்கு குடிக்கிறார்கள். யார் இப்படி குடிக்கிறார்கள், எங்கே குடிக்கிறார்கள் என்று நீங்கள் கேட்கவேண்டாம்; நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் உழைப்பவர்கள், குடிக்கிறார்கள்.

இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால் கள்ளச்சாராயம் குடித்து சாகிறார்கள். நம்முடைய நோக்கம் நிறைவேறவில்லை. ஆகவே, சட்டப் பூர்வமாக அங்கீகாரம் அளித்து, குடிப்பவர்களுக்கு பாதிப்பு இல்லாமல் செய்து, படிப்படியாக அவர்கள் குடியை நிறுத்த வேண்டும். அதற்கு தகுந்த முறையிலே பிரச்சாரம் செய்ய வேண்டும். அந்தப் பிரச்சாரத்திற்காக ஒரு கோடி ரூபாய் அல்ல, 2 கோடி ரூபாய் வேண்டுமானலும் செலவழித்து, விஞ்ஞானப் பூர்வமாக எடுத்துச் சொல்லி, குடிப்பதை படிப்படியாக நிறுத்த வேண்டும் ; மக்களை திருத்த வேண்டும். அப்படியும் குடிக்கத்தான் செய்வேன் என்றால் அப்படிப் பட்டவர்களை சட்டம் போட்டு தடுக்க முடியாது. ஆகவே, பூரணமாக மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும். அதனால் அரசாங்கத்திற்கு அதிகமாக வருமானம் கிடைக்கும்.

இன்னொன்றையும் இதிலே குறிப்பிட வேண்டும். இப்போது நீங்கள் வைத்திருக்கிற முறையினால் லைசென்ஸ் வரியும் இருக்கிறது, எக்சைஸ் வரியும் இருக்கிறது. இரண்டு வரிகளின் மூலம் வருமானத்திற்கு வழி செய்திருக்கிறீர்கள். முதன் முதலில் சேல்ஸ் டாக்ஸ் போட்ட இராஜாஜி காலத்திலே கூட ஒரு வரிதான்; எக்சைஸ் வரிதான் இருந்தது. இப்போது நீங்கள் இரண்டு வரி—லைசென்ஸ் வரி, எக்சைஸ் வரி இரண்டும் வாங்கப்போகிறீர்கள். ஆகவே, மதுவிலக்கை பூரணமாக ரத்து செய்து, குடிப்பவர்களுக்கு அரசாங்க முத்திரை போட்ட, சுகாதாரமான கள்ளும் சாராயமும் கிடைக்க ஏற்பாடு செய்து, அரசாங்கத்தின் வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் ; அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு இப்போது நீங்கள் சொல்லுகின்ற அரைகுறை திட்டம் போதாது ; அரைகுறையாக இருந்தால் கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கு உயிரூட்டம் செய்வதாக ஆகிவிடும் ; அது உயிர் பெறும். பூரணமாக ரத்து செய்துவிட்டால் அது செத்துவிடும். இதுதான் எங்கள் கணிப்பு. இதனால் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

அது மட்டுமல்ல. இந்த கஞ்சா, அபின், எல்.எஸ்.டி. போன்ற போதைப் பொருட்களை கண்டிப்பாக தடை செய்ய வேண்டும். அவைகளை விற்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவை வெளி நாட்டிலிருந்து வருகின்றன, டூரிஸ்ட் மூலம் வருகிறது என்று சொல்கிறார்கள். கஞ்சா, அபின், எல்.எஸ்.டி. போன்றவைகளை சாப்பிட்டு, மாணவர்கள் கூடகெட்டுப்போகிறார்கள். ஆகையால் இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மதுவிலக்குப்

பிரச்சினையிலே நட்பு கட்சிகள் எல்லாம் மற்ற கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆயினும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் இதுதான் எங்களுடைய அனுபவபூர்வமான நிலை. பூரணமாக ரத்து செய்துவிட்டால் இதிலே 'லா அன்ட் ஆர்டர்' பிராபிளம் ஏற்படும் என்று நீங்கள் பார்க்க வேண்டாம். தாய்மார்களுக்காக மது விலக்கு என்பதை சொல்லவேண்டியதில்லை. ஆகவே, நீங்கள் மதுவிலக்கை பரிபூரணமாகரத்துசெய்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது இந்திரா காங்கிரஸ் அதை ஆட்சேபிப்பதற்கு காரணம் இல்லை. அவர்கள் ஆட்சியில் இருக்கிற மாநிலங்களில் மதுவிலக்கு இல்லை; மற்ற மாநிலங்களிலும் மதுவிலக்கு இல்லை. மதுவிலக்கை ரத்து செய்வதும் அமுல்படுத்துவதும் அவரவர் விருப்பம் என்று பிரதமர் இந்திரா காந்தி சொல்லிவிட்டார். மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பில் ஒரு சல்லிக்காசு கூட தரமுடியாது என்று நிதி அமைச்சர் வெங்கட்ராமன் சொல்லிவிட்டார். ஆகவே, இங்கே மதுவிலக்கை அமுல்படுத்துங்கள் என்று சொல்வதற்கு அவர்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது; அவர்கள் சொல்வதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

சிகரெட் குடிப்பது ஆபத்து என்று அட்வர்டைஸ்மென்ட் போடுகிறோம். இருந்தும் குடிக்கிறார்கள் ; குடிப்பதை யாரும் நிறுத்தவில்லை. குடிக்கக்கூடாது என்று விஞ்ஞானப்பூர்வமாகத் தெரிந்து சொல்கிறோம ; கேட்கவில்லை. நான் சிகரெட் குடிப்பதில்லை. ஆனால் மற்றவர்களைக் குடிக்கக் கூடாது என்று சொன்னால் மறைவாகப் போய் குடிக்கிறார்கள். அதற்காக நாம் கட்டாயப் படுத்த முடியாது. அதுபோலதான் மதுவும்.

இந்த எரி சாராயம் விஷயத்தில் மத்திய விசாரணை என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. இரண்டு மாநிலங்களின் உரிமையை அது பறிக்கிறது. மாநிலத்திற்கு உள்ள உரிமை குறைக்கப்படுகிறது. இன்றைக்கு மத்திய விசாரணை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்கு தமிழ்நாடு சர்க்கார் சட்டப்படி என்னென்ன செய்வதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கின்றதோ அந்த வகையில், மத்திய அரசு இதற்கான நடவடிக்கையில் இறங்கினால் அதை ஆட்சேபிப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். இந்திய அரசியல் சட்டப்படி இதிலே என்னென்ன வழிவகைகள் இருக்கிறதோ அந்த வகையிலே இதை ஆட்சேபிப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே

எரி சாராயத்தைப் பற்றிய பிர்ச்சினையில் இரண்டு கமிஷன்களும் விசாரிக்கட்டும், அந்தக் கமிஷன்களின் முடிவுகளிலே மாறுபாடு ஏற்பட்டால் பிறகு பார்த்துக்கொள்ளலாம். இதுபற்றி ஏற்கனவே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். உயர்நீதி மன்றங்களிலே ஒன்றுக்கொன்று முரணான தீர்ப்பு வருகின்றது என்றால் கடைசியில் அதுபற்றி சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் அங்கே ஒரு தீர்ப்பு வழங்கப்படுகின்றது. ஆகவே இதை ஒரு பெரிய அரசியல் பிரச்சினையாக ஆகககவேண்டியதில்லை.

அடுத்தபடியாக ஒரு சில விஷயங்களை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். வீட்டுவாடகைகளைக் கட்டுபடுத்துவதற்கு இந்தஅரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற இடங்களில் வீட்டினுடைய சொந்தக்காரர்கள் அநியாயமாக வீட்டு வாடகையை உயர்த்துகிறார்கள். அதைத் தடுப்பதற்கு உடனடியாக சட்டம் கொண்டு வருவதற்கு ஆவன செய்யவேண்டும். அப்படிச் சட்டம் கொண்டு வந்தால்தான் நகரப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் வாழ முடியும். ஆகவே இதுபற்றி அரசாங்கம் [illegible] வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோர் ஓய்வூதியம் 25 ரூபாய்தான் நாம் இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு வரம்பு போட்டிருக்கிறோம். உண்மையிலேயே வயதானவர்கள் பலர் அந்த உதவியைப் பெறுவதற்கு வழியில்லை. ஆகவே முதியோர் ஓய்வூதியத்தைக் கொடுப்பதற்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்கான சட்டத்தையும் அரசாங்கம் கொண்டுவர வேண்டும். இது சமுதாயத்திற்கு மிகவும் சாதகமான ஒரு நடவடிக்கையாகும். விவசாயத் தொழிலாளர்களின் ஓய்வூதியத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு 25 கோடி ரூபாய் கூட மேற்கு வங்கம், கேரளா, போன்ற மாநிலங்களில் செலவழிக்கப்படுகின்றது.

அடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதிப்படுபவர்களுக்கும் நிவாரணம் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர்கள் கொள்கை பற்றிப் பேச விரும்புகிறேன். கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்ற வகையில் செலக்ட் கமிட்டி, ஏற்படுத்தப்பட்டு அது எல்லா இடங்களுக்கும் சுற்றி வேலைகள் எல்லாம் முடிந்து எல்லாம் ரெடியாகிவிட்டது. ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்களுடைய உரையிலே என்ன வந்திருக்கின்றது என்றால் அது சீக்கிரத்தில் கொண்டுவரப்படும் என்று வந்திருக்கின்றது. தொழிலாளர் நல இலாகா மிகவும் அவசர அவசரமாகக் கொண்டு வரவேண்டியது இந்த சட்டம். ஆனால் நான் ஒன்று கேள்விபபடுகிறேன். தமிழ்நாட்டிலே உள்ள பெரிய மாஸ்டர் வீவர்கள் இதை எதிர்க்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவர்களுடைய எதிர்ப்புக்கு அரசாங்கம் செவி சாய்க்கக்கூடாது. 7 இலட்சம், கை நெசவுத தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலைமை வேலை நிலைமை ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய இந்தச் சட்டத்தை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அரசு கொண்டு வரவேண்டும். அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்.ஜி.ஓ., ஆசிரியர்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பஞ்சப்படியை கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். ட்ரெஷரி ஊழியர்கள் கிட்டத்தட்ட 40 பேர் ஏதோ கிளர்ச்சி நடத்தியதன் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே அவர்களுடைய தற்காலிக வேலை நீக்கத்தை ரத்து செய்து வேலூர், மதுரை, சென்னை போன்ற இடங்களில் உள்ள அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ட்ரெஷரி துறையிலே இருக்கின்ற அரசாங்க ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையிலே நல்லுறவு ஏற்படுவதற்கு இதை அவசியம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அத்தியாவசியப் பணிகள் சட்டம் தேவையில்லை. தமிழ்நாடு அரசாங்கத்திற்கு மீண்டும் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு நீங்கள் ஜனநாயக சக்தியினைத் திரட்டக்கூடிய பணியிலே ஈடுபட்டிருக்கிறீர்கள். அந்த நிலையில் உழைப்பாளி மக்களைக் கடுமையாகத் தாக்கி அவர்களிலே பல பிரிவினருக்கு வேலை நிறுத்தம் செய்யக் கூடிய உரிமை இல்லை என்ற ஒரு கடுமையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டாம். அது நம்முடைய ஜனநாயக சக்திகளை மேலும் பிளவுபடுத்தும். உழைப்பாளி மக்களிடத்திலே ஒரு கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தும். ஆகவே அரசாங்கம் அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுர்ரியிலே கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது. அதைத் தீர்ப்பதற்கும், மதுரையிலே தெற்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கும்

அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். அது நீண்ட காலமாக பெண்டிங்கிலே இருக்கக்கூடிய ஒரு திட்டம் என்று கூறிக் கொண்டு இநத நிதிநிலை அறிக்கையின் மீதான என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. சோ. அழகர்சாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நேரம் ஆகி விட்டது. எல்லோரும் பசிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக் கின்ற காரணத்தால் நான் இப்போது பேசவில்லை. மாலையில் பேசிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 5-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 5 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

*திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்க முன்வந்திருக் கிறேன்.

"பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்

அணி என்ப நாட்டிற்(கு) இவ்வைந்து"

என்கிற குறளை முதற்கண் தெரிவித்து, இந்த நாட்டிற்குத் தேவை யானவைகள் ஐந்து என்று சொல்கிறபோது, நல்ல காவல் என்பது மிக முக்கியம் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நல்ல காவல் இருக்கிறதா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. சங்ககிரியிலே கூட வழக்கு நடந்து கொண்டிருந்த நீதிமன்றத்திலே ஒருவர் தன் விரோதியை வழி மறித்து, கத்தியால் குத்த அந்த இடத்திலேயே மாண்டிருக்கிறார் என்ற செய்தியை பத்திரிகையிலே பார்க்கிறபோது நல்ல காவல் இருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்படுகின்ற நேரத்திலே, அதை உறுதிப்படுத்துகிறது நம்முடைய முதல்வர் அவர்களுடைய அறையிலே இரண்டொரு தினங்களுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சி

இது ஒன்றும் உலகத் தமிழ் மாநாட்டினுடைய தோரண வாயில் அல்ல. அப்படிப்பட்ட தோரண வாயில்கள் தான் கதவுகள் இல்லாமல் இருக்கும். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்களுடைய அறையிலே கதவுகள் இருந்திருக்கின்றன. அப்படி இருந்தும்கூட, இங்கே இருக்கும் காவலர்கள் 4 பேர் சேர்ந்து சம்பந்தப்பட்டவர்களை பிடித்துக் கொடுத்து விட்டார்கள். அவர்கள் தங்களுடைய சங்கத்தின் சார்பிலே சொல்லும்போது, சம்பந்தப்பட்டவர்களை பிடிக்க நாங்கள் போலீஸ்காரர்களை அழைத்தோம். ஆனால் அவர்கள் வரவில்லை. நாங்களே பிடித்துக் கொடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள்.

அப்படிப்பட்ட நல்ல காவலர்களுக்கு அரசாங்கம் பாராட்டுத் தெரிவித்து, அவர்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருட் களையும் மற்ற பொருட்களையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தி ருக்கிறது. அது வரவேற்கக் கூடியதுதான் என்றாலும், அதே நிலைமையை இந்த நாட்டிலே இருக்கக் கூடிய ஆசிரியப் பெரு மக்களுக்கும் கொடுத்திருப்பார்களேயானால், உண்மையிலேயே மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு வறட்சி நிலை இருக்கிறது என்று பலரும் அதைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். அதை எப்படிக் கணக்கிடு கிறார்கள் என்று கேட்டால், வெள்ளைக்காரர்கள் காலத்திலே எப்படிக் கணக்கிட்டார்களோ, அதே நிலையில்தான் இப்போதும் கணக்கிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். பனை மரம் காய்ந்தால்தான், தென்னை மரம் காய்ந்தால்தான் வறட்சி என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே கூட ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து யூனியனை வறட்சிப் பகுதியில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்க்கவில்லை. கேட்டால் அந்தப் பஞ்சாயத்து யூனியனில் குடிப்பதற்காவது தண்ணீர் கிடைக்கிறது, இங்கே அதுகூட கிடைக்கவில்லை, அந்த அடிப்படையில்தான் இதைச் சேர்த்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

இப்படி எடுக்கப் பெறுகிற வறட்சி நிவாரணப் பணிகளும் காலம் கடந்த நடவடிக்கைப் பணிகளாகவே இருக்கின்றன. எங்களைப் பொறுத்தவரையில் இந்தந்த இடத்தில் இப்படிப் பட்ட வறட்சி நிலை நிலவுகிறது என்று 3, 4 மாதங்களுக்கு முன்னதாகவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரியப்படுத்தி அதை அரசுக்குத் தெரிவியுங்கள் என்றும் கேட்டுக் கொண்டிருக் கிறோம்.

செங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எங்களுடைய பேரியக்கத்தின் சார்பிலே நான் ஒருவள்தான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தினால் அந்த ஒரு தொகுதியிலே மட்டும் வறட்சி நிவாரணப் பணிக்கு பயன்படுத்திக் கொண்டு, அதே நேரத்தில் அந்த மாவட்டம் முழுமைக்குமாக காங்கிரஸ் பேரியக்கத்திற்கு எந்தவிதமான பிரதிநிதித்துவமும் கொடுக்கப் பெறாத சூழ்நிலை இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நிலைமை இருக்கிற காரணத்தினால், அரசியல் ரீதியாக அப்படிப்பட்ட சில மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகள் இல்லாது இருந்தாலும்கூட, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாதிருந்தாலும்கூட, எல்லா அரசியல் கட்சிகளிலும் பிரதிநிதிகளை எடுத்து, ஒட்டு மொத்தமாக அந்த வறட்சி நிவாரணப் பணிகள் செம்மையாக நடக்கிறதா இல்லையா என்பதைப் பரிசீலிக்கத் தக்க வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டு, அப்படிப்பட்ட ஒரு உத்தரவை இந்த மாமன்றத்தில் இட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர்கூட குறிப்பிட்டார்கள். முதலிலே நிவாரணப் பணியாக ஒரு தொகையை ஒதுக்கி உதவ முன்வராமல், குழு வந்து பார்த்த பிறகுதான் அதைத் தெரிவிக்க முடியும் என்று மைய அரசில் சொல்கிறார்கள் என்றால் அது மிக இக்கட்டான நிலையில் இருக்கும் மக்களுக்கு உதவ முடியாமல் போய்விடும் என்று சொன்னார்கள். இதிலே குறிப்பாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், நான் நேற்றைய தினம் மத்திய இராஜாங்க அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களைச் சந்தித்து இது பற்றிக் கேட்டபோது, அவர் முதல் கட்டமாக 8 கோடியே 57 லட்சம் ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கப் பெற்றிருக்கிறது என்றும் அடுத்தும் மைய அரசு கொடுக்கவிருக்கிறது என்றும் அதேநேரத்தில் புள்ளி விவரங்களைத் தருபவர்கள் ஒரு நேரத்தில் 14 மாவட்டங்களில் வறட்சி என்று சொல்கிறார்கள், ஒரு நேரத்தில் 11 மாவட்டங்கள் என்று சொல்கிறார்கள், இப்போது 13 மாவட்டங்கள் என்று சொல்கிறார்கள், சரியான புள்ளிவிவரம் இந்த மாதம் 31-ஆம் தேதிக்குள் கிடைக்கும் என்று நினைப்பதாகவும், ஆகவே ஒதுக்கப் பெற்ற தொகையை மைய அரசு இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நிச்சயமாகக் கொடுக்கும் என்றும் தைரியம் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனாலும் கூட மத்திய அரசை குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காக வறட்சிப் பணிகள் ஏப்ரல் மாதம் வரும் குழு பார்த்து அதற்குப் பிறகு அவர்கள் பணம் ஒதுக்கி எப்போது இந்தப் பணியைத்துவக்குவது என்று சொல்வது நிச்சயமாக மிகவும் வருத்தத்திற்குரியது.

அடுத்தாற்போல், இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள், விவசாயக் கடன்கள் ரத்து செய்வதுபற்றி. விவசாயக் கடன்களை ரத்து செய்வதற்கு மத்திய அரசு ஒன்றும் உதவி செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசைக் கேட்டுக் கொண்டா நீங்கள் வாக்குறுதி கொடுத்தீர்கள்? மத்திய அரசு உதவி செய்தாலும் செய்யாவிட்டாலும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயக் கடன்களை ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். அப்படிச் சொல்லி மக்கள் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்து அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கட்டத்தில் இருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஆக, மக்களுக்குக் கொடுத்த அந்த வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், வறட்சி ஓரளவு குறைந்திருக்கும், தன்னிறைவுத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்குமானால். தன்னிறைவுத் திட்டங்களைப் பொறுத்து அதை அவசர அவசரமாக முதலில் இவ்வளவு பஞ்சாயத்து யூனியன்களை எடுத்தோம், அதை முடித்து விட்டோம், பிறகு இவ்வளவு பஞ்சாயத்து யூனியன்களை எடுத்திருக்கிறோம், அதுவும் முடிந்துவிடும், அதற்குப் பிறகு எந்தவிதமான பிரச்னையும் இருக்காது என்று கணக்குக்காக சொல்கிறார்களே தவிர, இந்தத் திட்டத்தைத் துவக்க ஆகஸ்ட் மாதத்தில்தான் அதிகாரிகளுக்கு ஆர்டர்ஸ் போயிற்று. செப்டம்பரில் வேலைகள் துவங்க வேண்டும். செப்டம்பரில் இருந்து மார்ச் மாதம் வரை ஏழு மாத காலத்திற்குள் 12 மாத வேலைகளை அதிகாரிகள் எப்படி தீர்த்து வைக்க முடியும் என்று கேட்கிறேன். அதை யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்களிடம் கொடுத்திருக்கும் பணத்தைக் கொண்டு ஏழு மாதங்களுக்குள் பணிகளை முடியுங்கள் முடியுங்கள் என்று சொன்னால் என் தொகுதியில் பல லட்சக்கணக்கான ரூபாய் திருப்பிக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கிறது. பணிகளை நிறைவேற்றுவதற்கான காலத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் பணத்தைக் கொடுத்துவிட்டு, முடியுமோ முடியாதோ, மார்ச் 31-க்குள்ளாக வேலைகளை முடித்தாக வேண்டும் என்று சொல்லி அதிகாரிகளுக்குள் தகராறு ஏற்பட்டு, சண்டை சச்சரவு ஏற்பட்டு, மலிவான வார்த்தைகள்கூட பேசும்படியான ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. கொடுக்கிற பணம் செலவழிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிற காலம் குறைவாக

இருப்பதால் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள பணிகளை செவ்வனே செய்ய முடியாது. பணிகளை பாதியில் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல், எங்கு பார்த்தாலும் ஜாதிச் சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஜாதிச் சண்டைகளை ஒழிக்க தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தவறி விட்டது என்று சொன்னால் அது நிச்சயமாக தவறாக இருக்க முடியாது. எங்கு பார்த்தாலும் கலவரம் என்ற நிலைமை இந்த நாட்டுக்கு நல்லதொரு வளர்ச்சியை உருவாக்கித் தர முடியாது.

தாலிக்குத் தங்கம் என்று சொல்கிறபோது மலிவு விலையில் கொடுப்பதை பாராட்டுகிறோம். பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்றால், இப்போது சவரன் ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் எவ்வளவு பேர்களுக்கு தாலி கொடுக்க முடியும்? ஒரு சவரன் வீதம் தந்தால் ஆயிரம் பேர்கள் என்று வைத்துக் கொள்வோம். அரை சவரனில் தாலி என்று கொடுத்தால் இரண்டாயிரம் பேர்களுக்குக் கொடுக்கலாம். கால் சவரன் என்று தாலி கொடுத்தால் நான்காயிரம் பேர்களுக்குக் கொடுக்கலாம். ஆகவே தாலி ஒரு சவரனில் கொடுக்கப் போகிறீர்களா, அரை சவரனில் கொடுக்கப் போகிறீர்களா, கால் சவரனில் கொடுக்கப் போகிறீர்களா என்பது தெரியவில்லை.

அடுத்து, உண்மையில் பெண்களுக்கு திருமணம் என்று சொல்கிறபோது அவள் தாய் விதவையாக இருக்க வேண்டும் என்று சொல்வதை தயவு செய்து பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஆலோசனை சொல்லியாவது அப்படிப்பட்டதொரு நிலையை மற்றி ஒரு வரையறை வைத்து வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கும் யாராக இருந்தாலும் அவர்கள் திருமணம் செய்து கொள்கிற காலத்தில் இது போன்று கொடுக்கப்படும் என்று சொன்னால் அது நன்றாகயிருக்கும். அதைவிட்டுவிட்டு பெண் திருமணம் செய்து கொள்ளும்போது தாய் அமங்கலியாக இருக்க வேண்டும் என்று சொன்னால் நமது எண்ணத்தை நாம் சரிவர நிறைவேற்ற முடியாததொரு சூழ்நிலை ஏற்பட ஏதுவாகும்.

அடுத்து, மதுவிலக்கு. இங்கே பேசும்போது நாங்கள் திரும்பத் திரும்ப எங்கள் எண்ணத்தைச் சொல்கிறோம். புரிந்தோ புரியாமலோ நீங்களும் திருப்பித் திருப்பிக் கேட்கிறீர்கள். உங்கள் கொள்கை என்ன, உங்கள் கொள்கை என்ன என்று. அகில இந்திய ரீதியில் எங்களது கொள்கை என்னவென்றால்—எங்கள் கொள்கை எங்கள் மெம்பர்ஷிப் பாரத்தில் இருக்கிறது. மது விலக்குக் கொள்கையை ஏற்றுக் கொண்டுதான் நாங்கள் காங்கிரஸ் காரர்களாக இருக்க முடியும்.

(பிற்பகல் 5.10)

எங்களுடைய கொள்கை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒப்புக்கொண்டதுதான். ஆனாலும்கூட, இன்று நான் குறிப்பிட ஆசைப்படுவது என்னவென்றால், மதுவிலக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பிரசித்தமாக இருந்த காலத்திலே, பல ஆண்டு காலமாக மது இந்த நாட்டை நாசப்படுத்திக் கொண்டிருந்த காலத்தில், தமிழகத்திலேதான் முதன் முதலாக இந்த மது விலக்கை நாம் ஏற்றுக்கொண்டோம் என்று சொல்லுகின்றபோது மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் ஒரு உதாரணமாகத் திகழ்ந்தது. அப்படி உதாரணமாக தமிழகம் இருந்தது. இன்றைக்கு நாம் அதை இழந்திருக்கிறோம் என்று நினைக்கின்றபோது வருத்தமாக இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லுகின்றபோது, ஆந்திராவைப் பாருங்கள், கேரளாவைப் பாருங்கள், பாண்டிச்சேரியை பாருங்கள் என்று சொல்லப்படுகிறது. நாங்கள் இங்கேதான் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம்; அங்கேயில்லை. எனவே, இங்கே இருக்கின்ற நிலைமைகளைப்பற்றித்தான் நாங்கள் பேசுவோம். அந்த நிலைமைகளைச் சுட்டிக்காட்டுகிறபோது அந்த அரசாங்கம் அதைச் சரி என்று செய்கிறார்கள். ஆனால், எங்களைப் பார்த்து மனம் திறந்து பேசுங்கள் என்று சொல்லி விட்டு, அங்கே பாருங்கள், இங்கே பாருங்கள் என்று சொல்லு கிறார்கள். அதே நேரத்திலே குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஒருவர் மனம்போல் இன்னொருவர் மனம் இருக்க முடியாது. முதல்வர் மாதிரி அவை முன்னவர் இருக்கமுடியாது; அவை முன்னவர் மாதிரி சபாநாயகர் இருக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப்பட்ட குணாதிசயம் இருக்கும். அப்படிப்பட்ட குணங்களைப் பெற்றிருக்கும் நாம் ''தமிழன் என்ற ஒரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்று சொல்வது போல், எல்லோருக்கும் ஒரே குணம் இருக்கமுடியாது. அப்படிச் சொல்லும்போது அதற்குக் கோபப்படுகிறார்கள். எனவே, அங்கே பாருங்கள் இங்கே பாருங்கள் என்று சொல்வது எப்படி சரியான வாதமாக இருக்கமுடியும். அது மட்டுமல்ல. அது உங்களுக்கு விருப்பமாக இருக்குமானால், அதை நிறைவேற்றிக் கொண்டு வருகின்ற நேரத்திலே நான் குறிப்பிட ஆசைப்படுவதெல்லாம், அனாவசியமான வாக்குறுதிகளைக் கொடுத்திருக்க வேண்டாம் என்பதுதான். 'நுணலும் தன் வாயால் கெடும்' என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு நீங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள்.

தமிழக முதல்வர் அவர்கள் சொல்லுகிறார்கள், நான் தாய் மீது சத்தியம் வைத்திருக்கிறேன் என்ற காரணத்தினால் தான் இதை முழுமையாக ரத்து செய்யவில்லை. பாதியை ரத்து செய்திருக்கிறேன் என்று. இப்படி பாதியை ரத்து செய்திருப்பதை, மிகவும் புரட்சியான காரியத்தை

தமிழகத்திலே செய்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள். செய்கிறோம், செய்யவில்லை என்பதுதான் சத்தியம். இன்றைக்கு பாதி சத்தியம் என்று சொல்லி, பாதியை தளர்த்தியிருப்பதாகச் சொல்கிறீர்கள். சத்தியத்திலேகூட, தாய்மீது சத்தியம் வைத்திருப்பதால் இதைப் பாதியாகக் குறைத்திருப்பதாக, தளர்த்தி அதைத் திருத்தியிருக்கிறீர்கள் என்ற நிலையைத்தான் பார்க்கிறோம்.

அடுத்தாற்போல் ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே அதிகமான அளவிற்கு கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது. அப்படி காய்ச்சப்படுவதன் பலனாக ஏராளமான பணம் அதைக் காய்ச்சுகின்ற சமூக விரோதிகளுக்குப் போய்ச் சேருகிறது, அப்படிப் பணம் இந்த சமூக விரோதிகளுக்குப் போய்ச் சேருவதால், நாங்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த நாட்டிலே கள்ளச் சாராயம் மட்டுமல்ல; கள்ள நோட்டுக்களும் அச்சடிக்கப்படுகின்றன. அப்படிச் செய்வதால், அந்தப் பணம் அந்த சமூக விரோதிகளுக்குப் போய்ச் சேருகின்ற காரணத்தினால், நாங்கள் நல்ல நோட் அடிப்போம் என்ற நிலைமையை உருவாக்காதீர்கள். அதேபோல், சமுதாயத்திலே கொள்ளையடிக்கிறான்; அந்தப் பணம் சமுதாய விரோதிகளுக்குப் போய்ச் சேருகிறது என்ற காரணத்திற்காக, அரசு அப்படி வாதாட வருமா? இவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும். சமூக விரோதிகளுக்கு இப்படிப் பணம் போய்ச்சேருகிறது என்பதற்காக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டாம் என்பதற்காக இதைக் கொண்டு வருகிறோம் என்ற நிலை சரியல்ல. (மணி அடிக்கப்பட்டது) எனக்கு நேரம் அதிகம் இல்லை. நான் அரசாங்கத்திற்கு துதி பாட முடியாது. குமரி அனந்தன் அவர்களுக்கு முக்கால் மணி நேரம் கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றவர்களைப்பற்றி தலைவர்களைப் பற்றி குறை சொல்லக் கூடாது, கூட்டங்களிலே வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு முதலிலே பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதாகச் சொன்னேன். 15 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுத்த அதே நேரம்தான் உங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது சீக்கிரம் முடியுங்கள்.

திருமதி டி. யசோதா : தாய்க் குலத்திற்கு 10 நிமிடம் தந்தை குலத்திற்கு முக்கால் மணி நேரம். எங்களுக்கு மட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் தலைவராக அப்படி உட்காருகிறபோது அப்படிப் பேசலாம். மற்றவர்களைப் பற்றிப் பேசக்கூடாது. விரைவில் முடியுங்கள்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். உண்மையாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அரசாங்கத்தின் திட்டங்களை வரவேற்றுப் பேசுகின்றவர்களுக்கு கொடுக்கப்பட்ட நேரம் எனக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கும் அதிக நேரம் கொடுத்திருக்கிறேன். தெரிவிக்க வேண்டிய கருத்துக்களை 15 நிமிடங்களுக்குள் சொல்லியிருக்கலாம். சீக்கிரம் முடியுங்கள்.

திருமதி டி. யசோதா : இன்றைக்கு உண்மையிலேயே சொல்லவேண்டுமென்று சொன்னால் 'மதுவிலக்கைத் தளர்த்தியதோடு மட்டுமல்லாமல் ஒரு கோடி செலவு செய்து மதுவின் தீமையைப் பற்றி அதைக் கண்டித்து பிரச்சாரம் செய்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது என்றால் நான் அடிப்பதைப் போல் அடிக்கிறேன், நீ அழுவதைப் போல் அழு என்பதைப் போல் இருக்கிறது. கற்கண்டு கலந்த பசும் பால் என்று இந்த பட்ஜெட்டைச் சொன்னார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட் மீது பேசும்போது நான் சொன்னேன்—பழரசம் அல்ல, இது பல வண்ணங்கள் கலந்த சாயத் தண்ணீர் என்று சொன்னேன்—அதை மறுத்தீர்கள். இன்றைக்கு கற்கண்டு கலந்த பால் அல்ல முடை நாற்றம் வீசுகிற சாராய பட்ஜெட்டைதான் உங்களால் கொடுக்க முடிந்திருக்கிறது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட்டிலே பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் பொழுது மாநிலத்திற்கு போதுமான நிதி ஆதாரங்கள் இல்லை என்று அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இராஜ்ய சபாவில் பேசிய பேச்சினை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்பொழுது (They feel that the States are fast becoming dole getting Corporations. என்று அழகாகக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கும் அந்த நிலைமை மாறாமல் அப்படியே நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கும் நிரந்தரமாக மத்திய அரசிடம் கையேந்தி நிற்கிற நிலைமையிலேதான் மாநில அரசுகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. மத்திய அரசும், மாநில அரசும் எப்படி இருக்க வேண்டுமென்று குறிப்பிட்ட பேராசிரியர் சே. சி. வீர் அவர்கள் Both, general and regional governments

must each have under its own independent control financial resources sufficient to perform its exclusive functions என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு மாநிலங்களின் நிலை எந்த அளவிற்கு மோசமாக இருக்கிறது என்பதை நான் சொன்னால் மட்டும் போதாது. பக்கத்திலே இருக்கிற மத்தியிலே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் கூறியிருக்கிறார்கள். ஆந்திர மாநில நிதி அமைச்சர் மாண்புமிகு இராஜாராம் அவர்களும், கர்நாடக மாநிலத்தின் நிதி அமைச்சர் மாண்புமிகு வீரப்ப மவுளி அவர்களும் பட்ஜெட் உரையின் போது அவர்களும் மாநிலத்திற்கு நிதி ஆதாரங்கள் போதாது என்று குறிப்பிட்டார்கள். மாநிலத்திற்கு நிதி ஆதாரம் கேட்பது மத்திய சர்க்காருக்கு எதிர்ப்பானது அல்ல என்பதை பணிவோடு குறிப்பிட விரும்புறேன். இதை நம் செல்வது மட்டுமல்ல மல், ஒரு காலத்தில் காங்கிரஸ் முன்னாள் அமைச்சரும் பொருளாதார நிபுணரும் ஆன டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களும் குறிப்பிட்டார்கள். நம்மை விட வேகமாகப் போய் கூட பேசியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் எப்படி காலனிகளை நடத்தியதோ அதேமாதிரி இன்றைக்கு மத்திய சர்க்கார் மாநில சர்க்காரை நடத்துகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 'I am afraid that the British heritage has not yet left us after the coming of independence. I say this because I know of Federation where its constituent units are so heavily dependent on the federal government as they are in the so called Indian Federation. என்று டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதுவரையில் அரசியல் சட்டம் பலமுறை திருத்தப்பட்டிருக்கிறது, அரசியல் காரணங்களுக்காக ஆனால் மாநிலங்கள் இவ்வளவு கேட்டும், 34 ஆண்டுகளுக்குப் பின்னாலே எல்லா மாநிலங்களிலும் மாநிலத்திற்கு நிதி ஆதாரம் போதாது என்று கேட்டும் நாங்கள் ஏதாவது இன்னும் கொஞ்சம் அதிகமாக கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர உங்களுடைய நிதி ஆதாரத்தை அதிகப்படுத்துகிறோம் elasticity and adequacy இப்படிப்பட்ட இரண்டுமே இல்லாமல் வழிமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை அதிகப்படுத்துகிறோம், அதற்கு சட்டத்தைத் திருத்துகிறோம் என்று இதுவரையில் மத்திய சர்க்கார் முன் வரவில்லை. சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நாம் மட்டும் கேட்கவில்லை, மத்திய சர்க்காரிலே குழுவினுடைய தலைவராக, பிக்சேஷன் என்குயரி கமிட்டித் தலைவராக இருந்த திரு. பூதலிங்கம் அவர்கள் மிக வேகமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"Although the Constitution has been amended frequently it has been done more often than not to meet the needs of the moment rather than in response to more enduring changes in political, social

and economic conditions. Curiously enough, the provisions relating to Centre-State financial relations have not attracted even this type of ad-hoc and sporadic amendment, even though the conditions inplicit in the scheme of relationship embodied in the Constitution have changed almost out of recognition.'

[பிற்பகல் 5–20]

என்று பூதலிங்கம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். மாநில அரசு என்றைக்குமே கையேந்தி நிற்கவேண்டுமா ? அதிகமான நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். ஏழாவது நிதிக் கமிஷன் புதிய முறையைக் கையாளவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு முறையிட்டிருக்கிறது. இதுவரையிலே நிதி ஒதுக்கம், பாபுலேஷன், பெர்பார்மன்ஸ் என்று இரண்டையும் வைத்துக்கொண்டுதான் செய்யப்பட்டது. நாம் இப்போது பாவர்ட்டி என்ற ஒன்றையும் சேர்த்து மூன்று அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுதல் வேண்டும். என்று கேட்டிருக்கிறோம். Population, performance and poverty என்று மத்திய அரசை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். நிச்சயமாக இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய பட்ஜெட்டிலே 20 கோடி ரூபாய்க்கு நிதியமைச்சர் அவர்கள் வரியை விதித்து இருக்கிறார்கள். இது போதுமான நிதிஆதாரமாக இருக்க முடியாது. ஆனாலும் அதிகமாக ஏழைகள் மீது வரி விதிக்கப்படக்கூடாது என்ற முறையிலே அறிஞர்அண்ணா அவர்கள் சொன்னார்களே, 'Tap the rich and pat the poor' என்று, அதற்கு ஏற்ற முறையிலே வரி விகிதத்தில் மாறுதல் செய்து 20 கோடி ரூபாய் அளவுக்கு வரிகளை விதித்து இருக்கிறார்கள். நமக்கு இருக்கின்ற வரிகளில் நாம் அதிகமாகப் பயன்படுத்துவது சேல்ஸ்டாக்ஸ்தான், விற்பனை வரிதான். எனவே இந்த விற்பனை வரிகளை கொஞ்சம் உயர்த்திக் கொண்டிருப்பதில் மாறுதல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இதுபற்றி ஒரு கமிஷன் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

In the 61st Report of the Law Commission, it has been stated as follows :—

' At present there is sales taxation of goods but not of services. In many advanced countries, services rendered by lawyers, architects, accountants, consultants etc., are subject to tax. A point in favour of such taxation is that the upper income groups spene more on services while lower income groups spend more on goods' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொருட்களுக்கு விற்பனை வரிகள் போட்டிருக்கலாம். சர்வீஸ்க்குப் போடவில்லை, அதற்குக் கூடப் போடலாம் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

' At the same time, in Indian conditions, the introduction of such a tax has to be on a very selective basis.' ஆகவே இப்போது இருக்கின்ற இந்த விற்பனை வரியில் இன்னும் கொஞ்சம் அதிகமாக இந்த மாநிலத்திற்கு வருமானம் வர வேண்டுமென்றால் சர்வீஸுக்கும் சேவைக்கும் வரி விதிக்கலாம் என்று நான் மாநில அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி நிறையப் பேசிக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்திலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது பேசிய அறிஞர் அண்ணா அவர்கள் அது உச்சவரம்புச் சட்டமல்ல, மிச்ச வரம்புச் சட்டம் என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னாலே வந்த அரசு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்து சட்டத்தைக் கொண்டு வந்தது. அப்போது உபரி நிலங்கள் நமக்கு கிடைத்தபாடில்லை. இதற்கு என்ன காரணம் ? சட்டங்களைப் போட்டிருக்கலாம். ஆனால் வரக்கூடிய நிலங்கள் நமக்கு வந்து சேரவில்லை. பினாமியாக சிலர் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்திருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து அந்த நிலங்களை வெளியே கொண்டு வந்து உபரி நிலத்தைக் கண்டுபிடிக்கவேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறது. ஒவ்வொரு தடவையும் பேசுகின்றபோது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நிலச் சீர்திருத்தம், லேண்ட் ரிபார்ம்ஸ் பற்றிப் பேசாத நாளே கிடையாது. 76-வது ஆண்டு முதலமைச்சர்கள் மாநாட்டிலே பேசுகின்றபோது மிக வேகமாக இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

' The question of land reforms is not a new one for us and it was included in the 20-Point Programme because of its basic importance to our economic and social progress. We have to make this understood by legislators, the bureaucracy and our non-official workers when we are working out the details and also during the implementation. I think it is either because there are people who have a vested interest in not having reforms or because of a general lack of appreciation of the vital role of land reforms that there is a certain amount of lethargy and hesitation in implementation. I know that the States have been making an effort but it is obviously not enough.' இவ்வளவு பேசிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இன்றைக்கும் பிரதமராக இருந்துகொண்டிருக்கிறார்கள். நாம் பினாமி நிலங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று சட்டம் இயற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட அந்த வெஸ்டட் இன்டரஸ்ட் வேலை செய்கிறதா என்று தெரியாது. ஆனால் நாம அனுப்பிய சட்டத்திற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஒரு காலத்திலே தி.மு.க. மேடையிலே பேசுவார்கள். பூண்டி வாண்டையார், கபிஸ்தலம் மூப்பனார், வலிவலம் தேசிகர், குன்னியூர் அய்யர், வடபாதிமங்கலம் முதலியார் என்று பட்டியல் போட்டுக் காட்டி அவர்கள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தங்கள் கைகளிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பினாமி பெயரில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றது என்பதை அறிவோம். இவைகளை வெளியே கொண்டுவருவதற்கு மத்திய சர்க்கார் ஒத்துழைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அப்படி ஒத்துழைப்பது உண்மையானால் நிச்சயமாக இந்தச் சட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக் கேட்டால் அதிலே சிலர் கோபப்பட்டு, நண்பனா எதிரியா என்று கேட்கிறார்கள். யார் ஒருவரைப் பார்த்து நண்பரா எதிரியா என்று கேட்டு பதில் பெற்றுத் தெரிந்து கொள்வார் ? தானாகத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு குழப்பம் அடைந்திருக்கின்றவர்தான் ஒருவரைப் பார்த்து நண்பனா எதிரியா என்று கேட்டுத் தெரிந்து கொள்வார் என்பதை அவர்கள் தயவு செய்து நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இதில் தெளிவடைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நம்முடைய பட்ஜெட்டில் மின்சார உற்பத்தி 2,719 மெகாவாட்டாக இருந்தது. ஆறாவது திட்டத்திலே, 4,769 மெகாவாட்டாக உயரும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. மின்சாரம் இருந்தால்தான் தொழில் வளர முடியும்.

ஆகவே அதற்காக எவ்வளவு செலவழித்தாலும் பரவாயில்லை, மின்சார உற்பத்திக்காக நாம் எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் முன்னேற்றம் இல்லை என்று எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மாநில சர்க்கார் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அந்த அளவிற்குத் தொழில் வளர்ச்சிக்கு முயற்சிக்கிறோம். ஆனால் மத்திய சர்க்காரின் முதலீடு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 1967 ஆம் ஆண்டோடு எல்லாமே நின்று விட்டது என்பதை நாம் மறந்து விட முடியாது. இன்றைக்குப் பெங்களூரிலே இருக்கின்ற தொழிற்சாலைகளில் கிட்டத் தட்ட 90 சதவீதம் மத்திய சர்க்காரின் முதலீடு. அதைப்போல தமிழ்நாட்டிலேயும் முதலீடு செய்வதற்கு மத்திய சர்க்கார் முன்வர வேண்டும். அதற்கு இங்கேயிருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மதுவிலக்கைத் தளர்த்தியதைப்பற்றி பிரதான இரண்டு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்டார்கள். தமிழக அரசு தீவிரமான சட்டத்தைக் கொண்டு வந்தது. அதைப்போல இந்தியாவிலேயே வேறு எங்கும் சட்டம் கொண்டுவரப்படவில்லை. அது கடுமையான சட்டம் என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள்; அதுவும் தங்களைப் பாதிப்பதாகச் சொல்லி எதிர்த்தார்கள். அரசியல் சட்டத்திலே '' Directive Principles of State Policy-ல் மதுவிலக்கு சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருக்கு, உண்மையிலேயே அரசியல் சட்டத்தில் நம்பிக்கை இருக்குமேயானால், அதைக் கடுமையாக நிறைவேற்றி இருக்க வேண்டும். நிறைவேற்றச் சொல்லி மாநிலங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இதுவரையில் மத்திய சர்க்கார் அதில் அக்கறை காட்டவில்லை. அவர்கள் ஆளுகின்ற மாநில அரசுகளும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் இங்கே உள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மதுவிலக்கைத் தளர்த்தியது தவறு என்று சொல்கிறார்கள். இந்த அளவிற்கு Hypocracy என்று சொல்வது தேவையில்லை. இப்படி அவர்கள் சொல்வது தங்களை ஏமாற்றிக் கொள்வதும், மற்றவர்களை ஏமாற்ற நினைப்பதும் தவிர வேறொன்றும் இடையாது.

திருமதி டி. யசோதா: தலைவரவர்களே, தங்களை ஏமாற்றிக் கொள்வதாகவும், மற்றவர்களை ஏமாற்ற நினைப்பதாகவும் கூறுகிறார்கள், அது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளையபெருமாள் அடுத்துப் பேசுவார். அப்பொழுது அவர் சொல்ல வேண்டுமென்றால் சொல்வார். ஒருவருக்கொருவர் இப்படி மறுப்பு சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் இருக்காது.

திரு. கோ. விஸ்வநாதன்: தலைவரவர்களே, மதுவிலக்கைத் தமிழகத்திலே நீண்ட நாட்களாகச் சட்டமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும்கூட மதுவிலக்கு இல்லாத கேரளாவிலே குடிகாரர்களுடைய எண்ணிக்கை ஒன்றரை சதவீதம்தான்; ஆனால் மது விலக்கு அமலில் இருக்கின்ற தமிழ் நாட்டில் குடிகாரர்களுடைய எண்ணிக்கை நான்கரை சதவீதம் 'Addicts of liquour. என்று திருமதி சுசீலா நாய்யர் அவர்கள் தங்களுடைய கமிட்டி அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, சட்டத்தினாலே மட்டும் தடை செய்து விட முடியாது. அதை எல்லாரும் சேர்ந்து அமல்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் எந்த அரசியல் கட்சியின் ஒத்துழைப்பும் இதற்கு இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்குப் பல இலட்சக்கணக்கானபேர், ஏழைகளாக இருப்பவர்கள்கூட கல்விச் சலுகைகளையோ மற்றும் வேறு அரசாங்கச் சலுகைகளையோ பெற முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அதற்குக்காரணம் அவர்களுடைய சாதிகள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதுதானே தவிர வேறு காரணம் இல்லை. இதைப் பற்றி இந்த மாமன்றம் தீவிரமாக யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருந் தொழில் அதிபர்களும், வியாபாரிகளும், மிராசுதார்களும் சலுகைகளைப் பெறுகின்ற பொழுது இப்படிப்பட்ட ஏழைகளுக்கு அந்தச் சலுகைகளை வழங்காமல் இருப்பது நியாயமாகாது. அதைப்பற்றி இந்த மன்றம் பேசி அரசு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். வேலூர் கோட்டையிலே இருக்கின்ற ஜலகண்டேஸ்வரர் கோவிலைப்பற்றி நிச்சயமாக நான் பேசியாக வேண்டும். எங்கள் மாவட்டத்தில் இப்படிப்பட்ட எழுச்சி எந்தக் காலத்திலேயும் ஏற்பட்டதில்லை. எப்படிப்பட்ட தலைவராலும் ஏற்படுத்தமுடியாத இந்த எழுச்சி இன்றைக்கு அங்கே ஏற்பட்டிருக்கிறது. 16-3-81 ஆம் தேதியிலிருந்து இப்பொழுதுபூஜைகள்

துவங்கியிருக்கின்றன. இருந்தாலும் அந்தக் கோவில் பற்றி Archaeological Survey of India தொல்பொருள் இலாகாவினர் மாநில அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 1274-இலே கட்டிமுடிக்கப்பட்ட அந்தக் கோவிலில் தொடர்ந்து பூஜைகள் நடந்து வந்திருக்கின்றன. ஒரு 260 ஆண்டு இடையிலே முகமதியர்கள் ஆட்சியின்பொழுது பூஜை நின்றிருக்கிறது. பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் கொஞ்சநாள் இருந்து, மறு படியும் இப்பொழுது பூஜை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

[பிற்பகல் 5-30]

அந்தப் பூஜையை நிறுத்த வேண்டுமென்று தொல்பொருள் இலாகா கேட்பதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. காரணம், அவர்களிடத்திலே இன்றைக்கு இந்தக் கோட்டையும் கோயிலும் இருந்தாலும் 1935, Government of India Act படி, மாநில சர்க்காருக்குத்தான் கோட்டையும், கோயிலும் சொந்தம். அதற்குப் பிறகு கொண்டு வரப்பட்ட 1958-வது ஆண்டு சட்டப்படி, அவர்கள் மாநில சர்க்காரோடு, கலெக்ட ரோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்க வேண்டும். அப்படிப் பட்ட அக்ரிமென்ட் இதுவரையில், Archaeological Survey of India. வோடு நிச்சயமாக இல்லை. அப்படிப்பட்ட ஒப்பந்தம் இல்லாத காரணத்தால் அவர்கள்தான் டிரஸ்பாஸர்கள் என்று சொல்ல லாமே தவிர, கோவிலுக்கு உள்ளே சென்று பூஜை செய்பவர்கள் டிரஸ்பாஸர்கள் என்று சொல்வதோ, அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று சொல்வதோ, (மணியடிக்கப் பெற்றது) அர்த்தம் இல்லை. அவர்களுக்கு எந்தவித ஆதாரமும் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூஜை செய்ய வேண்டும், அவ்வளவுதானே. உட்காருங்கள், அடுத்து திரு. கோவைத்தம்பி.

திரு. கோ. விஸ்வநாதன் : இதனை மாமன்றத் தலைவர் அவர்கள் மூலமாக மாநில சர்க்காரை நான் கேட்டுக் கொள்கி றேன். அதே நேரத்தில் கோயிலுடைய பல பகுதிகளிலேயிருக்கிற மேல் கூரையிலே இருக்கிற கற்களை எல்லாம் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது மத்திய அரசே செய்திருக்கிற தவறைப் போல் தோன்றுகிறது.

திரு. பி. எம். வெங்கடேசன் : ஆளுங் கட்சி உறுப்பினர் என்றால், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாமா ? நேற்று என்னை 10 நிமிஷத்தில் முடித்துவிட வேண்டுமென்று நிறுத்தி விட்டீர்கள். இன்றைக்கு அவர் 20 நிமிஷம் பேசுகிறாரே? ஆளுங்கட்சி உறுப்பினர் என்றால் எவ்வளவு நேரம் வேண்டு மானாலும் பேசலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது உட்காருங் கள். திரு. விஸ்வநாதன் முடியுங்கள்.

திரு. கோ. விஸ்வநாதன் : ஆகவே, இந்த வேலூர் கோட்டை விவகாரத்தில் உடனடியாக மாநில சர்க்கார் தலை யிட்டு, அதிலே எந்தவித தொந்தரவும் ஏற்படாமல் பொது மக்களுடைய விருப்பத்தை நிறைவு செய்வதில், அவர்கள் கண் ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் ஆபத்தான காலங்கள், இந்தியாவின் பொரு ளாதாரத்தை நெருங்குகிற நேரத்தில், இந்தியாவின் ஒரு மாநில மான தமிழகத்தில் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தமிழக வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துத் தந்திருக்கிறார் கள். கம்பீரமான கடந்த நாட்கள் இன்று இந்தியாவை விட்டு விலகிச் செல்கின்ற ஒரு சூழ்நிலையில் ஒரு புறம் வறட்சி, ஒரு புறம் பொருளாதாரத்தின் வீக்கம், ஒரு புறம் வர்த்தகச் சூதாடி களின் சூதாட்டம், பதுக்கல் பேர்வழிகளின் பித்தலாட்டம், கள்ள மார்க்கெட்காரர்களின் சல்லாபம், கருஞ் சந்தைப் பேர்வழிகளின் பேரம், கருப்புப் பணக்காரர்களின் அட்டூழியம், இவைகளுக்கு மத்தியில் இந்தியாவின் பொருளாதாரம் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கும் போது, தமிழகத்தில் ஒரு வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி பலர் பல கருத்தைச் சொன்னாலும், இது வாசமில்லாத மலர்கள் என்று சொன்னாலும், இது வார்த்தெடுக்கப்பட்ட பால் என்று சொன் னாலும், இது இரத்தத்தில் பூத்த மலர் என்று சொன்னாலும், இந்த வரவு-செலவுத் திட்டத்தின் நோக்கம், இந்த வரவு செலவுத் திட்டத்தின் நிலை, இந்த வரவு செலவுத் திட்டத்தை கண்ணோட்டத்தோடு பார்ப்பது, ஏதோ தன்னுடைய கரங்களை நம்பி, சத்தியத்தை நம்பி, தர்மத்தை நம்பி, கடுமையான உழைப்பை நம்பி, அனாதையாக, ஏதோ ஒரு மூலையில், ஏதோ ஒரு காலத்தில், கிடந்த ஒருவன், தன்னுடைய கம்பீரமான, கடுமையான உழைப்பால், தன்னுடைய புகழால், தன்னுடைய செல்வாக்கால் பெற்ற ஒரு கம்பீரமான அந்த இராஜ சிம்மாசனத் தில், அமர்த்தப்பட்ட பிறகு, அமைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டமாக என்னுடைய கண்ணுக்குத் தெரிகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 'வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் எரிசாராய ஊழல் எடுத்துக் கூறப்பட்டது. இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நீ நண்பனா, எதிரியா என்ற கேள்வி எழுப்பப்

[திரு. கோவைத்தம்பி] [28 மார்ச் 1981

பட்டது. வரையறுக்கப்படாத மிச்ச அதிகாரங்கள் மாநில சர்க்காருக்கு இருக்க வேண்டுமென்ற கோரிக்கையின் விபரீத விளைவுகளை காண முற்படுவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு உகந்ததல்ல என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒரு கருத்தை இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மனசாட்சிப் படி பேச வேண்டுமென்று சொன்னால், நண்பனா, எதிரியா என்று கேட்டவருக்கு அந்தப் பதிலைத்தான் சொல்ல வேண்டும். மனசாட்சி இல்லை, அல்லது வாயிலே பேச வேண்டுமென்று சொன்னால் நண்பன் என்று சொன்னால், உங்களை அரவணைத்துக் கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எதிரி என்று நீங்கள் கணக்குப் போடுவீர்களானால், எச்சரிக்கையாக இருப்பதற்கு நாங்கள் பழகிக் கொள்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் சொல்லுகின்ற கருத்தின் அடிப்படையிலே சொல்ல வேண்டுமென்றால், பச்சையாகச் சொல்ல வேண்டும் என்றால், பரமசிவன் கழுத்திலே படுத்துக் கொண்டிருந்த நல்ல பாம்பு, மேலே வட்டமிட்டுப் பறக்கின்ற கருடனைப் பார்த்து, என்னடா, கருடா, சௌக்கியமா என்று கேட்டதாம். இந்திய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க அதிகாரத்தைத் தன் கையிலே வைத்திருக்கிறவர்கள் இந்த மாமன்றத்திலே எங்களுடைய அமைச்சர் உங்களுடைய நடவடிக்கைகளை எல்லாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று இந்திரா காங்கிரசுக்குக் கட்டளை இட்டிருக்கிறாரே, நீங்கள் நண்பனா, எதிரியா என்று கேட்பது, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தைத்தான் எனக்கு ஞாபக மூட்டியது.

சிவபெருமான், பதவி என்ற சிவபெருமான் கழுத்திலே படுத்துக் கொண்டு உச்ச அதிகாரத்தை, ஏகாதிபத்தியத்தை இந்தியாவின் ஏக அதிகாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு இருக்கிற ஒரு கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், நண்பனா இல்லை எதிரியா என்று கேட்பது, மேலே வட்டமிடுகின்ற கருடனைப் பார்த்து, என்னடா கருடா, சௌக்கியமா என்று கேட்பது போல், அந்தக் கருடன் இப்போது பதில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் எல்லோரும் சௌக்கியம் என்ற பதில்தான் இந்த நேரத்தில் என்னால் சொல்ல முடியும். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்று சொன்னால், அப்படி நண்பனா, இல்லை எதிரியா என்று கேட்பவர்களைப் பற்றி எதிர்த்துக் கேட்பதற்கு நமக்குத் தைரியம் இருக்கிறதா என்று சொன்னால், இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு ஏதாவது

1981 மார்ச் 28]. [திரு. கோவைத்தம்பி]

சொல்ல வேண்டும் என்று சொன்னால் தயவு செய்து நீங்கள் எங்களை நண்பனாக ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லது தயவு செய்து எதிரியாக ஏற்றுக்கொள்ளுங்கள். இந்த இரண்டுக்கும் நாங்கள் சம்மதம். ஆனால் அடிமைகளாக மட்டும் அனைத்து இந்தியா அண்ணா தி.மு.க. ஆட்சி இருக்காது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

அதே கேள்வியைத் திருப்பிக் கேட்போமேயானால், நீங்கள் வீரபாண்டியகட்டபொம்மன் பக்கத்திலே இருந்து கொண்டு பேசுகின்றீர்களா? அல்லது எட்டப்பன் பக்கத்திலே இருந்து கொண்டு பேசுகின்றீர்களா? நீங்கள் பஞ்சபாண்டவர்கள் பக்கத்திலே இருந்து கொண்டு பேசுகின்றீர்கள ? அல்லது கௌரவர்கள் பக்கத்திலே இருந்து கொண்டு பேசுகின்றீர்களா ? நீங்கள் ராவணன் பக்கத்திலே இருந்து கொண்டு பேசுகின்றீர்களா ? அல்லது இராமச்சந்திரமூர்த்தி அவர்களின் பக்கத்திலே இருந்து கொண்டு பேசுகின்றீர்களா ? இந்தக் கேள்விகளைத்தான், இந்த நேரத்தில் இந்த இடத்தில் கேட்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களைப் பலர் சொன்னார்கள். தாய்மேல் ஆணை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இது தர்மமா என்று கேட்டார்கள். பலவிதமாகப் பேசினார்கள். நான் இங்கே மகாத்மா காந்தியைப் பார்க்கிறேன், மகாத்மா காந்திஜியைப் பார்க்கிறேன், மகாத்மா காந்தி தாத்தாவின் உருவப் படத்தைப் பார்க்கிறேன். நான் வேதனையோடு சொல்லுகிறேன். 33 ஆண்டு காலமாக நமது சுதந்திர வரலாற்றில் சுதந்திரத்திற்கு முன்பு, தந்தை மகாத்மா காந்தியோடு நூல் நூற்றுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்று தங்க நூலால் இழைக்கப்பட்ட ஜரிகை அணிந்து, பட்டாடை அணிந்து, பஞ்சணையிலே பன்னீர் தெளிக்கப்பட்ட பஞ்சணையிலே படுத்துப் புரண்டு கொண்டு இருக்கிறார்கள் என்பதையும், ஏகாதிபத்தியமும், மிதவாதமும், வர்க்கப் போராட்டத்தின் விரோதத் தன்மையும், நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சி அடைவதற்கு ஏதுவாக, இந்தியாவில் பீறிட்டுக் கிளம்புகின்ற உணர்வுகளை, கட்டுக்கோப்பாகத் தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லாத காரணத்தால் மாநிலத்துக்கு மாநிலம் தலைவிரித்து ஆடுகின்ற தன்மை—ஒரு மாநிலத்தில் விபச்சாரம் செய்கின்ற உரிமை, ஒரு மாநிலத்தில் எங்கு வேண்டுமானாலும் குடிக்கலாம் என்ற நிலைமையும் என்பதை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது மற்ற சட்டமன்ற இடங்களில் அலங்கரித்துக் கொண்டு இருக்கிற மகாத்மா காந்தி, மகாத்மா காந்திஜி, அண்ணல் காந்தி காந்தி தாத்தா, இந்த மாமன்றத்தில் சிரித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசினார்கள். உத்திரப் பிரதேசத்தைப் பற்றியா பேசினார்கள், டெல்லி சட்டம் ஒழுங்கைப் பற்றியா பேசினார்கள், சம்பல் பள்ளத்தாக்கில் நடந்த கொலையைப் பற்றிச் சொல்லுகிறார்களா அல்லது உத்தரப் பிரதேசத்தில் நடந்த கற்பழிப்பு சம்பவம் பற்றிச் சொல்லுகிறார்களா ? இவைகளைவிட இந்த மாமன்றத்தில் இருக்கின்ற மகாத்மா காந்தி, இந்த காந்திஜி இங்கே சிரித்துக் கொண்டு இருக்கிறார்.

தாதாபாய் நௌரோஜி வளர்த்த காங்கிரஸ், பாலகங்காதர திலகர் வளர்த்த காங்கிரஸ், அன்னிபெசன்ட் அம்மையார் வளர்த்த காங்கிரஸ், தியாகி திருப்பூர் குமரன் வளர்த்த காங்கிரஸ், மோதிலால் நேரு வளர்த்த காங்கிரஸ், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் வளர்த்த காங்கிரஸ் இன்று எப்படி ஏகாதிபத்திய வாதிகளின் கையில் சிக்கிச் சீரழிந்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்தும், பார்த்தும் பாராமலும் இந்த மாநிலத்தில் மதுவிலக்கை நான் தளர்த்துகிறேன் என்று சொன்ன பிறகு, எங்கள் தலைவர் மீது குற்றம் சொல்லுகிறீர்கள் என்று சொன்னால், மனசாட்சி பேசட்டும் என்றுதான் நான் சொல்வேன்.

நாணயம் இல்லாத அரசு என்று சொன்னார்கள் எங்கள் ஆட்சியைப் பற்றி. இந்த ஆட்சிக்கு நாணயம் இருக்கிறதா என்று பொருள்படப் பேசினார்கள். அதற்குக் கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தைத்தான் நான் சொல்லுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-லே இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கும்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஆவேசப்பட்டு இந்த அரசு நாணயமில்லாத அரசு என்று சொன்னார்கள். இதே கருத்தைத்தான் இந்திரா காங்கிரசில் மிக முக்கிய உறுப்பினரான அருமை நண்பர் சித்தன் அவர்களும், அருமை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்களும் கூடச் சொன்னார்கள். எரி சாராய ஊழலைப் பற்றிச் சொன்னால் உனக்கு ஏன் எரிச்சல் வருகிறது என்று சொன்னார்கள். எரிச்சல் வரவில்லை.

இது நாணயம் இல்லாத அரசுதான். நீங்கள் மத்திய அரசிடம் இருந்து, இந்திரா காங்கிரசிடம் சொல்லிக் கேட்டுக் கொள்வதெல்லாம், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல, மத்திய அரசிடம் இருந்து அந்த நாணயத்தைக் கொஞ்சம்வாங்கித் தாருங்கள். ஒரு நாட்டில், ஒரு தேசத்தில் அல்லது இந்தியாவில் ஒரு மாநிலம் நாணயம் இல்லாத அரசாக இருக்கிறது என்ற கருத்து ஏற்படுமானால், மத்திய அரசில் அந்த நாணயம் இருக்க வேண்டும். அந்த நாணயம் மாநிலத்துக்குக் கிடைக்குமானால் இப்படிப்பட்ட பற்றாக்குறை, நாணயம் இல்லாத தன்மை

இருக்காது. ஆனால், அந்த நாணயம் இந்த மாநில அரசுக்குக் கிடைக்குமானால் அந்த நாணயக் குறைபாடு போகும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 5—40]

சுற்றுப்புறச் சூழ்நிலைகள், இந்தியாவினுடைய எதிர்காலம், வெறிச்சோடிப்போன தன்மை, முதலாளித்துவ இருள் கவ்வக் கூடிய நிலை, ஏகபோக வர்க்கம் அடிமைப்படுத்தக் கூடிய தின்மை இருக்கிறது என்பதை 1961-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் டெல்லியில் சொன்னார்களே, அந்தக் கருத்துத்தான் 20 ஆண்டுக் காலம் கழித்தும் இந்தியாவில் இருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று டெல்லி மேல்சபையில் '' இன் அவர் கன்டிரி பொலிட்டிகல் ஈஸ் வெல், இன்டஸ்டிரி ஈஸ் டல், கல்சர் ஈஸ் இல் '' என்று சொன்னார்கள். அரசியல் நன்றாக இருக்கிறது. ஆவேசமாகப் பேசுகிறார்கள். எடுத்தெறிந்துபேசுகிறார்கள். ஏனோதானோக்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். இவர்கள் எரி சாராய ஊழலில் இலஞ்சம் பெற்றார்கள் என்று சொல்கிறீர்கள். இவர்களால் என்ன செய்ய முடியும் என்று சொல்கிறீர்கள். உங்களுடைய பேச்சு நன்றாக இருக்கிறது. தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகவும், தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், திட்டங்கள் தீட்டுகிற அரசு ஒரு இடத்தில் ஏதாவது அல்லது ஒரு நிலையில் ஏதாவது குறைபாடு காணப்படுமானால், அந்தக் குறைபாடுகளை விமர்சிக்கக்கூடிய தன்மையில் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் கருத்துக்களைச் சொன்னார்களா இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்கக்கூடிய நிலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றுக் காலையில் பேசிய மதிப்பிற்குரிய ஜனதா கட்சி உறுப்பினர் விஜயராகவன் அவர்கள் கூட முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்று கூறினார்கள், மதுவிலக்கைப் பற்றி பேசுகிற நேரத்தில். எங்களுடைய கிராமங்களில் எல்லாம் முழுக்க நனைந்தால் கூட முக்காடு போடுவார்கள். காரணம் தலை நனையாமல் இருந்தால் காய்ச்சல் வாராமல் இருக்கும் என்பதற்காகத்தான். ஆகவே, அந்த நிலைமையில் தான் முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்று கேட்பதற்கு நான்

சொல்கிறேன் குடிப்பவர்கள் பழக்கம் ஏற்பட்டு விட்டது. அந்தப் பழக்கத்தை ஏற்படுத்தியவர் யார் என்பதை இந்த நேரத்தில் நாம் சிந்தித்துப் பார்ப்பதைவிட்டுவிட்டு, குடிப்பதற்குப் பழகி அடிமைப்பட்டு விட்டவர்கள், அடிமையாக இருக்கச் செய்துவிட்டு அந்தத் தலைமுறையில் வாழ்ந்தவர்களோடு இந்தக் குடிப்பழக்கம் இருந்துவிட்டுப் போகட்டும் என்கிற முறையில் இந்தப் பர்மிட் முறையைக் கொண்டு வந்து 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடித்தால் குடிக்கட்டும் என்று சொல்லும்போது, முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு என்று கேட்டதால் சொல்கிறேன், மிச்சம் மீதி இருப்பவர்களுக்கு அந்தக் காய்ச்சல் வந்து சாகாமல் இருப்பதற்குத்தான் இந்த நிலைமை என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அகில இந்திய அரசியலில் மாற்றுப் பாதை ஏற்பட்டால் தான், அகில இந்திய ரீதியில் ஏற்பட்டு இருக்கின்ற அயல்நாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்டு இருக்கும் பேரங்கள் தேசிய உடைமையாக்கப்பட்டால்தான், அனைத்து மாநிலங்களிலும் விளைகின்ற விளைச்சல் பஞ்சத்தால் அல்லது பற்றாக்குறையால் அல்லது ஏற்பட்டு இருக்கின்ற விபரீதப் பொருளாதார மாற்றத்தால் அல்லது ஏற்பட்டு இருக்கின்ற வறட்சியால் பாதிக்கப்பட்டால் அந்த நேரத்தில் எல்லா மாநிலங்களும் ஒரே ரீதியாகக் கருதிடும் நிலைமை ஏற்படுமானால்தான் எந்த மாநிலமும் சுபிட்சமாக வாழ முடியும்என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கோவைப் பல்கலைக்கழகத்திற்கு தந்தை பெரியார் அவர்கள் பெயர் வைப்பார் புரட்சித் தலைவர் என்று கோவை மக்கள் மிகவும் ஆவலாக எதிர்பார்க்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். வறட்சி நெருங்கி வரும்போது குளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக வனத் துறையினர் முள் செடிகளைப் பயிரிட்டு இருக்கிறார்கள். அந்த முள்செடிகள் குளங்களில் பயிரிட்டு இருப்பதால் தண்ணீர் தேக்கத்தின் கொள்ளளவு குறைந்துபோய் இருக்கிறது. ஆகவே, அந்த முள் செடிகளை நீக்க வேண்டும் என்று நான் சம்பந்தப்பட்ட துறையினரைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பார்ட் 2 ஸ்கீமில் உள்ள கோவை கிராஸ் கட் ரோடில் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்படவிருக்கின்ற மேம்பாலம் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி ரோடில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்குரிய வடிவுகளை ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூர் தொகுதியில் சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்காக் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பங்குப் பணம் திருப்பிக் கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. அப்படி திருப்பிக் கொடுக்காமல் அந்தப் பகுதியில் அந்தச் சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவையில் உள்ள மத்திய சிறைச்சாலை இருக்கும் பகுதி பல ஏக்கர் நிலங்களை உள்ளடக்கியதாக, பல கோடிக்கணக்கான மதிப்புள்ள நிலத்தை உடையதாக இருக்கிறது. ஆகவே, அந்தச் சிறைச்சாலையை நகரத்திற்கு வெளியே ஒரு இடத்திற்கு மாற்றுவது என்று சொன்னால் ஒரு கோடி ரூபாய் செலவாகும். ஆகவே, அந்த சிறைச்சாலையை நகரத்தை விட்டு வெளியே வேறு ஒரு இடத்தில் கட்டிவிட்டு, தற்போது சிறைச்சாலை உள்ள இடத்தில் மக்களுக்குத் தேவையான கட்டிடங்களையோ, அலுவலகங்களையோ எழுப்பலாம் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுவாணித் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தியைச் செய்யலாம் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசு அதை ஆலோசித்து அதை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவை செல்வபுரம் பகுதியில் சிந்தாமணிக் குளம் பயன்அற்றுப்போய் இருக்கிறது. அதை மூடிவிட்டு அங்கே ஒரு பெரிய தொழிற்கூடம், அல்லது மருத்துவமனை அமைக்க அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து விடைபெறுகிறேன்.

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1981–82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலே அகில இந்திய அளவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பற்றியும் அதிலும் குறிப்பாக இன்றியமையாத பொருட்களின் விலைவாசி உயர்ந்திருக்கிறது ; பணவீக்கம், பொருள் பற்றாக்குறை ஆகியவை தமிழ்நாட்டைப் பாதித்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி இந்த நிதிநிலை அறிக்கை தொடங்கி இருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்றையதினம் நம்முடைய மாநிலத்தின் அதிகாரங்கள், நிதி ஆதாரங்கள் எந்த அளவுக்கு மத்திய அரசால் கட்டுப்படுத்தப்பட்டு, மேலும், மேலும் அதன்மீது கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறது என்பதையும் சுட்டிக்காட்டக்கூடிய முறையில் இந்த அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சவரர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இந்த அறிக்கை, சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் உரையின்போது நம்முடைய மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இருக்கிற உறவு கெட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக அஞ்சி அஞ்சி அளிக்கப்பட்டிருந்த அந்த நிலையை மீறி இன்றைய தினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்ற முறையிலே மாநில அதிகாரங்களை, நிதி ஆதாரங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமையிலே அதை மாற்றுவதற்கான ஒரு நிலையை எடுக்கின்ற உணர்வோடு அந்த உரைக்கும் இந்த உரைக்கும் இருக்கின்ற மாற்றத்தை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது : உணர முடிகிறது. ஆகவே, இந்த உரையிலே பேரறிஞர் அண்ணாவினுடைய நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சைக் குறிப்பிட்டு, அதை நினைவுபடுத்தி இந்த உரை தொடங்கியிருக்கிறது. மறந்துபோன விஷயங்களை இன்றைய தினம் நினைவுபடுத்தக்கூடிய அளவுக்கு மத்திய அரசின் நடவடிக்கை எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, அதை உணரக்கூடிய அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது என்பதை நான் வரவேற்கிறேன். இந்த மாறுதலை வரவேற்கிற அதே நேரத்தில் மைய அரசின் நடவடிக்கைகள் இன்றைய தினம் மாநில அரசுகளை அச்சுறுத்துகின்ற வகையிலே இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைய தினம் இந்த சட்டமன்றத்தில் எரிசாராயம் தினசரி பேசப்பட்டு வருகிறது. நமது மாநில அரசு ஏற்கெனவே ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்திருக்கிறது. கேரள அரசும் ஒரு விசாரணைக் கமிஷனை நியமித்திருக்கிறது. ஆனால், மத்திய அரசும் ஒரு விசாரணைக் கமிஷனை அமைப்பதாகக் கூறிக்கொண்டிருக்கிறது. இந்த விசாரணைக் கமிஷன் அமைப்பு என்பது மத்திய அரசு இன்றைய தினம் ஏதோ தமிழ்நாட்டில் நடைபெற்றிருக்கிற ஊழலை அல்லது கேரள மாநிலத்தில் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிற ஊழலைக் கண்டுபிடிப்பதற்காக இந்த கமிஷனை நியமிக்கப்போகிறார்களா என்பதைக் காட்டிலும் அவர்கள் இந்தக் கமிஷன் பெயரைச் சொல்லி பூச்சாண்டிகாட்டிக் கொண்டிருக்கிறாகள். இன்றைய தினம் காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளை, குறிப்பாக கேரள அரசையும், தமிழ்நாட்டில் இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசையும்

அச்சுறுத்துவதற்காக அந்த அச்சுறுத்தலை உருவாக்கி பணிய வைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த கமிஷன் என்கிற பூச்சாண்டியை அவர்கள் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய சட்டமன்றத்திலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்திலே இந்த கமிஷன் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட நீதிபதி கைலாசம் அவர்களை மாற்ற வேண்டுமென்று கூறிய நிலையிலிருந்து, மத்திய அரசை கமிஷன் நியமிக்க வேண்டுமென்று அவர்கள் கூறியதிலிருந்து, இவர்களுடைய கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதல்ல, இவர்களைத் தங்கள் பக்கம் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு நிலையிலே இருந்துதான் இந்த விசாரணைக் கமிஷன் என்ற பேச்சை பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

விசாரணைக் கமிஷன் இப்போது வரும் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

[பிற்பகல் 5-50]

நமக்கு ஏற்கெனவே ஒரு முன் உதாரணம் இருந்திருக்கின்றது. சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்படுவதற்கு முன்னால் ஊழல் புகார் கொடுக்கப்பட்டது எந்த ஆண்டு என்பதும் கமிஷன் நியமிக்கப்பட்டது எந்த ஆண்டு என்பதும் அனைவருக்கும் நினைவு இருக்கலாம். எந்த நேரத்தில் அவர்களுக்குத் தேவையோ அந்த நேரத்திலே விசாரணைக் கமிஷனை நியமிப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இம் மாதிரியான நிலைகளை மத்திய அரசு எடுப்பது மாநில அரசுகளை அச்சுறுத்துவதற்காகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தன்னுடைய தவறான பொருளாதாரக் கொள்கைகளை, பிற்போக்குக் கொள்கைகளை, மக்கள் விரோத நடவடிக்கைகளை எல்லா மாநில அரசுகளும் ஆதரிக்க வேண்டும், இல்லை என்றால் அந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத அரசுகளையும் காங்கிரஸ் அல்லாத அரசுகளையும் அச்சுறுத்துவதுதான் மத்திய அரசின் நோக்கம். அந்த வகையிலே இதை ஒரு துடுப்பாகத்தான் உபயோகப்படுத்துவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை நம்மை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். இன்றைய மத்திய அரசின் கொள்கைப்படி பன்னாட்டு மூலதனங்கள் நம்முடைய நாட்டிலே போடப்படுகின்றன. அது நம்முடைய நாட்டினை சுரண்டுகின்ற கொள்கையாக இருக்

கின்றது. பெருமுதலாளிகளை வளர்க்கக்கூடிய கொள்கையாக இருக்கின்றது. சாமானிய மக்களின் மீது மேலும் மேலும் பாரத்தையும் பளுவையும் சுமத்துகின்ற வகையில் வரியினை சுமத்தக்கூடிய கொள்கையாகத்தான் இருக்கின்றது மத்திய அரசின் கொள்கை. விலைவாசியினை உயர்த்துவதற்குரிய அடிப்படைக் கொள்கையாகத்தான் மத்திய அரசின் கொள்கை இருக்கின்றது. அந்தக் கொள்கையினால் வேலையில்லாத் திண்டாட்டம் உயர்ந்து வருகிறது. இன்றைக்கு தொழில் வளர்ச்சியிலே தேக்கம் ஏற்பட்டிருக்கின்றது. பொருளாதார வளர்ச்சியிலே தேக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்றையதினம் நம்முடைய தமிழகத்திலே மட்டுமல்லாமல் நமது அண்டை மாநிலமான ஆந்திரா மாநிலத்திலே கூட வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. பொருட்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட கவலையான நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட் நிலைமையினை மத்திய அரசின் பட்ஜெட் மாற்றுவதாக அமையவில்லை என்பதும் பற்றாக்குறையை அதிக்கப்:டுத்தக்கூடிய வகையிலேயும், பணவீக்கத்தை விரிவு டடுத்தக்கூடிய முறையிலேயும் தான் இருக்கின்றது. அந்த வகையிலே நம்முடைய மாநிலத்தினுடைய பட்ஜெட்டும் பற்றாக்குறை பட்ஜெட்டாக அமைந்திருக்கின்றது. 153 கோடி 96 இலட்சம் ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டாக இது அமைந்திருக்கின்றது என்பது மிகவும் கவலை தரக்கூடிய ஒரு அம்சமாக இருக்கின்றது. ஆகவே இந்த நிலைமையில் நம்முடைய மாநிலத்து மக்களின் நலனுக்காக மாநில அரசு எப்பேர்ப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது குறித்து கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தைத் கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் இந்த பட்ஜெட் சமர்ப்பித்திருக்கக்கூடிய நேரம் 6 ஆவது ஐந்தாண்டுத்திட்டத்தின் இரண்டாவது ஆண்டாக இருக்கின்றது. 6 ஆவது ஐந்தாண்டுத்திட்டத்தில் நம்முடைய மாநிலத்திற்கு 3,150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஐந்தாண்டுத்திட்டம் துவக்கப்பட்ட இரண்டாவது ஆண்டில் 567 கோடி ரூபாய் வருகின்ற வகையில் திட்டம் வகுக்கப்பட்டு இருக்கின்றது. என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த 6 ஆவது ஐந்நாஃடுத் திட்டத்திற்காக மத்திய அரசு நமக்குக் கொடுக்கின்ற நிதியுதவி எவ்வளவு என்று பார்க்கின்றபோது 3,150 கோடி ரூபாயினை மொத்தமாக அவர்கள் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து, கொடுத்திருப்பது 665 கோடி ரூபாய்தான் இதற்குமேல் உள்ள 2,485 கோடி ரூபாயைப் பெற நம்முடைய மக்கள் மீது பளுவைப் போடுகின்ற வகையில் வரியைப் போடுங்கள் என்று மத்திய அரசு மாநில அரசுக்கு யோசனை கூறக்கூடிய முறையிலே நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

மாநிலத்தினுடைய திட்டங்களுக்காக மாநிலத்தில் நிதியாதாரங்கள் எந்த அளவுக்கு திரட்டப்படும் என்பது குறித்து இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 1385 கோடி ரூபாய் திரட்டப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதை எந்த முறையிலே திரட்டப்போகிறோம் என்பதுதான் இன்றையதினம் கேள்விக்குறியாக இருக்கின்றது. 6 ஆவது ஐந்தாண்டுத்திட்டத்தில் நம்முடைய மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக மட்டும் ஒதுக்கி இருப்பது 171.77 கோடி ரூபாய் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தத் தொகையில் 3,150 கோடியில் தொழில் வளர்ச்சிக்காக மட்டும் ஒதுக்கி இருக்கின்றன. இந்தத் தொகை எந்த அளவிற்கு நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கப்போகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு கொடுக்கின்ற உதவித் தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது என்பது ஒரு புறத்திலே இருக்கின்றபோது இன்னொரு புறத்திலே பளுவையும் பாரத்தையும் தமிழக மக்களின் மீது சுமத்தவேண்டும் என்ற முறையிலே கூறிக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே கடந்த பத்தாண்டு காலத்திலே தொழில் வளர்ச்சியே இல்லை என்று இன்னொரு புறத்திலே குற்றச்சாட்டு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எதற்காக இதைக் கூறுகிறார்கள். ஒருபுறத்தில் மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்கி அதற்கான நிதியாதாரத்தைக் கொடுக்க மறுப்பதும் இன்னொரு புறத்திலே அதனால் மாநிலத்திலே ஏற்படக்கூடிய சீர்குலைவை பயன்படுத்திக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடுவதற்கான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே தான் நாம் இந்த 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கோருகிற நேரத்திலே, அதிகமான தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் நிறுவ வேண்டும் என்று கேட்கிறோம். அப்படித் தொழிற்சாலைகளை அதிகமான அளவில் பெருக்கித்தான் வறுமையை ஒழிக்க வேண்டும். இன்றையதினம் வறுமைகோட்டிற்கு கீழே இருக்கக் கூடிய மக்களுடைய எண்ணிக்கையின் தொகை தமிழ்நாட்டில் 52.12 சதவீதம் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. இது அகில இந்திய ரீதியிலேயே வறுமை கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய மக்களுடைய எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான தொகை என்று புள்ளி விவரம் காட்டுவதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். அது மட்டும் அல்ல தமிழகத்தில் இருக்கிற நபர்வாரி வருமானம், அகில இந்தியா முழுவதிலும் இருக்கக்கூடிய சராசரி வருமானத்தை விட அதிகமாக இருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் நிறைய பேர்கள் பேசவேண்டியிருப்பதால் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. இரா. கருப்பையா: இன்னும் முக்கியமான கருத்துக்களைச் சொல்லவேண்டியிருக்கிறது. கட்சித் தலைவருக்குப் பதிலாக நான் பேசுகிறேன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சித் தலைவருடைய நேரத்தை இரண்டாகப் பிரித்து, திரு. ஆறுமுகம் அவர்களுக்கும் அதிகநேரம் பேசப் வாய்ப்பளித்தாகி விட்டது. அதனால் தேவையான பாய்ண்டுகளை மட்டும் குறிப்பிட்டு சுருக்கமாகப் பேசுங்கள்.

*திரு. இரா. கருப்பையா: இந்த அறிக்கையிலே விவசாய அபிவிருத்தி சம்பந்தமாகவும் சில விவரங்கள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்வதற்காக நம்முடைய மாநில அரசு 71 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. அதில் மத்திய அரசின் உதவி எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைப் பார்த்தால், அவர்கள் இதற்கு ஒரு பைசா கூடக் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்தது மட்டும் அல்லாமல், இம்மாதிரியான நடவடிக்கைகளில் மாநில அரசுகள் இறங்கக் கூடாது என்று எச்சரிக்கையும் செய்திருக்கிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையை கொடுக்கக் கூட மத்திய அரசு மறுக்கிறது என்பதையும், அந்தச் செய்கை எந்த அளவிற்கு விவசாய உற்பத்தியைப் பாதிக்கக் கூடிய முறையில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். ஆகவே விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய வகையில் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அதோடு இந்த அறிக்கையில் வறட்சி சம்பந்தமாகக் குறிப்பிடப்பெற்றிருக்கிறது. ஆனால் வறட்சியினுடைய கடுமையான தன்மையைப் பற்றி சரியானமுறையில் குறிப்பிடப்பெறவில்லை என்பதை நான் இங்கு முதலிலே தெளிவு படுத்த விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். அதிகாரிகள் சரியான தகவல்களை உரிய நேரத்திலே கொடுக்கவில்லை என்று கூறினார்கள். ஆனால் மக்கள் தங்கள் சொத்துக்களையோ, ஆடுமாடுகளையோ, உடைமைகளையோ விற்கக்கூடிய அளவிற்கு, 1974 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட வறட்சியில் மக்கள் வெளிமாவட்டங்களுக்கு வெளியேறியது போல தற்போது வெளியேறவில்லை என்ற திருப்தி நிலை உள்ளது.

ஆனால் உண்மை நிலை என்னவென்றால், இராமநாதபுரம் மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும் மக்கள் தங்கள் உடைமைகளையும், ஆடு மாடுகளையும் விற்றுவிட்டு வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். ஆகவே இம்மாதிரி கூறுவது, வறட்சியினுடைய கடுமையை குறைத்து மதிப்பிடக் கூடிய சூழ்நிலையை உருவாக்கும். அது வறட்சிப் பணிகளை தீவிரமாக செயல்படுத்துவதில் காலதாமதத்தை ஏற்படுத்திவிடும் என்பதோடு மைய அரசிடம் இருந்து அந்த வறட்சிப் பணி நிவாரணங்களுக்காகப பெற வேண்டிய தொகையும் போதிய அளவில் கிட்டாமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட இடம் அளித்துவிடும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மைய அரசு வறட்சிப் பணிகளுக்காக போதுமான நிதி உதவியை வழங்குகிறதா, இல்லையா என்பது ஒரு புறம் இருந்தாலும், அது வழங்கக் கூடிய சிறு தொகை கூட, நம்முடைய மாநில அரசின் திட்டச் செலவுகளை ஈடு செய்யக் கூடிய முறையிலேதான் இருக்கும் என்பதையும், குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, உணவுப் பொருள்களின் விலைகளை அரசு ஏற்றியிருக்கிறது. அது சரியான முறையிலே முடையிருப்பு. அதாவது (பாஃபர் ஸ்டாக்) ஏற்படுத்தவில்லை என்பதையும், சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் மூலமாக உரிய நேரத்திலே, கொள்முதல் செய்திருப்பார்களேயானால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்பதையும் குறிப்பிடவிரும்புகிறேன். தற்சமயம் லெவி விதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக விலை உயரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதிக நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசிடம் இருந்து கோரிப் பெறவேண்டும். வறட்சிக் கால பணிகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும்.................
(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடித்து விடுங்கள் நீங்கள் ரெயிலுக்கு போக வேண்டும் என்று சொன்னீர்களே, அப்புறம் ரயில் போய்விடும். (சிரிப்பு)

[பிற்பகல் 6—00]

திரு. இரா. கருப்பையா: அந்த முறையில் வறட்சி நிவாரணப் பணிகளைத் துரிதமான முறையில் செய்ய வேண்டும்

என்று கேட்டுக் கொள்கிறேன். நமது மாநிலத்தில் 37,000 குளங்கள் உள்ளன. அவற்றிற்கு தண்ணீர் வாரிகளைச் சரியான முறையில் அமைத்திருந்தால் இன்று ஓரளவு குடிநீர் குளங்களில் கிடைக்க வாய்ப்பு இருந்திருக்கும். ஆகவே, அவை சரியான முறையில் அமைக்கப்படாததால் இன்று குடிநீருக்குக்கூட வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவற்றை முறையாகப் பழுது பார்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்த பொது விநியோக முறையை இன்றைய தினம் சரியான முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். பொது விநியோக முறை கேரளாவில் திரு. அச்சுத மேனன் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. அது அனைவராலும் பாராட்டப் பெற்றது. அதைப் பின்பற்றி நமது மாநிலத்திலும் பெயர் அளவிற்கு இருப்பதை சரியான முறையில் அமைத்து மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

விவசாயிகள் கடன் சம்பந்தமாக 71 கோடி ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இன்றைய தினம் ஐந்து ஏக்கர் உள்ள சிறு விவசாயிகள் ஜூன் 30-ம் தேதிக்குள்ளாக அசலைத் திருப்பிக் கட்டினால் அவர்களுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று இந்த அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தக்கதாக இருந்தாலும்—ஏற்கனவே விவசாயிகள் சங்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் கோரியிருக்கிறது. ஐந்து ஏக்கர் நன்செய்யும் ஐந்து ஏக்கர் புன்செய்யும் ஒன்றல்ல என்று. ஆகவே அதில் ஒரு மாற்றம் காண வேண்டும். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு முழுமையாகத் தள்ளுபடி செய்து ஐந்து ஏக்கர்களுக்கு மேல் உள்ளவர்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். வறட்சி காரணமாகக் கடன் வசூலினை ஒத்தி வைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தும் அதை வசூல் செய்வதில் சில அதிகாரிகளில் சில பகுதிகளில் மிகவும் கெடுபிடி செய்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். குளித்தலை தாலுகாவில் நச்சலூரில் கெடுபிடி செய்து வசூல் செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இம்மாதிரியான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசாமி அவர்களுக்கு இங்கே இருக்கக்கூடிய விலாசத்திற்கு கடனை உடனடியாகக் கட்ட வேண்டும் என்ற முறையில் பதிவுத் தபால் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவற்றையெல்லாம் தனிப் பட்ட முறையில் சொல்லிக் கொள்ளலாம். நாட்டு நிலைபற்றிப் பேசுங்கள்.

திரு. இரா. கருப்பையா : தொழில்கள் சம்பந்தமாக ஒதுக்கப் பட்டுள்ள தொகை போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டேன். இந்த ஆண்டு மூன்றாவது சிமிட்டி ஆலையை நிறுவுவதற்கும், வட ஆற்காடு மாவட்டத்தில் வெடி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கவும் கூட்டுறவுத் துறையில் மேற்கொண்டு மூன்று நூற்பாலைகள் துவங்கவும் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்று கோடி ரூபாய் செலவில் கனிப் பொருள் செறிவு படுத்தும் வெப்பந்தாங்கிக் கல் தயாரிப்புச் சாலை நிறுவப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ள பல்வேறு திட்டங்களையும் நம் மாநிலத்தில் அமைத்துக் கொடுக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதை நம் மாநில அரசு வற்புறுத்த வேண்டும்.

இன்று இந்தியா முழுவதையும் எடுத்துக் கொண்டால் 8.5 சதவீதம் வேலை இல்லாதவர்கள இருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 16.1 சதவீதம் என்றிருக்கிறது.

கரூர்—திண்டுக்கல் ரெயில்வே பாதையை உடனடியாகத் துவங்க தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சென்னை—தூத்துக்குடி பிராட்கேஜ் வேலையை துவங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரெயில்வே பாதை அமைப்பது பற்றி இந்த மன்றம் என்ன செய்ய முடியும்? திரு. அழகர்சாமி அவர்கள் பத்து நிமிடங்கள் வேண்டுமென்று கேட்டார்கள், நீங்கள் அரை மணி நேரமாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் அநேக உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. மி. வின்சென்ட் : சபையில் தி.மு.க. உறுப்பினர்கள் ஒருவர்கூட இல்லை.

திரு. இரா. கருப்பையா : போக்குவரத்து சம்பந்தமாக, நீர் வழிப் போக்குவரத்து கொண்டு வருவதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பாசனம் சம்பந்தமாக, மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கக்கூடிய நதி நீரை தமிழ் நாட்டுக்கு பயன்படுத்தக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

காவிரி நீர்ப் பிரச்சினைக்கு துரிதத் தீர்வு காணவேண்டும்.

தொழிலாளர்கள் கொள்கை சம்பந்தமாக மைய அரசின், அதே கொள்கையை மாநில அரசு பின்பற்றுவது சரியல்ல. அதிலே மாற்றங்கள் தேவை என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தியாவசிய சர்வீஸ் வேலை தடைச் சட்டத்தை, நம்முடைய மாநில அரசு கொண்டு வரக்கூடாது. அதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்.ஜி.ஓ-க்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும். மதுரையிலே கருவூல ஊழியர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அவர்கள் சஸ்பென்ஷனை வாபஸ் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழிலாளர்கள் பிரச்சினைப்பற்றி தொழிலாளர் மானியம் வரும்போது பேசலாம். அதேபோல், நீர்ப் பாசனம் பற்றி நீர்ப்பாசன மானியம் வரும் போது பேசலாம். இன்றைக்கு கடைசி நாள் அல்ல. இன்றைக்கே எல்லாவற்றையும் பேச வேண்டும் என்பதல்ல.

திரு. இரா. கருப்பையா : மதுவிலக்கு சம்பந்தமாக இன்றைய தினம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஊழலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவதும்தான் மேலும் அதிகரிக்கும்; தவறுகள் அதிகரிக்கும். எனவே, இதை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, காவல்துறைக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற சலுகைகள் இன்றையதினம் மக்களுக்கு எதிராக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அடக்குமுறை அவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஊழல் சம்பந்தமாக விசாரணை ஒன்றை நடத்த வேண்டும். கடைசியாக, வரிகள் சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாநில அரசு வரிகளை மாற்றி, அதைக் கைவிட்டு, மதுவிலக்கு முழுமையாக ரத்து செய்யப்படுமானால், அதன்மூலம் வருமானம் பெறமுடியும். மத்திய அரசாங்கத்தின் கொள்கைகள், இன்றைய தினம் மக்கள் மீது பாரத்தைப் போடக் கூடிய கொள்கைகளை எதிர்த்து, நம்முடைய அரசு உறுதியாக மக்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் செயல்பட வேண்டும், நிற்க வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். நிதிநிலை அறிக்கை வரவு-செலவு திட்டத்தை மட்டும் எடுத்துச் சொல்லுகின்ற ஒரு அறிக்கையாக இல்லாமல், மாநிலத்திலே

இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்லுகின்ற பாங்கினை உள்ளபடியே நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். மிகப் பெரிய விழிப்புணர்ச்சியை நாம் பெற்றாக வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்ற விதத்தில், இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. மாநில அரசினுடைய இந்த உள் உணர்வுகளை, இந்தியத் துணைக் கண்டத்தின் கூட்டாட்சி தத்துவத்திலே, ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ள எந்தக் குடிமகனும் நிச்சயமாக வாழ்த்தி வரவேற்க வேண்டும். அகில இந்திய அளவிலே விலைவாசி உயர்வு ஒரு பக்கமும், பொருள்களின் பற்றாக்குறை மறு பக்கமும், பண வீக்கமும், இவை எல்லாவற்றையும் காட்டிலும் தமிழகத்தைத் தாக்கியிருக்கிற மிகப் பெரிய வறட்சி நிலைமையைப் போக்குவதற்கு நிதி ஆதாரங்கள், அதிகாரங்கள், உரிமைகள் ஆகியவைகளைப் பெற்றாக வேண்டும். நாம் மத்திய அரசை நம்பியிருக்க வேண்டும் என்கின்ற சூழ்நிலை, நிதித் துறையில் மத்திய அரசும், மாநில அரசுகளும் சுதந்திரமாக, பொறுப்போடு செயல்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்ற நேரத்தில், மத்திய மாநில அரசுகளின் நிதி மூலாதாரங்கள் தனித்தனியாக, போதுமானவைகளாக, நெகிழ்வினைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று உணர்கிறோம். இவையெல்லாம் மாநிலங்களிலும் இருப்பதைப் பார்க்கும்போது, எனக்கு கம்பராமாயண வரிகள் நினைவுக்கு வருகிறது. ' கடன் பட்டான் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் ' என்ற பாடலின் அர்த்தம் தான் வருகிறது. இன்றைக்கு மாநில அரசுகள், மத்திய அரசின் வாயிற்படியில் நின்று, பிச்சைக் கேட்கின்ற பிச்சைக்காரர்களாகி விடக்கூடாதே என்கின்ற இந்த உள்ள உணர்வுகளை இந்த நிதிநிலை அறிக்கை மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. இதே உள்ள உணர்வை 1967-லே பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

"Many Chiefs of State Governments have recognised that State Governments cannot discharge their responsibilities in meeting the growing aspirations of the people for a new way of life unless the resource base of the States is considerably strengthened by giving them access to growing sources of revenue and by allocating the Plan resources on an agreed basis leaving the States with complete freedom to utilise them according to their judgment."

[பிற்பகல் 6–10]

இதே உள்ள உணர்வை திறம்படத்தான் இன்றைக்கு தமிழக அரசியல் வரலாற்றிலே கலங்கரை விளக்காக இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நமக்குக் காட்டியிருக்கிறது. ஆனால் தமிழக அரசியல் வரலாற்றிலே களங்கமாக இருக்கிற திராவிட

முன்னேற்றக் கழகம், இன்றைக்கு அவர்களை சார்ந்து மூச்சைப் பிடித்து பேசுகிற இந்திரா காங்கிரஸ் நண்பர்களும் இந்த நிதி நிலை அறிக்கையை எள்ளி நகையாடி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் விரலை உயர்த்திக் காட்டி நண்பர்களா, பகைவர்களா என்று சொல்லுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். இந்த வெத்து தோட்டாக்களுக்கு பயப்படுகிற வேங்கைகள் அல்ல நாங்கள், என்பதை மட்டும் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர்களா, பகைவர்களா என்று கேட்கிற மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

* * * * *

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நாட்டின் பிரதமரை இன்னொருவர் சொல்லியிருந்தாலும், அதே வார்த்தையைத் திரும்பச் சொல்வது அவை குறிப்பிலே இருப்பது நல்லது தானா என்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்கின்ற அளவிற்கு நாங்கள் செல்லமாட்டோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, யார் சொல்லியிருந்தாலும், அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டியது இல்லை. அனுமதிப்பீர்களேயானால் முன் உதாரணமாக வைத்து பல வார்த்தைகளை சொல்ல வேண்டி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். அந்த சப்ஜெக்ட்டை விட்டுவிட்டு அடுத்த மேட்டருக்கு போங்கள்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அளவுக்கு நாங்கள் போக மாட்டோம். அரசியல் ஆதாயங்களுக்காக அடிபணிந்து போகும் நிலைமையை அண்ணா தி.மு.க. என்றைக்கும் ஏற்படுத்தாது என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எண்ணிப்பார்க்க வேண்டும், மதுரை சம்பவத்தை. மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். பாரத பிரதமராக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அல்ல, தனி மனிதராக மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்து இறங்குகிற போது மாலையிட்டவர் யார், பிரதமருக்குரிய மரியாதையோடு பாதுகாப்பு தரப்படும் என்று சொன்னவர் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதை எல்லாம் "மியர் ஆக்ட்ஸ் ஆப் கர்ட்டிசி" என்று நீங்கள் ஒதுக்கி விட்டாலும் கூட உள்ளபடியே நட்பு என்பது வேறு, உரிமைகளை கேட்பது நியாயத்தை எடுத்துச் சொல்வது வேறு என்பது நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். நண்பர்கள் என்றுச் சொன்னால் ஒரு நீதி, ஒரு வேளை உங்கள் கணக்கிலே நண்பர்கள் என்று வரும்பொழுது அவர்கள் பெறுகின்ற அந்தச் சூழ்நிலையையும், பகைவர்கள் என்று நீங்கள் அளக்கிற அளவுபடி இருந்தால் விசாரணைக் கமிஷன் தான் வரும் என்று விரட்டுகிற அந்த பாணியையும்; நண்பர்களாக இருந்தால் அதிக உரிமைகள், நிதி ஆதாரங்கள் ; பகைவர்கள் என்று சொன்னால் நீங்கள் அவ்வாறு கணக்கு போட்டால் நிதி இல்லை என்று சொல்கின்ற அந்த மாற்றாந்தாய் மனப்பக்குவம் நிச்சயமாக இந்ததமிழகத்தை தலைக்குனிய வைத்துவிடக் கூடாது என்கிற கவலையால் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். பொறுத்திருந்து பாருகள் என்று கூட நீங்கள் விரட்டுகிறீர்கள். பொறுத்திருந்தோம் என்பதாலே காரணம் சொல்லாமல் கலைத்தார்கள். பொறுத்திருந்தோம் என்பதாலே இன்று பொறுப்பிலே மக்கள் வைத்திருக்கிறார்கள். இன்னும் சொல்கிறோம், பொறுத்திருப்போம், இந்த பூமியை ஆள்வதற்கு இதயத் தெய்வம் புரட்சித் தலைவரை விட்டால் வேறு ஒருவர் இல்லை என்பதை நான் இங்கே அழுத்தமாகச் சொல்கிறேன். பாதலுக்கு ஒரு நீதி, இந்த பாவிக்கு ஒரு நீதியா என்று கேட்டவர்கள் கோதுமைக்கு ஒரு நீதி, நெல்லுக்கு ஒரு நீதி என்று அதே வேகத்தோடு நெஞ்சை உயர்த்தி இன்றைக்கு எழுத முடியுமா, பேச முடியுமா என்று கேட்டால், எழுத மாட்டார்கள். பேச மாட்டார்கள். பேசினால், எழுதினால் கோதுமை வழக்கு கோர்ட்டிலே இருக்கிற போது வார்த்தைச் செல்லாது என்ற காரணத்தாலே இன்றைக்கு முடங்கி போயிருக்கிறார்கள். மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை கானல் நீர் என்று சொன்னார்கள். வறட்சிக் காலத்திலே இது வற்றாத ஜீவ நதியாக, வறுமை இருளை போக்குகிற கற்பூர தீபமாக இருக்கிறது. அந்த கானல் நீர் எங்களுக்குத் தெரியவில்லை. இந்த கற்பூர வாசனைக்கூட அவருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. கடுமையான வறட்சி தீர்க்க மிகத் திறமையாக சமாளிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக புதிய முறையிலே தென்னை வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் பாம் ஆயில் தயாரிக்கின்ற அந்தத் திட்டத்தை வரவேற்க வேண்டும். பாம் ஆயில் வாங்குவதற்கு ஆள் இல்லாத காலம்போய் இன்றைக்கு பாம் ஆயில் கிடைக்காதா என்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிற அந்தத் திட்டத்தை நான் வாழ்த்தி

வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே, ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த மக்களுடைய குடும்பங்கள் கூட்டுறவுத்துறையிலே இடம் பெறச் செய்கிற திட்டத்தையும் நான் வாழ்த்தி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள்கூட இங்கே கேட்டார்கள் படங்களிலே நடித்தீர்களே, செயலாக்கம் எங்கே என்று கேட்டார்கள். எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், நடிப்பிலே லட்சங்களைப் பார்க்கவில்லை. நடிப்பிலே இலட்சியங்களைப் பார்த்த காரணத்தாலே தான்

தரைமேல் பிறக்கவைத்தான் எங்களைத்
தண்ணீரில் மிதக்க விட்டான்

கரைமேல் இருக்கவைத்தான் பெண்களை கண்ணீரில்
தவிக்க வைத்தான்

ஒருநாள் போவார், ஒரு நாள் வருவார் ஒவ்வொரு நாளும்
துயரம்

என்ற இலட்சியப் பாடலைப் பாடினார். இன்றைக்கு மீனவர் நலனுக்கு என்று அடுக்கடுக்கான நல்ல திட்டங்களை வெளியிட்டிருக்கிறார்கள். எறால் மீன் வளர்ப்பிலே. கிராமப்புறங்களிலே உள்ள மீனவ இளைஞர்கள் ஆயிரம் பேர்கள் பயிற்சி பெறுகின்ற திட்டத்தையும், நவீனப்படுத்தப்பட்ட மீன்பிடி கலங்கள் வாங்கும் திட்டமும் பிடித்த மீன்களைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கின்ற திட்டத்தையும் இப்படிப்பட்ட மீனவர்கள் வாழ்க்கை, மேம்பாட்டிற்கான பல திட்டங்களையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையிலே மறுமலர்ச்சியை நாம் கண்டு கொண்டு இருக்கின்றோம் என்பதை முறை சாரா கல்வித் திட்டம், தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழகத் திட்டம், மதுரையிலே தமிழ்ச் சங்கம் நிறுவும் திட்டம் இப்படிப்பட்ட திட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன. உடல் ஊனமுற்ற சிறார்கள் மட்டும் இப்போது பேருந்துகளிலே ஏற்றிச் செல்லப்படக்கூடிய வசதிகள் அளிக்கப்பட்டிருக்கிறது. உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாகிய இந்த ஆண்டிலே ஊனமுற்ற அத்தனை பேர்களையும் பேருந்துகளிலே ஏற்றிச் செல்லுகின்ற திட்டத்தை அரசு கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்களின் வாட்டத்தைப் போக்குகின்ற முறையிலே 100-க்கு மேற்பட்ட அரசு ஊழியர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல, தேர்வு

நிலையிலே பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றுகின்றவர்களுக்கு பயன் தருகின்ற திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத் தொகை முழுவதுமாகப் பெறலாம் என்கின்ற திட்டமும் அளிக்கப்பட்டிருக்கிறது. 15 ஆண்டு காலம் என்று கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படுகிற நிலைமையை மாற்றி 10 ஆண்டுக்காலமாக அதை வைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்களுக்கு—மழைக் கோட்டு கொடுத்த மகராஜன் கோட்டையிலே கோலோச்சுகின்ற காலத்திலேயும் எங்களை மறக்கவில்லை என்று ரிக்ஷா தொழிலாளர்கள் பாராட்டுகின்ற முறையிலே 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார்கள் பொருத்துகின்ற நல்ல திட்டமும் வாழ்த்திவரவேற்கத் தக்க திட்டமாகும் என்று சொல்லி ஒட்டுமொத்தமாக இது ஒரு புரட்சிகரமான பட்ஜெட் என்று சொல்லிமுடிக்கிறேன். வணக்கம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களை வைக்க விழைகின்றேன். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் 3,150 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கென 563·26 கோடி அளவிற்கு அமைந்து இருக்கிற இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் நவீனப் பண்ணை முறைகள் உலக வங்கித்திட்டத்தின் வாயிலாகப்பெறவும், தேங்காய் உற்பத்தியினை 153 கோடி காய்களாக உயர்த்துகின்ற திட்டமும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் நிறுவியிருக்கிற திட்டமும் பாரட்டப்பட வேண்டியவைகளாகும். சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்துக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு 20·64 கோடி ஒதுக்கியும், ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 1 இலட்சம் குடும்பங்களை கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டுவரவும், 1981-82 ஆம் ஆண்டில் இவ்வகுப்பினரின் பொருளாதாரத்தை உயர்த்துகின்ற வகையில் 40 ஆயிரம் பேர்களுக்கு 100 ரூபாய் உதவி தொகை அளித்து உறுப்பினர்களாகச் சேர்த்து, பயிர்க்கடன் பால் பண்ணை கோழி வளர்த்தல், செம்மறியாடு வளர்த்தல் போன்ற பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் இந்த அரசின் நல்லெண்ணத்தைக் காட்டுகிறது. இவைகள் எல்லாம் பாரட்டுக்குரிய திட்டங்களாகும்.

[பிற்பகல் 6–20]

ஆதி திராவிட மக்களின்மீது இந்த அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகின்ற வகையில் இத்தகைய திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதுபோல மோட்டார் பொருத்தப்பட்ட 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்குவதற்கு 1,000 உறுப்பினர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ரிக்ஷா சங்கங்களை அமைத்து, 1,125 ரூபாய் உதவித் தொகை வழங்குவது என்பதன் மூலம் அவர்களது பொருளாதார வாழ்வுக்கு ஏற்றமிகு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்தியிருக்கின்ற இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

புதிதாகத் தொடங்கப்படுகின்ற 20 கால்நடை மருந்தகங்களில் ஒன்றை மதுரை மாவட்டம் ஓடைப்பட்டியில் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் இரண்டு ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளிக்க முன் வந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆறாவது திட்டத்தில் பாசனத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். நிதியாண்டில் 26.62 கோடி ரூபாய் செலவிடுவதன் மூலம் 20,500 ஏக்கர் பயனடைய வழி செய்திருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும். அவ்வாறு செய்து உணவு உற்பத்திக்கு வழி செய்து கொடுத்திருப்பதை நான் பாராட்டுகின்றேன்.

பாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதன் மூலமும், அதன் வாயிலாக நீரைச் சிக்கனப்படுத்துவதன் மூலமும் அதன் வாயிலாக அந்த நீரைப் புதிய பகுதிகளுக்கு விஸ்தரிப்பது என்ற கொள்கை வரவேற்கத் தக்க ஒன்றாகும். அந்த வகையில் என்னுடைய பகுதியில் லோயர் கேம்பிலிருந்து பெரியகுளம் வரையில் உள்ள ஆங்கிலேயர் காலத்திலே ஆய்வு செய்யப்பட்டு இன்றையதினம் அரசின் ஆய்விலே இருக்கின்ற 18 ஆம் கால்வாய்த் திட்டத்தினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் உற்பத்தியைப் பொறுத்த அளவில் 1,023 கோடி ரூபாய் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டு உற்பத்தித் திறனளவு 3,374 மெகாவாட் உயருகின்ற நிலை, மேலும் புதிதாக 30,000 கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கின்ற பணி இவைகள் தமிழக மின் வாரியம் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற செயல்களைக் குறிப்பதாகும்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் மதுரை மாவட்டத்தில் அரசுத்துறை சிமின்ட் ஆலை 32 கோடி ரூபாய் செலவில் வேடசந்தூர் பகுதியிலும், வடாற்காடு மாவட்டத்தில் 20 கோடி ரூபாய் செலவில் வெடிமருந்துகள் தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைக்கும் பணிகள் வரவேற்கத் தகுந்த அம்சங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தேனி அருகே பருத்தி அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு நூற்பாலை ஒன்றையும், பெரிய குளம் வட்டத்தில் கரும்பு அதிகமாக உற்பத்தியாவதால் அங்கே கரும்பு உற்பத்தியாளர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சாலை வசதிகளைப் பொறுத்தவரையில் 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி சாலைகளின் பராமரிப்பை அரசு 13 கோடி ரூபாய் செலவில் ஏற்றிருப்பது பாராட்டுவதற்குரியது. இத்தருணத்தில் தேனி ஒன்றியத்தையும், ஆண்டிப்பட்டி ஒன்றியத்தையும் இணைக்கின்ற வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில் 1,650 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர். இடைநிலைப் பள்ளிகளில் 500 தமிழாசிரியர்கள் அமர்த்தப்பட உள்ளனர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் ஏற்படுத்தவும், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவுவதும், காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க விரும்புவதும் பாராட்டப்பட வேண்டியவைகளாகும்.

அடிப்படை அத்தியாவசியமான பணிகளைச் செய்து முடிக்க 150 ஊராட்சி ஒன்றியங்களைத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்திருப்பது புதிய மாறுதல்களை நாட்டில் ஏற்படுத்துகின்ற பணியாகும்.

1981–82 ஆம் ஆண்டில் குடிநீருக்காக 24.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். இது தொடர்பாக தேனி அல்லி நகரம் நகராட்சிக்கும், சின்னமனூர் நகராட்சிக்கும் தற்சமயம் ஆய்விலுள்ள குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை உடனடியாகச் செய்து தரும்படி வேண்டுகிறேன்.

உலக வங்கிச் சத்துணவுத் திட்டத்தைக் குறிப்பாக அகில இந்தியாவிலேயிருந்தும் இந்தத் திட்டத்தை இன்றையதினம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் 33

ஒன்றியங்களுக்கு விஸ்தரிக்கின்ற பணிக்கு 8.54 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். அதனுடைய எதிர் கால வெற்றியின் அடிப்படையாக அந்தத் திட்டம், இன்றைய தினம் உலக வங்கி சத்துணவுத் திட்டத்தை அந்த உலக வங்கி உதவியோடு நடப்பதை அந்த கவர்னர் அவர்களே பாராட்டி யிருக்கிறார்கள்.

அதற்கடுத்தபடியாக, மது விலக்கு பற்றி என்னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். அன்றையதினம் இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்ற அரசியல் நிலை வந்தபொழுது காந்தியார் அவர்கள் பாகிஸ்தானைப் பிரிக்கக் கூடாது என்று இருந்தார். ஆனால் அரசியல் சூழ்நிலை காரணமாகப் பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது. அதைப்போல மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இந்தியை இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று கூறி வந்தார்கள். ஆனால் அவரே இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கக் கூடாது என்று, தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டார்கள். அண்ணா அவர்கள் கூட திராவிட நாடு என்ற அந்தக் கொள்கையிலிருந்து தன்னைத் தளர்த்திக் கொண்டார்கள். அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையைச் சிறிது தளர்த்தி யிருக்கிறார்கள்.

இங்கே பேசிய திரு. சித்தன் அவர்கள் நண்பரா எதிரியா என்று சொல்லுங்கள் என்று கேட்டார்கள். அவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன், உங்கள் நண்பன் யார்? உறவுக்குக் கை கொடுத்து, உயிருக்கு உலை வைக்கின்ற அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா என்பதை மட்டும் நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்? ஏனென்றால் எதிரிகளை நண்பர்களாகக் கருதுகின்ற மனப்பக்குவம் பெற்றவர்கள், பகைவர்களுக்கு அருளுகின்ற நல்லெண்ணத்தைப் பெற்றவர்கள் நாங்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

எனது தேனி தொகுதியில் சேர்மா நதி திட்டத்தையும், சோத்துப் பாறை வாய்க்கால் திட்டத்தையும், தேனி உப மின் நிலையத்தை 230 கே.வி. அளவிற்கு அபிவிருத்தி செய்யும் திட்டத்தையும், சாலைகள் மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளமையால், சாலைகள் செப்பனிடப்படுகின்ற திட்டத்தையும், குடிநீர்த் திட்டங்களையும், நிறைவேற்றி தர வேண்டும். பெரியகுளம் வருவாய்க் கோட்டத்தை—மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, பெரியகுளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொண்டு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகின்றேன். தமிழினத் தலைவர்— வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அரசு சார்பாக டாக்டர் நாவலர் அவர்கள் மூலம் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். வட நாட்டிலே வெள்ளத்தினால் பாதிப்பு பல கோடியாக இருந்தும் தென் நாட்டிலே வறட்சியால் பாதிப்பு பல கோடியாக இருந்தும் ஒருமைப்பாடு பற்றி கூப்பாடு போடுவோர் ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலையில் கங்கை காவிரி இணைய வேண்டுமென்று சொல்கின்ற நிலையில், வறட்சி, பொதுவாக, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இருக்கக்கூடிய இந்தச் சிக்கலான நேரத்தில், இந்தப் பட்ஜெட்டைக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

இந்தியாவிலே எல்லா திட்டங்களும் கடனிலே உள்ளன, நெடுஞ்சாலைக் கடன், மின்சாரம் கடன், வீட்டுவசதி வாரியம் கடன், சமூக நலம் கடன், பால்வளம் கடன், குடிநீர் கடன், குடிசை மாற்று வாரியம் கடன், இப்படி எல்லா திட்டங்களும் இன்றையதினம் கடனிலே இருக்கக்கூடிய சூழ்நிலையில் சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகளை முழுமையாக விழுங்கிக் கூட, இன்றைய இந்திய துணைக் கண்டம். கடனிலே மூழ்கி இருக்கிற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு பட்ஜெட்டைக் கொண்டு வந்திருப்பது, உண்மையிலே மிகச் சிறந்த ஒரு அம்சமாகும்.

இந்தியாவிலே மொத்தமாக பெறக்கூடிய அன்னியச் செலாவணி முழுமையும் பெட்ரோல் ஒன்றுக்கு மட்டுமே நாம் கொடுத்து விடத்தக்க வகையில்தான் இன்றைய இந்தியத் துணைக் கண்டமே இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு மாநில அரசு இதுபோன்ற ஒரு பட்ஜெட்டைக் கொண்டு வருவது மிகமிக நல்லதொரு பாராட்டத்தக்க விஷயமாகும்.

அதுமட்டுமல்ல—

"ஓர் தட்டிலே நெல்லும்
ஓர் தட்டிலே பொன்னும்
ஒக்கவிற்ற—கார் தட்டிய
பஞ்சத்திலும்—ஈகைக்கு
இதோ நானிருக்கிறேன்"

என மார் தட்டிய வள்ளல் என்று சொல்லத்தக்க வகையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிற பொழுது கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கஞ்சித்

தொட்டியை வைத்து, நாட்டிலே வறுமையைப் போக்க தமது கடமையைச் செய்தது என்பதனை யாரும் மறந்துவிட முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த வறட்சி, இன்று மட்டும் அல்லாமல், தொன்றுதொட்டு வந்து இருக்கிறது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. ஆனால். அதே நேரத்தில் இங்கே பேசிய ஒருவர் சொன்னார். "மின் துறைக்கு மூன்றில் ஒரு பங்கு தேவைதானா ? என்று. மின்துறை என்பதுதான் மிகவும் முக்கியமான ஒரு துறையாகும். ஒரு அரசிலே தொழில் தலை என்று சொன்னால், இதயம் கல்வி என்று சொன்னால், கண் செய்தித் துறை என்று சொன்னால், வாய் உள்ளாட்சித் துறையானால், கால் சமுதாயம் என்றால், கை நல்வாழ்வு என்றால், நுரையீரல் பாசனம் என்று சொன்னால், உயிர்தான் மின்சாரம். உயிரற்ற நிலையில் எந்தத் திட்டத்தையும் இயக்க முடியாது. ஆகவே, ஒரு நாட்டுக்கு மிக மிகத் தேவையாக இருக்கக் கூடியது மின்சாரம். அப்படிப்பட்ட மின்சாரத்திற்கு மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கியிருப்பது மிகப் பெரிய பிரச்சினை இல்லை. மின்சாரப் பூர்த்தி விழாவையே கொண்டாடியவர்கள் எந்த அளவிற்கு இந்த நாட்டு நிலைமையை விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர அதைப் பற்றி வேறு விமர்சனம் செய்வதை நம்மால் சிந்தித்துக் கூடப் பார்க்க முடியவில்லை. ஆனால், இங்கே பேசிய நண்பர் சித்தன் அவர்கள் இந்தியாவில் தமிழகத்தில்தான் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் அதிகம் என்று சொன்னார்கள். உண்மை அது அல்ல. தவறான கணக்கும், தகாத சீர்திருத்தங்களும் புரியாத புதிருக்கு சொல்லப்படும் தப்புக் கணக்குதானே தவிர, அது அல்ல. இந்தியாவில் $33\frac{1}{2}$ ஆண்டுகளில் $3\frac{1}{2}$ சதவீத அபிவிருத்திதான் இந்திய துணைக் கண்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், இங்கே பேசுகிற பொழுது, அவர்கள் நீ மத்திய அரசுக்கு நண்பனா, பகைவனா என்றார். நான் அவரைப் பார்த்துக் கேட்கிறேன். வரங்களே சாபங்களானால் தவங்கள் எதற்கு ? மலம் மூடத்தான் மலர் பறித்தேன் என்றால், குளிர் மலர்ச் சோலை ' கோ ' வென்று அழாதா ! என்று அவருடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, ஒரு நாட்டிலே நோயுற்ற வாழ்வு, செல்வச் செழிப்பு, உற்பத்திப் பெருக்கம், இன்பமான வாழ்க்கை, வாழ்க்கைக்கு உத்திரவாதம் இவைதான் தேவை. அதை உள்ளடக்குவதுதான் இந்த பட்ஜெட்.

இங்கே பேசிய நண்பர் இரகுமான்கான், இது ஒரு கணக்குப் பிள்ளை பட்ஜெட் என்றார். கணக்குப் பிள்ளை பட்ஜெட்தான் கணக்குப் பிள்ளை என்பது கணக்கு போட்டு சொல்லக்கூடிய பட்ஜெட் அதை யாரும் மறந்துவிடக் கூடாது.

இன்னொன்று மதுவிலக்கைத் தளர்த்தும்போதும் தாய்க்குலம் கண்ணீர் விடுகிறார்கள் என்கிறீர்கள். மதுவிலக்குச் சட்டம் கொண்டு வருகிறபொழுதும் கண்ணீர் என்று சொல்கிறீர்கள் என்று சொன்னார். இரண்டு கண்ணீர் எப்படி இருக்க முடியும் என்று சொன்னார்கள். வெற்றியிலே, மகிழ்ச்சியிலே வடிப்பது ஆனந்தக் கண்ணீர். துன்பத்திலே, துயரத்திலே வடிப்பது துன்பக் கண்ணீர். இன்றைய நிலையில் ஒன்றைச் சொல்கிறேன். எதிர்க் கட்சிகளின் பொறுப்பற்ற தன்மையால் இந்த நாட்டிலே மக்கள் வடிப்பதுதான் இரத்தக் கண்ணீர் என்று நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.

[பிற்பகல் 6—30.]

இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். மதுவிலக்கு என்று வருகிறபோது அதைப்பற்றி சரியான, முறையான நியாயமான நடவடிக்கை இல்லை என்று சொல்லுகிற வகையில் பலர் சொன்னார்கள். ஒருவர் சொல்லி இருப்பதாக நான் அறிகிறேன். புழக்கடைக் கதவைத் திறந்து வைத்துவிட்டு, மாடி வீட்டுக் கதவையும் திறந்து வைத்து விட்டு, மெயின் கேட்டை மட்டும் மூடி சாவியை பக்கத்திலே வைத்துவிட்டால் எப்படி இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். எந்தக் கதவையும் மூடவில்லை. எல்லா கதவுகளையும் திறந்து வைத்திருக்கிறோம். ஆனால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. திருடன் உள்ளே நுழைய மாட்டான். கேட்டிலே வாட்ச்மேன் இருக்கிறான். நாட்டிலே லீகல், இல்லீகல் என்று இருக்கிறது, மாரல், இம்மாரல் என்று இருக்கிறது. ஒரு ஆண் ஒரு பெண்ணைக் காதலித்துத் தாலி கட்டிக் கொண்டால் பர்மிஷன் கொடுத்தால் அவள் திருமணமாகி மனைவியாகிறாள். தாலி கட்டாமல் அனுபவிக்கிறான் என்று சொன்னால், விபச்சாரம் என்று பொருள். அப்படித்தான் இதுவும். சிகரெட் குடிப்பது தீங்கு என்று சொல்லுகிறோம். ஆனாலும் அனுமதிப் பதிப்பதற்காக நாம் அனுமதிக்கிறோம். புகையிலையையே குளோஸ் செய்துவிட வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. இதற்கு முன்னாலும் ஒரு பிரச்சினை வந்தது. அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு என்று. ஆனால் யாரும் சுடுகாட்டுக்குப் போய்விட வில்லை. அவ்வப்போது அரசியல் மாற்றத்திற்கேற்ப, தமது நிலையை மக்களுடைய கருத்துக்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்வது அரசியலிலே பெரிய விஷயம் இல்லை.

கடவுள் இல்லை என்று சொல்லுகிற வகையிலேதான் நாம் பெரியார் வழியிலே வந்திருக்கிறோம். ஆனால் ஆட்சிக்கு வந்தவர்கள் வந்தவுடன் எத்தனை கோவில்களை உடைத்துவிட்டோம்.

அதை மாற்றி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். கடவுள் இல்லை என்று சொல்லக் கூடியவர்களும் இருப்பார்கள். 6 கால பூஜை நடப்பதும் நடக்கும். எல்லோருக்கும் பாதுகாப்புத் தரத்தக்க வகையில் ஒரு ஆட்சியும் இருக்கும் என்பதுதான் அண்ணா அவர்கள் சொன்ன கருத்து. அவர் பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன், பிள்ளையாருக்கு நான் தேங்காயையும் உடைக்க மாட்டேன் என்று சொல்லத்தக்க வகையில்தான், அண்ணாவின் வழியிலே நாம் மதுவிலக்கைத் தளர்த்தி இருக்கிறோம்.

இன்னும் சொல்லப் போனால், ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட மதுவிலக்கை ஒத்தி வைத்தபோது இன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு பிரச்சாரப் படையை அமைத்தது என்பதை மறந்து விடக்கூடாது.

இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த பட்ஜெட் மிகமிக தேவையான ஒரு பட்ஜெட். யார் யாருக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று நம்புகின்றோமோ அதை எல்லாம் செய்து கொண்டுதான் வந்திருக்கிறோம். ஆனால் அதைப்பற்றி எல்லாம் சொல்லாமல் பேசுகின்றதைப் பார்க்கின்றபோது, விறகுக் கடையிலே தீ பிடித்தால் வீதி எல்லாம் எரியுமானால், ஊதுவத்திக் கடையிலே தீ பிடித்தால் ஊரெல்லாம் மணக்குமா என்பதை காங்கிரஸ் நண்பர்களும், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் அறிய வேண்டுகிறேன். இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த பட்ஜெட்டிலே காந்தி எப்படி மகாத்மாவாக ஆனாரோ, கண்ணன் எப்படி பரமாத்மா ஆனாரோ அது போலத்தான் வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினால் தமிழகத்து மக்களால் இராமச்சந்திர பரமாத்மா என்று சொல்லுகிற வகையில் உயர்ந்து வருகிறார். காந்தி அடிகள் அவர்கள், கத்தியின்றி இரத்தமின்றி, யுத்தம் ஒன்று வருகிறது என்ற கொள்கையை ஏற்று, மற்றவர்கள் போராடிப் பெறவேண்டும் சுதந்திரம் என்று சொல்லுகின்ற நேரத்தில் வாதாடி நல்ல நிலையில், அமைதியான முறையிலே, அகிம்சா முறையிலே வரவேண்டும் என்று புரட்சியைச் செய்தார். ஆகவே சாதாரண காந்தி, மகாத்மா காந்தி ஆனார். கண்ணன், ஆயர்பாடிக் கண்ணன் அந்த நேரத்தில் மிகப் பெரிய ஒரு இன்டஸ்டிரியை கோகுலத்தை உருவாக்கினான். கோவிந்தன் கோபாலன் என்ற வம்சாவழியைக் கொண்டு வந்ததாக சரித்திரத்திலே இருக்கிறது. ஆதலால், தாய்வழியிலே இல்லாமல் தந்தை வழியிலேதான் அந்த அமைப்பு இருக்க வேண்டும் என்பதை மாற்றி அமைத்துக் காட்டிய காரணத்தினால்தான் கண்ணன் பரமாத்மா ஆனான். இன்றையு தினம் மதுவிலக்குப் பிரச்சினை

மட்டுமல்ல. வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அவைகளை எப்படி அணுக வேண்டுமோ அப்படி அணுகி குடிப்பவர்களும் பாதுகாப்பாகக் குடிக்க வேண்டும், குடிக்காதவர்களும் குடிக்கக்கூடிய வரியைச் செலுத்தாமல் அவர்களையும் பாதுகாக்க வேண்டும் என்று, இப்படிப்பட்ட நிலையில் நாட்டிலே இருக்கக்கூடிய யதார்த்தமான உணர்வுகளை பகிர்ந்து கொள்ளத் தக்க வகையில் கொண்டு வந்திருப்பதை இந்த பட்ஜெட்டினால் வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் இராமச்சந்திர பரமாத்மாவாகிறார் என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் நோக்கி வாடும் பயிர் எல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி ' என்கிற குறளுக்கு ஏற்ப பயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன. மக்கள் எல்லாம் புரட்சித் தலைவரின் முகத்தை நோக்கி வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இந்த நெருக்கடியான நேரத்தில் வாடுகின்ற பயிருக்கு மழை போன்று நல்லதொரு வரவு செலவுத் திட்டத்தை மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

இந்தியக் கூட்டாட்சி அமைப்பு முறையில் மாநிலத்தின் அதிகாரங்கள் கொஞ்சம் . கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப் போல் மாநகராட்சி மன்றங்களாக மாற்றப்பட்டு வருகின்ற சூழ்நிலை இந்திய வரலாற்றில் இருக்கிறது. இந்தத் திட்டத்தை மாற்றி மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை, கூடுதலான வசதிகளைப் பெற இந்தத் தமிழக அரசு எடுத்துள்ள முயற்சியை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை.]

மத்திய அரசு கோதுமைக்கு விலையைக் கூட்டி கொடுப்பதை போல் தமிழகத்திலே உள்ள அரிசிக்கும் கூடுதலான விலை கிடைக்க இந்த அரசு பாடுபட வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகள் செய்வதற்கு நிதி நிலையில் ஒரு கட்டுப்பாடு அல்லது பற்றாக்குறை சூழ்நிலை இருந்தாலும், அதைப் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றுவோம் என்ற கருத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் டாக்டர் நாவலர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அந்த முறையிலே அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், காஞ்சீபுரம், காஞ்சீபுரம் ஒன்றியம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அனைத்து ஏரிகளும் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் இருக்கின்றன. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஏழை விவசாயிகள் வாழ்வு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே நான் இந்தத் தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது எல்லாம் அந்தப் பகுதியையும் வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுகிறேன். அதற்கான வகையில் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்கிற நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நகரங்களுக்குப் போதுமான அளவிற்கு உணவுப் பொருள்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதுவும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கிராமங்களில் உணவுப் பொருள்கள் பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த உணவுப் பொருள்கள் நியாயமான முறையில், நியாயமான விலையில் கிடைக்க கூட்டுறவுக் கடைகள் மூலம் அந்தக் கிராமங்களில் விநியோகிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் நவீன பண்ணைகளை—வேளாண்மைப் பண்ணைகளை செயல்படுத்த இருக்கின்ற இந்த அரசை நான் உளமாறப் பாராட்டுகின்றேன். இந்தத் திட்டத்தைக் கூடிய விரைவில் செயல்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தை இந்த அரசு நல்ல முறையில் நிறைவேற்றி வருவதற்காக நான் பாராட்டுகிறேன். எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தது போல், ஏழை சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் சங்கங்கள் அமைத்து மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களைத் தந்து கூட்டுறவு முறையில் அவர்களுக்கு உதவி செய்வதை நான் பாராட்டுவதோடு, அதற்காக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களில் கால்நடை தீவிர வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த இருப்பதை நான் என்னுடைய பகுதி மக்களின் சார்பில் பாராட்டுகிறேன். தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையில் பாசன ஏரிகளை நல்ல முறையில் பராமரித்து, வறட்சி நிவாரணப் பணிகள் மூலம் அவற்றை நவீனமயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுவதை நான் வரவேற்கிறேன். ஏனெனில் வறட்சி இருக்கும் நேரத்திலேதான் இந்த

வறட்சிப் பணிகளைத் தீவிரப்படுத்தி இந்த நேரத்தில்தான் ஏரிகளையும், கால்வாய்களையும் நல்ல முறையில் சீர்படுத்தி விவசாயிகளுக்குப் பயன்படும்படி செய்ய முடியும். அந்தத் திட்டத்தை இந்தச் சர்க்கார் செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற ஒரு மிகப் பெரிய பிரச்சினை மின்சாரத் தட்டுப்பாடு ஆகும். இந்த மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக இந்த அரசு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நெய்வேலி நிறுவனம் தருகின்ற மின்சாரத்திற்குக் கூடுதலாகக் கட்டணம் கொடுப்பதைத்தவிர்த்து குறைந்த விலையில் வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி பெற அனைத்து நடவடிக்கைகளையும், தமிழக அரசு செய்து வருகிறது. எனது தொகுதியான காஞ்சீபுரத்தில் ஓரிகை என்ற இடத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் தொழிற் பேட்டை ஒன்று அமைத்தார்கள். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அந்தத் தொழிற் பேட்டை இருக்கிறதா இல்லையா என்ற சூழ்நிலையில் அது இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள், அந்தப் பகுதியை பின் தங்கிய பகுதியாக அறிவித்து, அந்தப் பகுதியிலே தொழிற்பேட்டை வளர்வதற்கான ஏற்பாடுகளை அமைத்துத் தரவேண்டும் என்று என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அது வசதிப்படவில்லை என்றால் அரசின் 'சிப்காட்' நிறுவனத்தின் மூலமாக தொழிற்சாலைகள் அமைக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6—40)

எப்போதுமே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் கைத்தறி நெசவாளர்கள்பால் அன்பும் ஆதரவும் உள்ளவர்கள். அந்த வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கு 20 ஆம் நம்பர் நூல் முதல் 40 ஆம் நம்பர் நூல் வரையில் குறைந்த விலையில், நியாய விலையில் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதைப் போல 60 முதல் 80 ஆம் நம்பர் நூல்களையும் வழங்க இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்தால் நெசவாளர்களுக்கு அது ஒரு நல்ல

வாய்ப்பாக இருக்கும். அதோடு கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் அனைத்து நூல்களையும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெசவாளர்களுக்கு விநியோகம செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள் இருப்பதுபோல நெசவாளர்களுக்கு என்று தனியாக மாவட்ட கூட்டுறவு வங்கிகளைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி, நம்முடைய அரசு மற்ற அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு முன்னோடியாக விளங்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலுள்ள கோவாப்டெக்ஸ் நிறுவனத்திற்குக் கூடுதல் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கி இருக்கிற சரக்குகளை வாங்க பஞ்ச நிவாரண நடவடிக்கையாகக் கருதி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் வேண்டி விருமபிக் கேட்டுக் கொள்கிறேன்.

சேதுசமுத்திரம் திட்டம் நம்முடைய தமிழகத்தின் திட்டங்களிலே மிகவும் முக்கியமானது. அந்தத் திட்டம் உடனடியாக செயல்படுத்தப்பட மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அதற்கு என்ன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் சரித்திர பிரசித்தி பெற்ற ஒரு நகரம். வரலாற்று சிறப்புமிக்க இந்த நகரத்திற்கு சுற்றுலாப் பயணிகள் தாராளமாக வந்து செல்ல வசதியாக சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதியும், Guided Tourist Bus Service-ம் மற்ற வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக, அண்ணா அவர்கள் நாடகம் நடத்தி, நிதி சேர்த்து, காஞ்சிபுரத்திலே பச்சையப்பன் கல்லூரியை ஏற்படுத்தினார்கள். அந்தக் கல்லூரி உருவாக்கப்பட்டு இன்றைக்கு 25 ஆண்டுகள் ஆகிவிட்டன. அங்கே புகுமுக வகுப்பும், சாதாரண பட்டப் படிப்பும் தவிர இதுவரையில் வேறு எந்தவிதமான வகுப்பும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் அதற்குப் பின்னாலே ஆரம்

பிக்கப்பட்ட கல்லூரிகளில் வணிகவியல் பட்டப் படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்புகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அரசின் அதிகாரத்திற்குட்பட்ட அந்தக்காஞ்சி பச்சையப்பன் கல்லூரியிலே உடனடியாக வணிகவியல் பட்டப் படிப்பும், முதுகலைப் பட்டப் படிப்புகளும் ஆரம்பிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற மாவட்டங்களில் இருப்பதைப் போல மாலை நேரக் கல்லூரி காஞ்சிபுரத்தில் இல்லை. செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகர் காஞ்சிபுரம். அந்தக் காஞ்சி நகரில் மாலை நேரக் கல்லூரி அமைக்கப்பட்டால் அங்கே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அங்கே ஒரு மாலை நேரக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சி நகரில் மருத்துவ மனையில் போதுமான மருத்துவ வசதியும் இல்லை. நிறைய நோயாளிக்ள் வருகிற காரணத்தால் கூடுதல் கட்டிடம் கட்டி, அந்தக் மருத்துவ மனையை விரிவு படுத்தி, பல்வேறு வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு அளிக்கின்ற உதவியும், கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதும், அனைத்துக் கிராமங்களுக்கும் பஸ் வசதி ஏற்படுத்தும் திட்டமும் வரவேற்கத் தக்கது என்று கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு கி. சட்டநாத கரையாளர் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1981–82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது ஒருசில வார்த்தைகள் சொல்ல அவாவுடையேன்.

இந்த நிதிநிலை அறிக்கை 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டின் பகுதியாகும். ஆனால் இந்தத் திட்டமோ நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலே அமைந்திருக்கிறது. நிதி ஒதுக்கீடு 'காட்கில் ஃபார்முலா' அடிப்படையிலே நமக்கு வழங்கப்படுகிறது. இதிலே அநீதி நிகழ்ந்துள்ளது. கிடைக்க வேண்டிய பங்கு நமக்குக் கிடைக்கவில்லை என்று இதற்கு முன்பு இந்த அவையிலே அரசுத் தரப்பிலே விவரம் கொடுக்கப் பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

6ஆவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த அவைமுன் வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சாதாரணமாக ஒரு மரபு உண்டு. இங்கே, இந்த அவை முன்னால் அதுபற்றிய ஒரு வெள்ளை அறிக்கை அல்லது An approach to the plan வைத்து, அந்த அடிப்படையிலே விவாதிப்பது ஒரு மரபு. ஏனோ சமீப காலத்திலே இது நடந்ததாகத் தெரியவில்லை. இந்த சந்தர்ப்பத்திலே ஒன்றை வேண்டிக் கொள்கிறேன். 5ஆவது திட்டத்தை அவை முன் வைத்து அவையில் விவாதிப்பதற்கான ஒரு வாய்ப்பைத் தரவேண்டும். அப்போதுதான் அகில இந்திய ரீதியில் இந்தத் திட்டம் எந்த அளவுக்கு நமக்கு நன்மை-தீமை பயத்துள்ளது: இந்தத் திட்டத்திலே என்னென்ன அமைந்துள்ளது என்பதைப் பற்றி சாங்கோபாங்கமாக அவையின் உறுப்பினர்கள் அவரவர்களின் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கிடைக்கும். அந்த வகையிலே என்னுடைய கருத்தைத் தெரிவித்துவிட்டு இந்த நிதிநிலை அறிக்கையினை அணுகுகிறேன்.

நிதிநிலையைப் பற்றிச் சொல்லுகிறபோது நமது மாநிலத்தின் பொருளாதார நிலைமையும், அகில இந்திய பொருளாதார நிலைமை —இவை எந்த அளவுக்கு நம்மைப் பாதிக்கின்றது என்பதைப் பற்றிச் சொல்ல அவா உறுகிறேன். மத்திய பட்ஜெட்டிற்குப் பிறகு மத்திய பட்ஜெட்டின் அடிப்படையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. 1980—81 ஆம் ஆண்டில், அதாவது நிகழ்ந்துகொண்டிருக்கும் ஆண்டிலே அகில இந்திய ரீதியிலே பற்றாக்குறை 1975 கோடி. அதிலே பாண்டு பெறுவதன் மூலம் அதாவது பிளாக்மணி பாண்டு மூலமாக 200 கோடி ரூபாய் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இண்டர்நேஷனல் மானிட்டரி பண்டிலே 534 கோடி வரும் என்று கணக்கிலே சேர்க்கப்பட்டுள்ளது. இதைக் கணக்கிலே சேர்க்காமல் பார்த்தால்—ஏனெனில் இந்தப் பணம், எதிர்பார்க்கின்ற பணம்; வராது என்பது திட்டவட்டமாகத் தெரிகின்றது—இந்த நிலையிலே 2709 கோடி ரூபாய் நிகரப் பற்றாக்குறையாக இந்த ஆண்டு அமையும். இது இதற்கு முந்தைய ஆண்டான 1979—80-ஆம் ஆண்டின் பற்றாக்குறையோடு சற்றேறக்குறைய சரிசமமாக இருக்கின்றது. இனி அடுத்து வரக்கூடிய 1981—82 ஆம் ஆண்டுக்கு வருவோம். இதிலே தீர்வை இனத்திலே மட்டும் 271 கோடி விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இதைப் பார்க்கிலும் 10 மடங்கு அதிகமாக வரி நமது தலையிலேதான் விழும். பெட்ரோல் விலையினை ஏற்கெனவே கூட்டியதன்மூலம் 1,180 கோடி கடனாக நம் தலையிலே சுமையாக விழுந்திருக்கின்றது. இரயில்வே கட்டணங்களை உயர்த்தியதன் மூலம் 356 கோடி நம் தலையிலே விழுந்திருக்கின்றது. உருக்கு; நிலக்கரி ஆகியவற்றின் விலையேற்றத்தின் மூலம் 850 கோடி

சுமை விழுந்திருக்கின்றது. இவை அத்தனையையும் சேர்க்கும்போது இதனால் 2657 கோடி பட்ஜெட்டில் டெஃபிசிட் ஏற்படுகின்றது.

ஆகவே, இரண்டாண்டுகளின் சுமையை மட்டும் கணக்கில் எடுத்துப் பார்த்தால் 5,366 கோடி கம்மியான பட்ஜெட்டாக வருகின்றது. இந்த நிலையிலே நமக்கு விழுகின்ற பளு, சமீப காலத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையிலே தமிழ்நாட்டின் மீது விழுகின்ற பளு 383 கோடியாகும். இவ்வளவு பளு தமிழகத்து மக்களின் தலையிலே சுமத்தப்படுகின்றது. இந்த நிலையிலேதான் நாம் வறட்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த வறட்சி நேரத்திலே நம்முடைய பொருளாதாரம் மேலும் எந்த அளவுக்குச் சீர்குலைந்து போய் இருக்கின்றது என்பதையும் தயவுகூர்ந்து நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையிலே நமது வருமானம் ஒரு ஆண்டுக்கு 1,584 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. அகில இந்திய ரீதியிலே உள்ள புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே கொடுக்கப்பட்ட கணக்கை, இண்டியன் ஸ்டேட்டிஸ்டிக்கல் ரிப்போர்ட்டிலே கொடுக்கப்பட்ட கணக்கை இங்கே இந்த அவைக்குத் தருகிறேன். விவசாயத்தைச் சார்ந்த அதாவது அக்ரோ பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் என்ற அடிப்படையிலே 600 கோடிக்கும் அதிகமான ரூபாய் இதிலே நட்டம் ஏற்பட்டுள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு நட்டம் என்று கணக்கெடுத்து நிகர நட்டம் இந்த ஆண்டிலே தமிழகத்திற்கு 1.200 கோடி வரும் என்று கணக்கிலே இருக்கின்றது. ஆக இத்தனையையும் கணக்கிலே எடுத்துப் பார்க்கின்றபோது தமிழகம் எந்த அளவுக்கு பொருளாதாரத்திலே சிக்கலான நிலையிலே இருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[பிற்பகல் 6-50]

இது அத்தனையும் போதாது என்று நமக்கு வருமானம் கிடைக்கக் கூடிய விற்பனை வரி இனங்களை எக்சைஸ் தீர்வையாக மாற்றிய காரணத்தால் மேலும் இழப்பு நேர்ந்துள்ளது. ரிசர்வ் பேங்க் ஆப் இண்டியாவின் புல்லட்டினிலே மாநில அரசின் நிதி நிலையைப் பற்றி ஒரு குறிப்பு கொடுத்துள்ளார்கள்.

"Finances of State Government during 1980-81, as reflected in their Budgets. Sales Tax, inclusive of Central Sales Tax accounted for 2/3's rise in the States' own tax revenues."

என்று சொல்லப்பட்டுள்ளது. ஆக இப்படி மூன்றில் இரண்டு பங்கு நமக்கு உபரியாக கிடைக்க வேண்டிய வருமானம் இதனால் பெரும் அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது.

நாம் அடுத்தபடியாக காட்கில் விதிமுறைகளைப் பார்ப்போமேயானால், 5 ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அளிக்கும் நிதி உதவியை திட்டக்குழு நிர்ணயிக்கும் கீழ்க்கண்ட அடிப்படையில் கொடுக்கிறது. அதிலே 60 சதவீதம் மக்கள் தொகைக்கு, 10 சதவீதம் மாநிலம் நிதி திரட்டுவதற்கு, 10 சதவீதம் மத்திய திட்டக் குழுவின் ஆலோசனைப்படி, 10 சதவீதம் இந்திய சேதத்தின் சராசரி வருமானத்தின் அடிப்படையிலே, 10 சதவீதம் முந்தைய திட்டத்தின் அடிப்படையிலே கொடுக்க வேண்டும் என்று காட்கில்" முறை வகுக்கப்பெற்றிருக்கிறது.

இந்த முறை நமக்குப் பெரிதும் பாதகம் செய்யக் கூடியதாக இருக்கிறது. 60 சதவீதம் மக்கள் தொகை என்ற அடிப்படையிலே நாம் பேமிலி பிளானிங் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றினால், நமக்கு லாபம் எதுவும இல்லை. நட்டம் தான் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இந்தியாவில் மொத்தம் உள்ள எண்ணிக்கையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கையிலும், அகில இந்திய ரீதியில் சராசரி வருமான வரம்பின் அடிப்படையிலும் பார்த்தால், நம் மாநிலத்திற்கு, நிதி ஒதுக்கீடு கிடைத்தால் நாம் லாபம் அடையவாய்ப்பிருக்கிறது. ஆனால் காட்கில் முறையில் கணக்கிட்டால் நம் மாநிலம் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில்தான் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த அவையிலே முன்பு குறிப்பிட்டதைப் போல, நாம் ஒரு குளோரிபைடு முனிசிபாலிட்டீஸ் என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம் என்று வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேல்.

இந்த நிதிநிலை அறிக்கையிலேயே மிகச் சிறந்த அம்சம் மின்சாரத்திற்கு, அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ததுதான். மூன்றில் ஒரு பங்கை மின்சாரத்திற்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்காக இன்னும் அதிகமாக ஒதுக்கியிருந்தாலும் கூட நான் அதை வரவேற்பேன். ஏனென்றால் மின்சார அடிப்படையில்தான், ஒரு தேசத்தின் வளர்ச்சியே இருக்கிறது. ரஷ்ய புரட்சி நடந்த காலத்திலே லெனின் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். சோஷலிசம் வரவேண்டுமானால், சோவியத் தத்துவத்துடன் எலெக்ட்ரிசிட்டியும் சேர்ந்து—சோஷலிச தத்துவம்

வரும் என்று சொன்னார்கள். ஒரு தேசத்தின் தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிக மிக தேவை என்று சொன்னார்கள். ஆகவே எந்த அளவிற்கு அதிகமாக மின்சாரத்திற்கு நிதி ஒதுக்கியிருந்தாலும் அது தேசத்தின் வளர்ச்சியின் அடிப்படையாகவே அமையும் என்று கருதி, அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

ஆனால், தற்போது இருக்கின்ற நிலைமையை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கல்பாக்கம் அனல் மின் நிலையம் சமீப காலத்திலே வந்துவிடும் என்ற அடிப்படையிலே கணக்கிட்டிருக்கிறார்கள், சில தினங்களுக்கு முன்பு Dr. H. N. Sethna, Chairman, Atomic Energy Commission has stated 'that effort is being made to obtain the necessary heavy water by the middle of next year' என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, அது எப்பொழுது வரும் என்ற கேள்விக்கு, அடுத்த ஆண்டு மத்தியிலே வரலாம் என்று நிச்சயமாக வரையறுத்துச் சொல்ல முடியாத நிலையில் சொல்லியிருக்கிறார்கள். அது ரஷ்ய அரசின் உதவியோடுதான் வர முடியும் என்ற நிலையில் இருக்கிறது. அமெரிக்க அரசின் உதவி கிடைக்காது என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. ஹெவி வாட்டர் வந்தால்தான் அதை செயல்படுத்தக் கூடிய நிலையிலே இருக்கிறோம்.

அடுத்ததாக, அனல் மின் நிலையத் திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆனால் அதற்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதுதான் மிகமிகக் கஷ்டமாக இருக்கிறது. நிலக்கரி பற்றாக்குறை அதிக அளவில் இருக்கிறது. நித்திய கண்டம் பூரண ஆயுள் என்று சொல்லக் கூடிய தன்மையில்தான் தினம் தினம் வருவதும், தினம் தினம் ஒரு வழியாக காலத்தைக் தள்ளுவதுமான சூழ்நிலையில் இருக்கிறோம். இது மிக மிக ஆபத்தான பொருளாதார நிலையை உருவாக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, மின்சாரத்தைக் குடிசைகளுக்கு வழங்குவது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மிக மிக நல்ல திட்டங்களில் ஒன்று. அதை நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டம் தொடங்கியதிலிருந்து ஒன்றரை ஆண்டுகளுக்குள் 2.7 இலட்சம் குடிசைகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை இன்னும் ஒரு கிராஷ் புரோக்கிராமாக வைத்து, எந்த அளவிற்கு விரைவாக குடிசைப்பகுதிகளுக்கு அதுவும் தமிழ்நாட்டில் இருக்கும் குடிசைப்பகுதிகள் அனைத்திற்கும் மின் ஒளி கிடைக்கும் வகையில் செயல்படுத்த வேண்டுமோ அந்த அடிப்படையில் செய்தால் மிக நல்லது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கி. சட்டநாத கரையாளர்] [1981 மார்ச் 28

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி நான் அதிகமாகச் சொல்வதற்கில்லை. இந்த நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு மிகப்பெரிய ஒரு திட்டம் அமைந்தாலன்றி நாம் இன்றைக்கு இந்நிலையை சமாளிக்கமுடியாது. குறிப்பாக சேதுசமுத்திரத்திட்டம் போன்ற மிகப்பெரியதொரு திட்டத்தை செயல்படுத்தினால் மட்டும்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு சமாளிக்க முடியும். அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதன்மூலம் நம் பொருளாதாரத்தைச் சீர்திருத்த முடியும். இலங்கையைச் சுற்றிச் செல்லக்கூடிய கப்பல்கள் இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் நடுவில் செல்லக்கூடியதொரு வாய்ப்பை சேதுசமுத்திரத்திட்டம் அளிக்கும். இந்தச் சேதுசமுத்திரத் திட்டம் பற்றி நீண்ட நெடுநாட்களாகச் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்தே திரும்பத்திரும்ப சொல்லி வந்தும்கூட இன்றுவரை அந்தத் திட்டம் சம்பந்தமான ஆக்கபூர்வமான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை நான் மிகவும் வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, மீன் வளம், பல்வேறு அம்சங்களில் பல்வேறு திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நான் இந்த மீனவர்களின் அவலநிலையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டு தூத்துக்குடி பகுதியிலிருந்து மட்டும் 73 பேர்கள் கடலில் சென்றவர்கள் காணாமல் போய்விட்டார்கள். அவர்களில் எத்தனை பேர்கள் இறந்தார்கள், எத்தனை பேர்கள் தைவான் கப்பலில் பிடிபட்டவர்கள், சிலோனில் தஞ்சம் அடைந்தவர்கள் அல்லது சிறைக்குச் சென்றவர்கள் என்று தெரியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவெனில், கடலில் மீன் பிடிக்கச் செல்பவர்கள் காணாமல் போய்விட்டால் 'ரெஸ்க்யூ ஆப்பரேஷன்' செய்து நிச்சயம் அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் அதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன. முன்பணமாக ரூ. 400 கட்டவேண்டும் என்ற விதி இருக்கிறது. நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போனவர்களின் தாய், தந்தை அல்லது மனைவிமார்களில் எவ்வளவு பேர்களுக்கு இந்தப் பணத்தை கட்ட முடியும் என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட ஒரு விதி இல்லாமல், அந்த விதியை எடுத்து விட்டு காணாமல் போனவர்களைப் பாதுகாப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடலில் சென்றவர்கள் யார்? யார் யார் காணாமல் போய்விட்டார்கள் என்பது பற்றி தெரிய முடியாத ஒருநிலையும் இருக்கிறது. ஆகவே ஒரு ரெஜிஸ்டர் வைத்துக்கொண்டு யார் யார் கடலில் மீன் பிடிக்கச் சென்றார்கள் என்பதைக் கணக்கெடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் யார் யார்

1981 மார்ச் 28] [திரு. கி. சட்டநாத கரையாளர்]

கடலில் சென்றிருக்கிறார்கள், யார் யார் திரும்பி வரவில்லை என்று தெரிய முடியும். கட்டுமரம், போட், லாஞ்ச் இவற்றில் செல்வதற்கு முன்பு பதிவு செய்து கொண்டு யார் யார் சென்றிருக்கிறார்கள் என்பதற்கான கணக்கை வைத்து இருக்கவேண்டும்.

வேலையில்லாதவர் 14 இலட்சம் மக்கள் இன்று நம் மாநிலத்தில் இருக்கிறார்கள். "கரீபி ஹட்டோ" என்ற கொள்கை அடிப்படையில், தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக மத்திய நடப்பாண்டு பட்ஜெட்டில் மூன்று கோடியே அறுபத்தெட்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு என்ன கிடைக்கும்? இந்த இனத்திற்காக மத்திய அரசு தன் பட்ஜெட்டில் 160 கோடி ரூபாய்தான் ஒதுக்கியுள்ளது. அதனால் இந்த ஆண்டு நமக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள்? கழிந்த ஆண்டு ஒதுக்கியதில் பாதிதான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக, கிராமப்புற சீர்திருத்தத்திற்காக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கும் தொகை பாதியாக குறைக்கப்படும் நிலைதான் இருக்கிறது. இதனால் குறைந்த அளவில் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும்.

வரி விதிப்பை எடுத்துக்கொண்டால், சென்னை நகரில் விற்பனை வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைத் திருமணங்களுக்கு விதித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஐயாயிரம் ரூபாய்க்கு அதிகமாக செலவு செய்யக்கூடிய திருமணங்களுக்குத் தீர்வை விதிக்கலாம். சென்னையில் நடக்கக்கூடிய திருமணங்களைப் பார்த்தால் விழாக்கள், மாநாடுகள் கெட்டது கேடு. நோட்டுப் புத்தகங்களைப்போல் இன்று அழைப்பிதழ்கள் அனுப்புகிறார்கள். ஒரு அழைப்பிதழுக்கு ரூபாய் 15, ரூபாய் 20 செலவாகும். அது மாத்திரமல்ல. அங்கு போடக்கூடிய உணவைப் பார்த்தால் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கொடுக்கக்கூடியது போல் கொடுக்கிறார்கள். இப்படி கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்கள் நடத்துகிற விழாக்களுக்கு லக்ஸ்ஸரி டாக்ஸ் என்ற அடிப்படையில் ஒரு தீர்வை விதிக்க வேண்டும். ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் அறைகள் ஒதுக்கி திருமணங்கள் நடக்கின்றன. அதற்கும் வரி போடுங்கள். இந்த விற்பனை வரியால் ஏழை மக்கள்தான் கஷ்டப்படுவார்கள். அவர்கள் தலையில் கை வைக்காதீர்கள்.

[இரவு 7—00]

கடைசியாக, மதுவிலக்கைப் பற்றிச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். மதுவிலக்கைத் தளர்த்துவதாகச் சொல்லிக் கொண்டு, தயவுசெய்து அரைக் கிணறு தாண்டாதீர்கள். இங்கும் இல்லை; அங்கும் இல்லை என்ற நிலையை

ஒழிக்க வேண்டும். மது எங்கும் நிறைந்திருக்கிறது ; அது இல்லாத இடமே இல்லை. நமது காவல் துறை நடத்துகிறார்களா, அல்லது காவல்துறை அதைக் கட்டுப்படுத்துகிறார்களா என்பதே ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. ஊருக்கு ஊர் குடிப்பதற்கு அமைப்புக்கள் இருக்கின்றன. குடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைக், காவல் துறையினர் பராமரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஊக்குவிக்கிறார்கள் என்ற நிலையில்தான் காவல் துறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. பிளவர் பஜார் போலீஸ் ஸ்டேஷனுக்கு மாதத்திற்கு ரூபாய் 25,000 வருவதாகச் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் எவ்வளவு தொகை இப்படி வருகிறது என்று என்னால் சொல்ல முடியும். எந்தப் போலீஸ் ஸ்டேஷனில் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கப்படுகின்றது என்பதையெல்லாம் சொல்லலாம். இந்த நிலையில் சமுதாயத்தில், சமூக விரோதிகளுக்கு கிடைக்கக்கூடிய வருமானம் பெரும் பணம் அவர்களுக்குப் போவதைத் தவிர்த்து, மதுவிலக்கை பூராவாக ரத்து செய்து ஏற்கெனவே இருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் இருப்பதைப்போல் செய்தால், நல்லது. நிதி அமைச்சர் அவர்கள் நிதி கேட்டார்கள். நாமும் நிதியைக் கேட்போம். இங்குள்ள அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் கோடி ரூபாயாவது கொடுக்க முடியும். எங்கள் தொகுதியிலே மக்கள் வாழ பணிகளைச் செய்ய முடியும். 150 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகின்றதை, இந்தச் சமூக விரோதிகளுக்கும், போலீஸ்காரர்களுக்கும் கொடுக்காமல் மக்களுக்குக் கிடைக்கச் செய்யுங்கள் என்று பணிவோடு மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டு அமர்ந்து கொள்கிறேன். நன்றி.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், என்னுடைய தொகுதியாகிய ஒட்டன்சத்திரம் பெருமக்கள் சார்பிலும் இங்கே சில கருத்துக்கள் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கடந்த சில தினங்களாக இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசிய, குறிப்பாக பிரதான எதிர்க் கட்சியைச் சேர்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்களும், இந்திரா காங்கிரஸ் 'கட்சியைச் சார்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்களும் இந்த நிதி நிலை அறிக்கையை ஒரு அவசர கோலத்தில் தயாரிக்கப்பட்டது என்றும், இது ஒரு '' எம்டி '' பட்ஜெட் என்றும், இன்னும் பலவிதமாக வர்ணித்தார்கள். ஆனால், இது அவர்களுடைய உள்ளத்தின் பிரதிபலிப்பைக் காட்டுகிறதே தவிர, நிதி நிலை அறிக்கையின் உண்மையான தன்மைகளை அவர்கள் பிரதிபலிக்கவில்லை.

சுதந்திரம் அடைந்து 30 ஆண்டு கால நிர்வாகத்திலே அவசர கோலத்திலே, கணக்குப் பிள்ளை வரவு-செலவுத் திட்டம் போலவும், கானல் நீராகவும், எம்டியாகவும் தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை நிலைமையை மாற்றி, கடந்த 3 ஆண்டு காலமாக தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகள், சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற, வாடி வதங்கி, வறட்சியாலே, வறுமையாலே பாதிக்கப்பட்ட மக்களுடைய ஏற்றத்திற்கு ஒரு வழி காணக்கூடிய முறையிலே, மறுமலர்ச்சி திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையிலே தமிழக அரசு தாக்கல் செய்திருப்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. குறிப்பாக, நகரங்களிலே நாகரீக முதிர்ச்சி, நகரங்களிலே பொருளாதார வளர்ச்சி, நகரங்களிலே தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்ற நிலைமையில், நகரங்களிலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களோடு, கிராமங்களிலே வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்கள், நகரத்திலே இருக்கின்ற மக்களோடு அவர்கள் போட்டி போடக்கூடிய நிலையிலே, நாகரீக முதிர்ச்சி பெற்று, அறிவு வளர்ச்சி பெற்று, தொழில் துறையிலே அவர்கள் வளர்ச்சி பெற்றவர்களாக, அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே, அவர்களுடைய வாழ்க்கையிலே முன்னேற்றம் காணவேண்டுமென்ற நோக்கத்தோடு, கடந்த 3 ஆண்டுகளாக கிராம மக்களுக்கு இந்த அரசு நல்ல பல திட்டங்களை உருவாக்கி, அவர்கள் முன்னேற்றத்திற்காக, அவர்களுக்கு ஏற்றாற்போல், அதற்கான திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதை ஏழை எளிய பாட்டாளி மக்கள் உளமாறப் பாராட்டுகிறார்கள். அந்த வகையில், நெசவாளர்களுக்கு, ரிக்ஷா தொழிலாளர்களுக்கு, மீனவர்களுக்கு, மரமேறும் தொழிலாளர்களுக்கு, வேளாண்மையிலே ஈடுபட்ட கோடிக்கணக்கான மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே இருக்கக்கூடிய வறுமையை, வறட்சியை நீக்குகின்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, வேளாண்மையிலே ஈடுபட்டுள்ள மக்களுக்கு வேளாண்மை விரிவாக்கப் பணி, சீரமைப்புத் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம், கிராம வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் இப்படி பல்வேறுவிதமான திட்டங்கள் பல்வேறு மாநிலங்களிலே இல்லாத அளவில், புதுமையாகவும், சிறப்பாகவும், அந்தத் திட்டங்களைத் தீட்டி, அதன் பயன்முழுவதும் கிராமமக்களுக்குச் சென்று அடைகின்ற வகையில் தீட்டி, செயல்பட்டு வருவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதோடு இன்று சற்று முன்பு பேசிய திரு. கரையாளர் அவர்களும் கூட வேலை வாய்ப்பைப் பற்றிச் சொன்னார்கள். நகரத்தில் இருக்கிற வேலையில்லாத பிரச்சினை கிராமத்திலேயும் உருவாகுவிடக் கூடாது என்பதைக் கருத்திலே கொண்டு கிராமத்திலே

வாழ்கிற மக்களின் வேலையில்லா பிரச்சினையை போக்குகிற வகையிலே வேலைக்கு உணவுத் திட்டம் புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்திருக்கிறது. கிராமப் புறத்திலே இருக்கிற இளைஞர்கள், தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற விதத்திலே இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. தன்னிறைவுத் திட்டம் கடந்த ஆண்டு 69 ஒன்றியங்களிலும், இந்த ஆண்டு 150 ஒன்றியங்களிலும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கிராம மக்கள் நல்ல அடிப்படை வசதிகளைப் பெறுகின்ற இந்தத் திட்டம், சுதந்தரம் அடைந்து 34 ஆண்டுகளிலே செயல்படாத நிலையிலே புரட்சித் தலைவர் அவர்கள் பதவி ஏற்று மூன்று ஆண்டு காலத்திலே செயல்படுவதை கிராம மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள். புரட்சித் தலைவரை விவசாயிகள் " விடி வெள்ளி " என்று பாராட்டுகிறார்கள். மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிலே விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க கடன்களை ரத்து செய்து வட்டியை எல்லாம் ரத்து செய்து ஏழை மக்கள் மேம்பாடு அடைய திட்டங்களைத் தீட்டி வெற்றிகரமாக செயல்படுகின்றது அரசு.

இந்தியத் துணைக் கண்டத்திலே மின் இணைப்பிலே, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் இருக்கின்றது. 9,16,929 மின் இணைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது வரையில், இந்த நடப்பு ஆண்டிலே மேலும் 30,000 மின் இணைப்புகள் கொடுக்கப்பட இருக்கின்றன. இது ஒரு மகத்தான சாதனை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 30 ஆண்டு காலமாக குடிசைகளிலே மின் விளக்குகள் இல்லாமல் இருந்த ஆதி திராவிட மக்கள் இன்று அவர்கள் அதைப் பெற்றுவிட்டதை மிகவும் பாராட்டியிருக்கிறார்கள். ஒரு இலட்சம் ஆதிவாசி குடும்பங்கள் கூட்டுறவுத்துறையிலே பயன்பெறுகின்ற வகையிலே இந்த அரசு திட்டங்களைத் தீட்டியிருக்கின்றது. சமுதாயத்து அடித்தளத்து மக்கள், பின்தங்கிய மக்கள் அவர்களது வாழ்க்கையில் உயராமல் இருக்கிற மக்கள், அவர்கள் உயர்த்தப்பட வேண்டுமென்று திட்டங்களை இந்த அரசு தீட்டுகின்ற நிலையிலே, ஆதி திராவிட மக்களுக்கு ரிசர்வேஷன் செய்திருப்பதை எடுத்துவிட வேண்டும், அது நீடிக்கக் கூடாது என்று பிராமண நண்பர்கள் ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்ற நிலைதான் குஜராத் மாநிலத்திலே ரிசர்வேஷனை எடுத்துவிட வேண்டும் என்று அங்கே ஊர்வலங்கள் நடந்து வருவதை இன்று பத்திரிகைகளிலே காண்கிறோம். அதனுடைய தொடர்ச்சியாக இன்று பழனியிலே மாநில மாநாடு நடத்துகிற அளவிற்கு, தமிழக பிராமண மாநாடு நடத்துவதற்கு நிலைமை வளர்ந்திருக்கின்றது. இந்த நிலைமை மேலும் வளர்ந்து கொண்டே சென்றால் ஒரு வேளை அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டால், ஆதிதிராவிட மக்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய

மக்கள் இன்னும் நூறு ஆண்டுகளுக்கு முன்னேற்றம் காண முடியாது என்பதை அரசு உணர்ந்து பார்க்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் கம்யூனல் ஜி. ஓ. பின்பற்றப்பட வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் பப்ளிக் அண்டர்டேக்கிங் கம்பெனிகளிலும், அரசு உதவி பெற்று நடக்கின்ற தொழிற்சாலைகளிலும் இந்த ஜி. ஓ. பின்பற்றப்படுவதில்லை. இதற்கேற்ற வகையில் அரசு அண்டர்டேக்கிங் கம்பெனிகளிலும், அரசு உதவி பெற்று நடக்கின்ற தொழிற்சாலைகளிலும் இந்த ஆணை பின்பற்றப்படவேண்டும் என்று, கண்டிப்பாக அமுல் ஆக்க வேண்டுமென்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமென்ற நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

[இரவு 7—10]

அதோடு வறட்சி பற்றி இங்கே ஒன்றிரண்டு கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வறட்சியைச் சந்திக்க போர்க்கால நடவடிக்கை எடுத்து ஒவ்வொரு மாவட்டந்தோறும், ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷன்தோறும், ஒவ்வொரு கிராமந்தோறும் பணிகள் செம்மையாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகாரி இருக்கிறார், ஒவ்வொரு ஏரியாவிலேயும் ஏரியா ஆபீசர் நியமிக்கப்பட்டிருக்கிறார். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே வறட்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை கடந்த காலத்திலே 1974 ஆம் ஆண்டைப்போல வாயில் போட்டுக் கொள்ளாது வங்கியிலே போட்டுக் கொள்ளாது ஒவ்வொரு காசும் கிராம முன்னேற்றத்திற்காக செலவிடப்பட்டு வருகிறது என்பதையும், பிற மாநிலங்களிலே இல்லாத அளவுக்கு இங்கே வெற்றிகரமாக அந்தத் திட்டங்கள் நடந்து வருகின்றன என்பதையும் மத்திய அரசு தேவையான உதவியை இன்னமும் செய்யவில்லை என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் சுட்டிக்காட்டும்பொழுதுதான் இங்கே அருமை நண்பர் திரு. சித்தன் அவர்கள் பேசும்போது மத்திய அரசுக்கு நீங்கள் நண்பர்களா அல்லது பகைவர்களா என்று கேட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், எங்களுக்கு அரசியலிலே நிரந்தரமான நண்பரும் கிடையாது, நிரந்தரமான பகைவரும் கிடையாது ; நண்பர்களாக இருப்பதும் எதிரிகளாக இருப்பதும் அவரவர்களுடைய நடைமுறைக்கு செயல்முறைக்கு ஏற்பத்தான் வருகிறது என்று அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். அதையேதான் நான் இப்போதும் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் மன்னர் மானியத்தை ஒழித்தீர்கள், நீங்கள் வங்கிகளை தேசியடமை ஆக்கினீர்கள், 20 அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்

தீர்கள், நாங்கள் நண்பர்களாக இருந்தோம். மும்மொழித் திட்டத்தின் மூலமாக இந்தியைக் கொண்டு வந்து தமிழை ஒழித்துவிட முயற்சி செய்தால் நாங்கள் எதிரிகளாகத்தான் இருப்போம். தமிழ்த் தென்றல் அமைச்சரின் கொடும்பாவியைக் கொளுத்துவீர்களானால் நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்போம், மத்திய ஆட்சியிலே இருப்பதால் மாநிலத்திலேயும் ஆட்சி நடத்த வேண்டுமென்று எண்ணி இந்த ஆட்சியை தூக்கியெறிய வேண்டுமென்ற முறையிலே அதிகார வரம்பை மீறி செயல்படுவீர்களானால் நிச்சயமாக நாங்கள் எதிரிகளாக மாறுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எங்களை எதிரிகளா, நண்பர்களா என்று மிரட்டுவீர்களானால், எதிரிகளாக ஆக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பீர்களானால் நாங்கள் குறுக்கே நிற்கப் போவது இல்லை, அஞ்சப் போவது இல்லை. அந்த எதிர்ப்பைச் சமாளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைப் பணிவான வேண்டுகோளாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து என்னுடைய தொகுதியிலே தன்னிறைவுத் திட்டங்கள் இரண்டு ஒன்றியங்களிலே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒட்டன் சத்திரத்திலே புதிய மருத்துவ மனையைக் கட்டுவதற்காக நான் தொகுதி மக்களின் சார்பாக புரட்சித் தலைவர் அவர்களுக்கும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே கொத்தையம் பகுதியிலே ஒரு அணை கட்ட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். அதை விரைவிலே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வறட்சியால், வறுமையால் ஆண்டாண்டுக் காலமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற என்னுடைய தொகுதியை தொழில் துறையிலே பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே எங்களுடைய கருத்துக்களை அவையின் முன்னாலே நான் வைக்க விரும்புகிறேன். மதிப்பிற்குரிய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இங்கே வைக்கும் போது ஒரு திருக்குறளை சொல்லி தன்னுடைய நிதி நிலை அறிக்கையை இங்கே வாசித்தார்கள்.

“ பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்(கு) இவ்வைந்து ”.

என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் விளக்கமும் சொன்னார்கள். ஆனால் அந்தத் திருக்குறளின்படி இன்றைக்குத் தமிழகத்தின் நிலை இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே மிகப்பெரிய வறட்சி ஏற்பட்டு, அதன் விளைவாகத் தமிழகத்திலே வளம் இல்லை ; இங்கே வளம் இல்லாததன் காரணமாகச் செல்வச் செழிப்பு இல்லை ; செல்வச் செழிப்பு இல்லாததன் காரணமாக இன்ப வாழ்வு இல்லை. இங்கே பசி என்னும் நோய் மக்களை வாட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இத்தனையும் இல்லாத நிலைமை தமிழகத்திலே வறட்சி காரணமாக ஏற்பட்டிருக்கிறது.

இந்த வறட்சி நிலைமைகளுக்கு எப்படிப் பரிகாரம் காண்பது என்பதில் எல்லாம் அரசியல் வேறுபாடுகளுக்கோ, வேறு வேறுபாடுகளுக்கோ இடமில்லை. இது இன்றைக்குத் தமிழகத்தினுடைய மிக முக்கியமான பிரச்சினை. மற்றப் பிரச்சினைகள் எவ்வளவு எரிகிற பிரச்சினைகளாக இருந்தாலும், எரியாத பிரச்சினைகளாக இருந்தாலும், அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தத் தமிழகத்தின் மக்கள் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள், வறட்சியிலிருந்து தமிழகத்தை எப்படி மீட்பது என்பதைப் பற்றி தமிழகத்திலுள்ள அத்தனை பேர்களும் ஒற்றுமையுடன் இருந்து தமிழக மக்களின் நலன் காண பாடுபட வேண்டிய ஒரு நிலைமையிலே இருக்கிறோம்.

வறட்சிப் பணிகளுக்குக் கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும், இதை மத்திய அரசாங்கம் நமக்கு அளிக்க வேண்டுமென்று எனக்கு முன் பேசிய மற்ற உறுப்பினர்களெல்லாம் வலியுறுத்தி இருப்பதைப்போல நானும் வலியுறுத்துகிறேன். மத்திய அரசு அளிக்கின்ற இந்த நிதியினை திட்டச் செலவிலே எக்காரணத்தைக் கொண்டும் கழிக்கக் கூடாது ; அதை அவர்கள் மானியமாகத் தமிழகத்திற்கு அளிக்க வேண்டும். இதற்கு அனைத்துக் கட்சிக் குழு ஒன்றை டெல்லிக்கு அனுப்பி மத்திய அரசை வற்புறுத்துவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய நிதியமைச்சரவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையிலே மதிப்பிற்குரிய நிதியமைச்சரவர்கள் சில முக்கியமான விவரங்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஏற்பட்டுள்ள பண வீக்கமும், பயன்படுத்தப்பட வேண்டிய பொருள்களின் பற்றாக் குறையும் தமிழ்நாட்டைப் பெருமளவிற்குப் பாதித்திருப்பதை நம்முடைய நிதியமைச்சரவர்கள் சுட்டிக்

காட்டியிருப்பது சாலச் சிறந்தது. மாநிலங்களின் அதிகாரங்களும், நிதி ஆதாரங்களும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், மாநில அரசுகள் மத்திய அரசின் உதவியைப் பெருமளவிற்கு எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது என்று கூறி, மத்திய அரசிடம் அதிகாரங்களும், நிதி ஆதாரங்களும் தேவையில்லாத அளவிற்கு அதிகமாக இருப்பதையும் அவர்கள் தெளிவாக இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதிலும் இந்த நிலைமைகள் தொடர்ந்து நீடிக்குமேயானால் மாநில ஆட்சிகள் நகராட்சிகளின் அந்தஸ்திற்குத் தாழ்த்தப்பட்டு விடும் என்பதையும் நம்முடைய நிதியமைச்சரவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

மாநில நிதி அறிக்கைகளைப் பற்றிப் பொதுவாக வணிகர்கள், தொழிலதிபர்கள் அல்லது பொருளாதார நிபுணர்கள் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை ; அக்கறை காட்டுவதில்லை. காரணம், மாநில நிதிநிலை அறிக்கை என்பது—அதிலே அவ்வளவு முக்கியமான விஷயங்கள், இவர்களைப் பாதிக்கக் கூடியவை இருக்காது. ஏனென்றால் கொழுத்த வரிகளான இன்கம்டாக்ஸ், எக்சைஸ் போன்றவைகள் மத்திய அரசாங்கத்தினுடைய கையிலே இருக்கின்றன. இன்னொரு நல்ல வருமானம் கொடுக்கக்கூடியது சொத்து வரி, அதை ஸ்தல ஸ்தாபனங்களிடம் ஒப்படைத்தாகி விட்டது.

இப்படி இரண்டுக்கும் நடுவிலே திண்டாடுகிற மாநில அரசுகளுக்கு ஒன்றே ஒன்றைத் தவிர—அந்த ஒன்றான விற்பனை வரிக்கும் இன்றைக்கு ஆபத்து வந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலைமையிலே மாநில அரசின் நிதி ஆதாரங்களைப் பெருக்கி கொள்வதற்கான வழிவகை தெரியாமல், புரியாமல் எல்லா மாநில அரசுகளும் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. எல்லா மாநிங்களின் நிதியமைச்சர்களும் இதைத்தான் தங்களது நிதி நிலை அறிக்கையிலே தவறாமல் சுட்டிக் காட்டிக்கொண்டிருப்பார்கள். இன்றைக்கு அது அன்றாட வழக்கமாகி விட்டது என்பதை நாம் பார்க்கிறோம்.

மாநில நிதி நிலை அறிக்கையைப் பற்றித் தமிழகத்திலே யார் கவலைப்படுகிறார்கள்? விவசாயிகள் கவலைப்படுகிறார்கள். காரணம் நீர்ப்பாசனம் விவசாயிகள் வாங்கியிருக்கும் கடன் சுமைகள் ஆகிய இவைகளைப்பற்றி இந்த நிதி நிலை அறிக்கையிலே என்ன சொல்லப்படுகிறது என்று விவசாயிகள் பயப்படுகிறார்கள் ; ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தங்களுக்கு ஏதாவது இந்த நிதிநிலை அறிக்கையிலே சலுகைகள் இருக்குமா என்று ஆராய விரும்புகிறார்கள். இவர்களைத் தவிர வேறு யாரும் இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி கவலைப்பட முடியாத

அளவில், இந்த நிதி நிலை அறிக்கையில் நம்முடைய நிதி நிலைகளை அதிகரிக்கக் கூடிய ஆதாரங்களுக்கான விஷயங்கள் எதுவுமில்லை.

அதுவும் நம்முடைய நிதியமைச்சரவர்கள் இன்னொன்றையும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். திட்டக் குழுவின் ஆலோசனை என்ன? ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மாநிலத்தின் திட்டங்களுக்கு நிதி ஆதாரங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த மாநிலமே செய்து கொள்ள வேண்டுமென்று மத்திய நிதியமைச்சரவர்களும், திட்டக் குழுவும் ஆலோசனை வழங்கியிருக்கிறது. நல்லவேளையாக நம்முடைய நிதியமைச்சரவர்கள் அப்படிப்பட்ட ஆலோசனையை ஏற்று இங்கே அதிகமான வரிகளை போடாமல் நிதானம் காட்டியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

[இரவு 7-20]

ரூ. 20 கோடிக்கு மட்டுமே அவர்கள் புது வரிகளை விதித்திருக்கிறார்கள். திட்டக் குழுவின் ஆலோசனையை அவர்கள் ஏற்றிருப்பார்களானால் இன்னும் நிறைய வரிகளை பல்வேறு துறையிலே அவர்கள் போட்டிருக்கவேண்டும். ஆனால், அதிலே அவர்கள் நிதானம் காட்டியிருப்பது பாராட்டத்தக்கது. இருந்தாலும் பெட்ரோலுக்கும், டீசலுக்கும் விற்பனை வரி வீதத்தை அவர்கள் உயர்த்தியிருப்பது சரியல்ல என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், அதன்மூலம் அத்தியாவசியப் பண்டங்களின் விலை நிச்சயமாக உயரும் என்பதிலே சந்தேகம் இல்லை. அதில், 6 மாத காலத்திற்கு முன்னாலேதான் நம்முடைய அரசு பஸ் கட்டணங்களை உயர்த்தி இருக்கிறது. 6 மாதங்களிலே இன்னொரு உயர்வு என்று சொன்னால் அது சாதாரண மக்களை ரொம்பவும் பாதிக்கும் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தப் பெட்ரோலியப் பண்டங்களுக்கு நம்முடைய நிதியமைச்சர் என்ன காரணத்தினாலோ இந்த வரியை உயர்த்தினார் என்பது எனக்குப் புரியவில்லை. நம்முடைய நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் ஆரோக்கியமானவர், திடகாத்திரமான உடலைக் கொண்டவர் என்பதிலே சந்தேகம் இல்லை. அவருக்கு இந்தத் தொற்று நோய் எப்படி வந்தது? வரியை உயர்த்துகிற தொற்று நோய் எப்படி வந்தது? அடிக்கடி டெல்லிக்கு போய் வருவதாலே, அங்கே அடிக்கடி வரியை உயர்த்துகிறார்கள், பெட்ரோலியப் பொருள்களின் வரியை உயர்த்துகிறார்கள், அதன்மூலம் வருமானம் பெறுகிறார்கள் என்ற காரணத்தினாலே, தமிழ்நாட்டிலும் அவர்கள் இந்தப் பெட்ரோலியப் பண்டகங்ளின் விற்பனை வரியை உயர்த்தி இருக்கிறார்

கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமாக இருக்கிறது. இது ஒரு தேவையில்லாத உயர்வு என்பதையும் சாதாரண மக்களையும் , ஏழை எளிய மக்களையும் பாதிக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெட்ரோல், டீசல் ஆகியவற்றின்மீது மத்திய அரசு விதிக்கக் கூடிய எக்சைஸ் வரிகளைக் குறைந்த பட்சம் மாநில அரசு பொறுப்பேற்று நடத்துகிற போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்படுகிற பெட்ரோலிய பண்டங்களுக்காவது குறைத்தால், அல்லது அதை ரத்து செய்தால் நிச்சயமாக இந்த வரி உயர்வு தேவையில்லை. மத்திய அரசாங்கம் நம்முடைய மாநிலப் போக்குவரத்து கழகங்களுக்கு வழங்கப்படுகிற பெட்ரோலிய பண்டங்களுக்காவது எக்சைஸ் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே நான் இந்த அவையிலே வலியுறுத்தியிருக்கிறேன். அப்படிச் செய்யும்படி, மத்திய அரசை இயங்கச் செய்வார்களானால், நிச்சயமாக பஸ் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்காது. பெட்ரோல், டீசல் போன்ற பண்டங்களின் விற்பனை வரியை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்காது.

இன்னொன்று, நம்முடைய அரசு நடத்துகிற போக்குவரத்துக் கழகங்கள்,—சேரன், சோழன் போக்குவரத்துக் கழகங்கள் போன்றவை, நல்ல லாபத்துடன் நடந்து, சூப்பர் டாக்ஸ் கட்டுகிற அளவுக்கு, வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அதிலே ஒரு முக்கியமான கொள்கை முடிவினை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்கம் டாக்ஸ் சூப்பர் டாக்ஸ் கட்டுவது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், மாநில அரசு நடத்துகிற போக்குவரத்துக் கழகங்களானாலும், வேறு நிறுவனங்களானாலும், அவைகளுக்கு மத்திய அரசு வரியிலிருந்து, விலக்கு கொடுப்பார்களானால், அதனுடைய முழுப் பலனும் ஆதாயமும் மக்களுக்கு வந்து சேரும். ஆனால், இன்றைய தினம் மாநில அரசு நடத்துகிற நிறுவனங்களின் நிலை என்ன என்பதற்குச் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாநில அரசுக்குச் சொந்தமான கம்பெனிகள் மொத்தம் 46. அதிலே, பார்ட்லி கவர்ன்மென்ட் ஓன்ட் கம்பெனிகள், பகுதி நேர அரசு கம்பெனிகள் 2. அதைப் போல், சப்சிடியரி கம்பெனிகள் 5 இருக்கின்றன. அந்தக் கம்பெனிகளிலே என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது? உதாரணத்திற்குச் சொல்கிறேன், தமிழ்நாட்டு வனத் தோட்டக் கழகம் என்ற ஒரு அமைப்பினை நம்முடைய மாநில அரசு வைத்திருக்கிறது. அது தமிழ்நாடு அரசுக்கு 1979 ஆம் ஆண்டிலே எவ்வளவு குத்தகைத் தொகை கொடுத்தது என்று பார்த்தால், ரூ. 1,24,90,947 கொடுத்திருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் மத்திய அரசாங்கத்திற்கு

வருமான வரியாக இந்த வனக் கழகம் எவ்வளவு செலுத்த வேண்டி வருகிறது என்றால், ரூ. 4,81,71,000. அதிலே கிடைக்கக்கூடிய வருமானம் பூராவும் மத்திய அரசாங்கத்திற்கு வரியாக கொடுக்கக்கூடிய நிலையிலே இந்தத் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் இருக்கிறது.

அதைப் போலவே, Tamil Nadu Industrial Investment Corporation என்ற மாநில அரசு வைத்திருக்கக் கூடிய அமைப்புக்கு இன்கம் டாக்ஸ் எவ்வளவு? ரூ. 30 இலட்சம், 1979—80-ல்.

அதைப்போல தமிழ்நாடு அக்ரோ இன்டஸ்ரிஸ் கார்ப்பரேஷன் இன்கம்டாக்ஸ் 15.3 லட்சம் ரூபாய், தமிழ்நாடு ஸ்மால் இன்டஸ்டிரிஸ் டெவலப்மென்ட் கார்ப்ரேஷன் வருமான வரி 17,77,000 அண்ணா டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இன்கம் டாக்ஸ் என்ன தெரியுமா?. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் அந்த அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு 1979லே கிடைத்த லாபம் 13.59 லட்சம் ஆனால் வருமான வரி 12.10 லட்சம். இந்த போக்குவரத்துக் கழகத்துக்கு கிடைத்த மீதி நிகர லாபம் 1.49 லட்சம் ரூபாய். வருமானத்திலே பெரும்பகுதியை லாபத்திலே பெரும்பகுதியை மத்திய அரசுக்கு இன்கம் டாக்ஸ் மூலமாக கட்டக்கூடிய பரிதாபகரமான நிலைமை அரசு நிறுவனங்கள் அனைத்திலும் இருக்கிறது. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே என்ன நிலைமை? 1979லே 22.55 லட்சம் இன்கம்டாக்ஸ் கட்டப்பட்டிருக்கிறது. அதேபோல தமிழ்நாடு டிரான்ஸ்போட் டெவலப்மன்ட் கார்ப்பரேஷன் 19,55,000 ரூபாய் ஆதாயம், வருமான வரி 11,29,339 ரூபாய். இந்த அமைப்பில் மிஞ்சியது 8 லட்சம் ரூபாய்கள்தான். மாநில அரசு நடத்துகின்ற கார்ப்பரேஷன்களிலும் மற்ற அமைப்புகளிலும் வரக்கூடிய ஆதாயத்திலே பெரும்பகுதி மத்திய அரசுக்கு வருமான வரியாக செலுத்தக்கூடிய நிலைமை இருப்பது பற்றி இந்த அரசு சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான முடிவை எடுக்க வேண்டும். இந்தக் கார்ப்பரேஷன்கள், மற்ற நிறுவனங்கள் அரசாங்கத் துறையில் இருந்தால், அதனுடைய பிரிவாக இருந்தால், இதற்கு வருமான வரி இல்லை. இது தனியாகக் கார்ப்பரேஷனாக வைக்கும்போது கம்பெனியாக வைக்கும் போது மத்திய அரசுக்கு வருமான வரி கட்ட வேண்டியிருக்கிறது. இவை அரசு சிந்தித்து, கொள்கை ரீதியாக ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வருமான வரி இதற்கெல்லாம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மத்திய அரசில் விதிவிலக்குப் பெற வேண்டும்.

இந்தக் கார்ப்பரேஷனுக்கும், கம்பெனிகளுக்கும் ஒரு குறை இருக்கின்றது. ஏனென்றால் இதற்கு ஆடிட்டர் ஜெனரல் அலுவலகத்தின் ஆடிட் கிடையாது. அந்த மாதிரி நிலை இருப்பது அரசுக்கு நல்லதல்ல. பல்வேறு ஊழல் நடப்பதற்கு, பல்வேறு தவறுகள் நடைபெறுவதற்கு அது வழி வகுக்கும். இதிலே வேலை பார்க்கக்கூடிய லட்சக்கணக்கான ஊழியர்கள் அரசு ஊழியர்கள் அல்ல, அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும் அத்தனை சலுகைகளும் அவர்களுக்கு கிடையாது. இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே இதைப் பற்றி கொள்கை ரீதியாக ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து வருமான வரியைப் பற்றி சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இங்கே சென்னையிலே விற்பனை மீதான சர்சார்ஜை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் ஆக நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள். ஏற்கெனவே மதுரையிலே, சேலத்திலே, கோவையிலே, திருநெல்வேலியிலே, திருச்சியிலே, பெருநகரங்களிலே 5 சதவீதம் சர்சார்ஜ் இந்த அளவுக்கும் இருக்கிறது. இது நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் பட்சபாதம் காட்டுவதாக இருக்கிறது. நகரத்திலே ஒரு பொருளை வாங்குவோமேயானால், 10 சதவீதம் சர்சார்ஜ் போட்டு, அந்தப் பொருளின் விலை உயர்ந்து விடுகிறது. ஆனால் அதே நேரத்தில் அந்த நகரப்பகுதியை ஒட்டிய கிராமப் பகுதியிலே இந்தப் பொருள்களை வாங்கினால் வரி கிடையாது. சர்சார்ஜ் கிடையாது. இது சரியல்ல. இதிலே பட்சபாதம் இருக்கக்கூடாது. அதிலும் வளைந்த செங்கோலை நிமிர்த்த தனது உயிரையே ஈய்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரை ஏற்றிருக்கிற நம்முடைய நிதி அமைச்சர் இந்த பட்சபாதத்தை நகர மக்களுக்கும், கிராம மக்களுக்கும் காட்டுவது சரியல்ல முறையல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரி விகிதங்களை நீங்கள் மாற்றும் போதும் திருத்தும் போதும், உயர்த்தும்போதும், குறைக்கும் போதும் அண்டை மாநிலங்களை மனதிலே கொண்டு இந்த வரி விதிப்பை திருத்தி அமைக்க வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். ஏனென்றால் இன்று அண்டை மாநிலங்களிலே என்ன நிலைமை, என்ன வரி விகிதம் என்பதைப் பார்க்காமல் நாம் அதைச் செய்வோமானால் நம்முடைய வியாபாரம், அண்டை மாநிலத்திற்கு நிச்சயமாகப் போய்விடும். நமக்குப் பக்கத்திலே இருக்கின்ற அண்டை மாநில பகுதிகளுக்கு அந்த வியாபாரம் போய்விடும். நம்முடைய மாநிலத்துக்கு வருமானம் குறையும் அபாயம் இருப்பதை மனதிலே கொண்டு செய்ய வேண்டும் என்றுநான் வற்புறுத்துகிறேன்.

[இரவு 7-30]

மாநிலங்களின் மொத்த வருவாயில் எந்த மாநிலமாக இருந்தாலும் இன்றைக்கு அதனுடைய மொத்த வருவாயில் 60 சதவீதம் வருமானம் விற்பனை வரியின் மூலம் கிடைக்கிறது. இது ஒரு உச்ச கட்டத்திற்கு வந்து விட்டது. அதாவது, ஸ்டாக்நேஷன் பாயிண்ட்டிற்கு வந்து விட்டது. அவ்வளவு தான். இதற்கு மேலும் விற்பனை வரியை உயர்த்துவது, அல்லது அதிகரிப்பது என்ற நிலைமையை மக்கள் தாங்க மாட்டார்கள். அந்த அளவிற்கு இது வந்து விட்டது. இப்படி ...டதாலே இன்றைக்கு மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களுக்கு பெரிய அபாயம் வந்து இருக்கிறது. என்ன அபாயம் என்றால், இந்த விற்பனை வரியை ஆரம்பத்தில் ராஜாஜி அவர்கள் கொண்டு வந்த நேரத்தில் ஒரு ரூபாய்க்கு 1/2 பைசா என்று இருந்தது. அது இன்றைக்கு மாறி மாநில அரசுகளின் மொத்த வருவாயில் 60 சதவீதம் விற்பனை வரி மூலம் கிடைக்கிறது என்கிற நிலைமை வருவதால் மத்திய அரசுக்கு இதன் மீது ஆசை வந்து இருக்கிறது. இந்த விற்பனை வரியை மத்திய அரசு எடுத்துக் கொண்டு விற்பனை வரிக்கு பதிலாக எக்சைஸ் வரியைப் போட்டு, உங்களுக்கு வேண்டுமானால் உரிய பங்கை நாங்கள் கொடுத்து விடுகிறோம், இதை எங்களுக்குக் கொடுத்து விடுங்கள் என்று மாநில அரசுகளைப் பார்த்து சொல்லக் கூடிய ஆசை மத்திய அரசுக்கு வந்து இருக்கிறது. நீங்கள் பாடுபட்டு இந்த விற்பனை வரியை எப்படி எல்லாம் வசூலிக்கிறீர்கள் என்று பார்த்த பின்னாலே மாநில அரசுகளின் கையில் இருந்து இதை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய ஆவல் மத்திய அரசுக்கு வந்து இருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் விற்பனை வரிக்கு பதிலாக எக்சைஸ் டியூட்டி விதித்ததைப் பற்றிய விவாதம் நடந்து இருக்கிறது. ஏற்கனவே 1950—52 வாக்கில் மாநில அரசின் கையில் இருந்த சர்க்கரை, புகையிலை ஜவுளி மீது விற்பனை வரியை விதிக்கின்ற அதிகாரம் மாநிலங்களுக்கு இருந்ததை மாற்றி, கொழுத்த வருவாய் கிடைக்கின்ற இந்த மூன்று பொருள்கள் மீது விற்பனை வரிக்கு பதிலாக எக்சைஸ் டியூட்டி விதிக்கும் அதிகாரத்தை அன்றைக்கு மத்திய அரசு எடுத்துக் கொண்டது. அதைத் தொடர்ந்து இன்றைக்கு மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் மேலும் சில பொருள்கள் மீது எக்சைஸ் டியூட்டி விதிப்பதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்க வேண்டும், அதற்கு அனுமதி மாநில அரசுகள் கொடுக்க வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள் யோசனை சொன்னபோது, அநேகமாக எல்லா முதலமைச்சர்களும் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். எல்லா மாநில முதலமைச்சர்களும்

கட்சி வித்தியாசம் இல்லாமல் இதை நாங்கள் விட்டுக் கொடுக்கவே முடியாது, எங்களுடைய இந்த உரிமையில், அதிகாரத்தில் தலையிடுவது சரியல்ல என்று முதல் நாள் நடந்த மாநாட்டில் எதிர்த்தாகி விட்டது. ஆனால் முதல் நாள் நடந்த இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, இந்திய அரசியலில் இது வரையில் ஏற்பட்டு இருக்காத ஒரு விசித்திரமான சூழ்நிலை உருவாக்கப் பட்டது என்பதை நான் வருத்தத்துடன் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

மாநில முதலமைச்சர்கள் மாநாட்டிலே இப்படி அநேகமாக எல்லோரும் ஒரு மனதாகக் கருத்தைச் சொன்ன - பின்னாலே அந்தப் பிரச்சினையை அத்தோடு விட்டு விடுவது தான் இது வரையில் இருந்து வந்த பழக்கம். உலகப் பெரும் தலைவராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதம அமைச்ச ராக இருந்த போது கூட அது தான் நடந்தது. அவருடைய விருப்பத்தை மாநிலங்கள் மீது திணிப்பதற்கான முயற்சியில் என்றுமே ஈடுபட்டது கிடையாது. இங்கே முதல் நாள் முதல மைச்சர்கள் மாநாட்டில் இப்படி பேசிய பிறகு, அதாவது எல்லா மாநில முலமைச்சர்களும் அநேகமாக அந்த அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை எதிர்த்து அபிப்பிராயம் சொல்லியாகி விட்டது—மறு நாள் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அத்தனை முதலமைச்சர்களையும் அழைத்து இது கட்சியின் கட்டளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லி ஒப்புக் கொள்ள வைத்து, எந்த முதலமைச்சர்கள் முதல் நாள் மாநாட்டில் மத்திய அரசு இந்த விற்பனை வரியை எடுத்துக் கொள்ளவதை எதிர்த்தார்களோ, அதே முதலமைச்சர் கள் மறுநாள் மாநாட்டில் அந்த அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்ளலாம் என்று ஒப்புக் கொள்ள வைக்கப் படுகிறார்கள். குஜராத் மாநிலத்தின் முதலமைச்சர் சோலங்கி அவர்கள்—எனக்கு ரொம்பவும் வேண்டிய நண்பர்—அவர்தான் முதல் நாள் இந்த அதிகாரம் மாநில அரசின் அதிகாரத்தில் இருந்து மத்திய அரசுக்குப் போகக் கூடாது என்று கடுமையாக எதிர்த்தார். மறு நாள் அவரே அந்த மாநாட்டிலே அந்த அதி காரத்தை மத்திய அரசுக்குக் கொடுக்கலாம் என்று தீர் மானத்தை முன் மொழிகிறார். இதை நான் அரசியல் கட்சி மாச்சரியத்தில் சொல்லவில்லை. இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இது நாட்டின் ஜனநாயக வளர்ச்சிக்கு உகந்ததா? மாநில முதலமைச் சர்களை பலவந்தப் படுத்தி, நிர்ப்பந்தப்படுத்தி, அவர்களைச் சுயேச்சையாக செயல் படுவதைத் தடுத்து, முதல் நாள் அவர்கள் வலுவாக எதிர்த்த ஒன்றை மறு நாள் அவர்களையே ஒப்புக் கொள்ள வைக்கிற இந்த நிர்ப்பந்த முறை இந்திய அரசியலின் அடிப்படை பெடரல் தத்துவத்தை சிதைத்து விடும் என்பதை

அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது நல்லதல்ல என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது எதைக் சுட்டிக் காட்டுகிறது இந்தியாவின் அரசியல் நிர்வாக துறையில் தன்னுடைய பிடியை மத்திய அரசு இறுக்கிக் கொள்ளவேண்டும் என்பற்கு செய்து வருகிற இடைவிடாத முயற்சிக்கு இது ஒரு சரியான உதாரணம். வேறு உதாரணம் தேவையில்லை. கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய நிர்வாகப் பிடியை இறுக்கிக் கொள்ள மத்திய அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது என்பதற்கு இது ஒரு சரியான உதாரணம். இது இந்தியாவின் ஆரோக்கிய மான அரசியலுக்கு, தெளிவான அரசுக்கு உகந்ததல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விற்பனை வரி முறையை இந்த அரசு சற்று திருத்தி அமைப்பது பற்றி ஆராய வேண்டும். இப்போதுள்ள முறை மிகவும் சிக்க லாக இருக்கிறது. ஒரு முனை விற்பனை வரி, பலமுனை விற் பனை வரி, விற்பனை வரி விலக்கு என்று மூன்று விதமாக இப்போது விற்பனை வரி இருக்கிறது ; மூன்று தொகுப்பாக இருக்கிறது. இதிலே வரி விலக்கு என்பது சாத்தியமான முறையில் இல்லை. ஆனால் அதே நேரத்தில் வரி விதிப்புக்கு என்ன இலக்கணம் என்று தெரியவில்லை. ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையின் போதும் சில பொருட்களுக்கு வரி விலைக்கு அளிக்கப்படுகிறது ; சில பொருட்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. இதற்கு இலக்கணம் என்ன? எப்படி வரி நிர்ணயம் செய் கிறார்கள் என்பதை அரசு தெளிவு படுத்த வேண்டும். மாநிலங் களுக்கிடையே தாராளமாக விற்பனை நடக்க விதிமுறைகள் தெளிவாக இல்லை. இதை மனதிலே கொண்டு, விற்பனை வரிச் சட்டத்தை மேலும் எளிதாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது சம்பந்தமாக நம்முடைய குஜராத் மாநிலத்திலே இருக்கிற ஒரு முறையை நம்முடைய நிதி அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே ஆண்டு விற்பனை ஒரு இலட்சம் ரூபாய் இருந்தால் அதற்கு சுயமாக வரி விதிப்பு செய்ய, 'செல்ஃப் அசஸ்மென்ட்' செய்து கொள்வதற்கும் அதற்கேற்ற வகையில் வரி செலுத்துவதற்கும் ஆன ஒரு முறை இருக்கிறது. அந்த முறையை தமிழ் நாட்டிலே பரிசீலனை செய்தால் அதன் விளைவாக பல நன்மைகள் மக்களுக்கு கிடைக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

அடுத்து, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தாலிக்கு தங்கம் தருகிற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இத்திட்டத்தின் நோக்கம் நல்லது. அதை நான் குறை கூறவில்லை. ஆனால் இது காரிய சாத்தியமற்றது. இது எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு உதவ குறைந்த விலையில் தாலிக்கு தங்கம் கொடுக்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்த நோக்கம் நிறைவேறப் போவதில்லை. ஆகையால் இத்திட்டத்தை பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிற ஏழை எளிய மக்கள் பெரிதும் ஏமாற்றமடைவார்கள். ஆகவே, இது மாதிரித் திட்டத்தை கைவிட்டு விட்டு, ஏற்கெனவே செயல்பட்டுவரும் ஆதரவற்றோர், முதியோர்களுக்கு பென்ஷன் திட்டத்தை நல்ல முறையில் செயல் படுத்தலாம் ; இன்னும் விரிவுபடுத்தலாம். இன்னும் நிறைய பேர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே நடக்கிற நல்ல திட்டத்தை நல்ல முறையில் செயல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு முதியோர் பென்ஷன், ஆதரவற்றோர் பென்ஷன் நிறைய பேர்களுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மனுக்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் தேங்கிக் கிடக்கின்றன. எம். எல். ஏ.யிடம் கையெழுத்து வாங்கிக் கொடுக்கிறார்கள் ; கிடைக்கவில்லை. அலுவலகத்திலே கேட்டால் வேடிக்கையாக இருக்கிறது; வேதனையாகவும் இருக்கிறது. ஏற்கெனவே உதவித் தொகை வாங்கிக் கொண்டிருக்கிற ஒருவர் இறந்து விட்டால், அந்த இடத்தில் புதிதாக ஒருவரை சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் பணம் இல்லை என்பதுதான். ஆகவே, தகுதி படைத்த எல்லோருக்கும் உதவித் தொகை வழங்குகின்ற முறையிலே அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே மதுவிலக்கைப்பற்றி எல்லாம் நண்பர்கள் சொன்னார்கள், அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களை, அவரவர் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். எங்களுடைய நிலை என்ன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் மதுவிலக்குக் கொள்கையில் ஆழந்த நம்பிக்கை வைத்திருக்கிறோம் ; அதை தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்பது எங்கள் கட்சியின் கொள்கை. இதிலே நம்முடைய இந்திரா காங்கிரஸ் துணைத் தலைவர் நண்பர் சுந்தரராஜ் இங்கே பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். அதிலும் நான் சொன்னதற்கு அவர்கள் ஒரு பதிலைச் சொன்னர்கள். பெரும் தலைவர் காமராஜர் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தபோது, இன்றைக்குப் பிரதமராக இருக்கிற திருமதி இந்திரா காந்தி அவர்கள் கலந்துகொண்ட செயற்குழு கூட்டத்திலே எல்லா மாநிலங்களும் மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி. அதை அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பினார்கள் என்று நான் சொன்னதற்கு கீழ்க்கண்ட பதிலைச் சொன்னார்கள். அதற்கு என்று மத்திய அரசு ஒரு கமிட்டி போட்டது. அந்தக் கமிட்டி ஒரு முடிவை எடுத்தது. மதுவிலக்குப் பிரச்சினை என்பது மாநில அதிகாரத்திற்கு உட்பட்டது, ஆகவே, இதிலே தலையிட முடியாது என்று அந்தக் கமிட்டி யோசனை சொன்ன காரணத்தாலே மத்திய அரசு அதில் தலையிடவில்லை என்று திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

[இரவு 7—40]

மத்திய அரசுக்கு இதிலே அதிகாரம் இல்லை என்பதை அவர்கள் ஒப்புகொண்டிருக்கிறார்கள். மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்பது மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரச்சியையாகும். ஆகவே, மத்திய அரசு இதிலே தலையிட முடியாது என்று அழுத்தமாகச் சொல்லி நண்பர் திரு. சுந்தரராஜன் அவர்கள் உதவியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இன்னொன்றையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அடிப்படையிலேதான் நாங்களும் சொல்கிறோம், மாநில அரசிற்கு உட்பட்ட மது சம்பந்தமான வகையில் எரிசாராயம் சம்பந்தமான வகையில் விசாரணைக் கமிஷன் போடுவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை என்று நண்பர் சுந்தரராஜன் அவர்கள் சொன்ன அடிப்படையில் தான் சொல்கிறோம்.

அதைப்போல் இங்கே நம்முடைய நண்பர் திரு. சித்தன் அவர்கள் இன்னொரு கருத்தை வலியுறுத்தினார்கள். '' மத்திய அரசு போடுகின்ற கமிஷனை எதிர்க்கின்றவர்கள் மத்திய அரசின் நிதியைத் தேடி ஓடுகிறார்களே, ஆகவே, நிதி வேண்டும் என்றால் மத்திய அரசு வேண்டும், கமிஷன் போட்டால் மட்டும் அதை எதிர்க்கிறீர்களே, இது என்ன நியாயம் '' என்று கேட்டார்கள். அப்போது எனக்கு ரொம்பவும் வருத்தமாக இருந்தது. பிராந்திய உணர்வு கொண்டவர்கள் இதைக் கேட்டு இருந்தால் நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். ஒரு நல்ல தேசிய வாதி சித்தன் அவர்கள். அவர்களுடைய குடும்பமே தேசியக் குடும்பம். அவருடைய தந்தை ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். அவரும் நானும் எந்த தேசிய இயக்கத்திலே ஒன்றாக இருந்தோமோ

எப்படி தேசிய உணர்வோடு வாழ்ந்தோமோ அந்த தேசிய உணர்வுக்கு விரோதமான முறையிலே மத்திய அரசைப் பார்த்து நிதி கேட்கலாமா என்று சொல்வது தவறு. இந்த அவையிலே திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இருந்திருக்கிறார்கள். இந்த அவையிலே அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே வீற்றிருந்தார்கள். மத்திய அரசினைக் குறை கூறி அண்ணா அவர்கள் பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் பேசி இருக்கிறார்கள். பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அன்றைக்கு முதல்வராக இருந்த மதிப்பிற்குரிய காமராஜர் அவர்களும், மதிப்பிற்குரிய பக்தவச்சலம் அவர்களும் மத்திய அரசு நிதியுதவி கொடுப்பதைப் பற்றி நீங்கள் எல்லாம் விமரிசித்துப் பேசக்கூடாது என்று ஒருநாளும் சொன்னதில்லை. ஆத்திரப்பட்டதில்லை. மத்திய மாநில உறவுகளைப் பற்றி விமரிசனம் செய்வது என்பது எல்லாம் கட்சினராலும் அனுமதிக்கப்பட்ட ஒன்று. அது ஒன்றும் தேச விரோதமான காரியம் அல்ல. ஆகவே, நீங்கள் அப்படிச் சொல்வது இந்த தேசம் பிளவு படுவதற்குரிய வழியைத்தான் வகுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, அவர்கள் பேசுகின்றபோது இன்னொன்றைச் சொன்னார்கள். அன்றைக்கு ஜனதாக் கட்சி மத்திய அரசிலே இருந்தபோது திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களின் மீது குரோவர் கமிஷன் நியமிக்கப்படவில்லையா என்று திரு. சித்தன் அவர்கள் கேட்டார்கள். அதைப்போல இன்றைக்கு மத்திய அரசு எரி சாராய ஊழல் புகார் பற்றி விசாரிப்பதற்கு கமிஷன் நியமிக்க இருக்கின்றது என்று சொன்னார்கள். உண்மைதான். குரோவர் கமிஷன் ஜனதாக் கட்சியின் ஆட்சிக்காலத்திலே நியமிக்கப்பட்டது. ஆனால், அன்றைக்கு கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை திரு. சித்தன் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களுக்கு இயற்கையிலேயே நினைவு மறதி கொஞ்சம் அதிகம். ஆகவே, மறந்துவிட்டார்கள். திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? அன்றைய தினம் அவர்கள் இந்திரா காங்கிரஸிலே ஒரு தூண் போன்றவர். அவர்கள் கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸின் சார்பில், ஜனதா அரசு குரோவர் கமிஷன் நியமித்ததை எதிர்த்து அறிக்கை விட்டார்கள். அறிக்கை மட்டும்தான் விட்டார்களா என்றால் கர்நாடக மாநில இந்திரா காங்கிரஸைக் கூட்டி ஏகோபித்த ஒரு தீர்மானத்தைப் போட்டு குரோவர் கமிஷனை எதிர்த்தார்கள். அதோடு மட்டுமல்ல. குரோவர் விசாரணைக் கமிஷன் விசாரணை ஆரம்பித்த அன்று அந்த விசாரணைக் கமிஷன் மன்றத்தின் முன்னாலே இந்திரா காங்கிரஸின் சார்பிலே பெரிய ஆர்ப்பாட்டத்தையே நடத்தினார்கள், அதன் காரணமாக தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டு

கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்யப்பட்டது. அப்போது இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர்களைக் கைது செய்தார்கள். அன்றைய தினம் பகிங்கரமாக இந்திரா காங்கிரஸ் கட்சி குரோவர் விசாரணைக் கமிஷனை எதிர்த்திருக்கின்றது. ஆகவே, திரு. சித்தன் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்திரா காங்கிரஸைச் சார்ந்தவர்கள் குரோவர் கமிஷன் விசாரணையை மன்றத்திற்குள்ளே புகுந்து, மேஜை, நாற்காலிகளை எல்லாம் உடைத்தார்கள். பிறகு, குரோவர் அவர்களை போலீசார் பாதுகாப்பிலே அழைத்துச் செல்லவேண்டிய பரிதாபமான நிலைமை உருவாகியது. இங்கே ஆளுகின்ற கட்சிக்கு அது போன்று எல்லாம் செய்யத் தெரியவில்லை. எரி சாராய விசாரணைக் கமிஷனை எதிர்த்துத் தீர்மானம் போட்டதோடு நின்றுவிட்டார்கள். ஆகவே, அதனால்தான் அதாவது இந்திரா காங்கிரஸின் நண்பர்களைப் போன்று அவ்வாறு செய்வதற்குத் அ.தி.மு.க. நண்பர்களுக்குத் தெரியவில்லை என்பதால்தான் நண்பர் சித்தன் அவர்கள் அப்படி கேட்கிறாரோ என்று நினைக்கிறேன். மத்திய அரசு கமிஷனை எதிர்த்து இந்திரா காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் அதைச் சொன்னேனே தவிர, அப்படியெல்லாம் இங்கே உள்ள ஆளும் கட்சி நண்பர்கள் செய்ய வேண்டும் என்பதற்காக சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்களின் பேச்சைப் பற்றி பெரிய விவாதம் இந்த அவையிலே நடைபெற்றது. நான் அதைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். மதுரையிலே நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்களின் பேச்சு, தமிழகத்தின் மானம் காக்கும் பேச்சு என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அவர் பேச்சைத் தவறு என்று சொல்கிற நண்பர்களுக்கு, மத்திய அமைச்சர்களில் பலர், பல்வேறு மாநிலங்களிலே போய் பேசிய பேச்சுக்களை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஒருவர் கல்கத்தாவிலே போய் பேசுகிறபோது, அந்த அரசைப் பற்றி என்ன சொன்னார் என்றால், 'The West Bengal Government should be thrown into the Bay of Bengal' என்று சொல்லியிருக்கிறார். மேற்கு வங்காள அரசை தூக்கி, வங்காளக் கூடாக் கடலிலே எறிய வேண்டும் என்று, அந்த மாநிலத்தின் மத்திய அமைச்சர் கல்கத்தாவிலேயே போய் பேசியிருக்கிறார். இதுபோன்ற பேச்சுக்கள் நாட்டின் ஒருமைப்பாட்டினை வளர்க்க உதவாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, பினாமி நிலங்களில் உள்ள ஓட்டை உடைசல்களை அடைத்தால், அதற்கு மத்திய அரசு அனுமதியளிக்கும் என்று இங்கேயுள்ள நம்முடைய அருமை நண்பர் திரு. தங்கவேல் ராஜ் அவர்கள் செலைல்லியிருக்கிறார். இந்த அவையிலும் அதைப் பற்றி விவாதம் நடைபெற்றது. அந்த பினாமி நிலத்தைப் பற்றிய சட்டம் கொண்டு வரப்பெற்றபோது, அதற்கான விவாதம் இங்கே நடைபெறும்பேர்து, மாண்புமிகு உறுப்பினர் இளைய பெருமாள் அவர்களைத் தவிர, வேறு யாரும் அவர்களுடைய கட்சியில் பேச முன் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் நண்பர் இளையபெருமாள் அவர்கள் அந்த சட்டத்தை வரவேற்று பேசியமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அவருக்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படி பினாமி ஒழிப்புச் சட்டத்திலே ஓட்டை உடைசல்கள் இருந்திருந்தால், அதை இங்கேயே எடுத்துச் சொல்லி, தேவையான திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு இந்த அவையிலேயே அவர்களுக்கு வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் அதைச் செய்யவில்லை. ஆனால், இன்றைக்கு அந்தச் சட்டம் டெல்லியிலிருந்து அனுமதி வழங்கப் பெறாமல் திருப்பி அனுப்பப்படுவதாகச் சொல்கிறார்கள். அப்படி அது திருப்பி அனுப்பப்படுமேயானால் அதற்கு யார் காரணம்! அப்படி அந்தச் சட்டத்திற்கு அனுமதி வழங்க முடியாத அளவிற்கு அங்கே உட்கார்ந்துகொண்டு, அதை யார்தடுத்து வருகிறார்கள் என்று எனக்குத் தெரியும், நண்பர் இளையபெருமாள் அவர்களுக்கும் தெரியும். அதை நான் சொல்ல முடியும். அவர் சொல்ல முடியாது. ஆயினும் அப்படிச் சொல்வது அவையின் மரபுக்கு உகந்தது அல்ல என்பதினால் சொல்லவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே ஒன்றைச் வற்புறுத்த விரும்புகிறேன். அப்படி அந்தச் சட்டத்தை மத்திய அரசினர் திருப்பி அனுப்புவார்களேயானால், நான் நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன், அதை மீண்டும் இந்த அவையிலே கொண்டு வாருங்கள், மீண்டும் அதை நிறைவேற்றி அனுப்புங்கள். இப்படி 3 தடவை திருப்பி அனுப்பட்டும். நீங்களும் 3 தடவை நிறைவேற்றி அனுப்புங்கள், பிறகு அந்த சட்டம் தானாகவே சட்டமாகும். தமிழக மக்கள் உங்களை பாராட்டுவார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அரசு மதுரையிலே உலகத் தமிழ் சங்கத்தை அமைப்பது என்று முடிவு செய்து, அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். நான் மதுரையைச் சேர்ந்தவன் என்ற காரணத்திற்காக அல்ல. தமிழை வளர்த்த ஊர் அது. தமிழ் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகத் தேவையான நடவடிக்கைகளை பல நூற்றாண்டுகாலமாக எடுத்துக் கொண்ட நகரம் அது. அத்தகைய மதுரை மாநகரிலே உலகத் தமிழ் சங்கத்தை ஏற்படுத்துவது நல்ல முடிவுதான். ஆனால், அதனுடைய நோக்கங்களும் பணிகளும் திட்டமிடப்பட்டு வரையறுக்கப்பட வேண்டும்.

உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், இந்தச் சங்கத்திலே வந்து பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும். பல்வேறு வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் இந்த உலகத் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சென்று ஒன்று கூடி கலை நிகழ்ச்சிகள் நடத்தவோ, சொற்பொழிவுகளை நடத்தவோ முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில், இந்தச் சங்கத்தில் விதிமுறைகள் வகுக்கப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்திலே இரண்டாவது பெரிய நகரமாக இருப்பது மதுரை மாநகரம். அந்த நகரத்திலே விமான நிலையம் சரியான முறையிலே இல்லை. போயிங் ரக விமானங்கள் வந்து அங்கே இறங்குவதற்கான வாய்ப்பு வசதிகள் அந்த விமான நிலையத்தில் செய்யப்பெறவில்லை. வெளிநாட்டவர்கள், இந்த போயிங் ரக விமானத்தில்தான் வரவேண்டியவர்காளக இருப்பதினால், அவர்கள் சிற்பக் கலைக்கும், கலாச்சார பண்பாட்டிற்கும் தலைசிறந்த மதுரை நகரத்திற்கு வர முடியாமல், சென்னையிலிருந்து மகாபலிபுரம் சென்று, அப்படியே திரும்பிப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது.

[இரவு 7-50]

ஆகவே, மதுரை விமான நிலைய ஓடுபாதையை விரிவுபடுத்த தக்க நடவடிக்கைகளை நமது அமைச்சரவை எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் அண்மைக் காலத்தில் பெரும் தொழில்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. மத்திய அரசு தொழிற்சாலைகள் எதுவும் அண்மைக்காலத்தில் தமிழ்நாட்டில் அமைக்கப்வில்லை. அதன் காரணமாக பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் பெரியதொரு தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்திருக்கிறது. என்ஜினியரிங் டிக்ரி, டிபளமா பெற்றவர்கள் ஏற்கனவே அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் இல்லை. ஆகவே, எச்.எம்.டி. யூனிட் ஒன்றை தமிழ்நாட்டில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை நமது ஆட்சி எடுக்க வேண்

டும், மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த எச்.எம்.டி. யூனிட்டை மதுரையில் அமைத்தால் நான் மிக்க நன்றியுடையவனாக இருப்பேன்.

மதுரை, கோவை போன்ற நகரங்களில் மக்களுக்கு மலிவான போக்குவரத்து வசதி இல்லை. சென்னையில் மலிவுப் போக்குவரத்து வசதி இருக்கிறது. அதோடு கூட, மதுரையைச் சுற்றி மின் ரெயில் விடும் ஒரு திட்டத்தை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரில் குடிநீர் பற்றாக்குறை உச்சகட்டத்தை அடைந்திருக்கிறது. அந்தப் பற்றாக்குறையைப் போக்கி மதுரை மாநகர மக்களுக்கு குடிநீர் தங்குதடையின்றி கிடைப்பதற்கு இந்த அரசு திட்டம் தீட்ட வேண்டும். ஏற்கெனவே போடப்பட்டு இருக்கிற திட்டங்கள் அமலாகவில்லை. மதுரை மாநகரில் உள்ள பம்பிங் ஸ்டேஷனுக்கு முழுநேர மின்வசதி இல்லை. அதனால், மதுரை மக்களுக்கு தினமும் இரண்டு மணி நேரம்தான் நீர் கிடைக்கிறது. அந்நிலையை மாற்ற வழிவகை செய்ய வேண்டும்.

இறுதியாக இந்த அரசு தன்னிறைவுத்திட்டத்தின்கீழ் 69 வட்டாரங்களை எடுத்துக்கொண்டு மேலும், 150 வட்டாரங்களில அத்திட்டத்தை விரிவாக்க இருப்பதை நான் பாராட்டுகிறேன். மற்ற வட்டாரங்களிலும் இந்த தன்னிறைவுத் திட்டத்தை விரைவில் அமுல் நடத்த வேண்டும்.

மதுரை, கோவை பெண் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிக்க 50 குழந்தைகள் காப்பகங்கள் அமைக்க இருப்பதை நான் பாராட்டுகிறேன். 33 வளர்ச்சி வட்டாரங்களுக்கு சத்துணவுத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு நன்றி.

விவசாயிகள் கடன் சுமையைக் குறைக்க அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

அதே போல் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகளை நான் வரவேற்கிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் இவை சரியாகச் செயல்படவில்லை. அதில் நிறைய ஊழல்கள் நடைபெறுகின்றன. அதைக் கண்காணித்து இந்தத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு எனக்கு இந்த வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கை மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்துள்ள தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் நமது மாநில வளர்ச்சிக்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் தமது அறிக்கையில் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

'' கடந்த பல ஆண்டுகளாக இந்திய கூட்டாட்சி அமைப்பின் நடைமுறைப் போக்கானது, மாநிலங்களின் மனப்பான்மையில் ஒரு விதமான விரக்தி நிலையை உருவாக்கியிருக்கிறது. மாநிலங்கள் வெறும் சுங்கம் பெறும் மாநகராட்சி மன்றங்களைப்போல் மிக விரைவாக மாறிவருகின்றனவோ என்று கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. மாநிலங்கள் நாளுக்குநாள், மேலும், மேலும் விரக்தி அடைந்துகொண்டே போகின்றன. மத்திய அரசானது அரசமைப்புச் சட்டத்தை மறுபார்வையிடவும் மறுஆய்வு செய்யவும் வேண்டும் என்பதைத்தான், மாநிலங்கள் இப்பொழுது கோரிக்கையாகக் கொண்டிருக்கின்றன '' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையை பத்திரிகைகளில் பார்த்துவிட்டு தமிழக மக்கள் எல்லோரும் அதைப் பாராட்டுகிறார்கள்.

நாம் சுதந்திரம் அடைந்து 33 ஆண்டு காலமாகியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வருவதற்கு முன்பாக, சுதந்திரம் பெற்ற 30 ஆண்டுகளாக கிராமங்களிலே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் தன்னிறைவு பெறுகின்ற வகையிலே திட்டங்கள் தீட்டப்படவில்லை. புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் இந்தத் தன்னிறைவுத் திட்டம் தீட்டப்படுள்ளது. இந்த தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி, முன்பு ஆண்டு கொண்டிருந்தவர்கள் இப்போது இந்த சட்டமன்றத்திலும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சிந்தித்துப்பார்க்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால், கிராமத்திலேவாழ்கின்றமக்களுக்கு அடிப்படைத் தேவைகளான சாலை வசதிகள், பாலவசதிகள், நீர்ப்பாசன வசதிகள், பள்ளிக்கூட கட்டிடங்கள், தாய்-சேய் நல விடுதிகள் போன்றவற்றை செய்தால்கூட, இந்த மாமன்றத்திலே உள்ள சிலர் குறை கூறிக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இதை, தமிழகத்திலே உள்ள கிராம மக்கள் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இன்று நமது தமிழகத்தில் வறட்சியானது மிகவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, 8 மாவட்டங்கள் இதனால் பாதிக்கப்பட்டதாக அறிவித்தார்கள். அதற்குப் பிறகு, முடிவாக இப்போது அதிகாரிகள் சரியான தகவலைக் கொடுத்ததற்குப் பிறகு, தமிழகத்திலே முதல்வர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அமைச்சர்களும், அந்தந்த மாவட்டங்களிலே சுற்றி வந்ததற்குப் பிறகு 11 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த 11 மாவட்டங்களில், என்னுடைய மாவட்டமாகிய நெல்லை மாவட்டத்திலே, அந்தப் பகுதியில் தாமிரபரணி ஓடுகின்ற காரணத்தினால், அந்த மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும் நீக்கி விட்டார்கள். எனவே, ஆய்வு செய்து ஆட்சித் தலைவர் அவர்கள் இது குறித்து ரிப்போர்ட்டை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். உண்மையிலேயே என்னுடைய தொகுதியாகிய விளாத்திகுளம் மாத்திரமல்லாமல், நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி, சங்கரன்கோயில், இராதாபுரம், நாங்குனேரி, ஆகிய பகுதிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றைய முன்தினம் வந்த காலைப் பத்திரிகையிலேகூட என்னுடைய மாவட்டம் சேர்க்கப்படவில்லை என்பதற்காக, இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, மானாவாரீக் கண்மாய்களும், குளங்களும் பெருகவில்லை. ஆயக்கட்டு நஞ்சைகளில் போதிய தண்ணீர் இல்லாமல் சாவியாகப் போய் விட்டன. அதனால், மானாவாரி மகசூலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கிறது. குளங்களில் தண்ணீர் பெருகாத காரணத்தினால், கிணறுகளில் தண்ணீர் ஊற்று இல்லை என்ற காரணத்தினால், அங்குள்ள மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்த குறிப்பிட்ட பகுதிகளை வறட்சி பகுதிகளாக அறிவித்து, அதற்கான நிதியை ஒதுக்குவதோடு அல்லாமல், அங்கே திலவரியை வஜா செய்ய வேண்டும்; கடனுதவியை ஒத்தி வைக்க வேண்டும். இதற்கான உத்திரவிட்டாலும்கூட, அங்குள்ள அதிகாரிகள் ஜப்தி செய்வதற்கு உத்தரவிடுகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும்.

இதற்காக நாம் திட்டங்கள் தீட்டி, போர்க்கால நடவடிக்கைகள் போல் எடுப்பதை தமிழக மக்கள் அறிவார்கள். ஆகவே, இந்த மன்றத்திலே, இதைப்பற்றி குறை கூறுகின்றவர்கள், அவர்கள் நெஞ்சத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் இதிலே தீவிரமாக போர்க்கால நடவடிக்கை போல் நடவடிக்கைகள் எடுத்து, செயல்பட்டு வந்தார்கள் என்பதை இந்த தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

அதே நேரத்திலே, ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த 53 கிராமங்கள் அடங்கிய அந்தப் பகுதிக்கு குடிநீர் வழங்க, 53 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், 10 கிராமங்கள் தவிர, மற்ற கிராமங்களுக்கு வழங்கப்படவில்லை. ஏறத்தாழ 6 வேமல்கள் நடந்து சென்று குடிநீர் வழங்கப்படுகின்றது. எனவே, இந்த மற்றப் பகுதிகளையும் வறட்சி நிவாரணப் பணியிலோ அல்லது மற்றப் பணியிலோ சேர்த்து, குடிநீர் வடிகால் திட்ட அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு உத்தரவு அனுப்பி, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக கிராமங்களிலே இருக்கின்றவர்களுக்கு அரிசி, மண்ணெய், சீனி போன்றவை வழங்கப்படுகின்றது. அப்படி வழங்கப்படுகின்ற கடைகளிலே, ஏற்கனவே ஒரு கார்டுக்கு குடும்பத்திலே இருவர் இருந்தாலும், 10 பேர்கள் இருந்தாலும் 6 கிலோ அரிசிதான் கொடுக்கப்படுகிறது. அப்படியில்லாமல் நபர் வாரி அடிப்படையிலே அரிசி வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், தன்னிறைவுத் திட்டத்தில் ஏற்கெனவே 69 ஊராட்சி ஒன்றியங்கள் அறிவிக்கப்பட்டு, வேலைகள் செய்யப்பட்டன. ஆனால், அதிகாரிகளை நியமிப்பதிலே காலதாமதமான காரணத்தினால், சில வேலைகள் நின்றுகொண்டிருக்கின்றன. எனவே, இதை மேலும் 3 மாத காலத்திற்கு நீட்டித்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி காரணமாக, அங்குள்ள மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கின்ற நென்மேனி அலணைக்கட்டுத் திட்டத்தை சுமார் 7 கோடி மதிப்பில் ஆய்வு செய்து, அதுபற்றி அரசு ஒப்புதலுக்கு வந்திருக்கிறது. அந்த வேலையைத் துவங்கினால், அங்குள்ள மக்கள் பக்கத்து மாவட்டங்களுக்குச் செல்லாமல், அங்கே வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கின்ற நிலைமை உருவாகும். அதே சமயத்தில், சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்த குளங்களை பரவலாக ஆய்வு செய்ய வேண்டும். புதிய சிறு பாசனத்திற்கான பல்வேறு மதிப்பீடுகள் சென்னைக்கு வந்து, இங்கே ஒப்புதலுக்காக வந்திருக்கிறது. முத்துகுமாரபுரம், கருப்பூர், டி. புதுப்பட்டி, பூதலப்புரம், கின்னூர், சுப்புலாபுரம், குமாரசக்கனபுரம், முத்தையாபுரம் ஆகிய இடங்களுக்கு சிறுபாசனத் திட்டங்கள் அமைக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. (மணி அடிக்கப்பெற்றது.)

[இரவு 8-00]

*திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது இன்றைக்கு இந்த மாமன்றத்திலே எவ்வளவு தான் இங்கே விவாதங்கள் நடந்தாலும், கொடுக்கப்படுகிற நேரம் குறைவாக இருந்தாலும் நிதி அறிக்கை என்னும் முகத்தான் ஒரு புத்தகம் வடிவமாக கொடுத்திருக்கிறார்கள். அதையே நான் திருப்பி திருப்பிச் சொல்லாமல் மிகச் சிறப்பான இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி விட்டு, ஆகாத பெண்டாட்டி கால் பட்டால் குற்றம், கை பட்டால் குற்றம் என்று சொல்வார்களே, அதேபோல எவ்வளவு தான் திட்டங்களை நல்ல முறையிலே வைத்தாலும், இந்த மாமன்றத்திலே அதிலே குறை காண்பதிலேயே நோக்கமுடையவர்களாக இருக்கிறவர்கள் மத்தியிலே நான் ஒரு கருத்தை வெளியிடலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே இந்த நிதிநிலை அறிக்கையை 'கணக்குப் பிள்ளை பட்ஜெட்' என்று சொன்னார்கள். சிலர் சினிமா மாயை என்றார்கள். நான் அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பதில் சொல்லும் முகத்தான் கடந்த கால வரலாற்றினை, நடந்து வந்த காலடிச் சுவடுகளை கொஞ்சம் திரும்பி பார்க்க ஆசைப்படுகிறேன். காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்திலே மாண்புமிகு காமராஜர் அவர்கள் மிகத் தெளிவாக ஒரு கருத்தை சொல்வார்கள். '' ஏய்! திட்டம் எல்லாம் பணக்காரர்களுக்குத்தான் போய் சேர்கிறதுங்கறேன் ; ஏழைகளுக்கு போய் சேரவில்லைங்கறேன் '' என்று காமராஜர் அவர்கள் எவ்வளவு தான் திட்டங்களைப் போட்டாலும் அது பணக்காரர்களுக்குத் தான் சேர்கிறது, ஏழைகளுக்கு போய் சேர்வதில்லை என்று சொன்னார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் இதே கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொர்க்கவாசல் திரைப்படத்திலே, கதை வசனத்திலே ஒரு கருத்தை வெளியிட்டுச் சொன்னார்கள். '' சாலை ஓரத்தில் சிலர், வேலையற்றதாலே மனதிலே விபரீத எண்ணங்கள் பல, இதுதான் காலக்குறி வேந்தே!'' என்று சொன்னார்கள். சாலை ஓரத்திலே இருப்பவன், தெருவிலே பாட்டுப்பாடிக் கொண்டிருப்பவன், தெருவிலே பெட்டிக்கடை வைத்துக் கொண்டிருப்பவன், எல்லாம் மாமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக உட்காருகிறபோது தான் நாட்டிலே ஏழையின் சிரிப்பிலே இறைவனைப் பார்க்கிற மனப்பக்குவத்தைப் பெற்று, மக்களாட்சித் தத்துவத்தின்படி மக்களுக்காக வாதாட முடியும். இதே கருத்தை அமரர் அண்ணா அவர்கள் சொன்னதை, புரட்சித் தலைவர் அவர்கள் நடித்து வெளிவந்த படம், கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னார்கள். சினிமா மாயை என்று சொல்கிற நண்பர்களுக்காக இதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பாட்டிலே அதை

குறிப்பிட்டார்கள். '' எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, இன்னும் எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, நல்ல நாட்டிலே, சத்தியம் தவறாத உத்தமர் போலவே நடிக்கிறார் ; சத்தியம் தவறாத உத்தமர்கள் போல நடித்தவர்கள் எல்லாம், ஏற்கனவே கொள்ளை அடித்தவர்கள் எல்லாம், எவ்வளவோ கமிஷனை சந்தித்தவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்மைப் பார்த்து, நல்லாட்சி நடத்துகின்ற நம்மைப் பார்த்து வருகிறது பார், வருகிறது பார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை குறிப்பிடுவதற்காகத்தான், நான் கடந்த கால, நடந்து வந்த காலடிச் சுவடுகளை திருப்பிப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறேன். '' சத்தியம் தவறாத உத்தமரைப் போலவே நடிக்கிறார், சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளை அடிக்கிறார் ; பக்தரைப் போல பகல் வேஷம் போட்டு பாமர மக்களை வலையினில் மாட்டி இன்னும் எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே '' நாட்டு மக்களுக்காக, நாடு முன்னேற திரைப்படத்திலே இதே புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஏதோ சினிமா கதை சொல்வதாக நினைக்கக் கூடாது. சினிமா அரசியல் எப்படி உருவானது, நடிகர் எப்படி நாடாளுகிறார், நாடாளுகிறவராக எப்படி ஆக்கப்பட்டிருக்கிறார் அவர் எந்த திரைப்படத்திலே என்ன கருத்தைச் சொன்னார் ; இன்றைக்கு எப்படி வடிவம் கொடுத்திருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக அந்தக் கருத்துக்களைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாடோடி மன்னன் திரைப்படத்திலே மார்த்தாண்டன் என்கின்ற ஒரு வேடத்திலே புரட்சித் தலைவர் நடிக்கிறார். அந்த மார்த்தாண்டன் முடிசூட்டு விழாவிற்குச் செல்கிறார். அந்த சினிமாவிலே ஒரு குருதேவர் வருகிறார். ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொன்னது நீக்கப்படுகிறது.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : சினிமாவிலே வருகிற குருதேவர் என்ன சொல்கிறார் என்றால், எனக்கு ஒன்றும் புரியவில்லையே. அதற்கு இன்னொருவர் சொல்வார், சொன்னாலும் புரியாது மண்ணாளும் வித்தை அது. நாட்டிற்கு மன்னனாக்க முடிந்ததே தவிர மனோகரியின் மணவாளனாக்க முடியவில்லையே இந்த மதிகெட்ட மந்தியால் மனோகரியும் வீராங்கனும் தனித்திருக்கும் காட்சியைக் காட்டினால் ஆத்திரத்தில் மார்த்தாண்டன் இட்டுவிடுவான் கையெழுத்தை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பிறகு மாற்றிவிடலாம் இந்த நாட்டின் தலை எழுத்தை. நம் திட்டப்படி சட்டங்களைப் போட்டுக் கொள்ளலாம். அஹ்ஹஹ்ஹ ஹா ஹா. இது திரைப் படம். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் சில காரண காரியங்களைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தான் நான் சில உதாரணங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது) பேரவைத் தலைவ தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால் சில உதாரணங்களைச் சொல்லித்தான் தீர வேண்டியிருக்கிறது. அந்த நேரத்திலே அந்தப் பாத்திரத்திலே புரட்சித் தலைவர் ஒரு கருத்தைச் சொல்வார். அது 1958-ஆவது ஆண்டு, ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்தப் பாத்திரத்திலே சொன்ன கருத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது அமைச்சர் சொல்வார். வீராங்கா, எப்படியாவது நாடு காப்பாற்றப்பட வேண்டும். இல்லையென்றால் நாடு நாசக்காரர்களின் கையிலே மாட்டிவிடும். புறப்படு வீராங்கா' அப்போது சொல்வார், புரட்சித் தலைவர். அமைச்சர் அவர்களே, நீங்கள் மாளிகையிலிருந்து மக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், நான் மண் குடிசையிலிருந்து மாளிகையைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இங்கே அடுத்துக் கட்டுவதற்கு எந்த ஆடை என்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அங்கே அடுத்துக் கட்டுவதற்கு ஆடையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். மக்களாட்சி தத்துவத்தின்படி நான் சொல்கிற திட்டங்களை நிறைவேற்றுகிற காலம் என்றைக்கு வருகிறதோ அன்றைக்குத் தான் நான் ராஜா வேடம் போடுவேன் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குச் சொன்னதை இன்றைக்கு பட்ஜெட்டிலே நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார்கள். இது சினிமா மாயை என்று சொல்கிறார்கள். தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம், கல்வி தெரியாத பேர்களை இல்லாமல் செய்வோம். இந்த பட்ஜெட்டிலே கிட்டத்தட்ட முக்கால் பங்கு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்துச் சொல்கிறபோது, ஆளுக்கொரு வீடு கட்டுவோம், அதில் ஆயக்கலைகளை சீராகப் பயில்வோம், வேடிக்கையாகவே நாளினைப் போக்கிட, கேள்வியும் ஞானமும் ஒன்றாகத் திரட்டுவோம், இன்னும் எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, என்று அன்றைக்குச் சொன்ன கருத்துக்கு ஒப்ப ஏழை மக்கள், அடித்தளத்திலே வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற மக்கள் நன்மைக்காக இந்த பட்ஜெட்டை இந்த மாமன்றத்திலே அறிவித்து இருக்கிறார்கள். அதை நான் பாராட்டுவதோடு இந்த மாமன்றத்திலே என்னுடைய பவானிசாகர் தொகுதிபற்றி (மணியடிக்கப்பட்டது). சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

திரு. ப. தீர்த்தராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்திரா காங்கி

ரஸைச்சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். நாங்கள் துதிபாட வந்தவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் துதி பாடுகிற இயக்கமாகச் செயல்படவில்லை. பொறுப்புள்ள எதிர்க் கட்சியாகச் செயல்படுகிறோம், எதிரிக் கட்சியாகச் செயல்படவில்லை, எதை வேண்டுமானாலும் எரிக்கின்ற கட்சியாக செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே கலைப்பு கலைப்பு என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. வெளியே இருக்கின்ற நாலரைக் கோடி மக்களும் இந்த அரசை காப்போம் காப்போம் என்று கரகோஷம் இட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள நல்ல திட்டங்களை வரவேற்கிறோம்,

[இரவு 8–10]

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் மேற்கொண்ட பணிகளை இந்த அரசு மேற்கொண்டிருப்பதைக் கண்டு மனதார பாராட்டுகிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையிலே மற்ற மாநிலங்களிலே இல்லாத அளவிற்குச் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம், ஊரக ஒருங்கிணைப்புத் திட்டம் என்று பல நல்ல திட்டங்களைப் போட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. ஆனால் அவைகளைச் செயல்படுத்துகின்ற விதத்திலே சில அதிகாரிகள் செய்கின்ற தவறுகளைக் கண்காணிக்க வேண்டுமென்பதையும் என்னுடைய கருத்தாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஊர்தோறும் ஆடிட்டோரியங்களைக் கட்டாமல் ஊர் தோறும் அழகாக பள்ளிக் கட்டிடங்களைக் கட்டியிருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே எங்கள் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. இந்த நிலை என்று மாறப் போகிறது என்ற ஏக்கம் எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. அந்தக் காரணத்தினாலே எங்கள் மாவட்டத்திலுள்ள ஒன்றியங்களையாவது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கவனித்து, மீண்டும் ஓராண்டு அந்த ஒன்றியங்களை தன்னிறைவுத் திட்டத்திலே எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் எங்கள் மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. வற்றாத காவிரி நதி ஓடுகின்றதே தவிர நாங்கள் வறட்சிப் பகுதியில் வாடிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்வித் துறையிலே எங்கள் மாவட்டம் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறது. நேற்றைய பேப்பரிலேகூட வந்திருக்கிறது. தின மலர் பத்திரிகையிலே தர்மபுரி பின்னடைகிறது என்ற தலைப்பிலே போட்டிருந்தார்கள். படித்தவர்களுடைய சதவீதம், தமிழகத்திலே இருக்கின்ற சதவீதத்தினுடைய எண்ணிக்கையைவிட மிகக் குறைவாக 28 சதவீதமாக உள்ள நிலையிலே இருக்கிறது. அந்த நிலை மாறுவதற்குத் தனிச் சிறப்பு நிதி ஏதாவது ஒதுக்கிச் செய்து கல்வியிலே எங்கள் மாவட்டம் முன்னேற்றம் அடைவதற்காக வழிவகைகளைச் செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே மேற்படிப்புக்கான வசதியில்லாத நிலை இருக்கிறது. தர்மபுரியிலே இருக்கின்ற கல்லூரிகளில் மேற்படிப்புக்கான வசதிக்கு அரசு வழிவகை செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச சொல்ல வேண்டுமென்றால், இந்த ஆண்டு மருத்துவக்கல்விக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 1,050 இடங்களிலே தர்மபுரிக்கு மூன்று நான்கு இடங்கள்தான் கிடைத்தன என்பதை மிக வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மிகவும் பாராட்டத்தக்க அளவிற்கு இன்றையதினம் செயல்பட்டு வருகிறது. இதைக் கண்டு அனைவரும் பெருமகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் நான் தூத்துக்குடி அனல் மின்சக்தி நிலையத்திற்குச் சென்றிருந்த பொழுது அங்கேயிருந்த அதிகாரிகள் கூடச் சொன்னார்கள், காங்கிரஸ் ஆட்சிக்கும் பின்னாலே இன்றுதான் மிகச் சிறந்த முறையிலே விரிவாக்கப்படுகின்ற முறையிலே திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று சொன்னார்கள். இதைக்கண்டு நாங்கள் பெருத்த மகிழ்ச்சியடைந்திருக்கிறோம்.

ஆனால் அதிகாரிகள் மட்டத்தில் மிகப்பெரும் மோசடி நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்காணிக்கின்ற விதத்திலே அரசு சற்று கவனமாக இருக்க வேண்டுமென்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல

வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியிலே உள்ள அலுவலகத்திலேகூட ஒரு அதிகாரி இருக்கின்றார்; ஒரு சர்வீஸ் என்று சொன்னால் குறைந்தது 500 ரூபாய்க்குக் குறையாமல் வாங்கிக்கொண்டிருக்கிறார். இந்த நிலையை யாராலும் மாற்ற முடியாத நிலையிருக்கிறது என்பதை மிகவும் வேதனையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மருத்துவத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதி மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறது. காட்டிலாக்கா இருக்கின்ற காரணத்தால் 30 மைல், 40 மைல்களுக்கு அப்பால் மருத்துவமனைக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு அங்கே இருக்கின்ற பொதுமக்களுடைய நிதி உதவியோடு 6 ஏக்கர் நிலத்தை வாங்கி அரசுக்குக் கொடுக்க முன் வந்திருக்கிறேன் என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த இடத்திலே அரசு மருத்துவமனை ஒன்றை அவசியம் அமைத்துத் தர வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை விடுக்கிறேன். ஏனென்றால் ஒருவர் இறந்துவிட்டார் என்று சொன்னால், அவரைப் போஸ்ட்மார்ட்டம் செய்ய வேண்டுமென்று சொன்னால் 30 மைல், 40 மைல்கள் தூக்கி வர வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, அவசியம் மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல் அவர்கள் மோசமான வழிகளில் செல்கிறார்கள் என்று எங்கள் மாவட்டம் அவப்பெயருக்கு உள்ளாகியிருக்கிறது. அந்த நிலை மாற நல்ல திட்டங்களைப் போட்டு அங்கே வேலைவாய்ப்பிற்கு வழி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஹோசூரிலே ஏற்படுத்தியிருக்கிற தொழிற்சாலைகள் அனைத்தும் வேறு மாவட்டங்களிலிருந்து வந்தவர்களால் போடப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே போடுவதற்கு வசதி இல்லாமல் இருக்கலாம்; ஆனால் வேலைவாய்ப்பையாவது எங்கள் மாவட்டத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்குத் தர வேண்டுமென்பது என்னுடைய கருத்து. குறைந்தபட்ச வேலைகூட அங்கே உள்ளவர்களுக்குத் தரப்படுவதில்லை. வேறு மாவட்டங்களிலிருந்து வருபவர்களுக்குத்தான் அங்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலை மாறுவதற்கு அரசு கண்ணுங்கருத்தோடும் இருந்து இந்த மாவட்டத்திலேயிருக்கின்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கையை வரவேற்று இந்த மாமன்றத்திலே என்னுடைய கருத்துக்களை ஒருசில நிமிடங்களிலே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இங்கே பல உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்றும் ஒரு சில உறுப்பினர்கள் அரசுக்கு ஆலோசனை கூறியும், அதே நேரத்திலே சில உறுப்பினர்கள், சொல்லப்போனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் இதை எப்பொழுதும் போல எக்காளம் பேசியும் உள்ளார்கள். எங்களைப் பொறுத்தவரை இந்திய துணைக் கண்டமே பொருளாதாரத்தில் மிகவும் சோர்வடைந்திருக்கின்ற இந்த நேரத்தில் இருப்பதை வைத்துக்கொண்டு தமிழக ஏழை மக்களுக்கு மாற்றிக் கொள்வதற்கு ஒரு உடை கொடுக்க முடியாவிட்டாலும், போட்டுக்கொள்வதற்காவது ஒரு உடையாவது கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று அறியும் போது நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

அதே நேரத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலங்களிலே கொடுத்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கான ஆரம்பநிகழ்ச்சியாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பதை எண்ணி மகிழ்ச்சியுறுகிறோம்.

கிராமப் புற வளர்ச்சியிலே அடித்தளமாக அமைவது கிராமப் புற பொருளாதாரமாகும். கிராமப்புற பொருளாதாரத்திலே இரண்டு முக்கிய துறைகள் ஈடுபட்டுள்ளன. ஒன்று விவசாயத் துறை. மற்றொன்று கால்நடை வளர்ப்பு. அதிலே, விவசாயத் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையின்மூலம் தேவையான அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாசன வசதிக்கு ரூ. 150 கோடியை ஒதுக்கியிருப்பது, விவசாயத் துறையினுடைய வளர்ச்சியை மிகப் பெரிய அளவிலே உருவாக்கும் என்பது நிச்சயம்.

அது போல, கால்நடைப் பராமரிப்பிற்கு எந்த ஆட்சியும் இதுவரை செய்ய முடியாததை, இந்த ஆட்சியிலே அதிக அளவிலே திட்டங்கள் தீட்டியிருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்திலே, மாவட்டந்தோறும், இன்னும் சொல்லப்போனால், ஒன்றியங்கள் தோறும் ஒரு மாதிரி பண்ணையை அமைக்கும் திட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வரவேண்டுமென வேண்டுகோள் வைக்கிறேன். விஞ்ஞான முறைப்படி அபிவிருத்தித் திட்டங்களை நாட்டுமக்களுக்கு எடுத்துரைக்க ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒவ்வொரு கால்நடை உதவி மருத்துவரை

நியமித்து, நாட்டுமக்களுக்கு நல்ல பணி ஆற்றுவதற்கான வழி வகைகளை தமிழக அரசு செய்யவேண்டுமென்பதையும் வேண்டுகோளாக வைக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, குடிநீர் பற்றாக் குறை மிகப் பெரிய பிரச்னையாக இருக்கிறது. பூலாம்பாடியிலிருந்து வெண்ணந்தூருக்கு காவிரி நீர் கொண்டு வரும் திட்டத்திலே, குருசாமிபாளையத்தையும் சேர்க்க ஆவன செய்ய வேண்டுமென தமிழக அரசை வேண்டுகிறேன். அதே நேரத்தில் ராசிபுரம் நகரத்திற்கு தற்சமயம் பனைமரத்துப் பட்டியிலிருந்து வரும் குடி தண்ணீரில் மூன்றில் ஒரு பங்குதான் தரப்படுகிறது. மீதி, மூன்றில் இரண்டு பங்கு சேலம் நகரத்திற்கு வீணாக அளிக்கப்படுகிறது. காரணம், ஏற்கனவே காவிரி நீர் மேட்டூரிலிருந்து சேலத்திற்கு கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே, பனைமரத்துப்பட்டி ஏரியின் பராமரிப்பை இராசிபுரம் நகராட்சியின்வசம் ஒப்படைத்து அதிலிருந்து கிடைக்கும் முழு அளவு தண்ணீரையும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இராசிபுரம் நகரத்திற்கே அளிக்கவேண்டுமென்றும் அப்படி அளிக்கப்படுகின்ற நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் தொகுதியில் உள்ள மல்லூருக்கும் என்னுடைய தொகுதியில் உள்ள அத்தனூர், மாக்காளிப்பட்டி ஆகிய ஊர்களும் பயனடையும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நெய்தலுக்கு மட்டும் பெயர் பெற்ற தொகுதி அல்ல என்னுடைய தொகுதி. செய்யும் தொழிலுக்கும் பெயர் பெற்ற தொகுதி. ஆகவே, நெசவாளர்கள் மிக அதிகமாக இருக்கிற என்னுடைய தொகுதியிலே இன்றைக்கு இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அவைகளையெல்லாம் அரசு கொள்முதல் செய்யலாம். இன்றைக்கு சேலத்திலே கைத்தறி கண்காட்சியை அரசு அமைத்துள்ளது. அந்தக் கைத்தறி கண்காட்சியிலே தரப்பட்டிருப்பது 10 சதவீத தள்ளுபடிதான். ஏனைய நாட்களிலே தலைவர்களுடைய பிறந்த நாட்கள் அல்லது தீபாவளி போன்ற பண்டிகை நாட்களிலே 20 சதவீதம் தள்ளுபடி தருகின்ற அரசு, இன்றைக்கு கைத்தறி துணிகள் மலிந்து கிடக்கின்ற இந்த நேரத்திலே 10 சதவீதம் ஆகக் குறைத்திருப்பதற்குக் காரணம் புரியவில்லை. அதை 20 சதவீதம் ஆக அதிகப்படுத்தி ஓரளவிற்காவது, நெசவாளர் பெருங்குடி மக்களுடைய வயிற்றிலே கஞ்சி வார்ப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றுக்கு முன்தினம் எதிர்க்கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் பேசும்பொழுது கழகத்தினுடைய ஆட்சி அதிகார துஷ்பிரயோகம் செய்கின்றது என்று செல்வராஜ்

என்பவருக்கு பதவி உயர்வு கொடுத்ததைப்பற்றிச் சொன்னார். எங்களுடைய ஆட்சி துஷ்பிரயோகம் பற்றி பேசுகிற நீங்கள், உங்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமேயானால், முன்னாள் தலைமைச் செயலாளர் இராயப்பாவையும், முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மகாதேவன் அவர்களையும் பற்றி கேட்டால் உங்களுக்கும் உங்கள் தலைவருக்கும் எப்படிப்பட்ட துஷ்பிரயோகத்தில் நீங்கள் இருந்தீர்கள் என்பது உங்களுக்குப் புரியும் என்று கருதுகிறேன்.

அதே நேரத்தில் காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக அருமை நண்பர் சுந்தரராஜ் அவர்கள் பேசுகிறநேரத்தில் எங்களை யெல்லாம் மாய வலையில் சிக்கிவிட்டீர்கள் என்று சொன்னார்கள். அவருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சிங்கம், நாங்கள் நிச்சயமாக எப்படியும் தப்பித்து விடுவோம். ஆனால் நீங்கள் நீந்த வேண்டுமென்பதற்காக கூவம்நதியிலே நீந்தச் சொல்லாதீர்கள். கடப்பாறை நீச்சல் நிச்சியமாக நீங்கள் போட்டுவிடுவீர்கள் என்று சொல்லி இந்த அளவு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

[இரவு 8—20)

*திரு. பி. துரைராஜ்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 1981—82ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருப்பதை வாழ்த்தி வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன வாக்குறுதியைக் கொடுத்ததோ அவைகளை நிறைவேற்றும் பொருட்டு இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்குப் பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த அரசு சமர்ப்பித்திருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே இந்த அரசை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

குறிப்பாக கல்விக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கி இருப்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையிலே இந்த அரசை பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ம் நாள் முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு இருப்பதை பாராட்டி, அதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் 1650 ஆசிரியர்

களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே காணும்போது உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே போன்று நெல்லை மாவட்ட மக்கள் கோரிக்கைக்கிணங்க, நெல்லை மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரி அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை கொடுத்திருப்பதைக் கண்டு நெல்லை மாவட்ட மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். கல்வித் துறையிலே இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவிதமான மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, அவருடைய சீரிய முயற்சியினால் இன்றைய தினம் கிராமத்திலே உள்ள மக்கள் மேல்நிலைப் பட்டப் படிப்புகளைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

குறிப்பாக என்னுடைய் தொகுதியான சங்கரன்கோயிலைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே இப்போது ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் நிலை மிகவும் கடுமையாக உள்ளது. எனவே அந்த சங்கரன் கோவில் பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவித்து, அதிக அளவில் நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய ஆண்டு வருமானத்தை 3,000-லிருந்து 6,000 ஆக உயர்த்த வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வந்தது. அதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தாலும் மீண்டும் பரிசிலித்து அதை அமல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன்கோவில் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். அங்கே நதியோ, ஆற்றுப் பாசனமோ கிடையாது. எனவே அங்கே கூட்டுறவுத் துறையில் ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கேரளத்திலே உள்ள தண்ணீர் வீணாகக் கடலிலே கலந்துக் கொண்டு இருக்கின்றது. அந்தத் தண்ணீரை இந்த அரசு பெற்று, என் தொகுதியில் உள்ள கிரி ஆற்றுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால், அந்தத் தொகுதி மக்கள் புரட்சித் தலைவர் அவர்களை இதயத்திலே. வைத்துப் பூஜிப்பார்கள், பாராட்டுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சங்கரன்கோவில் தொகுதியில் சங்கரன்கோவில் நகரம் மிக முக்கியமான நகரமாக இருக்கின்றது. அந்தப் புகழ் வாய்ந்த நகரத்தில் அடிக்கடி திருவிழாக்கள் நடக்கும். அந்த சங்கரன் கோவிலைச் சுற்றியுள்ள 20 மைல் சுற்று வட்டாரத்திற்கு எந்தவிதமான தீ அணைப்பு நிலையமும் இல்லை. எனவே இந்த நகரத்தில் ஒரு தீ அணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு சங்கரன்கோவில் நகரத்தில் ஒரு பணிமனையை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன்கோவிலில் வட்டாட்சியாளர் அலுவலகத்துக்கு புதியதாகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து அதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்து வேலை நடந்துக் கொண்டு இருக்கின்றது. அதை விரைவுபடுத்தி அடுத்த ஆண்டிலாவது அந்தக் கட்டிடத்தைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக அந்தத் தொகுதி மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக வழிவகைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துக் கொள்கிற வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கடந்த 5–6 நாட்களாக இந்த நிதி நிலை அறிக்கை மீது பல்வேறு விமர்சனங்கள் இந்த மன்றத்திலே எடுத்து வைக்கப் பட்டன. இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் ஒரே வரியில் கருத்தைச் சொல்ல வேண்டுமானால், இந்த நிதி நிலை அறிக்கை ஒரு 'கலங்கரை விளக்கம்'. கரையிலே நின்று நாலாபக்கமும் ஒளிக் கதிர்களை வீசி கலங்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குபோல் இந்த நிதி நிலை அறிக்கை தமிழ் நாட்டில் உள்ள 4? கோடி மக்களுக்கும் வழி காட்டியாக இருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பாலைவனத்தில் பயணம் செய்கிற ஒருவனுக்கு வழியில் ஒரு நீர்ச்சோலையைக் காண்பது போல், வறட்சியால் வாடும் மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப் பிரசாதமாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இருந்தாலும் சிலர் குறை கூறுகிறார்கள். குறையுள்ள பட்ஜெட்டாக இது அவர்களுடைய கண்களுக்குத் தெரிகின்றது. அது அவரவர்கள் கண்ணோட்டத்தைப் பொறுத்தது. எனவே அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு நாவலர் அவர்கள் நிதி நிலைமையை முட்டுக் கட்டையாகக் கருதாமல் வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளபடும் என்று சொல்லியிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிகரமான செய்தியாகும். இருந்தாலும், இரவும், பகலும் மாறி மாறி வருவதைப் போல், ஒரு ஆண்டு வறட்சியும், அடுத்த ஆண்டு வெள்ளமும், புயலும் ஏற்பட்டு, இப்படி வறட்சிக்காகவும், வெள்ளத் தடுப்புப் பணிக்காகவும் அரசு கோடிக் கணக்கான பணத்தைச் செலவு செய்து கொண்டு வருகிற நிலைமை இருக்கிறது. இவைகள் எல்லாம் வந்தபின் காக்கும் நிலைமையாகத்தான் இருந்து வருகின்றன. எப்படி வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது என்று சொல்வார்களோ அதைப் போல், இன்றைக்கு வற்றாத ஜீவ நதிகளாக வடக்கிலே பல நதிகள் ஓடிக் கொண்டு இருக்கிறபோது, அதையெல்லாம் விட்டுவிட்டு மண்ணுக்குள் ஒளிந்து கொண்டு இருக்கும் நீரைத் தேடி நாம் ஓடிக் கொண்டு இருக்கிறோம். ஒரு பக்கம் வறட்சி நிலைமை இங்கே, அதன் காரணமாக உயிரைக் காப்பாற்ற இங்கே போராடிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் வட மாநிலங்களிலே உயிரைக் குடிக்கிற அளவிற்கு பெருமழை பெய்து, பல நதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து வீணாக அவைகள் கடலில் சென்று கலக்கின்றன. இங்கே பயிர்கள் எல்லாம் காய்கிறபோது, அங்கே பனிக் கட்டி உருகி வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுவதைப் பார்க்கிறோம்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்தியாவின் ஒருமைப்பாடு பற்றி பேசுகிறவர்களிடத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன். காஷ்மீரத்தையும், கன்னியாகுமரியையும் வெறும் வார்த்தைகளால் இணைத்தால் மட்டும் போதாது. கங்கையையும், காவிரியையும் இணைக்கிற அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள். இது நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற திட்டம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு தொலை நோக்கத்தோடு, நிரந்தரமான பரிகாரம் காணத்தக்க வகையில் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்னையைத் தீர்க்க, இந்தத் திட்டத்தை ஒரேயடியாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், பகுதி பகுதியாக, படிப்படியாக நிறைவேற்றுகிற அளவிலே மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதற் கட்டமாக தென் மாநிலங்களுடைய நதிகளை ஒன்றோடு ஒன்றாக இணைக்கிற அந்த முயற்சியை மேற்கொள்ள மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம்தான் வறட்சி, வெள்ள அபாயம் ஆகிய இவைகள் தவிர்க்கப்படமுடியும், நிரந்தரமான பரிகாரமாக இவைகள் இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

அடுத்து மது விலக்கைப் பற்றி பல்வேறு கருத்துக்களை, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதுவும் இங்கே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அதன் மீது கருத்துச் சொல்வதற்கோ அல்லது விமர்சனம் செய்வதற்கோ எந்தவிதத் தகுதியும் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம் மது விலக்கை அவர்கள் ஒத்தி வைத்தார்கள். அப்படி ஒத்தி வைத்தது மட்டுமல்ல, ஒத்தி வைத்ததையும் ஒதுக்கி வைத்தவர்கள் அவர்கள். இதே மாமன்றத்திலே 1971-ல் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற கலைஞர் அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது ஒரு வாதத்தை எடுத்து வைத்தார்கள். "கொழுந்து விட்டெறியும் நெருப்பு வளையத்தின் உள்ளே கொளுத்தாத கற்பூரமாக எத்தனை நாளைக்குத்தான் தமிழகம் தன்னைக் காத்துக் கொள்ள முடியும்" என்ற வாதத்தை எடுத்து வைத்தார்கள். அந்த வாதம் இன்றைக்கும் பொருந்தும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மதுவிலக்கைத் தளர்த்தியதைப் பற்றிப் பேசுகிற காங்கிரஸ் நண்பர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய கட்சித் தலைவராக இருக்கிற பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொன்ன ஒரு கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் '' கன்சாலிடேஷன் ஆப் நேஷனல் கெயின்ஸ் '' என்ற புத்தகத்திலே கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள்.

"இந்த நாட்டிலே சட்டம் போட்டு மதுவை ஒழிக்க முடியவில்லை. பல்வேறு கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், பொருந்தாத முரண்பாடுகள் நிறைந்த இந்திய நாட்டில் மது விலக்கைச் சட்டம் போட்டு அமல் படுத்துவது அநேகமாகத் தோற்றுப்போய்விட்டது. மதுவின் தன்மையைப் பற்றி பிரச்சாரம் செய்வதோடு ஆட்சி நின்றுவிடவேண்டுமே தவிர சட்டம் போட்டு மது விலக்கை அமல் படுத்த முனைவது நோயை விட நோய் தீர்க்கும் மருந்து மோசமானது என்பதை எடுத்துக் காட்டுகிறது" என்று அவர்கள் கருத்து சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, இந்த அடிப்படையில் பார்க்கப்போனால் இன்றைக்கு நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் இருக்கிற நிலைமையை அனுசரித்து மதுவிலக்குக் கொள்கையில் நல்ல முடிவை எடுத்து இருக்கிறது என்று சொல்வேன். இறுதியாக என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூறி என் உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[இரவு 8-30]

சேலம் நகரம் வளர்ந்துவரும் ஒரு நகரம். அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்று கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டால், அது அந்த மாவட்ட மக்களுக்கு மட்டுமல்ல, தர்மபுரி மாவட்டம், பெரியார் மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், வடாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதி ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு மிகவும் நன்மை பயப்பதாக இருக்கும். அந்தப் பகுதிகளிலிருந்து அதிகமான மாணவர்கள் படித்து பயன் படவும் ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை விரைவிலே ஏற்படுத்த வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேலத்திலே இரும்பாலை செயல்படத் தொடங்குகிற நேரத்தில் அதற்கு அருகாமையில் இருக்கிற என்னுடைய தொகுதியில் பல உப தொழில்களை ஏற்படுத்த வசதி இருக்கிறது. அதனால், நிறைய மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலையும் இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கிறவர்கள் தொழில் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கின்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, '' சிப்காட் '' மூலம் மேச்சேரியிலும், தாரமங்கலத்திலும் ஆக இரண்டு தொழில்பேட்டைகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தாரமங்கலம் நெசவாளர் நிறைந்த பகுதியாக இருக்கிறது. ஆகவே, தாரமங்கலத்தில் நூற்பாலையின் கிளை ஒன்றை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மேச்சேரி பகுதியில் வருடம் முழுவதும் மானாவாரி தக்காளி ஏராளமாகக் கிடைக்கிறது. மேலும், அங்கே பெருமளவில் '' வாட்டர் முலாம் பழம் '' கிடைக்கிறது. அவைகளை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்ள அங்கே ஒரு '' பழத் தொழிற்சாலையை '' ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்; பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்று இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததற்காக முதலிலே உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 3,150 கோடி ரூபாய் நமக்கு திட்டமிட்டிருக்கிறார்கள். இதில் மூன்றில் ஒரு பகுதி, 1,023 கோடி ரூபாய் மின்சாரத்திற்காக செலவிடுவது பற்றி நாம் மகிழ்ச்சி அடையலாம். ஆனால், அதே நேரத்தில் அவர்கள் திட்டமிட்டபடி நடக்கின்றதா என்று பார்க்க வேண்டும். இங்கே பட்ஜெட்டிலே பேசுகின்றோம். சென்ற ஆண்டிலேயும் பேசினோம். ஆனால், பேசிய அளவுக்கு, செலவழித்த பணத்திற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதை அறிய முடியவில்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, மின்சார இலாகா பற்றி 1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளுக்கு மின்சார இலாகா அறிக்கை கொடுத்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதைப் போல எல்லா அமைச்சர்களும் இங்கே பேசியதற்கு, யார், யார் என்னென்ன பேசினார்கள், பேசியதில் எது சாத்தியமானது, எது சாத்தியமில்லை ; எது முடியும், எது முடியாது என்பதற்கு ஒரு முடிவு எடுத்தாலொழிய ஏதோ விளையாட்டுக் கூடமாக, விளையாட்டுப் பிள்ளைகள் என்ற எண்ணங்களை மாற்றார்கள் வளர்த்துக்கொள்வதற்கு இடமளிக்கக் கூடாத முறையில் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எதையோ பேசுகின்றார்கள், ஏதோ சொல்லுகிறோம் என்றில்லாமல், அதிலே என்ன கருத்து இருக்கிறது, அதன் சாத்தியக்கூறு என்ன, சாத்தியக்கூறு இல்லை என்றால் ஏன் இல்லை என்பதை ஆராய்ந்து, தெரிவிக்க வேண்டும். அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பலர் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் கூட சொன்னார்கள். மத்திய அரசின் சட்டங்களிலே நமக்கு இடையூறு இருக்கிறது என்று சொன்னார்கள். சில சட்டங்களிலே இடையூறு இருக்கலாம். இல்லை என்று நான் சொல்லவில்லை. அப்படி இருந்தால் அதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன ? வரி விதிப்பிலே, வருமான வரி, விற்பனை வரி இவைகளிலே அதிக பட்சம் எடுத்துக்கொள்வதாகவும், கார்ப்பரேஷனாக நாம் வைத்துக்கொள்வதால் அதிகம் எடுத்துக்கொள்வதாகவும் சொன்னார்கள். உண்மை. அதில் எனக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், அப்படி எடுத்துக்கொண்ட பணத்திலே 1967–68-இல் 1,779.21 இலட்சம் மத்திய அரசின் ஆய்வுத் துறையிலே கிடைத்தது நம் மாநிலத்திற்கு. அதைப்போலவே நமக்கு மத்திய அரசின் உதவி மானியம் 2,876·04 இலட்சம் கிடைத்திருக்கிறது. அதைப்போலவே 1968–69ல் 2,201.99 இலட்சமும், 1969–70ல் 2,229.01 இலட்சமும், 1970–71ல் 2,723.57 இலட்சமும், 1971-72ல் 3,361.96 இலட்சமும், 1972–73ல் 4,011.14 இலட்சமும், 1973–74-இல் 4,519·69 இலட்சமும் நம் மாநிலத்திற்கு கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருப்பார்களேயானால் நான் பாராட்டி இருப்பேன். கிடைத்தது போதாது, இன்னும் அதிகமாகத் தரவேண்டும் என்று சொல்லியிருந்தால் அதுவே எனக்கு ஒன்றும் குறையில்லை.

இன்று பேசிய நண்பர்கள் எல்லோரும் ஏதோ காங்கிரஸ் கட்சி இந்த தேசத்திலே உள்ள மக்கள் பேரிலே பற்றற்றுவிட்டது போலவும், ஏதோ அவர்கள் வேறு போலவும், நாம் வேறு போலவும் யார் கையிலேயோ ஆட்சி இருக்கின்றதோ என்பதுபோலவும் எண்ணுகின்ற நிலைமை ஏற்பட்டதன் காரணத்தால்தான் இன்று பாட்டுப் பாடவும், சினிமா கதை பேசவுமான நிலைமை ஏற்பட்டு நீ எங்கே வாங்கினாய், நான் எங்கே வாங்கினேன் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சட்டமன்றம் பெரிய பெரிய மேதைகள் எல்லாம் இருந்த இடம். பேரறிஞர்கள் இருந்த இடம் இது. அவர்கள் எல்லாம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது பெரிதல்ல. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், சரி, எதிர்த் தரப்பிலே உள்ளவர்களாக இருந்தாலும் சரி . . .

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, பாட்டு பாடியது பற்றி ஏதோ தவறாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் உங்களை ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை. பாட்டுப் பாடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்றுதான் சொன்னாரே தவிர வேறு ஒன்றும் சொல்லவில்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இளைஞராக இருக்கின்றார்கள். இன்றையதினம் நாட்டிலே இருக்கின்ற உண்மை நிலையை யாரும் மறுக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஒரு அவல நிலையிலே இருக்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டிய கால கட்டத்திலே இருக்கிறோம்.

மக்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் இறப்பதற்கு 30 நாட்களுக்கு முன்பு ஒன்று சொன்னார்கள். இங்கே எதிர்க்கட்சியினராக இருக்கின்ற நாங்களும் காமராஜர் அவர்களைப் போற்று

கிறோம். அண்ணா அவர்களையும் போற்றுகிறோம். உயர்வாகக் கருதுகிறோம். இராஜாஜி அவர்களையும் போற்றுகிறோம். பெரியார் அவர்களையும் போற்றுகிறோம். அம்பேத்கார் அவர்களையும் போற்றுகிறோம். ஆளும் கட்சியிலே உள்ளவர்களும் இவர்களை எல்லாம் போற்றுகின்றனர். அவர்களுடைய தலைமை, திறமை, உயர்வு ஆகியவற்றை எல்லோரும்தான் போற்றுகிறோம். அவர்களுடைய தியாக உணர்வை நாம் அனைவருமே வாழ்த்துகிறோம். அப்படி அவர்களை எல்லாம் போற்றுகின்றபோது நம் கட்சிக்கண்ணோட்டத்தோடு எதையும் சொல்வதில்லை. ஆகவே, இன்றைக்கு நம்முடைய நாட்டிலே இருக்கின்ற அவல நிலையினை நாம் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் ஒரு தடவை சொல்லிக் கொள்கிறேன். இந்த அரசாங்கத்திலே இருப்பவர்களும் அதை உணர்ந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கையிலேதான் நான் இதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பட்ஜெட்டிலே முக்கியமாக நிர்வாகச் சீர்திருத்தம் பற்றி ஒன்றுகூட சொல்லப்படவில்லை. சட்டங்களை நாம் உருவாக்குகிறோம். வழக்கறிஞர்கள் தங்களுடைய வாதத்தால் சில சமயங்களில் உண்மைக்கு மாறானதை உண்மையாகவும் உண்மையை உண்மைக்கு மாறானதாகவும் ஆக்குகிறார்கள். அதனால், உண்மையான குற்றவாளிகள் தப்பித்து விடுகிறார்கள். சில சமயங்களில் நிரபராதிகள் கூட தூக்குமேடை ஏறுகிறார்கள். ஆகவே, அது சட்டத்தின் குற்றமல்ல. வாதாடுகின்ற வழக்கறிஞர்களின் திற மையைப் பொறுத்தது அது. ஆகவே, அது போன்று சட்டங்கள் இருக்கின்றன என்ற ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைத்தாலோ அல்லது மத்திய அரசின் மீது பழியைப் போட்டுவிடலாம் என்று நினைத்தாலோ அது நாட்டுக்கும் நல்லதல்ல, நமது நிர்வாகத்துக்கும் நல்லதல்ல. அது ஏழை மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கும் நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு சம்பந்தமாக என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாமெல்லாம் மாநில அரசுகளுக்கு என்று சில விதிமுறைகளை வைத்திருக்கிறோம். இங்கே அமைச்சர்களாக இருப்பவர்கள் மத்திய அரசு, மற்றும் மாநில அரசு ஆகியவற்றுக்கு என்று இருக்கின்ற விதிமுறைகளை தெரிந்தவர்கள்தான்.

1962 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது நடந்த ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அப்போது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பாரதப் பிரமராக இருந்தார்கள்.

ஜஸ்டிஸ் ராமசாமி கவுண்டரின் சகோதரர் பெரியசாமிக் கவுண்டர் அவர்கள் பாராளுமன்றத்திலே, விவசாயத்திற்கு வருமான வரி விதிக்க வேண்டும் என்ற பிரச்சினை வந்தபோது அதுபற்றிப் பேசினார்கள். அப்போது அவர்கள் இது மாநிலத்திற்கு உட்பட்ட விஷயம், ஆகவே, வருமான வரி விவசாயத்திற்கு விதிக்கின்ற பொறுப்பு மாநிலத்திற்கு இருக்க வேண்டும். ஆகவே, மாநில அரசுகள் இதுபற்றிக் கேட்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படியல்லாமல் சட்டம் இயற்றக்கூடாது என்று சொன்னார்கள். உடனே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அது உண்மை, ஆகவே இந்த பில்லை இப்போது பாஸ் பண்ண வேண்டாம், மாநிலங்களுக்கு அனுப்பி அவர்களுடைய ஆலோசனையைத் தெரிந்து கொண்டு மாநிலங்களின் சம்மதம் மூன்றில் ஒரு பங்குக்கு மேலாக பெற்றால்தான் இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள்.

[இரவு 8-40]

ஆகவே, சட்டத்தை மாற்றுவதினாலோ, திருத்துவதினாலோ அதிலே ஓட்டைகள் இருப்பதினாலோ, ஏதோ பெரிய தவற்றை மாநில அரசு செய்துவிட்டது என்றோ, அ த திருப்பியனுப்புவதினால் ஏதோ மத்திய அரசு கெட்டிக்காரத்தனமாக நடந்து கொள்கிறது என்றோ பொருள் இல்லை. என்னுடைய அருமைச் சகோதரர் திரு. நெடுமாறன் அவர்கள் கூட, அந்தச் சட்டம் திருப்பியனுப்பப்படுவதற்கான காரணம் எனக்குத் தெரியும் என்று சொன்னார்கள். ஆனால், எனக்கு உண்மையிலேயே ஒ றும் தெரியாது. உலகத்திலே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்கிற சக்தி எனக்கு ஓரளவிற்கு உண்டு என்றாலும் இந்த விஷயத்தைப் பற்றி எனக்கு என்ன நிலைமை என்று தெரியாது என்றுதான் சொல்கிறேன். எது எப்படி இருந்தாலும், இந்த அரசு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணுகிறது, அந்த நம்பிக்கையிலே தான் இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற எண்ணத்தினால்தான், இந்த சபையிலே ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டும் அல்லாமல், எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களும், இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு, தங்கள் ஆதரவைத் தெரிவித்து ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை.

அதைப்போலவே மதுவிலக்குச்சட்டம் என்று எடுத்துக்கொண்டால், இந்த மதுவிலக்குச் சட்டத்தை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1937 ஆம் ஆண்டு இந்தியாவிலே தான் பிறந்த சேலம் ஜில்லாவிலே முதன் முதலாகக் கொண்டு வந்தார்கள். அந்த ஒரு ஜில்லாவிற்குத்தான் கொண்டு வந்தார்கள். அப்பொழுது

அந்த ஜில்லாவிலே கலெக்டராக இருந்த வெள்ளைக்காரனுக்கும் அவர்களுக்கும் இடையே போட்டிகள் ஏற்பட்டது. ஜாதிபிரஷ்டம் பண்ணப்பட்டது. அத்தனையும் தாங்கிக்கொண்டு அந்தச் சட்டத்தை ஏற்று நடத்தினார்கள். அவருடைய கடைசி காலத்திலே ஒரு முறை கலைஞருடைய வீட்டிற்கு மறைவாகச் சென்றார்கள். அப்படிச் செல்கிறபோது நானும் என்னைப்போன்றவர்களும், அவரிடம் சொன்னோம். 'உங்களுடைய தள்ளாத வயதிலே ஏன் இந்தப் பிரச்னைகள். இப்படி எல்லாம் செல்ல வேண்டாம். உங்களுடைய கருத்துக்களை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் போவார்களா?' என்று சொன்னோம். அதற்கு அவர்கள் பதில் சொன்னார்கள், 'நீ சிறு பிள்ளை இளையபெருமாள். உனக்குத் தெரியாது. என்னுடைய கடமை இது. அவர்களுக்கு ஓட்டுப் போடும்படி நான் மக்களைக் கேட்டிருக்கிறேன். அந்தக் கட்சியிலே அறிஞர் அண்ணாதுரை போன்ற பெரியவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் நிச்சயமாக எனக்கு உதவி செய்வார்கள். அதுவும் அல்லாமல் கலைஞர் அவர்கள் எனக்கு நன்றாகத் தெரிந்தவர்' என்று சொன்னார்கள். பிறகு அவர்கள் இந்த மதுவிலக்கிலே தோல்வி அடைந்தார்கள். அது வேறு விஷயம்.

ஆனால், தலைவர் காமராஜர் மட்டும் சொன்னார். 'இளைய பெருமாள், இந்த அரசியலைக் கண்டு பயப்பட வேண்டாம். பதவி வேண்டும் என்பவர்கள் எங்கே வேண்டுமானாலும் போகட்டும். பதவி தேவையில்லை—அது இல்லை என்றாலும் கொள்கை வேண்டும் என்பவர்கள் இங்கே என்னோடு உட்கார்ந்து கொள்ளட்டும். நாம் இப்போது ஒரு சூழ்நிலையில்தான் இருக்கிறோம். சினிமா உலகத்தின் பகட்டும், பட்டம் பதவி ஆசைகளும், குறுக்கு வழியிலே பணக்காரர்கள் ஆகவேண்டும் என்ற எண்ணமும் அரசியல்வாதிகளிடையே தோன்றக்கூடிய அவல நிலைமைக்கு வந்துவிட்ட காரணத்தினால்—இந்தச் சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலம் வரும். யாரெல்லாம் பொய் சொன்னார்களோ, யாரெல்லாம் சூது செய்தார்களோ, யாரெல்லாம் வஞ்சக வழி செய்தார்களோ, யாரெல்லாம் மக்கள் நெஞ்சிலே நஞ்சை ஊற்றினார்களோ அவர்கள் எல்லாம் அழியக்கூடிய காலம் வரும். அன்றுதான் உண்மையான சோஷலிசம் வரும். அன்றுதான் ஏழைகளுக்கு உண்மையான ஒரு நல்லாட்சி உருவாகும்' என்று சொன்னார்கள்.

அவர் சொன்ன அதே நிலையை நாம் இன்றும் கண்டுகொண்டிருக்கிறோம். மக்களுடைய வரிப்பணம் வீணான வழியிலே செலவழிவதற்கும், நீ பெரியவனா, நான் பெரியவனா என்ற சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதற்கும் நாம் நம்முடைய காலத்தையும், பணத்தையும் வியர்த்தம் செய்து வருகிறோம். ஆகவே,

இங்கேயுள்ள ஆளும் கட்சி தரப்பினரோ, அல்லது எதிர்க்கட்சித் தரப்பினரோ, யாராயினும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த பெரிய தலைவர்களுக்கெல்லாம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். சட்டசபை என்றால் என்ன? நாம் எதற்காக இங்கே கூடியிருக்கிறோம் நம்முடைய பணிகள் என்ன என்பதை அவர்களுடைய கட்சியினருக்கு விளக்க வேண்டும். அந்த மதிப்பிற்குரிய பெரியவர்களை, அறிஞர் அண்ணா போன்றவர்களை, நீங்கள் ஏற்றுக்கொண்டு, அவரை வழி காட்டியாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, நம்முடைய பணிகளை நாம் செவ்வனே சய்ய வேண்டும். காலத்தையும் பணத்தையும் விரையம் செய்யும் வகையிலே, சபாநாயகர் அவர்களுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தக்கூடிய அவல நிலையிலே, நாம் நடந்துக்கொள்ளக்கூடாது. எல்லோரும் ஒரு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே கொலை வழக்கு சம்பந்மாக சட்டம் இருக்கிறது. கொலை செய்தால் தூக்குத் தண்டனை உண்டு என்று எல்லோருக்கும் தெரிகிறது. அப்படி தெரிந்தும் கூட ஆத்திரத்தின் காரணத்தினால், பொறாமை காரணத்தினால், பேராசைக் காரணத்தினால், அரசியல் வாதிகள் உட்பட அதற்கு மறைமுகமாக ஆதரவாளர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், கொலைகள் நடைபெறுகின்றன. கொலையுண்டவர்கள் எல்லாம் செத்துவிட்டார்களே, ஆகவே இந்தச் சட்டம் இருந்து பிரயோஜனம் இல்லை. எதற்காக இந்தச் சட்டம் என்று அதை எடுத்துவிட்டார்களா? இல்லையே. அல்லது போடுகின்ற கொலை வழக்குகள் அனைத்தும் வெற்றி பெறுகிறதா? இல்லை. உண்மையான குற்றவாளிகள் சிலபேர் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவேதான் மற்ற சில மாநிலங்களிலே எல்லாம் மதுவிலக்கு எடுத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். வட மாநிலங்களிலே அது காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த கட்சியாக இருந்தாலும் சரி—வட மாநிலங்களிலே கள் கிடையாது. இங்கே இருக்கும் நிறைய பேர்கள் கள் அங்கே விளைகிறது என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே தென்னை மரமும் விளையாது. பனைமரமும் விளையாது. அந்த மண் வளம் அப்படி. வேண்டுமானால், அங்கே சாராயம் இருக்கலாம், அல்லது வெளிநாட்டுச் சரக்கு போன்றவைகள் இருக்கலாம் அல்லது அதுபோன்ற வேறு சரக்குகள் இருக்கலாம். ஆனால், கள் கிடையாது. தமிழகம், கேரளா, ஆந்திரம், மைசூர் ஆகிய 4 மாநிலங்களிலேதான் தென்னையிலேயிருந்து, பனையிலேயிருந்து நேரிடையாக கள்ளை இறக்குகிறார்கள். வட மாநிலங்களில் இந்த மரங்களே

கிடையாது. ஆகவே, இவற்றை எல்லாம் புரிந்து கொள்ளாமல் நாம் என்ன சொல்கிறோம் என்பதை புரியாமல், நிலைமையை எண்ணிப்பார்க்காமல் பேசக்கூடாது. இந்த மதுவிலக்கு சம்பந்தமாக, விதியையும் தளர்த்திவிட்டு பிரச்சாரமும் அவசியமா என்று சிலர் கேட்கிறார்கள். அது தவறு. பிரச்சாரம் அவசியம் நிச்சயமாகச் செய்ய வேண்டும் என்பது என்னுடைய கருத்து. சட்டத்தினால் அதை முழுமையாக தடுத்துவிட முடிய வில்லை என்பது உண்மை.

ஆனால், 1952 முதல் 1966 ஆம் ஆண்டு வரையிலும் அதை காங்கிரஸ் கட்சியின் ஆட்சி கட்டுப்படுத்தி வைக்கவில்லையா. ஆனால், 1972 க்குப் பிறகு அது நிரந்தரமாக எடுக்கப் பட்டுவிட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டதால் அதை தற்போது சட்டத்தினால் கட்டுப்படுத்த இயலவில்லை. அன்றைக்கு அதை எடுத்தது அன்றைய தி.மு.க., இன்றைய அ.தி.மு.க., நாளை வேறு என்ன தி.மு.க.வாக பெயர் வைக்கப்பட்டாலும், எடுக்கப் பட்டது உண்மை, எப்படியிருந்தாலும் நாம் எல்லோரும் தமிழர்கள்.

நம் தமிழ்நாட்டு மக்கள் வரிப்பணத்தில் நாம் இன்று இங்கே உட்கார்ந்திருக்கிறோம். அதன் பேரில்தான் சம்பளம் வாங்கு கிறோம். விளையாட்டுத்தனமாக எதையாவது சொல்கிற அவல நிலை ஏற்பட்டு, வெளியில் இருக்கிற மக்கள், நம் சபாநாயகர் அவர்களையோ அமைச்சர்களையோ தவறாக எண்ணுவதற்கு இடம் கொடுக்க வேண்டாம். ஆகவே, ஆளுங் கட்சியினர் இதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று கூற எனக்கு உரிமை இருக்கிறது என்ற முறையில் கோரிக்கையாக வைக்கிறேன்.

அடுத்து, கல்வி. சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆனா லும் அது மத்திய அரசாக இருந்தாலும் சரி அல்லது மாநில அரசாக இருந்தாலும் சரி மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தொழில் கல்வியைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னபோது அரசியல் வாதிகள் தெரிந்தோ தெரியாத காரணத்தாலோ அதை ஜாதியைக் காட்டி, மதத்தைக் காட்டி, பிராமணன், பிராமணன் அல்லாதார் என்று சுயநலத்தின் காரணமாக தொழில் கல்வி பயில்வதை—படித்த மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள்..........,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் கொண்டு வந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பேர்களும் எதிர்த்தார்கள். இன்னும் சொல்

லப்போனால் அவர்களுடைய மந்திரிசபை மாறியதற்கே காரணம் அந்த குலதர்ம கல்வித் திட்டம்தான். அந்தத் திட்டத்தை நாங்கள் எதிர்த்ததற்கு காரணம் அரை நாள் மாணவர்கள் படித்துவிட்டு, மீதி அரை நாள் அவர்கள் பெற்றோர்களின் தொழிலைச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்ளாது அனைவரும் எதிர்த்தோம். காங்கிரஸ் காரர்களும் எதிர்த்தார்கள். அதனால்தான் அவர்கள் பதவிகூட பறிபோயிற்று என்று வெற்றி விழாக்கூட கொண்டாடினோம் அடுத்து நடந்த குடியாத்தம் தொகுதி தேர்தலில் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்களை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நாங்கள் அத்தனை பேர்களும் ஆதரித்து வெற்றிபெறச் செய்தோம். இதெல்லாம் வரலாறு. ஆகவே, அது நல்ல கல்வித் திட்டம் என்று இன்று மட்டுமல்ல என்றைக்கும் சொல்ல முடியாது. அத்தகைய எண்ணங்களை நாங்கள் ஆதரிக்க முடியாது.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் கடந்த கால சம்பவங்களை நினைவூட்டியதற்கு நன்றி. எல்லோரும், எதிர்த்தோம் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் எதிர்க்கவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜாதி என்று பெயர் வந்ததால்தான் தகராறு.

திரு. எல். இளையபெருமாள் : குலத்தொழில் என்ற வார்த்தை வந்திருந்தால் அமைச்சர் அவர்கள் ஆட்சேபிப்பதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெற்றோர்களோடு சேர்ந்து அந்தத் தொழிலைச் செய்ய வேண்டும் என்கிறபோது இயல்பாக குலத்தொழில் வருகிறது. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அத்தகைய நிலைமைக்கு எப்படி ஆதரவு கொடுக்க முடியும் ?

திரு. எல். இளையபெருமாள் : அரை நேர பள்ளிப்படிப்பு என்று சொன்னார்கள், பாக்கி அரை நேரம் குலத்தொழில் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள் என்பது இப்போது சொன்ன வார்த்தைகள். இப்போது சொல்கிறேன். அன்று பத்திரிகைகளில் வந்த வார்த்தைகள், குலத்தொழில் என்று போட்டது உண்மை. இராஜாஜி அவர்கள் சொன்னார்களா இல்லையா என்பதை நான் கிட்டேயிருந்து கேட்கவில்லை. ஆனால், அப்படிச் சொல்லி இருந்தால் அந்த வார்த்தைக்காக எதிர்த்தோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் எனக்கு ஆட்சேபனையில்லை.

''என்னைப்பொறுத்தவரையில் அவர்களோடு நான் நேராகப் பேசுகிறபோது ''நான் சொன்ன கருத்து இப்படித்தான் சொன்னேன் அப்பா, இப்படித்தான் நடந்தது'' என்றார்கள். அவர்கள் பதவி துறக்கிற நேரத்தில்கூட நான் அவர்களோடு பேசுகிற வாய்ப்பு கிடைத்ததால் இந்த உண்மையைச் சொல்கிறேன். அரை நேரப் படிப்பு என்று சொன்னார்கள், இப்போது என்ன நடக்கிறது? முனிசிபாலிட்டிகளிலும், கார்ப்பரேஷன்களிலும்......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்காகத்தான் இந்த விளக்கத்தைச் சொல்கிறேன். இப்போது நாம் சிலயிடங்களில் இடம் போதாத காரணத்தால் அரை நேரம் என்று வைத்திருக்கிறோம். ஆனால், அவர்கள் பெற்றோர்கள் தொழிலைச் செய்ய வேண்டும் என்று வர்ணாஸ்ரம தர்மத்திற்கு மறைமுகமான ஆதரவை அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள், நிச்சயமாக அதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர், அவர்களோடு போட்டிப்போட்டு நான் சொல்லவில்லை. வர்ணாஸ்ரம தர்மத்தை ஒத்துக்கொள்ளாதவன் நான். அதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால், தொழில் கல்வி என்று யார் செய்திருந்தாலும் அல்லது இன்று செய்தாலும் அது நல்லது. அதை யார் குலத்தொழில் என்று சொல்லியிருந்தாலும் அவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும், ஆண்டவனாக இருந்தாலும் கூட அதை நான் எதிர்ப்பேன். அதில் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாங்கள் ஆண்டவனை எதிர்ப்பதற்கு அதுதான் காரணம்.

திரு. எல். இளையபெருமாள் : ஆண்டன் பெயரைச் சொல்லிக்கொண்டு ஏமாற்றுவதை எதிர்ப்பதில் நம்பிக்கை உடையவன் நான். ஆனால், ஆண்டவன் என்பதில் நம்பிக்கைக் குறைவு எனக்கு இல்லை. அமைச்சர் அவர்கள் ஆண்டவனை ஒத்துக் கொள்ளவில்லைஎன்றால், ஒத்துக்கொள்ள மாட்டேன் என்றால் அது அவர்கள் சுதந்திரம், எனக்கு ஆட்சேபணையில்லை.

[இரவு 8—50]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் ஆண்டவனை எதிர்க்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானதற்குக் காரணமே, ஆண்டவன் பெயரால், சாதியின் பெயரால் ஏற்றத்தாழ்வுகளை வர்ணாஸ்ரம அடிப்படையில் இன்ன இன்னார், இன்ன இன்னத் தொழிலைச் செய்யவேண்டுமென்று சொன்னதன் காரணமாகத்தான், அவரே

ஆண்டவனை எதிர்க்க ஆரம்பித்தார். அவருக்குப் பின்னால் வந்த நாங்களும், அத்தகைய முறையிலே இருக்கின்ற ஆண்டவனை நிச்சயமாக எதிர்ப்போம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அதிலே ஒன்றும் எனக்கு ஆட்சேபனை இல்லை. மக்களைக் கொடுமைப் படுத்துகின்ற மதத்தை நானும் மதிப்பதில்லை என்று சொல்வதில் எனக்கும் ஆட்சேபனை இல்லை. நான் இப்போது இந்த விவாதத்தில் இறங்கவில்லை. இப்போது அருமைச் சகோதரர் கோவைத் தம்பி அவர்கள் சொல்கிறபோது சொன்னதற்கு, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் பதிலளிக்க வேண்டியிருப்பதால், நான் சொல்வதற்கு சற்றுப் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவைத் தம்பி அவர்கள் தேசிய உணர்வோடு, தேசிய பாசத்தோடு, கொடி காத்த குமரன் மாவட்டத்தைச் சேர்ந்த அவர் அப்படிச் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே சமயத்திலே இந்த தேச விடுதலை, மக்கள் நல்வாழ்வு என்பதிலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இறந்த காலத்தில் எழுதிய உயில் பற்றி சபா நாயகர் ஆகிய உங்களுக்கும் தெரியும். அப்படி அவர் எழுதியதில், '' நான் இறந்த பிறகு என் மகள் வரவேண்டும், என் பேரன் வரவேண்டும், என் உறவினர் வரவேண்டும், என் தங்கை வரவேண்டும், என் பிணத்தை எடுக்க வேண்டும் என்று அப்படியெல்லாம் எழுதவில்லை. அவர் எழுதியதெல்லாம், '' நான் இறந்தால், இந்த நாட்டு மக்கள் என்னை நேசிப்பார்கள். இந்த நாட்டு மக்கள் என்னை நம்பினார்கள். நான் போட்ட திட்டங்கள் எல்லாம், இந்த நாட்டிலே உள்ள ஏழை மக்களுக்குச் சேரவில்லையே என்ற வருத்தம்தான். என்மீது நன்றியுள்ள இந்த நாட்டு மக்களுக்கு நான் இறந்த பிறகு, என்னை எரித்த அந்தச் சாம்பலை, இந்த நாட்டிலே எல்லா இடங்களிலும் தூவி, மண்ணுக்கு எருவாக்குங்கள். இந்த நாட்டு மக்களுக்கு, அவர்கள் என்னிடம் காட்டிய பாச நன்றி உணர்வுக்கு என்னுடைய எரி சாம்பலானது உதவட்டும். அதிலே அவர்கள் நல்வாழ்வு பெறட்டும்'' என்றுதான் சொன்னார்கள். அப்படி சொன்ன உத்தமருடைய காலத்திலே மொழி வெறி, மத வெறி, இன வெறி ஆகியவற்றிற்கு இடமில்லை. அதைத்தான் இந்திராகாந்தி அம்மையார் அவர்களும் நிச்சயமாகச் செய்தார். இது அமைச்சர் பெருமக்களுக்கும் தெரியும். இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். மற்றும் எல்லோருக்கும் தெரியும். ஏழை எளிய மக்கள் நல்வாழ்வுக்கு ஜாதி நிலையற்ற, மத நிலையற்ற, மொழி நிலையற்ற முறையிலே ஆதரவு கொடுப்பதில்லை. அவர்கள், செத்த பிறகு, அவர்களுக்கு மணிமண்டபம் கட்டும் பாழான நிலைதான் இந்த நாட்டிலே இருக்கிறது. இதை ஒத்துக்கொள்ளதான் வேண்டும். இதே குற்றத்தை நாம் மீண்டும் செய்யாமல்,

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்கின்ற நிலைமையிலே நாம் காரியங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லி, நான் இப்போது பட்ஜெட்டிலே பேச வருகிறேன்.

ஆதி திராவிட சமுதாயத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி அவர்களுக்கு ஒழுங்காகச் செலவழிக்கப்படுவதில்லை. மார்ச்சு 31 ஆம் தேதி முடிய இருக்கிறது. இன்றைக்கு 28 தேதியில் இருக்கிறோம். இன்னும் 3 நாட்கள் தான் இருக்கின்றன. எந்தெந்த ஜில்லாவிலே இருந்து எவ்வளவு ரூபாய் திரும்ப இருக்கிறதோ. இந்தப் பணம் முறையாக செலவழிக்கப்படவில்லை. அதைப்போல் வேலை வாய்ப்புப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு இந்த அரசு கொடுக்கின்றது என்பது வாஸ்தவம் தான். அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் கலைஞர் அவர்கள் காலத்தில் பின்தங்கிய மக்களுக்காக 30 சதவீதம் ஒதுக்கப்பட்டு, அது இப்போது 50 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது; அப்படி மாற்றிக் கொடுத்தார்கள். ஆனால் இந்த ஏழை ஆதி திராவிட மக்களுக்கு கொடுக்கப்பட்டது 18 சதவீதம்தான். அவர்களுக்கு விகிதாச்சரப்படி, அரசியல் சாசனப்படி கொடுக்கப்பட வேண்டும். அல்லது மத்திய அரசு உத்தரவுப்படி "தேர் இஸ் ரிசர்வேஷன், ஈவன் இன் புரமோஷன் எக்சப்ட் கிளாஸ் (1)" என்ற நிலைமையை 52 முதல் 81 வரையிலே செய்யாத பாவ காரியங்களை இந்த மாநில அரசு செய்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையை ஏன் செய்கிறார்கள்? அதைக் கேட்டால் சொல்வார்கள் ஏன் உங்களுடைய மத்திய அரசு செய்யவில்லை? ஏன் காங்கிரஸ்காரர்கள் செய்யவில்லை என்று சொல்லலாம். காங்கிரஸ்காரர்கள் செய்யாததால்தான் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால் ஏன், அ.தி.மு.க. அதைச் செய்து மேலும் வெற்றி பெறக்கூடாது? ஆகவே, இந்த ஆதி திராவிட சமுதாயத்தை அலக்கழிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பின்தங்கியோர் ஆஸ்டல், முன் தங்கியோர் ஆஸ்டல் தாழ்த்தப்பட்டோர் ஆஸ்டல் என்ற கேடான காரியத்தைச் செய்ய வேண்டாம். இதைப் பற்றி நான் முதல்வர் அவர்களிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இப்போது இங்கேயும் சொல்ல விரும்புகிறேன். இனிமேல் ஏழை மாணவர்கள், அது பிராமண பையனாக இருந்தாலும், அவன் ஏழையாக இருந்தால், செய்யுங்கள், என்னைப் பொறுத்தவரை அரிசன மாணவனுக்கு மட்டும் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. என்னுடைய கமிட்டி ரிப்போர்ட்டிலேகூட, தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், எல்லா சமுதாயப் பிள்ளைகளும் ஒன்றுபட்ட, எல்லா சமுதாய மக்களும் ஒன்றுபட்ட உணர்வை

உண்டாக்குங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறேனே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. அந்த நல்ல காரியத்தைச் செய்யுங்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அருமைச் சகோதரர் கருப்பையா அவர்கள் சொல்கிறபோது, மத்திய அரசு பூச்சாண்டி காட்டுகிறது என்று சொன்னார்கள். அதெல்லாம் ஒன்றும் கிடையாது. யாரும் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. அதேபோல், சகோதரர் சங்கரய்யா அவர்கள் பேசுகிறபோது ஏழைப்பெண்கள், குடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். பணக்காரர்களும் குடிக்கிறார்கள், படித்தவர்களும் குடிக்கிறார்கள், அறிவாளிகளும் குடிக்கிறார்கள், ஏன் பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் அரசியல்வாதிகளும் குடிக்கிறார்கள். ஆகவே, ஏழை மக்கள் மட்டும் குடிக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேருவின் திட்டம் என்னவாயிற்று என்று சகோதரர் விஸ்வநாதன் அவர்கள் சொன்னார்கள். நேருவின் நல்ல திட்டம் கொண்டு வரப்படுமென்று சொன்னார். நாட்டிலே ஏழை மேலும் ஏழை ஆகிறார்கள். பணக்காரர்கள் மேலும் வசதி உள்ளவர்களாக ஆகிறார்கள் என்று சொன்னாரே தவிர, அவர் அரசை நடத்துகின்ற காலத்தில் ஏற்பட்ட குறைகளை ஒளித்துக் கொள்ளவும் இல்லை, மறைக்கவும் இல்லை. ஆகவே அந்த நிலையை உருவாவதற்கு நீங்கள் தான் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வித் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் ஒதுக்கியிருக்கின்ற தொகை போதாது. இந்த நிலைமைகளை எல்லாம் நல்ல முறையிலே அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மின்சார இலாக்காவில் கொடுத்தது போல 1978–79; 1979–80ஆம் ஆண்டில் கொடுத்தது போல ஒவ்வொரு அமைச்சர் துறையும் என்னென்ன பேசினோம். என்னென்ன நடந்தது என்று கொடுக்க வேண்டும். உறுப்பினர்கள் பொய்யான தகவல்களை கொடுத்திருந்தால், அதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தயங்கக் கூடாது என்று கூறி, அப்படி எடுத்தால் தான் உண்மையான நிலையை உருவாக்க முடியும். இல்லாவிட்டால் மக்கள் வரிப் பணத்தில் கவலையில்லாமல் வாழ்ந்தார்கள் என்று வருங்காலச் சந்ததிகள் நம்மை நிந்திப்பார்கள். அந்த பாவச் சுமையை ஏற்றுக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிராமண மாநாடு நடக்கின்றது என்று சகோதரர் அவர்கள் சொன்னார்கள். பிராமணர்கள் மட்டுமல்ல எல்லோரும் மாநாடு நடத்தலாம். நான் ஒரு கொடுமையினாலே கஷ்டப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே நம்முடைய நீதி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1981 மார்ச் 30.

பங்குனி 17, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல் ".

செய்ய வேண்டியன இவைதான் என்பதை நூல் அறிவாலும் நுண்ணறிவாலும் நன்கு தெரிந்துக் கொண்டபோதும் அந்த இடத்தின் நிலைமையையும் காலத்தின் சூழலையும் அறிந்து அவைகளுக்கு ஏற்ற வகையில் செயல்படுதல் வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடம் இருந்து பெற்ற உதவி.

* வினா எண் 544—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் மின் சக்தியை பரவலாக்க கிராமப் புற மின் இணைப்புக் கழகத்திடம் நிதி உதவி இதுவரை எவ்வளவு பெற்றது ?

(ஆ) மானியம், கடன் விவரம், மாநில அரசு பங்கு எவ்வளவு ?

(இ) இத்திட்டம் செயல்படும் முறை எங்கு எங்கு ஆரம்பிக்கப்பட்டு விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) 1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இறுதிவரை ரூபாய் 3,661.840 இலட்சம் ஆகும்.

நூல்கள், வேதங்கள் முதலியவற்றில் ஜாதி என்பது எங்கும் சொல்லப்படவில்லை ; பின்னால் வந்த ஆட்கள் தான் இதை யெல்லாம் செய்தார்கள் ; இன்று பிராமணர்களை விட பிரா மணர்கள் அல்லாதார் தொல்லை தான் இப்போது தமிழகத்திலே இந்தியாவிலே இருந்து கொண்டிருக்கிறது. இந்திரா காந்தி அம்மையார் ஆட்சியாக இருந்தாலும், நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களின் ஆட்சியாக இருந்தாலும், பிராமணர் அல்லாதாரின் தொல்லை தான் அதிகம் இருந்துக் கொண்டிருக் கிறது என்பதை மறுத்துவிடுவதில் பயனில்லை.

அதை யார் செய்தாலும் குற்றம் என்று தகக் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், ஜாதி பெயரை யாரும் போட்டுக் கொள்ளக் கூடாது என்ற வகையிலே அரசு சட்டம் கொண்டு வரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிடர் என்று கொண்டு வந்தாலும் அதிலே ஆயிரம் பெயரை வைத்து கொண்டிருப்பதிலே பயனில்லை. இவற்றில் எல்லாம் அரசு நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு இந்த சந்தர்ப்பம் தந்த தற்காக நன்றியைக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 30—3—1981 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

243. தமிழ்நாடு 1957ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத் துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப் படம்) துறையின் 1980ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 25ஆம் நாளிடப்பெற்ற 903ஆம் எண் அரசாணையில் வெளி யான அறிவிப்பு [தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்பட (முறைப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

இணைப்பு I.

(1ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 525-அ-க்கான விடையைக் காண்க.)

(அ) 1977–78 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள்.	22
1978–79 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள்.	118
1979–80 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நக்சல்பாரிகள்.	131
(ஆ) 1980 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் முடிய தமிழ் நாட்டில் சிறைச் சாலைகளில் உள்ள தீவிர வாதிகள்.	39

இணைப்பு II.

(118ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 525-இ-க்கான விடையைக் காண்க.)

(அ) 1980-ம் ஆண்டு, ஜனவரித் திங்கள் முதல், அக்டோபர் திங்கள் முடிய 9 நக்சலைட்டுகளும், 3 போலீசாரும் இறந்தனர்.

(ஆ) போலீசாருடன் ஏற்பட்ட மோதலில், துப்பாக்கி சூட்டினால் 6 நக்சலைட்டுகள் இறந்தனர். 3 போலீஸ் அதிகாரிகளும் ஒரு ஆய்வாளரும், இரண்டு காலவர்களும், 3 நக்சலைட்டுகளும் வெடி குண்டு வெடித்ததால் இறந்தனர்.

(ஆ) கிராமப்புற மின் வசதிக் கழகம் முழுவதும் கடனாகவே வழங்குகிறது. மானியம் ஏதும் அளிப்பதில்லை. இந் நிறுவனத் திட்டங்களை நிறைவேற்ற மின் வாரியத்திற்கு தனியே மாநில அரசு, மானியமோ கடனோ அளிப்பதில்லை.

(இ) கிராமப்புற மின் வசதிக் கழகத்தின் திட்டம் 1970—71-ஆம் ஆண்டு முதலாவதாக மதுரை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நீலகிரி மாவட்டம் நீங்கலாக மாநிலம் முழுவதுமாக விரிவாக்கப்பட்டது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே 36 கோடி ரூபாய்க்கும் அதிகமாகப் பணம் பெற்றும் இன்றைய தினம் வரையிலே கிராமங்களிலே தெரு விளக்குகள் எரியாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். தெரு விளக்குக்ள் எரியச் செய்கின்ற நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

மின்வாரியத் தொழிலாளர்களின் பிராவிடண்ட் நிதிக் கணக்குகள்.

* வினா எண் 545—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் நிதி கணக்குகளும், பாஸ் புத்தகமும், எத்தனை ஆண்டுகளுக்கானது கொடுக்கப்படாமலிருக்கிறது ?

(ஆ) அவற்றைக் கொடுக்க முடியாமல் நின்று போனதற்கான காரணமென்ன ?

மாண்புமிகு திரு. ச. இரமச்சந்திரன் :

(அ) மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடெண்ட் நிதி கணக்குகளும், பாஸ் புத்தகங்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை.

(ஆ) நிதி கணக்குப் பராமரிப்புப் பணியினை கணக்கு இயல் பிரிவிலிருந்து திட்டங்கள் மற்றும் வட்டங்களுக்குப் பரவலாக்கப்பட்டதின் (Decentralisation) விளைவாக சில செயல்முறை இடையூறுகள் ஏற்பட்டதால் இது முடியவில்லை. இப்பணியினை உடனே முடிக்கும்படி சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் மின் வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இதே சட்டப்படி கேள்வியிலே கேட்கப்பட்டிருக்கிற பொருள் செய்யப்படாவிட்டால் கடுமையான நிலைமை ஆயிற்றே, மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய நிலைமை ஆயிற்றே. தனியார் துறையிலே உள்ள முதலாளிகள் மீறியிருந்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறபோது உதாரணமாக இருக்க வேண்டிய அரசாங்கமே மீறக்கூடிய நிலைமை இருப்பதால் உங்கள் பேரிலே ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? எடுக்கப்பட்டு இருந்தால் என்ன நடவடிக்கை என்பதைச் சொல்வார்களா ? எடுக்காமல் இருந்தால் அதைப்பற்றி ரெப்ரசன்டேஷன் பண்ணப்பட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நடவடிக்கை தேவையிலலை. காரணம் மாண்புமிகு உறுப்பினர்கூட மின் வாரியத்தின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருக்கிறார். ஆகவே மின் வாரியம் செய்வதற்கு நாமும் பொறுப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் 1972-ஆம் ஆண்டு பாஸ் புக் தரவேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். ஆனால் கணக்குகள் வைக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அல்ல, கணக்குகள் இருக்கின்றன. பாஸ் புக் தேவையில்லை என்ற நிலைமை இருக்கிறது. காரணம் பிராட்மா என்ற இயந்திரத்தின் மூலமாக சம்பளப் பட்டியல் விவரங்கள் தருகிறபோது பிராவிடண்ட் பண்ட் பணம் எவ்வளவு பிடிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் தந்து விடுகிறார்கள். பிரவின்சியல் ஸ்டாபுக்கு நாம் அதைத் தெரிவித்து வருகிறோம். ரெகுலர் ஸ்டாபுக்கு அதை அமல்படுத்தப்போகிறோம். ஆகவே பாஸ் புக் கொடுத்துத்தான் அந்தத் தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. மின்சார வாரியம் சம்பளப் பட்டி தயாரிக்கிறபோது அதையும் சேர்த்து தெரிவித்து விடலாம்.. அதனால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத் தொழிலாளர்களுக்கு பாஸ் புக் வழங்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்கள ஓர்க் லோட் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது பிராவிடண்ட் நிதி, அதாவது அவர்கள் வைப்பு நிதி பற்றிய கேள்வி. வேலைப்பளுவைப் பற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தலைவரவர்களே, மின் வாரியத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் பாஸ் புத்தகம் இன்னும் எத்தனை நாட்களில் கொடுக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 30

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பாஸ் புக்குகள் தேவையில்லை ; இனிமேல் பிராட்மா இயந்திரத்தின் மூலம் சம்பளப் பட்டுவாடா செய்வதை மின் வாரியத்தில் உள்ள எல்லாத் தரப்பு தொழிலாளர்களுக்கும் அமல் படுத்தினால் இந்த பாஸ் புக்கே தேவைப்படாது.

1980-ஆம் வருடத்திய எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு.

* வினா எண். 546—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 மார்ச் மாதத்தில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் ' 0 ' விழுக்காடு பெற்ற பள்ளிகள் எத்தனை? அதில் தனியார் பள்ளிகள் எத்தனை? அரசுப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) 100 சதவீதம் பெற்ற பள்ளிகள் எத்தனை? அதில் அரசுப் பள்ளிகள் எவ்வளவு? தனியார் பள்ளிகள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

	எண்ணிக்கை.
(அ) 1980 மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வில் '0' விழுக்காடு பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை	11
அவைகளில், தனியார் பள்ளிகள் ..	3
அவைகளில், அரசுப் பள்ளிகள்	6
மீதமிரண்டும் மாநகராட்சிப் பள்ளிகளாகும்.	
(ஆ) 100 சதவீதம் பெற்ற பள்ளிகளின் எண்ணிக்கை	56
அவைகளில் அரசுப் பள்ளிகள்	20
தனியார் பள்ளிகள் ..	34
மீதமிரண்டும் நகராட்சிப் பள்ளிகளாகும்.	

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வி. நம்முடைய மாணவர்களைப் பயிற்றுவிக்கின்றபொழுது அவர்கள் அதிக எண்ணிக்கையுள்ள மார்க்குகளைப் பெற பெருமுயற்சி எடுத்துக் கொள்ளும் அதே நேரத்தில்

1981 மார்ச் 30]

தமிழ்நாட்டில் பரவலாகப் பல்வேறு பள்ளிகளில் மாணவர்கள்மீது அறிவுத்துறை மூலம் பயிற்சி கொடுப்பதற்குப் பதிலாக, அடக்குமுறை மூலம் பயிற்சி கொடுத்து பல்வேறு மாணவர்கள் கண்வெட்டுப் போய் இருக்கின்ற செய்தி வந்திருக்கிறது ; இந்தத் துறையில் சமீபத்தில் நடந்திருப்பதாகச் செய்தி வந்திருக்கின்ற நிகழ்ச்சிகளில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது புதிதாக உத்தரவு பிறப்பிக்கப்பட முன் முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்கேயோ நடைபெற்ற ஒரு தவறான நடவடிக்கையைப்பற்றி இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வியோடு சேர்த்துக் கேட்கின்றார்கள். அடக்குமுறையினாலே சொல்லித்தர வேண்டுமென்ற எண்ணம் சரியல்ல. ஆனால், அறிவுத்துறையிலே வளர்ச்சியை உண்டுபண்ணுவது என்பது, ஆசிரியப் பெருமக்கள் தாங்கள் பெற்றிருக்கின்ற பயிற்சிக் கல்வியின் மூலம், அவர்கள் பெற்றிருக்கின்ற அந்த அறிவின் மூலம் பல்வேறு முறைகளைக் கையாண்டு இந்த வளர்ச்சியை மாணவர்கள் பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த மூலக்கேள்வியோடு தொடர்புடைய ஒரு பதிலைச் சொல்ல விரும்புகிறேன். பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இருக்கின்ற இது போன்ற பள்ளிகளில் தனி வகுப்புகளை எடுத்து சிறப்புக் கவனம் செலுத்தி இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டுமென்று இந்தத் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விழுக்காடு மிகவும் குறைந்துள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மீது ஏன் விழுக்காடு குறைந்திருக்கிறது என்று கேட்டு ஏதாவது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? விழுக்காடு அதிகம் பெற்றுள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை, விழுக்காடு அதிகம் பெற்றிருக்கிறது என்ற காரணத்திற்காக உற்சாகப்படுத்துகின்ற முறையில் ஏதாவது தனிப்பட்ட விசேஷ கவனம் செலுத்தி அவர்களுக்கு பரிசுத் திட்டம் ஏதாவது அரசு வழங்கி இருக்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்பொழுது விழுக்காடு மிகவும் குறைவாக உள்ள பள்ளிகள் மலைஜாதியினர் அல்லது பிற்பட்டோர் படிக்கின்ற பள்ளிகளா அல்லது நகர்ப்புறங்களில் இருக்கின்ற நடுத்தர மக்கள் படிக்கின்ற பள்ளிகளா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விழுக்காடு குறைந்து, '0' அளவிற்கு ரிசல்ட் பெற்றிருக்கின்ற பள்ளித் தலைமையாசிரியர்களிடமும், ஆசிரியர்களிடமும் நாம் வழக்கம்போல் எப்பொழுதும் விளக்கம் கேட்பது உண்டு. அவர்களுக்கு இருக்கின்ற பொறுப்பை உணர்த்துகின்ற வகையில் அந்த விளக்கம் கேட்கப்பட்டு மேல் நடவடிக்கை

எடுக்கப்படுகிறது. இதிலே '0' ரிசல்ட் விழுக்காடு பெற்றுள்ள பள்ளிகளில் இரண்டு செவிடர் பள்ளிகளாக இருக்கின்றன; ஒன்று ஜவ்வாது மலையிலே இருக்கின்ற வன உயர்நிலைப்பள்ளி; வேறு சில அரசாங்கப் பள்ளிகள் முதலியவை. 'சென்டெம்' பெற்ற பள்ளிகளுக்கு கல்வியமைச்சர் என்ற முறையில் நாம் பாராட்டுப் பத்திரத்தை அனுப்புகிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் 100 சதவீதம் பெற்ற பள்ளிகளில் அரசுப் பள்ளிகள் இருபது என்று சொன்னார்கள். இருந்தாலும் இது 50 சதவீகத்திற்கும் குறைவாகவே இருப்பது என்பது உண்மையாகிறது. மேலும் இப்படிப்பட்ட பள்ளிகள் நகராட்சிப் பள்ளிகளா அல்லது அரிசன நலத்துறைப் பள்ளிகளா அல்லது நேரடியாகவே கல்வித்துறை மூலம நடத்தப்படும் பள்ளிகளா? இந்தக் குறைபாட்டுக்குக் காரணம், உரிய காலத்திலே போதுமான ஆசிரியர்கள் கிடைக்காமையும், அவர்களுக்கு அவ்வப்போது புத்தக வசதி காலத்திலே கொடுக்கப் படாமையும்தான் காரணம் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சீரோ ரிசல்ட் வாங்கிய பள்ளிகளில் அரிசன நலப் பள்ளி ஒன்றுகூட இல்லையென்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆனால், குறைபாடு என்று வருகின்றபொழுது, நாம் புத்தகங்கள் தருகின்றோம், அல்லது வேறு பல உதவிகளைச் செய்கிறோம் என்றாலும் கூட ஆசிரியர்கள் கொஞ்சம் கவனம் எடுத்துக் கொண்டு சொல்லித் தரவேண்டுமென்றுதான் இந்த சீரோ ரிசல்ட்டைப் பொறுத்த மட்டில் நாம் வலியுறுத்த வேண்டியதாக இருக்கிறது. காரணம், ஒரு ஆசிரியர் ஒரு டியூஷன் வைத்துக்கொண்டால்கூட, அந்தப் பையனாவது பாஸ் செய்திருப்பான். ஆகவே, ஒரு பையன் கூட பாஸ் செய்யவில்லையென்பதில், ஓரளவுக்கேனும் பொறுப்பை பள்ளித் தலைமை ஆசிரியரும், பள்ளி ஆசிரியரும் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்கடுத்த ஆண்டிலே அத்தகைய குறைபாடுகள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டிய நிலையிலே நிச்சயம் பாடுபட்டாக வேண்டுமென்பதை மட்டும் நான் இப்பொழுது சொல்லிக் கொள்கிறேன்.

நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்குப் பணிப்படி.

* வினா எண். 547— திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்கும் பணிப்படி வழங்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அமுல் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடுநிலைப் பள்ளியினுடைய ஆசிரியர்களுக்கு பணிப்படி எந்த அளவிலே கொடுக்கலாம், எவ்வளவு கொடுப்பதாக அரசு ஆய்ந்து வருகிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியினுடைய ஆசிரியர்களாக இடைநிலைத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ரூபாய் 15 பணிப்படி தந்து கொண்டிருக்கிறோம். ஆனால், பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படும்போது, அவர்கள் உயர்ந்த அளவுக்குச் சம்பளம் பெற்றிருப்பதாலே, அவர்களுக்குப் பணிப்படி தரக்கூடாது என்ற ஒரு முடிவெடுத்து தராமல் இருந்து வருகிறோம். மூன்றாவது சம்பளக் கமிஷனும் தர வேண்டியதில்லையென்றுதான் சொல்லியிருக்கிறது. ஆனால், இப்பொழுது ஆசிரியர் சங்கங்களும் மற்றவர்களும் கேட்டுக் கொண்டிருப்பதால் நாம் அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கில மொழிப்பாடம் கற்பித்தல்.

* வினா எண். 548—திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கில மொழிப் பாடம் கற்றுத்தர ஆங்கில இலக்கியம் பயின்ற பி.ஏ., பி.எட்., முடித்த பட்டதாரிகள் 1978–79, 1979–80 ஆண்டுகளில் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) 1978–79 ஆம் ஆண்டில் எவரும் நியமிக்கப்படவில்லை. 1979-80 ஆம் ஆண்டில் மூன்று பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, பல உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம், கணக்கு, விஞ்ஞானம் போன்றவற்றைப் பயிற்றுவிக்க ஆசிரியர்கள் இல்லாமல் அங்கே பாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில், படித்தவர்கள், பட்டம்

பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, இது கல்வி சம்பந்தப்பட்ட விஷயம். ஆகையால் அந்தப் பள்ளிகளுக்கு உடனயாக அந்த சப்ஜெட்டுக்குரிய ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பள்ளிகளிலே அந்தக் குறைபாடு இருக்குமேயானால், அதை எழுதித்தந்தால், அந்தக் குறைபாட்டைப் போக்க நாம் முயற்சி எடுக்கலாம். பொதுவாக, எல்லாப் பள்ளிகளுக்கும் தேவையான ஆசிரியர்களைப் போடுவதற்கான வாய்ப்புகளை நாம் உருவாக்கி இருக்கிறோம். பணியிடங்கள் இருந்து காலியாக இருக்குமேயானால், அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதை நாம் நிறைவு செய்யலாம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், குறிப்பிட்ட இடத்தைச் சொல்லுங்கள் என்று. தென்னாற்காடு மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் அதிகமான பாடசாலைகளில் இதுபோன்று ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அது சி. இ. ஓ. மூலமாக, அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. அதனால், ஏன் காலதாமதம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, உயர்நிலைப் பள்ளிகளிலே ஆங்கிலம் போதிப்பதற்கு ஆங்கிலத்தையே சிறப்புப் பாடமாக எடுத்து பயிற்சி பெற்ற பட்டதாரிகளை நியமிக்க வேண்டுமென்பதாகும். இது வரையிலே நாம் அப்படி நியமித்ததில்லை. காரணம், ஆங்கிலத்தை இரண்டாவது பாகமாக எடுத்து, மூன்றாவது பாகமாக கணக்கையோ அல்லது சரித்திரத்தையோ அல்லது வேறு ஏதாவது பாடத்தையோ எடுத்தவர்களுக்கு, அந்த இரண்டாவது பாகமான ஆங்கிலத்திலேயும் மூன்றாவது பாகமான அவருடைய சப்ஜக்டிலேயும் ஆசிரியர் பயிற்சியைத் தந்து, அந்த இரண்டு பாடங்களையும் சொல்லித் தருகின்ற அளவிற்குதான் இதுவரையில் ஆசிரியர்களையும் நியமித்து வந்தார்கள். ஆனால், இப்பொழுது ஆங்கில இலக்கியத்திலே சிறப்புப் பட்டம் பெற்றவர்கள்தான் ஆங்கிலத்தைப் போதிக்க வேண்டும். எப்படித் தமிழிலே தனித் தகுதி பெற்றவர்கள் தமிழைச் சொல்லித் தருகிறார்களோ அப்படி ஆங்கிலத்திலேயே சிறப்புத் தகுதி பெற்றவர்கள்தான் போதிக்க வேண்டுமென்ற கருத்து கொஞ்சம் வளர்ந்து வருகின்ற காரணத்தினால் இப்பொழுது முதன்முறையாக மூன்று ஆசிரியர்களை நாம் நியமித்திருக்கிறோம். இது தொடர்ந்து வளர்வதற்கான வாய்ப்பிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தபால் மூலம் பி.ஏ., பி.எட்., படித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால், கல்லூரியில் தொடர்ந்து பி.ஏ., பி.எட்., படித்தவருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லையென்ற ஒரு பிரச்சினை இன்றைய தினம் தமிழகத்தில் நிலவுவதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வேலையிலே இருக்கின்றவர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் வரும்போது தரப்பட வேண்டுமென்கிற அடிப்படையிலேதான் வேலையிலே இருக்கிற ஆட்கள், தகுதி பெற்ற ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்களுடைய தகுதிகளைப் பெறுகிறபொழுது, அவர்கள் முதல் வாய்ப்பாகப் பெற்று, பதவி உயர்வைப் பெறுகிறார்கள். வேறு தவறான அடிப்படையிலே அல்ல.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆங்கிலம் படித்த மூன்று பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். தமிழகத்திலே வேறு எந்தப் பள்ளிகளில் இருந்தாவது ஆங்கிலம் கற்றவர்கள் வேண்டும் என்று கேட்கப்பட்டதா ? அப்படிக் கேட்கப்படும்போது தடையில்லாமல் கொடுக்கப் பட்டதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதுவரையிலும், இப்போதும்கூட கடைப்பிடித்துக்கொண்டு வரக்கூடிய கொள்கை பி.ஏ., படித்தவர்கள், பி.டி. பட்டம் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் பி.ஏ.-வில் இரண்டாம் பாகத்தில் ஆங்கிலம் சொல்லித் தரலாம் என்ற கொள்கையைப் பின்பற்றி இதுவரையிலும் ஆசிரியர்களை நியமித்து வருகிறோம். ஆனால், இப்போது ஆங்கிலம் தனிப்பாடமாக எடுத்துப் படித்தவர்கள் தேவையாக இருக்கின்றது. அதற்குத் தேவையான வகுப்புகள் இருக்கின்றன, தேவையான பள்ளிகள் இருக்கின்றன என்ற அடிப்படையில் இப்போது முதல்முறையாகமூன்று ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம். இப்போது மேல் நிலைப் பள்ளி என்று வருகிறபோது எம்.ஏ.—வில் லிட்டரேச்சர் படித்தவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் இந்த மேல் நிலைப் பள்ளிகளுக்கு இது பரவலான அளவில் புகுத்தப்பட இருக்கின்றது என்பதைக் கூறிக்கொள்கிறேன். இது ஒரு ஆரம்பம்தான. மேற்கொண்டு வாய்ப்பு கிடைக்கிறபோது அப்போது பணியினுடைய தேவையைப் பார்த்து இந்தப் பதவிகள் போடப்படும்.

[1981 மார்ச் 30

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே தொடர்ந்து மூன்று, நான்கு ஆண்டுகளாக மாணவர்களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே போகின்றது. அந்த அடிப்படையில் ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. பல இடங்களில் இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன. அந்த ப்ரபோஷ படி ஆசிரியர்கள் மற்ற அலுவலர்களைப் போட அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நிதி ஆதாரங்களைப் பொறுத்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களை நியமனம் செய்கின்ற நேரத்தில், வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களில் பேர் பதிவு செய்யும் போதுமான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என்றும், 8 வருடம் 10 வருட காலமாக எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சில் பெயரைப் பதிவு செய்தவர்கள் இருக்கும்போது, அவர்களை விட்டுவிட்டு நேரடியாக நியமனம் செய்வதாகவும் சொல்லப்படுகிறது. மேலும், சிலர் அவர்கள் வயது வரம்புக்கு அதிகமாகச் செல்வதால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றன என்ற காரணத்தால் இந்த 8 வருடம் 10 வருடம் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும் நாம் இத்தகைய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முதன்மைக் கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது கடைப்பிடிக்கப்பட்டுதான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற குறைபாடு சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளிலே இருக்கலாம். ஆனால், அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் அரசுக்கு இல்லை. அவர்களாகவே எடுத்துக் கொள்ளலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆங்கிலம் படித்த 3 பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள. உயர்நிலைப் பள்ளிகளில் எம்.ஏ., படித்தவர்கள்தான் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று உள்ளது. ஆனால், அங்கே ஏற்கெனவே பணிபுரிகின்றவர்கள் பதவி உயர்வு பெற்று விடுவதால், புதிதாகப் படித்துவிட்டு வருகின்றவர்களுக்கு அந்தப் பதவி கிடைப்பதில்லை. எனவே, இதைப் போக்குவதற்கு ஏற்கெனவே வேலை பார்த்துக் கொண்டு இருக்கின்றவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்றும், புதிதாக படித்துவிட்டு வருகின்றவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்றும் நிர்ணயித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

சட்ட இளங்கலைப் படிப்பு.

*வினா எண். 549—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்ட இளங்கலைப் படிப்பை (பி.எல்.), ஐந்தாண்டுகளாக மாற்றும் திட்டம் எந்த ஆண்டிலிருந்து அமுலுக்கு வருகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அனைத்திந்திய வழக்கறிஞர்கள் மன்றத்தின் இறுதி அறிக்கையைப் பொறுத்து தற்போதுள்ள 3 வருட பி.எல். சட்டப் படிப்பை மாற்றியமைப்பது பற்றி முடிவெடுக்கப்படும்.

[முற்பகல் 9–20]

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்ட இளங்கலைப் படிப்பு மூன்று ஆண்டுகள் என்று இருப்பதை ஐந்தாண்டுகளாக உயர்த்துவது தேவையற்றது என்ற எண்ணம் மாணவர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் இருக்கிறது. இந்தப் படிப்பு இன்ஜினீரிங் அல்லது மருத்துவப் படிப்பைப் போன்று தொழில் நுட்பப் படிப்பு அல்ல. ஆகவே, இந்தச் சட்டப் படிப்பை ஐந்தாண்டுக் காலம் என்று மாற்றுவதற்குரிய அடிப்படைக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்ஜினீரிங் கல்வியைப் போன்று சட்டப் படிப்பு ஒரு தொழில் நுட்பப் படிப்பு இல்லை என்கிற கருத்தை மறுக்க வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். காரணம், சட்டப் படிப்பு என்பது சாதாரணப் படிப்பு அல்ல. ஒருவேளை நாம் அதைச் சாதாரணப் படிப்பாக ஆக்கியிருக்கலாம். அதற்கு நிறையப் படிக்க வேண்டி இருக்கிறது. அனுபவம் பெற வேண்டியிருக்கிறது. 10 ஆண்டுக் காலம் கோர்ட்டுக்குப் போனால்தான் சிறந்த வக்கீலாக ஒருவர் ஆகமுடியும். சுப்ரீம் கோர்ட் அளவிற்குச் செல்கிற சென்னையைச் சேர்ந்த—தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமை மிக்க வக்கீல்களைப் பார்ப்பது அபூர்வமாக இருக்கிறது. தொழில் நுட்பப் படிப்பு என்கிற முறையில் சட்டப் படிப்பை இன்னும் நல்ல முறையில் திறம்படச் செய்ய வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புப் பிரச்சினை இல்லாத சட்டப் படிப்பை கர்நாடகா போன்ற பல மாநிலங்களில் தனியார் கல்லூரிகள் நடத்த

அனுமதிக்கப்படுவதுபோல் தமிழ்நாட்டிலும் தனியார் கல்லூரிகளில் சட்டப் படிப்பு நடத்துவதற்கு அரசு அனுமதிக்குமா? தமிழ்நாட்டில் சட்டப் படிப்புப் பட்டத்திற்கு 'பி.எல்' என்று கொடுப்பதற்குப் பதிலாக, மற்ற மாநிலங்களில், வெளி நாடுகளில் கொடுப்பதைப் போன்று "எல்எல்.பி." என்று மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 'பி.எல்.' என்பதற்கும், 'எல்எல்.பி.' என்பதற்கும் வித்தியாசம் இல்லை. பி.எல். என்பதற்கு 'பாச்சிலர் ஆப் லா' என்று சொல்கிறோம். 'எல்எல்.பி.' என்பதற்கு 'பாச்சிலர் ஆப் லாஸ்' என்று சொல்கிறோம். ஆகவே, எந்தவிதமான மாறுதலும் அதில் ஏற்படுத்தத் தேவையில்லை. தமிழ் நாட்டில் தற்போது அரசின் சார்பில் நான்கு கல்லூரிகளில் சட்டப் படிப்பு நடத்தப்படுகிறது. பாண்டிச்சேரியில் ஒரு சட்டக் கல்லூரி இருக்கிறது. அண்ணாமலை நகரில் ஒரு சட்டக் கல்லூரி இருக்கிறது. இந்த வசதி போதும் என்று கருதுகிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் படிப்பைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இந்தச் சட்டப் படிப்பை 100 ஆண்டுக் காலம் சரஸ்வதியின் தம்பியாக இருந்து படித்தாலும், எத்தனை ஆண்டு காலம் சட்டப் படிப்பை வைத்தாலும், கடைசியில் வந்து கை கொடுப்பது அலகாபாத் நோட்ஸ் தான். ரத்தன்லால் படித்து யாரும் பரீட்சை எழுதுவது கிடையாது. டாக்டர்கள் பட்டம் பெறுவதற்கு ஆபரேஷன் போன்று ப்ராக்டிகல் எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டப் படிப்பு படித்தவர்கள் நேரடியாக வக்கீலாகச் சென்று விடமுடியும். ஆகவே, இதற்கு 5 ஆண்டுக் காலம் தேவையில்லை. ஐ.பி.சி., ப்ராபர்ட்டி 1, 2 இருக்கலாம். ரோமன் லா தேவையில்லை. ஆகவே, தேவையான படிப்பை மட்டும் வைத்தால் போதும். 5 ஆண்டுக்காலம் என்று படிக்கச் சொல்லி, காலத்தையும், பணத்தையும் விரயம் செய்ய வேண்டாம். மாணவர்களுக்கும் செலவு, அரசுக்கும் செலவு. ஆகவே, அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு தவறான அடிப்படையில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டு விட்டது என்று எண்ணுகிறேன். 5 ஆண்டுக்காலம் என்று சொல்கிறபோது, பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தபிறகு 5 ஆண்டுக் காலம் படிக்க வேண்டும் என்பது அல்ல. பிளஸ் 2 படித்த பிறகு 5 ஆண்டுக் காலம் படிக்க வேண்டும். அதாவது தற்போது 12 ஆவது படிப்பு படித்த பிறகு பி.ஏ. ஹிஸ்டரி பி.எஸ்ஸி. கெமிஸ்டிரி படிக்கிறார்கள். பிறகு சட்டப் படிப்பு படிக்க வருகிறார்கள். அவர்கள் படித்த பாடத்திற்கும் சட்டப் படிப்பிற்கும் சம்பந்தம் இருக்காது. ஆகவே இத்தகைய படிப்புகளை அவர்கள் படிப்பதற்குப் பதிலாக சட்ட சம்பந்தமான படிப்பைப் படித்து, அதற்குத் தொடர்ச்சியாக இந்தச் சட்டப் படிப்பு படித்து தொடர்ந்து சட்ட அறிவை நல்ல முறையில் பெறுவதற்கான முறையில் அரசு திட்டமிட்டு இருக்கிறது. 12 ஆவது படித்த பிறகு நாம் 5 ஆண்டுக் காலம் படிக்க வேண்டும் என்று சொல்லி வருகிறோம். இரண்டாண்டுக் காலம், மூன்றாண்டுக் காலம் வேறு பட்டப் படிப்பு படித்து விட்டு, வேறு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத நிலையில் சட்டக் கல்லூரிக்கு வரும் நிலை இருப்பதற்கும், இப்படிப் படிப்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. நாம் விரும்புவது, உள்ளபடியே வழக்கறிஞர்களாக வரவேண்டும் என்று சட்டக் கல்லூரிக்கு வருகின்றவர்கள்தான் நல்ல சிறந்த வழக்கறிஞர்களாக ஆகமுடியும் என்பதாகும்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டப் படிப்பு படித்து விட்டு சட்டக் கல்லூரிக்குப் போகிறவர்களின் எண்ணிக்கையை விட, பிளஸ் 2 படித்து விட்டு சட்டக் கல்லூரிக்குப் போகிறவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்கிற காரணத்தால், இப்போது இருக்கின்ற சட்டக் கல்லூரிகளில் இருக்கும் இடங்களை அதிகரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இன்னொரு உண்மையை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது பட்டப் படிப்பு படித்து விட்டு இதற்கு வரவேண்டும் என்று சொல்கிறோம். இப்போது தரத்தில் சிறந்த வகையில் 12 ஆவது வகுப்புப் படிப்பு இருக்கிற காரணத்தால், அது பட்டப் படிப்பின் முதலாண்டுப் படிப்பிற்குச் சமமாக இருக்கிறது. ஆகவே, இன்ஜினீரிங் கல்லூரி, மெடிகல் கல்லூரி போன்ற கல்லூரிகளில் அந்தக் கல்வி படிக்க வேண்டிய ஆண்டுக் காலத்தை ஓர் ஆண்டு குறைத்து இருக்கிறோம். அதாவது, நான்கு ஆண்டு படித்தால் போதும் என்று வைத்து இருக்கிறோம். அப்படி இருக்கிறபோது 12 ஆவது படித்து வெளியே வருகின்ற மாணவர்கள் 5 ஆண்டுக் காலம் இந்தச் சட்டப் படிப்பு படிக்க வேண்டுமா என்பதைக் குறித்து அகில இந்திய வழக்கறிஞர்கள் மன்றம் யோசித்து வருகிறது. 4 ஆண்டுக் காலம் இந்தச் சட்டக் கல்வியும், 6 மாத காலம் பயிற்சி அனுபவமும் பெறவேண்டும் என்கிற முறையில் இந்தப் பட்டப் படிப்பை அமைக்கலாமா என்பது குறித்த இறுதி அறிக்கை அவர்களிடமிருந்து வந்த பிறகு இது குறித்து நாம் பரிசீலனை செய்யலாம். 5 ஆண்டுகள் படிக்க வேண்டும் என்கிற எண்ணம்தான் இப்போது இருக்கிறது.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரி, என்ஜினீயரிங் கல்லூரி, காமர்ஸ் பட்டப் படிப்பு சம்பந்தப்பட்ட படிப்பு பிளஸ் 2 குரூப்பில் இருக்கிறது. அதைப்போல சட்டக் கல்லூரி சம்பந்தப்பட்ட 'எலிமென்ட்ஸ் ஆஃப் லா' போன்றவைகளை எல்லாம் இந்த பிளஸ் 2 குரூப்பில் சேர்த்துக் கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி நாம் வழக்கறிஞர் என்று சொல்லி வைக்கவில்லையே தவிர வழக்கறிஞர்களுக்கு உதவியாக இருக்கிற வக்கீல் குமாஸ்தாக்களுக்கு—' அட்வோகேட் அசிஸ்டன்ட்ஸ் '—தேவையான பயிற்சியை பள்ளிகளில் தொடங்கியிருக்கிறோம். அவர்கள் வழக்கறிஞர்களாக வரும்போது சிறந்த வழக்கறிஞர்களாக இருப்பார்கள்.

ஆயக்காரன்புலம் விவசாயக் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 550—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஆயக்காரன்புலம் விவசாயக் கூட்டுறவு சங்கம் (தஞ்சாவூர் மாவட்டம்) பெரிதாக இருப்பதால் அதைப் பிரித்து பல கூட்டுறவு சங்கங்களாக மாற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆயக்காரன்புலம் விவசாய சேவைக் கூட்டுறவு சங்கத்தை இரண்டு சங்கங்களாகப் பிரித்து மருதூரில் ஒரு புதிய சங்கத்தை ஏற்படுத்த கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி அறிவுறுத்தப் பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஆயக்காரன்புலம் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளிடம் நிதி என்பதைக் காட்டி, வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்கிறார்கள். அதனால் நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை ; வியாபாரிகளிடம் அந்த விவசாயிகள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். அந்தக் கொடுமையிலிருந்து அந்த விவசாயிகளைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஆயக்காரன்புலம் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் மட்டுமல்ல, தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக இருக்கிற விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் நேரடியாக நெல்லை வாங்கும்போது, உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை கிடைக்காமல் விவசாயிகள் உண்மையிலேயே பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு அறிகிறது. அந்த அடிப்படையில்தான் முதல் முறையாக ஒரு நடவடிக்கையை இந்த அரசு தற்போது எடுத்து வருகிறது. கூட்டுறவுத் துறையின் மூலம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் " தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் " மூலமாக விவசாயிகளிடம் நேரடியாக நெல்லை கொள்முதல் செய்ய அரசு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி கொள்முதல் செய்யும்போது மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையை விட அதிகமாக, கிட்டத்தட்ட 160 ரூபாயிலிருந்து 180 ரூபாய் வரையில் குவிண்டாலுக்கு கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள். மத்திய அரசாங்கம் நிர்ணயித்துள்ள லெவி பிரைஸ் குவிண்டாலுக்கு 105 ரூபாய்தான். தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் வியாபாரிகளைப் போலவே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை கொள்முதல் செய்கிறது. இடையிலே இடைத் தரகர்களாக இருக்கிற வியாபாரிகளிடமிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும் ; அதன் மூலம் நுகர்வோருக்கும் நியாய விலையில் அரிசி கிடைக்க வேண்டும் என்ற முறையிலே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 85,000 டன் அரிசி தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் மூலம் நேரடியாக, வியாபாரிகள் கொடுப்பதை விட சுமார் 50 ரூபாய் அதிகமாகக் கொடுத்து, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

திரு பொ. உத்திராபதி : தலைவரவர்களே, ஆயக்காரன்புலம் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஒரு பிரிவு மருதூரில் தொடங்கப்பட இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த மருதூரில் தொடங்கப்படக் கூடிய கூட்டுறவுச் சங்கம் எப்போது தொடங்கப்பட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, நெல் கொள்முதல் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்பொது நெல்லை வைத்திருப்பவர்கள் வசதி படைத்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே லெவி விலையில் மேலும் விவசாயிகளுக்கு அதிகவிலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : தலைவரவர்களே, மருதூரிலே தனியாக ஒரு விவசாயக் கூட்டுறவு சேவை சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு, ஜாயின்ட் ரெஜிஸ்திரார் ஆப் கோவாபரேட்டிவ் சொசைட்டீஸ் கும்பகோணம் அவர்கள் ஏற்கெனவே அதுபற்றி அறிவுறுத்தப் பட்டிருக்கிறார். நெல் கொள்முதலைப் பொறுத்தவரையில் சிறு விவசாயிகள், பெரும் விவசாயிகள் என்று பார்க்காமல் விவசாய உற்பத்திச் செலவுக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கின்ற வகையில் வியாபாரிகள் கொடுக்கும் விலையைவிட கூடுதலாகக் கொடுத்து, விவசாயிகளிடமிருந்து நேரடியாக அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக தமிழ்நாடு மார்க்கெட்டிங் பெடரேஷன் கொள்முதல் செய்ய வேண்டுமென்று முதல் முறையாக உத்தவிட்டிருக்கிறோம். அவர்கள் சிறு விவசாயிகள், பெரும் விவசாயிகள் என்று பார்க்காமல் வியாபாரிகள் கொடுப்பதை விட குவிண்டால் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 50 ரூபாய் கூடுதல் கொடுத்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்திருக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு நல்ல பயன் கிட்டி வருகிறது.

[1981 மார்ச் 30

சிறைத்துறையின் நன்னடத்தைப் பிரிவை தனித்துறையாக்கும் திட்டம்

* **வினா எண். 551 :** திரு. என். எஸ். வி. சித்தன் : திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தற்போது சிறைத்துறையின் ஒரு பிரிவாக உள்ள நன்னடத்தைப் பிரிவை தனித்துறையாக்கும் குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) சிறைத் துறையிலிருந்து நன்னடத்தைப் பிரிவை பிரித்து அது தனித்துறையாக இயங்க வேண்டுமென்று தமிழ் நாடு சிறை நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. அப்பரிந்துரையின் மீது, உயர்நீதி மன்றம் மற்றும் சிறைத் துறைத் தலைவரிடமிருந்து தருவிக்கப் பெற்ற அறிக்கைகள் அரசின் தீவிரப் பரிசீலனையில் இருந்து வருகிறது.

[முற்பகல் 9-30]

திரு இரா. கருப்பையா : பேரவைத் தலைவரவர்களே, சிறை சீர்திருத்தம் சம்பந்தமாக நிர்வாக சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்து பல்லாண்டுகள் ஆகியும் அது அமல்படுத்தப படாமல் இருக்கின்றது. ஆகவே உடனடியாக அதை அமல படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சிறை நிர்வாக சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்திருந்தபோதிலும் உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தையும் ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களுடைய கருத்தையும் இதுபற்றிக் கேட்டபோது அந்த இரு பிரிவினரிடமிருந்தும் மாறுபட்ட கருத்து வந்தது. ஆகவே அதையும் பரிசீலிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டதன் காரணத்தால்தான் சற்று தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களுடைய கருத்து என்னவென்றால் புரபேஷன் பிரிவும், ஜெயில் நிர்வாகமும் ஒன்றுக்கொன்று தொடர்பான பிரிவுகளாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தால் உடனடியாக இதைப் பிரிப்பது என்பது அவ்வளவு நன்றாக இருக்காது என்பது. ஆகவே அந்த அடிப்படையிலேதான் இதை எந்த காலகட்டத்திலே நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கின்றது.

1981 மார்ச் 30

திரு இரா. கருப்பையா : தலைவரவர்களே, சிறையினை நிர்வகிக்கக் கூடிய பிரிவும், நன்னடத்தைப் பிரிவும் ஒன்றாக இருப்பதால்தான் இதைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கின்றது. மேலும் அதே அடிப்படையிலேதான் ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களுடைய கருத்தும் வந்திருக்கின்றது என்று அரசின் தரப்பிலே கூறப் படுகின்றது. ஆகவே உடனடியாக இந்தக் குழுவினுடைய பரிந்துரையை அமல் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கெனவே சீர்திருத்தப் பள்ளியை பிரித்துவிட்டதற்குப் பிறகு அந்த சீர்திருத்தப்பள்ளியிலே எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற் படவில்லை என்றும், மேலும் கோஆர்டினேஷன் அங்கே இல்லை என்றும் ஒரு கருத்துக்கூட தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் ஐ.ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களும் தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். சிறையிலே இருக்கின்ற கைதி சிறையிலே இருக்கின்ற போதும் சிறையை விட்டு வெளியே சென்ற பிறகும் எத்தகைய தொழில் அவர்களுக்குக் கொடுக்கப் படவேண்டும் என்றும் சிறைக்கைதிகளின் ஆப்டிட்யூட் எந் தெந்தத் தொழிலைப் பார்ப்பதிலே இருக்கின்றது என்பதையும் அறிந்துகொள்வதற்கு புரபேஷன் ஆபீஸரின் உதவி தேவைப் படுகின்றது. ஆகவே நிர்வாகத்துறையும், புரபேஷன் ஆபீசரும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டியிருப்பதாலும், கைதி வெளியே வந்தபிறகு அவர்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே எந்தத் தொழிலைக் கற்றுத் தருவது என்பதைத் தெரிந்து அவர்களுக்கு நன்மை செய்யவேண்டி இருப்பதாலும்தான் ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித் திருக்கிறார்கள். ஆகவே அரசு அதைப் பரிசீலித்து வருகின்றது. இருந்தாலும் அக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, குற்ற வாளிகளின் நன்னடத்தையில் அவர்களுடைய வருங்கால வாழ் வும் அடங்கி இருக்கின்றது. ஆகவே அவர்களுடைய நன் னடத்தை என்பது சமுதாயப் பிரச்சினையாக இருப்பதால்

Will it be linked with the Social welfare Department ? Is there any such proposal with the Government

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : தலைவரவர்களே, அத்தகைய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 மார்ச் 30

திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறை சீர்திருத்தம் சம்பந்தமாக ஆராய்வதற்கு சிறைக்கு சென்ற சட்டமன்ற உறுப்பினர்களைப்போன்றவர்களை இணைத்து ஒரு குழு அமைக்கவேண்டும் என்ற கடந்த காலங்களில் சட்டமன்றத்திலே கருத்து தெரிவிக்கப்பட்டது. அப்படி இருந்தாலும் அரசாங்கம் அதிகாரிகளைக் கொண்டு ஒரு குழு அமைத்து அதுபற்றி பரிசீலித்திருக்கிறார்கள். அது இருக்கட்டும். ஆனாலும் சிறையைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதிகாரிகளுக்கு என்ன தெரியும். 6 மாதம் ஒரு வருடம் இரண்டு வருடம் என்று அரசியல் கைதியாகச் சென்று—சாராயம் காய்ச்சிவிட்டு சென்றவர்கள் அல்ல—இருந்தவர்களுக்குத்தான் அங்குள்ள நிலைமைகள் தெரியும். ஆகவே அவ்வாறு அரசியல் கைதியாகச் சென்றவர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்து பரிசீலித்தால்தான் நியாயங்கள் கிடைக்கும், அடுத்து குற்றவாளி ஒருவர் ஜெயிலுக்குப் போகின்றபோது அந்தக் குற்றவாளி வெளியே இருக்கின்றபோது எந்தவிதமான நன்னடத்தையுடன் இருந்திருக்கிறார் என்பதைத் பரிசீலித்து அவர்களே விடுதலை செய்கின்ற அதிகாரங்கள் அதிகாரிகளுக்கு அளிக்கப்படுவது பற்றி இதிலே ஏதாவது குறிப்புக்கள் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட புதிய குழு ஒன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கைக் குறிப்பு அரசினிடத்திலே இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை புதிதாக அமைக்கிற எண்ணம் அரசுக்கு இல்லை. ஆனால் சிறை சீர்திருத்த குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில்மட்டும் இந்த நடைமுறைச்சீர்திருத்தங்களை பரிசீலனை செய்யவில்லை. 1962–63, 1974–75 ஆம் ஆண்டுகளில், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட எஸ்டிமேட் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும் இந்தப் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பெற்றன. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனை ஏற்கெனவே பெறப்பட்டு, அதையும் கருத்தில் கொண்டுதான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சிறையிலே இருப்பவர்களின் புனர் வாழ்வு சம்பந்தமாகத்தான், இந்தத் துறைகள் பிரிக்கப்படாமல் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளை இரண்டாகப்பிரிக்காததின் காரணமாகத்தான் அந்தப் புனர் வாழ்வுப் பணிகள் துரிதமாக நடைபெறவில்லை என்று நாங்கள் எண்ணுகிறோம். அது எப்படியிருந்தாலும், இதுவரை புனர் வாழ்வு பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தெரியவிரும்புகிறேன் ?

1981 மார்ச் 30]

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர் வாழ்வு பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷனைப் பொருத்தவரைக்கும் அவர்கள் கூறிய பரிந்துரை என்னவென்றால், தனித்தனியாக பிரித்தால் அட்மினிஸ்டிரேஷன் எஃபிசியன்டாக இருக்கும் என்றுதான் பரிந்துரை செய்திருக்கிறார்கள். தற்போது சீப் புரோபேஷன் ஆபீசரும், 12 ரீஜினல் புரோபேஷன் ஆபீசர்களும், 96 புரோபேஷன் ஆபீசர்களும் அமைந்தததாக இருப்பதை, ஒரு டைரக்டர் ஆப் புரோபேஷன் என்ற அதிகாரியின் கீழ் இயங்க வேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு குற்றவாளி 10 ஆண்டு காலம் சிறைத்தண்டனை வழங்கப்பெற்றிருந்தால், அவன் 7 அல்லது 6 ஆண்டு காலத்தில் சிறையை விட்டு விடுதலையாகி விடுவார். அந்த நேரத்தில், அவர்கள் வெளியே தன்னுடைய வாழ்க்கையை புனர் அமைத்துக் கொள்ளும் வகையில், ஏதாவது தொழில் ஈடுபடக் கூடிய அளவில், அவர்கள் சிறைக்குள்ளேயே பயிற்சி அளிக்கப்பெறுகிறார்கள். அதனால், இரு துறையும் இணைந்து செயலாற்றினால் நல்லது என்ற வகையில் கருத்து ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் அவர்களால் கூறப்பட்டிருக்கிறது.

கடலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 552—திரு. பாபு கோவிந்தராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கடலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) வேலை எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.

[1981 மார்ச் 30

ஆத்தூர் நகராட்சி குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 553—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையிலிருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு ரூபாய் 23 கோடி.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து, சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மதிப்பீடு தயார் செய்யப் பெற்ற நிலையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1978 ஆம் ஆண்டிலேயே, இந்த மன்றத்திலேயே இதுபற்றிய விவாதம் எழுந்தபோது, அது உடனடியாக மேற்கொள்ளப்படும், எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. இந்தக் திட்டத்திற்கு இதுவரையிலும் எந்தவிதமான செயலும் செய்யப் பெறவில்லை. விரைவில் ஆத்தூருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக முனைப்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய குடிநீர் பற்றாக் குறையைப் போக்க மண்வளர்ந்தான் கிராமத்தில் துவக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளிலிருந்தும், நரசிங்கபுரத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகளிலிருந்தும் தண்ணீர் எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஆத்தூருக்கு குடி நீர் பற்றாக்குறையை நிரந்தரமாக நீக்குவதற்கு சுமார் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காவிரி நதியிலிருந்து நீர் கொண்டு வரும் ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் ஆய்வின்—பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினால், மேச்சூர், ஓமலூர், சேரமங்கலம், ஜாதிகொண்டாரன் பட்டி, சேலம் மற்றும் வழியிலுள்ள கிராமங்கள் அனைத்தும் பயன் அடையும்.

1981 மார்ச் 30]

அச்சங்குளம் குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 554—திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிநீர் வடிகால் வாரியத்தால் துவக்கப்பட்ட அச்சங்குளம் குடிநீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதனை விரைவு படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப் பெற்றுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ). இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், பரமக்குடி மற்றும் கடலாடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 78 சிற்றூர்களுக்காக ஒரு கூட்டு குடிநீர்த் திட்டம் 1978 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு ஆக்கப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. பொதுமக்கள் ஆட்சேபம் செய்ததால் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

[முற்பகல் 9–40]

திரு. செ. சிவசாமி : பொதுமக்கள் ஆட்சேபணை செய்ததால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பொது மக்கள் யாரும் தண்ணீர் வேண்டாம் என்று சொல்லவில்லை. தண்ணீர் வேண்டும் என்றுதான் சொன்னார்களே தவிர ஆட்சேபணை செய்யவில்லை என்று நினைக்கிறேன். ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பொது மக்கள் தண்ணீர் வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். ஆனால் எங்கே நீர் ஆதாரம் இருக்கிறது என்று கருதி அங்கே நீர் எடுக்கப் போகிறோமோ அந்த ஊரைச் சேர்ந்தவர்களும் அதைச் சுற்றியிருப்பவர்களும் அங்கேயிருந்து குடிநீருக்காக தண்ணீர் எடுத்துக் கொண்டு வேறு ஊருக்குக் கொண்டு போனால் எங்கள் ஊர் விவசாயம் பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதன் காரணமாக, இந்தத் திட்டம் மட்டுமல்ல பல்வேறு நல்ல காம்ப்ரிஹென்ஸிவ் ஸ்கீம்ஸ், கூட்டு குடிநீர் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் இத்துறையில் அரசோடு ஒத்துழைப்பார்களேயானால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற திட்டங்களை விரைவில் செயல்படுத்த உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்து வேண்டுகோள் விடுக்கிறேன்.

[1981 மார்ச் 30

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது மிகவும் சரியானது. தமிழ் நாட்டில் பல பகுதிகளில் குடிநீர் வடிகால் வாரியத்தால் கண்டு பிடிக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறைக்கு வராமல் இருக்கின்றன. ஆகவே அந்தந்த வட்டாரத்திலுள்ள அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் வைத்து இந்த விஷயத்தில் பைசல் செய்து துரிதமாக திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வழி வகைகள் கண்டு பிடிக்கப்பட ஏதாவது முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த யோசனை நல்ல யோசனை, அரசு இதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

மருதை ஆற்றின் குறுக்கே சிற்றணை.

* வினா எண் 555—திரு த. ஆறுமுகம்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அரியலூர் அருகே உள்ள மருதையாற்றின் குறுக்கே ஒரு சிற்றணை கட்டி சுற்று வட்டார ஏரிகட்கு பாசன நீர் அளிக்கும் வகையில் 1977–78ம் ஆண்டில் சர்வே நடத்தப்பட்டதா?

(ஆ) அத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) மருதையாற்றின் குறுக்கே சிற்றணை கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்படவில்லை. ஆனால் மருதையாற்றின் பெரம்பலூர் வட்டத்தில் நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் (பாசனம்) ஆய்வில் உள்ளது.

திரு. த. ஆறுமுகம்: அரியலூர் வட்டத்தைச் சேர்ந்த மருதையாற்றின் குறுக்கே பெரம்பலூரில் அந்த அணை சட்டப்படும் என்று சொன்னார்கள். அதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விட்டதா? ஆய்வு செய்யப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பெரம்பலூர் வட்டம், கொட்டாரை கிராமத்திற்கு அருகில் மருதையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 169 இலட்சங்கள். சுமார் 6,240 ஏக்கர் நிலங்கள் (புதிய புன்செய் பரப்பு) பயனடையும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

198, மார்ச் 30]

மருதையாற்றின் உபநதியான அண்ணபாண்டிவாரி ஓடையின் குறுக்கே கட ஊர் கிராமத்திற்கு அருகில் (பெரம்பலூர் வட்டம்) நீர்த்தேக்கம் அமைத்தல். திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 144 இலட்சங்கள். புதிய புன்செய் பரப்பு சுமார் 1,556 ஏக்கர் பயனடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பெரம்பலூர் வட்டம், தாத்தையயாகுளம் கிராமத்திற்கு அருகில் மருதையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 380 இலட்சங்கள். சுமார் 6,350 ஏக்கர் புதிய பரப்பு (புன்செய் நிலங்கள்) பாசனம் பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒன்று மட்டும் மூன்று திட்டங்கள் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன. இரண்டாவது திட்டத்திற்காக மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு வருகிறது என்ற தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு த. ஆறுமுகம்: கட ஊர் என்று சொன்னார்கள். அது கூட ஊர். கூடலூருக்கு அருகில் அணையைக்கட்ட அந்தக்கிராமத்தில் எங்களுக்கு இந்த அணை தேவை இல்லை. வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஆகவே அரியலூர் அருகில் வாதையாங்குளத்தின் பக்கத்தில் கட்டினால் அந்தப் பகுதியில் உள்ள பல கிராமங்களுக்கு பாசனவசதி கிடைக்க ஏதுவாகும். எனவே அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தாத்தையாகுளம் பக்கத்தில்கட்டுவதற்கான கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இரண்டாவது திட்டத்தை அங்குள்ள பொதுமக்கள் ஆட்சேபிக்கிறார்கள் என்று குறிப்பு என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபிறகு அதைப் பற்றி விசாரிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட மூன்றாவது திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

மடிச்சல் கிளைக் கால்வாய் வெட்டும் பணி.

* வினா எண் 556—திரு பொ. விஜயராகவன் மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் : கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரைகால்வாயில் மடிச்சல்—கிளை கால்வாய் வெட்டப்பட வேண்டிய கோரிக்கை மீது அரசு என்ன முடிவு எடுத்துள்ளது ?

(ஆ) அக்கால்வாயை வெட்டித்தர அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்காக அரசு நவம்பர் 1978-ல் ரூ. 18·10 லட்சம் அனுமதி அளித்தது. ஆனால், கேரள அரசுடன் இம்மாநில அரசு செய்துக் கொண்ட ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் கொடுப்பதற்கு பதிலாக தற்போது வினாடிக்கு 50 விழுக்காடு தண்ணீர்தான் கேரள அரசு நெய்யாறு அணையிலிருந்து கொடுக்கிறது. மேலும் ஆயக் கட்டுதாரர்கள் போதிய தண்ணீர் கிடைக்காததால் தங்கள் நிலங்ளை மேம்படுத்த முன்வரவில்லை. ஆகையால் இது பற்றி மறு ஆய்வு செய்து, ஒப்பந்தப்படி வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் உறுதியாகக் கிடைக்கும் வரை இத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு செய்து கொண்ட ஒப்பந்தப்படி பாசனத்திற்கு 150 கன அடி தண்ணீர் கிடைக்க இப்போது என்ன நடவடிக்கையைஇந்த அரசு மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது தலைவர் அவர்களே, ஒப்பந்தப்படி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று 2, 3 முறை பேச்சு வார்த்தைகள் மூலமாக சம்மந்தப்பட்ட பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடிதம் மூலமாகவும் வலியுறுத்தி வருகிறோம். இப்போது சமீபத்தில் நமது முதலமைச்சர் அவர்களும், கேரள முதலமைச்சர் அவர்களும் நடத்திய பேச்சுவார்த்தையை ஒட்டி கூட இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்து பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இதை விரைவிலே நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையை இந்த அரசு வைத்திருக்கிறது.

திரு டி. மணி பேரவைத்தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அதாவது நெய்யாறு— இடதுகரை கால்வாய் திட்டத்தை ஆரம்பிக்கிறபோது, அது முழுமையாக ஆய்வு நடத்தப்பெற்று, அதன் அடிப்படையில் மடிச்சல் கிளைக்கால்வாய் திட்டம் போடப்பட்டது. அது 72, 73 ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் சீராக வெட்டப்பட்டு, அப்போது தண்ணீர் விடப்பட்டது. அது மட்டுமல்ல. 80 அல்லது 70 கன அடி தண்ணீர் வருகின்ற போது, முறையாக மெயின் கால்வாய் வெட்டப்படாததால் ஒரு பகுதி தண்ணீர் ஓவர்-புளோ ஆகி வெளியேறுகிறது. இப்படி பல்வேறு காரணங்களைக் கொண்டுதான், அந்த தண்ணீர் விடுகின்ற ஏற்பாட்டிலே சில முறைகேடுகள் ஏற்பட்டது. ஏற்கனவே, இவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு, ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொன்னபடி கேரள மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாகவும், ஏற்கனவே நான் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும்—எனக்கு ஒரு கடிதம் அந்த மாநில அரசிடமிருந்து வந்திருக்கிறது. அதிலே குறிப்பாக 100 கன அடி தண்ணீர் தரயிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த நிதி ஆண்டு அந்த மடிச்சல் கால்வாயை வெட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரள அரசோடு தொடர்பு கொண்ட அந்தக் கடிதத்தின் நகலை என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து உடனடியாக பரிசீலித்து, 15 நாட்களுக்குள் தகவல் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகு, இதிலே விரைவான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தத் திட்டம் வருமென்று எதிர்பார்த்து ஏமாந்ததற்குக் காரணம், இவ்வளவு காலதாமதம் ஆனதுதான். இது இரண்டு மாநிலங்களுடைய தொடர்புடையதாக இருப்பதால், மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் — மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இது இரண்டு மாநிலங்கள் தொடர்புடைய காரணத்தினாலே மத்திய அரசு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட வேண்டுமென்று நமது மாநில அரசாங்கம் கேட்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இரண்டு மாநிலங்களின் பிரச்சினை என்பதற்காக, மத்திய அரசிடம் கேட்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. கணவன்–மனைவி சண்டை ஏற்பட்டால், தேவைப்படுகின்றபோது, மாமியார் வரலாமே தவிர, ஒவ்வொரு விஷயத்திற்கும் மாமியார் வரக்கூடாது. இரண்டு மாநிலங்களுக்கிடையே நல்லமுறையிலே பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது. அது முடிந்து விடுமென்ற நம்பிக்கை இருக்கிறது. நம்பிக்கை வெற்றி பெறுமென்று நாம் நம்புவோமாக.

கோமுகி அணையில் தூர் எடுக்கும் பணி

*வினா எண். 557— திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோமுகி அணை தூர்ந்துபோய் தண்ணீர் கொள்ளளவு குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் தூர் எடுக்கும் பணி விரைவில் துவக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) மற்றும் (ஆ) 1966 ஆம் ஆண்டிலிருந்து கோமுகி நீர்த்தேக்கம் செயல்பட்டு வருவதால், ஓரளவுதூர்ந்து போயிருக்கலாம். எவ்வளவு தூர்ந்து போயிருக்கிறது என்பதை அறிய தூர் அளவெடுப்பு (Silt Survey) செய்யப்பட வேண்டும் அதன் பிறகுதான் தூர் எடுக்கும் பணிகள் செய்ய முடியும். தூர் அளவெடுக்கும் (Silt Survey) நடவடிக்கைகள் தல அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமுகி அணை தூர்ந்துபோய், தண்ணீர் கொள்ளளவு குறைந்துள்ளது. அங்குள்ள அதிகாரிகள், விவசாயிகளிடம் பணிலா போட வேண்டு மென்று கூறினார்கள். ஆனால் விவசாயிகள் பணிலா போட்டும், 2 மாதங்களுக்குப் பிறகு சரிவர தண்ணீர் வராமல் அந்தப் பயிர்கள் எல்லாம் காய்ந்து விட்டது. எனவே, அரசு இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து, தூர் எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்போது சர்வே செய்து தூர் எடுக்க வேண்டு மென்று பொதுவாக ஆணையிட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு தூர் எடுக்க வேண்டுமென்ற பணிகள் வருகின்ற போது, ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். டீ-சில்ட்டுக்கு அதிகமாக செலவாகின்றது. அதைவிட கரையின் அளவை சிறிது உயர்த்தி நீர்ப்பிடிப்புப் பகுதியின் பரப்பளவை, கொள்ளளவை அதிகப்படுத்தினால், போதுமான தண்ணீர் தேக்கிவைத்துக் கொளள முடியும். அதற்கு ஆகும் செலவு, தூர் எடுக்கும் செலவை விட குறைவு. தண்ணீர் வீணாகாமல் பார்த்துக்கொள்வதில் இந்த அரசு கவனம் செலுத்தும்.

[முற்பகல் 9—50]

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, டீசில்ட் செய்ய அதிக செலவு ஆகுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். கரையைப் பலப்படுத்தினாலும் கூட டீசில்ட் எடுக்காததின் காரணமாக சென்ற ஆண்டு கூட அந்த அணை உடைந்து போய்விட்டது. ஆகவே மீண்டும் பரிசீலித்து தூர் எடுக்கும் பணி துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களேஅணைகரையை உயர்த்துவதினால் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் தூர் எடுப்பதைதவிர வேறு வழியில்லை. எவ்வளவு செலவானாலும் அதைச் செய்து

தான் ஆகவேண்டும். ஆகவே இரண்டிலே எது சாத்தியம் என்பதைப் பார்த்து அதில் ஏதாவது ஒன்றை செய்து நீர்ப்பிடிப்பினுடைய பரப்பளவு கொள்ளளவு முதலியவற்றை அதிகப்படுத்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

மொடக்குறிச்சி தொகுதியில் சர்க்கரை ஆலை.

* வினா எண். 558.—திரு ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சித் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைத்திட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலிங்கராயன், கீழ்பவானி ஆறுகள் பாய்கிற காரணத்தால் ஏராளமாக கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. அருகில் கரும்பு ஆலை இல்லாத காரணத்தால் கரும்பு எடுத்துச் செல்வதற்கு அதிகமான லாரி வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளின் இந்த துயரை நீக்குகிற வகையில் அங்கு மையமாக ஒரு இடத்தில் சர்க்கரை ஆலை ஒன்றை அமைத்திட இந்த ஆண்டாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற உத்தேசமில்லை.

சுப்புலாபுரம் கிராம கோபால்சாமி மலையில் மேற்கொண்ட ஆய்வு.

* வினா எண். 559— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கல்லுப்பட்டி பிர்க்கா, சுப்புலாபுரம் கிராமம் கோபால்சாமி மலையை "தமிழ்நாடு கனிம நிறுவனம்" ஆய்வு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி மலையில் கிடைக்கும் வெள்ளைக் கல் எதற்காக பயன்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :

(அ) இல்லை. தமிழ்நாடு கனிம நிறுவனம் கனிமங்களை வெட்டி எடுத்து பயன்படுத்தும் அமைப்பு மட்டுமே ஆகும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்த கோபால்சாமி மலைப்பகுதியில ஒரு வெள்ளைக்கல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தவறான குறிப்பை கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பத்தம்பள்ளி, வாழவந்தான்புரம் பகுதியில் சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் வெள்ளைக்கல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தனியார்களே பாக்டரி வைத்து இதை எடுத்துப் போய் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அரசின் அனுமதியைப் பெறவில்லை. ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி பக்கத்திலே இருக்கிறது. அதற்கு இந்த வெள்ளைக்கல் பயன்படும் வகையில் உபயோகிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தைக் கவனத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபால்சாமி மலைக்குப் பக்கத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. இங்கே கனிவளங்கள் அதிக அளவில் இருக்கிறது. இதுவரை 35 வருடகாலமாக அரசு அதிகாரிகள் ஆய்வு செய்யவில்லை. ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** **

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அரசு அதிகாரிகள் விரைவில் அங்கே ஆய்வு நடத்தி அந்த கனிவளங்களை கைப்பற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ** **

** (மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** சம்பந்தப்பட்ட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** ** நான் சொன்னது உட்பட அனைத்தும் நீக்கப்படுகிறது.

எட்டயபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம்.—

* வினா எண். 560—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் கவி சுப்பிரமணிய பாரதியார் பெயரில் பாரதி கூட்டுறவு நூற்பாலை ஒன்று நிறுவ தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) (ஆ) திருநெல்வேலி பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை எட்டயபுரத்தில் ஒரு கிளை நூற்பாலை நிறுவ உத்தேசித்துள்ளது.

இந்த கிளை ஆலையில் 12,000 கதிர்கள் நிறுவப்பட்டு செயற்கை நூல் இழைகள் உற்பத்தி செய்யப்படும். இதற்கு ஆகும் மூலதனச் செலவு ரூபாய் மூன்று கோடி. சுமார் 400 நபர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்ற மானியக் கோரிக்கையின் போது தெரிவித்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு எட்டயபுரத்திலே கூட்டுறவு நூற்பாலையை அமைப்பதற்காக அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு நூற்பாலைக்கு பாரதியார் பெயர் வைக்க வேண்டுமென்று அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா? அந்த ஆலை எப்போது செயல்படும் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலையின் கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டிலே துவங்கப்படும். யாருடைய பெயரையும் கூட்டுறவு நூற்பாலைக்கு வைப்பதில்லை, கூட்டுறவு நூற்பாலை என்ற

** மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பெயரில்தான் அந்த அந்த மாவட்டங்களிலே கூட்டுறவு ஆலைகள் இருக்கின்றன. எனவே அதைப் போன்ற பரிசீலனை இப்போது இல்லை. பாரதியினுடைய நினைவாகத்தான் அது எட்டய புரத்திலே துவங்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பாரதியார் நினைவாக கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். பாரதியார் நினைவாக ஆரம்பிக்கப்படுகிற ஆலைக்கு பாரதியினுடைய பெயரையும் சூட்டுவதற்கு இன்னும் சொல்லப் போனால் தேசிய கவி என்ற பெயரைச் சூட்டுவதற்கும் அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எட்டயபுரம் என்றாலே பாரதியாருடைய நினைவு நமக்குநினைவுக்கு வரும். எனவே அவருடைய நினைவாக அமைக்கப்படுகிறது. தனியாக பெயர் தேவையில்லை.

தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரத்திற்கு கல்லுடைக்கச் செல்லும் தொழிலாளர்கள்.

* வினா எண். 561—திருமதி த. இராசாம்பாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா -

(அ) தமிழ்நாட்டிலிருந்து ஆந்திராவிற்கு கல்லுடைக்கச் செல்லும் ஏழைத் தொழிலாளர்கள் ஆள் பிடிக்கும் கருங்காலி களால் காண்ட்ராக்டர்களிடம் அடகு வைக்கப்படுகிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இப்படி மோசடிக்கும் கொத்தடிமைக்கும் ஆளாக்கப் படும் பாமர மக்களை விடுவித்து மீட்டுவர அரசு நடவடிக்கை எதுவும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். விஜயசாரதி : (அ) தமிழ் நாட்டிலிருந்து ஆந்திராவிற்கு கல்லுடைக்கச் செல்லும் ஏழைத் தொழிலாளர்கள் ஆள்பிடிக்கும் கருங்காலி காளல் காண்ட்ராக்டர்களிடம் அடகு வைக்கப்படுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

(ஆ) இப்படி மோசடிக்கும் கொத்தடிமைக்கும் ஆளாக்கப் படும் மக்களை விடுவித்து மீட்டுவர இந்த அரசு ஆந்திர அரசுடன் தொடர்பு கொண்டு இது குறித்து விரிவான விசாரணை நடத்தி அறிக்கை அனுப்புமாறு ஆந்திர அரசிடம் கேட்டுக் கொண்டு உள்ளது.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ் நாட்டிலே வேலை கிடைக்காத காரணத்தால் மக்களுக்கு வேலை கிடைத்தாலும் நியாயமான கூலி கிடைக்க வில்லை என்ற காரணத்தினாலே சிலர் ஆட்களைப் பிடித்துக் கொண்டு போய் ஆந்திராவுக்குக் கொண்டு சென்று கல் உடைக்கிற வேலையில் ஈடுபடுத்துவது மட்டுமல்லாமல் அவர்கள் மேல் ஆயிரம், இரண்டாயிரம் என்று பணத்தை வாங்கிக் கொண்டு அவர்களை அங்கேயே விட்டுவிட்டு வந்து விடுகிறார்கள். அங்கே யாவது நியாயமான கூலி கிடைக்கும என்று நினைத்தால் அங்கேயும் அவர்களுக்குக் கூலி கிடைக்காமல் நாளொன்றுக்கு ஒரு லிட்டர் நொய் மட்டும் கொடுத்து அவர்கள் சாப்பாட்டுக்கு மிகவும் துன்பப்படக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் கடன்களையும் அடைக்கமுடியாமல் நியாய மான கூலியும் கிடைக்காமல் பிச்சைக்காரர்களைப் போல 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சில பெண்கள் அங்கே சிக்கிக் கொண்டு கணவன் மார்களை பிரிந்து இருக்கிறார்கள். கொத்தடிமை நிலையில் அங்கே அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உடனடி யாகக் காலம் கடத்தாது என் கேள்வியை நான் ஜூலை மாதத் திலே கொடுத்தேன். பதில் வருவதற்கே காலம் கடந்துவிட்டது. உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களை இங்கே கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொத்தடிமை, கொத் தடிமை என்ற வார்த்தைகளை எல்லோரும் அடிக்கடி பயன் படுத்துகிறார்கள். பொருள் புரிந்து பயன்படுத்துகிறார்களா, பொருள் தெரியாமல் பயன்படுத்துகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. திரு. தாமரைக்கனியும் தாங்களும் அடிக்கடி பயன்படுத்துகிறீர்கள். பொருள் தெரிந்து பயன்படுத்துகிறீர்களா தெரியாமல் பயன்படுத்துகிறீர்களா என்று தெரியாது. அவைக் குறிப்பிலே பார்த்தால் தமிழ்நாட்டிலே ஏராளமாக கொத்தடிமை வந்துவிட்டது மாதிரி வெளியே தெரியும். ஆகவே சாதாரண மான வார்த்தைகளைப் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : கடன்களை அவர்கள் கட்ட முடியாமல் போய் சந்ததியார்கள் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் அவர்கள் கொத்தடிமை களாகத்தான் இருக்கிறார்கள். நாகலூர், ராமநாயக்கன் பாளை யம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களை நாங்கள் சந்தித்து அழைத்து வந்திருக்கிறோம். ஆகவே உடனடியாக அவர்களை அழைத்து வந்து அவர்களை வாழ வைக்க நடவடிகை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

[1981 மார்ச் 30

[முற்பகல் 10-00].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினா-விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று இன்றைய தினம் ஆந்திராவிற்கு இட்டுச் செல்லப்பட்டு அங்கே அவதிக்கு உள்ளாகி இருக்கின்ற தொழிலாளர்களை மீட்டு வர வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசைப் பொறுத்தவரையில் இப்பொழுது ஆந்திரா அரசுடன் தொடர்பு கொண்டு அவர்களை விரைவிலே இங்கே அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது. இதுமட்டுமல்ல, இந்த அரசைப் பொறுத்தவரையில் இதுபோன்று தொழில் செய்யும் மக்கள் மலைகள் அதிகமாக உள்ள பகுதிகளில் அந்த மக்கள் தாங்களாகவே தங்களுக்குள் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டு கல்லுடைக்கும் சங்கங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த அரசைப் பொறுத்தவரையில் தாட்கோ மூலமும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும் அவர்களுக்குத் தேவையான நிதியுதவியை அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பெரம்பலூர் பகுதியில் அண்மையில் அம்பேத்கார் கல்லுடைக்கும் சங்கம் ஒன்று இத்தகைய விதிகளோடும், அரசின் உதவியோடும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, நான் சென்றமுறை கூட இந்தப் பிரச்னையைப் பற்றிச் சொல்லி இருக்கிறேன். தொடர்ந்து சேலம், வடார்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆந்திராவிற்குச் செல்வது மட்டுமல்லாமல், வடமாநிலங்களுக்கும் செல்கிறார்கள் என்பதைப் பற்றிச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, இதில் நிரந்தரமான தீர்வு காண்பதற்காக நம்முடைய ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரவர்கள் மற்ற மாநிலங்களின் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்களைச் சந்தித்து இப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆந்திராவிற்கு இட்டுச் செல்லப்பட்டது குறித்துத்தான் இப்பொழுது எனக்குத் தகவல் உள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் மற்ற மாநிலங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அது பற்றிய தகுந்த குறிப்புகள் எனக்குத் தெரிந்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1981 மார்ச் 30]

திரு. கி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஆதி திராவிடத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டிலிருந்து ஆந்திராவின் ஒரு பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு ஆந்திராவிற்கு எடுத்துச் செல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய முடியுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவரவர்களே, எனக்குள்ள குறிப்பின்படி சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்ட கவுண்டன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த நான்கு நபர்கள் ஆந்திராவிற்குக் கல்லுடைக்கச் சென்றவர்களை விடுவிக்க திரு. பழனி என்பவர் சேலம் மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பித்துள்ளார். அது மட்டுமல்லாமல், தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுக்கா, வேலம்பட்டி கிராமத்தில் வசிக்கின்ற முனுசாமி என்பவர் ஆந்திராவில் கொண்டபள்ளி என்னும் ஊரில் கொத்தடிமையாக இருக்கும் தன்னுடைய உறவினர்களை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்குக் காண்ட்ராக்டர்கள் கடன்களைக் கொடுத்து அவர்கள் வெளி வேலைக்குச் செல்ல முடியாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களை விடுவிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலேயிருந்து ஆந்திராவிலே பாண்டட் லேபர் இருப்பதாகத் தெரியவருகிறது. இருபது அம்சத் திட்டத்தில் உள்ள முக்கிய குறிக்கோள்களில் ஒன்றான இந்தக் கொத்தடிமையை ஒழிக்க, மத்திய சர்க்காரிடத்திலே சொல்லி தமிழக அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த மாதிரி ஆட்களைக் கொண்டுபோவதைப்பற்றித் தகவல் இருந்தால் கொடுக்கச் சொல்லி மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்கிறார்கள் இதுவொரு Regular Scandal and racket ஆகவே, பர்மனென்ட்டாகவே நடந்து கொண்டிருக்கிறது. பரிதாபமான கடிதங்கள் நிறைய வந்திருக்கின்றன. அங்கிருந்து என்னால் வர முடியவில்லை. வர முடியவில்லை என்று சொல்லி ஆகவே, ஒன்றிரண்டு

நபர்கள் பற்றிய பிரச்சினை இல்லை. பர்மனென்ட்டாக, ரெகுளராக நடக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் போலீஸ் துறையினுடைய உதவியையும் நாடி ஒரு சீரியஸ் இன்வெஸ்டிகேஷன் நடத்தி அந்த net work and racket உடைப்பதற்கான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பரிதாபகரமான முறையிலே தங்களுக்குக் கடிதங்கள் வருவதாக எடுத்துக் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய கடிதங்களை என்னிடத்திலே தருவார்களேயானால் உடனடியாகத் தேவையான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குமரி மாவட்டம், வாளேற்றிவயல் பள்ளி.

வினா எண். 562—திரு. டி. மணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பழங்குடி மக்களுக்கு வாளேற்றி வயல் என்னுமிடத்தில் கட்டியிருக்கும் பள்ளிக்கூடத்திற்கு போதுமான ஆசிரியர்கள், இருக்கைகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தேவையான விவரங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிகள் நல இயக்குநர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் கேட்கப்பட்டுள்ளன அவை இன்னமும் முழுமையாக வந்து சேரவில்லை. விவரங்கள் கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, வாளேற்றி வயலில் மட்டுமல்ல, அந்த மாவட்டத்தில் இருக்கிற நூறாம்மயில், பத்துகாணி, மூக்கறக்கல் போன்ற இடங்களில் பழங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலுள்ள பள்ளிகளில் பொதுவாக அந்த நிலைதான் தொடர்ந்து இருக்கிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, அந்தத் துறை சம்பந்தமான அதிகாரிகளிடத்திலே, அது சம்பந்தமான மகஜர்களை, மனுக்களை நேரிடையாகக் கொடுத்து, பேசி, பல மாதங்களாகியும், இன்னும் வாளேற்றிவயல், நூறாம்மயில், மூக்கறக்கல் போன்ற இடங்களில் இருக்கிற பள்ளிகளில் அந்தத் தரைகூடச் செம்மைப் படுத்தப்படாமல் இருக்கிறது. எராளமான நிதி அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் இன்னும் அந்தப் பணியைச் செய்யாததன்

காரணம் என்ன? அவசரமாக அந்தப் பணிகளைச் செய்து போதுமான ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கும் மாணவர்களுக்கு போதுமான இருக்கைகளுக்கும் ஏற்பாடு செய்வதோடு ஆசிரியர்கள் அமர்வதற்குக் கூட தேவையான சேர் இல்லாத காரணத்தால், பல ஆசிரியர்கள் அங்கே நியமனம் செய்யப்பட்டால் கூட, போகாத நிலைமைகள் அங்கே இருந்துகொண்டிருக்கின்றன. இக்குறைகளை அகற்ற அவசரமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில் இருக்கை வசதியில்லையென்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதுகுறித்தும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, உடனடியாக அரசு அதில் தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து சரியான தகவல் வரவில்லையென்று சொன்னார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரை பொறுத்தமட்டில் இது நீண்ட காலத்திற்கு முன்னாலே தகவல் தராமல இருப்பதற்குப் பிரத்தியேகமான காரணங்கள், அந்தப் பகுதி மக்களை ஒதுக்குகின்ற எண்ணம் ஏதாகிலும் அவர்களுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் பழங்குடி மக்கள் சம்பந்தமான பள்ளிக்கூடங்களைப் பொறுத்த அளவில், பொதுவாக இந்த நிலைமைதானிருக்கிறது என்ற காரணத்தினாலே. குறிப்பாக ஒரு முக்கியப் பள்ளிக்கூடமான பேச்சிப் பாறையிலே போதுமான ஆசிரியர்கள் கிடையாது. மாணவர்கள் இருந்து படிக்கப் போதுமான வசதி கிடையாது. ஆசிரியர்களுக்குத் காலாகாலத்திலேயே ஊதியம் கொடுக்கபபடவல்லை. கிரேப்ட்ஸ் இன்ஸ்ட்ரக்டர் போன்றவர்களுக்குப் பல மாதங்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. அதே போல், அங்கே, கட்டவேண்டிய ஹாஸ்டல்களுக்குப் போன ஆண்டே நிதி ஒதுக்கியும் இன்னும் கட்டப்படவில்லை. அப்படிப்பட்ட உதாசீனமான போக்கு அந்த மாவட்டத்திலே இருக்கிறது. அதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அதிகாரிகள் மேலே அந்த விஷயத்திலே தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுமா?

[1981 மார்ச் 30

திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து உடனடியாக நடவடிக்கைகள் அரசு மேற்கொள்ளும்.

House Constructed by Harijan welfare Department at Thillaiadi Valliammai Nagar, Thanjavur.

* Q. No. 563—Thiru L. ELYAPERUMAL : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) Whether it is a fact that all the Houses which were constructed by the Harijan Welfare Department at Thilaiyadi Valliyammai Nagar in Thanjavur District are leaking during the rainy season ever since they were constructed ; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் தில்லையாடி வள்ளியம்மை நகரில் கட்டப்பட்ட வீடுகள், பயன்பெறுவோர் குடியேறியதிலிருந்து ஒரு வருடத்தில் மழை காலத்தில் ஒழுகுவது உண்மையே. 1973–74-ல் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையால் இந்த வீடுகள் பழுதுபார்க்கப்பட்டன.

ஆதி திராவிட மற்றும் ஆதிவாசிகள் நலத்துறை இயக்குநர் இவ்வீடுகளைப் பழுதுபார்க்க தற்போது கருத்துரு ஒன்றினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இது தில்லையாடி வள்ளியம்மை நூற்றாண்டு விழாக் காலத்தில் கட்டப்பட்டது. கிட்டத்தட்ட 8 ஆண்டுகள் ஆகியும், இதுவரையில், அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சற்று முன்பு சொன்ன கேள்விக்குக் கூட, அந்தப் பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கு நாற்காலி வாங்கக் கூட அந்த கலெக்டருக்கும், அந்த வெல்ஃபேர் ஆஃபீசருக்கும் அனுமதியில்லாமல் சென்னைக்கு வந்துதான் வாங்க வேண்டுமென்ற நிலைமையும் ஒரு சுண்ணாம்பு வாங்கக்கூடிய அளவிற்கு அதிகாரம் இல்லாத நிலைமையிருப்பது அரசுக்குத் தெரியுமா ? இங்கேயுள்ள பள்ளிகளுக்குக் நாற்காலி வாங்கக்கூட அந்தக் கலெக்டருக்கும், அந்த வெல்ஃபேர் ஆபீசருக்கும் அதிகாரமற்ற நிலைமை ஏன் இருக்கவேண்டும். இந்த வீடுகள், நூற்றாண்டு விழாக் காலத்தில் கட்டி, 8 ஆண்டுகளாயும், இதுவரைக் கட்டப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? குறிப்பாக, அவைகளை உடனடியாகச் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 30]

[முற்பகல் 10–10]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடுகள் 1969 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதற்குப் பிறகு 1973–74-ல் வீடு ஒன்றுக்கு குறைந்த அளவு ரூ. 240 வீதம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற பணித் துறையினால் பழுதுபார்க்கப்பட்டது. இருந்த போதிலும் அந்த வீடுகள் மேலும் ஒழுகுவதாக இப்போது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. அப்படி ஒழுகுகின்ற வீடுகளைப் பழுது பார்ப்பதற்கு வீடு ஒன்றுக்கு 1,700 ரூபாய் வீதம் அந்த 94 வீடுகளுக்கும் 1.67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டை நெடுஞ்சாலை மற்றும் கிராமப் புறப் பணியின் தலைமைப் பொறியாளர் அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி அதை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். இது குறித்து இந்த அரசு பரிசீலித்து, பிரத்தியேகமாக நடவடிக்கை எடுக்க ஆணை வழங்க உத்தேசித்துள்ளது:

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலே இதில் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறையினர் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அன்று இதை ரிப்பேர் செய்கின்ற வேளையிலே மொத்தமுள்ள கிட்டத்தட்ட 180 வீடுகளை ரிப்பேர் செய்ய ஆணை கொடுக்கப்பட்டது. ஆனால் 20 வீடுகளை மட்டும் செய்து இன்றைக்கு நிறுத்தப்பட்டு விட்டது. எனவே அவர்களுக்கு எத்தனை வீடுகள் கொடுக்கப்பட்டன, எத்தனை வீடுகள் ரிப்பேர் செய்யப்பட்டன என்பதை அறிய விரும்புவதோடு அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வேலையை தற்போது ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் வீட்டு வசதிக் கழகமாகிய 'தாட்கோ' நிறுவனம் இருக்கின்ற காரணத்தால், ஏன் இதை நெடுஞ்சாலை துறையினரிடம் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்து அவல நிலைக்கு ஏன் ஆளாகவேண்டும். எனவே அரசு இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குள்ள குறிப்பின்படி தில்லையாடி வள்ளியம்மை நகரில் 47 வீடுகள்தான் 1969-ல் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறையிடம் அதைக் தருவதை விட 'தாட்கோ'விடம் அதைக் கொடுத்து அந்த வீடுகளைப் பழுதுபார்ப்பது ஏதுவாக இருக்கும். அப்போதுதான் இந்த வீடுகளைப் பொருத்தவரையிலும் நல்ல நிலையோடு அதனைப் பழுதுபார்த்து அந்த மக்களுடைய குறையைப் போக்கவேண்டும் என்பதை உணர்ந்து இந்த அரசு அதை மேற்கொள்ளும்.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளியம்மை என்ற பெயர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மகாத்மா காந்தியின் உயிரை காப்பாற்றியவர்கள். அந்தப் பெயரின் பெருமையைக் காப்பாற்றுகின்ற வகையிலே அந்த வீடுகள் அனைத்தையும் இடித்துவிட்டு, புதிதாக நம்முடைய அரசாங்கம் நல்ல வீடுகளை கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் இல்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 'தாட்கோ'வால் கட்டப்படுகின்ற வீடுகள் அனைத்தும் ஒழுகுகின்றன. என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தொண்டமானில் 37 வீடுகள் கட்டப்பட்டு அனைத்தும் ஒழுகிக்கொண்டிருக்கின்றன ....

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகள் மூலக் கேள்வியை ஒட்டியதாக கேட்க வேண்டும்.

வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சனை.

கொள்கை விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே அளிக்கப் பெறுதல்.

*திரு. ரா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, ஒரு சப்மிஷன்; நாளையிலிருந்து இந்த மசோதாவின் மீது டிஸ்கஷன் ஆரம்பிக்க இருக்கிறது. அதனாலே இப்போதே சொல்லிவிடுகிறேன். போனதடவை இந்த பாலிசி நோட்ஸ்கள் எல்லாம் லேட்டாகக் கொடுத்தார்கள். ஆகையினால் அந்த பாலிசி நோட்ஸ்களை இந்த ஆண்டு 3 நாட்களுக்கு முன்னாலே கொடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இந்த பாலிசி நோட்ஸ்கள் எல்லாம் எங்கள் அறைகளுக்குத்தான் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் இப்போது எங்களுக்கு ஒரு சர்க்குலர் வந்துள்ளது. அதைநாங்கள் லைப்ரரிலே போய் கலெக்ட்

[திரு. ரா. உமாநாத்]

பண்ணிக்கொள்ள வேண்டும் என்று. அது சாத்தியம் இல்லை. எப்போதும்போல நடைமுறைப் பழக்கப்படி எங்களுக்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்ற முறை இப்படிப்பட்ட சில மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இங்கே அவையில் வைக்கப்பட்டவைகளை வேறு சிலர் எடுத்துச் சென்றும் விடுகின்றனர் என்பதும் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆகவேதான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளுக்கான புத்தகங்களை லைப்ரரியில் வைத்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுத்துவிடுங்கள் என்று கூறினேன். மேலும், நேற்று இரவுதான் அரசுத் தரப்பில் இருந்து கொள்கை விளக்கக் குறிப்புகளுக்கான புத்தகங்கள் பெற்றன. இதிலே கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கிறது. அதற்குக் காரணம், முதலாவதாக வேளாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதாக அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால், சில துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகளுக்கான விவாதங்கள் எடுத்துக்கொள்ள குறிப்பிட்டிருந்த தேதிகளில் மாற்றம் செய்யவேண்டி ஏற்பட்டதால், இந்தக் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து குறைபாடுகள் எதுவும் வராமல் இருக்கத்தக்க அளவிற்கு இவைகள் செய்யப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அவையில் வைக்கவேண்டும் என்று விரும்பினால், அவையிலே வைப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, தயவு செய்து கடந்த முறை செய்ததைப் போல் உறுப்பினர்களுடைய அறையிலே அந்த மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட புத்தகங்களைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று இரவுதான் கொள்கை விளக்கக் குறிப்புகள் கிடைத்ததால் அப்படிச் செய்ய முடியவில்லை. இப்போது தேவைப்படுகிற மாண்புமிகு உறுப்பினர்கள் நூலகத்தில் சென்று அதனைப் பெற்றுக்கொள்ளலாம். அப்படி பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவரவர்களுடைய அறையில் கொண்டு வந்து தர ஏற்பாடு செய்யப்படும்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் பணிவாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் காலரா இருக்கிறது என்று சொன்னால், அதைக் குறித்து மானியக் கோரிக்கை மீது 25 நாள் கழித்து வருகிற விவாதத்தில் பேசுங்கள் என்று கூறி நாலும், தோழர் உத்திராபதி அவர்களும் கொடுத்துள்ள தீர்மானத்திற்குப் பதில் அனுப்பி இருக்கிறீர்கள். இது ஒரு சீரியஸ்ஸான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் பொறுத்த வரையில் அது சீரியஸ்ஸாகத் தோன்றலாம். இப்படிப்பட்ட நேரங்களில் அதைப் பற்றி எடுத்துக்கொள்ளவோ அல்லது அனுமதி அளிப்பதற்கோ இல்லை. அப்படி அனுமதி அளிப்பது மரபும் இல்லை, முறையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

ஹையர் செகண்டரி வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானது

மாண்புமிகு பேரவைத் தலைவர் திருவாளர்கள் மு. அப்பாத்துரை, எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி ஆகியோர் ''ஹையர் செகண்டரி 1981-க்கான வினாத்தாள்கள் பம்பாயிலிருந்து இரயில் மூலமாக வரும்போது வேகன் உடைக்கப்பட்டு வினாத்தாள்கள் திருடப்பட்டு இருப்பதாகவும் வெளியாகிவிட்டதாகவும் கூறப்படுவதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து அவர்கள் மிக்ச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாத்துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நடைபெற இருக்கின்ற ஹையர் செகண்டரி மாணவர்களுக்கான கேள்வித்தாள்கள் பம்பாயிலிருந்து இரயில் மூலம் வருகிறபோது வழியில் உடைக்கப்பட்டு, அந்த வினாத்தாள்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதன் காரணமாக மீண்டும் அந்தக் கேள்வித்தாள்கள் அச்சிடப்பட வேண்டும் என்று சொல்லி பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட நிலை இருப்பதால் மாணவர்கள் மத்தியில் கேள்விகள் ஒழுங்காக இருக்குமா, அல்லது மாற்றப்பட்டு இருக்குமா என்கிற ஐயம்

ஏற்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழக மாணவர்கள் மத்தியில் இருப்பதால் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது. இது தமிழகத்தில் உள்ள மாணவர்களின் ஒட்டு மொத்தமான நிலைமையை ஒட்டி இருக்கிற காரணத்தால் இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக அரசு நடத்தும் பொதுத் தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் பல மாதிரிகளில் முன்கூட்டியே தயாரிக்கப் பட்டு தயார் நிலையில் வைக்கப்படுகின்றன. இவ்விதம் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களில் ஒரு வினாத்தாள் தேர்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகிறது. தேர்வுக்கான வினாத்தாள்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் இரகசியமாக அச்சடிக்கப்படுகின்றன.

இவ்விதம் அச்சடிக்கப்பட்டு சென்னைக்கு வந்து சேர்ந்த ஒரு குறிப்பிட்ட வினாத்தாள்கள் அடங்கிய பெட்டி ஒன்று திறக்கப் பட்டிருந்தது தெரிய வந்தது. பெட்டியைத் திறந்து சோதித்ததில் பெட்டியில் கொண்டுவரப்பட்ட வினாத்தாள் கட்டுகள் சரியாக இருந்தன என்றும் அவைகள் எதுவும் திருடப்படவில்லை என்றும் தெரிய வந்தது. இவ்வினாத்தாள் கட்டுகள் திருடப்படாமல் இருந்தபோதிலும் மிகுந்த முன் எச்சரிக்கை உணர்வுடன் வேறு ஒரு வினாத்தாளை நடைபெற இருக்கும் தேர்வுக்கு உபயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேர்வு வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியாகி விட்டது என்ற நிலைமைக்கு இடமேதும் இல்லை. வினாத்தாள்கள் திருடப்பட்டதாகவும் வினாத்தாள்கள் வெளியாகிவிட்டதாகவும் கூறப்படுவது சரியல்ல.

தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் தேர்வு நடப்பதற்கு முன்னர் வெளியாகாமல், தேர்வுகள் சீரிய முறையில் எப்போதும் நடைபெறுவதற்குள்ள நடவடிக்கைகள் யாவும் முன் னெச்சரிக்கையுடன் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இது குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

5. அறிவிப்பு.

மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1981).

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1981).

6. கவன ஈர்ப்புகள்.

(அ) திருப்பூர் பனியன் தொழிற்சாலைகள் மூடப்பெற்றுள்ளது.

"மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். மணிமாறன், என். எஸ். வி. சித்தன்; கே. எம். தங்கமணி ரா. கிருஷ்ணன், கு. ரமணி, கே. ஆர். சுந்தரம், வி. பி. பாலசுப்பிரமணியன், செ. செம்மலை, இரா. தாமரைக்கனி, பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே 'திருப்பூரில் பெரும்பாலான பனியன் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டதால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை மாவட்டம் திருப்பூர் வட்டாரத்தில் சுமார் 1,300 பனியன் பாக்டரிகள் உள்ளன. இவற்றில் சுமார் 25,00 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

திருப்பூர் பனியன், மற்றும் பொதுத் தொழிலாளர்கள் சங்கம், திருப்பூர், தனது 21–2–81 தேதியிட்ட அறிவிப்பின்படி தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் 1–3–81 முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக பனியன் பாக்டரி உரிமையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திருப்பூர் அகில இந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கத்தினருக்கு தெரிவித்தது.

1973 ஆம் வருடத்திற்குப் பிறகு தங்களுக்கு எந்தவிதமான சம்பள உயர்வும் கிடைக்கப்பெறவில்லை எனக்கூறி நிலையான ஒப்பந்தமும், அந்த ஒப்பந்தம் ஏற்படும் வரை இடைக்கால சம்பள உயர்வு தரும் வரை தற்போதைய சம்பளத்தில் இடைக்கால உயர்வாக 50% அதிகம் தர வேண்டும் என்று தொழிற் சங்கம் கோரியது.

இந்தத் தொழிற் தகராறில், கோயம்புத்தூர் தொழிலாளர் துறை துணை ஆணையர் அவர்கள் சமரச முயற்சிகளில் ஈடுபட்டு இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டார்.

28–2–81 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளின் போது கோவை தொழிலாளர்துறை துணை ஆணையர் அவர்கள் கொடுத்த அறிவுரைப்படி 1–3–81 தேதி நடக்கவிருந்த வேலை நிறுத்தத்தை ஒத்திவைப்பதாகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூறினர். எனினும் 4–3–81 முதல் சுமார் 25,000 தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனை யடுத்து, கோவை, தொழிலாளர்துறை துணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் 8–3–81 அன்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அதன் விளைவாக ஏற்றுமதிக்காக பனியன்கள் தயார் செய்யும் ஐந்து தொழிற்சாலைகளின் நிருவாகத்தினர் தங்கள் தொழிலாளர்களுக்கு வேலைப் பளு பற்றி எவ்வித நிபந்தனையுமின்றி 25% இடைக்கால சம்பள உயர்வுதர சம்மதித்தனர் அதன்படி, இந்த ஐந்து நிருவாகத்தினருக்கும் அவர்களின் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டத்தின் பிரிவு 12 (3)ன் கீழ் ஒரு ஒப்பந்தம் 8–3–81 அன்று கையெழுத்தாகியது.

அதே ஒப்பந்தத்தின் ஷரத்துக்களின் அடிப்படையில் மேலும் 25 பனியன் பாக்டரி உரிமையாளர்கள் வேலைப்பளு பற்றி

நிபந்தனை ஏதுமின்றி இடைக்கால உயர்வாக சம்பளத்தில் 25% தர சம்மதித்துள்ளனர்.

இதன் விளைவாக, இந்த 30 பனியன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 2,000 தொழிலாளர்கள் தங்களது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பியுள்ளனர். மற்ற பனியன் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் நீடிக்கிறது. இவைகளின் எண்ணிக்கை சுமார் 1,270 பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 23,000.

இந்தத் தொழிற் தகராரில் சுமுகமான தீர்வு கான கோவை தொழிலாளர்துறை துணை ஆணையாளர்அவாகள் சம்பந்தப்பட்ட இருதரப்பினரிடமும், சமரச முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். 6–3–81, 8–3–81, 18–3–81 ஆகிய தேதிகளில் பேச்சு வார்த்தை நடந்துள்ளன. மேற்கொண்டு வார்த்தைகளில், சுமுக முடிவு ஏற்படாவிடில் தொழிலாளர்துறை தனி துணை ஆணையர் அவர்கள் விரைவில் சமரசப்பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள உள்ளார்.

திரு. எஸ். மணிமாறன் : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதும் ஒரு இன்றியமையாத பிரச்சினை என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியும் என்று கருதுகிறேன். ஏறத்தாழ ஒருமாத காலமாக 25,000 பனியன் தொழிலாளர்கள் வேலையில்லாமல் வேலை நிறுத்தம் செய்யக்கூடிய சூழ்நிலைக்கு ஆட்பட்டு இன்றையதினம் அந்தத் தொழிலே ஸ்தம்பித்துப்போய் இருக்கிறது. அவர்கள் கேட்ட கோரிக்கை எல்லாம் வேலைக்கு ஏற்ற சம்பள உயர்வு வேண்டும் என்பதுதான். 1973 ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்த விதமான சம்பள உயர்வும் கிடைக்காததால் இந்த கோரிக்கையை வைத்து சம்பளம் நிர்ணயம் செய்யும் வரையில் இடைக்கால சம்பள உயர்வாக 50% தரவேண்டுமென்று கோரிக்கையை உற்பத்தியாளர் சங்கத்தைப்பார்த்து எழுப்பி இருக்கிறார்கள். ஆனால் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அதை ஆரம்பத்தில் நானும் இரண்டு நாள் பேச்சுவார்த்தை நடத்தினேன், ஒப்புக் கொள்கின்ற வகையில் இடைக்கால சம்பள உயர்வு தருவதாக ஒப்புக் கொண்டு பிறகு மறுதலித்து விட்டார்கள்.

அதே நேரத்தில் கிட்டத்தட்ட 200 பனியன் உற்பத்தியாளர்களுக்கு இடைக்கால சம்பள உயர்வாக 25% கொடுத்து ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். ஒப்பந்தம் போட்டு ஏறத்தாழ 4,500 பனியன் உற்பத்தியாளர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதை அரசு அறியுமா? அப்படியானால் அதன் அடிப்படையில் மற்றுமுள்ள தொழிலாளர்களுக்கும் இந்த இடைக்கால சம்பள உயர்வு கொடுக்கின்ற வகையில் சம்பந்தப்பட்டவர்களை அரசு கேட்டுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களிலும் அரசுக்கு உடன்பாடு உண்டு. பிரசினையின் முக்கியத்துவத்தைப் பார்த்து 28– தேதி ஸ்பெஷல் டி. சி. எல். சென்னையிலே சம்பந்தப்பட்டவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார். இன்றையதினம் சமரசப் பேச்சுவார்த்தை நடக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, நேற்று முன் தினம் கூட ஸ்பெஷல் டி.சி.எல். முன்பு பேச்சு வார்த்தை நடை பெற்றது. அப்போது நானும் அதிலே கலந்து கொண்டு பேசினேன். இன்றைய தினமும் 11 மணி அளவில் மீண்டும் அந்தப் பேச்சு வார்த்தை நடை பெற இருக்கின்றது. ஆகவே நான் அரசைப் பார்த்து ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஸ்பெஷல் டி.சி.எல். அவர்கள் முன்னிலையில் நடைபெறுகின்ற பேச்சு வார்த்தை முடியாமல் போகும் சூழ்நிலை உருவாகும் என்று வைத்துக் கொண்டால் அமைச்சரவர்கள் நேரடியாக தலையிட்டு அந்தத் தொழிலுக்கு ஊக்கம் தருகின்ற முறையில் அந்தப் பேச்சு வார்த்தையை முடித்து வைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

அடுத்து இந்தத் தொழிலைச் சுற்றி பல்வேறு உப தொழில்கள் இருக்கின்றன. சலவை போடுகின்ற தொழில், டையிங்தொழில், பனியன் வியாபாரம், அட்டைப் பெட்டிகள் செய்தல் போன்ற பல்வேறு தொழில்கள் இதற்குரிய உப தொழில்களாக இருக்கின்றன. இத்தொழில்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஆகவே 40 ஆயிரம் தொழிலாளர்களுக்கு தீங்கு செய்யக் கூடியதாக இந்த வேலை நிறுத்தம் இருப்பதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரடியாகத் தலையிட்டு நல்லதொரு சூழ்நிலையினை உருவாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஸ்பெஷல் டி.சி.எல். அவர்களுக்கு மேல் உயர்ந்த அதிகாரி ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர், அவருக்கு மேல் உயர்ந்த அதிகாரி கமிஷனர் ஆப் லேபர். இவர்கள் இரண்டு பேர்களும் பேச்சு வார்த்தையை முடித்த பிறகு நான் பேசலாம் என்று கருதினேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை மனதில் கொண்டு நானும் அவர்களை விரைவிலே அழைத்துப் பேச விரும்புகிறேன். ஆனால் அதற்குள்ளாக இந்தப் பிரச்சினை முடிந்து விட வேண்டும் என்பதை அதை விட அதிகமாக விரும்புகிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 23,000 தொழிலாளர்கள் ஒரு மாதமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் தமது அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே பேச்சு வார்த்தை என்பதைப் பொறுத்த வரையில் ஸ்பெஷல் டி.சி.எல். அதற்குப் பிறகு கமிஷனர் ஆப் லேபர், அதற்குப் பிறகு அமைச்சர் என்று நிலைமைப் போய்க் கொண்டிருந்தால் கால தாமதம் ஏற்படும். ஆகவே இன்றைய தினம் நடக்க இருக்கின்ற பேச்சுவார்த்தையிலே ஒரு முடிவு ஏற்படாவிட்டால் நாளையோ அல்லது அதற்கு அடுத்த தினமோ மாண்புமிகு அமைச்சரவர்களே நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முயற்சிப்பார்களா ?

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் பேச்சு வார்த்தை நடை பெற இருக்கின்றது. அநேகமாக ஸ்பெஷல் டி.சி.எல். முன்னிலையிலேயே ஒரு ஒப்பந்தம் வந்து விடும் என்று கருதுகிறேன். அப்படி இல்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை கருத்தில் கொண்டு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : தலைவரவர்களே, திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் சுமார் 25,000 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். குறிப்பாக 1–3–1981 அன்றிலிருந்து வேலை நிறுத்தம் நடைபெற்று வருகின்றது. ஸ்பெஷல் டி.சி.எல். அவர்களின் முயற்சியாலே ஒப்பந்தம் ஏற்கெனவே சில குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுடைய கோரிக்கைகள் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆனால் சில பகுதிகளிலே உள்ள ஃபேக்டரியின் முதலாளிகள் கோரிக்கைகளை ஏற்பதைப் பொறுத்த வரையிலே வேண்டுமென்றே காலதாமதம் செய்து ஒரு லா அண்ட் ஆர்டர் பிரச்சினை வரக் கூடிய அளவுக்கு பிரச்சினையை உருவாக்கி இந்த அரசுக்கு கெட்டபெயரை உண்டாக்க வேண்டும் என்று முயற்சி செய்து வருகிறார்கள் ஆகவே இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலையை அரசாங்கம் புரிந்து கொண்டு சுமூகமான ஒரு முடிவுக்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். ஆகவே மிக விரைவிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் இதிலே தலையிட்டு அந்தத் தொழிலாளர்கள் வேலைக்கு செல்வதற்குரிய வகையிலே ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அருமையான ஆலோசனைகள் கருத்திலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையால் விவசாயப் பயிர்கள் பாதிப்பு.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையினால் சுற்றியுள்ள பகுதியிலுள்ள விவசாய ப்பயிர்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் பொதுத் துறையில் ரூ. 7.48 கோடி முதலீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு சிமெண்டு ஆலையை நிறுவியுள்ளது. இந்த சிமிண்டு ஆலையில் ஈரத் தயாரிப்பு முறையில் சிமிண்டு உற்பத்தி செய்யும் இரண்டு சூளைகள் உள்ளன. ஒவ்வொரு சூளையும் நாளொன்றுக்கு 600 டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. முதல்சூளை 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலும், இரண்டாவது சூளை 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களிலும் உற்பத்தியை துவங்கியது.

2. சிமிண்டு தூசி வெளியேறுவதை ஓரளவு தடுக்கும் நோக்கத்தில் இரண்டு சூளைகளுக்கும் புகை போக்கி போதிய அளவு உயரமுள்ளதாக இருக்கிறது. இம்முறையானது மின்சாரத் தூசிப் படிவுத்தடுப்பு இயந்திரத்தை நிறுவும் முறையுடன் ஒப்பிடும் போது, பயன்தரத் தக்கதாக இல்லை. எனவே, ஆலங்குளம் சிமிண்டு ஆலையிலிருந்து வெளிப்படும் சிமிண்டு தூசி அதிக பட்சம் தடுக்கும் நோக்குடன் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் சூளைகளுக்கு மின்சாரத் தூசிப்படிவுத் தடுப்பு இயந்திரங்களை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1981 மார்ச் 30

3. ஆலங்குளம் சிமிண்டு ஆலையை நவீனப் படுத்துதல் மற்றும் சீர்திருத்தப் பணிகள் திட்டத்தை ரூ. 301 இலட்சம் திட்டச் செலவில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் செயல் படுத்தி வருகிறது. மேற் கண்ட திட்டத்தின் கீழ் சூளைகளுக்கும், சிமிண்டு மில்லுக்கும் சேர்த்து மின்சாரத் தூசிப் படிவத் தடுப்பு இயந்திரங்களை நிறுவும் பணியும் மற்றும் சில சீர்திருத்தப்பணிகளும் நடை பெற்று வருகின்றன.

4. மேற் கண்ட திட்டம், இரண்டு கட்டங்களில் அதாவது இயந்திர தளவாடங்கள் விநியோகம் மற்றும் கட்டுமான வரை படங்கள் விநியோகம் செய்யப்படும் அடிப்படையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தில் சில இயந்திரங்களைச் சீர்மைத்தல் மற்றும் சிமிண்டு மில்லுக்கு மின்சாரத் தூசிப் படிவுத் தடுப்பு இயந்திரம் நிறுவுதல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. முதல் கட்டத்தில் 80 சதவிகிதம் வேலை முடிந்து விட்டது. எஞ்சியுள்ள பணிகள் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. இரண்டாவது கட்டமாக சூளைகளுக்கு மின்சார தூசிப் படிவுத் தடுப்பு இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் ஆலையில் உள்ள சில இயந்திரங்களை நவீனப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்படும். இரண்டாவது கட்டப் பணிகளுக்கான தளவாடங்கள் வந்து கொண்டிருக்கின்றன. கட்டுமானப் பணிகள் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தொடங்கப் பெற்று 1981 ஆம் ஆண்டு ஜூன் ஜூலை திங்களில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின்சாரத் தூசிப் படிவுத் தடுப்பு இயந்திரங்களை நிறுவும் பணி 1981 ஏப்ரல் திங்களில் தொடங்கப் பெற்று 1981 அக்டோபர் திங்களில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஆலங்குளம் சிமிண்டு ஆலையில் மின்சாரத் தூசிப் படிவத் தடுப்பு இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் ஆலையை நவீனப்படுத்துதல் மற்றும் சீர்திருத்தப் பணிகள் மேற் கொள்ளுதல் ஆகிய திட்டங்கள் அனைத்தும் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் முடிவுறும். இதனால் சிமிண்டு தூசி வெளிப்படுவது அதிகபட்சம் கட்டுப்படுத்தப்படும். [illegible]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையைச் சுமந்து இரண்டாண்டு காலத்திற்கு முன்பே இந்த அவையிலே எழுப்பினேன். ஆனால் இன்று வரையில்

1981 மார்ச் 30] [திரு. செ. சிவசாமி]

இது செயல் படுத்தப்பட வில்லை. இந்தப் புகையின் காரணமாக அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பயிர்கள் அத்தனையும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல இந்த புகை பூக்களை பாதிக்கின்ற காரணத்தால் காய்கள் ஏற்படக் கூடிய காலங்களில் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்தப் புகையானது பூக்களின் மேல் படுவதால் மகரந்த சேர்க்கை ஏற்படாமல் பயிர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றது. ஆகவே பலன் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லியும் இன்று வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் அங்கே இருக்கின்ற தனியார் தொழிற்சாலைகளிலே இந்தப் புகை வேறு விதமாக வெளியேறுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் தனது சொந்த ஆலையிலே இப்படி புகை பயிர்களைப் பாதிக்கின்ற அளவுக்கு வெளியேறாமல் வேறு வகையிலே வெளியேறுவதற்கு விரைவிலே ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்கான பணிகள் துவங்கப் பட்டிருக்கின்றன. ரூபாய் 3 கோடி அளவிலே நவீனப்படுத்தும் சீர்திருத்தப்பணிகளை செய்ய விருக்கிறோம். அதற்கான ஆரம்ப காலப் பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள பணிகள் 1981, ஜூன் திங்களுக்குள் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் பணிகளிலேயே, மின்சார தூசி படிவதை போக்குவதற்கான பணியும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. இந்தப் பணிகள் முழுவதுமாக முடிவடையும் போது, இந்தப் பிரச்சினைகள் தீர்வு அடையும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

7. வரவு-செலவுத் திட்டம் 1981—82—பொது விவாதம் (தொடர்ச்சி.)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையின் மீது இங்கே ஆற்றிய உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். சில நல்ல திட்டங்களை அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பல திட்டங்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகள் நல்ல திட்டங்களாக இருந்தாலும் கூட, அவைகளை விரைவில் காலதாமதம் இல்லாமல் அவர்கள் நிறைவேற்றுவார்களேயானால், அதனால் ஏற்படக் கூடிய பலன்கள்

[திரு. கே. எஸ். ஜீ. ஹாஜா செரீப்] [1981 மார்ச் 30

நிறைய இருக்கிறது. ஆனால் அப்படி காலத்திற்குள் முடிவடைய வில்லை என்றால், பல கஷ்டங்களும், நஷ்டங்களும் வருமே யொழிய, அந்த திட்டங்களினால் ஏற்படக் கூடிய பலன்கள் வராமல் போய்விடும். வராது.

இண்டஸ்டிரியல் எக்ஸ்பேன்ஷன்—தொழில் வளர்ச்சி என்ற வகையில் 3, 4 திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மதுரையில் சிமெண்ட் ஆலையை நிறுவுவது, வட ஆற்காடு மாவட்டத்தில் வெளிநாட்டு உதவியுடன் வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவது போன்ற சில திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்தத் திட்டங்களின் மூலமாக 4 ஆயிரம், 5 ஆயிரம் பேர்களுக்குத்தான் நிரந்தரமாக வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமே தவிர, பெரிய அளவில் வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கான எந்தவிதமான பெரிய திட்டங்களும் கொண்டு வரப்படவில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான பேர்கள் வேலை இல்லாமல், தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஆட்சியாளர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அது மட்டும் அல்லாமல் வருஷா வருஷம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பட்டம் பெற்றவர்களும், பட்டம் பெறாதவர்களும் இதனுடன் சேர்ந்து வருகிறார்கள். இவர்களை வாழ்விப்பதற்கு என்ன திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள் என்று துருவி துருவிப் பார்த்தாலும் கூட, ஒன்றும் புரியவில்லை. ஏன் இப்படி அவர்களுக்கான திட்டங்கள் என்று எதையும் கொடுக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை. அவர்களுக்கு ஏதாவது திட்டங்கள் வகுக்கயிருக்கிறார்கள் அல்லது அது பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று கூட நினைக்க முடியவில்லை. அது பற்றி யோசிக்கிறார்களா இல்லையா என்பதே கூட சந்தேகமாக இருக்கிறது.

படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் என்பது பெரிய எரிமலைக்கு ஒப்பானது. எந்த நேரத்திலும் எப்படி வேண்டுமானாலும் அது வெடிக்கலாம். எக்கனாமிக்கல் டெவலப்மெண்ட்ஸ் வேண்டும் என்றால், நிறைய தொழிற்சாலைகள் வர வேண்டும். சிறிய பெரிய நடுத்தர தொழிற்சாலைகள் நிறைய ஏற்பட்டால் தான் வேலை வாய்ப்பை பெருக்க முடியும். அம் மாதிரியான வகையில் இங்கே ஏதாவது திட்டங்கள் வந்து இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. நான் சொல்வதை ஒன்றும் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது, தொழிற் சாலைகளுக்கான நிறையத் திட்டங்கள் போட்டு நிறைய தொழிற் சாலைகளைக் கொண்டு வந்தோம். அதை பார்க்கும் போது, அதில் 5-ல் 1 பங்குகூட நீங்கள் இந்த 4 வருஷம் செய்த ஆட்சியில்

1981 மார்ச் 30] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

கொண்டு வரவில்லை என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. நான இதை ஏதோ பெருமைக்காகச் சொல்லிக் கொள்ளவில்லை. இருக்கிற பேக்ட்ஸ் உண்மைகளைத்தான் சொல்கிறேன். காரணம் என்னவென்றால், நம்மிடையே சுபிட்சம் ஏற்பட வேண்டுமானால் சராசரி வருமான விகிதாசாரம் அதிகரிக்க வேண்டும் என்றால், வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க அதிக திட்டங்கள் போட வேண்டும். அம்மாதிரி போட்டிருக்கிறார்களா ? இல்லையே என்பதுதான் என்னுடைய குறை. மற்ற மாநிலங்களில், அவர்களுடைய மாநிலங்களுக்கு நிறைய தொழிற்சாலைகள் வேண்டும் என்பதற்காக, இண்டஸ்டிரியலிட்ஸ் அசோசியேஷன், சேம்பர் ஆப் காமர்ஸ் ஆகியவைகள் மூலமாக, மற்ற மாநிலங்களுக்கு சென்று பார்க்கிறார்கள்.

அங்கே போய் அவர்கள் தங்கள் மாநிலங்களுக்கு தொழிற் சாலைகள் வரவேண்டுமென்று சொல்கிறார்கள்.. அதற்கு வேண்டியதை செய்கிறார்கள். அந்த மாநிலத்தில் என்னென்ன வளங்கள் இருக்கின்றன, என்னென்ன வசதிகள் இருக்கின்றன, என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க போகிறார்கள், "இன்ப்ரா ஸ்ட்ரக்ச்சர் பெஸிலிட்டீஸ்" பற்றியெல்லாம் எடுத்து விளக்குகிறார்கள். அந்த மாதிரி நம் மாநில அரசாங்கத்தில் உள்ளவர்கள் மற்ற மாநிலங்களுக்குப் போய் தொழில் அதிபர்களை அல்லது சேம்பர் ஆப் காமேர்ஸ்-ஸைப் பார்த்ததாகத் தெரியவில்லை. நான் ஏற்கனவே இதைப் பற்றிச் சொல்லி இருக்கிறேன். நீங்கள் சென்று அவர்களை வரவழைத்தால்தான் அவர்கள் இங்கே வருவார்கள். அப்படிச் செய்வதில் எந்தவிதமான தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. அவசியம் மற்ற மாநிலங்களைப் போல், நீங்களும் போய் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுவுமல்லாமல், நமது கனம் தொழில் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருக்கும்போது, மற்ற மாநிலங்கள் அப்படி இன்டஸ்ட்ரீஸ் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது, அம்மாதிரி கொண்டு வருவதற்கு தடை விதிக்க வேண்டுமென்று, ஒரே ஸ்டான்டேர்ட் இருக்க வேண்டும் என்று சொல்லி இருப்பதாகப் பார்த்தேன். அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். அப்படி அவர்கள் சொன்னது வாஸ்தவம் என்றால் அது ரொம்ப நல்ல காரியம் அல்லவென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் செய்வதற்கு முடியவில்லை என்றால் பிறத்தியார் செய்வதை நாம் ஏன் தடுக்க வேண்டும் ? நாம் திறமையாக இருக்க வேண்டும் நல்லவர்கள் என்று சொல்லிக் கொண்டால் மட்டும் போதாது. திறமை உள்ளவர்களாகவும், வல்லவர்களாகவும் இருக்க வேண்டும் ; செய்யக் கூடிய காரியங்களை விரைவில் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். எல்லாவற்றையும் ஒருவரே பார்த்து அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அது நல்ல முறை அல்ல. இப்போது கேள்விப்படுகிறேன்.....

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் நான் பேசுகிறபோது அங்கே நான் சொன்னது, இன்டரஸ்ட் ப்ரி சேல்ஸ்டாக்ஸ் கொடுப்பதற்கு உச்சவரம்பு 15 இலட்சம் ரூபாய் என்றிருக்கிறது. மற்றபடி இன்சென்டிவ்ஸ் கொடுக்கிற போது சில மாநிலங்களில் ஒரு கோடி ரூபாய், இரண்டு கோடி ரூபாய் என்றளவில் சில பேர்கள் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே நான் பேசுகிறபோது சொன்னேன். எல்லா மாநிலங்களுமே. அதில் ஒரு சராசரி வருவதுபோல் ஒரு சீலிங் இருப்பதற்கு மத்திய அரசு அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தால் சீரான தொழில் வளர்ச்சி எல்லா மாநிலங்களிலும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்று சொன்னேன். ஏனென்றால், ஒரு போட்டி மனப்பான்மை ஏற்பட்டு ஒரு மாநிலம் இன்னொரு மாநிலம் என்றளவில் எடுத்துக் கொண்டு சரியான நிதித்துறையில் போதிய ஆதாரங்கள், வசதி இல்லாத மாநிலங்கள் தொழில் வளர்ச்சி இல்லாமல் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற அடிப்படையில்தான் அந்த கருத்து சொல்லப்பட்டது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : Mr. Speaker, Sir, I am afraid the Hon. Minister for Industries has not understood me properly. My first concern is, you do not appear to be very serious about the industrial development of the State. If you are very serious, you should have gone to other States, met the industrialists, explained the facilities that are avilable here, and requested them to come here. You have not done so. And I am very much concerned about it.

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்று சொல்வார்கள். உங்களுக்கு தொழில் வளர்ச்சியில் அதிக அக்கறையில்லை. இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கமிட்டிகள் போடவில்லை. பல தடவை நான் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பல மாநிலங்களுக்கு நீங்கள் போகவில்லை. மற்ற மாநிலங்கள் நல்ல முறையில் பாம்ப்லட்ஸ் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் போதிய விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். என்னென்ன அவர்கள் செய்வார்கள், என்னென்ன வளங்கள் இருக்கின்றன, இன்ப்ராஸ்ட்ரக்ச்சர் பெசிலிட்டீஸ் என்னென்ன இருக்கின்றன என்று எல்லாம் விளக்கமாகச் சொல்லி இருக்கிறார்கள். அதே போல் நீங்கள் கொண்டுவரவில்லை என்றுதான் நான் சொல்கிறேன். அப்படிக்கொண்டு வந்திருந்தால் அதை உறுப்பினர்களுக்காவது கொடுத்திருக்கலாம். அல்லது சேம்பர் ஆப் காமேர்ஸ்க்காவது கொடுத்திருக்கலாம். அப்படிப் பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. ஆகவே இதில் அவசியம் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். நமது மாநிலத்தில் போதிய இன்டஸ்ட்ரீஸ் கொண்டு வருவதற்கான ஒரு பேவரபிள் க்ளைமேட்டை ஏற்படுத்த வேண்டும்.

இப்போதிருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான சிறிய இன்டஸ்ட்ரீஸ்க்கு போதுமான அளவிற்கு பவர் கிடையாது. பவர் பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது 2,300 மெகா வாட்ஸ் பவர்தான் வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

May be the working capacity. But what is the actul production of power, I would like to know. I am very happy that in the Sixth Five Year Plan you have alloted one-third of the total expenditure for power. But at persent your capacities are not fully worked. What are the reasons for it.

[முற்பகல் 10-40]

நீங்கள் 2,300 மெகா வாட் என்று சொல்லிவிட்டு, 900 மெகா வாட்தான் கொடுக்கிறீர்கள். இம்மாதிரியான நிலைமை அதிகரித்துக்கொண்டே வருமானால், எந்தவிதமான சுமுகமான ஏற்பாடும் செய்ய முடியாது. இதை நான் போனவருஷமே பட்ஜெட்டின்போது சொன்னேன். இந்த வருஷமும் சொல்கிறேன். தயவுசெய்து மின்சாரத் துறையில் இத்தகைய சூழ்நிலைகள் எல்லாம் வராமல் செய்ய, ஒரு நிபுணர்களைக் கொண்ட கமிட்டியைப் போட்டு, இதிலே ஏற்படக்கூடிய பவர் லாஸைப் பற்றியெல்லாம் அறிந்து, என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள். அப்படிச் செய்தாலே, அதுவே நமக்குப் போதுமானதாக இருக்கும் இம்மாதிரி செய்யவில்லை; செய்ததாகவும் ரிப்போர்ட்டிலே எந்தவிதமான தகவலும் இல்லை. இருந்தாலும் கூட, இப்போது சென்னையில் பேசின் பிரிட்ஜியிலே ஒரு புதிய தெர்மல் யூனிட் வந்திருப்பதாகவும், வட சென்னையிலே ஒரு பெரிய தெர்மல் ஸ்டேஷன் கொண்டு வருவதாகவும், மூன்றாவது கட்டமாக தூத்துக்குடியிலே ஒரு யூனிட் வருவதாகவும் நிதி நிலை அறிக்கையிலே நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவைகளைச் சரிவர செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்ன காரணத்தினாலே உங்களுக்கு மாக்சிமம் புரொடக்ஷன் வரவில்லை என்பதைப் பார்த்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். கோல் வரவில்லை என்று சொல்லுகிறீர்கள். கோல் வருவதற்கு காண்ட்ராக்ட் விட்டிருக்கிறீர்கள். கோல்லரியிலிருந்து துறைமுகம் அல்லது எங்கெங்கு கொண்டுவர வேண்டுமோ, அந்த தேவையான இடங்களுக்கு கொண்டு வருவதற்கு காண்ட்ராக்ட் கொடுத்திருக்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன். இந்த காண்ட்ராக்ட்டர் திறமையாக, அனுபவமுள்ளவர்களாக இருந்தால், கோல் ஒழுங்காக வரும். இதிலே நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இதிலே எந்தவிதமான கஷ்டமும் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

பவர் விஷயத்தில் நாம் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். பவர் இல்லை என்றால் நாம் எந்தவிதமான நல்ல ஏற்பாடும் செய்யமுடியாது. அக்ரிகல்சருக்கு பவர் வேண்டியிருக்கிறது; இன்டஸ்ட்ரிக்கு பவர் வேண்டியிருக்கிறது. இதற்கு மாக்சிமம் பவர் வேண்டியிருக்கிறது. அதே, போல் ஷாப்புகளுக்கு பவர் வேண்டியிருக்கிறது. எனவே பவர் இல்லையென்று சொன்னால், எந்தவிதமான தொழிலும் இல்லை என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தமாதிரி இருக்கும் சமயத்தில் இதில் மாக்சிமம், திறமையான நடவடிக்கைகளை எடுத்து, புல் புரொடக்ஷன் ஏற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதைச் செய்தாலொழிய இதிலே குறைபாடுகள் ஏற்படும். எனவே, இதிலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

பவர் வெட்டினால், 10,000 சிறு தொழிற்சாலைகள் இன்றைக்கு மூட இருக்கின்றன. ஏற்கனவே அன்-எம்ப்ளாய்மென்ட் நாட்டிலே இருக்கிறது. அதிலே இதுவும் சேர்ந்து விட்டால், அன்டர்-எம்ப்ளாய்மென்ட்தான் வரும். தொழில் அதிபர்கள் என்ன செய்வார்கள்? மூடத்தான் செய்வார்கள். பவர் இருந்தால் தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். உற்பத்தி பெருக்கினால்தான், அவர்கள் அதற்கு வேண்டிய சலுகைகளைக் கொடுக்க முடியும். என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்பவார்கள். தொழிலாளர்களுக்கும், மற்றும் யார் யாருக்கு பணம் கொடுக்கவேண்டுமோ அதை யெல்லாம் அவர்களால் கொடுக்க முடியும். அப்படியில்லையென்றால், அவர்கள் தொழிற்சாலைகளை மூடத்தான் செய்வார்கள். எனவே, தயவு செய்து இதிலே ரொம்ப கண்ணும் கருத்துமாக, திறமையாக செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சார், மதுவிலக்கைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது பற்றி நான் மிகுந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்ன இத்தகைய மதுவிலக்கு? இல்லையென்றால், பூராவையும் எடுத்து விடுங்கள். 25 வயதானவர்கள் எல்லாம் பர்மிட் வாங்கிக் குடிக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஒரேயடியா எடுத்துவிட்டதாகவும் தெரியவில்லை. இதிலே மிகவும் தவறான காரியத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள். இராஜாஜி அவர்கள் ஆரம்பித்தார்கள். காமராஜ் அவர்களும், அதற்குப் பின்னால் அண்ணா அவர்களும் இந்த மூன்று பேர்களும் கங்கணம் கட்டிக்கொண்டு, இந்த மதுவிலக்கை தீவிரமாக அமுல் செய்துவந்த நல்ல காரியத்தை செய்தார்கள். அதை எடுத்துவிட்ட பழி உங்களைச் சேரும். வேறு யாரையும் சேராது. 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் பர்மிட் வாங்கி குடிக்கலாம் என்று சொல்லுகிறீர்கள். அதைப் போல் 18 வயதானவர்களுக்குக்கெல்லாம்

ஓட்டுரிமை என்று சொல்லியிருக்கிறீர்கள். இதனால், 14, 15 வயதானவர்கள் எல்லாம் 18 வயது என்று சொல்லி, ஓட்டுரிமைப் பெறுவார்கள். அதைப்போல், இப்போது 25 வயதானவர்கள் எல்லாம் பர்மிட் வாங்கிக் குடிக்கலாம் என்றால், 17,18 வயதானவர்கள் எல்லாம் பர்மிட் வாங்கிக் குடிக்க ஆரம்பித்து விடுவார்கள். இது மிகவும் தவறான காரியம். இம்மாதிரி செய்திருப்பது கூடாது என்றும், இதிலே தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்றும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதனால் ஏற்படக்கூடிய பல தீமைகள் இருக்கின்றன. இதனால் மாணவர்களை குடிப்பதற்கு நல்ல ஆயத்தம் செய்ய அனுமதித்துவிட்டீர்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ''புரொகிபிஷன்'' இந்த உலகத்திலே எங்கும் வெற்றிகரமாக நடக்கவில்லை என்று தெரிகிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மதுவிலக்கை முழு வெற்றிகரமாக நடத்தியது. காங்கிரஸ் ஆட்சிக்குத்தான் செய்ய முடிந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களும் மிக தீவிரமாக்க வேண்டுமென்பதற்காக பல திட்டங்களைப் போட்டார்கள். அதையெல்லாம் மறந்து இப்போது நீங்கள் இதை எடுத்து விட்டிருப்பது ''ஸ்க்ரேப்'' செய்திருப்பது மிகவும் வருத்தத்தைத் தரக் கூடியது. திட்டங்களை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்றால், அந் திட்டங்களில் இருக்கக்கூடிய ஆகாத காரியங்களை எண்ணிப்பார்க்க வேண்டும். அவ்வாறு ஏன் செய்யத் தவறி விட்டீர்கள்?

It has become a cottage industry Sir, before the abolition of this what you have considered as Prohibition it has become a cottage industry. Almost in every nook and corner illicit distillation was going on. In every nook and corner this was being sold to the people and in every street there are innumerable number of shops Now. you have opened the flood gates I do not know what is going to happen I am more concerned about the youngster. about the womenflok and about the poor People who have nothing to earn. but only to indulge in this sort of thing and sell away whatever they have got. I do not know how you are going to tolerate this.

இதனால் என்ன வருமானம் வரும். 250 கோடிக்கு வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் அதை குறிப்பிடவில்லை. ஏன் குறிப்பிடவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படி 200, 250 கோடி ரூபாய்க்கு வருமானம் வருவதற்கு வழி இருக்கிறபோது, ஏன் 20 கோடி அளவிற்கு வரி போடவேண்டும். சில வரிச் சலுகைகளை

கொடுத்துவிட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு மேலும் பெட்ரோல் முதலியவற்றிற்கு,

At least for Petrol and diesel, if you are not levying any tax I would have been very much happier. But you havo levied tax on both petrol and diesel which are very very sensitive commodities. And I am sure on account of the taxes, the commodity price is again going to be raised, and what is the answer for it People are already suffering for want of purchasing power. The Purchasing power is very much less. If you are going on increasing this tax I do not know what to say about it.

200 கோடிக்கு மேல் அதிகமாக வருமானம் வரும் ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் 20 கோடி ரூபாய்க்கு வரி போடுவது மிகவும் துரதிருஷ்டவசமானது. இதை நீங்கள் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

சென்னை நகரம் பற்றிச் சொல்லவேண்டுமென்றால் மணிக்கணக்கில் சொல்லலாம். முதலில் ''முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன்'' அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு வாரங்களுக்கு முன்பு என்னுடையத் தொகுதியில் இரண்டு மணி நேரம் வந்து பார்த்தார்கள். சென்னை நகரம் முழுவதும், no water. no sanitation, no roads, no lights. இவைகள்தான் தென்படுகிறதே ஒழிய எந்தவிதமான நல்லகாரியங்களும் தென்படுவதில்லை என்பதைத் திட்டவட்டமாக சொல்லிக் கொள்ளுகிறேன். முதலில் அவரை மார்க்கெட் பகுதிக்கு அழைத்து போனேன். அரை மணி நேரம் கர்ச்சீப்பை மூக்கில் வைத்தபடியே சுற்றி வந்தார்கள். அங்கே போய் தான் நாம் காய்கறிகள், மட்டன், பிஷ் போன்றவைகளை வாங்கவேண்டியிருக்கிறது. அங்கேயே இந்த நிலைமை இருந்தால் மற்ற இடங்களில் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். This is the capital city' the headquarters of Tamil Nadu. People from various countries are coming here. The Goverment want more nourist traffic to come over here. If this is the tendency in this capital city I do not know what will be the tendency elsewhere. ஏன் நகராட்சித் தேர்தல்களை தடை செய்கிறீர்கள், பயப்படுகிறீர்கள் என்பதும் தெரியவில்லை. முனிசிபல் கவுன்சிலர்கள் இருந்தால் ஜனங்கள் அவர்களிடம் இவை பற்றி முறையிடலாம். பலமுறை கார்ப்பரேஷன் டிவிஷனல் ஆபீசில் போய் சொன்னாலும் கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

[முற்பகல் 10-50]

இப்படியிருக்கும்பொழுது எந்தமாதிரி சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்றால் தொத்து நோய்கள் பரவுகின்றன. வருஷம் முழுவதும் தொத்து நோய்கள் காலரா போன்றவை. அம்மை இப்போது பற்றாக்குறைக்கு போலியோ வேறு இருக்கிறது. இவைகள் வளர்ந்து கொண்டே வருகின்றனவே தவிர குறையவில்லை. இதற்காக என்ன செய்யப் போகிறார்கள் என்ற திட்டத்தையும் சொல்லவில்லை. முன்னாலே திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். 16 கோடி ரூபாய் கார்ப்பரேஷனுக்கு வந்திருக்கிறது அதிலே முக்கால் வாசிக்கு மேலே சம்பளத்திலே போய்விடுகிறது என்று சொன்னார்கள். இவ்வளவு பெரிய நகரத்திலே 16 கோடி ரூபாய் தான் வருமானம் வருகிறது என்ற நிலைமை இருக்கிறது. அதைத் தவிர 12 கோடிக்கு மேல் சம்பளம் கொடுக்கிறபோது போய் விடுகிறது என்பது மட்டுமல்ல, அவர்கள் சரியாக வேலை செய்யக்கூடிய நிலைமை இல்லை, சூப்ரவைஸ் செய்யக்கூடிய நிலைமை இல்லை என்பதை தெரிவித்து இப்படிப்பட்ட அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது குடிசைகள் நிறைய வந்துகொண்டு இருக்கின்றன. ஒரு பக்கம் சிலம்ஸ் இருக்கக்கூடாது என்ற முறையிலே சிலம்களிலே இருக்கக்கூடியவர்களை குடியிருப்புகள் கட்டி அங்கே போகச் சொல்லவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இன்னொரு பக்கம் சிலம்ஸ் அதிகமாக கிரியேட் ஆகிக்கொண்டே இருக்கின்றன. இதற்காக எந்தவிதமான திட்டம் போட்டிருக்கிறார்கள் என்றால் ஏதோ வீடுகள் கட்டிக்கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள் வேறு ஒன்றும் செய்யவில்லை. 15 வருடங்களுக்கு முன்னாலேயே நான் சொல்லியிருக்கிறேன். மெட்ராஸ் சிடியிலே கான்சன்ட்ரேஷன் ஆப் பாபுலேஷன் வரக்கூடாது என்றும் இன்டஸ்ட்ரீஸ் டிஸ்பெர்சலாக இருக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன். மெட்ராஸ் சிடியைச் சுற்றியுள்ள இடங்களிலேதான் இன்டஸ்ட்ரீகள் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஏனென்றால் இங்கே அதிகமான கவர்ன்மெண்ட் ஆபீஸ்கள் இருக்கின்றன. போர்ட் இருக்கிறது, பேங்குகள் இருக்கின்றன. மேலும் பல வசதிகள் இருக்கின்றன. அதனால் அப்படி எண்ணுகிறார்கள். இங்கே ஒரு இன்டஸ்ட்ரி வந்துவிட்டால் 100 பேர்கள் வேலை செய்யலாம் என்றால் ஆயிரம் பேர்கள் வேலைக்கு வந்து விடுகிறார்கள். 1,000 பேர்களுக்கும் எல்லா வசதிகளும் இங்கேயே தான் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்போது congestion will expand and the people who are already there, will find it difficult. I would like you to see what steps can be done to disperse the industries or atleast stop the other industries growth in the city of Madras. என்ற நிலைமை ஏற்படுகிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் கேபிடலை கொண்டுபோகவேண்டுமென்று

சொல்லியதைப் பார்த்து நான் ஓரளவுக்கு சந்தோஷப்பட்டாலும் கூட பெருமளவுக்கு அம்மாதிரி செய்ய முடியுமா செய்வது நல்லது தானா என்று எனக்குள்ளே நான் கேட்டுக்கொண்டேன். கேபிடலை நீங்கள் கொண்டுபோகாவிட்டாலும் கூட சில முக்கியமான அட்மினிஸ்ட்ரேடிவ் டிபார்ட்மென்ட்களை அங்கே கொண்டு போகலாம். எந்த இடம் மையமாக இருக்குமோ எந்த இடத்திலே பெசிலிட்டிஸ் இருக்கின்றதோ அங்கே கொண்டு போகலாம். The intensity of population in the City can be reduced. எங்கே கொண்டுபோனாலும் அதற்கு பின்னாலே உள்ள துறைமுகம் பெரிய துறைமுகம் ஆகும். அங்கே எல்லா பெசிலிட்டிகளும் வரும், பெரிய போஸ்ட் ஆபீஸ் வரலாம், பெரிய டெலிபோன்கள் வரலாம், நிறைய ரோடுகள் வரலாம். அதற்காக ஒரு குழுவை ஏற்படுத்தினால் அதை ஆராயலாம். People of good intention and people who are experienced in the line, can be put in the Committee and a proper survey can be made to see that these things are done நான் சமீபத்திலே பம்பாய்க்கு சென்றிருந்தபோது அங்கே உள்ள மாநில அரசாங்கத்தால் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அப்ஜக்டிவ் ஆக பரிசீலனை செய்து பம்பாய் நகரம் இருக்க இருக்க பெரிய நகரமாகிக் கொண்டு போகிற நிலைமை இருக்கிறது. 80 லட்சம் பேர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். ஒரு காலத்திலே டோக்கியோ நகரம்தான் அப்படி இருந்தது. இன்றைக்கு பம்பாய் போட்டி போட்டுக் கொண்டு வருகிறது. அங்கே வீடுகள் இல்லாத காரணத்தால் கடலுக்குள் ரெக்ளமேஷன் செய்து வீடுகளைக் கட்டுகிற முறையிலே பவுன்டேஷன் போட்டு தண்ணீரை அவ்வப்போது அப்புறப்படுத்தி கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு என்ன செய்தால் சமீபத்தில் 30 மைல் 40 மைல் வித்தியாசத்தில் பெரிய ஊரைக் கண்டுபிடிக்கலாம் என்ற அந்தத் திட்டம் 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததாகக் கேள்விப்பட்டேன். இப்பொழுது அதை எப்படியெப்படி ஆரம்பித்தால், என்னென்ன வசதிகளைச் செய்து ஆரம்பித்தால் இந்த நகரத்தினுடைய Density of Population குறையும் என்று ஒரு தீர்மானமான திட்டத்தினைக் கொடுப்பதற்கான ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அம்மாதிரியான ஒரு குழுவை நீங்கள் அமைத்து அதற்கு ஒரு Objective கொடுத்து, அரசாங்கம் போகாவிட்டாலும்கூட சில முக்கியமான டிபார்ட்மெண்டுகள் அங்கே செயல்படச் செய்தால் அவசியம். Dencity of Population குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Even otherwise' Mr.Deputy Speaker' I may mention that concentration of heavy industries important heavy industries, in and around the City is a dangerous one. In an emergency thefirst attack will be on the places where there is concentration of industrial growth. so, I would like to emphasise on this occasion that it isbetter that the Government tries to evolve certain schemes by which the industries are dispersed, density of the population diverted and the facilities that accrue from such industrial growth, are diverted to other places. அந்தமாதிரி செய்தால் அந்தந்த டிஸ்டிரிக்ட்களுக்குப் பெரிய பாபுலாரிட்டி ஏற்படும்.

தூத்துக்குடி பெரிய துறைமுகம் என்பதாக ஆகிக்கொண்டு வருகிறது. அங்கே பெரிய வெளிநாட்டுக் கப்பல்கள் வருகின்றன. தூத்துக்குடியிலிருந்து கொழும்பிற்கு பாசஞ்சர் சர்வீஸ் வைக்கலாமா என்று கப்பல் கம்பெனிக்காரர்கள் ஆராய்ந்து கொண்டு வருவதாகக் கேள்விப்பட்டேன். அவர்களோடு நான் பேசினேன். அப்படிச் செய்வதற்கான, நல்லவிதமாக நடத்துவதற்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன என்று நான் அவர்களிடத்தில் சொன்னேன். இதை அவர்கள் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

இம்மாதிரி செய்தால் நாம் வெற்றிகரமாக ஒவ்வொரு வேலையையும்செய்யமுடியுமே தவிர செய்யமுடியாமல் இருக்கவே முடியாது. இம்மாதிரியான திட்டங்களைப் போட்டுத்தான் ஆக வேண்டும்; போடாமல் இருக்க முடியாது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூ. 3,150 கோடி ரூபாய் செலவு செய்வதற்காகத் திட்டமிட்டிருக்கிறீர்கள். இதற்கு நல்லவிதமாகத் திட்டங்களைத் தீட்டி, தாமதமில்லாமல் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Delay is dangerous என்று சொல்வார்கள் மகாராஷ்டிர மாநிலம் பெரிய இன்டஸ்ட்ரீஸ் கொண்டு வருவதற்கு அவர்களிடத்தில் பொருள் வசதி இல்லலாததன் காரணமாக இப்பொழுது ஒரு குழுவை Oil Countries-க்கு அனுப்புவதற்காகத் திட்டம் போட்டிருக்கிறார்கள். Government of India-இன் பர்மிஷனை வாங்கித்தான் அங்கே அனுப்ப முடியும்.

They wanted to go and convince the great Shaiks of the Oil Countries and tell them that these are the facilities that are available in Maharashtra State and these are the 6 big Industries that can be evolved and can be conduced in a successful manner and they wanted to get their financial assistance.

1,000 கோடி ரூபாய் தேவை என்று அங்கே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The people who are going to invest, are not investing without coming into a partnership. I believe, they can have 40 per cent share to the partnership, or it can be a joint venture. With 40 per cent for those who are investing and 60 per cent for our people it is a good scheme. I would like our Government to examine whether this may be done with our own people in Singapore, Hongkong, Malaysia, Thailand, and other places, who are well-off and who are doing suceessful work. We can approach them and ask them to go over here and see whether suitable industries can be developed and they can be asked to come here and invest in these localities and in this way we can improve the industrial growth.

பொதுவாக நீங்கள் நன்மை தருகின்ற சில காரியங்களை Social Development க்காகக் கொண்டு வருவது குறித்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பலவித மான தொல்லைகளையும், கஷ்டங்களையும் அகற்றிவிட்டால் அதனால் ஏற்படும் பெருமை அவசியம் உங்களைச் சேரும். Industrial Expansion அறவே கிடையாது. அதற்கு வழிவகுக்க வேண்டுமா.

புரொஸபிஷனை இவ்வளவு தூரம் தளர்த்தியது மிகவும் தவறானதாகும். இதனால் ஏற்படும தொல்லைகள், துன்பங்கள், கஷ்டங்கள், பெண்களின் பெரிய அவலக் குரல் ஆகியவை உங்களைத்தான் பிடிக்குமேயொழிய வேறு யாரையும் பிடிக்காது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-00]

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்தில் பேசும் பொழுது தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய அபாயகர மான நிலையிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற கோவை மாவட்டத்தில் தொழிற் சாலைகள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்லும்போது சொல்வார்கள். ஒவ்வொருவருக்கும் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் நேரமாகிக் கொண்டேஇருக்கும்.

திரு. கோவைத் தம்பி : கோவை மாவட்டத்தில் தொழிற் சாலைகள் நிறைய இருக்கிற காரணத்தால், அங்கே தேவை யான சிக்கான், நிலக்கரி, கோக், இரும்பு போன்ற பொருள்கள் கிடைக்காத சூழ்நிலையில், தொழிற்சாலைகள் திண்டாடிக் கொண்டிருக்கின்றன என்பதையும், மத்தியிலே இருந்து அவை கிடைக்கச் செய்வதற்கு, ஏதாவது வழி.... (மணியடிக்கப் பெற்றது).

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு 1981—82-வது ஆண்டிற் காக கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையை ஒட்டி எதிர்க்கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கான ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கை, கால தாமதமாக வர நேரிட்டது என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அந்த நிதிநிலை அறிக்கையைத் தருகின்ற அன்றைய நம் மன்றத்தினுடைய தலைவர் அவர்கள் குறள் ஒன்றைக் கூறி அவையைத் துவக்கி வைக்கிற வழக்கம் போல்,

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்னும் குறளோடு அவையைத் துவக்கி வைத்து ஒரு விளக்கமும் தந்தார்கள். நிதி அமைச்சருடைய நிதிநிலை அறிக்கையின் துவக்கத்திலேயே

'பிணியின்மை செல்வம் விளைவு இன்பம்ஏமம்

அணிஎன்ப நாட்டிற்(கு) இவ்வைந்து''

என்னும் குறளோடு அந்த உரையைத் துவக்கி, இந்த ஐந்தும் செம்மையாக இருக்கிற அழகு பொருந்திய நாடாகத் தமிழ் நாடு விளங்க வேண்டுமென்று விரும்புகிறேன் என்று அவர்கள் தெரிவித்தார்கள். இந்த அழகுகளிலே உள்ளபடியே, நாவலர் அவர்களுக்கு இலக்கியச் சுவையோடு கூறப்பட்ட இந்த அழகு களிலே ஈடுபாடு உண்டு என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால், நோயின்மை இயல்பாக அமைய வேண்டு மென்ற நிலையிலே, அமைச்சர் கூறிய குறள் கருத்தும் அவரது உரையும் இருந்ததே தவிர, நோய் நாடி, நோய் முதல் நாடி, அதுதணிக்கும் வாய்நாடுகின்ற அந்த முயற்சி இந்த அறிக்கையிலே தெளிவாகக் காணப்படவில்லை. திருக்குறளிலே தொடங் கிய இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நான் ஒரு திருக்குறளை எடுத்துக்காட்டிப் பேச விரும்புகிறேன். நாட்டிற்கு இந்த அழ கெல்லாம் தேவை என்று சொன்ன வள்ளுவர்தான்.

'ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
வேந்து அமைவு இல்லாத நாடு'

என்று தெரிவித்தார். அரசுக்குச் சொல்லப்பட்ட கருத்து, அமைச்சுக்குப் பொருந்தும் என்ற காரணத்தால், சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய குறைகளை தேவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, அவைகளை நீக்குவதிலே ஆர்வத்தோடு, மக்கள் விரும்பத்தக்க வகையிலே செயல்படாத ஒரு அமைச்சு, அல்லது அரசு, எவ்வளவுதான், நாடு சிறப்புடையதாக இருந்தாலும்கூட, அதைக் காப்பாற்றுகிற தகுதியற்றதாக ஆகும் என்னும் இந்தக் கருத்தை வள்ளுவர் அன்றே சொல்லி இருக்கிறார்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து விளக்கம் தருகிற பொழுது 1981-82-வது ஆண்டில் வரவு ரூ. 1,128 கோடி, செலவு ரூ. 1,137 கோடி, பற்றாக்குறை ரூ. 9.57 கோடி என்று சொல்லி, வரவு செலவுத் திட்டத்தில் இந்தத் தொகை என்றும், மூலதனக் கணக்கிலே ரூ. 135 கோடி செலவு என்றும், கடன் கணக்கிலே ரூ. 121 கோடி செலவு என்றும், இதனுடைய அளவுக்கு தொகு நிதி பற்றாக்குறை ரூ. 153 கோடி என்றும் கடன் கணக்கிலே வருவாய் ரூ. 112 கோடி என்றும் ஆக, பொதுக் கணக்கில் நிகர இருப்பு ரூ. 42 கோடியானாலும்கூட, நிகரப் பற்றாக்குறை ரூ. 111 கோடி என்றும், கடந்த ஆண்டு பற்றாக்குறை ரூ. 11·47 கோடி என்பதன் காரணமாக, மொத்தம் பற்றாக்குறை ரூ. 122.96 கோடி என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1981-82-வது ஆண்டு இறுதியில் நிதிப் பற்றாக்குறை ரூ. 122·96 கோடி, ஏறத்தாழ ரூ. 123 கோடி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையில், அது எழுதப்படுகிற முறையினாலே, அந்த இடத்திலே தரப்பட வேண்டிய விளக்கத்தில், நிதிநிலை அறிக்கையில், கடந்த ஆண்டு ரூ. 11·47 கோடி சேர்ந்துதான் இந்தத் தொகை என்பது குறிப்பிடப்படுகிற முறையிலே குறிப்பிடப்படாமல் விடப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். காரணம், இறுதிப் பற்றாக்குறை என்று அந்தத் தொகைக்கு வந்தாலும்கூட அந்தப்பகுதியிலே குறிப்பிட்டு எழுத வேண்டிய இடத்திலே, எழுதப்படாமல் விடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், ரூ. 123 கோடி என்று வருகிற பற்றாக்குறை அளவு இருக்கிறதே, இந்த பற்றாக்குறை, இந்த அரசாங்கம் இந்த அறிக்கையிலே தர வேண்டுமென்பதற்காகச் சொல்கிற தொகையே தவிர, அது உண்மை அல்ல என்று நான் முன்கூட்டியே தெரிவிக்க விரும்புகிறேன்.

1981-82-ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தைத்தருகிற பொழுது, 1980-81-வது ஆண்டினுடைய வரவு செலவுத் திட்டத்தினுடைய விளைவுகளை எல்லாம் 1981-82 வது ஆண்டு வரவுசெலவுத் திட்டம் தாங்கித்தான் தீரவேண்டும்.

கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அது தொடங்குகிறபோது செலவு 967 கோடி என்று துவக்கப்பட்டு, அதற்குப் பின்னர் திருத்திய மதிப்பீடு தருகிற வகையில் 1,094 கோடி என்று தரப்பட்டு, மின்சார வாரியத்துக்கு கொடுக்கப்பட்ட உதவித் தொகை எல்லாம் சேர்த்து பட்ஜட் மெமோரண்டத்திலே குறிப்பேட்டில், 1,185 கோடி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. திருத்திய மதிப்பீடாக 1,185 கோடி என்பதை நான் ஏற்றுக் கொண்டாலும் கூட, இடையிலே வந்த துணை மானியக் கோரிக்கை முதல் தடவை 1981 ஜனவரி 27-ம் தேதி கொண்டு வரப்பட்டிருக்கிறது. துணை மானியக்கோரிக்கையில் 17·9 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்திற்கே கேட்கப்பட்டிருக்கிறது. அது தவிர மேலும் 32 கோடி முதலீடு, கடன் முதலீடு இவைகளுக்காகக் கேட்கப்பட்டு இருக்கிறது. அந்த 17 கோடி ரூபாயும் கூட திருத்தியமதிப்பீட்டிலே சேர்க்கப்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்ப்பதற்கு இடம் இருக்கிறது என்று சொன்னாலுங்கூட 23—3—1981-லே இந்த அவையிலே கொண்டு வரப்பட்ட துணை மானியக் கோரிக்கைத் தொகை வரவு-செலவுத் திட்டத்திலே 206 கோடி, காட்டிய தொகையையும் சேர்த்து 210 கோடி என்று கேட்கப்பட்டிருக்கிறது. புள்ளிவிவரம் முழுவதையும் நான் இங்கு படிக்கவில்லை.

அதே நேரத்தில் முதலீடு கடன் கணக்கு முதலானவற்றிற்காக ரூபாய் 248 கோடியும் முன்னர் கூறிய 210 கோடியும் இந்த மாதம் கடந்த 6, 7 நாட்களுக்கு முன்னாலே கொண்டு வரப்பட்ட தொகை, திருத்திய மதிப்பீட்டிலே சேர்க்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்பு இருந்திருக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. சேர்க்கப்பட்டிருப்பதாக புள்ளிவிவரங்களைக் காண்கிறபோது எனக்குத் தெரியவில்லை. சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் இந்த ஆண்டினுடைய இறுதியிலேயே துணை மானியக் கோரிக்கையாலே ஏற்படுகிற தொகையும் சேர்ந்து வரவு-செலவுத் திட்டத்திலே அதிகமாக ஆவது ஏறத்தாழ 509 கோடி ரூபாய். ஏனென்றால் இந்தத் துணை மானியக் கோரிக்கை 27-3-1981-லே கொண்டு வரப்பட்டதிலே ஏறத்தாழ 210 கோடியும் 248 கோடியும், அதற்கு முன்னாலே வரப்பட்ட துணைமானியக் கோரிக்கையில் ஜனவரியில் 18 கோடியும், அதனோடு ஏறத்தாழ 32 கோடியும், அப்படி மொத்தமாக 509 கோடி, 510 கோடி துணை மானியக் கோரிக்கைகளிலே இடம் பெற்றிருக்கிறது.

ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டம் தீட்டிய ஆண்டிலே, துணைமானியக் கோரிக்கையிலே 500 கோடி ரூபாய் அளவுக்கு வரலாம் என்று ஒரு கருத்து இருக்குமானால் நிதி நிலை அறிக்கையினுடைய நோக்கமே தவறிப்போய்விடும் என்று நான் சொல்லுகிறேன். அதை துணை மானியக் கோரிக்கை என்று சொல்வதைவிட, துணை பட்ஜட் என்று கூறக்கூடிய அளவுக்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிடுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ஏறத்தாழ 500 கோடியில் மூலதனக் கணக்கிலே போய்விடக்கூடிய 280 கோடியை விட்டுவிட்டு, 228 கோடியை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தாலும்கூட, அதனுடைய விளைவு என்ன ஆகிறது என்று பார்த்தால் (drifting from the Original Budget Proposals) என்று சொல்லத்தக்க அளவுக்கு ஆகிவிடுகிறது, நீங்கள் எடுத்து வைத்த முதல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்திலே இருந்து எந்த அளவுக்கு வேண்டுமானாலும் விலகிச் செல்லலாம். விலகிச் செல்லலாம் என்பது மட்டுமல்ல, எந்த அளவுக்கு வேண்டுமானாலும் இடைக்காலத்திலே பட்ஜட் கொண்டு வரப்படலாம். அப்படிக் கொண்டுவரப்படுவதன் மூலமாக ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி கவலைப் படத் தேவையில்லை என்றாகிறது. ஏனென்றால் துணைமானியக் கோரிக்கை வருகிறபோது எல்லாம், அதற்கு எந்தவகையிலே வருவாய் வருகிறது என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. எனவே வருவாய் எடுத்துக் காட்டப்படவேண்டிய அவசியம் இல்லாமலேயே செலவுக்கு மட்டும் தொகை ஒதுக்கப்படக்கூடிய வாய்ப்பை, ஒரு முறையை இந்த அரசு மிகப் பெரிய அளவுக்கு உருவாக்கிக் கொள்ளுமானால் அது நிதிநிலை அறிக்கை நோக்கத்தையே சிதைப்பதாகும். ஒரு அளவுக்குள்ளே இருக்குமானால் நிதி நிலை அறிக்கையின் தொகையிலே 10 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று இருக்குமானால் நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அறிக்கையிலே ஏறத்தாழ 25 சதவிகிதம் என்றும், 30 சதவிகிதம் என்றும், மொத்தத்திலே பார்க்கிறபோது 50 சதவிகிதம் என்றும் சொல்லுகிற அளவுக்கு துணை மானியம் கேட்கும் நிலை ஏற்படுமானால் அது முறையல்ல என்பதை இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்தவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, பொதுவாகவே இங்கே கையாளப்பட்டிருக்கிற சொற்றொடரில் மைனஸ் 11, மைனஸ் 18 என்று அந்தப் புள்ளி விவரங்கள் வருகிறபோது, இறுதிக் கையிருப்பு என்ற வார்த்தை வருகிறது. அது கை இருப்பு அல்ல. வேண்டுமானால் கைப் பொருப்பாக இருக்கலாம். மைனஸ் வருகிறபோது கை இழப்பு என்றோ கை பொருப்பு என்றோ அல்லது வழக்கம் போல பற்றாக்குறை என்றோ சொல்வதுதான் முறை தவிர இறுதிக் கை இருப்பு என்று சொல்லி மைனஸ் 11,47 என்று

வாழ்வை மேம்படுத்துவதற்காக ஒரு அரசு செய்யக் கூடிய காரியத்தை எண்ணிப்பார்த்து, முறைப்படுத்தி, முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்துவதற்காகத்தான் பட்ஜெட்டே தவிர நடைமுறையில் ஆகிற வரவு செலவு கணக்கு—ஏதோ மளிகைக் கடையில் செவ்வாய்க்கிழமை என்ன கணக்கு, புதன் கிழமை என்ன கணக்கு என்று கணக்கு வைத்துக் கொண்டிருப்பதைப் போல ஒரு பட்ஜெட் வைக்கப்படலாம் என்று நான் கருதவில்லை.

[முற்பகல் 11–20]

பட்ஜெட்டினுடைய நோக்கமே ஒரு உயர்ந்த குறிக்கோளுடையதாகும்: அந்த உயர்ந்த குறிக்கோளை நிறைவேற்றுவதிலே ஒரு அரசுக்கு அக்கறை இருக்குமேயானால் நடைமுறையிலே முன்கூட்டியே திட்டமிடக்கூடிய ஆற்றல் இருக்க வேண்டும். அமைச்சருக்கு வரும் பொருள் உரைத்தல் என்ற தகுதி உண்டு என்று சொல்வார்கள். நானும் அமைச்சராக இருந்த காரணத்தால் உண்டு என்று கூட நான் ஒப்புக்கொள்ளவில்லை. அரசாங்கத்திலே அந்த நிதித் துறையிலே உள்ளவர்கள் முன்கூட்டியே எண்ணிப்பார்த்து, அதைத் திட்டமிட்டு ஒரு வகைப்படுத்தி, முறைப்படுத்தி அதற்குப் பின்னால் திட்டமிட்டதற்கேற்ப செயல்படுகிற ஒரு ஆற்றலை அரசுக்குத் தருகிறார்களா என்று கேட்டால் முறைப்படுத்துவதும் இல்லை, வகைப்படுத்துவதும் இல்லை, செயல்படுகிற ஆற்றலை அரசுக்குத் தருவதும் இல்லை. அதை எல்லாம் சேர்த்து இயங்கச் செய்கின்ற ஆற்றல் இந்த ஆட்சிக்கும் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பக்கம் பதினெட்டு, ரெவின்யூ ஸ்டேட் எக்சைஸ், வடிசாலை சாராவிகள் மீது தீர்வை, டியூட்டி ஆன் டிஸ்டில்லரி ஸ்பிரிட், என்பதிலே டிஸ்டில்லரி ஸ்பிரிட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசுக்கு வரவேண்டிய வரிகளைப் பொறுத்தவரையில் 1979–80 ஆண்டிலே கணக்கில் 44,29,000 ரூபாய் வந்திருக்கின்றது. 1980–81-லே அதற்கான மதிப்பீடுகள் இல்லை. 1981–82-லேயும் அதற்காக மதிப்பீடுகள் இல்லை. 1979–80-ம் ஆண்டுக் கணக்கில் மட்டும் 44 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் வந்திருக்கின்ற என்று இருக்கின்றது. அதற்குப் பிறகு அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் அதுபற்றிய மதிப்பீடு இல்லை என்றால் ஒரு வேலை அந்த வரி எடுக்கப்பட்டு விட்டதா என்பது தெரியவில்லை. அப்படி எடுக்கப்பட்டிருக்குமேயானால் அது அரசாங்கத்தினுடைய எத்தனையோ கொள்கைகளில் ஒன்றாக இருக்கலாம், நோக்கங்களில் ஒன்றாக இருக்கலாம். அப்படி எடுக்கப்படவில்லை என்றால் அந்த வரி வருகின்ற அளவுக்கு

வரி 5 சதவீதம் என்று இருப்பதை, 11 சதவீதமாக உயர்த்த முடிவு செய்துள்ளீர்கள். இதனால், மட்டும் எவ்வளவு வருமானத்தை அரசு எதிர்ப்பார்க்கிறது என்கிற தகவலை இந்த அறிக்கையிலே தரப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னை மாநகராட்சி எல்லையிலும், சென்னை மாநகரைச் சுற்றிலும் உள்ள 32 கி.மீ. பகுதியில் விதிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரி தற்போதுள்ள 5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படும், அதில் இருந்து வரும் வருவாயில் கணிசமான பகுதி மாநகராட்சிக்கு ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதன் மூலம் எவ்வளவு தொகை அரசுக்கு வரும், அதில் எவ்வளவு தொகை மாநகராட்சிக்குத் தரப்படும் என்ற குறிப்பு கொடுக்கப்படவில்லை அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு ஏமாற்றும் குறிப்பாகத்தான் இருக்கிறது. இந்த வரி விதிக்கப்பட்டாலும் கூட இந்த வரி விதிப்பால் அரசுக்கு வருகிற வருமானத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதில் நான் இரண்டு கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். இது விற்பனை வரி மேல் வரி என்கிற அடிப்படையில், போட்டாலும் அது வாங்கும் பண்டங்களின் விலையில் தான் சேர்க்கப்படும் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஆகவே, அப்படி அந்த மக்களிடம் வசூலிக்கப்படுகிற அந்த தொகை முழுவதும் மாநகராட்சிக்கு ஒதுக்கப்படுமா? அல்லது அரசின் நிலைமைக்கு ஏற்ப அவ்வப்போதுள்ள நிலமைக்கேற்ப ஒதுக்கப்படுமா? சென்னை மாநகராட்சி மட்டுமல்லாமல், தாம்பரம் நகராட்சி, ஆலந்தூர் நகராட்சி ஆவடி டவுன்ஷிப், பூந்தமல்லி ஒன்றியம் ஆகியவற்றிற்கும் இதிலிருந்து பங்குத் தொகை அளிக்கப்படுமா? அந்த விவரம் இதிலே தரப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், இந்த மேல்வரி 5 சதவீத உயர்வு என்பது முறையற்றது. ஏற்கனவே 5 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளவர்கட்கு அதை விட அதிகமாக இந்த வரி உயர்வு செய்வது முறையற்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் கூற விரும்புகிறேன். தமிழக அரசினுடைய நிதிநிலைபற்றி இந்த ஆண்டு தருகிற வரவு-செலவுத் திட்ட குறிப்பேடுகளில் கடந்த ஆண்டைப்பற்றிய கணக்கு தரப்படுகிறது. கணக்கு என்று நான் சொல்லுகிற சொல் இந்த நிதிநிலை அறிக்கையில் வருகிற கணக்கு என்ற பொருளில் அல்ல. நான் சொல்லுவது கடந்த ஆண்டின் முதல் மதிப்பீடும் திருத்திய மதிப்பீடும் தான் தரப்படுகிறது. அதற்கு முன் ஆண்டைக் குறித்துத் தான் எந்த எந்த அளவில் அந்த நிதி செலவழிக்கப்பட்டது என்பதற்காக கணக்குத் தரப்படுகிறது. அப்படிப் பார்க்கிறபோது அந்தக் கணக்குக்கும் அந்த ஆண்டில் தரப்பட்ட நிதிநிலை அறிக்கையில்

தந்திருக்கிற வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டுக்கும், திருத்த மதிப்பீட்டுக்கும் மிகப் பெரிய அளவுக்கு, தொடர்பற்ற தன்மை காணப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆண்டு வருகிற வரவு-செலவுத்திட்டத்தின் அறிக்கையை ஒட்டி, தரப்படுகிற பல்வேறு புள்ளிவிவரங்களிலும் 1979–80-ஆம் ஆண்டுக்கான கணக்குத்தான் தரப்படும். அந்த ஆண்டு குறித்து தரப்பட்டிருக்கிற திருத்த மதிப்பீட்டையும் இப்போது தந்திருக்கிற செலவுக் கணக்கையும் சேர்த்துப் பார்த்தால் அதில் நுகர்பொருள் தொழிலுக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 49.08 திருத்த மதிப்பீடு 70.81. 49-லிருந்து 70 ஆகிறது. அது பற்றிய கணக்கு 54.93. இந்த திருத்த மதிப்பீடு வருவது ஏறத்தாழ டிசம்பர் திங்களில் அல்லது ஜனவரித் திங்களில் வரக்கூடும். அப்படி வருகிறபோது 50 ஆக இருந்து, 70 ஆகி, ஆனால் நடைமுறைப்படுத்தப்பட்ட அளவில் அது 54 ஆக குறைகிறது. செலவான தொகைக்குத்தான் கணக்கு தரவேண்டுமென்ற அந்த அடிப்படையிலே, இந்தக் கணக்கிலே வருகிற புள்ளிவிவரங்கள் நடைபெற்றவை என்பதால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் திருத்திய மதிப்பீடு தகுந்த ஆய்வு முறை இல்லாமல் திருத்தப்பட்டது என்ற காரணத்தால்தான் முதல் மதிப்பீட்டுக்கும் திருத்த மதிப்பீட்டுக்கும், கணக்குக்கும் இடையிலே இந்த ஏற்றத்தாழ்வுகள் வருகின்றன.

அதைப்போல தொழில்கள் பற்றிய, 1979–80 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 782.14; திருத்த மதிப்பீடு 690.96. திருத்த மதிப்பீடு என்பது முதலில் சொல்லப்பட்ட அந்தத் தொகை குறைவாக இருக்கலாம். அல்லது கூடுதலாக இருக்கலாம். அவ்வளவுத் தொகை தேவை இல்லை என்று திருத்தப்படுகிறது. திருத்துவது என்று சொன்னாலே 'இட் இஸ் ஃபார் பெட்டர் அட்மினிஸ்டிரேஷன்ஆப் தி புரோகிராம் என்பதற்காக ஏற்கெனவே உள்ளதை இன்னும் சிறப்பாக செய்வதற்கு சரியான தொகையை மதிப்பிடுவது. ஏறத்தாழ 782 இலட்சம் 690 இலட்சம் ஆகிறது. திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது செலவழிக்கப்படவில்லை என்று சொல்வதற்கல்ல. செலவழிக்கப்பட்ட தொகை கணக்கு 925 ஆகிறது. திருத்த மதிப்பீடு என்று இடையிலே வருவது என்பது ஏதோ ஒப்புக்காக என்ற நிலை ஏற்படுமானால் ஒப்புக்காக ஒரு புத்தகத்தில் நான்கில் ஒரு பங்கு இடத்தை இந்த திருத்த மதிப்பீடு அடைத்துக்கொண்டிருக்கின்றதே தவிர வேறொன்றும் பயனுடையதாக இல்லை. முதல் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு, திருத்த மதிப்பீடு என்று அதை மாற்றம் செய்கிற அவசியம் வருகிறபோது முதலில் உள்ள மதிப்பீட்டைவிட குறைத்துக் கொடுத்தால் போதும் என்று சொல்லி, குறைக்கப்பட்டு, மறுபடியும் இடையிலே மூன்று மாதத்தில் அது ஒன்றரை மடங்காக உயருகிறது என்பதால் தான்

இந்த—வரவு-செலவுத் திட்டம் குறிக்கோள் இல்லாமல், ஒரு தகுந்த முறை இல்லாமல் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்திட விரும்புகிறேன்.

அதைப்போல புள்ளிவிவர அறிக்கையிலே நீங்கள் பார்த்தால், 1979—80-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி தமிழக அரசின் தொகுநிதி வருவாய் கணக்குப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே 320-ம் எண்ணுள்ள தொழில்கள் என்ற தலைப்பில் வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு 4,40,55 ஆயிரம் ; திருத்த மதிப்பீடும் அதுவே. ஆனால் கணக்கு 3,77,79 ஆயிரம் என்று வருகிறது.

அதைப்போல கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கு அந்த ஆண்டில் மதிப்பீடு எண். 321-ல் 14,15,77 ஆயிரம். திருத்த மதிப்பீடு 10,68,33 ஆயிரம். ஆனால் நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கு 11,14,60 ஆயிரம்.

அதைப்போல கடன்களும் முன்பணங்களும் என்பதைப் பார்க்கும்போது 721-ல் கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் என்பதில் முதலில் ஒதுக்கீடு ஏறத்தாழ 1,83,06 ஆயிரம். திருத்த மதிப்பீடு 8,13 ஆயிரம். 1,83,06 ஆயிரம் என்று முதல் மதிப்பீடு செய்யப்பட்டதற்கு திருத்த மதிப்பீடு 8,13 ஆயிரம் என்றுதான் வருகிறது. ஆனால் கணக்கு தரப்பட்டுள்ளது 53,96 ஆயிரம்.

அதைப்போல அடுத்த இனத்திற்கு திட்டமிட்ட மதிப்பீடு இல்லை. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 'நில்' திருத்திய மதிப்பீடு 1,96 இலட்சம். அதன் பிறகு நடைமுறையிலே கணக்கு வந்திருப்பது 1,03 இலட்சம். 1,96 இலட்சம், கணக்கு 1,03 இலட்சம்.

நுகர்பொருள் தொழில்களுக்காக அந்த ஆண்டில் முதல் ஒதுக்கீடு கடன்களும் முன்பணங்களும் இல்லை. திருத்திய மதிப்பீடு 41 இலட்சம். நடைமுறையில் ஏற்பட்டிருக்கிற கணக்கு 1,29 இலட்சம். இதைப்போல இன்னும் பல்வேறு குறிப்புகள் இருக்கின்றன. நான் அத்தனையையும் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்தில் கருதவில்லை. ஆனால் நான் குறிப்பிட விரும்புவது, நிதிநிலை அறிக்கை தருவது என்பது வெறும் வரவு-செலவுத் திட்டக் கணக்கு அல்ல. வெறும் புக் கீப்பிங் அல்ல ; வெறும் அக்கவுண்டன்சி அல்ல; இன்னும் ஒருவகையிலே சொல்லப்போனால் ஆடிட் செய்வதற்காக மட்டும் அல்ல பட்ஜெட். இன்றைக்கு வரவு-செலவுத் திட்டம் என்று சொன்னால் ஒரு சமுதாயத்தினுடைய

மற்றுமொரு முக்கியமான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. மதுவிலக்குக் கொள்கை இந்த அரசுக்கு உண்டு, என்றாலும் மது உண்ட காரணத்தாலே- இந்த அரசு அல்ல—மக்கள் மது உண்ட காரணத்தாலே கொள்கை தளர்த்தப்படுகிறது என்ற ஒரு கருத்து வருகிறது. கொள்கை தளர்த்தப்படுகிறதா ? கொள்கை கைவிடப்படுகிறதா? கொள்கை மறைந்து போய் விட்டதா ? தளர்த்தப்படுகிறது என்பதற்கு என்ன பொருள் ? கொள்கை தளர்த்தப்படுகிறது என்று சொன்னால், நோயாலே பாதிக்கப்பட்டவர்கள் அல்லது கஷ்டப்படுகிறவர்கள் இன்னென்ன காரணங்களுக்காக மருத்துவர்கள் சான்றிதழ் பேரில், இன்னென்ன வகையான மது அருந்தலாமென்று அனுமதி கொடுக்கப்படுவது தான் தளர்த்தப்படுவது. இப்போது உள்ள மது விலக்குக் கொள்கை அரசைப் பொறுத்த வரையில் தோற்றுப் போய் விட்டது. அதுவும் இந்த அரசு மேற்கொண்ட தவறான முறையாலே பெரிதும் தோற்றுப் போய் விட்டது. இந்த அரசு மேற்கொண்ட தவறான முறை என்பது, மதுவிலக்கை ஒரு சமூக சீர்திருத்தப் பணியென்று கருதாமல், கிரிமினல் குற்றம் என்று கருதப்பட்டு, தண்டனைகளை அதிகப்படுத்துவதற்காக சட்டம் இயற்றி அந்தச் சட்டம் நடை முறைக்கு வராமலே, அந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்த பொழுதே எதிர்க் கட்சியினர் கண்டித்ததற்கான விளக்கங்களைப் புரிந்து கொள்ளாமல் கொண்டு வரப்பட்ட ஒரு தவறான சட்டம் மதுவிலக்கை ஏமாற்றத்திற்குள்ளாக்கி விட்டது. மதுவிலக்குக் கொள்கையை வரவேற்பவன் நான். அரசாங்கம் மதுவிலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை விரும்புகிறவன் நான். எப்போது ஒரு அரசாங்கம் அப்படிப்பட்ட கொள்கையை நிறைவேற்ற முடியும். மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றப்பட வேண்டுமானால் அரசாங்கத்திற்கு இருக்கிற இயந்திரங்கள் முறைப்படி இயங்குகிற வகையிலே முதலமைச்சர் அவர்களோ, மற்ற அமைச்சர்களோ அதற்கான வழி முறையை உணர்ந்து செயல்படுத்த வேண்டும். மதுவிலக்கை யார் நிறைவேற்ற வேண்டுமென்றால், காவல் துறை, இந்த காவல் துறை மதுவிலக்கு கொள்கைக்கு மாறான வழியிலே செயல்படுகிற நிலை நாட்டிலே எந்த அளவிற்கு உருவாகி இருக்கிறது என்று பார்த்தால் 'மதுவிலக்கே' நடைமுறையில் இல்லாத அளவுக்கு உருவாகி இருக்கிறது. ஏனிந்த நிலை என்று கேட்டால் கலைஞர் ஆட்சி காலத்திலே மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிட்ட காரணத்தால் நாட்டிலே உள்ளவர்கள் எல்லாம் குடிக்கப் பழகிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். ஆளும் கட்சியினர், நான் நினைக்கிறேன், கலைஞர் மதுவிலக்குக் கொள்கையைக் கைவிட்டாலும் ஆளுங்கட்சிக்காரர்கள் அப்படிக் குடிக்கப் பழகிவிடவில்லை என்று நான் நம்புகிறேன். எல்லோரும் பழகியிருந்தால் ஆளுங்கட்சிக்காரர்கள் இவ்வளவு பேர்கள் இருப்பார்களா ? ஆகவே எல்லோரும் பழகவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் மதுவிலக்குக் கொள்கையைக் கைவிடுவதற்குக் காரணமாக,

வடிசாலை சாராவிகள் தயாரிக்கப்படவில்லையா? அந்தத் தீர்வை போடவேண்டிய நிலைமைகள் ஏற்படவில்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. வரி இருந்தால் மதிப்பீடு களிலே இடம் பெற்றிருக்கவேண்டும். ஏன் இடம் பெறவில்லை என்பது தெரியவில்லை. ஒருவேளை அந்த வரி எடுக்கப் பட்டிருக்குமேயானால் நான் சொல்கின்ற கருத்து தவறு என்று ஏற்றுக்கொள்வதிலே எனக்கு வருத்தமில்லை.

அதே தலைப்பில் கூழ் 4 என்ற எண்ணின்கீழ் வடிசாலை சாராவிகள் மீது காலன் கட்டணம் விதிப்பதைப் பொறுத்த வரையில் அதாவது எவ்வளவு காலம் உற்பத்தி ஆகிறதோ அதற் குரிய கட்டணம் 1979–80-லே உள்ள கணக்குபடி ரூ. 27,28,000 வந்துள்ளது. 1980–81ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் இல்லை, 1981–82ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் இல்லை. ஒருவேளை வடி சாராயத்திற்கு வரிபோடுவது என்பது ஏழை மக்களைப் பாதிக்கும் என்று அரசு கருதி அந்த வரியை நீக்கி இருந்தால் இந்த அரசுக்கு யார் நன்றி செலுத்துவார்களோ அவர்கள்தான் நன்றி செலுத்தவேண்டும். ஆனால் போடப்பட வேண்டிய வரி, வரக்கூடிய ஒரு வருமானம் விடப்பட்டிருக்குமேயானால் அது பெரிதும் கண்டிக்கத்தக்கது. அதை அமைச்சரவர்கள் எண்ணிப்பார்ப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

அதேபோல ரிப்போர்ட் ஆப் தி கம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப் இன்டியா என்னும் ஏட்டில் 1978–79 ஆம் ஆண்டு குறித்து தந்துள்ள, அறிக்கையிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்ற செய்தி இது.

Report of the Comptroller and Auditor General of India, 1978-79 I quote;

"6.2 Non-levy or gallonage fee on issues of rectified spirit.

The Madras Distillery Rules, 1960, and the Madras Rectified Spirit Rules, 1959, provide for the levy of gallonage fee on issues of rectified spirit at the rate of one rupee per bulk litre or at such rates as may be prescribed by Government from time to time.

Case of non-levy of gallonage fee of Rs. 2.35 lakhs on rectified sgirit issued to licesnees from a distillery were mentioned in paragraph 7.5. of the Report of Comptroller and Auditor-General of India on Revenue Receipts for the year 1976-77.

It was again noticed in audit (January 1977 and January 1978) of three Bonded Manufactory Offices (Madras) that gallonage fee of Rs. 1.05 lakhs was not levied, for the year 1974–75 to 1976–77, on

1,05,341 bulk litres of rectified spirit issued to licensees under the Medicinal and Toilet Preparations Act 1955, though they wer not exempt from the payment of gallonage fee.

The under-assesment of gallonage fees of Rs. 1.05 lakhs was brought to the notice of the department in February 1977 and February 1978. The matter was reported to Government in July) 1979, reply is awaited." (March 1980).

The report has come earlier and therefore the reply might have been awaited at that time.

இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள், குறைகள் ஏற்படுகின்றபோது அரசு அவற்றை நிவர்த்திக்க என்னென்ன வழிவகைகள் காண இருக் கின்றது என்பதை நான் அறிய விரும்புகிறேன். பொதுவாக நிதிநிலை அறிக்கை என்பதை தமிழ்நாட்டு மக்களின் விதியைத் தீர்மானிக்கின்ற அறிக்கையாகக் கூட சில நேரத்திலே ஆகிவிடு வது உண்டு. கடந்த 4 ஆண்டுகாலமாக இந்த அரசால் தரப் பட்டு வருகின்ற — இந்த நிதியமைச்சரால் அல்ல என்று சொன் னாலும் கூட, இந்த அரசால் தரப்பட்டு வருகின்ற — நிதிநிலை அறிக்கையினுடைய விளைவுகள் தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்வை உயர்த்தவில்லை என்பதற்குரிய மிக முக்கியமான சான்று களை இந்த ஆண்டு வந்திருக்கின்ற அறிக்கையிலேகூட ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

"ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் — சுருக்கம்" என்னும் அறிக்கையில் தரப்பட்டுள்ளது இது. அகில இந்திய அளவிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் 48·44 என்ற அள விலேயும், தமிழ்நாடு அளவில் 52·22 என்ற அளவிலேயும் இருக் கிறது. இந்த வகையில் தமிழ்நாடு முன்னேறியிருக்கிறது என்று கூடச் சிலர் வாதாடக் கூடும். வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள வர்கள் எண்ணிக்கை, அகில இந்திய அளவிலே இருப்பதை விடத் தமிழ் நாட்டில் அதிகமாகியிருக்கிறது. கடந்த 5 ஆண்டு களுக்கு முன்னர் இந்த நிலைமை இல்லை என்பதை நான் வாதிட் டுச் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதேபோல இந்தப் புள்ளிகளைப் பார்க்கிறபோது, நம்முடைய மக்களுக்கு அதனு டைய கொடுமையின் அளவு தெரியாது. எனவே நான் அதைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, 4 கோடியே 85 லட்சம் மக்களில் 2½ கோடி மக்கள், அதாவது 2 கோடியே 50 லட்சம் மக்கள் இந்த வறுமை கோட்டிற்குக்கீழே இருக்கிறார்கள். அப்படி வறுமை கோட்டிற்குக் கீழே இருக்க நேரிட்டுவிட்டமைக்காக வருத்தம் தெரிவிக்கிற அதே நேரத்தில், அவர்களுடைய வாழ்வை உயர்த்து வதற்காக நாம் என்ன கடமையைச் செய்திருக்கிறோம் என் பதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த வறுமை கோட் டிற்குக்கீழே உள்ள மக்களுடைய எண்ணிக்கை அதிகமாவதற்

கான பல்வேறு காரணங்களில் ஒன்று, பெரும்பான்மையோருக்கு
வேலை வாய்ப்பு முழு அளவிலே இல்லை என்பதும், முழு நேர
வேலை கொடுக்கப்படவேண்டிய இளைஞர்களுக்கு, நிரந்தரமான
முழு நேர, வேலை கொடுக்கவில்லை என்பதும் ஆகும்.

இந்த வேலையில்லாதவர்களுடைய விழுக்காடு அகில இந்திய
அளவிலே 8.5 என்றும், தமிழ் நாட்டில் அந்த விகிதம் 16·1
என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது அகில இந்தியாவைப்
போல இரண்டு மடங்கு. மாண்புமிகு உறுப்பினர் உமாநாத்
அவர்கள் அகில இந்தியப் புள்ளி விவரத்திலே குறைபாடு இருக்க
லாம் என்றார்கள். ஒரு வேளை அந்த 8 என்பதை 10 ஆக, 11
ஆகக்கருதிக் கொண்டாலும் கூட, இந்த 16 என்ற எண்ணிக்கை
யைக் குறைத்துச் சொல்ல எங்கே வழியிருக்கிறது என்று எனக்குப்
புரியவில்லை. எனவே 100-க்கு 16 பேர் ஏறத்தாழ 67லட்சம்
பேர்கள் வேலையற்றவர்களாக, தமிழ் நாட்டில் இருக்கிறார்கள்.
அந்த 67 லட்சம் பேரில் அரசாங்கத்திலே வேலை கிடைக்கும்
என்று எதிர்பார்த்து, அரசாங்கத் துறைகள் மூலமாகவோ,
அல்லது வேலை தேடித் தரும் நிறுவனத்தின் மூலமாகவோ
வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்து பதிவு செய்து கொண்
டிருக்கிறவர்கள்11 லட்சம் பேர். அதாவது ஏறக்குறைய 10
லட்சத்து 78 ஆயிரம் என்று புள்ளி விவரம் வந்திருக்கிறது.

இப்படிப் பதிவு செய்தும் பலன் இல்லை என்று கருதி பதிவு
செய்து கொள்ளாமல் இருப்பவர்கள் ஒரு 5 அல்லது 6 லட்சம்
பேர் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் இளைஞர்கள். ஆக
இந்த 15 லட்சம் பேர் இளைஞர்களுக்கும், ஒரு 60 லட்சம்
பேர் அல்லது 50 லட்சம் பேர் பெரியோர்களுக்கும், வேலை
இல்லை என்றால், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அந்த
மக்களுடைய எண்ணிக்கை பெருகாமல் என்ன செய்யும் என்று
நான் கேட்க விரும்புகிறேன். எனவே இந்த நிலையைப் பார்க்
கிறபோது, இவற்றைக் களைவதற்காக இந்த ஆண்டில் நிறை
வேற்றப்பட்ட திட்டங்கள் என்ன என்ற கேள்வி எழாதா ?

கடந்த 3 ஆண்டு காலமாக இந்த ஆளும் கட்சியின் சார்
பிலும், அரசின் சார்பிலும் பேசப்பட்டு வந்த கருத்து, நாங்கள்
சிறு தொழில்களை ஏராளமாக, பரவலாக ஏற்படுத்தி விடப்
போகிறோம். அப்படிச் சிறு தொழில்களைப் பரவலாக ஏற்
படுத்திவிட்டால், ஒரு ஆண்டுக்கு 50 ஆயிரம் பேருக்கு நிரந்தர
மாக வேலை வாய்ப்பும் கிடைக்கும் என்றார்கள். அந்தப் புள்ளி
விவரத்தை எங்கே கொடுங்கள் என்றால், ஏறத்தாழ 7 ஆயிரம்
பேர் அல்லது 6 ஆயிரம் பேர் வேலை பெற்றார்கள் என்று தான்
பதில் வந்தது. பிறகு இப்படிப்பட்ட கேள்விக்கு பதில் என்று
கருதி வேலைக்கு உணவு திட்டம்— புட் பார் வொர்க் என்ற

அந்த திட்டத்தின் அடிப்படையில், ஏறத்தாழ 27, அல்லது 28
லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று தெரி
வித்தனர்.

ஒரு ஆள், ஒரு நாள் செய்யும் வேலை என்ற அடிப்படையிலே
தான் அரசாங்கத்திலே ஏற்கெனவே சொல்லப்பட்ட புள்ளிவிவரம்
காட்டுகிறது. எனவே அதை வைத்துக் கணக்கிட்டுப் பார்க்கிற
போது, லட்சம் பேருக்கு முப்பது நாட்களுக்கு வேலை கொடுப்ப
தாகக் கூட அது ஆகாது. எனவே அப்படி பார்த்தால், லட்சம்
பேருக்கும் குறைவாக நிரந்தரம் இல்லாத இந்த வேலை கூட,
வருடத்தில் 100 நாட்களுக்கும் கிடைக்கவில்லை என்ற நிலைமை
யில், அதை ஒரு பசி போக்குகிற ஒரு காரியமாகத்தான் கருத
முடியுமே தவிர, வேலை வாய்ப்பு அளித்திருக்கக் கூடிய ஒரு
காரியமாகக் கருதிவிட முடியாது — இவைகளிலெல்லாம் குறை
பாடுகள் இருந்தாலும் கூட.

மக்களின் குறைகளைப் போக்குவதற்கும் இவற்றை எல்லாம்
மாற்றுவதற்குந்தான் 5 ஆண்டுத் திட்டங்கள் என்று பொதுவாகப்
பேசப்படும். 5 ஆண்டு திட்டத்தினுடைய குறிக்கோள், வறு
மையை விரட்ட, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க,
பஞ்சத்தைக் குறைக்க, பசுமைப் புரட்சியை உருவாக்க என்று
பேசப்படும். ஆனால் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்
கெனவே 2 ஆண்டுக்காலம் நடைமுறைபடுத்தியதினால், நல்-
விளைவுகள் பெரும் அளவிற்கு ஏற்பட்டு இருக்கிறதா என்றால்,
இல்லை.

இப்பொழுது அரசாங்கம் பெருமையோடு சொல்கிறது, 2,400
கோடி ரூபாய் அளவிற்குத்தான் இந்தத் திட்டத்திற்கென —
அதாவது இந்த 5 ஆண்டுத் திட்டத்திற்கென மொத்த நிதி
ஏற்பாட்டுக்கு மத்திய அரசு ஒப்புக் கொண்டிருந்தது. நாங்கள்
வாதாடி 3,150 கோடி ரூபாய் அளவிற்கு, இந்தத் திட்டத்தை
நிறைவேற்றுவதற்கான ஒப்புதலைப் பெற்று வந்திருக்கிறோம்
என்று சற்று பெருமையாகக் கூட அரசின் சார்பிலே சொல்லப்
பட்டது. நீங்கள் வாதாடி அதிகம் பெற்றீர்கள். ஆனால் மத்திய
அரசிடமிருந்து, அந்த 2,400 கோடி ரூபாயாக இருக்கிற போது
எவ்வளவு ரூபாய் அந்த திட்டத்திற்கென நமக்கு உதவித் தொகை
யாக கிடைக்குமோ, அதே விகிதாசாரத்தில், நீங்கள் கேட்டிருக்
கிற அதிகத் தொகைக்கு நிதி உதவிகிடைக்காது என்று நான்
குறிப்பிடவிரும்புகிறேன். ஏறத்தாழ 2,400 கோடியாக இருந்த
போது 612 கோடி ரூபாய்தான் மத்திய அரசின் உதவி என்ற
விகிதாசாரத்தில் நமக்கு கிடைத்தது. அது 615 கோடியாகக்
கூட இருக்கலாம். ஆனால் அதற்கு மேல் 750 கோடி ரூபாய்
அளவிற்கு திட்டத்தை நாம் உயர்த்தியிருக்கிறபோது, 612 கோடி
யுடன் மேலும் 190 கோடி அதிகமாக உதவி கிடைத்திருக்க

வேண்டும். மொத்தத்தில் ஏறத்தாழ 802 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசின் உதவி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் கிடைத்திருப்பது 661 கோடிதான்.

[முற்பகல் 11-30]

அதனால் மத்திய அரசாங்கத்தில் இருந்து நமக்குக் கிடைக்கத் தவறுகிற தொகை ஏறத்தாழ ரூ. 141 கோடியாகும். இந்த 141 கோடி ரூபாயை இழந்தாலும் இழக்கிறோம் என்று தொகையை அதிகப்படுத்துகிறோம் என்று சொல்கிறபோது அப்படித் தொகையை அதிகப்படுத்தும் ஆற்றல் இந்த தமிழக அரசுக்கு இருக்கிறதா என்றால் அந்த ஆற்றல் இல்லை என்றுதான் நான் சொல்கிறேன். பட்ஜெட்டில் எப்படி எப்படியோ புள்ளிவிவரங்கள் காட்டி விடுகிற காரணத்தால் மட்டும் என்னைப் போன்றவர்கள் மன நிறைவு கொள்ள மாட்டோம். ஏனென்றால், இந்த நிதி உதவிப் பங்கினை முழு அளவில் பெற்றால் இன்னும் 141 கோடி ரூபாய் கிடைத்திருக்க வேண்டும் அல்லது திட்ட அளவை உயர்த்திகாட்டுகிறபோது இதனால் ஏற்படுகிற முழுச் சுமையையும் மாநில அரசே தாங்கிக் கொள்ள வேண்டும் என்று ஏற்படுகிறது. மாநில அரசு சொல்வது இத்திட்டத்திற்கு மொத்தம் 3,150 கோடி ரூபாய், இதில் மத்திய அரசு 665 கோடி ரூபாய் தருகிறது என்றால் மாநில அரசு இயல்பாக இந்தத் திட்டத்திற்காக 1,385 கோடி ரூபாய் ஒதுக்கும் என்றும் அது தவிர மிச்சமுள்ள 1,100 கோடி ரூபாய்க்கு அரசாங்கம் புதிதாகத் திரட்டப்போகிற தொகையையும் மின்சார வாரியம் ஈட்டித் தருகிற தொகையையும் போக்குவரத்துக் கழகங்கள் தேடித் தருகிற தொகையையும் சேர்த்து இந்த 1,100 கோடி ரூபாய் ஈடுகட்டப்படும் என்பதாகும். நான் கேட்கிறேன். மின்சார வாரியம் இந்தத் தொகையை ஈட்டித்தருமா? மாறாக வருகிற ஆண்டும் 100 கோடி ரூபாய் அல்லது 80 கோடி ரூபாய் மாநில அரசு தரவேண்டிய நிலையில் இருக்குமா? அப்படி மின்சார வாரியம் ஈட்டித் தர்முடியாது. ஆகவே அந்த மின்சார வாரியத்தின்மீது ஏறத்தாழ 300 கோடி ரூபாய் என்று கணக்கு காட்டினால் இது அவ்வளவும் திட்டத்தின் பேரால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். அதேபோல் போக்குவரத்துக் கழகங்கள் நிதி திரட்டி அரசுக்குத் தரக்கூடிய நிலை இன்னும் மூன்றாண்டுகளுக்கு வரும் என்று எதிர்பார்க்கிறீர்களா? அப்படி வரும் என்றாலும், பெட்ரோல், டீசல் விலையை இன்னும் அதிகமாக உயர்த்தினால் கழகங்களின் செலவு அதிகமாக ஆகுமே தவிர அப்போதும் குறையப்போவதில்லை. ஆகவே எந்த வகையில் இந்த 3,100 கோடி ரூபாய்க்குத் திட்டத்தை நிறைவேற்றப்போகிறீர்கள்? என்று நான் கேட்டால், அது தவறல்ல.

அதேபோல் தொழில் வளர்ச்சி தொழில் வளர்ச்சி என்று சொல்கிறபோது ஏதோ சில தொழில்களுக்காக இன்டென்ட் (Intent) என்ற முறையில் மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். மதுரையில் ஒரு சிமென்ட் தொழிற்சாலை வரப்போகிறது. அதேபோல் வெடிகுண்டு செய்கிற தொழிற்சாலை வட ஆற்காடு மாவட்டத்தில் வரப்போகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். அவற்றை நான் நிச்சயமாக வரவேற்பேன். அதில் மாறுபாடு கிடையாது. ஆனால் ஒரு திட்ட அறிக்கையில் எந்த அளவிற்கு தொழிற்சாலைக்கு முக்கியத்துவம் வரவேண்டுமோ அந்த முக்கியத்துவம் வரக்கூடிய வாய்ப்பு இந்த அறிக்கையில் உருவாக்கப்படவில்லை. ரூ. 27.5 கோடி ரூபாய் ஒரு காகிதத்தொழிற்சாலை கரூர் பக்கத்தில் கரும்புச் சக்கையைக்கொண்டு நடைபெறுவதாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் வெளியிட்ட நிதிநிலை அறிக்கையில் நேரடியாகச் சொல்லப்படுகிற சொற்களில் இந்த 27.5 கோடி ரூபாய் என்பது குறிப்பிடப்பட்டிருக்குமானால் அதன் முக்கியத்துவம் உணரப்பட்டதாகி இருக்கும். இதற்கு உள்ள முக்கியத்துவம் நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் நேரடியாகக் காணப்படவில்லை. ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்காகத் தரப்பட்டிருக்கிற அறிக்கையில் 27.5 கோடி ரூபாய் என்று இருக்கிறது. அதேபோல் வரவு-செலவு திட்டக் குறிப்பேட்டிலும் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 27.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இது அரசாங்க நிறுவனமா என்று அறிய விரும்புகிறேன். Whether it is public sector or joint sector or co-operative sector? என்று கேட்கிறபோது இது ஜாயின்ட் செக்டாரில் இருப்பது நல்லதல்ல என்பது என் கருத்து. ஏறத்தாழ 180 கோடி ரூபாய் அளவிற்கு திட்டமிடப்படும் இந்த ஆலைக்கு உலக வங்கியிடம் இருந்து கடன் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்தத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு இப்போது 27.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் வந்திருப்பதுபோல் கடந்த ஆண்டு பத்துலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முதல் ஆண்டில் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1980-81-ல் பத்து லட்சம், 1979-80-ல் பத்து லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர இந்தப் பத்து லட்சம் ரூபாய் ஏற்கனவே குறிப்பிடப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் 1979-80 கணக்கில் பத்து லட்சம் ரூபாய் இப்போது காட்டப்படுவதைப்போல் சென்ற ஆண்டு தரப்பட்ட அறிக்கையில் புள்ளிவிவரப் பட்டியலில் அந்தப் பத்து லட்சம் ரூபாய் குறிப்பிடப்படவில்லை. வேண்டுமானால் நான் ஆதாரம் காட்டத் தயாராயிருக்கிறேன். பத்து லட்சம் ரூபாய்கொடுக்கப்பட்டும் அது எதனால் கணக்கில் காட்டப்படவில்லை? ஒரு அரசாங்கம் பத்து லட்சம் ரூபாய் கொடுக்கிறபோது, கொடுத்துவிட்டு மூன்றாவது ஆண்டு தரப்படும் புள்ளிவிவரக் கணக்கில் கொண்டுவந்து காட்டுகிற

போது அந்த ஆண்டு மதிப்பீட்டிலும் சென்ற ஆண்டு மதிப்பீட்டிலும் அது காட்டப்படாததற்கு ஏதாது மறைமுகமான நோக்கம் இருக்கிறதோ என்று கேட்டால் அது தவறு இல்லை.

ஏன் அதைக் குறிப்பிடுகிறேன் என்றால் இப்படிப்பட்டதொரு பெரிய காகிதத் தொழிற்சாலை உருவாக்குவதற்கு இன்னொரு காகித தொழிற்சாலை அதிபரிடம் அல்லது நிர்வாகியிடம் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 180 கோடி ரூபாய் அளவிற்குள்ள ஒரு தொழிற்சாலையை, உலக வங்கி உதவியோடு உருவாக்க தமிழக அரசு இப்போது 27.5 கோடி ரூபாய் கொடுத்து நடத்த முற்படுகிறபோது, அந்தத் தொழிற்சாலையை தனிப்பட்ட ஒருவரிடம், அவர்கள் எவ்வளவு திறமைசாலியாகயிருந்தாலும் அவர்களிடம்—தொழில் அதிபர் அல்லது நிர்வாகியிடம் ஒப்படைப்பது என்பது அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையாக இருக்குமானால் அது ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைக்கு முரணானது என்பது மட்டுமல்ல, தனிப்பட்டவர்கள் கொழுப்பதற்கு, வளர்வதற்கு, செழிப்பதற்கு இந்த அரசு உடைந்தையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளாகும் என்று தான் குறிப்பிட விரும்புகிறேன்.

டெக்னிகல் அஸிஸ்டென்ஸ் அல்லது மானேஜிங் அஸிஸ்டென்ஸ் பெறுவதாக இருந்தால்கூட, அது அரசுத் துறையிலே நிர்வகிக்கின்ற தொழிலாக இருக்கவேண்டும். இதிலே நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையாயில்லாமலும் இருக்கலாம். இந்த அரசினுடைய நிதிச் செயலாளர் அல்லது துணை நிதிச் செயலாளர் இந்த முறைகேட்டிற்கு ஒப்புக்கொள்ளாத காரணத்தினால், இந்தத் துறையைவிட்டு விலகவேண்டிய நிலைமை ஏற்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையில்லாமலும் இருக்கலாம். ஆனால், இதற்கு 27 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தருகின்றபோது, அரசு அதற்கு என்ன பாதுகாப்பு வைத்திருக்கிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அந்தத் தொழிலை முறையாகத் தொடங்குவதற்கும் அரசுத் துறையிலே தொடங்குவதற்கும், எந்த அளவு வேலை வாய்ப்பு உருவாகும் என்பதையும் அதிலே என்னென்ன வாய்ப்புகள் உருவாக இருக்கின்றன என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்னை. இன்றையதினம் இந்த நாட்டிலே உருவாகியுள்ள வறட்சி நிலை குறித்து அரசியலுக்கு அப்பாற்பட்டு எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்கக் கடமைப் பட்டுள்ளன. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகவும் உருக்கமாக, நாங்கள் சென்று பார்த்துவிட்டு வந்தோம் என்று சொன்னார்கள். இந்த நாட்டிலே பெரிய அளவுக்கு வறட்சி ஏற்பட்டிருப்பதாகச் சொல்லிவிட்டு முன்பு வறட்சி ஏற்பட்டபோதுகூட, தமிழ் நாட்டிலே பல மாவட்டங்களில் மாவட்டத்தைவிட்டு மாவட்டம் போகின்ற நிலைமை இருந்தது

என்று சொல்லியிருக்கிறார். இப்போது இருக்கிற நிதியமைச்சர் அவர்கள் அப்போதும் அமைச்சராக இருந்தவர்தான். அப்போது மாவட்டத்தை விட்டு மாவட்டம் போகின்ற நிலைமை இருந்தாலும்கூட, நான் தெரிவிக்க விரும்புவது, இன்றைக்கு மக்கள் மாநிலத்தை விட்டு மாநிலம் போகின்றார்கள். அதனால்தான், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 10, 20 கிராமங்களில், அந்த கிராமங்களைவிட்டு ஷிமோகாவிற்கும், வேறு சில பகுதிகளுக்கும் போயிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளைப் பற்றி விவரமாகக் கூற எனக்கு அந்தப் பழக்கமில்லை. மக்கள் கர்நாடகம் மாநிலத்திற்குப் போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே ஆடுமாடுகளும் வெளியே போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஆடுகள் வழியிலேயே போய்விடும். என்பதால், மாடுகள் கேரளவிற்கும் மக்கள் கர்நாடகத்திற்கும்போகிறார்கள்.

மக்கள் அதிகம் பேர் போகவில்லை. 100 பேர்200 பேர் குடும்பத்துடன் போனார்கள் என்றாலும்கூட அது வேதனை தருவது. நம்முடைய முதலமைச்சர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஒரு மனிதன் எங்காவது பட்டினி கிடக்கிறான் என்று கேள்விப்பட்டால், அரசு அதிகாரிகளுக்கு அது தெரிய வந்தால், உடனே 100 ரூபாய் கொடுக்கப்படும் என்று அவ்வாறு சொல்லியிருப்பது, அவருடைய நல்ல எண்ணத்தை எடுத்துக் காட்டலாம். ஆனால் அதை செயல்படுத்த முடியுமா என்பது அதிகாரிகளுக்குத் தான் தெரியும். ஆகவே, அப்படி உதவி கொடுக்கப்படுதவாகச் சொன்னாலும், குடும்பம் குடும்பமாக வெளிமாநிலத்திற்குச் செல்லக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. இந்த வரட்சி நிலையை நான் ஒரு குறையாக சொல்லமாட்டேன். நான் அமைச்சராக இருந்தாலும்கூட, சில நேரங்களில் இப்படி ஏற்படலாம். அப்படி ஏற்பட்டதற்குப் பின்னர், இந்த அரசு என்னென்ன காரியம் செய்கிறது என்பது தான் கேள்வி.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அங்குள்ள நிலைமைகளை நவம்பரில் எழுதியும், டிசம்பரிலே அரசு அறிக்கை வெளியிட்டும் அதற்காக ஏறத்தாழ ஒருகோடியோ 5 லட்சம் அல்லது 1 கோடியோ 10 லட்சம் ரூபாய் உடனடியாக செலவிடப்பட வேண்டுமென்று சொல்லியும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டும், அதற்கான தொகை ஒதுக்கப்பட்டு, ஆணை பிறப்பிக்கப்படவில்லை, அதனால் செயல்பட முடியவில்லை என்று ஜனவரியில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லக் கூடிய நிலைமை இருந்துள்ளது. என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1981 மார்ச் 30

அதற்குப் பின் கடைசி நேரத்தில், காவேரிபாக்கம் ஏரியிலே போய் நின்றுகொண்டு, மார்ச்சு மாதத்தில் ஏரியில் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய்விட்டதா என்று கேட்பது, நான்கு மாதங்கள் மழையே இல்லாமல் வறண்டு போயிருக்கும்போது, குளிப்பதற்கு தண்ணீர் கேட்பதுபோல் இருக்கிறது. முதலமைச்சர் போய்ப் பார்ப்பதென்பது அவசியம்தான். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்கூட இதைப் பார்ப்பதற்காக வரவிருப்பதாக செய்திகள் வந்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். பொது மக்களுடைய கண்ணீரைத் துடைப்பதில் நான் அரசோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன். எங்கள் கட்சிகூட அதற்குத் தயாராக இருக்கிறது. கடந்த முறை புயல் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும், மற்றவர்களும் சிறையிலே இருந்தபோது, நிதி திரட்டி இந்த அரசுக்கு வழங்கவேண்டுமென்ற முறையிலே அரசுத் தலைமைச் செயலாளரிடம் வழங்க முன்வந்ததை இந்த அரசு நன்கறியும். பொதுமக்களுடைய கண்ணீரைத் துடைப்பதில் நாங்கள் ஒத்துழைக்கத் தயார். ஆனால், அதற்காக ஒரு கிழவியின் கண்ணீரை முதலமைச்சர் அவர்கள் துடைத்து விட்டால் அது பொது மக்களுடைய கண்ணீரைத் துடைத்ததாகக் கருதப்படுமானால், அது சரியல்ல ; அது கிழவியினுடைய முந்தானை செய்து விடக்கூடிய ஒரு சாதாரணமான காரியம் என்பதையும், இதனால் நம்முடைய ஆட்சித் திறமையை வளர்த்திருக்கிறோம் என்றோ, மக்களுடைய குறைகளைப் போக்குகிறோம் என்றோ நான் ஏற்றுக்கொள்ளவதற்கில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த வறட்சிப் பணிகளைச் செய்வதற்காக இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஒரு வேளை துணை மதிப்பீட்டிலே கிராமக் குடிதண்ணீர் திட்டத்திற்காக, வேறு சில பஞ்சாயத்து திட்டங்களுக்காக, வேலை வாய்ப்புத் திட்டங்களுக்காக நாம் ஒதுக்கியிருக்கின்ற தொகையில் ஆங்காங்கே தனித்தனியாக இருக்கலாம் : அதை நான் மறுக்கவில்லை. ஆனால், வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 75 கோடி ரூபாய் வேண்டுமென்று முதல்வர் அவர்கள் பேசியதைப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படி 75 கோடி அல்லது 65 கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொல்லிவிட்டு, அதற்காக தனியாக இந்த அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு ? நீங்கள் அப்படி ஒதுக்கிய தொகையைச் செலவிடுவதற்கு ஆணை பிறப்பித்தது என்று ? அந்தத் தொகையைச் செலவழித்ததன் மூலமாக ஏற்பட்டிருக்கக் கூடிய பலன் என்ன ? அந்தப் பணிகளை விரைவாகச் செய்வதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன ? என்பதையெல்லாம் இந்த அரசு தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[1981 மார்ச் 30] [திரு. க. அன்பழகன்]

மற்றொன்று, இதனோடு சேர்த்துச் சொல்லக் கடமைப்பட்டுயிருக்கிறேன். உழைப்புக்கு உணவுத் திட்டத்தின்கீழ் தரப்படுகின்ற அரிசியின் தரம் எப்படியிருக்கிறதென்றால் அந்தச் சோறு மஞ்சளாக ஆகிவிடுகின்றது., உண்ணக்கூடியதாக இல்லை என்று குறை சொல்லப்படுகின்றது. இது எல்லா இடங்களிலும் இருப்பதாகத் தெரிகிறது. எனவே, அமைச்சர்கள் போகின்ற இடத்திலே, அந்த ஏழைகளுக்குத் தரப்படுகின்ற அரிசியை வாங்கிப் பார்த்தால் அல்லது சமைந்த சோற்றைப் பார்த்தால் நிலைமை தெரியும். இதிலே ஆளுங் கட்சி அல்லது எதிர்க்கட்சி என்ற வாதத்திற்கே இடமில்லை. ஏழை மக்களுக்குத் தரப்படுகின்ற அந்த அரிசி சாப்பிடுவதற்கு வாய்ப்பில்லாத அளவுக்கு இருக்குமானால், அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதிலே இன்னொன்று தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டதிலே குழந்தைகளும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கும் அதேமாதிரியான உணவு வழங்கப்படுகிறது. உணவு தருவதிலே மாறுபாடு இல்லை. ஆனால் எத்தனை வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இதிலே முறைப்படி வேலை செய்யலாம் என்பதை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

இன்னும் ஒன்று; இப்படிப்பட்ட திட்டங்கள், காண்ட்ராக்ட், டெண்டர் கேட்கப்பட்டு விடப்படுவதில்லை அது இந்த அரசாங்கத்தினுடைய இன்று ஆட்சிக்கு வந்திருக்கிறவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களின் ஏகபோக உரிமையாக இருக்கிறது என்று மற்றவர்கள் குறை சொல்கிறார்கள் எனக்கு அந்த முழு விவரங்கள் தெரியாது. ஆனால் குறைகள் பல முறை பேசப்பட்டிருக்கின்றன. டெண்டர் விடுகிற முறையினாலேதான் ஜனநாயகத்திலே இருக்கும் எந்த உரிமைகளையும் முறைப்படி வழங்க முடியும். டெண்டர் விடுகிற முறையில்லாமல் வேலையைப் பங்கிட்டுத் தரமுடியாது ; நாமினேஷன், முறையிலே தருவது என்று சொன்னால் வலுத்த கை உள்ளவனுக்குத் தான் நாமினேஷன் தர நேரிடும். வலுத்த கை உள்ளவன் வருமானம் வசதி உள்ளவனாக இருப்பான் ; வருமானம் உள்ள கையிலே அதை நியமன முறையில் கொடுப்பது என்பது வருமானத்தைப் பங்கிடுவதற்குத்தான் இருக்கும். வருமானத்தைப் பங்கிடுகிறபோது ஊழல்கள் ஏற்படத்தான் செய்யும்.

ஏழைகளுக்காகத் திட்டம் தீட்டி விட்டு அந்தத் தொகையை யார் யாரோ பங்கிட்டுக் கொண்டு விடுவதால், கிராமங்களில் நூற்றுக்கு அறுபது சாலைகள் உருப்படியான சாலைகளாகப் போடப்படவில்லை, என்பதை அந்தத் துறையைச் சேர்ந்தவர்

களுக்கும், அரசாங்கத்திற்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுக்கு அதைப் பற்றி விசாரித்து அறிய வேண்டுமென்ற அக்கறை இருக்குமானால் கிராம ரோடுகளை எல்லாம் பரிசீலிப்பதற்குத் தனியாக ஒரு பொறியாளரை நியமித்து, போடப்பட்ட ரோடுகள் செம்மையாகப் போடப்பட்டிருக்கின்றனவா என்பதை விசாரித்து அந்தக் குறைகளைப் போக்குவதற்கு, இனி எதிர்காலத்திலாவது டெண்டர் முறை மூலமாக வேலை செய்யும் முறை பின்பற்றப்பட வேண்டும்.

ஏற்கனவே மக்கள் குழு போடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 'பீப்பிள்ஸ் கமிட்டி' என்று சொல்லப்பட்டது. இப்போது 'பீப்பிள்' இருக்கிறார்கள். கமிட்டி இல்லை. இந்த கமிட்டிக்கு இந்தப் பணிகளிலே பொறுப்பெடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பில்லை. எனவே இப்படிப்பட்ட முறையிலே, அதிகாரிகளும், மற்றும் சில பேர்களும் சேர்ந்து கொண்டு வேலையைப் பங்கிட்டுக் கொண்டு தனக்கு விரும்புகிறவர்களுக்கு இந்தப் பொதுப் பணி வேலைகளைக் கொடுப்பதற்கு வாய்ப்பு அளிக்கலாமா என்பதை இந்த நேரத்திலே அரசு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி என்று சொல்லி, முதலில் 42 கோடி, அதற்குப் பின்னாலே 50 கோடி என்றும் தக்காவி கடன் 18 கோடி இப்படி 70, 71 கோடி அந்த கடன்கள் தள்ளுபடி என்றும் தெரிவித்திருக்கிறீர்கள். கடந்த ஆண்டு அதைத் தெரிவித்த போது நிதி நிலை அறிக்கையில் நிதி ஒதுக்கிக் அறிவிக்கவில்லை. பின்னர் துணை மானியக் கோரிக்கையில் ஒதுக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இன்றும் 23 கோடி ரூபாய் அளவு விவசாயிகள் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களை விவசாயிகள் திருப்பிச் செலுத்தி விட்டார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகைகள் பெறும் உரிமை நியாயமாக உண்டு, அதிலே அடுத்த ஆண்டு அவர்கள் செலுத்த வேண்டிய கடன் 23 கோடி ரூபாய் தள்ளுபடி செய்வதன் மூலம் செலுத்தாமல் இருப்பதற்கு அரசு ஒப்புக் கொள்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் 23 கோடி ரூபாய்க்கு நிதி நிலை அறிக்கையிலே எந்த இடத்திலே வழி செய்திருக்கிறீர்கள்? ஒரு கருத்தைச் சொன்னால் அதற்கு வழி வகை செய்து காட்ட வேண்டும். அந்த வழி இப்போது செய்யப்படவில்லை. துணை மானியக் கோரிக்கையில் இது வருமென்று கருதுகிறேன். இருந்தாலும் கூட, அதே போல் அவ்வாறு பல சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஆகக் கூடிய செலவுகள் என்ன? இவ்வளவும் துண்டு விழுகிற பட்ஜெட்டிலே தானே, மேலும் எவ்வளவு விழுந்தால் என்ன, கப்பல் மூழ்க ஆரம்பித்ததற்குப் பின்னாலே முக்கால் பங்கு மூழ்கினால் என்ன, முழு அளவிற்கு மூழ்கினால் என்ன என்ற கருத்தில் நடைமுறை இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

வைக்கப்படவேண்டுமோ அந்த ஊதியத்திலே தீர்மானிக்கப்படலாம் என்று அறிவித்துவிட்டு, 1981-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலேயிருந்துதான் அந்தப் புதிய ஊதியம் அளிக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றீர்கள். அதிலே பெரும்பாலானவர்கள் பெரிய ஊதியத்திலே உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள், குறைந்த ஊதியத்திலே பணியாற்றியவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு மாதம் இருபத்தைந்தோ, முப்பதோ, நாற்பதோ அதிகத் தொகை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால் தேர்ட் பே கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தீர்களே, அந்தத் தேதியிலேயிருந்து ஒன்மேன் கமிஷன் ரிப்போர்ட்டின் அடிப்படையில் நீங்கள் ஏற்றுக்கொள்கின்றபடி, இந்த 100 அல்லது 110 வகையானவர்களுக்கு அந்த ஊதியத்தை அளிக்க முன் வர வேண்டும்.

அப்படிப் பொருளாதார நிலை காரணமாக முடியவில்லை என்று சொன்னாலும்கூட, 81—என்பதற்குப் பதிலாக 80 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயிருந்தாவது—ஒன்றரை ஆண்டுகள் அவர்களுக்கு இழப்பாக இருக்கட்டும்; ஒன்றரை ஆண்டுகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்கட்டும்; அப்படிப் பொறுப்பேற்று அந்த ஊதியத்தைக் கடந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயிருந்தாவது வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு—சரண்டர் லீவ்—அதற்காக ஊதியத்திலே ஏறத்தாழ அரை மாதச் சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற முறை கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டு, அவர்கட்குரிய வாடகைப்படி, நகர ஈட்டுப்படி எல்லாம் சேர்த்துத்தான் வழங்கப்பட்டது. வேண்டுமானால் புள்ளி விவரங்களைப் பாருங்கள். அப்படி நகர ஈட்டுப்படி, வாடகைப்படியெல்லாம் சேர்த்து ஒப்படைப்பு விடுப்பாகத் தரப்பட்டுவந்த, அந்த ஊதியத்தை இடையிலே இந்த அரசுதான் நிறுத்தியது. இந்த அரசு என்றால், நாவலர் அல்ல, இதற்கு முன்னாலிருந்த இந்த முதலமைச்சருடைய அரசு. எனவே, இந்த அரசு நிறுத்தியதற்குப் பின்னர், இப்பொழுது திரும்பவும் தருகின்ற பொழுது, ஏற்கெனவே வழங்கப்பட்டதைத்தான் திரும்பவும் தருகிறார்களே தவிர, புதிதாக ஒன்றும் தரவில்லை. ஆனால், புதிதாக, இப்பொழுது 250 கிலோமீட்டருக்கு மேல் அந்த 15 நாள் விடுமுறையிலே இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை வெளியூர்களுக்குச் சென்றால், போவதற்கான உதவித்தொகையை அரசு தரும், போவதற்காகும் செலவைத் தரும் என்று கூறுகிறார்கள். இதில் என்ன "ரேஷனேல்" ?If there ny pr nc p c o r t on tc ?என்று கேட்க விரும்புகிறேன். இந்த 15 நாளில் அவர் போக வேண்டும் என்றால், மாநிலத்துக்குள் 250 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள இடத்துக்குத்தான் போகவேண்டுமென்றால், விழுப்புரம் அல்லது விருத்தாசலத்திற்கு போகவேண்டியவர் திருச்சிக்கு டிக்கட்

ஒத்திவைப்பதற்குக் காரணமாக இன்றைக்கு உங்களுக்கு அந்தச் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லும்போது கலைஞர் கருணாநிதி, அன்றைக்கு அவர் முதலமைச்சர் என்ற காரணத்தினாலே எப்படி வேண்டுமானாலும் அவரை விரட்டலாம் எதிர்க்கலாம் என்பதற்காக நீங்கள் கையாண்ட முறைகள்: தாய்மார்களைக் கொண்டு போராட்டம் நடத்த வேண்டுமென்று சொன்ன அந்த முறைகள் எவ்வளவு தவறு என்பதை இப்பொழுதாவது சிந்திக்க வேண்டும். உண்மைகளுக்கு மாறான ஒரு நாட்டு மக்களுடைய உள்ளத்திலே ஒரு மாறுபட்ட உணர்ச்சியை உண்டாக்குவதற்காக அதை நீங்கள் அப்படிப் பயன் படுத்திக் கொண்டதை நான் நினைவூட்டுவது இப்போது அதே காரியத்திலே நாங்கள் ஈடுபடுவதற்காக அல்ல, ஒரு தவறை யார் செய்தாலும் அதைத் திருப்பிச்செய்வதற்காக அல்ல—தேவன் செய்தாலும் விடமாட்டேன் என்று சொன்னவர்கள் இன்றைக்கு எவன் செய்தாலும் விட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது வேறு—ஒரு தவறை ஆளுங்கட்சி செய்த காரணத்தால் நாங்கள் செய்ய வேண்டுமென்று நான் கருதவில்லை, ஆனால் இன்றைய தினம் மதுவிலக்குக் கொள்கையை, எப்படியே, தளர்த்துகிறீர்களோ அல்லது கைவிடுகிறீர்களோ அதனுடைய விளைவு என்ன என்பதை திரு. ஹ. ஜா செரீப் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

25 வயதிற்கு மேற்பட்டவர்கள் எல்லாம் பெர்மிட் வாங்கிக் கொண்டு குடிக்கலாம் என்று சொன்னால் அதற்கு இப்போது மதுவிலக்குக் கொள்கை என்று பெயரா? ரேடியோவிற்கு லைசென்ஸ் வாங்கிக் கொள்ளலாம் என்றால் அது ஒரு அனுமதி அதைப் போல் அனுமதி வழங்குகிற காரணத்தால் மதுவிலக்கு கொள்கை எப்படி உளதாகும்? 25 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு மட்டுமே மதுவிலக்குக் கொள்கையா? ஒருவர் 5 ரூபாய் கொடுப்பதாலே அல்லது 10 ரூபாய் கொடுத்து பர்மிட் வாங்குவதாலே அந்தக் கொள்கைக்கு மாறுபட்டவன் அல்ல என்று ஆகிவிடுமா? நீங்கள் 5, 10 ரூபாய் என்று வைக்கிற காரணத்தினாலே அரசாங்க வருமானத்திற்கு இது ஒரு சந்தர்ப்பம் என்று நீங்கள் கருதுகிறீர்களா என்று நான் கருத முடியுமே தவிர மதுவிலக்கை நடைமுறையில் வைத்திருக்கிறோம் என்று சொல்வதற்கு இடமில்லை. திருடுவதற்கு 100 ரூபாய் கொடுத்தால் லைசென்ஸ் கொடுக்கலாமா? விபச்சாரம் செய்வதற்கு 100 ரூபாய் கொடுத்தால் அனுமதி கொடுக்கலாமா? ஆகவே மதுவிலக்குக் கொள்கை அரசாங்கத்திற்கு உண்டு என்றால் நீங்கள் பெர்மிட் தருவது முறையல்ல. மதுவிலக்குக்கொள்கையை எங்களால் நிறைவேற்ற முடியவில்லை என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். நிறைவேற்றி வருகிறோம் என்று சொல்கிறபோது பெர்மிட் எதற்காகா? 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் குடிக்கலாம் என்று வைத்து விட்டு 25 வயதிற்குக் கீழே உள்ளவர்கள்

குடித்தால் அந்த இளைஞர்களுக்கு நீங்கள் எப்படி தண்டனையை கடுமையாக்கப் போகிறீர்கள்? இளைஞர்களை அப்படித் தண்டிப்பதற்கு முறை இருக்கிறதா? அண்ணன் குடிக்கிறபோது தம்பி சும்மா பார்த்துக் கொண்டு இருப்பானா? 27 வயதாகிற கணவன் குடிக்கிறபோது 23 வயதாகிற மனைவி குடிக்காமல் இருப்பாளா? இது ஒரு சமுதாயக் கேடு, இந்தக் கேட்டைப் பற்றி எல்லோரும் வருத்தப்படுவதை விட நான் அதிகமாக வருத்தப்படுகிறேன். ஆனால் அந்தக் கேட்டினைப் போக்குவதற்கான ஆற்றல் நமக்கு எங்கே இருக்கிறது? மதுவிலக்கிற்கு மக்களிடம் நம்பிக்கை ஏற்படுமளவு மரியாதை கிடைக்க வேண்டுமென்றால். நாட்டிலே கள்ளச் சாராயம் மொத்தமாக ஒழிக்கப்பட வேண்டும். இந்த அரசாங்கத்திற்குத் திறமை இருக்கிறது என்றால் கள்ளச் சாராயத்தை ஒழித்து விட்டுச் சொல்லுங்கள், இந்த நாட்டிலே கள்ளச் சாராயம் கிடையாது என்றால், யாருக்கும் கிடைக்காது என்றால், நீங்கள் அந்த முறையிலே மதுவிலக்குக்கு மாறாக மதுவை அனுமதித்து செயல்படுத்தினால் கூட நாங்கள் கண்டிக்கத் தயாராக இல்லை. ஆனால் மதுவிலக்குக் கொள்கை சட்டப்படி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் கள்ளச் சாராயத்தின் செல்வாக்கு எந்த அளவுக்கு இருக்கிறது என்று கேட்டால், பத்திரிகைகளிலே எழுதப்பட்டிருக்கிற கட்டுரையைப் பார்க்கிறபோது எனக்கு நினைவுக்கு வருகிறது. ஏற்கெனவே இதே கூறப்பட்ட கருத்துக்களுடன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கமிஷனும் தெரிவித்து இருக்கிறது. 60 லட்சம் பேர்கள் குடிக்கிறார்கள், என்று. ஆனால் நாட்டிலே உள்ள நிலைமை 5 பேர்களுக்கு ஒருவர் குடிக்கிறார். ஏறத்தாழ 1 கோடிப் பேர்கள் குடிக்கிறார்கள். அதிலே 40, 50 லட்சம் பேர்கள் தென்னங்கள், பனங்கள் என்று குடிக்கிறார்கள், ஒரு 50 லட்சம் பேர்கள் சாராயம் குடிக்கிறார்கள், அதிலே 35 லட்சம் பேர்கள் கள்ளச் சாராயம் குடிக்கிறார்கள். இந்த 35 லட்சம் பேர்களுக்கு கள்ளச் சாராயம் நாள்தோறும் விற்கப்படுகிறது. இந்தக் கள்ளச் சாராயத்தினாலே மட்டும் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் யார் யாரோ சம்பாதிக்கிறார்கள், அதிலே ஒரு பங்கு காவல் துறைக்கும் இருக்கிறது. காவல் துறையிலே நேர்மையானவர்கள் இருக்கிறார்கள், நாணயமானவர்கள் இருக்கிறார்கள், லஞ்சமே பெறாதவர்கள் இருக்கிறார்கள், அப்படிச் சில பேர் இருக்கிற காரணத்தினால் அந்தத் துறையையே கெடுக்கக் கூடிய அளவுக்கு இந்தக் கள்ளச் சாராயத்தினுடைய ஆதிக்கம் வளர்ந்திருக்கிறது, அதனால் இந்த அரசாங்கத்தையே கெடுக்கக் கூடியதற்குக் காரணமாகவும், கள்ளச் சாராயம் இருக்கிறது, இந்த ஆட்சிக்கு அவக்கேடான பெயரை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது. கள்ளச் சாராயமும், அந்த கள்ளச் சாராயத்திற்குப் பயன்படக் கூடிய எரி சாராயமும் அதற்குக் காரணமாக இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? அந்தக் கள்ளச் சாராயத்தை ஒழித்தால் தான்,

நீங்கள் பெர்மிட் என்று பேசுவதற்கே கூட அர்த்தம் இருக்கிறது கள்ளச் சாராயம் சாப்பிடுகிறவன் உங்களிடம் வந்து எப்படி பெர்மிட் வாங்குவான் ? ஏன் வாங்குவான் ? எவ்வளவு தான் அழகான பாட்டில்களில் நீங்கள் அடைத்து வைத்து அதற்கு ஓயின் என்றோ அல்லது என்ன என்ன பெயர்களோ வைத்து விற்றாலும் கூட சாராயம் வாங்குவதற்கு விரும்புகிறவன் கள்ளச் சாராயம் கிடைக்கிற இடத்திலே தான் வாங்குவானே தவிர. இதை ஏன் வாங்குவான் ? எனக்குத் தெரிந்த ஒருவர் சொன்னார், நன்றாகக் குடிப்பவர் சொன்னார், இந்தத் தண்ணீரைச் சாப்பிட்டால் அந்த 'கிக்' வராது என்று. எந்த கிக்கைப் பற்றியும் எனக்குத் தெரியாது. ஆகவே பாட்டில்களில் அடைத்து வைத்து விற்றாலும் கூட 100 பாட்டில்கள் விற்க வேண்டிய இடத்திலே 20 பாட்டில்கள் தான் விற்குமே தவிர, 80 பாட்டில்கள் அளவுக்குக் கள்ளச் சாராயம் தான் விற்கும், இதிலே சமூக விரோதிகளை, சமுதாயம் கேடிகளைப் பயன்படுத்திக் கொண்டு லட்சக் கணக்கான ரூபாய் சம்பாதித்துக் கொண்டு ஆளுங் கட்சிக்குள்ளேயே குத்து வெட்டு உருவாக்குவார்கள். இன்றைக்கு இருக்கிறது என்று நான் சொல்ல விரும்பவில்லை, ஆனால் அந்நிலை ஏற்படும். அது மட்டுமல்ல, நாட்டிலே அவர்களுடைய செல்வாக்கு எந்த அளவுக்கு வளரும் என்று கேட்டால் காவல் துறை அவர்களுக்கேதான் பயன்படும்.

[முற்பகல் 11-50]

காவல் துறையை உள்ளூரிலே கட்டுப்படுத்தி வைத்துக் கொள்கிறவன்தான் அந்த ஊருக்கே தலைவனாவான். கள்ளச் சாராயம் இநத நாட்டை ஆள வேண்டுமென்று கருதுகிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். இதை நிறுத்துவதற்கு ஏதாவது வழி செய்யுங்கள்; ஏற்ற நடவடிக்கை எடுங்கள்.

காவல் துறையிலே உள்ளவர்களுக்கெல்லாம் குறைந்தவிலையிலே உணவுப் பொருட்களைத் தருவதாகச்சொன்ன பொழுது முதலமைச்சர் பேசிய கருத்து, இந்தக் குறைந்த விலையிலே உணவுப் பொருட்களை வழங்குகின்ற காரணத்தால் அரசாங்கத்திற்கு 4 கோடி ரூபாய் செலவானாலும் அவர்களிடத்தில் ஏற்படுகின்ற தவறுகள், அவர்களிடத்தில் ஏற்படுகின்ற குறைகள் நீக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன் என்பதாகும். அந்த நோக்கத்திலே நான் கூட அதை வரவேற்கிறேன். 4 கோடி அல்ல ; பத்து கோடி கொடுத்தால்கூட அதிலே 40 கோடி வருமானம் கிடைக்கின்றபொழுது எதற்காக அதைக் கை விடுவார்கள் ?

நான் இதைச் சொல்வதால் நல்லவர்களே இல்லை என்று சொல்வதாக எடுத்துக் கொள்ளவேண்டாம். போலீஸ் ஸ்டேஷன்களிலே பல ஊர்களிலே— சில ஊர்களிலே இல்லை—

காவல் துறையில் 10 பேர் வேலை செய்தால் அவர்களுக்கு மாதச் சம்பளம் அரசாங்கத்திலேயிருந்து வருவதற்கு முன்னதாக, கள்ளச் சாராய வியாபாரிகள் தருகின்ற சம்பளம் முதலிலேயே வருகிறது. அப்படியானால் அந்த வியாபாரிகள் எவ்வளவு சம்பாதிக்க வேண்டும் ? அதிலே இந்தச் சம்பளம் எவ்வளவு இருக்கும் ? என்பதைக் கருதிப்பார்க்க வேண்டும்.

இந்தக் கேடுகளை நாம் எல்லோரும் ஒன்றாக ஒத்துக் கொண்டு அதற்குப் பரிகாரம் தேடுகின்ற மனப்பான்மை வர வேண்டாமா ? சரி, மதுவிலக்குக் கொள்கை ஏதோவொரு வகையிலே தளர்த்தப்படுகிறது, அது அதனுடைய தலையெழுத்து ; இப்படி மாறுகிறது.

அப்படி அரசாங்கம் மாற்றுகின்ற நேரத்தில் பர்மிட் முறை வைத்து, அதற்குப் பிறகு பாட்டில்களிலே அந்த அராக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அந்த அராக் தயாரிப்பதற்கு வேறு மாநிலங்களிலே உள்ள தொழிலதிபர்கள்தான் அரசாங்கத்தினிடத்திலே அனுமதி பெறவிருப்பதாக நான் அறிகிறேன். மண்ணுக்குரிய மைந்தர்களுடைய உரிமை என்ற அந்த வாதத்திற்குக்கூட நான் போகவில்லை. வியாபாரத்திலே உள்ள உரிமைகள்கூட இந்த நாட்டிலே தமிழனுக்குக் கொடுக்கப்படக் கூடாதா ?

இங்கேயிருந்து எரிசாராயம் போனால், கேரளாவிலே பேர் வியாபாரம் நடக்கிறது. புது சாராயம் வேண்டுமென்றால் கர்நாடகத்திலேயிருந்து வரக்கூடிய நிலைமையிலே, தொழிற்சாலையை வேறு எங்கோ இருக்கின்றவர்கள் கோடிக்கணக்கிலே முதலீடு செய்து ஒவ்வொரு தொழிற்சாலையையும் நடத்தி அங்கேயிருந்து பாட்டில்கள் வர வேண்டும் என்றால் தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய திறமையற்ற, பொறுப்பற்ற, இன்னும் சொல்லப்போனால் கண்ணியமற்ற ஒரு காரியம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே எரிசாராயம் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன ? ஒன்று, அவற்றைத் தேசியமயமாக்குங்கள் ; நேஷனலைஸ் செய்யுங்கள் : அரசாங்கத்திலே எடுத்துக் கொள்ளுங்கள் ; நீங்களே பாட்டில் தயாரியுங்கள்—நீங்கள் என்றால் அமைச்சரைச் சொல்லவில்லை— உங்கள் அரசாங்க நிர்வாகத்திலே தயாரிக்கட்டும். அதிகாரிகளெல்லாம் குடிக்கலாம் என்று அனுமதியிருக்கின்றபொழுது பாட்டில் தயாரிக்கின்ற இடங்களிலே அவர்கள் இருக்கக்கூடாதா ? தொழிற்சாலை நடத்தக் கூடாதா ? அதிலே பல இலட்சம் பாட்டில்கள் தயாராகி மக்களுக்கு வழங்கப்படக்கூடாதா ? கொக்கோ கோலாவிலே கோடிக்கணக்கிலே சம்பாதித்தார்கள். அதிலே சம்பாதிக்கக் கூடிய பணம் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வகையிலே தொழிற்

சாலை நடத்த சர்க்காராலே முடியாதா? இதை வேறு மாநிலங்களிலே உள்ளவர்களுக்கு எதற்காகத் தரவேண்டும்? அவ்வாறு கொடுத்தால் நாளையதினம் எப்படி நீங்கள் இதைக் கட்டுப்படுத்தப் போகிறீர்கள்? முறையாக இவ்வளவு பாட்டில்கள்தான் வந்தன என்று எப்படித் தெரியும்? எவ்வளவு விற்றது என்று எவ்வாறு கணக்கிட்டு ஒழுங்காக எப்படி வரி போடப் போகிறீர்கள்?

வரி போடுவது நோக்கம் அல்ல; ஒரு தொழிலை யாராவது நடத்துவதற்கு நாம் உடந்தையாக இருந்தால் அதிலே நமக்கு இலாபம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கலாமா? ஆகவே, நான் சொல்ல விரும்புவது, அப்படிப்பட்ட முறைக்குப் பதிலாக, அரசுக்கு இதிலே பொறுப்புணர்ச்சி இருக்குமேயானால், மதுவிலக்குக் கொள்கையைக் கைவிட்டாலும்கூட, அதேநேரத்திலே மது தயாரிக்கின்ற பெரும் தொழில்கள் அனைத்தும் எரிசாராயத்தைக் கொண்டு மதுவகை தயாரிக்கின்ற தொழில்கள் அனைத்தும் மாநில அரசாங்கத்தாலேயே ஏற்று நடத்தப்படவேண்டும். அந்த முழு உற்பத்தியும் விநியோகமும் மாநிலத்திலேயே—அதன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். வேறு மாநிலங்களிலே உள்ளவர்கள் அங்கிருந்து இங்கே அப்படிப் பாட்டில்களை அனுப்பக்கூடிய நிலையை ஏற்படுத்துவது என்றால் இந்தச் சாதாரண சாராயம் தயாரிக்கின்ற தொழிலைக்கூட நடத்துவதற்குத் தமிழ்நாட்டிற்கு தகுதி—திறமை இல்லை என்ற அவப் பெயரை ஏற்படுத்தும். நமக்குத் தொழிற் பற்றாக்குறை இருக்கின்றபொழுது இதையாவது நடத்த முன் வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது, அரசுஊழியர்களிலே பல பேர் மூன்றாண்டுக் காலமாகத் தங்களுக்கு நியாயமான ஊதியம் தீர்மானிக்கப்படவில்லை என்று வாதாடினார்கள். மூன்றாண்டுக் காலம் குறை, போராட்டம் நடந்து வந்தது. ஒன்மேன் கமிஷன் நியமிக்கப்பட்டு ஏறத்தாழ 6 மாதங்கள், 8 மாதங்களுக்கு முன்னாலேயே ரிப்போர்ட் அரசுக்கு வந்தது. இந்த 6 மாத கால, 8 மாத கால இடைக்காலத்தில்கூட இன்னின்ன கேட்டகிரிஸ்-க்கு இன்னின்ன வகை அரசு பணியாளர்களுக்கு அவர்களுடைய தரத்திற்குப் புது ஊதிய விகிதம் தீர்மானிக்கப்பட்டது என்று அறிவித்திருக்கலாம். கடந்த 6 மாத காலம், 8 மாத காலம் இந்த அரசு தூங்காமல் செய்ய வேண்டிய காரியத்தை ஏன் தூங்கிச் செய்தது என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அப்படிச் செய்து இப்பொழுது 100 அல்லது 110 வகைக்கு மேற்பட்டவர்களுக்கு, பல்வேறுவகைப் பணிகளிலே உள்ளவர்களுக்குப் புதிய ஊதியம் தீர்மானிக்கப்படும் என்று அறிவித்து, அவர்கள் இந்த ஊதியத்தைத் தீர்மானித்துக் கொள்ளக்கூட 1979-ஆம் ஆண்டிலே அவர்கள் என்ன நிலையிலே

கேள்வி கேட்கக் கூடாது என்றோ, குற்றம் சொல்லக்கூடாது என்றோ, குறை சொல்லக் கூடாது என்றோ நாங்கள் கருதவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் கூட போலீஸ் இலாக்காவைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நம்மை அறியாமலேயேயும், அமைச்சர்கள் அறியாமலேயும் அதிகார்கள் மட்டத்திலே சில பல தவறுகள் நிகழக்கூடும். தவறே நிகழாத அரசு என்று நான் சொல்லவில்லை; குறையே இல்லை என்று நான் சொல்லவில்லை; குற்றங்களே இல்லை என்று நான் சொல்லவில்லை. எங்களுக்கும் தெரியாமல் இவை ஏற்படக் கூடும். இவைகளையெல்லாம் நீங்கள் சுட்டிக்காட்டினீர்கள் என்றால்தான் உரிய அதிகாரிகளும்கூட எச்சரிக்கையாக இருக்கக் கூடும். நாங்களும் குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆகவே, நியாயமான குற்றங்கள், நியாயமான குறைபாடுகள் ஆகியவற்றை இந்த மன்றத்திலே உள்ள மன்ற உறுப்பினர்கள், அதிலும் எதிர்க்கட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் எடுத்து வைக்கத்தான் வேண்டும். அப்படி வைத்தால்தான் நீங்களும் விரும்புகின்ற, நாங்களும் விரும்புகின்ற ஒரு நல்ல ஆட்சி மலரவும், மக்களுடைய தேவைகள் நிறைவேறவும் முடியும்.

ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுகள், குறைபாடுகளை நியாயமான அளவிலே எடுத்து வைத்தவர்களுடைய கருத்துக்கள் அத்தனைக்கும் நான் மதிப்பு தந்து, அத்தனையையும் நான் பாராட்டுகிறேன் என்று எடுத்துச் சொல்லி, அதிலே உரிய நடவடிக்கைகளை, இங்கே எடுத்துச் சொன்னதன் அடிப்படையிலே அந்தந்தத் துறையினர் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள். அது இல்லாதபொழுதுகூட நீங்களும் தனிப்பட்ட முறையிலேகூட இந்தக் கருத்துக்களைக் கொண்டு வரலாம் என்று எடுத்துச் சொல்லி, இந்த நாட்டினுடைய அரசியலை, இந்த மாநில மக்களுடைய போக்குகளை நடத்திச் செல்வதற்கு ஆளுங்கட்சிக்கு மட்டும், பொறுப்பு என்பது அல்ல; எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி இரண்டும் சேர்ந்ததுதான் இந்தச் சட்ட மன்றம். இரண்டு பேரும் சேர்ந்து உதவி செய்வதன் அடிப்படையிலேதான் கருத்துக்களை உருவாக்க வேண்டும். அந்தக் கருத்து கூடுமானவரையில் ஏகமனதான கருத்து என்று சொல்கின்ற சூழ்நிலை ஏற்பட, ஏற்பட இனங்களுக்கும் வலிவு; எல்லோரும் ஒத்துக்கொள்கின்ற அளவிற்கு, நாம் முடிவு செய்கின்ற ஒரு பழக்கத்தை ஏற்படுத்தி விடுவோமேயானால் மிகமிக நல்லது. மாச்சரியங்களைக் குறைத்து, கருத்துக்களைத் தந்து, மாற்றாருக்கும் மதிப்பு தந்து பழகுகின்ற பண்பை இரண்டு தரப்பினரும் மேற்கொள்ள வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேனே தவிர, ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு நான் சொல்லவில்லை; கருத்து வேறுபாட்டிற்கு மதிப்பு அளிக்க வேண்டும்; ஆனால், மனிதனுக்கு மனிதன் தருகின்ற மதிப்பை, அன்பை, அரவணைப்பைத் தர வேண்டுமென்று மறைந்த

வாங்கிக் கொண்டு போகப் போகின்றார். ஆகவே, இதனுடைய விளைவு என்ன ஆகும் என்றால், போகவேண்டிய ஊரைவிடத் தொலைவில் உள்ள ஒரு ஊருக்குப் போவதாகச் சொல்ல வேண்டிய நிலைமையை உண்டாக்குகிறீர்கள். 250 கிலோ மீட்டர் போக வேண்டுமென்று என்ன அவசியம்? 200 கிலோ மீட்டராக இருந்தால் என்ன? 150 கிலோமீட்டராக இருந்தால் என்ன? நீங்கள் ஒத்துக்கொள்கிற தொகை, அந்த விடுப்புக்கு எவ்வளவு நாட்களுக்குரியதோ, அதற்காக நீங்கள் எவ்வளவு ஈட்டுத் தொகை அளிப்பதாக இருக்குமோ அந்த அளவுதான் என்று கருதப்படுகிறது. ஆகவே, 250 கிலோ மீட்டருக்கு மேல் போனால்தான் என்பதன் நோக்கம் என்ன? அதுவும் போவதற்கு மட்டும்தான். அவர் திரும்பி வரவேண்டுமென்ற எண்ணம் இல்லை. போவதற்குக் கொடுப்பதாகச் சொல்வது ஒரு வழிச் செலவு என்று பொருள் கொள்கிறேன். அந்த ஒரு வழிச் செலவுக்காகக் கொடுப்பதாக இருந்தால் என்ன தகுதி அல்லது ஒப்புவிப்பு விடுப்பிற்காகத் தருகின்ற தொகையாக இருந்தால் என்ன? இரண்டும் ஒன்றுதானே. ஆகவே, அதிலே என்ன பெரிய சலுகை? இடது கையிலே பணம் வாங்கினால் என்ன? வலது கையிலே பணம் வாங்கியனால் என்ன? அதிலே என்ன சகுனத் தடை? ஆகவே, அதிலே என்ன பயன்? நீங்கள் என்ன கொடுக்கிறீர்கள் 250 கிலோமீட்டருக்கு மேல் போக வேண்டியிருக்குமானால், அவர்களுக்கு அந்த 15 நாள் விடுப்பு காரணமாகக் கொடுக்கின்ற ஊதியத்தைவிட—சரண்டர் லீவுக்காகக் கொடுக்கின்ற தொகையை விட—அதிகச் செலவானால் அந்த அதிகச் செலவை நாங்கள் தருகிறோம் என்று சொன்னால், அதிலே பொருள் இருக்கிறது. அப்படி சொல்கிறீர்களா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த விடுப்பு காரணமாகப் பெறுகிற அந்தச் சலுகை இருக்கிறதே, இந்த ஒப்புவிப்பு விடுப்பு காரணமாகப் பெறுகிற சலுகை, அந்தச் சலுகை அரசுத் துறையில் மட்டுமல்லாமல், பொதுத் துறை நிறுவனங்களிலே, வீட்டு வசதி வாரியம் போன்ற நிறுவனங்களிலே பணியாற்றுவோருக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவைகள் சேர்க்கப்படவில்லை. இந்த அரசாங்கத்தாலே அவைகளெல்லாம் ஏற்கனவே கைவிடப்பட்டன. எனவே, நான் கேட்டுக் கொள்கிறேன், அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் இதே வசதியை அளிக்க வேண்டும்.

இன்னொன்று, மாநகராட்சி மன்றத்தைப்பற்றி, அதனுடைய நிர்வாகத்தைப் பற்றி இங்கே நண்பர்கள் சொன்னார்கள். மாநகராட்சியிலே, பணியாற்றுகிற கடை[illegible] ஊழியர்மேல நகரசுத்தித் தொழிலாளர்கள், ஆசி ஆந்[illegible] சொல்லப் போனால், சாக்கடை சுத்தம் செய்கின்ற தொழில் செய்வோர், இவர்கள் இறந்துபோனால், அவர்களுடைய குடும்பத்திற்கும் உதவித் தொகை ரூபாய் 10,000 உண்டு

என்று ஏற்கெனவே தி. மு. க. ஆட்சிக் காலத்திலே இருந்தது. இப்பொழுது நான் கேள்விப்படுகிறேன், அந்தத் தொகை தரப்படவில்லையென்று. சில பேர் இந்த அரசு நிறுத்திவிட்டது என்று சொல்கிறார்கள். சில பேர் மாநகராட்சி மன்ற விதிமுறைகள் காரணமாகத் தரப்பட முடியவில்லையென்று சொல்கிறார்கள். அது எப்படி இருக்குமானாலும், மற்ற ஊழியர்களுக்குக் கிடைக்கிற அந்த ரூபாய் 10,000 உதவித் தொகை, அவர்களுக்கும், கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதே நேரத்திலே, இன்னொன்று தெரிவிக்க விரும்புகின்றேன். இங்கே நம்முடைய சட்டமன்றத்தில் எழுப்பப்பட்ட ஒரு பிரச்னையில், காவல் துறையிலே பெண் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக, அந்தத் துறையினராலே அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஆணை அனுப்பப்பட்டு அவர்கள் பணியிலே வந்து சேர்ந்ததற்குப் பின்னர் பயிற்சிக் கூடத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர், நீங்கள் சரியான விதிமுறைகளின் கீழ் வேலைக்குத் தேர்வு செய்யப்படாத காரணத்தால் நீங்கள் இன்று முதலாக வீட்டுக்கு அனுப்பப்படுகிறீர்கள் என்று ஆணை அனுப்பப்பட்டது. இது குறித்து முதலமைச்சர் அவர்கள், திரு. இளையபெருமாள் அவர்கள் கேட்ட கேள்வி ஆதாரத்துடன் தகவல் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். நான் கேட்கிறேன். ஒரு முதலமைச்சர் காவல் துறையினுடைய பொறுப்பைக் கையிலே வைத்திருப்பவர், அந்தக் காவல் துறை நடத்திய தேர்விலே நாடு முழுவதும் பரவலாகப் பேசப்படுகிற ஒரு குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், நான் விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று பதில் இருக்குமானால், நன் பாராட்டி இருப்பேன்: அதற்கு என்ன ஆதாரம்? ஆனால் அவ்வாறு கேட்ட காரணத்தாலே ஆதாரம் தருகிறேன், சென்னை மாநகரத்தில் காவல் துறை சார்பாக, ஏறத்தாழ 7-2-1981 அன்றைய தினம் பல பேருக்கு வேலையில் சேர ஆணை பிறப்பிக்கப்பட்டு, அனுப்பப்பட்டது. அவர்களுக்கு எல்லாம் வேலை கிடைத்தது. இந்த விவரம் முழுவதும் படிக்க நேரம் இல்லை.

அதில் உள்ள ஒரு தலைப்பு.

Appointment Wowen Herd Consable in Madras City.

இப்பொ[illegible]லே, அவர்களுக்கெல்லாம் ஆணை அனுப்பப்பட்டது. அவர்கள் என்ன, என்ன பொருள் கொண்டு வர வேண்டும், எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்பதெல்லாம் தெரிவிக்கப்பட்டது.

[திரு. க அன்பழகன்] [1981 மார்ச் 30

[நண்பகல் 12–00]

அந்த ஆணை சி. எண். 12019264–3-எல்./780 என்று எண்ணிடப்பட்டுள்ளது. அவர்கள் எல்லாம்

two sets of P.T. dresses, two white sarees, one white blouse, one pair of white canvas shoes, one pair of white nylon socks, one bedding, plastic bucket and lock, cash deposit of Rs. 170/

இவைகள் எல்லாம் கொண்டு வரவேண்டும் என்று அவர்களுக்கு ஆணை அனுப்பப்பட்டு அவர்களும் கொண்டு வந்தார்கள். அவர்கள் எல்லாம் வேலூருக்குப் பயிற்சிக்கு அனுப்பப் பட்டார்கள். அவர்களுடைய பெயர்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. விவரம் தேவையானால் முழு வதையும் படிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். அப்படி 11 பேர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களும் போய்ச் சேர்ந் தார்கள். அவர்களுக்கு W.P.C. 47, W.P.C. 31, W.P.C .41 முதலான எண்களும் தரப்பட்டுள்ளன.

அவர்கள் பயிற்சியிலே இருக்கிறபோது இன்னொரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அனுப்பப்பட்டது. நீங்கள் எல்லாம் பழைய எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறாதவர்கள் என்ற காரணத்தால் உங்களுக்கு உள்ள தகுதி ஏற்கனவே உள்ள அரசு ஆணையினால் ஒத்துக் கொள்ளப்படாத காரணத்தால், 1–11–74 ஆணை யின்படி ஒப்புக் கொள்ளப்படாத காரணத்தால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்ற காரணத்தால் நீங்கள் வீட்டுக்கு அனுப்பப்படுகிறீர்கள் என்று உத்தரவு பிறப்பிக்கப் படுகிறது. அவர்கள் திரும்பப் போகிறார்கள். அவர்கள் திரும்பிப் போகின்றவரை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய செலவு ஏறத்தாழ 300, 400 ரூபாய்கள். ஏழைதன்தான் அந்த வேலைக்கு வருவார்கள். அவர்களுக்கு அந்தக் கஷ்டம். மறுபடியும் அவர்களுக்கு ஒரு ஆணை அனுப்பப்படுகிறது. ஏற்கனவே உள்ள விதிமுறைப்படி நீங்கள் பழைய எஸ்.எஸ்.எல்.சி தேர்வு பெறாத காரணத்தால், வேலைக்குத் தகுதி பெறவில்லை. ஓல்டு எஸ்.எஸ்.எல்.சி.-யில் (லெவன்த் ஸ்டாண்டார்டு) வெற்றி பெறாத காரணத்தால் வேலையில் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று சொல்வதற்குக் காரணம் இருந்ததால் உங்களை வீட்டுக்கு அனுப்பினாலும்கூட, இப்போது அரசு விதியைத் திருத்தி இருக்கிறது. இப்போது இருக்கிற 10-வது ஸ்டாண்டார்டு பாஸ் செய்திருந்தாலும், அல்லது பழைய எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலே வெற்றி பெறாமல் இருந்தாலும் நீங்கள் வேலையிலே சேர்வதற்கு தகுதி உடையவர்கள் என்று எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. ஆகவே, புதிதாக விண்ணப்பம் போடுங்கள். புதிய விண்ணப்பம் போட வேண்டும் அரசாங் கத்திற்கு. இந்தத் துறையில் படித்த அதிகாரிகள் இருக்கிறார்கள்.

1981 மார்ச் 30] [திரு. க. அன்பழகன்]

திறமை உள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள். "அட்மினிஸ்டி ரேடிவ் லாக்குனா' ஏற்படுகிறபோது எப்படி தீர்க்கவேண்டும் என்று தெளிவு கூடவா ஒரு அரசாங்கத்திற்கு இல்லை. எத் தனை பேர்கள் விண்ணப்பித்து அவர்களில் 500 பேர்களை அழைத்து 50 பேர்களை தேர்ந்தெடுத்து அதிலே 25 பேர்களை பொறுக்கி எடுத்து, அந்த 25 பேர்களை பயிற்சிக்கு அனுப்பி, திரும்ப வீட்டுக்கு அனுப்பி, மறுபடியும் விண்ணப்பம் போடுங்கள் என்றால், இது எவ்வளவு பெரிய தவறு. பெரியார் மாவட்டம் ஈரோட்டிலேயும் இதுபோன்று நடைபெற்றிருக்கிறது. இங்கே யாவது படிப்பைக் கருதிப் பார்த்தார்கள். ஆனால் ஈரோட்டிலே அளந்து பார்த்து, அளவெடுத்து இத்தனை சென்டி மீட்டர் இருக்கவேண்டும், வெயிட், இவ்வளவு, ஹைட் இவ்வளவு இரண்டு அடிப்படையிலேயும் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி கொடுப் பதற்கு அனுப்பப்பட்டவர்கள், இந்த இரண்டு அடிப்படையில் குறை இருப்பதாக ஏறத்தாழ 15 பேர்கள் திரும்ப அனுப்பப்பட்டு, 'நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது, ஆகவே நீங்கள் பயிற்சி கூடத்திலிருந்து வீட்டுக்கு அனுப்பப்படுகிறீர்கள்' என்று அனுப்பி இருக்கிறார்கள். முழு விவரம் வேண்டுமானால் நான் நிதி அமைச்சர் அவர்களுக்கு கொடுத்து விடுகிறேன். இப்படிப்பட்ட நிலைமை, ஒரு அரசாங்கத் துறைக்குத் தெளிவு இருந்தால் வருமா ? இந்த இலாகாவில் உள்ள மேல் அதிகாரிகள் இவைகளை எல்லாம் கவனிக்கக் கடமைப்பட்டவர்களா இல் லையா ? தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னாலே விதிமுறை களைக் கவனிக்காமல், பின்னாலே விதிமுறைகளைக் காட்டுவது என்பது ஒரு திறமையான அரசுக்கு அடையாளம் ஆகாது.

அடுத்து நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்த அரசாங்கம் சென்னையில் இருந்து தலை நகரத்தை மாற்றலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறது. தலைநகரை மாற்றுவது என்பது பெரியவர்கள் செய்யும் யோசனை. இன்றைக்கு எம்.ஜி ஆர். பெரியவராக இருக்கிற காரணத்தால் அந்த யோச னையைச் செய்கிறார். அதைப் பற்றி எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. மாற்ற முடிந்தால் மாற்றட்டும் ! முடியுமானால் நடக்கட்டும் ! ஆனால் அது பெரிய தவறான எண்ணத்தை. மக்களிடத்திலே தோற்றுவிக்கிறது. தலைநகர சென்னையிலே இருக்கிற காரணத்தினால்தான் மக்களின் பிரச்சினை எல்லாம் தீரவில்லை. தலைநகரை மாற்றிய உடனே இந்த ஆட்சி எல்லா பிரச்சினையையும் தீர்த்துவிடும் என்ற எண்ணத்தை உண்டாக்க இது காரணமாகிறது. தலைநகரை மாற்றுகிற பிரச்சினை தீராத தலைவலியாக மாறும். அதற்கான விளக்கங்களுக்குள்ளே இப்பொழுது நான் சொல்ல விரும்பவில்லை.

பெரியார் மாவட்டம் உருவாக்கப்பட்டு, அதன் காரண மாக ஈரோடு நகரம் மாவட்டத் தலைநகரமாக ஆக்கப்பட்டு அதற்கு வேண்டிய பணிகள் நடைபெற வேண்டிய நிலைமையில்

இருக்கின்றது. அதற்கான கட்டடங்கள் கட்டுவதற்கும், வேலைகள் செய்வதற்காகவும் ஒரு சூப்ரின்டென்டிங் இன்ஜினியர் 4 எக்சிகூடிவ் இன்ஜினீர்கள், 12 அசிஸ்டன்ட் இன்ஜினியர்கள், மற்றும் பல்வேறு அலுவலங்கள் நியமிக்கப்பட்டு, மாதம் ஒன்றுக்கு 70,000 ரூபாய் ஒருவேளை 60,000 ரூபாய் ஆகக் கூட இருக்கலாம், அந்த அளவுக்கு ஆண்டு ஒன்றுக்கு 7 இலட்சம் ரூபாய் சம்பளமாகத் தரப்படுகிறது. ஆனால் கட்டிடங்கள் கட்டுவதற்கான இடம் இன்னும் முடிவு செய்யப்படாத நிலையில் அந்தத் தொகை அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளம் பயனற்றுப் போகிறது.

அதோடு மாவட்ட ஆட்சி அலுவலர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு பெருந்துறைச் சாலையில் 22 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக 4 (1) நோட்டிபிகேஷன் செய்யப்பட்டு, அண்மையில் அரசு இந்த இடத்தை கையகப்படுத்தாமல் இருப்பதற்காக ஏதோ ஒரு விதம ன பேச்சு வார்த்தை நடைபெற்று—என்னவிதமான பேச்சுவார்த்தை என்பதை யோசித்துக் கொள்ளலாம்—பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அதன் கா ணமாக அந்த இடம் கைவிடப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

""22 ஏக்கர் நிலத்தை இப்படிப்பட்ட ஒரு முக்கியமான காரியத்திற்காக, ஒரு மாவட்டத்தின் தலைநகரை உருவாக்கும் முறையில் கையகப்படுத்தவேண்டும் என்று முடிவு எடுத்த பின்னாலே, அது கையகப்படுத்தப்பட்டதா அல்லது கையிலே அடக்கம் செய்யப்பட்டதா என்று சந்தேகம் வருகிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. மேலும், அதற்குக் கையெழுத்துப் போட மாட்டேன் என்று சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் சொன்னதாகவும், பின்னால் மேலிடத்தில் இருந்து வந்த வற்புறுத்தல் காரணமாகக் கையெழுத்திட்டதாகவும் சொல்லப்படுகிறது. அந்த இடத்தின் சொந்தக்காரர். தற்போது அந்த நிலத்தை வேறு ஒருவருக்கு விற்பதற்காக முயற்சித்துக்கொண்டு இருக்கிறார் என்கிற தகவல் எனக்குத் தரப்பட்டுள்ளது. இது உண்மையா, இல்லையா என்பதைப் பற்றி அரசு உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவறு இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்படுமானால் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே, இதிலே தவறு நடைபெற்று இருக்கிறதா என்று பாருங்கள், இதில் உண்மை இருக்கிறதா என்பதைக் கண்டறியுங்கள். தவறு இருந்தால் நடவடிக்கை எடுங்கள். நான் சொல்வதில் உண்மையில்லை என்று சொல்லப்படுமானால், உடனடியாக அந்த இடத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கையை எடுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஈரோடில் மூலப்பாளையம் பகுதியில் பள்ளிக்காக என்று அரசு கையகப்படுத்திய முறையில் ஒதுக்கப்பட்ட நிலத்தில் 8 ஏக்கர் நிலம் தள்ளுபடி செய்யப்பட்டு இருப்பதாக அறிகிறேன். ஏன் அப்படிச் செய்யவேண்டும்? இதிலே ஏதோ தவறு நடந்து இருக்கிறது. என்ன தவறு என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். கோவையில் வீட்டு வசதி வாரியத்திற்காக 1 கோடி ரூபாய் அளவிற்கான கான்ட்ராக்ட் அனுபவம் இல்லாத ஒருவருக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. டில் டுடே ''ஹீ ஈஸ் நாட் எ கான்ட்ராக்டர்'' (Till to day he is not a Contractor) அப்படி கான்ட்ராக்ட் பணி செய்து அனுபவம் இல்லாத ஒருவருக்கு 1 கோடி ரூபாய் அளவிற்கு வீட்டு வசதி வாரியத்திற்கான கான்ட்ராக்ட் கொடுக்கப்பட வேண்டிய காரணம் என்ன? இதிலே ஏதேனும் முறையாக நடைபெற்றதாகுமா? இப்படிப்பட்டவர்கள் செய்கிற காரியங்களில் குறைபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்காதா? எனவே அரசாங்கம் இதனை விசாரித்து நல்ல முறையில் நடைபெறச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் கடன்களைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் எத்தனையோ கோடி அளவிற்கு தள்ளுபடி செய்து இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் என்னிடத்தில் இவற்றிற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. 8 ஆண்டு காலக் கடன்களை 3 ஆண்டு காலத்திற்கு முன்னர் செலுத்தி, கடன் திருப்பி செலுத்தப்பட்டு விட்டது என்று ரசீது கொடுக்கப்பட்ட பின்பும், தற்போது அவர்களுக்கு எல்லாம் உங்கள் கடன்கள் இந்த நாள் வரை உள்ள வட்டியோடு சேர்த்து தொகை குறிப்பிட்டு தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது என்கிற தகவல்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றன.

வெங்கப்பன், ராமசாமி என்று பெயர்கள் கூட என்னிடத்தில் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் ஏற்கனவே வாங்கிய 2,000 ரூபாய் கடனுக்கு வட்டியைச் சேர்த்து 2,500 ரூபாய் வரையில் கட்டி கடனைத் தீர்த்து அதற்காக ரசீது வாங்கி வைத்துக்கொண்ட பின்னால், இப்போது அதற்குப் பின்னாலும் அவர்கள் செலுத்தவேண்டிய கடன் தொகை அப்படியே பாக்கி இருப்பதாகச் சொல்லி, அதற்கும் வட்டி போட்டு கிட்டத்தட்ட 4,800 ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்யப்பட்டு இருப்பதாக கடிதம் வந்து இருக்கிறது என்று சொன்னால், அந்தத் துறையில் கணக்கு சரியாக வைத்துக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பதை இது காட்டுகிறது அல்லது இவ்வளவு கடன்கள் ரத்து செய்யப்பட்டன என்று இதைப் போன்று முன்னரே செலுத்தப்பட்ட கடன்களையும் பட்டியலில் சேர்த்து அதிலே ஊழல் நடைபெற வழி இருக்கிறது என்பதையே இது காட்டுவதாகும்.

[திரு. க. அன்பழகன்] [1981 மார்ச் 30

அதைப்போலவே மற்றொன்றையும் தெரிவிக்கவிரும்புகிறேன். உழைப்புக்கு உணவு என்ற திட்டத்தின் கீழ் தரப்படுகின்ற அரிசியல் தமிழ்நாடு அரசின் சிவில்சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடவடிக்கையைத் தெரிவிக்கவிரும்புகிறேன் புயலுக்குப் பின் ஏற்பட்ட நிலைமை காரணமாக அதைச் சமாளிக்க தமிழக அரசுக்கு மத்திய அரசு 1 லட்சம் டன் உயர்ந்த ரக அரிசியை வழங்கியிருக்கிறது. 1 லட்சம் டன் அரிசியில் 30,000 டன் அரிசிதான் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்று வினியோகித்து இருக்கிறார்கள். மீதியுள்ள அரிசியினை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் இருந்தது. அந்த அரிசி கொஞ்சம் புளுத்துப்போய் விட்டதால், அந்த அரிசியை உழைப்புக்கு உணவுத் திட்டத்திற்காக மத்திய அரசிடம் பெறும் அரிசிக்குப்பதிலாக வழங்குவதற்காக முயற்சி செய்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்காக வினியோகிக்கிறபோது புதிய அரிசியை தான் வினியோகிப்பது இயலும். இந்த பழைய அரிசியை யாரும் வாங்கமாட்டார்கள். என்று மறுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த 60,000 டன் அரிசியை வினியோகிக்க முயற்சித்த போது, அந்த அரிசி மக்கிப் போய் இருக்கிறது என்பதன் காரணமாக அந்த உழைப்புக்கு உணவுத் திட்டத்தின்கீழ் பணி செய்ய வருகிறவர்கள். யாரும் இதை ஏற்க மறுத்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இது இங்கே எதிர்ப்பை ஏற்படுத்துமாதலால் இந்த அரிசியை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று அங்கேயிருந்து அறிவிப்புக் கூட வந்ததாக நான் அறிகிறேன். இந்த அரசு சொல்கின்ற பதில் வேறு விதமாக இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட அரிசி கெட்டுப் போய் இருக்கிறது என்கிற விவரம் என்னிடத்தில் இருக்கிறது. எனக்குத் தெரிந்த விவரத்தை என்னிடத்தில் கேட்டால் தரத் தயாராக இருக்கிறேன். இப்படி மத்திய அரசு முன்னர் தந்த அரிசி வீணாகுமாறு விடப்பட்டிருக்குமானால் அதை கவனிக்கவேண்டிய பொறுப்பு அரசுக்குத்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

இந்த அரசின் சார்பாக கிராம அலுவலர்கள் பணியை மொத்தமாக நீக்கியபோது, நீக்குவதிலேதான் அக்கரையாக இருந்தீர்களே தவிர, அதன் பிறகு என்ன நிலை ஏற்படும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வில்லை. நாம் எல்லாம் கிராமப் புறங்களிலே இருந்து வந்தவர்கள்தான். நிதி அமைச்சருக்கு திருக்கண்ணபுரம் கிராமம் சொந்த ஊர்; எங்களுக்கும் அதன் பக்கத்து கிராமங்கள். அங்கே உறவினர்கள், மாமன், மைத்துனர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அங்கே போகும்போது அவர்களும் சொல்கிறார்கள். நாங்களும் பார்க்கிறோம். அந்த கிராம அலுவலர்களை நீக்கியபிறகு கிட்டத்தட்டகடந்த 4 மாதங்களாக கிராமமக்களுக்கான எந்த வேலையும் நடைபெறவில்லை என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

1981 மார்ச் 30] [திரு. க. அன்பழகன்]

மக்களுக்குத் தேவையான கடமைகள் நடைபெறவில்லை. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கிராமங்களுக்குச் சென்று பார்ப்பது என்றால் ஒரு கிராமத்தில் அவர் கண்பட ஏறத்தாழ 10 அல்லது 15 நாளைக்கு ஒரு முறைத்தான் இயலும். அந்த அளவுக்குத்தான் அவரால் பார்க்க முடிகிறது. அவருக்கு அந்தக் கிராமத்தின் நிலை என்ன என்பது சரியாகத் தெரியாது; எதுவும் செய்யக்கூடிய நிலையில் இல்லை. ஆனால் அரசு ஒரு முடிவு எடுத்து, கிராம அலுவலர்களை நீக்கிவிட்டது. சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. எனவே அதன் விவரத்துக்குள்ளே நான் செல்லவில்லை; செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. அந்த சுப்ரீம்கோர்ட்டு வழக்கைக்கூட நீங்கள் துரிதப்படுத்தவில்லை என்ற குற்றச் சாட்டு இங்கே பேசப்பட்டது. வழக்கு விரைவாக முடிவடைய நடவடிக்கை எடுத்தால் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஆக, இன்றைக்கு கிராம அலுவலர்கள் நியமனத்திற்குப் பொதுப்பணித் தேர்வும் கழகம் மூலம் தேர்வு நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்படக்கூடிய காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே இங்கே நான் படிக்கிற ஒன்றை ஆதாரத்தோடு பின்னர் தரத்தயாராக இருக்கிறேன். ஒரு அஞ்சலட்டை. அந்த அஞ்சலட்டையிலே திரு. சுவாமிநாதன், மேல் அமைப்பு பிரதிநிதி, அ.இ.அ.தி.மு.க., சின்னபுத்தூர் கிராமம் என்று போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அஞ்சலட்டை அண்ணா தி.மு.க. அணைக்கட்டு ஒன்றிய (வடாற்காடு மாவட்டம்) செயலாளர் அனுப்பிவைத்த பிரதிநிதிகள் கூட்ட அழைப்பு. அந்தக் கூட்டம் நடைபெறும்; அதற்கு வருக என்று ஒன்றியச் செயலாளர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். அதற்குக்கீழே ஒரு குறிப்பு. அந்தக் குறிப்பு என்னவென்னறால் கிராம அலுவலர்கள் தேர்வு எழுதிய உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர் அட்டையுடன் தகவலும் கொண்டு வர வேண்டப்படுகிறார்கள்.

நான் இந்த அரசாங்கத்தின்மீது இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லி, இதிலே நான் வெற்றிபெற நினைப்பதாக யாரும் கருத வேண்டாம். கிராம அலுவலர் வேலை தேடித் தருவதற்கு ஆளும்கட்சியைச் சேர்ந்த செல்வாக்குப் படைத்தவர்கள் ஏறத்தாழ 250 பேர்கள் இந்த காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அவர்கள் சென்னை மாநகரில் சில பெரிய விடுதிகளில் தங்கி இருக்கிறார்கள். ஒருவருக்கு வேலைபெற்றுத்தர 10,000 முதல் 15,000 வரை கேட்கிறார்கள். 15,000 ரூபாய் கொடுத்தால் நீங்கள் கேட்கிற சொந்தக் கிராமத்தில் போட்டுத் தரச்செய்கிறோம். 10,000 ரூபாய் தந்தால் வேறு கிராமத்தில் எப்படியாவது வேலைவாங்கித் தருகிறோம் என்று சொல்லக் கூடிய நிலை இன்று இருக்கிறது. இதுபற்றி எனக்கு எழுதியவர் யாரோ ராஜ் என்று கையெழுத்து இருக்கிறது. அவர் யார் என்பது எனக்குத் தெரியாது. இது அரசாங்கத்திற்குப் பரவலான கெட்டபெயரை ஏற்படுத்தும். எத்தனையோ கெட்ட பெயர்

வருகிறபோது இது வந்து என்ன செய்யப்போகிறது என்று நினைத்தால் அது வேறு. ஆனால் இந்த தவறான முறையை நீக்குவதற்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? இந்த முறைகேட்டினால் ஏற்படுகிற அநீதிகள், அதனால் ஏற்படுகிற விளைவுகள், குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு எடுத்துக்காட்டினேன். ஆனால் ஆளும் கட்சியினுடைய செல்வாக்கை இந்த முறையில் பயன்படுத்துகிறபோது எந்த அளவுக்கு யாருக்குப் பயன் ஏற்படும், யாருக்கு தொல்லை ஏற்படும் என்பது தெரியாது. கிராம அதிகாரிகளை நீக்குவது என்று எடுத்த இந்த முடிவினால் ஏற்பட்டிருக்கிற விளைவுகளைப் பார்க்கிறபோது, கிராம அலுவலர்களை நீக்கியதிலே ஒரு உள் நோக்கம் இந்த அரசுக்கு இருந்திருக்காலம் என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில் மட்டுமல்லாமல் இன்றைக்கு எல்லா அமைப்புகளிலுலேயும் இப்படிப்பட்ட ஒரு தன்மைதான் இருந்துகொண்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தது, அறங்காவலர்களை வீட்டுக்கு அனுப்பியது. ஆனால், அதற்கு அப்புறந்தான் கோவிலில் கொலையே நடக்கிறது, கிராம அலுவலர்களை டிஸ்மிஸ் செய்வது, பஞ்சாயத்துக்களை கலைப்பது, நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தப்படாமலிருப்பது இப்படிப்பட்டவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வளவு அமைப்புக்களைக் கலைத்துவிட்டு, எப்படி இவ்வளவு பெரிய சுமையை நீங்கள் தாங்கப்போகிறீர்கள்? 4 கோடி 85 இலட்சம் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றும் சுமையைத் தாங்குகிற பெரிய பொறுப்பு தலையிலே விழுந்திருக்கிறது. எதிர்க்கட்சிகளை நீங்கள் மதிக்க வேண்டாம்; எதிர்க்கட்சிகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டாம். ஆனால், 4.85 இலட்சம் மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு வழிமுறைகளைக் காணாதபோது, அதற்கு நேரம் காணாதபோது, இப்படிப்பட்ட அமைப்புக்களை எல்லாம் கலைத்துவிட்டு இந்த குற்றங்களை எப்படிக் களையைப் போகிறீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நானாக இருந்தால், என்னுடைய நிலை வருத்தப்படுவதாக இருக்குமே தவிர வேறு விதமான நிலை இருக்கும் என்று கருதுவதற்கில்லை. இப்படிப்பட்ட குறைகளையும் குற்றங்களையும் நீக்கினால் தவிர எதிர்காலத்திலே தமிழ்நாட்டிலே ஒரு ஆட்சியே நடக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்து இந்த பென்ஷன்தாரர்களைப் பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்னால் ஒய்வு பெற்றிருந்தால், அப்படிப்பட்டவர்கள் பென்ஷனில் மொத்தமாக ஒரு தொகயை வாங்கியிருந்தால், அதை மாதந்தோறும் வழங்கும் பென்ஷனில் குறைத்துக்கொண்டு கொடுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மொத்த தொகை வாங்கி 15 ஆண்டுகளில் கழிந்திருந்தால் அவர்களுக்கு பென்ஷனில் பிடித்தம் செய்வதை

நிறுத்திவிட்டு, முழு பென்ஷன் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. பென்ஷன் பெறுபவர்கட்கு இருக்கிற ஒரு கிரிவென்ஸ்—மனக்குறை என்னவென்றால் 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஒருவர் 80 ரூபாய், 100 ரூபாய், 120 ரூபாய் பென்ஷன் வாங்கியிருப்பார். அப்போது அவர்கள் வாங்கிய அந்தப் பதவிக்கான சம்பளம் இப்போது 4 மடங்குக்கு மேல் உயர்ந்திருக்கிறது. அன்றைக்கு 250 ரூபாய் சம்பளம் என்றால் இன்றைக்கு 750 ரூபாய், 900 ரூபாய், 1,000 ரூபாய் சம்பளம். அன்றைக்கு 80 ரூபாய் பென்ஷன் பெறுகிறவர் இன்றைக்கு வேலையிலிருந்து ஒய்வு பெற்றால் 250 ரூபாய் பென்ஷன் வாங்குவார். ஆக, இன்றைக்கு அதே வேலைக்கான பென்ஷன் ஏறத்தாழ மூன்று மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே, இதிலே கொஞ்சம் அதிகம் செலவானாலும் கூட, வருவாய் வசதி இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிற அந்த பென்ஷன்தாரர்களுக்கு இன்றைக்கு ஒய்வு பெறுபவர்களுக்கு கிடைக்கும் தொகையுடன் ஒப்பிட்டு நோக்கி, அவர்கள் பென்ஷனை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய பல விளக்கங்களை எல்லாம் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

1967-க்கு முன்னாலே வேலை பார்த்தவர்கள், 70-க்கு முன்னாலே வேலை பார்த்தவர்கள் முதல் பே கமிஷனுக்கு முன்னாலே வேலை பார்த்தவர்கள், அப்படி வேலை பார்த்து ஒய்வு பெற்றவர்கள் இப்போது உயிரோடு இருப்பார்களேயானால் இன்றைக்கு அவர்கள் வாழ்வதற்கே திண்டாடிக்கூடிய நிலைமையில் தான் இருப்பார்கள். எல்லாத் துறையைச் சார்ந்தவர்களும் அப்படித்தான் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய பென்ஷனை குறிப்பிட்ட விகிதாச்சாரத்திலே உயர்த்துங்கள். அல்லது இன்றைக்கு வேலைபார்த்து ஒய்வு பெறுகின்றவர்களுக்குக் கிடைக்கின்ற பென்ஷன் அளவில் நூற்றுக்கு 60 சதவீதத்தையாவது அவர்களுக்குப் பென்ஷனாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு எதிர்க்கட்சியினரை அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் உலகத் தமிழ் மாநாட்டை வரவேற்கிறேன். அங்கே தமிழ் அறிஞர்களுக்காக வைக்கப்பட்டிருக்கிற சிலைகளை எல்லாம் நாவலர் அவர்கள் அப்பொழுதே பார்த்திருப்பார். நானும் அவற்றைப் பார்க்க நேரிட்டது. நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அந்தச் சிலைகள் நாவலருக்கோ எனக்கோ பெருமையளிப்பதாக இல்லை. ஒரு வேளை அவற்றை மாற்றிவிட்டு தகுந்த சிலைகளைப் பின்னர்வைக்கலாம் என்று நினைத்து நிகழ்ச்சிக்காக அப்படி நீங்கள் வைத்து நடத்தி இருப்பீர்களேயானால் அதில் எனக்கு வருத்தம் இல்லை. ஆனால் அந்தச் சிலைகளைப் பார்க்கின்றபோது தமிழ்நாடுதான் பஞ்சத்திலே

அடிபட்டுப் போய் இருக்கின்றது என்றால் தமிழ்நாட்டுக் கலைத் துறையும் அதன் திறைமையுங் கூட பஞ்சத்திலே அடிபட்டுப் போய் இருக்கின்றதோ என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற சிற்பிகளுக்கு அவமானமாகு மளவுக்கு அப்படிப்பட்ட சிலைகளை நீங்கள் வைத்திருக்கக் கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்ப் பண்பாட்டு மையம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ் பல்கலைக் கழகம் என்ற வகையிலே சொல்லப்பட்டிருக்கிற எல்லா வற்றையும் வரவேற்கக் கடமைப்பட்டவன் தான் நான். வரவேற்கவில்லை. என்றால் நான் தமிழனே அல்ல. ஆனால் இவற்றைச் செயல்படுத்துவதற்கு நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள் என்று பார்த்தால் அதற்கெல்லாம் தேவையாகும் நிதியினை நீங்கள் ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் பண்பாட்டு மையத்திற்கு இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 20 லட்சம் ரூபாய் திட்டம் என்று தெரிவித்து அதிலே 5 இலட்சம் ரூபாயும் இந்த ஆண்டுக்காக என்று சொல்கிறீர்கள். தமிழ் பண்பாட்டு மையத்திலே ஏற்பட்டிருக்கின்ற குறை பாடுகளை பற்றி, இலட்ச ரூபாய் அளவுக்கு அதிலே மோசடி ஏற்பட்டிருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கடந்த முறை சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அதற்குத் தகுந்த பதில் இதுவரையில் சொல்லப்படவில்லை. எனவே நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகளை திருத்துவதற்கு அரசு கடமைப்பட்டுள்ளது. அடுத்து தமிழ் பண்பாட்டை வளர்ப்பதற்கு, அதேபோல் தேவநேயப் பாவாணர் அவர்களுடைய அகர முதலியின் முதல் பகுதியை வெளியிடுவதற்கு, தொடர் பகுதிகளை தகுதி உடையவர்களைக் கொண்டு தொகுப்பதற்கு அது ஒரு பெரிய கடமை—இப்படிப்பட்ட திராவிட இன, மொழி, பண்பாடு என்ற அடிப்படையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு, தமிழனுடைய கலைகளை வளர்ப்பதற்கு, இவற்றிற்கெல்லாம் தேவையான பணிகளைச் செய்வதற்கு நீங்கள் ஒதுக்கி இருக்கின்ற தொகையைக் காணும்போது, நாவலர் அவர்கள் நிதியமைச்சராக இருக்கின்றார் என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாமல் தடுக்கின்றது. எனவே நாவலர் அவர்கள் இருக்கின்றபோதாவது தமிழுக்குக் கிடைக்க வேண்டிய அளவு நிதி கிடைக்கவேண்டாமா? ஆகவே அந்த உணர்வோடு நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து இந்த அரசாங்கத்திற்குச் சில கொள்கைகள் இருக்கின்றன என்று சொல்லும் நீங்கள் ஆளைப் பார்த்துக் கொள்கைகளை வகுத்துக்கொள்கிறீர்கள். ஆசிரியர் மன்றம் என்று இருக்கின்ற ஒரு அமைப்பினுடைய செயலாளராக மீனாட்சி சுந்தரம் இருக்கின்றார். அவர் ஆசிரியராக இருந்து அந்தக் கடமையைச் செய்கிறவராக இல்லாமல் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார். அவர் ஆசிரியர் மன்றத்தின் செயலாளராக இருக்கின்றார் என்ற ஒரே காரணத்தால் அந்த ஆசிரியர் மன்றத்தையே ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று அரசாங்கம் தெரிவிப்பதாக அறிகிறேன். நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்கள் பெரும்பாலோர் அந்த மன்றத்திலே இருந்தாலும் கூட, ஒரு 20,000 பேர், 30,000 பேர் அந்த மன்றத்திலே இருந்தாலும் கூட அந்த மன்றத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லி இருக்கிறீர்கள், அந்த மன்றத்தை ஏற்றுக்கொள்வதிலே உங்களுக்கு என்ன பெரிய இழப்பு? அதை அங்கீகரிக்காத காரணத்தால் அவர்கள் நடத்துகின்ற போராட்டம் நின்றுவிடுமா? அங்கீகரிக்காத காரணத்தால் அவர்களை ஆசிரியர்கள் கைவிட்டுவிடுவார்களா? அதிலே இணைந்திருக்கின்ற ஆசிரியர்கள் எல்லோரும் விலகிவிடுவார்களா? காவல் துறையினர் உருவாக்கிய சங்கத்தை முதலில் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சொல்லிவிட்டுக் கடைசியிலே அவர்கள் சொல்வதை எல்லாம் ஒப்புக்கொள்கிறோம் என்று பணிகின்ற நிலைமை இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றபோது ஆசிரியர் மன்றத்தை ஏற்றுக்கொள்வதிலே என்ன மாறுபாடு இருக்கின்றது? ஆசிரியர்களின் கோரிக்கைகளில் பலவற்றை எடுத்துச் சொல்லி....................

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்கள் மன்றம் என்ற ஒரு அமைப்புக்காக மட்டும் நாம் கொள்கைகளை வகுப்பது இல்லை. அதற்காக மட்டும் விதிகளை வகுப்பது இல்லை. பொதுவாகவே ஒரு சங்கம் அரசினுடைய அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்றால் அது வெளியார்களுடைய தலைமையிலே இருக்கக்கூடாது. அவர்களே தான் தங்களுக்குள்ளே தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்று விதிமுறைகளை வைத்திருக்கின்றோம். இந்த விதிமுறை தான் என்.ஜி.ஓ. சங்கத்திற்கும் வேறுபல அமைப்புக்களுக்கும் இருக்கின்றது. இன்றைக்கு 40-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் சங்கம் இருக்கின்றன. ஒரு சங்கம் கூட இந்த மாதிரி நிலையிலே இல்லை. ஆகவே பொதுவான அடிப்படையில்தான் விதிகளை வகுத்து அந்தமுறையிலே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறோம். அந்தந்த சங்கங்களில் இருக்கின்ற ஒருவர் பொதுச்செயலாளராக வரலாம். ஆகவே நாம் ஒரு சங்கத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வலியுறுத்துவதற்குக் காரணம் என்னவென்றால் இப்படி ஒரு வெளியாரின் தலைமை வந்தால் வெளியாரின் தலையீடு அதிகமாக வரும் என்பதால் தான் சொல்கிறோம்.

(பிற்பகல் 12.20)

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனாலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்து, விரும்பி ஒரு சங்கத்தை அதன் நிருவாகிகளை உருவாக்கிக் கொண்டால், அதை நீங்கள் அங்கீகரிப்பதினால் உங்கள் அரசாங்கத்திற்கு எந்தக் குறையும் ஏற்பட்டு விடாது. நீங்கள் விதிமுறையைத்தான் மாற்றிக் கொள்ள வேண்டும். இன்னும் கூட கேட்க விரும்புகிறேன்:

நீங்கள் அங்கீகரித்த சங்கங்கள் போராட்டம் நடத்தினால் அதை வரவேற்கிறீர்களா? அனுமதித்த சங்கங்களும் போராட்டம் நடத்துகிறார்கள். அனுமதிக்காத சங்கங்களும் போராட்டம் நடத்துகிறார்கள். அவைஎல்லாம் அந்தச் சங்கத்து உறுப்பினர்களின் பிரச்னை. அதேபோல ஆசிரியர்களுடைய பிரச்னைகள் வருகிற போது, அந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காண வேண்டுமானால் அவர்களை அழைத்து பேசுவதினால், அரசுக்குக் குறை ஒன்றும் ஏற்பட்டு விடாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இன்னொரு கருத்தையும் சொல்ல வேண்டிய கடப்பாட்டை உடையவனாக இருக்கிறேன். கண்ணிழந்து நிற்கிற மிகமிக ஏழை மக்கள் நாற்காலி பின்னுகிற பயிற்சியில் ஈடுபட்டு கடந்த 4, 5 ஆண்டுகாலமாக பி. எச். டபிள்யூ. ஈ. எஸ். என்ற ஒரு சங்க அமைப்பின் மூலமாக, பல இடங்களிலே, அரசாங்க அலுவலகங்களிலே நாற்காலி பின்னுகிற தொழிலைச் செய்திருக்கிறார்கள். அந்த வேலைகள் செய்யப்பட்டதற்காக அந்தச் சங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய பணம் 12,680 ரூபாய். 4 ஆண்டு காலமாக இன்று வரை கொடுக்கப் பெறவில்லை. அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் வரையில் தொடர்ந்து முயற்சி செய்து, டிசம்பர் மாதத்திலேயே முதலமைச்சர் அவர்களையும் சந்தித்து வேண்டிய பிறகும் தொகை கிடைக்காத காரணத்தால், இந்த ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதினால், நமது முதலமைச்சர் அவர்கள் ஊனம் உற்றோர் ஆண்டு விழாவிற்கு வருகிற நேரத்தில் ஒரு நோட்டீஸ் போட்டுக் கொடுத்து விட்டார்கள். அந்த நோட்டீஸில் அரசாங்கத்தைக் கண்டிக்கிற சில வார்த்தைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். அதற்காக வேண்டுமானால் நான் அரசாங்கத்திடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அவைகள் எல்லாம் தி.மு.க.வினர் பேசக் கூடிய வார்த்தைகள், நீங்கள் பேசக் கூடியவை அல்ல என்று நான் அவர்களிடம் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால் அந்தக் கண் இழந்தவர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலியான 12,680 ரூபாயை அவர்களுக்குத் தருவதிலே, இந்த அரசாங்கம் அக்கறைக் காட்டக் கூடாதா?

அவர்கள் என்ன அரசியல்வாதிகளா? கண் தெரிந்தவர்களுக்கெல்லாமே அரசியல் தெரியாத இந்தக் காலத்திலே, கண் தெரியாத அவர்கள் என்ன அரசியலை நடத்திவிடப் போகிறார்கள். தர வேண்டிய 12,680 ரூபாயை அவர்களுக்கு, உடனடியாக தர ஏற்பாடு செய்வதோடு, அவர்களுக்கென்று ஒரு தொழிற்சாலையை வைப்பதற்காக 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கினால், அவர்கள் ஒரு தொழில் பட்டறையை அமைத்துக் கொண்டு, அரசாங்கப் பணிகளை நிறைவேற்றக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்

என்பதால் அப்படி ஒரு தொழிற்சாலையில் பணியாற்றும் வாய்ப்பை அவர்களுக்குத் தருவதற்கு இந்த அரசு முன் வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே தொழில் வளர்ச்சி இல்லை. நிரந்தர வேலை வாய்ப்பு உருவாக்கப்படவில்லை. கைத்தறி நெசவாளர்களின் குறைகள் களையப்படுவதற்கான வழி வகைகள் செய்யப்படவில்லை. என்.ஜி.ஓ.க்கள் ஆசிரியர்கள் குறைகள் தீரவில்லை. ஏனென்றால் என்.ஜி.ஓ.க்களுக்கு 3 தவணை டியர்னஸ் அலவன்ஸ், அகவிலைப்படி தரவேண்டிய நிலை உள்ளபோது அதிலே ஒரு தவணை தான் தரப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுடைய குறையும் தீரவில்லை. மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்க பல்வேறு காரணங்களால் வாய்ப்பு இல்லை. தாழ்த்தப்பட்டோர் நிலை உயரவே இல்லை. உதையும், குத்தும்தான் அவர்களுக்கு மிச்சமாக இருக்கிறது. இன்னும் படுகொலையும், கொலை மறைப்பும் இந்த நாட்டிலே நடந்துக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே கொள்ளைகள் அடிக்கப்படுகிறது. இரவு நேரக் கொள்ளையன்றி பட்டப் பகல் கொள்ளையும் நிகழ்கிறது. மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே நிறுத்தப்பட்டவுடன் மன்னிக்கப்பட்டு விடுதலையும் பெறும் நிலை இருக்கிறது.

கள், சாராயம் இவை எங்கும் கிடைத்து அதன் மூலமாக வன் செயல்கள் நடக்கின்றன. அப்படிப்பட்ட வன்செயல்களில் ஈடுபட்டவர்களை, கைது செய்வதற்குக் காவல் துறையினர் முன் வராத காரணத்தினால், அவர்களுடைய ஆதிக்கம் நாட்டிலே உருவாகிறது. அதனாலே காவல் துறையினருடைய கடமையும் கட்டுப்படுத்தப்படுகிறது. கிராமங்களில் வாழும் மக்களின் தேவைக்கு பயன்பட்ட கிராம அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையால், கிராம மக்கள் அவதிப்படுகிறார்கள். விலைவாசி ஏற்றம் தாங்க முடியாததாக ஏறியிருக்கிறது. நுகர் பொருள் பற்றாக்குறை இன்னொரு புறம் இருக்கிறது. நியாயவிலைக் கடையில், ஒரு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி, ஒரு அட்டைக்குக் கொடுக்க வேண்டும் என்றிருந்தால், அது சேலம் மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு முறைதான் வழங்கப்படுகிறது. வறுமையும், பட்டினிப் பரிதாபமும் வளர்ந்து வருகிறது. அதனாலே தமிழ்நாடு தத்தளிக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு குறிப்பாக தான் சொல்ல விரும்புகிறேன்,

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாடொறும் நாடு கெடும்." என்னும் வள்ளுவர் கருத்திற்கொப்ப அரசு ஆட்சியிலே வீற்றிருப்பவர்கள் நாள்தோறும் மக்களுடைய குறைகளை களைந்து, நிறைவு செய்வதற்கான

வழி தெரிந்து அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாவிட்டால், நாள் தோறும், அந்த நாட்டை இழந்து கொண்டே வருவர் அந்த நாடு சீரழிந்துக் கொண்டே இருக்கும் என்று சொல்லி, அப்படிச் சீரழித்துக் கொண்டிருக்கும் நாட்டின் சார்பிலே என்னு டைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி, உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான இவ்விவாதத்தில் இறுதியாகப் பேசிய, பேராசிரியர் அவர்கள் உட்பட 73 பேர் பங்குக் கொண்டு பேசியிருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து கிட்டத்தட்ட ஒரு 20½ மணி நேரத்திற்கு மேலாக இங்கே கருத்துக்களை எல்லாம் வழங்கியிருக்கிறார்கள். மக்கள் மன்றத்தினுடைய நம்பிக்கையும் நன்மதிப்பையும் பெற்று, இந்த மன்றத்தினுடைய அன்பையும் அரவணைப்பையும் சேர்த்து, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் அமைக்கப்பட்ட இந்த அமைச்சரவை யின் சார்பாக இந்த நிதிநிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டது.

இந்த நிதிநிலை அறிக்கையின் மீது 1981–82 ஆம் ஆண்டிற் கான பணிகள், திட்டங்கள் ஆகியவற்றை எல்லாம் எப்படி நிறை வேற்ற இருக்கிறோம் என்பதற்கான விளக்கங்கள் தந்து அதற்கு இந்த மன்றத்தின் ஆதரவு வேண்டும் என்றும், ஒத்துழைப்பு வேண்டும் என்றும் இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளோடு நான் முடித்தேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைக் கண்டிருக்கிற இந்த அரசு நின்று நிலவ வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் இதன் மூலம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளையெல்லாம் செம்மை யுற ஆற்ற வேண்டும் என்ற நல்ல தன்மையின் அடிப்படையில் தான் இங்கே பாராட்டுதல்களைத் தெரிவித்தும், இங்கே பல திட்டங்கள் மற்றவை பற்றி போற்றியும் சில சீரிய பரிந்துரை களை வழங்கியும் இந்த நிதி நிலை அறிக்கையில் எதிர்பார்த்த தன்மைக்கேற்ப ஒத்துழைப்பு தந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அத்துணை பேர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தங்கள் கொள்கையின் அடிப்படையில் சில பல திட்டங்களை ஏற்று சில பல கொள்கை களை ஏற்று பாராட்டி போற்றியும் சில பல திட்டங்கள் பொறுத்த வரையில் தங்களுடைய திருத்தங்களை எடுத்துச் சொல்லியும் பரிந்துரைகளை வழங்கி கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இறுதியாகப் பேசிய, காங்கிரஸ் கட்சி சார்பாகப் பேசிய அதன் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜாசெரீப் அவர்கள் இதில் இருக்கிற நல்லதிட்டங்களைப் பாராட்டுகிறேன்

என்றும், நல்ல சமூகத் திட்டங்களை பாராட்டுகிறேன் என்றும், வரிச் சலுகைகளுக்கெல்லாம் நன்றி தெரிவிக்கிறேன் என்றும் எடுத்துச் சொல்லி சில பல திருத்தங்கள் வேண்டும் என்றும் சொல்லி, சில பல பரிந்துரைகளைச் செய்தும், சில பல குற்றங் களையும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி அவற்றைக் களைய வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாகப் பேசிய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையினுடைய தன்மைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி இதிலே உள்ள சிறந்த அம்சங்கள் சிலவற்றை நான் பாராட்டுகிறேன் என்றும் அவ்வப் போது இடையிடையே எடுத்துச் சொல்லி இதில் இருக்கிற குறைபாடுகள் இன்ன இன்ன என்பதையும் சில இடங்களில் சுட்டிக்காட்டி, ஆகவே துறைகளில் ஏற்படுகிற குறைபாடுகள் எப்படி எப்படி இருக்கின்றன, இவற்றை அரசு கவனிக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லி அவற்றை நீக்குவதற்கான முயற்சியில் அமைச்சரவையும் இந்த அரசும் ஈடுபட வேண்டும் என்று வலி யுறுத்திச் சொல்லி, அதுமட்டுமல்லாமல் குற்றங்களையும் எடுத்துச் சொல்லி அதற்கான புகார்களை இறுதிப் பட்டியலாக எடுத்து வைத்து தம்முடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். அவர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும் கூட சில நண்பர்கள் இந்த அறிக்கையில் எதுவுமே இல்லை என்று சொன்னார்கள். 56 பக்கங்களில் நான் கருத்துக் களை வடித்துத் தந்திருக்கும் போது, 1981–82-க்காக ஆகிற செலவினங்கள் ரூ. 1,138 கோடி என்றும், எந்த எந்த வகைகளில் வரவினங்கள் இருக்கின்றன என்றும், அதற்கு துணையாக இருக்கக் கூடிய அளவிற்கு தூக்க முடியாத அளவிற்கு ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பக்கங்கள் உடைய ஏடுகளை எல்லாம் தந்தும் அவற்றை எல்லாம் படித்துப் பார்த்ததற்குப் பிறகு இதிலே எதுவுமே இல்லை என்று முடிவிற்கு வந்துவிடுவார்களானால் அவர்களுக்கு நான் பதில் சொல்ல என்ன இருக்கிறது என்பதைத் தான் நான் சிந்தித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். அதற்காக எனக்கு வருத்தமும் இல்லை. அவர்களைக் கண்டு வியப்படையவும் இல்லை. வேதனையும் இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் அவ்வளவுதான் நாம் எதிர்பார்க்க முடியும் என்று என்னை நானே அமைதிப்படுத்திக் கொள்கிற அளவிற்குத் தான் நான் இருக்கிறேன்.

இருந்தாலும் இங்கே எடுத்துவைத்த பொதுவான கருத்துக்கள் அடிப்படையில் சிலபல கருத்துக்களை மட்டும் வழங்க நான் விரும்புகிறேன். இங்கே ஒவ்வொரு துறையைப் பற்றியும் தனித் தனியாக பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தந்தத்துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகள் இந்த மன்றத்தில் வந்து விவாதிக்கப்படுகிற போது மாண்புமிகு உறுப்பினர்கள் விரிவாக எடுத்துச் சொல்லவும் அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் அதற்கேற்ற விடைகளை வழங்குவதற்குமான சூழ்நிலைகள் உள்ளன. ஆகவே இந்த நிதிநிலை அறிக்கை பற்றி பொதுவாக சொல்லப்பட்ட, வழங்கிய கருத்துக்களின் அடிப்படையில் பொதுவாக சில பல விளக்கங்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டியவர்களும் உண்டு, நிதிநிலை அறிக்கையைப் பழித்தவர்களும் உண்டு. பாராட்டுவதற்கு அவரவர்களுக்கு உரிமை உண்டு, அதேபோல் பழிக்கவும் உரிமை உண்டு. அந்த உரிமையை நான் மறுக்கவில்லை. ஆனாலும் கூட, குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கை ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கை என்றும், இந்த ஆண்டு வெளியிடப்பட்ட நிதி நிலை அறிக்கைகளிலேயே இது சிறந்தது என்றும், ஏழை எளிய மக்களுக்கும், விவசாயிகளுக்கும், ஊனமுற்றோர்க்கும் சலுகைகள் வழங்கியிருக்கிற நிதி நிலை அறிக்கை என்றும், அரசாங்க ஊழியர்களுக்கு நியாயமான சலுகைகள் அளித்துள்ள நிதி நிலை அறிக்கை என்றும் பாராட்டி போற்றி வரவேற்றிருக்கிறார்கள். அதே நேரத்தில் இதில் எந்த அம்சமும் இல்லை என்றும் இது வெறும் கானல்நீர்தான் என்றும் இது யாருக்கும் நன்மை செய்யாத நிதி நிலை அறிக்கை என்றும், அவசரக் கோலத்தில் அள்ளித்தெளிக்கப்பட்ட பட்ஜெட் என்றும், இதில் வரவேற்கத்தக்க அம்சம் எதுவுமே இல்லை என்றும், இது ஒரு எம்ப்டி பட்ஜெட் என்றும், வரண்ட நிலையில் இருக்கிற பட்ஜெட் என்றும், மக்கள் நல்வாழ்விற்கு ஒன்றுமே இல்லாத நிதி நிலை அறிக்கை என்றும், சாராய முடை நாற்றம் வீசுகிற பட்ஜெட் என்றும் பலரும் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-30]

நான் வைத்த நிதி நிலை அறிக்கை ஒன்றுதான் என்றாலும் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்றவகையில், சொற்களை வைத்து இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மனதிலே இருப்பது தான் சொற்களாக வெளிவரும். அந்தவகையிலேதான், அவரவர்கள் மனப்பான்மைக்கு ஒத்த கருத்துக்கள் இங்கே வெளிவந்திருக்கின்றன என்பதைத் தவிர, நான் வேறு ஒன்றும் சொல்கின்ற நிலைமையில் இல்லை. இந்த நிதி நிலை அறிக்கையிலே வழக்கமாக ஆண்டுதோறும் செய்யப்படுகின்ற பணிகள் எல்லாம், எந்த அளவுக்கு செய்யப்பட்டு வருகின்றன என்பதும், அந்தப் பணிகளுக்கு கூடுதலான திட்டங்கள் போடுகின்ற வகையிலும் சரி, பணிகளை மேற்கொண்டு மேம்பாடு செய்கின்ற அளவிலும் சரி, எந்தெந்த இனங்களுக்கு எப்படி முறையாக செய்யப்பட்டிருக்கின்றது என்பவையெல்லாம் இந்தக் குறிப்புகள் காட்டி

வருகின்றன. அதற்காக திட்டங்களை மீண்டும் எடுத்துச் சொல்லவில்லை. பல்வேறு வகைகளிலே திட்டங்கள் தீட்டி, மேலும் மேலும் பெருக்குகின்ற வழிவகைகளையெல்லாம் கண்டிருக்கிறோம். அந்த வகையிலேதான், இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிற மாதிரி ரூ. .1137.84 கோடி செலவினங்களிலே காட்டப்பட்டும், ரூ. 1,128.27 கோடி வரவினங்களிலே காட்டப்பட்டும் இருக்கின்றதென்பதை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, 6ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த மாநிலத்தின் நிலைமைகளை பல்வேறு வகையிலும், வளர்ச்சி பெறவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான், நடைபெற்று முடிந்த நிதிக் குழுவோடு வாதாடி 3,150 கோடிக்கான திட்டங்களை இந்த மாநிலத்தில் ஐந்தாண்டுத் திட்டத்திற்காகத் தீட்டினோம். 1978லிருந்து 1983ஆம் ஆண்டு முடிய முன்பிருந்த ஜனதா ஆட்சி காலத்தில் ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டு, 2 ஆண்டு காலத்திற்குப் பிறகு அது நிறுத்தப்பட்டது. இப்போது 1980-லிருந்து 1985 வரைக்கான புதிய ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலேதான் இந்த 3,150 கோடி ரூபாய்க்கான திட்டத்தை 1980-லிருந்து 1985 வரைக்கும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஏற்றுக்கொள்ள வேண்டிய திட்டமாக இருக்கிறது.

அதன்படி 1980–81ஆம் ஆண்டிற்காக திட்டக் குழு ஒப்புக் கொண்டளவிலே 411 கோடிதான் ஒதுக்கப்பட்டதென்றாலுங் கூட, நாம் சென்ற ஆண்டு திட்டங்களுக்காக செலவழித்த வகையிலே 454 கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஏறி இருக்கிறது. அதேபோல், 1981–82ஆம் ஆண்டிற்கு திட்டக் குழு அனுமதித்தது 514 கோடி ரூபாய் என்றாலும்கூட, நான் இப்போது நிதி நிலை அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருப்பது போல், இந்த அரசு ஏறத்தாழ 563 கோடியே 26 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டிலே செலவிட்டு, அப்படி கூடுதலாகச் செலவிட்டு பலன்களைஅதிகமாக கொண்டுவந்திருக்கின்ற காரணத்தை எடுத்து விளக்கியிருக்கிறேன். ஆனால், நிதி நிலை அறிக்கையை பற்றிக் குறிப்பிடுகையில், காலந்தாழ்த்தி வெளியிட்டதாக எடுத்துச் சொன்னார்கள். வழக்கமாக நம்முடைய மாநிலத்தில் பிப்ரவரி இறுதியில் அல்லது மார்ச்சு திங்கள் முதல் வாரத்தில் வெளியிடுவதாக இருந்தாலும், இந்த ஆண்டு சற்று தள்ளி, மார்ச்சு 21ஆம் தேதி கொடுக்கின்றதற்கான சூழ்நிலைக்கான காரணங்களை எல்லாம் எடுத்துச் சொன்னேன். ஆனால், இது சட்டப்படி, விதி முறைப்படி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, அதற்கு உட்பட்டுத்தான் செய்யப்பட்டிருக்கிறது. இதிலே தவறு ஏதும் ஏற்படவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்றாலும், இந்தியாவிலே 22 மாநிலங்கள் இருக்கின்றன. அவைகள் பிப்ரவரியிலே தொடங்கி மார்ச்சு இறுதி வரையிலும் அவரவர்களுடைய வரவு செலவுத்

திட்டத்தை அவையிலே கொண்டு வருகிறார்கள். எப்படியிருந்தாலும், மார்ச்சு 31ஆம் தேதிக்குள் மாநிலங்களின் செலவினங்கள் வகையிலே 'ஓட் ஆன் அக்கவுண்ட்ஸ்' என்ற முறையிலே மத்திய அரசு, மாநில அரசுகள் ஆண்டுக்கு ஆண்டு, 'ஓட் ஆன் அக்கவுண்ட்ஸ்' விட்டு, பின்னர் விவாதிப்பது என்பது ஏற்றுக்கொண்டிருக்கிற முறையாகும். பல்வேறு மாநிலங்களிலே இந்த நிலைமை இருக்கிறது. நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகத்திலே மார்ச்சு 18ஆம் தேதி வைத்தார்கள்; கேரளாவிலே 20ஆம் தேதி வைத்தார்கள்; தமிழகத்திலே 21ஆம் தேதி நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

புதுவையில் 26ஆம் தேதி வைத்தார்கள். அஸ்ஸாமில் 23ஆம் தேதி வைத்தார்கள். இமாசல பிரதேசத்தில் மார்ச்சு 27ஆம் தேதிதான் வைத்தார்கள். இப்போது வைப்பதிலும் தவறில்லை. அது சட்டப்படி குற்றம் ஆகாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே பற்றாக்குறை பட்ஜெட் என்ற அளவிற்கு வரும் பொழுது, நாம் ஆளத்தெரியாததின் காரணமாகவும், திறமையற்று இருப்பதின் காரணமாகவும்தான் இவ்வளவு பெரிய தொகை பற்றாக்குறையாக வந்திருக்கிறது என்று ஒரு கருத்தினுடைய அடிப்படையிலே சிலர் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே பார்த்தால் கூட இங்கே அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசினுடைய பட்ஜெட் போடுகின்ற திறமையோடு நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி, அல்லது மற்றைய மாநிலங்கள் நிதிநிலை அறிக்கையை அவர்கள் உருவாக்கித் தருகின்ற நிலைமைகளை நீங்கள் பார்த்தாலும் சரி இந்த நிலைமைகளை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். மத்திய அரசு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 1,539 கோடி ரூபாய் பற்றாக்குறை வருகிற அளவிற்கு நமக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருந்து, எல்லா மாநிலங்களையும் உள்ளடக்கி, நாம் பின்பற்றுகின்ற அளவிற்கு அமைந்திருக்கிற மத்திய அரசினுடைய பற்றாக்குறை 1,539 கோடி ரூபாய், அதுமட்டுமல்லாமல் சென்ற நான்கைந்து ஆண்டுகளில் பற்றாக்குறையைச் சரிகட்ட வேண்டிய நிலைமைக்கு இருப்பதான, காரண காரிய விளக்கங்களை மத்திய நிதி அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மகாராஷ்டிராவில் இந்த ஆண்டு 70 கோடியே 40 இலட்சம் பற்றாக்குறை போட்டு நிதி நிலை அறிக்கையை தந்திருக்கிறார்கள். செழுமையான மாநிலம் என்று கூட உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கர்நாடகம் 97 கோடியே 14 இலட்சம் ரூபாய் பற்றாக்குறை நிதி நிலை அறிக்கையை

இந்த ஆண்டு எடுத்து வைத்திருக்கிறார்கள். பஞ்சாப் 114 கோடி பற்றாக்குறை பட்ஜெட் வைத்திருக்கிறார்கள். இராஜஸ்தான் 96 கோடி, உத்தர பிரதேசம் 95 கோடி, ஆந்திரா 62 கோடி, மேற்கு வங்கம் 65 கோடி பற்றாக்குறை அறிக்கையை வைத்திருக்கிறாகள். தமிழ் நாட்டில் இந்த ஆண்டு 20, 22 கோடி ரூபாய்; அஸ்ஸாம் 79 கோடியே 26 இலட்சம்; புதுவை மாநிலம் கூட 5 கோடியே 17 இலட்சம், அதுவும் பற்றாக்குறை பட்ஜெட் தான் வைத்திருக்கிறார்கள். எதற்காகச் சொல்ல விரும்புகிறேன் என்றால் இந்தியாவினுடைய சூழ்நிலை அப்படி அமைந்திருக்கிறது. இதற்கு முன்னால் எந்தக்காலத்திலும் இல்லாத அளவிற்கு பற்றாக்குறை நிதி நிலை அறிக்கையை தருகிற அளவிற்கு நெருக்கடி இந்தியாவிலே இருக்கிறது. மத்திய அரசினுடைய சாயல் மாநிலங்களைத் தாக்கும் என்பதை நாம் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உணர்ந்து கொள்ள முடியும்.

இன்றைக்கு பார்க்கிறபொழுது மத்திய அரசினுடைய பற்றாக்குறை 1977–78இல் 933 கோடி ரூபாய்; துண்டு விழுவது மட்டும். 1978–79இல் 1,506 கோடி ரூபாய்; 1979–80இல் 2,700 கோடி ரூபாய்; 1980–81இல் 1,975 கோடி ரூபாய்; 1981–82இல் 1,539 கோடி ரூபாய் என்ற அளவிற்கு தொடர்ந்து பற்றாக்குறை நிதி நிலை அறிக்கையை வைத்திருப்பதன் மூலமாக அதைச்சரிகட்ட வேண்டிய நிலைமைகள் வருவதால், இவ்வளவு பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாகத்தான் பொருளாதார வல்லுநர்கள் எல்லாம் எடுத்துச் சொல்கிற அளவிற்கு, அவர்கள் பணவீக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். இங்கே எடுத்துச் சொல்கிற கருத்துக்களினுடைய அடிப்படையிலே, திறனாய்வின் அடிப்படையிலே கூட மற்ற இடங்களில் எல்லாம் கூட எடுத்துச் சொன்னார்கள். அதற்கு கூட மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் பட்ஜெட் உரையில் பதில் சொல்கிறபொழுது, the d fic t may appear la;ge, but taking a total v.ew of the economic situation it is w thin the fiscal prudence. என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதிகமான அளவிற்கு பற்றாக்குறை ஏற்பட்டாலும் கூட நாட்டிலே ஏற்பட்டு இருக்கக்கூடிய நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இந்த நிலைமைக்கு வருவதைத் தவிர வேறு வழிகள் ஏற்படவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிற்கு இறுதி உரையிலே பேசுகிறபொழுது ஒரு தத்துவத்தை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக காங்கிரஸ் உறுப்பினர்கள்—திரு. ஹாஜா செரீப் தவிர—ஏனென்றால் அவர் பாராட்டி இருக்கிறார், 'கிரிடிசைஸ்

பண்ணவில்லை என்பதால் அவரைத் தவிர என்று குறிப்பிட்டேன். மற்றவர்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன். அதிலே மத்திய நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்

The Economic Policy can only do this much and hard work, discipline and the innate good sense of the people of this ancient land must do the rest.

மத்திய அமைச்சர் அவர்கள் பொருளாதாரக் கொள்கை இந்த அளவிற்குத்தான் செய்ய இயலும் என்றுச் சொல்லி, முற்றுப் புள்ளி வைத்து முடித்துவிட்டார். அதற்குப் பிறகு அவர் சொன்னது என்னவென்று சொன்னால் பொதுமக்கள் கடுமையாக உழைக்க வேண்டும், கட்டுப்பாடோடு இருக்கவேண்டும், இந்த பழம் பெரும் நாட்டின் உள்ளார்ந்த நல்லுணர்வுகள் தான் மற்றதைச் செய்ய வேண்டும் என்று

"the economic Policy can only do this much"

இந்த அளவிற்குத் தான் செய்யும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் நானும் சேர்ந்து இந்த அவையிலே மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அதே நிலைமைகளை எடுத்துச் சொல்லி அந்தக் கருத்துக்களினுடைய தன்மையை உணரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் கடைசியிலே சொல்கிறார், திட்டத்திலே இருக்கிற நிலைமைகளை, இவ்வளவு திட்டங்களைப் போடுகிறீர்களே ஏன் அவைகளை நிறைவேற்றவில்லை என்ற நிலைமைகளை, செயலுக்கு வரமுடியாததற்கு என்ன காரணம் என்று பலர் எடுத்துச் சொன்னபோதுகூட இறுதி உரையாற்றியபோது மத்திய நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது.

When the Finance Minisiter is faced with the problem of inflation of rising prices a large section of people live below the poverty line. Does he go by what is stated in the plan document.

[பிற்பகல் 12-40]

என்று அங்கே இருக்கிற உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கிறார். நிதியமைச்சராக இருக்கிறவர் பண வீக்கத்தையும் விலைவாசி ஏற்றத்தையும் பெரும்பாலான மக்கள் ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்ற நிலைமையை சமாளித்துக் கொண்டிருக்கும்பொழுது பிளான் டாக்மெண்டிலே இருப்பதை ஏன்நிறைவேற்றவில்லை என்று நீங்கள் கேட்கிறீர்கள், இந்த நெருக்கடியையும் சமாளித்து அதையும் செய்யமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் மத்திய அரசினுடைய நிதித் தன்மைகள், மற்றவைகள் எல்லாம் மாநில அரசுகளைப் பாதிக்கும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

அது நம்மையும் தாக்குகிறது. அதிலிருந்து நாமும் விடுபட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம என்பதற்கான காரண காரியங்களை நான் எடுத்துச் சொன்னேன். இங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். வறட்சி நிலை பற்றி எடுத்துச் சொன்னார்கள். வறட்சி நிலை பற்றி பல கருத்துக்கள் இங்கே வழங்கப்பட்டன. வறட்சி நிவாரணப் பணிகளுக்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதாக இங்கே பேசிய உறுப்பினர்களும் குறிப்பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் பார்க்கிற போது வறட்சி நிலை என்பது குறிப்பிட்ட சில பல ஆண்டுகளிலே இயற்கையின் மாற்றத்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. நம்முடைய மாநிலத்திற்கு இரண்டு பருவக் காற்று மழைகள் மழையைத் தருகின்றன. அந்த இரண்டு பருவ மழைகளை நம்பிப் பிழைக்க வேண்டிய மாநிலமாகத்தான் நம்முடைய மாநிலம் இருக்கிறது. ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தென் மேற்குப் பருவக் காற்று மழையும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலே வடகிழக்குப் பருவக் காற்று மழையும் பெய்து அவற்றின் மூலமாக நாம் மழையைப் பெற்றாக வேண்டும் ஆனால் சென்ற ஆண்டு இரண்டு பருவக் காற்றுகளின் மூலமாகவும பெய்ய வேண்டிய மழை பெய்யாததன் காரணமாக நம்முடைய மாநிலத்திலே இரண்டு பருவக் காற்றுகளினாலும் பெய்ய வேண்டிய மழையின் அளவு 40 சதவீதம் குறைந்து விட்டது. அவை அறவே பெய்யாது போயிருக்குமானால் பெருங்கேடுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் பெய்த மழையின் அளவு இரண்டு பருவக் காற்று மழையையும் சேர்த்தால் 60 பங்குதான். 60 பங்கு பெய்தாலும் கூட அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கொண்ட மாவட்டங்கள் இருக்கின்றன. சில பகுதிகள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களும் உண்டு. கிட்டத்தட்ட 11 மாவட்டங்கள் இந்த சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தென் மேற்குப் பருவக் காற்று மழையினுடைய தன்மையை நாம் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது, சென்ற அக்டோபர் நவம்பர் டிசம்பரில் பெய்ய வேண்டிய மழை பெய்யவில்லை என்பதையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அக்டோபரில் பெய்யவேண்டிய மழை அக்டோபரில் பெய்யாவிட்டால் நவம்பரில் பெய்யுமா என்று எதிர் பார்ப்பதும் நவம்பரில் பெய்ய வேண்டிய மழை நவம்பரில் பெய்யாவிட்டால் டிசம்பரில் பெய்யுமா என்று எதிர்பார்ப்பதும்தான் இயற்கையான சூழ்நிலையாக இருக்கிறது. கடந்த ஆண்டிலே நவம்பர் திங்களிலே பெரு மழை பெய்து வெள்ளச் சேதத்தை ஏற்படுத்தியது. ஆகவே அக்டோபரில் பெய்யாமல், நவம்பரிலே பெய்யாமல் டிசம்பரிலேயும் ஜனவரிலேயும் பெய்த காலங்களும் உண்டு. இப்படிப்பட்ட தன்மைகள் இருக்கின்றன என்பதைப் பார்க்கின்றபோது ஏன் ஆரம்பத்திலேயே தெரிவித்திருக்கக் கூடாது என்ற கருத்தைச் சொன்னார்கள். இருக்கின்ற நிலைமைகளை விளக்கவேண்டுமென்பதற்காகத்தான் நான்

சொல்கிறேன், யாரையும் நான் குற்றஞ்சாட்டவில்லை. நவம்பரிலோ டிசம்பரிலோ நாம் சொல்லியிருக்க வேண்டுமென்றால இரண்டு, மூன்று பாதிப்புகளைப்பற்றித்தான் நாம் விவரங்களைத் தந்திருக்க முடியும். இன்ன இன்ன இடங்களில் எவ்வளவு எவ்வளவு என்ற முழு விவரங்களையும் நாம் தந்திருக்க முடியாது. ஆகவே முழுமையான தன்மையைக் காட்டுகிற முறையிலே, புல் பிக்சர் என்று ஆங்கிலத்திலே சொல்கிறபடி, முழு விவரங்களையும் நாம் தந்திருக்க முடியாது. 2, 3 மாவட்டங்களிலே உள்ள நிலைமைகளைப்பற்றித்தான் அப்போது எழுதி இருக்க முடியும். அக்டோபர், நவம்பர் மாதங்களிலே மழை பெய்யாமல், டிசம்பரையும் தாண்டுகிறபோது ஜனவரியிலே எழுத வேண்டிய கட்டாயம் வந்தாலும் கூட திட்டவட்டமாக 7 மாவட்டங்களுக்குத்தான் எழுத வேண்டி இருந்திருக்கும்.

ஆனால் திட்டவட்டமாக இப்பொழுது 11 மாவட்டங்களைப் பற்றி எழுத வேண்டிய தன்மைகள் வந்ததே, தவிர, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி ஓரளவிற்கு முன்கூட்டியே நாம் உணர்ந்திருக்கிறோம்.

மத்திய அரசினுடைய, நிலைமைகளை ஆராய்கின்ற வல்லுநர் குழு வரவேண்டுமென்று சொன்னால் அது ஏப்ரல் 1 ஆம் நாளிலேயிருந்து ஆறு பேர் கொண்ட வல்லுநர் குழு இங்கே வரவும் இருக்கிறது. அது தவிர, இந்தியாவினுடைய தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் இங்கு 20, 21 ஆம் தேதி வாக்கிலே வந்து இந்த வறட்சி நிலை உள்ள இடங்களைப் பார்வையிடுவதாகவும் தெரிவித்திருப்பதாக மத்திய அரசினுடைய அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களும் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் தன்மைகள் ஏற்படுமேயானால் இந்த நிலைமைகளை இன்னும் தெளிவாக விளக்குவதற்கு வாய்ப்பு ஏற்படக்கூடும். ஆனால் இந்த 11 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பற்றியும், அங்கே ஏற்பட்டிருக்கின்ற கேடுகளைப் பற்றியும், இடையூறுகளைப் பற்றியும், செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளுடைய அளவுகள் பற்றியும், அதற்காக ஆகின்ற செலவுகள்பற்றியும் இப்பொழுது நாம் கொடுத்திருக்கின்ற அறிக்கையின்படி கிட்டத்தட்ட மேற்கொண்டு 137 கோடி ரூபாய்க்காவது இந்தப் பணிகளையெல்லாம் செய்ய வேண்டும்.

கவலையற்ற நிலைமைகளைச் செய்ய, ஒரு கஷ்டமும் ஏற்படாமல் இருக்க, மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் இவ்வளவு தொகை செலவு செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் வல்லுநர் குழு வந்து ஆராய்ந்து பார்த்து அவர்கள் எதை ஒப்புக் கொள்வார்கள். எந்த அளவிற்கு ஒப்புக் கொள்வார்கள் என்பதையெல்லாம் நாம் பொறுத்திருந்து காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனால் இந்தத் தன்மைகளைப் பொறுத்து சில விதிமுறைகளெல்லாம் இருக்கின்றன. அதையும் நான் இந்த அவையிலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கையில் புயல், வெள்ளம், வறட்சி போன்றவற்றின் மூலம் ஏற்படும் கொடுமைகளைக் களைவதற்காக நிதிக் குழு அறிவித்த யோசனையினுடைய அடிப்படையிலே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டுக்கும் எதிர்பாராமல் புயல் வீச்சோ, அல்லது எதிர்பாராமல் பெரு மழையோ, எதிர்பாராமல் வறட்சியோ ஏற்படுமேயானால் அதற்காக ஈடுகட்டுவதற்கு பட்ஜெட்டிலே 8.59 கோடி ரூபாய் ஒதுக்கித் தீர வேண்டுமென்ற அளவிற்கு ஒரு நியதி இருக்கிறது. நாம் முதலிலே வறட்சிப் பணிகள் வந்தால் இந்த நியதிப்படி 8.59 கோடி ரூபாயைச் செலவழிக்க வேண்டும். இதைச் செலவழித்தும் வறட்சி நிலைமைகள் சரிப்படாததொரு சூழ்நிலை ஏற்படுமேயானால் மத்திய அரசு வகுத்திருக்கின்ற திட்டம், ஆண்டுத்திட்டச் செலவில் 5 சதவீத அளவுத் தொகை மதிப்பீடு வறட்சி போன்ற நிவாரணப் பணிகளுக்குச் செலவழிக்கலாம். இதை "திட்ட முன் பண உதவி — அட்வான்ஸ் பிளான் அசிஸ்டன்ஸ் — என்று சொல்வார்கள். அந்த வகையிலே இந்த ஆண்டுக்கு நாம் போடுகின்ற திட்டத்திலே 5. சதவீதத்தை இந்த வறட்சிப் பணிகளுக்காக செலவழிக்கக் கூடும். இந்த 5 சதவீதத்தை மத்திய அரசு நமக்குத் தரும். அப்படித் தந்தாலும் கூட அடுத்து வருகின்ற திட்டத்திற்காக அவர்கள் தருகின்ற செலவுகளிலே இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக சரிக்கட்டிக் கொள்வார்கள் அந்தப் பணத்தை. இப்பொழுது கொடுப்பதை அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளிலே சரிக்கட்டிக் கொள்வார்கள். அந்த வகையிலே பார்க்கும்பொழுது இந்தப் பங்கு 25 கோடி நமக்கு வரும். நாம் இதிலே ஒதுக்கியது 8 கோடியே 59 இலட்சம். அதாவது பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டியது. இந்த 5 சதவீதத்திலே ஒதுக்கி நாம் செலவழிக்கலாம் என்ற அளவிற்கு அவர்கள் அனுமதித்து, பின்னாலே அதை ஈடுகட்டுகின்ற அளவிற்கு வருவது 25 கோடியாகும். இதற்குப் பிறகும் கடுமையான வறட்சி உள்ளது, இந்த இரண்டு தொகையினாலும் சமாளிக்க முடியாத அளவிற்கு வறட்சி நிலைமைகள் இருக்குமேயானால் அது மத்திய அரசினுடைய வல்லுநர் குழு வந்து ஆராய்ந்து பார்த்து, அதற்கு இவ்வளவு செலவாகும் என்று திட்டமிட்டு, மத்திய அரசு இவ்வளவு கொடுக்கும் என்றதற்குப் பிறகு, அதிலே 50 சதவீதத்தை மானியமாகத்தரும், 50 சதவீதத்தை கடனாகத் தரும் என்ற ஒரு திட்டத்தை வைத்துதான் ஒரு விதிமுறையை வைத்துத்தான் மத்திய அரசு உதவி செய்து வருகிறது. அந்த வகையிலேதான் நாம் படிப்படியாக வந்து கொண்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆக, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைபபடியாக எடுத்துக் கொண்டு வருகிறோம் என்றாலும் கூட, ஆரம்பக

கட்டத்திலே நாம் நிர்வாகத்தினுடைய முறைகளினுடைய அடிப்படையிலே பணிகளை ஆற்ற வேண்டியிருப்பதன் காரணமாக நாம் செய்ய வேண்டியவைகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலேயும் 8-11-1980 ஆம் நாளன்று அறிக்கை வந்தது. அரசு சுற்றாணை 25-11-1980-இலே பெற்றது. 5-1-1981-லே அதற்கான ஆணை வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்து பிறப்பிக்கப்பட்டது.

அதற்கடுத்து அடுத்தடுத்து வந்தவைகளிலேயெல்லாம், நாம் நிலவரி தள்ளுபடி செய்தது 9-12-1980-லே வந்தது ; 23-12-1980-லே சுற்றாணை பிறப்பித்தோம், 26-12-1980 லே அதை வழங்குவதற்கான அரசாணை மூன்று நாட்களிலேயே கொடுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு புதுக்கோட்டையிலேயிருந்து வந்தது. சுற்றாணை பெறப்பட்டது 24-11-1980 ; நாம் ஆணை பிறப்பித்தது 25 ஆம் தேதி, அதாவது மறுநாளே ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

அதே மாதிரி, புதுக்கோட்டை பொறுத்தவரையில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கு 7-1-1981-லே வருவாய்த் துறையிலிருந்து நிர்வாகம் பரிந்துரை செய்தது. 22-1-1981-லே சுற்றாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் 23-1-1981 ஆம் தேதி மறுநாளே ஆணை பிறப்பிக்கப்பட்டது ; அந்தத் தொகை வழங்கப்படலாம் என்று இருக்கிறது.

இப்படி ஒவ்வொன்றையும் பற்றி நான் சொல்லிக்கொண்டு போக முடியும்.

குழாய்க் கிணறுகள் அமைக்க 15 ஆம் தேதி வந்தது. 16 ஆம் தேதி சுற்றாணை பிறப்பிக்கப் பட்டது. 17 ஆம் தேதி அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது.

ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்தினுடைய நிலைமைகளைப் பற்றி முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறோம். இது சாதாரணமாக இருக்கின்ற நிலைமைகளைப் பொறுத்துத்தான் வருகிறது.

[பிற்பகல் 12-50]

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, நிலவரி ம்பந்தமாக அமைச்சர் அவர்கள் இங்கே தகவல் கொடுக்கின்றார்கள், ஆனால், கூட்டுறவுக் கடன் சம்பந்தமாக பல இடங்

களில் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அச்சுறுத்துகின்ற வகையிலே இன்றைக்கு தாக்கீதுகள் அந்த விவசாயிகளுக்குச் சென்று அவர்கள் 31 ஆம் தேதிக்குள் கட்டவில்லையென்றால் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைக் கடைசியில் கேட்கலாம். நான் பேசுகின்ற சப்ஜக்டுக்கும் இதற்கும் தொடர்பில்லை. பின்னால் கேட்டீர்களானால் அதைச் சொல்ல முடியும். இப்பொழுது, எடுத்த சப்ஜக்ட்டை முடிப்பதற்குத் தயவு செய்து இடம் கொடுக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

நான் தெரிவித்த நிலைமை இப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுது வந்தாலும் அப்படித்தானிருந்தது. 1974-75-ல் பருவ மழை பொய்த்ததன் காரணமாக 11,439 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலை இருந்தது. அப்பொழுது அரசு எப்படி நடந்து கொண்டது என்பதற்கான விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன். 1974-75-ல் 11,439 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக இருக்கிற நேரத்தில், தற்போது, 9,552 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையிருக்கிறது. ஆனால, 31-3-1975வரை, 1974-75-ல் இந்த வகைகளுக்காகச் செலவிடப்பட்ட தொகையை நீங்கள் பார்ப்பீர்களானால், மொத்தம் ரூ. 10 கோடி வருகிறது. ஆனால், இப்பொழுது நாம் செலவிட்டிருக்கக்கூடியவற்றைப் பார்த்தால்—நிர்வாக அமைப்பிலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் எடுத்திருக்கிறோம் என்று சொல்லத்தான் சில கணக்குகளைக் கூற விரும்புகிறேன்.

குடிதண்ணீர் கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய குழாய்க் கிணறுகளை அமைக்கவும், மற்றும் குடிதண்ணீர் திட்டங்களை மேம்பாடு செய்யவும், தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ. 6 கோடியே 95 இலட்சத்து 5 ஆயிரம். ஏரிகளில் குடி தண்ணீர் கிணறுகளை வெட்டுவதற்கு, ரூ. 1 கோடி. தேவைப்பட்ட நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் தொடர்ந்து நீரேற்று சாதனங்களை இயக்குவதற்கு மின்சாரம் கிடைப்பதற்காக தனி மின் சப்ளை கம்பி இணைப்பு கொடுக்க ரூ. 50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம். வேலைவாய்ப்புத் திட்டங்களான ஏரிகள் மராமத்து, சாலைகள் அமைத்தல், ஊரணிகளை ஆழப்படுத்துதல் ஆகிய பணிகளை பஞ்சாயத்து யூனியன் மூலம் செய்ய ரூ. 3 கோடி ஒதுக்கித் தந்திருக்கிறோம். பொதுப்பணித் துறை மூலம் பெரியஏரிகள் மராமத்து மற்றும் நீர்ப்பாசன நிலைகளுக்கு மராமத்துப்பணிகளுக்கு ரூ. 9 கோடியே 50 இலட்சம் ஒதுக்கித் தந்திருக்கிறோம். லாரிகள், வண்டிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய ரூ. 50 இலட்சம். ஆக மொத்தம் ரூ. 21 கோடியே 45 இலட்சம் நாம் கிட்டத்தட்ட இந்தக் காலத்திற்குள் செலவழித்திருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வறட்சிப் பகுதிகளில் கூடுதலாக வேலை வாய்ப்புப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக 13,050 டன் அரிசியும், பணமாகக் கொடுப்பதற்கு வேண்டிய தொகையும் பின்வருமாறு அனுமதிக்கப்பட்டுள்ளது :

13,050 டன் அரிசி விலை ரூ. 2,15,32,500 ; பணமாக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 73,67,600 ; ஆக மொத்தம், ரூ. 2,91,00,100. ஆக இதுவரையிலே நாம் ரூ. 24,36,05,100 ஒதுக்கித் தந்திருக்கிறோம். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், 1974–75லே 11,439 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அப்பொழுது ரூ. 10 கோடிதான் மார்ச் கடைசிவரை நாம் செலவழிக்க முடிந்தது. அதற்காக நான் குற்றம் சாட்டவில்லை. வறட்சி நிலையைச் சமாளிக்கின்ற அரசு எப்படி நடக்க இயலும், எப்படி இயங்க இயலும், எப்படி இருக்கும் என்ற நிலைமைக்காகத்தான் இவ்வளவையும் சொல்கிறேன். அதற்குப் பிறகும் கூட, மார்ச் மாதம் வரையில், இதுவரையிருந்தாலுங்கூட, 1975–76இல் 1974–75 கணக்கிலே, மேலும் ரூ. 15.80 கோடி மார்ச்சுக்குப் பிறகு செலவழிக்கப்பட்டது. 4–4–1975லே ரூ. 6 கோடியே 30 இலட்சம், 28–4–1975லே ரூ. 2 கோடியே 50 இலட்சம், 9–5–1975லே ரூ. 3 கோடி ; 8–7–1975லே ரூ. 4 கோடி. ஆக, மொத்தம் ரூ. 15 கோடியே 80 இலட்சம். அப்பொழுதுதான் மத்திய அரசு 25–3–1975ஆம் தேதிக்கு மேல், மத்திய நிதி அமைச்சர் ரூ. 7½ கோடியைக் கீழ்க்கண்ட விவரப்படி வறட்சி நிலை ஏற்பட்டபொழுது அளிப்பேன் என்று சொன்னார்கள். அதிலே, முதல் தவணையாக, 22–2–1975லே மானியமாக ரூ. 1.13 கோடியும், கடனாக ரூ. 2.62 கோடியும், 10–3–1975லே மானியமாக ரூ. 75 இலட்சமும் கடனாக ரூ. 1 கோடியே 75 இலட்சமும், 25–3–1975லே மானியமாக ரூ. 37 இலட்சமும், கடனாக ரூ. 88 இலட்சமும், ஆக மொத்தத்திலே, அவர்கள் கடனாக தந்தது ரூ. 5 கோடியே 25 இலட்சம், மானியமாக தந்தது ரூ. 2.25 கோடி. அப்பொழுதுதான் தகராறு வந்தது. இப்பொழுதைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அப்பொழுது முதலமைச்சராக இருந்தபொழுது, அதற்குக் கணக்குத் தந்தாலொழிய நான் மேற்கொண்டு நிதி தர மாட்டேன் என்று மத்தியில் உள்ளவர்கள் சொல்ல, கணக்கை நீங்கள் அவ்வப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அன்றைய முதலமைச்சர் சொன்னதற்குப் பிறகு, கணக்குத் தந்ததற்குப் பிறகுதான் மேற்கொண்டு நிதி ஒதுக்குவேன் என்று மத்தியில் சொல்ல, அன்றைய முதலமைச்சர் சட்ட சபையிலேயே சொல்ல வேண்டிய நெருக்கடியும் வந்தது. நான் மத்திய அரசை இனி மேல் கேட்கவேண்டிய அவசியம் இல்லை, நான் கேட்கமாட்டேன், நான் இங்கேயே சமாளிக்கப் போகிறேன் என்ற அளவுக்கு வந்தது. வறட்சி நிலையையொட்டி, அவ்வப்பொழுது செல

வழிக்கின்ற நிலை எப்படி இருக்கிறது என்பதற்காகத்தான் இதை ஒப்பிட்டுக் காட்டுகிறேனே தவிர, அப்பொழுது ரூ. 10 கோடி செலவழித்த அதே காலத்தில் இப்பொழுது ரூ. 24 கோடியை நாம் செலவழித்திருக்கிறோம். நாம் கேட்டிருப்பது ரூ. 137 கோடி. வல்லுனர் குழு வந்து ஆராய்ந்ததற்குப் பிறகு விரைவிலே அந்தப் பணம் தரவேண்டும் என்று அவர்களை நாம் கேட்டுக்கொள்ள இருக்கிறோம்.

அவர்கள் வந்ததற்குப் பிறகு, அதனுடைய அடிப்படையில் நாம் மேற்கொண்ட பணிகளை தொடர்ந்து ஆற்றலாம். அதிலே நடைபெற்றதனுடைய அனுபவத்தை அடிப்படையாக வைத்துத் தான் நாம் இந்த வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதிலே அதிகமான அக்கறையைக் காட்டிக்கொண்டு வருகிறோம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றையும் இன்றைக்கு எழுப்பினார்கள். குடிநீர் விநியோகப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் பல நிலைமைகள் வருகிறபோது, எங்கு குடிநீர் இல்லையோ அங்கு குடிநீர் இருக்கின்ற இடத்திலே இருந்து கொண்டுவருவதற்கு லாரிகளையும் மற்றவற்றையும் பயன்படுத்தி, செலவானாலுங்கூட அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை நான் குறிப்பிட்டேன். பல இடங்களில் இருந்து கொண்டு வந்து, குடிநீர் இல்லாத பகுதிக்கு குடிநீர் தருகின்ற பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்காகப் பெரும் செலவாகின்றது என்றாலும் கூட அந்தத்தண்ணீருக்கு நாம் பணம் வாங்குவதில்லை. ஆனால் குடிநீருக்கு பணம் வாங்காத நிலை இருக்கிறதா என்று கேட்டால், சென்னை போன்ற பெருநகரங்களில், சாதாரண காலங்களில் கூட வாட்டர் டாக்ஸ், வாட்டர் சார்ஜ் என்று போட்டுத்தான் வாங்குகிறோம். ஆகவே குடிநீருக்குப் பணம் வாங்கக்கூடாது: வரி செலுத்தக் கூடாது என்ற நிலையில் இல்லை. பெரிய பெரிய நகரங்களிலே குடிநீருக்கு வரி விதிக்கின்ற முறையை மேற்கொண்டு அதற்கான செலவை வாட்டர் சார்ஜ், வாட்டர் டாக்ஸ் என்று போட்டு சென்னையிலே வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே பணம் வசூலிக்கவேண்டும் என்பதல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போல அரசு அவர்களுக்கு என்று அல்ல, இந்த நிலையைப் பயன்படுத்தி சில தனியார்கள் தண்ணீர் வைத்திருக்கக்கூடிய வாய்ப்பு கொண்டவர்கள் தண்ணீர் இல்லாதவர்களுக்கு குடம் ஒன்றுக்கு இவ்வளவு விலை என்று விற்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அரசினுடைய பொறுப்பு என்பதைநான் ஒப்புக் கொள்கிறேன். அதற்கான அளவுக்குத் தான் பல்வேறு வகையிலே நாம் கொண்டு வந்து சேர்க்கிறோம். அதைப்போலதான் சங்கிரி பிரச்சினைப் பொறுத்தவரையில் கார்டுகளைக் கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதிலே கூட மிகத் தெளிவாகப்

தற்போது லெவி சர்க்கரை ரூ. 3.50 கிலோ விற்குஎன்று போடுகிறோம். என்றாலும்கூட மீதமுள்ள 35 சதவிகிதம் சர்க்கரையை வெளி மார்க்கெட்டில் விற்பதற்கு மத்திய அரசு அனுமதி தந்து இருப்பதால், ரூ. 3.50 க்கு குறைத்து விற்றதால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்கிற வகையில் இந்த 35 சதவிகிதம் அளவில் ஏற்றி விற்பதன் மூலமாக ஒரு கிலோ ரூ. 6.50 ரூ. 7.50 அல்லது ரூ. 8.50 என்று வெளிமார்க்கெட்டில் விற்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இப்படி லெவி போட்டு வாங்குவதன் மூலம் சாதாரணமாகக் கிடைக்கும் விலையில் கொஞ்சம் கூடுதல் ஏற்படக்கூடும். இருப்பினும் கிடைக்கவில்லை என்கிற நிலைமை ஏற்படாது. ஒரு கிலோ அரிசி 5 ரூ. 6 ரூ. என்கிற அளவிற்கு விற்காமல், அந்த அளவிற்கு விலை உயாவு ஏற்படாமல், ஒரு கிலோவிற்கு 50 காசு அல்லது 75 காசு கூடுமானால் பரவாயில்லை. நம்முடைய கொள்கை, எண்ணம் எல்லாம் பரவலாக அரிசி கிடைக்கவேண்டும். உணவுப் பொருள்கள் கிடைக்கவேண்டும். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தான் லெவி போட்டு இருக்கிறோம்.

இந்த லெவி போட்டு இருப்பதால் 60 டன் நெல்லும், 19 டன் அரிசியும் தான். இந்த இரண்டு மாதத்தில் நமக்கு கிடைத்து இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாம் கொள்முதல் செய்யச்சொன்னதால்கிட்டத்தட்ட 60 அல்லது 70 டன் கிடைத்து இருக்கிறது. நமக்கு செப்டம்பர் திங்கள் வரையிலும் மழை பெய்யாமல் இருந்து, நியாய விலைக் கடைகள் மூலம் அரிசி கொடுக்கவேண்டிய நெருக்கடி இருக்குமானால், நமக்கு 6 லட்சம் டன் அரிசி வேண்டும். ஆகவேதான் மத்திய அரசிடம் 5 லட்சம் டன் அரிசி வேண்டும் என்று கேட்டு, அதை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். நேற்று பேசிய மாண்புமிகு மத்திய உணவு அமைச்சர் திரு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் கூட மத்திய அரசாங்கத்திடம் இருப்பு இருக்கிறது, அரசி தரலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தர வேண்டும் என்று நாமும் வற்புறுத்திக்கொண்டு இருக்கிறோம். நான் இங்கே பேசிக்கொண்டு இருக்கிற நேரத்தில் ஒரு கூட்டம் அதற்காக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் கலந்து கொண்டு இருக்கிறார்கள். அதில் மாண்புமிகு மத்திய விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அதிகமான அளவிற்கு அரிசி நமக்குத் தேவையான 5—6 லட்சம் டன் அரிசி செப்டம்பர் வரையில் தேவைப்படுவது கிடைக்குமானால், அந்த நிமிடமே கூட நாம் லெவியை எடுத்து விடலாம். அதுவரையில் லெவியின் மூலமாக வந்தால் தவிர சாதாரண முறையில் அரிசி வாங்க முடியாது. சாதாரணமாகக் கொள்முதல் செய்யமுடியாது.

அதுமட்டுமல்லாமல் ஆந்திராவில் இருந்து வருவதற்கு லெவி போட்டு இருந்தோம். இருக்கின்ற சங்கடங்களை உணர்ந்து ஆந்திராவில் இருந்து அரிசியோ, நெல்லோ தமிழகத்திற்கு யார் வேண்டுமானாலும் கொண்டு வரலாம், லெவி கிடையாது இங்கே அரிசி வந்தால் போதும், நெல் வந்தால் போதும், இங்கே இருக்கிற பற்றாக்குறையைப் போக்கினால் போதும் என்று வைத்து இருக்கிறோம். இன்னும் ... பா. மாற்றங்கள் வேறு பல நிலைமைகளில் செய்ய வேண்டுமானலல் கூட அதனை அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டுவருகிற போது செய்யலாம்.

கோதுமைக்கு இப்போது ஓரளவிற்கு கிராக்கி ஏற்பட்டு இருக்கிறது. 3,000 டன் ஒதுக்கித் தருகிறார்கள். 10,000 டன் என்கிற அளவில் அதை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். 10,000 டன் வரும் என்று சொன்னால் குடும்பக் கார்டுதாரர்களுக்கு, கோதுமை வாங்கவேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு கொடுக்கமுடியும். ஆகவே, அதை 3000டன் எனறு இருப்பதை 10,000 டன் என்று உயர்த்தவேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை அரசு முறைப்படி எடுத்துக் கொண்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கும் எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் மிகச்சிறப்பாகத் தேவை என்பதைத் கூறிக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே கருத்து எடுத்து வைத்தார்கள். இந்த அரசாங்கம் கூடுமான வரையில் தன்னுடைய நிதி வசதிக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்து, இருக்கும் வாய்ப்புக்கூறுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்து, மத்திய அரசாங்கம் தரும் உதவி ஆதரவுகளுக்கு ஏற்ப, அவர்கள் நமக்குத் தருகிற தொழில் உரிமங்களுக்கு ஏற்ப நாம் தொழில்களை அமைக்கின்ற அல்லது விரிவாக்குகின்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். எந்தெந்தத் திட்டங்களை இந்த ஆண்டு செய்ய முடியும் என்கிற வகையில் நிதி ஒதுக்கீட்டைச் செய்து இருக்கிறோம். எந்தெந்தப் புதிய திட்டங்களை, பெரிய தொழிற்சாலைகளை கொண்டுவர இருக்கிறோம் என்பதையும் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அந்த வகையில் பார்ப்போமானால், தொழில் வளர்ச்சிக்கு தன்னுடைய நிறுவனம் இனி ...மாக உதவி செய்கிறபோது தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் 197 1977 ஆம் ஆண்டில் தொழில் நிறுவனங்களுக்கு கடன் உதவி செய்தது 112.80 கோடியாகும். 1980-லே அந்த 112·80 கோடி 143.83 கோடி என்கிற அளவிற்கு உயர்ந்து இருக்கிறது. அந்த அளவிற்கு தொழில்களைத் துவங்குவதற்கு உதவி செய்ததன் மூலம் தொழில் நடத்துகிறவர்கள் தாங்களும் முதலீடு செய்து, அரசாங்கம் கொடுக்கிற உதவியையும் சிறந்த முறையில் பயன்

படுத்தி புதிய தொழிற்சாலைகள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்பின் அடிப்படையில் தான் இந்த கடன் உதவித் தொகை 112.80 கோடியில் இருந்து 143.83 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய அளவைப் பார்ப்போமானால், பர்சென்டேஜைப் பார்த்தால் கூட ஆண்டுக்கு 9 சதவீதம் நாம் உயர்வாக வந்திருக்கிறோம். ஆம், இந்த நிதி உதவியால் 9 சதவீதம் உயர்ந்துதான் இருக்கிறது. அதே நேரத்தில் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பார்த்தால் இந்த தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பின்தங்கிய நிறுவனங்களுக்கு 312 கோடி ரூபாய் உதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நாம் அளிக்கும் 312 கோடி ரூபாய் நிதி உதவி மூலம் கூடுதலாக தனியார் 482 கோடி ரூபாய் முதலீடு செய்ய வழிவகை செய்யும். மொத்தமாகப் பார்த்தால் இதனால் வேலை வாய்ப்பு எவ்வளவு பெருகும் என்று பார்க்கிறபோது 4,12,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக் கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1976 ஆம் ஆண்டு அந்த நிறுவனம் அளித்துவந்த உதவி 12 கோடி ரூபாய். 1980-ல் அது மூன்று மடங்காக உயர்ந்து இன்றைக்கு 41 கோடி ஆகியிருக்கிறது. தனியார்கள் 241.90 கோடி ரூபாய் கூடுதல் மூலதனம் செயவதற்காக இந்த தொழில் வளர்ச்சிக் கழகம் 41 கோடி நிதி உதவிக்கு வகை செய்திருக்கிறது. ஆக, 41 கோடி நாம் நிதி உதவி செய்ததன் காரணமாக 241 கோடி அளவுக்கு தொழில் மூலதனம் பெருகியிருக்கிறது; தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்திருக்கிறது என்று பொருள்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய உதவி மூன்று மடங்காகப் பெருகி, 154 கோடி அளவில் இருக்க திட்டமிடப்பட்டு, நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த 154 கோடி உதவி செய்வதினால் தனியார் முதலீடு 530 கோடி என்ற அளவுக்கு உயர வழிவகுக்கும். அந்த அளவுக்கு ஏற்பாடுகள் இருக்கின்றன.

அது மட்டுமல்ல. தொழில் [illegible] உரிமங்கள் வழங்குவதில், இசைவுக் க[illegible]கொண்டு இதில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. [illegible] மத்திய அரசைக் கேட்பதில் சில விரைவாக வருகின்றன; சில மத்திய அரசில் தேங்கிக்கிடக்கின்றன. மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களும் முதலமைச்சர் அவர்களும் டெல்லிக்கு போகும்போதெல்லாம் அதுபற்றி வற்புறுத்தி வருகிறார்கள். நம்முடைய மாநிலம் தொழில் துறையில் பின்னடைந்துவிட்டது என்று சொன்னார்

கள். நாம் பின்னடையவில்லை. தொழில் துறையில் ஏற்பட்ட வேலைவாய்ப்பில் நாம் தொடர்ந்து மூன்றாவது நிலையில் இருக்கிறோம். மகாராஷ்டிரம் 12,40 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் நிலையில் மேற்குவங்காளம் 9,30 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும் நிலையில் தமிழ்நாடு 7 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து மூன்றாவது இடத்தை தொடர்ந்து வகித்து வருகிறது.

அகில இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களில் நாம் இன்றைக்கு மூன்றாவது இடத்திலேதான் இருக்கிறோம்; அதற்குக் கீழே இன்னும் தள்ளப்படவில்லை என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவிற்கு இருக்கிற வசதி வாய்ப்புகளை நாம் பயன்படுத்தியிருக்கிறோம்.

1976 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரையிலான 3 ஆண்டுகளில் நாம் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் கூட தமிழகத்தில் 8.5 சதவீதம் உயர்ந்திருக்கிறது. ஆல் இந்தியா ஆவரேஜ் கணக்கு 7 சதவீதம்தான். ஆக, ஆல் இந்தியா ஆவரேஜை விட தமிழ்நாடு உயர்ந்திருக்கிறதே தவிர அதற்கு கீழே போய்விடவில்லை.

தொழில் உற்பத்தியை (இன்டஸ்டிரீஸ் ப்ரொடக்ஷன்) எடுத்துக் கொண்டால் 1979 ஆம் ஆண்டு குறியீட்டு எண், 1980 ஆம் ஆண்டு குறியீட்டு எண் இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 10 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. அதே நேரத்தில் அகில இந்திய கணக்கைப் பார்த்தால் 1.2 சதவீதம் தான். ஆக இந்த வகையிலும் நாம் தாழ்ந்துவிடவில்லை. நமக்கு இருக்கிற வசதி வாய்ப்புக்கு ஏற்ப நாம் உயர்ந்துதான் இருக்கிறோம்.

தனி நபர் வருமானத்தை எடுத்துக் கொண்டால் கூட, சராசரி நபர் வருமானம் 1976–77 ஆம் ஆண்டு விலைவாசி அடிப்படையில், 'கான்ஸ்டன்ட் ரைஸ்' என்ற அடிப்படையில் 1976–77 ஆம் ஆண்டில் 659 ரூபாயாக இருந்தது 1977–78 ஆம் ஆண்டில் 701 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. சராசரி வளர்ச்சி 5 சதவீதம். இது அகில இந்திய கணக்கு. 659, 701, 729 ; சராசரி வளர்ச்சி 5 சதவீதம். நான் இனி சொல்வது தான் தமிழ்நாட்டின் வளர்ச்சி. தமிழ்நாட்டின் வளர்ச்சி 197 -77 ஆம் ஆண்டில் 586; 1977–78 ஆம் ஆண்டில் 643 ; 197 -79 ஆம் ஆண்டில் 702 என்று வருகிறபோது அகில இந்திய வளர்ச்சி 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக இருக்கிறபோது, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தனி நபர் வருமானம் 9.5 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் கொடுத்திருக்கிற

பத்திரிகையிலே எழுதி இருக்கிறது. அந்த வகையிலே இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து பத்திரிகை இதுகுறித்து தெளிவாகப் போட்டிருக்கிறது. அவர்கள் தண்ணீர் விநியோகம் செய்கின்ற முறை, லாரிகள், மக்கள் நின்று வாங்குகிற முறை எல்லாவற்றையும் படம் போட்டு தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியிருப்பதன் மொழிபெயர்ப்பை நான் சொல்லுகிறேன். 'தண்ணீர் லாரியில் குடிநீர் பிடிப்பதற்காக சங்ககிரியில் கூடியுள்ள மக்கள் கூட்டம் இது. அடையாள கார்டுகள் வழங்கப்பட்டு குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. பஞ்சாயத்துதாரர் தண்ணீரை விற்கிறார்களா ? அல்லது குடிநீர் ரேஷனா? என்று சட்டசபையில் திங்கள் அன்று கேள்விகள் கேட்கப்பட்டன. அது பற்றி நாங்கள் விசாரித்தபோது அங்கு குடிநீருக்கு ரேஷன்இல்லை, குடிநீர் விற்கப்படவும் இல்லை, அனைவருக்கும் குடிநீர் கிடைக்கக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் பெயர், தேதி ஆகியவை உள்ளன. பானையிலோ அல்லது அண்டாவிலோ ஒருவர் தண்ணீர் பிடித்துக் கொண்டதும் அவர் கார்டில் அன்றைய தேதி பஞ்ச் செய்யப்படுகிறது. இந்த முறை மூலம் மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பது ஊரறிந்த உண்மை' என்று அந்தப் பத்திரிகை சொல்லுகிறது.

எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், தண்ணீர் கிடைக்காத இடத்தில் தண்ணீர் கிடைப்பதற்கு இப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்கின்றபோது இதற்கு ஒத்துழைப்பும் உறுதுணையும் தரவேண்டுமே ஒழிய வேறு வழியியே இல்லை. ஆகவேதான் இது விற்கப்படவில்லை. முறைப்படுத்தப்படுவதன் காரணமாக 36 இடங்களில் நிறுத்தி நிறுத்தி காலை 8-30 மணி முதல் இரவு 10-30 மணி வரையில் 3, 4 லாரிகளின் மூலம் வழங்குகின்ற தன்மை இருக்கிறது. காவிரி ஆற்றிலிருந்தும், சங்ககிரிக்கு அப்பாலிருந்தும் கொண்டு வந்து கொடுக்கின்ற முறை இருப்பதால், அதில் தவறு எதுவும் இல்லை என்பதை இப்பொழுது கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் பொதுவாக உணவுப் பிரச்சினையைப் பற்றிக் கூறினார்கள். உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் வறட்சி நிலை 11 மாவட்டங்களில் இருப்பதை நான் குறிப்பிட்டேன். ஏற்கெனவே வெளியே விற்ற விலைக்கும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய நியாய விலைக் கடைகளில் விற்ற விலைக்கும் வித்தியாசம் இல்லை. கிட்டத்தட்ட சரியாக இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் இங்கே கார்டு மூலமாக அரிசி வழங்கும் நிலை இல்லாமல் வெளியே கடைகளிலே வாங்கிக்கொள்ளலாம் என்று கூட நிலை இருந்தது. நுகர்பொருள் வாணிபக் கழகங்களின் கடைகளில் கூட 17 ஆயிரம் நியாய விலைக் கடைகளுக்கு பங்கீட்டு தருவதற்கான உணவுப் பொருள்களை கொள்முதல் செய்து, வியாபாரிகள் தனியாகக் கொள்முதல் செய்து, நியாயவிலைக் கடைகளுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொடுக்க, அந்த நிலைமை நடைபெற்றிருந்தது. ஆனால் நெல் உற்பத்தி குறைந்ததன் காரணமாகவும், அதை சரியாகப் பங்கிட்டுக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் சாதாரண அரிசி கிலோ 1.75 சன்ன ரகம் 2.00 ரூபாயாகவும், மிகச் சன்னரக அரிசி 2.15 ரூபாயாகவும் விற்றது என்றாலும் கூட அதிலே அரசு 65 பைசா சப்சிடி தந்ததன் காரணமாக வெளிச் சந்தையிலே 2.75 காசு, 3.00, 3.10 என்று ஏறும்போது அடக்க விலைக்குக் கீழே விற்கவேண்டி இருக்கிறது. கார்டிலே வாங்க வேண்டி இருக்கின்ற நிலை வந்ததன் காரணமாக நவம்பரில் 10,000 டன்களாக இருந்த தேவை. பிப்ரவரியிலே 35,000 டன்களாக வளர்ந்திருக்கிறது. இந்த மார்ச் மாதத்தில் 45,000 டன்களாக வளர்ந்திருக்கின்றது. அடுத்தடுத்த மாதங்களில் 60,000, 65,000, டன்களாக போகும் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது.

[பிற்பகல் 1 00]

16,000 டன் தான் நாம் கொடுக்கவேண்டி இருந்தால் லெவி போடவேண்டிய அவசியம் நமக்கு வராது. ஆனால் 65,000 டன் அரிசியை வைத்து ஒவ்வொரு நியாய விலைக்கடைகள் மூலமும் கார்டுகளுக்கு வந்து வாங்கிறவர்களுக்கு—வெளியே வாங்குவதை விட நியாயவிலைக்கடைகளில் குறைவான விலையில், சல்லிசான விலையில் இருக்கும் என்று வந்து வாங்கிறவர்களுக்கு—கொடுக்கவேண்டும் என்கிற தன்மையின் அடிப்படையில் நுகர்பொருள் வாணிபக்கழகம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதனால் தான் லெவி போடவேண்டியிருக்கிறது. சில உறுப்பினர்கள் லெவி போடவேண்டிய அவசியம் இல்லை, எடுத்துவிடலாம் என்று சொன்னார்கள். லெவி போட்டதற்குக் காரணம் நியாயவிலைக் கடைகளில் அரிசி போட வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால், அரிசி போடுகின்ற அளவிற்கு ஸ்டாக் இருக்க வேண்டும். அப்படி ஸ்டாக் இல்லாவிட்டால், அரிசி போட முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், கார்டுகளுக்கு அரிசி கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வந்து சேரும், சாதாரணமாக ஒரு ஹாஸ்டலில் 12 பேர்களுக்கு ஒரு நாள் உணவு கிடைக்கவில்லை என்கிற நிலைமை ஏற்பட்டதால், பட்டினியால் மயக்கம் போட்டு விழுந்தார்கள் என்றெல்லாம் விளம்பரம் செய்யப்பட்டபோது நியாயவிலைக் கடைகளில் அரிசி கிடைக்கவில்லை என்றால் என்ன நிலைமைகள் உருவாகும் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அதனால் தான் 40 சதவிகிதம் லெவி வாங்கும் அவசியம் ஏற்பட்டது. 60 சதவிகிதம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

கணக்கின் அடிப்படையில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, அதிலும் நாம் குறைந்துவிடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

[பிற்பகல் 1–10]

திட்ட அளவைப் பற்றிச் சொல்கின்றபோது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒன்றை எடுத்துக் குறிப்பிட்டார்கள். 5 ஆவது திட்ட அளவிலே 1,122 கோடியும் 6-ஆவது திட்ட அளவிலே நம்முடைய மாநிலத்திற்கு ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை 3,150 கோடியுமாகும். 5 ஆவது திட்டக் காலத்தில் நபர் வாரித் திட்ட அளவுப்படி பெரிய மாநிலங்கள் பதினான்கில் தமிழகம் 11-ஆவது இடத்தைப் பெற்றிருந்தது, 6-ஆவது திட்டக் காலத்தின் ஆரம்பத்தில் அது 9-ஆவது இடத்தைப் பெற்றிருந்தது. இப்போது கிடைத்திருக்கின்ற அளவுப்படி அதாவது இப்போது எடுக்கப்பட்ட மக்கள் தொகை சணக்கெடுப்பின் அடிப்படையிலே பார்த்தால், தமிழகத்தின் நபர் வாரி திட்டத்தினுடைய அளவுப்படி நாம் 5 ஆவது இடத்திற்கு வந்திருக்கிறோமே தவிர, அதாவது 11 ஆவது இடத்திலே இருந்து 9 ஆவது இடத்திற்கு வந்து இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் 5 ஆவது இடத்திற்கு நபர் வாரி திட்ட அளவுப்படி வந்திருக்கிறதே தவிர வேறு வகையில் போகவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்தத் தொகையில் 71,000 கோடி 1978–83-க்கு ஒதுக்கியபோது மாநிலத்திற்கான தொகை 37,569 கோடி. அதிலே சதவீதம் என்று பார்த்தால் 52.9 சதவீதம் மாநிலத்திற்குக் கிடைத்தது. 1980–85-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்தத் தொகை 97,500 கோடி. அதிலே மாநிலத்திற்கு ஒதுக்கிய தொகை 48,600 கோடி. அதன் சதவீதம் 49.9. 1978—83-லே மாநிலத்திற்கு ஒதுக்கிய தொகையின் சதவீதம் 52.9. ஆனால் இப்போது போட்டிருக்கின்ற திட்டத்திலே மாநிலத்திற்கு ஒதுக்குகின்ற தொகை குறைந்துவிட்டது. ஆகவே தான் 49.8 ஆக ஆகிவிட்டது. தமிழ்நாட்டில் 1978–79 ஆம் ஆண்டுக்கு திட்ட அளவு 2,150 கோடி ரூபாய், மத்திய அரசின் உதவித் தொகை 640 கோடியே 50 இலட்சம். அதன் சதவீதம் 29.79 ஆக இருந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குன்றந்து விட்டது என்று எடுத்துச் சொன்னார்கள். அது உண்மைதான். குறைக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய வாதம். 1978–83 ஆம் ஆண்டுக்கு கொடுத்த அந்த விகிதப்படிதான் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் இப்போதும் வற்புறுத்துகிறோம். திட்டக் குழுவிலேயும் வற்புறுத்தினோம். இப்போது கொடுப்பது 1980—85 ஆவது திட்ட

அளவுப்படி 3,150 கோடி. அதில் மத்திய அரசின் உதவி 665 கோடி தான். அந்த வகையிலே நமக்குக் கிடைக்கின்ற உதவி 21.1 சதவீதம் தான். 29.79 சதவீதம் கிடைத்த இடத்தில் இப்போது 21.1 சதவீதம்தான் கிடைக்கின்றது.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சென்ட்ரல் எய்ட் 665 கோடி கிடைத்திருக்கின்றது என்று சொல்கிறார்கள். அவர் தந்திருக்கின்ற புள்ளி விவரத்தின்படி 1980–81-க்கு 97 கோடி ரூபாய் என்று கணக்குக் காட்டப்பட்டிருக்கின்றது. 1981–82-க்கு 86 கோடி சென்ட்ரல் எய்ட் என்று கணக்கு வந்திருக்கின்றது. ஆக மொத்தம் 183 கோடி. ஆகவே இதிலே இரண்டு வருஷத்திற்கு 183 கோடி கொடுக்கப்பட்டிருக்கின்றது. மீதி இருப்பது 480 கோடி. இந்த 480 கோடியில் அடுத்து வருகின்ற ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளில் நமக்கு சென்ட்ரல் கவர்ன்மென்டின் எய்டாக வரவேண்டும். அதிலே சராசரியாக ஆண்டுக்கு 160 கோடியாவது கிடைக்க வேண்டும். நான் இதிலே ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 1980–81 ஆம் ஆண்டுக்கு நமக்குக் கிடைத்த சென்ட்ரல் எய்ட் 97 கோடிதான். 1981–82-க்கு 86 கோடிதான் வந்திருக்கின்றது. அதாவது குறைந்து விட்டது. இந்த நிலையில் வருகின்ற ஆண்டிலே 160 கோடி ரூபாய் எப்படி வரும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்? நீங்கள் ஆண்டுத் திட்டத்தை 514 கோடியிலிருந்து 560-க்கு கொண்டு போய்க் கொண்டிருக்கிறீர்கள். இதுபற்றி நான் தெளிவாக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 665 கோடி ரூபாய் மத்திய அரசின் உதவியாக நமக்குத் தருவதாக அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். திட்டத்திலே சென்ட்ரல் கவர்ன்மென்ட் வில் கிவ் என்று சொல்கிறீர்கள். அக்ரீட் என்று சொல்லவில்லை. ஆகவே நான் ஒரு நியாயமான கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். 97 கோடி சென்ற ஆண்டு சென்ட்ரல் எய்டாகக் கிடைத்தது. இந்த ஆண்டு 86 கோடி கிடைத்தது. அடுத்த ஆண்டுக்கு 160 கோடியும் அப்படியே அடுத்தடுத்த ஆண்டுகளுக்கும் 160 கோடி ரூபாயும் வருமா? இது முடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நானும் நியாயமாகத்தான் பதில் சொல்கிறேன். மத்திய அரசினிடத்திலே திட்டம் பற்றிச் சொல்கிறோம். மத்திய அரசு 665 கோடி ரூபாய் ஒதுக்கித் தருகிறோம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒப்புக்கொண்ட 665 கோடியையும் 5 வருடங்களிலே நமக்கு அவர்கள் தர வேண்டும். இரண்டு வருடங்களிலே தந்தது போக மீதி உள்ளதை இன்னும் இருக்கின்ற மூன்று வருடங்களில் நமக்கு அவர்கள் தர வேண்டும். அதேமாதிரி நாமும் இந்தத் திட்டத்திலே எவ்வளவு செலவழிப்பதற்கு ஒப்புக் கொண்டோமோ அதாவது மொத்தமுள்ள 3,150 கோடி

யில் 665 கோடியாக நாம் எவ்வளவு செலவழிக்க ஒத்துக் கொண்டோமோ, நாம் எவ்வளவு ரிசர்வ் செய்ய வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டோமோ அதில் இரண்டாண்டுகளுக்கான தொகைகள் போக மீதியுள்ள 3 ஆண்டுகளில் எவ்வளவு ஒதுக்க வேண்டுமோ அதை ஒதுக்கி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பொறுப்பை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நாங்களும் எங்களுடைய பொறுப்பை ஏற்று முடிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அவர்களும் அவர்களுடைய பொறுப்பை ஏற்று முடிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 665 கோடி வருமா என்றால் வரும் என்று நான் நம்புகிறேன். வரும் என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால், அவர்களே வாக்குறுதி தந்திருப்பதன் காரணத்தால் கட்டாயம் வரும். அது குறைந்து இருப்பதற்கான காரணத்தைத்தான் இப்போது சொல்லி வந்தேன். காட்கில் பார்முலாவில் ஒரு மாறுதல் செய்துவிட்டார்கள். ஏற்கெனவே இருந்த 1978–83 ஆம் பார்முலா படியே இருந்திருக்குமேயானால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டியது போல அந்த ஈவு எதுவோ, அது நமக்கு வந்திருக்கும். ஆனால் கன்டினியூயன்ஸ் ஸுக்கு என்று 10 பெர்சன்ட் என்று இருந்ததை 20 பெர்சன்ட் என்று ஒதுக்கிவிட்டார்கள். அப்படி ஒதுக்கியது யாருக்கு என்றால், பெர்கேப்பிடா இன்கம் குறைவாக இருப்பவர்களுக்கு என்று சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தினுடைய இன்கம் 9 ரூபாய் கூடப் போகிறது. 1 ரூபாய் கூடபோனாலும் அந்த மாநிலத்திற்கு தருவதற்கு இல்லை என்று சொன்னார்கள். ஆகவேதான் காட்கில் பார்முலாவை நாம் மாற்ற வேண்டும் என்று கேட்டு, வேறு பல வகைகளையெல்லாம் சுட்டிக் காட்டுகிறோம்.

ஏழ்மைக்கோடு எனப்படும் பாவர்ட்டி லைனை கணக்கில் எடுத்து கொடுக்கும்போது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அந்த ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் அதிகம். அந்த அடிப்படையில் நிதி உதவியை ஒதுக்க வேண்டும் என்ற அளவிற்கு காட்கில் பார்முலாவை மாற்ற வேண்டும் என்று கேட்கிறோம். இப்படி நாங்களும் வற்புறுத்துகிறோம். வேறு சில மாநிலங்களும் வற்புறுத்துகிறார்கள். ஆனால் மத்திய அரசு இதில் பிடிவாதமாக இருந்து.பெர்கேப்பிடா இன்கம் தான் நாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப் போகிறோமே தவிர, ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்று கணக்கு எடுக்கப் போவது இல்லை என்று சொன்னதன் விளைவாகத்தான், காட்கில் பார்முலா விதி குறுக்கிட்டதன் காரணமாகத்தான் நமக்கு நிதி ஆதாரம் குறைந்திருக்கிறது. என்றாலும் கூட திரும்ப திரும்ப நாம் வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். அவர்களும் முடிவு எடுத்த நிலையில்தான் நின்றுக் கொண்டிருக்கிறார்கள்.

1980–81 ஆம் ஆண்டுக்கு நிதி உதவி 140 கோடி, 1981–82 ஆம் ஆண்டுக்கு நிதி உதவி 130 கோடி. மீதம் உள்ள 3 ஆண்டுகளுக்கு, சராசரியாக 130 கோடி கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான் முதலிலே சொன்னபடி அப்படிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு. நம்முடைய பொறுப்பு நமக்கு. திட்டக் குழுவினிடத்திலே பேசி, திட்ட அமைச்சரிடத்திலே பேசி, திட்டக் குழுவும் ஏற்றுக் கொண்டு, அவர்கள் ஒப்புக் கொண்ட பிறகு, அதை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாம் நம்முடைய பொறுப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம், என்பதைக் குறிப்பிட்டுக் சொல்ல விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு நிதியமைச்சர் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்திலேயே வித்தியாசம் இருக்கிறது. அதன் இணைப்பிலே சென்டிரல் எய்டாக 80–81-க்கு 97 கோடி என்றும் 81–82-க்கு 86 கோடி என்றும் ஆக மொத்தம் 183 கோடிதான் வரும். ஆனால் மொத்தம் 480 கோடிதான் நமக்கு பேலன்ஸாக இந்த 3 வருடங்களுக்கு இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 160 கோடி வீதம் நம்மால் வாங்க முடியுமா என்பதுதான் நான் கேட்ட கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசிடமிருந்து அந்தப் பணம் வரும் என்று எதிர் பார்ப்பதாகத்தான் அவர் விடை சொல்லியிருக்கிறாரே, இன்னும் என்ன சந்தேகம்? வரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்கள் மானியத்தைப் பற்றியதாகும். மத்திய அரசு கடனாகவும் உதவி அளிக்கிறது. அதையும் சேர்த்துத்தான் இதில் அப்படிப் போடப்பட்டிருக்கிறது. அடுத்து, டீசல் பெட்ரோல் இவைகளுக்கு வரி போட்டிருக்கிறோம். அதைப் பற்றி கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நான் நிதி நிலை அறிக்கையிலே அது பற்றிய விவரங்களையெல்லாம் தெளிவாகக் கொடுத்திருக்கிறேன். ஆகவே வரி போடுவது என்கிற போது கொஞ்சம் விலை உயரத்தான் செய்யும். விலையும் ஏறாது, வரியும் போடுவோம் என்ற தியரி ஒத்துவராததுதான். மத்திய அரசாங்கம் 221 கோடி ரூபாய்க்கு புதுவரிகள் போட்டிருக்கிறார்கள். புது வரிகள் போடாமல் சமாளிக்க முடியாது. எவ்வளவு வருமானம் ஈடுகட்ட முடியும் என்பதைப் பார்த்துதான் அது இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 மார்ச் 30

நம்முடைய வருமானத்தினுடைய அளவு, வரி போட்ட வருமானம், வரி இல்லாத வருமானம், எல்லாமும் சேர்த்து சமாளிக்கின்ற அளவுக்கு நிலைமைகள் வருகின்றபோது நாம் சில பல வரிகளை தள்ளுபடி செய்கிறோம். அல்லது வரி விகிதத்திலிருந்து குறைக்கிறோம். ஆனால், இப்போது இருக்கிற 122 கோடி ரூபாய் துண்டு விழுகிற நிலைமைக்கு முழுமையாக சரி கட்டுவதற்காக கூட நாம் வரிபோடவில்லை. வேறு பல மாநிலங்கள் 40, 45 கோடி கூட வரி போட்டிருக்கிறது. சில மாநிலங்கள் பின்னால் பார்த்துகொள்ளலாம் என்று விட்டிருக்கிறது. ஆனால் நாம் 20 கோடிக்கு கூட வரி போடவில்லை. டீசல், பெட்ரோல் ஆகியவைகளுக்கு 5 சதவீதம் நாம் வரி போட்டிருக்கிறோம். அது ஏற்கெனவே விலை விகிதத்தில் இருந்தது. அண்மையில் ஏறிய அதே விலை விகிதத்திற்கு ஏற்ப நான் இங்கே பெர்சென்டேஜ் போட்டோம்.

ஏற்கெனவே ஒரு லிட்டருக்கு இவ்வளவு காசு என்று வைத்ததினால் லிட்டர் விலை ஏறாமல், லிட்டருக்கு இவ்வளவு காசு என்று நிரந்தரமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருந்தது. மற்றைய மாநிலங்களில் அப்போது பெர்சென்டேஜ் இருந்ததினால் விலை ஏற ஏற, அந்த பெர்சென்டேஜ் அளவிற்கு அவர்களுக்கு வரியும் வந்துக் கொண்டிருந்தது—டீசல் பெட்ரோல் ஆகிய வகைகளில். ஆந்திராவில், கேரளாவில், கர்நாடகத்தில் இப்படி பெர்சென்டேஜ் முறை இருந்தது. தொடர்ந்து இருந்ததினால் பெர்சென்டேஜுக்கு ஏற்ப அவர்களுக்குப் பணம் வந்தது. நம்முடைய மாநிலத்தைப் பொருத்தவரையில் லிட்டருக்கு என்று வைத்ததினால், விலை நிரந்தரமாக இருந்தது. ஆனால் பெட்ரோல் விலையும் டீசல் விலையும் 3 ரூபாயிலிருந்து 5 ரூபாய் என்று ஏறியும் நமக்கு வரக்கூடிய காசு, அந்தப் பழைய அளவிலேதான் இருந்தது. ஆகவே தான் அதை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்தபோது, ஒரு லிட்டருக்கு உள்ள காசு எதுவோ, அதற்குக் கிட்டத்தட்ட சமமாக கணக்கிட்டபோது, இடைக்காலத்தில் நாம் தூக்கியபோது 5 சதவீதம் என்று தூக்கினோம்.

[பிற்பகல் 1-20]

ஆக, இப்போது டீசல் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக நாம் 2 சதவீதம் தூக்கியிருக்கிறோம். பெட்ரோல், டீசல் மீதான வரியை உயர்த்தியிருப்பதால் விலை ஏறுமோ என்றால் ஓரளவு ஏறத்தான் செய்யும். மத்திய அரசின் கணக்கைப் பார்த்தாலும் கூட, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் இருந்ததைவிட ஆண்டுக்காண்டு ஏற்றிக்கொண்டுதான் வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு ஏற்றாமல் விட்டதால் நமக்கு கொஞ்சம் வாய்ப்பு இருந்தது என்று பிடித்தோமே தவிர இந்த ஆண்டு அவர்கள் ஏற்றியிருப்பார்களானால் மேலும் சுமையை வைக்க, நாம் இதில் விதித்திருக்ககூட மாட்டோம்.

1981 மார்ச் 30]

திரு. இரா. உமாநாத் : மத்திய அரசு ஆண்டுக்காண்டு இந்த மாதிரி பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ் மீது வரியை ஏற்றிக்கொண்டிருப்பதால் நமக்கு இந்தப் பளு வருகிறது. அப்படி ஏற்றுவது சரியல்ல என்ற பொஸஷனில் நம் மாநில அரசு ஒரு நிலையை எடுக்க வேண்டாமா? பெட்ரோல் ப்ரொட்யூசிங் கன்ட்ரீஸ் ஏற்றியதால் அல்ல இந்த ஏற்றம். அவர்கள் டாலரில் பே செய்கிறார்கள். இங்கே ரூபாயில் ஏற்றுகிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட் ட்ரஷரிக்குத்தான் கலக்ட் செய்கிறார்கள். ஆகவே ஒரு ஸ்டான்ட் எடுக்க வேண்டாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆகவே, நாம் நியாயமான ஒரு ஸ்டான்ட் எடுக்கலாம் என்ற அடிப்படையில் பக்கத்து மாநிலங்களில் எவ்வளவு நியாயமான ஸ்டான்ட் வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தபோது கேரளாவில் 15 சதவீதம் என்றுதான் அவர்கள் ஸ்டான்ட், கர்நாடகாவில் $12\frac{1}{2}$ சதவீதம் என்பது அவர்கள் ஸ்டான்ட், ஆந்திராவை எடுத்துக்கொண்டால் 11 சதவீதம் என்றிருக்கிறது. தமிழ்நாட்டில் $12\frac{1}{2}$ சதவீதமும் இல்லை 15 சதவீதமும் இல்லை என்று 11 சதவீதம் என்ற அளவில் நிற்கிறோம். டீஸலைப் பொறுத்தவரையில் கேரளாவில் 20 சதவீதம் என்று ஏற்றியிருக்கிறார்கள். ஆந்திராவில் 10 சதவீதம். கர்நாடகாவில் 10 சதவீதம். இங்கே 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதம் என்று ஏற்றியிருக்கிறோம். விலை ஏறியிருக்கிறது என்பதைக் கண்டு ஏதாவது குறைக்க முடியுமா என்று யோசித்த வேளையில் ஒன்றை மட்டும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த பெட்ரோல், டீசல், கிரவீன் ஆகியவற்றைப் பொருத்து சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரும் நகரங்களில், முக்கியமான நகராட்சிகளில் முக்கியமாக இருக்கிற சர்சார்ஜ், பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய்க்கு இருக்கிற சர்சார்ஜ் அத்தனையும் நீக்கப்படுகிறது என்பதை நான் இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (கரவொலி).

சென்னையில் முன்பிருந்த 5 சதவீதம் கூடுதல் வரியை இப்போது 10 சதவீதம் என்றாக்கினோம். பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் இவை பொறுத்த வரையில் இந்த 10 சதவீதம் சர்சார்ஜ் என்பது நீக்கப்படுகிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சென்னையில் மட்டும் இந்த சர்சார்ஜை கூட்டினோம், அந்த 10 சதவீதம் சர்சார்ஜ்-ம் நீக்கப்படுகிறது. அது, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் பொறுத்தவரையில் நீக்கப்படுகிறது என்பதையும் மற்ற இடங்களில் ஏற்கனவே இருந்த கூடுதல் வரியை, மற்ற நகரங்களில் இருந்த 5 சதவீதம் சர்சார்ஜ் இந்த மூன்று பொருள்களைப் பொறுத்தவரையிலும் நீக்கப்படுகிறது. ஆனால், மண்ணெண்ணெய் பொறுத்தவரையில் வரியை

ஏற்றவில்லை என்றாலும் இருந்து வருகிற சர்சார்ஜை இப்போது நாம் நீக்குகிறோம். இதை நீக்குவதன் மூலம் நாம் எதிர்பார்க்கக்கூடிய வரியில் ஆறரைக்கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனை வரியைக் குறைக்காமல் கூடுதல் சர்சார்ஜ் போட்டதை எடுத்திருப்பதால் இந்த மூன்று இனங்களிலும் சேர்ந்து கிட்டத்தட்ட ஆறரைக்கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். ஆக, இந்த அளவிற்குத்தான் இப்போது முடியும். ஏற்கனவே இருந்த சர்சார்ஜ் மூலம் வருகிற பழைய வரியிலும் கொஞ்சம் குறையும், புதியதாக எதிர்பார்க்கக்கூடிய வருவாயும் போய் மொத்தம் ஆறரைக் கோடி ரூபாய் குறையும்.

விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்கிற தன்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதில் எவ்வளவு ரூபாய் வரக்கூடும் என்ற தொகை குறிப்பிடப்படவில்லை என்று உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள் அதிலே சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் தண்ட வரியை முழுக்க நீக்குகிறோம், தண்ட வட்டியை முழுக்க நீக்குகிறோம். சாதாரண வட்டியை முழுக்க நீக்கம் செய்வதன் மூலம் குறிப்பிட்ட காலத்திற்குள் அசலை மட்டும் செலுத்திவிடுவார்களேயானால் அதன் மூலம் சிறு விவசாயிகள் பொறுத்து நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு 33 கோடி ரூபாயாகும். இந்த 33 கோடி ரூபாயை நாம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்று தரவேண்டிய பொறுப்பு வருகிறது. மற்ற விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஏழு கோடி ரூபாய் வருகிறது. ஆக, மொத்தம் 40 கோடி ரூபாய் இந்த ஆண்டு விவசாயிகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும், தண்ட வட்டி மட்டும் மற்ற விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்வதன் மூலம் இந்த ஆண்டு அரசுக்கு கூடுதலாக ஏற்படுகிற பொறுப்பு கிட்டத்தட்ட—சப்ஜெக்ட்டு கரெக்‌ஷன் சொல்கிறேன்,—முன்பு 42 கோடி என்று சொன்னோம், ஆனால் ஆக்சுவலாக 50 கோடிக்கு வந்துவிட்டது. தக்காவி கடன் 16 கோடி, 20 கோடி என்று வந்துவிட்டது. ஆக, கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவிற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் வருகிறது. ஆகவே இந்தச் சலுகைகளை ஏற்று விவசாயிகள் தங்கள் கடமைகளைச் செய்து முடிப்பார்களேயானால் எதிர் காலத்தில் கூட்டுறவுக் கடன்கள் அதிகமாக வாங்கி தங்களுடைய நிலைமையை சீர்படுத்திக்கொள்ள வாய்ப்பு வசதி ஏற்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, மிக முக்கியமான விஷயமாக இங்கே எல்லோராலும் பேசப்பட்டது. அது மதுவிலக்கைப் பற்றிய ஒன்று. மதுவிலக்குப் பிரச்னை பற்றி எல்லாவிதமான கருத்துக்களையும் இந்த அவையிலே எல்லோரும் சொல்லி முடித்து விட்டார்கள். ஆக மொத்தத்தில், இதற்கான நிலைமைகளை நான் கேட்டுத்

தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமையில் இல்லை. இந்த மாநிலத்திலே இருக்கிற நிலைமை நமக்குத் தெரியும் மது மதுவிலக்குக் கொள்கையில் யாருக்கும், எந்தவிதமான அபிப்ராய பேதமும் இருப்பதாக நான் கருதவில்லை. மதுவிலக்குக் கொள்கை என்று வருகின்ற போது, எல்லா அரசியல் கட்சிகளும் மதுவிலக்குக் கொள்கையை பின்பற்றுகின்றன என்பதை நான் மறுக்கவில்லை. எதிர்க் கட்சிகளாக இருந்தாலும் சரி, ஆளுங் கட்சியாக இருந்தாலும்சரி இந்தியக் காங்கிரஸ் கட்சியாயிருந்தாலு சரி, எல்லாக் கட்சிகளுக்கும் மதுவிலக்கை அமுல் படுத்துகின்ற கொள்கை உண்டு. கள் வேண்டுவோர் கழகத்தைத் தவிர, மற்றவர்கள் எல்லோருக்கும், யாரும் குடிக்கக்கூடாது, மதுவிலக்குச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டுமென்பதிலே கொள்கை இருக்கிறது. ஆனால், இந்த மதுவிலக்குச் சட்டத்தை எந்த அளவுக்கு அமுல்படுத்துவது என்பதிலே, நிறைவேற்றுவது என்பதிலேதான் மாநிலத்திற்கு மாநிலம் முறை மாறுகிறது. ஆகவே, இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. எனவே, அதை நிறைவேற்றுவதிலே உள்ள சங்கடங்களை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதை அமுல்படுத்துவதிலே தோல்வி ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். தோல்வி ஏற்பட்டது என்பதுதான் எங்களுடைய எண்ணமும். அந்த எண்ணம் ஈடேறவில்லை. யார் யாரோ முயன்றும், அந்த எண்ணம் ஈடேறவில்லை. புத்தர் முயன்று பார்த்தார்; முடியவில்லை. மகாவீரர் முயன்று பார்த்தார்; முடியவில்லை. வள்ளுவர் முயன்று பார்த்தார்; முடியவில்லை. நயான்மார்கள் முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை. ஆழ்வார்கள் முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை. பட்டினத்தடிகள், இராமலிங்க அடிகள் முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை. மகாத்மா காந்தியடிகளும் முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் முயன்று பார்த்தார்கள்; முடியவில்லை.......

திரு. எஸ். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எல்லோரும் முயன்றார்கள் என்று சொல்லி, ஒரு கெட்ட காரியத்திற்கு நியாயம் கற்பிப்பது நியாயமல்ல. நான் ஒன்றைக் கேட்கிறேன். தற்போது மதுவிலக்கு அமுலில் இருந்தும், எல்லா இடங்களிலும் கள்ளச் சாராயம் விற்கின்றவர்கள் விற்கின்றார்கள் என்பது அதிகாரிகளுக்கு தெரிந்திருந்தாலும், இந்த நேரம் வரையிலும் இந்தச் சட்டம் அமுலில் இருந்தும், கடுமையான நடவடிக்கை எடுக்காமல், செயலற்று ஸ்தம்பித்து இருப்பது அமைச்சர்களுக்கும், இந்த அரசுக்கும் தெரிந்திருந்தும், அரசாங்கமோ, அமைச்சரோ நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காட்டி வருகிறார்கள் என்பது ஒன்று. சட்டம் இருந்தும், அதை அமுல் நடத்தவில்லை. இப்படி முடியவில்லை என்றால், மது

விலக்கை கொஞ்சம் தளர்த்துகின்ற முறையிலே ஏன் பிடிவாதமாக இருக்க வேண்டும்? ஒன்று ஒழுங்குபடுத்த வேண்டும் அல்லது ஒழுங்குபடுத்த முடியவில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும். எனவே, இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் மாபெரும் பேரறிஞர்கள், சான்றோர்கள் இந்த மதுவிலக்கு கொள்கையை நடைமுறைப் படுத்த எவ்வளவோ முயன்றும் வற்புறுத்தியும் அவர்களால் முடியவில்லை என்பதற்கு விளக்கம் சொன்னேன். அவர்கள் எல்லாம் முயன்று பார்த்தார்கள்: முடியவில்லை. எனவே, முடியாத காரியம் என்பதற்காகச் சொன்னேன். வள்ளுவர் கூட முயன்று பார்த்தார்; முடியவில்லை.

“ களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்

குளித்தானைத் தீத்துரீ இயற்று ”

என்று கூறுகிறார் வள்ளுவர். அதாவது, குடித்தவனைத் திருத்துவது என்பது எப்படியிருக்கும் என்றால், தண்ணீருக்குள் மறைந்திருக்குப்பனை விளக்குகொண்டு தேடுவது மாதிரி என்று சொல்கிறார். எனவே, இது முடியாத காரியம் என்று அவரே சொல்லி விட்டார்.

பிரச்னை என்னவென்றால், இன்றுள்ள நாட்டினுடைய நிலைமையில் மதுவிலக்கைப் பொறுத்தவரையில் சட்டத்தினால் அதை நடைமுறைப்படுத்த முடியாது என்பது எல்லோருக்கும் தெளிவாகியிருக்கிறது. நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், இதிலே அரசியல் மாச்சரியங்களுக்கு இனி இடம் வேண்டாம் என்பதுதான். ஆகவே இருக்கின்ற சூழ்நிலையை உணர்ந்து, ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கிறேனே தவிர, வேறு நிலையிலே அல்ல. எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒழுக்கத்தைப்பற்றிச் சொல்வதற்காக, பொய் சொல்லக்கூடாது, குடிக்காமல் இருக்க வேண்டும் என்பவைகளை யாரும் சட்டத்தினாலே மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. ஏதாவது ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், அது கண்ணுக்குத் தெரிந்தால், அதைப் பற்றி விசாரித்து, தண்டிக்கலாம். ஆனால் ஒழுக்கத்தை நிறைவேற்றுவதற்கு சட்டத்தினால் முடியாது. இந்திய அரசாங்கத்தினுடைய 47-வது விதி என்ன சொல்லுகிறது?

[பிற்பகல் 1-30]

Article 47 of the Constitution of India Directive Principles of State Policy—

“ The State shall regard the raising of the level of nutrition and the standard of living of its people and the improvement of Public health as among its primary duties and,

என்ற தலைப்பின்கீழ் சொல்லிவிட்டு, அடுத்து

in particular, the State shall endeavour to bring about prohibition of the consumption except for medicinal purposes of intoxicating drinks and of drugs which are injurious to health. ”

என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 22 மாநிலங்களிலும் முயன்று தான் பார்த்தார்கள். எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கை கொண்டு வந்து தான் பார்த்தார்கள். ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடைமுறைப் படுத்த முடியாத அளவிற்கு ஒவ்வொருவரும் நீக்கியிருக்கிறார்கள். கொள்கையை யாரும் விட்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. குடிக்கச் சொல்லி யார் சொல்வார்கள்? குடிகாரனை என்ன செய்வது என்பது தான் பிரச்சினையே தவிர குடிக்கச் சொல்லி யாரும் பிரச்சாரம் செய்வதில்லை. இவ்வளவு ‘ டிரக்ட் பிரின்சிபலிலும் ’ யாரும் ஒரு ஸ்டேட் கூட கடைபிடிக்க முடியாததற்கு காரணம் என்னவென்றுச் சொன்னால் பென்சிலினை உபயோகப்படுத்தக் கூடாது என்று தடை செய்வதால் யாரும் செய்ய முடியாது; அக்ரோமைசினை யாரும் செய்யக்கூடாது என்றால் செய்ய முடியாது; ஆரோமைசினை யாரும் செய்யக்கூடாது என்று தடை போட்டால் அவர்கள் யாரும் குடிசையில் செய்ய முடியாது.

மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சாராயம் ஓடுகிறது என்று சொன்னார்கள். எல்லாம் நடக்கிறது; இல்லையென்று நான் சொல்லவில்லை. எந்த காலத்தில் இல்லை? காங்கிரஸ் ஆண்ட பொழுது இல்லையா? அர்ஜுனனே போராடினாரே, ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கட்டுப்பாடு இருந்தும் பிடிக்க முடியவில்லை; ஒன்றும் செய்ய முடியவில்லை; சட்டமும் ஒன்றும் செய்ய வில்லை. டிரஸ்ஸோட வந்து ஈரோடிலே காய்ச்சினார் என்று அவரை கைது செய்து சிறையிலே போட்டு, பிறகு

துப்பாக்கியாலே சுடவேண்டிய ஒருகட்டமும் வந்தது. எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொள்கையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பணத்தை தந்து விடுங்கள் என்று கேட்டுப் பார்த்த பிறகும் அப்போதும் கேட்டோம், இப்போதும் கேட்டோம், ஆக எப்போதும் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறோம்— தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு திரு. சித்தன் அவர்களும் கூட, ''தமிழன் என்று ஒரு இனம் உண்டு, அவர்களுக்கு தனியாக ஒரு குணம் உண்டு'' என்று சொன்னார்கள். பாண்டிச் சேரியில் இருப்பவர்கள் தமிழர்கள் இல்லையா? நான் எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்று சொன்னால், இது கொள்கையை குறித்து எடுத்த முடிவு அல்ல; நிலைமையை குறித்து எடுத்த முடிவு. இந்தியா பிரியவேண்டும் என்பதா காந்தியடிகள் அவர்களின் கொள்கை? இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்று சொன்னார். அது பிரியக்கூடாது என்பது தான் அவரின் கொள்கை. ஆனால் நிலைமை பிரிவினையை ஒத்துக்கொள்ள வைத்தது. கொள்கை இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்பது, ஆனால் நிலைமைதான் இரண்டாக பிரீவு படுத்தியது. ஆக நிலைமைக்கு அவர் பணிந்தார்; கிழக்கு பாகிஸதான், மேற்கு பாகிஸ்தான் என்று இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டுமென்பது தான் கொள்கை; ஆனால் நிலைமை இரண்டாக பிரித்து விட்டது.

இந்த அவையிலே யாரும் குடிப்பவர்கள் என்று நான் நினைக்கிறதே இல்லை. எல்லோரும் மதுவிலக்கு கொள்கையில் தீவிரமுடையவர்கள் என்பதை நன்றாக உணர்ந்தவன். நாம் யாரும் இந்த கொள்கையை விட்டுவிடக் கூடாது. இந்த கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு பொருள்கள் இங்கே கிடைக்கின்றன. பானைக்கு என்ன கஷ்டம் விறகுக்கு என்ன கஷ்டம்; பட்டைக்கு என்ன கஷ்டம்; என்னென்னமோ சொல்கிறார்கள்; சல்பேட் யூரியா என்று சொல்கிறார்கள். நாடெங்கும் கொடுத்து வைத்து விட்டு, அதிகாரிகளையோ மற்றவர்களையோ தடுக்க முடியவில்லை என்று குறை கூறுவது—நடந்து வெற்றி பெற்றால் நமக்கெல்லாம் மகிழ்ச்சிதான். ஆகவே ஒவ்வொரு மாநிலமும் கேட்டு பார்த்தார்கள். நம்மோடு சேர்ந்திருந்த ஆந்திர மாநிலத்தில் 1953 வரையில் மதுவிலக்கு இருந்தது. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் காலத்தில் 1948 லே ஆந்திர மாநிலத்திலிருக்கிற எல்லா மாவட்டங்களிலும், நம் மாவட்டங்களிலும் சேர்த்து இருந்தது; 1953 வரை மதுவிலக்கு இருந்தது. இதற்கு பிறகு தெலிங்கானாக்காரர்களும், ஹைதராபாத்திலிருந்து வந்தவர்களும் சேர்ந்தார்கள். 1956 ஆம் வருடம். தளர்த்தினார்கள்

அதேமாதிரி தான் கர்நாடகம் ஆயிற்று. குஜராத்தில் நிலைமை என்னவென்று நினைக்கிறீர்கள்? நம்மைப் போல தான் இழுதது பிடித்து வைத்திருக்கிறார்கள், ஒரு முடிவிற்கு வந்துவிட வேண்டுமென்பதற்காகத் தான் நான இதைச் சொல்கிறேன். குஜராத்தில் கடுமையாக இருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர 31 ஆயிரம பேர்கள் பெர்மிட் வாங்கி குடித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பேராசிரியர் கண்ணியசிராம் ஓஸாம் என்பவருடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்து எத்தனை பேர்கள் குடிக்கிறார்கள். மது விலக்கு அமுலில் இருக்கிறதே, எத்தனை பேர்கள் குடிக்காமல் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கு எடுப்பதற்காக அமைத்தார்கள். அந்தக் குழு 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ஆம் நாள். அன்று குஜராத் அரசுக்கு அறிக்கையைத் தந்தார்கள். அதிலே பேராசிரியர் கண்ணியசிராம் ஓஸாம் என்பவர் அங்கே இருக்கின்ற ஏராளமான மில்களில்—அகமதாபாத்தில் ஏராளமான மில்கள் இருக்கின்றன. வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்களிலே 74 சதவீதம் பேர்கள் குடிப் பழக்கத்திலே உள்ளவர்களாக இருக்கிறார்கள், அத்தனை பேர்களும் கள்ளச் சாராயம் தான் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். நாம் செய்ததால் அடுத்து அவர்கள் வருவார்கள் என்று நினைக்கிறேன். எல்லா மாநிலங்களும் எடுத்தாகிவிட்டது. மதுவிலக்கை கடைப்பிடித்துவந்த , 2, 3 மாநிலங்களும் எடுத்தாகிவிட்டது. மதுவிலக்கு என்ற கொள்கை வெற்றி பெற்றால் பரவாயில்லை, 200 கோடியல்ல, 300 கோடி ரூபாய் குறைந்தாலும் பரவாயில்லை. நாடு நன்றாக இருக்கவேண்டும். அந்த நிலைமை இல்லை. 25 ஆண்டு காலமாக கடைப்பிடித்து வந்தும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை. எடுத்துவிட்ட அண்டை மாநிலங்களான ஆந்திரத்தில், கேரளத்தில், கர்நாடகத்தில் பெர் கெபிட்டா இன்கம் உயர்ந்திருக்கிறது, நாம் எடுக்காமல் வைத்திருந்தும் பெர் கெபிட்டா இன்கம் உயரவில்லை. அவன் குடித்து செலவழித்து விட்டாலும் பெர் கெப்பிட்டா உயர்ந்திருக்கிறது, நாம் குடிக்காமல் வைத்திருந்தும் உயரவில்லை. அவன் குடித்தும் பெர்கெபிட்டா இன்கம்மை பொறுத்தவரையில் உயர்ந்திருக்கிறான். 30 ஆண்டுகள் நாம் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தும் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. அவன் குடித்துக் கெட்டான், நாம் குடிக்காமல் நன்றாக இருந்து இருக்கவேண்டும். எங்கே போயிற்று அந்தப் பணம் முழுவதும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் உண்மைதான். தவறானவை அல்ல. இங்கே சட்டி கிடைக்கிறது. பானையெல்லாம் இருக்கிறது, குடிக்கிறான், பிடிக்கப் போகிறவனை சரிக்கட்டி விடுகிறான். எல்லோருக்கும் தெரியும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள், நேர்மையானவர்கள் இருக்கிறார்கள், நாணயமானவர்கள் இருக்

கிறார்கள். அதற்கு மார்ஜின் கொடுக்கவேண்டும், சிறிய மார்ஜின்தான் கொடுக்கமுடியும் மிகப் பெரிய மார்ஜின் கொடுக்கமுடியாது. ஆகவே கரப்ஷன் வருகிறது. இதனால் எவ்வளவு சமுதாயம் கெடுகிறது என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். ஓரளவுக்கு இங்கே கம்யூனிஸ்ட் நண்பர்கள் கொள்கை அடிப்படையில் முழுவதுமாக எடுத்துவிடவேண்டும் என்று சொன்னார்கள். இன்னொரு பக்கத்துலே மதுவிலக்கை எடுக்காதீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் நடுநிலையாக இருக்கலாமே என்ற போக்கிலே தான் இவ்வாறு வைத்திருக்கிறோம். மகாராட்டிரத்திலே பெர்மிட்சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். அங்கே தகராறுகள் இருக்கின்றன. இரண்டு வருடங்கள் விட்டுப் பாருங்கள். நிலைமைகளைப் பார்த்துவிட்டு மறுபடியும் ஆராய்வோம். நாம் மதுவிலக்குச் சட்டத்தை நீக்கவில்லை எடுக்கவில்லை சட்டம் அப்படியேதான் இருக்கிறது, நெடுந்தலைப்பு, குறுந்தலைப்பு அப்படியே இருக்கிறது, அந்தப் பிரிவுகளிலே தான் நாம் மாற்றம் செய்கிறோம். சில பேர்கள் முழுவதுமாக மதுவிலக்கை எடுக்கலாம் என்று சொல்கிறார்கள். சில பேர்கள் அப்படியே வைத்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறைப் படுத்துவதிலே கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். கள்ளச் சாராயத்தினால் வாழவேண்டியவர்கள் ஒவ்வொருவருக்கும் வேண்டிய அருமையான நண்பர்கள் இறந்துவிடுகிறார்கள், உயர்ந்தவர்கள், சிறந்தவர்கள், கலைஞர்கள், கலைத் துறையிலே உள்ளவர்கள்கூட போய் இருக்கிறார்கள். குடிப்பழக்கத்தை விட முடியவில்லை, கள்ளச் சாராயத்தைக் குடிக்காமல், நல்லதையாவது சாப்பிட்டுக் கொள்ளட்டும், அவர்கள் உயிர் போகாமல் இருக்கட்டும் என்ற முறையிலேதான் எண்ண வேண்டியிருக்கிறது. கள்ளச் சாராயத்தின் மூலமாகக் கிடைக்கின்ற பணம் சமூக விரோதிகளுக்குப் போகிறது, யாருக்கும் போகாமல் இருந்துவிடவில்லை. பொதுமக்களுக்கும் பயன்படவில்லை, மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரவில்லை, குடிப் பழக்கத்தையும் விடவில்லை. பணம் அரசாங்கத்திற்கு வந்திருந்தால் இந்த வரியைக் கூட நான் போட்டிருக்க மாட்டேன். 200 கோடி ரூபாய் வந்தால் ஒன்றிரண்டைக் கூட எடுத்துவிடலாம். ஒரு ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் என்றால் 5 ஆண்டுகளுக்கு 1,000 கோடி ரூபாய் வரும், அந்த ஆயிரம் கோடி ரூபாயை வைத்துக்கொண்டு எவ்வளவோ பள்ளிக்கூடங்களையும் மருத்துவ மனைகளையும் கொண்டுவந்திருக்கலாம். அமல் நடத்துவது என்பது இம்பிராக்டிக்கபிளாக இருக்கிறது. பிரின்ஸிபிளை நாம் டெஸ்ட் பண்ணிப் பார்ப்போம். அந்த முறையிலே தான் பெர்மிட்சிஸ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதிலேயும் சங்கடங்கள் வரலாம்.

[பிற்பகல் 1-40]

என்ன செய்யலாம் என்று மறுபடியும் நாம் யோசிப்போம்; முதலிலே அதைச் செய்வோம். அந்த ஒரு கஷ்டம் இருக்கிறது. பர்மிட் வாங்க வேண்டுமென்று சொல்லும பொழுது அதையும் நாம் யோசித்துக் கொண்டுதான இருக்கிறோம். முதல் ஆண்டு வைக்கும்பொழுது அநேகம் பேர் பர்மிட் வாங்குவதற்கு முன்வருவார்களா என்பதே சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் அது அடையாளமாக விடுகிறது. அதை வாங்காமல் இருக்க வேண்டுமென்று நினைக்கின்றவன் ஒருவன் இருப்பானேயானால் அதற்குத் தகுந்தாற்போலப் புழங்குகின்றவனும் ஒருவன் இருப்பான். இன்னொரு சைடிலே, பேராசிரியர் அவர்கள் சொன்னது மாதிரி கொஞ்சம் இருந்தாலும் இருக்கும். அதைக் கொஞ்சம் கடுமையாகத் தடுக்க முடியுமா என்பதைப் பார்ப்போம். இன்னும் ஒரு வருடம், இரண்டு வருடம் கழித்து யோசித்துப் பார்ப்போம். அதற்குப்பிறகு உங்களையும் கலந்துகொண்டு நாங்களும் சேர்ந்து ஏதாவது செய்யலாமா என்பதைப் பின்னாலே பார்ப்போம். இப்பொழுது இருக்கின்ற நிலைமையை ஒட்டி இத்தகைய பிரச்சினையே தவிர, ஆனால் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். சிகரெட் பிடிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, சிகரேட் கம்பெனி விற்கலாம் என்று இருப்பதைப்போல குடிப்பதால் ஏற்படுகின்ற கேட்டைச் சொல்கிறோம். அம்மாதிரி சொல்லிகொண்டே இருக்க வேண்டியதுதான். நாம் இந்தக் குடிப்பழக்கத்தினால் ஏற்படுகின்ற தன்மைகளைப் பல வகைகளிலே எடுத்துச் சொல்லலாம்.

இராஜாஜி அவர்கள் திக்கற்ற பார்வதி' என்ற ஒரு கதையை எழுதினார்கள்; அதைச் சினிமா எடுத்தார்கள். அது குடிப்பழக்கத்தினால் ஏற்படுகின்ற கேட்டை உணர்த்துவதாக இருந்தது. இப்படிப் பல நாடகங்களில், சினிமாக்களில் குடிப்பழக்கம் கேடு என்று உணர்த்துகின்ற கருத்துக்கள்தான் வந்துகொண்டிருக்கின்றன, அப்படி வருவதால் அந்த மனப்பான்மை ஓரளவு மாறும்; நூற்றுக்கு நூறு அது மாறிவிடும் என்று சொல்வதற்கில்லை. ஆகவேதான் பிரச்சாரத்திற்காகச் செலவழிக்கலாம் என்ற நிலை இருக்கிறது.

பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள்கூட இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஐந்தாறு நாட்களுக்கு முன்பு சொல்லும்பொழுது, மதுவிலக்கை நீக்கவேண்டாம்; அப்படி நீக்குவது என்று வந்துவிட்டீர்கள் என்றால், தீவிரமாகப் பிரச்சாரம் செய்வதற்கு ஏற்பாடு பண்ணுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மாநில முதலமைச்சராக அனுபவம் பெற்றவர்கள் அவர்கள். ஆகவே அனுபவத்தினுடைய அடிப்படையிலே பல்வேறு தன்மைகளுக்கும் இருக்கமுடியும்.

இழப்புக்கும் இடங்கொடுத்து, அதிகாரிகளிலே பல மட்டங்களிலும் கெடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியது மாதிரி இவனாக வாங்கினான் என்றால் இலஞ்சம், அவனாகக் கொண்டுபோய்க் கொடுத்தான் என்றால் மாமூல் என்று வைத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தப் பெயரை யாரும் பயன்படுத்துவதில்லை; இந்தப் பெயரைத் தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். என்னவென்று கேட்டால் மாமூல் என்கிறார்கள். இதனாலே சமுதாயம் கெடுகிறது; அதிகாரிகளும் கெடுகிறார்கள்; மற்றவர்களும் கெடுகிறார்கள். இந்தக் கேடெல்லாம் இல்லாமல் இருந்து, பணம் மட்டும் அதிகமாக இருந்தது என்றால், ஒன்றைமட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். 22 மாநிலங்களிலே, எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படையிலே தமிழகத்தை முதலிடத்திற்குக் கூட கொண்டு வர முடியும். அந்த அளவிற்கு இங்கே டாலெண்ட் அன்ட் இன்டெலிஜன்ஸ், அறிவுத் திறனும் ஆற்றல் திறனும், மற்ற எலல்லாத் திறனும் இருக்கின்றன. அசோக்மேத்தா ஒரு தடவை குறிப்பிட்டார். மேட்டூரிலே நடைபெற்ற விழாவிலே குறிப்பிடுகின்ற பொழுது சொன்னார்கள். ஆசியா நாட்டிலே எப்படி ஜப்பான் நாடு தனித் திறமை, தனி ஆற்றலைப்பெற்று ஐரோப்பிய நாடுகளிலேயே ஒரு நாடாகத் தன்னைக் காட்டிக்கொள்கின்ற ஒரு தன்மையைப் பெற்றிருக்கிறதோ அப்படி இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்களிலே அந்தத் தனித்தன்மை, ஆற்றல், அறிவு பெற்று விளங்குகின்ற மாநிலம் தமிழ்நாடு என்று தமிழ் நாட்டைச் சேராத அசோக்மேத்தா அவர்கள் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு நாம் முன்னேற முடியும்; அதற்கு அத்தனை பேர்களுடைய ஒத்துழைப்பும்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம் வரவிருக்கிறது; இந்தச் சட்டம் வரும் பொழுது நீங்கள் உங்களுடைய திருத்தங்கள், உங்களுடைய முறைகள், அதிலே ஏதாவது மாற்றங்கள் சொல்ல வேண்டும் என்றால் சொல்லும்படி உங்கள் அனைவரையும் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, பொதுவான கருத்துக்களுக்கு நான் இப்பொழுது பதில் சொன்னேனே தவிர, குறிப்பிட்ட பல பிரச்சினைகளையெல்லாம் எழுப்பியிருக்கிறார்கள். இப்பொழுது நேரம் அதிகமாகிவிட்டது. எனவே, அந்தந்தத் துறை பற்றிய விளக்கங்கள் வரும்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் சொல்வார்கள்.

வருகிற புள்ளிவிவரங்கள் அது சாதாரணமாக இந்த விவரங்களை ஆராயாமல் படித்துப் பார்க்கிறபோது, குழப்பத்தை ஏற்படுத்தச் செய்யும், எனவே இது பற்றாக்குறை என்று சொல்லலாம். அப்படிச் சொல்வதுதான் நல்லது. இல்லையானால் கை இருப்பு என்பதற்குப் பதிலாக கை பொருப்பு என்ற சொல்லைப் பயன்படுத்துவது நல்லது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 11–10]

நான் கேட்கவிரும்புவது, இந்த 1981–82-ம் ஆண்டில் 122 கோடி ரூபாய் அளவிற்குப் பற்றாக்குறை ஏற்படும் என்று சொல்கிறபோது, இந்த 122 கோடியில் இந்தத் துணை மானியக் கோரிக்கை இந்தத் திங்களிலே தரப்பட்டதிலே வருகிற 228 கோடி ரூபாயும் சேர்த்து கருதப்படக்கூடிய நிலைமை இருக்கிறதா அல்லது சேர்த்து கருதப்பட்டுள்ளதா? எப்படிக் கணக்கில் இடம் பெறுகிறது? அல்லது எப்படி இடம் பெறாமல் இனி கணக்கில் சேரும்போது மொத்தத்தில் 350 கோடி ரூபாய்க்கு மேல் கையிழப்பு காட்ட வேண்டியுள்ளதா? என்று அறியவிரும்புகிறேன். பற்றாக்குறை 300 கோடிக்கு மேல் இருக்குமானால், உள்ளபடியே தமிழக அரசின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். பொதுமக்கள் நலனுக்காக பல திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு தான் என்றாலும், நிதிப்பற்றாக்குறையோடு மத்திய அரசு பட்ஜெட் கொண்டு வருகிறபோது விலைவாசி ஏற்றம் வரும் என்று சொன்னால் மாநில அரசுகள் கொண்டு வருகிறபோது மேலும் விலைவாசி ஏற வகை செய்வதோடு மட்டுமல்லாமல், அரசாங்கத்தை இயக்க செய்கிற ஆற்றலையே அது இழக்கச்செய்து விடும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சில வரி விதிப்புக்கள் மூலம் அதிக வருவாய் ஈட்ட வழிவகை செய்து இருக்கிறீர்கள். பல்வேறு வரிகள் மூலமாக 20 கோடி ரூபாய் தான் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். துண்டு விழுவது எதிர்பார்ப்பது 300 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கிறபோது, வருவாய் எதிர்பார்ப்பது 20 கோடி ரூபாய்தான் என்பது சரியான பொருளாதாரக் கொள்கை அல்ல. இந்த இருபது கோடி வருவாய் என்பது கூடத் தமிழ் அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறதே தவிர ஆங்கில அறிக்கையில் அதே இடத்திலே அது குறிப்பிடாமல் அது விட்டப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடு) இப்படிப் பட்ட குறைபாடுகள் மொழிபெயர்ப்புச் செய்கிறபோது வரக்கூடாது. இது அந்தத் துறையில் உள்ளவர்களின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போதுகூட மொத்தத்தில் இதனால் 20 கோடி ரூபாய் தான் வருமானம் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். பெட்ரோல், டீசல் போன்றவற்றின் மீது இப்போது விதிக்கப்படும் விற்பனை

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras 14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldoss, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15. Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajentha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26. Sri Ramavilas Book Shop, 80, Amman Sannathi, Madurai 1.

IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghaleyam, Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-12.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

திரு.வி. கல்யாணசுந்தரனார் அடிக்கடி எடுத்துச் சொல்வார்கள். கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளியுங்கள் ; கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ; ஆனால், மனிதனுக்குமனிதன் காட்ட வேண்டிய மதிப்பு ; மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய அன்பு உள்ளத்தோடு இந்தச் சட்டமன்றம் நடைபெறுமேயானால் மற்றைய சட்டமன்றங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கவும், இந்த மாநிலம் தழைத்தோங்கவும், எங்களுக்கே தெரியாமல், அறியாமல் இருக்கின்ற கருத்துக்களைக் கொண்டு வந்து எடுத்து வைப்பதன் மூலம் சீர்திருந்தவும், மேம்பாடு எய்தவுமான நிலைமை ஏற்படும்.

அந்த வகையிலே இந்த விவாதத்திலே கலந்து கொண்டு சீரிய கருத்துக்களை வழங்கிய அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் மீண்டும், மீண்டும் தெரிவித்து, மானியக் கோரிக்கைகள் வரும்போது, விரிவான விளக்கங்களை உரிய அமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று எடுத்துச் சொல்லி, இங்கே ஒத்துழைப்புத் தந்த அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும், மீண்டும் தெரிவித்து, நிதித்துறைச் செயலாளர் இங்கே இருக்கிற இணைச் செயலாளர், துணைச் செயலாளர்கள், மற்ற துறையைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேருக்கும் என் நன்றியைத் தெரிவித்து, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் (31-3-1981) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் எதுவுமில்லை.

D
Y211,31 N81
N83.16
122185
122185